உட்பொருள் உணர்த்தி
பக்தி-ஞான அருள்வழி காட்டும்

கந்தர் அநுபூதி

N.V. கார்த்திகேயன்

உட்பொருள் உணர்த்தி
பக்தி-ஞான அருள்வழி காட்டும்

கந்தர் அநுபூதி

உட்பொருள் உணர்த்தி
பக்தி-ஞான அருள்வழி காட்டும்

கந்தர் அநுபூதி

(இறை-அநுபூதி பெற தீவிரமாக முயற்சிக்கும்
பக்தர்களுக்கும் சாதகர்களுக்கும் வழிகாட்டும்
இன்றியமையாத ஒரு உயரிய ஆய்வுநூல்.)

அருட்செல்வர்
அருணகிரிநாதர் அருளியது

ஆங்கில மூலம்: N.V. கார்த்திகேயன்,
சிவானந்த ஆஸ்ரமம், ரிஷீகேஷம்)

தமிழாக்கம்:
முனைவர் கி. பாலச்சந்திரன்,
M. A. (Economics), Ph. D (Management)

Tamil translation of:

“The Esoteric KANDAR ANUBHUTI”

முதற்பதிப்பு - 2019

1000 பிரதிகள்

குருதேவரின் ஞானயக்ஞ பிரசாதம்
(இலவச வெளியீடு)

இந்த நூலை இலவசமாகப் பதிவிறக்க:

http://www.arunagirinathar.in

© உரிமை : ஆசிரியருக்கு

© **N.V. Karthikeyan,**
Sivananda Ashram, Rishikesh,
P.O: Shivanandanagar -- 249 192
(Uttarakhand, India)

e-mail: nvkarthikeyan@yahoo.co.in

Printed by

Omkar Offset Printers,

Bangalore-560 002

சுவாமி சிவானந்தருக்கு

சமர்ப்பணம்

சுவாமி சிவானந்தர் (முருகப் பெருமானாகக் காட்சி)

சுவாமி சிவானந்தர்

(எனது குருநாதரும் எனக்கு ஊக்கமளிப்பவரும்)

ரிஷீகேஷம் சிவானந்த ஆஸ்ரமத்தில், குருதேவருக்கு பாதபூஜை செய்தபின், அவர்களுடன் படம் எடுத்து அவர் ஆசியும் பெறுகிறார் N.V. கார்த்திகேயன், (August,1962).

குருதேவர் சுவாமி சிவானந்தரின் புனித சமாதி-கோயிலில், குரு-பூர்ணிமா அன்று விசேஷ பூஜை தொடங்குவதற்குமுன் N.V. கார்த்திகேயன் (ஜூலை 2019)

சிவானந்த ஆசிரமம் பஜன்-ஹாலில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள முருகப் பெருமானுக்கு, 2017இல் செய்யப்பட்ட ஸ்கந்த-சஷ்டி பூஜையில், தீபாராதனை செய்கிறார் N.V. கார்த்திகேயன்.

பொருளடக்கம்

முன்னுரை – 1 10

முன்னுரை – 2 13

முகவுரை 15

கந்தர் அநுபூதி ஓர் அறிமுகம் 23

இந்த ஆராய்ச்சி ஏன்? எதற்காக?.....30

அருணகிரிநாதரின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் 49

கந்தர் அனுபூதி நூல் (செய்யுள்கள்).....59

காப்புச் செய்யுள் 71

செய்யுள் – 1.....79

செய்யுள் – 2.....84

செய்யுள் – 3.....91

செய்யுள் – 4.....96

செய்யுள் – 5.....101

செய்யுள் – 6.....106

செய்யுள் – 7.....110

செய்யுள் – 8.....116

செய்யுள் – 9.....122

செய்யுள் – 10.....126

செய்யுள் – 11.....129

செய்யுள் – 12.....132

செய்யுள் – 13.....138

செய்யுள் – 14.....144

செய்யுள் – 15.....152

செய்யுள் – 16.....159

செய்யுள் – 17.....167
செய்யுள் – 18.....174
செய்யுள் – 19.....181
செய்யுள் – 20.....188
செய்யுள் – 21.....192
செய்யுள் – 22.....197
செய்யுள் – 23.....205
செய்யுள் – 24.....209
செய்யுள் – 25.....212
செய்யுள் – 26.....221
செய்யுள் – 27.....225
செய்யுள் – 28.....232
செய்யுள் – 29.....241
செய்யுள் – 30.....247
செய்யுள் – 31.....251
செய்யுள் – 32.....257
செய்யுள் – 33.....264
செய்யுள் – 34.....269
செய்யுள் – 35.....273
செய்யுள் – 36.....281
செய்யுள் – 37.....286
செய்யுள் – 38.....296
செய்யுள் – 39.....300
செய்யுள் – 40.....309
செய்யுள் – 41.....316
செய்யுள் – 42.....325
செய்யுள் – 43.....341

செய்யுள் – 44.....359
செய்யுள் – 45.....374
செய்யுள் – 46.....382
செய்யுள் – 47.....389
செய்யுள் – 48.....403
செய்யுள் – 49.....412
செய்யுள் – 50.....421
செய்யுள் – 51.....429

முன்னுரை – 1*

ஓம் ஸ்கந்தம் வந்தே லோக-குரும் ஓம்.

சிவபெருமானின் கிருபா-சக்தியின் மொத்த உருவமானவரும், தேவ லோகத்தின் தெய்வீகத் தலைவரானவரும், வித்யா-மாயையான அன்னை பராசக்தியின் அன்புக் குழந்தையானவரும், இறை-அனுபவத்தை அடைந்திடுவதற்கான பாதையில் நேர்மையாக பயணிக்கும் சாதகர்களுடைய தூய இதயங்களை நிரப்பும் மர்மமான சாதனை சக்தியாளருமான கார்த்திகேயப் பெருமானுக்கு எனது நமஸ்காரங்கள்! அவருடைய ஆசி உங்கள் அனைவருக்கும் கிடைக்கட்டும்!

தென்னிந்தியாவில் திருவண்ணாமலையிலிருந்த மகாமுனியான திரு அருணகிரிநாதர் அருளிய "கந்தர் அனுபூதி" என்ற புகழ்வாய்ந்ததொரு தமிழ்ப் படைப்பை, ஆங்கிலத்தில் வழங்கும் இப்புதிய முயற்சி சம்பந்தமாக இந்த வார்த்தைகளை எழுதுவது எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. இந்த ஞானார்த்தம் ததும்பும் கவிதை நூல் அறிவெல்லை கடந்த ஆழ்நிலை அனுபவத்தின் ஒளிக்கதிரால் பிரகாசிக்கிறது. அரிய மற்றும் உயரிய ஆன்மீகப் புதையலான இறை-அனுபவம், மற்றும் அவர் அனுபவிக்கும் பரவச ஆனந்த நிலை, ஆகிய இரண்டையும் சேர்த்துப் புனைந்து இவ்வுலகிற்கு அளித்த அருணகிரிநாதருடைய இந்த விழுமிய கவிதையானது, இறைவனை அடைய ஆர்வமுள்ள சாதகர்களுக்கு கிடைக்கப் பெற்ற அருட்திறல். ஆனால் இந்த ஒப்புயர்வில்லா செல்வமான ஆன்மீக பொக்கிஷமானது தமிழ் மொழியில் இருப்பதால், உலகின் பெரும்பான்மையான (தமிழ் அறியாத) சாதகர்களுக்கு இது பயன்படாமல் போய்விட்டது. ஆகையால், (இறைவனின் பெயரையே தன் பெயராகக் கொண்ட) ஸ்ரீ என்.வி.கார்த்திகேயன் அவர்கள் இதனை ஆங்கிலத்தில் தரம் மற்றும் நயத்துடன் மொழி பெயர்த்ததன் மூலம்,

இவ்வரிய ஆன்மீகப் படைப்பை வெளிச்சத்திற்கு கொண்டு வந்து, தமிழ் அறியாதவர்களுக்கு ஒரு சிறப்பான சேவை செய்திருக்கிறார். கந்தர் அனுபூதி நூலின் அனைத்துச் செய்யுள்களையும் அவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, மிகச்சிறந்த விளக்க உரைகளையும் சேர்த்துத் தந்துள்ளதால், இந்த தனித்துவமான சேவையானது இன்னும் மதிப்புமிக்கதாகிவிட்டது.

மொழிபெயர்ப்பாளரும் விளக்கவுரையாளருமான திரு என்.வி. கார்த்திகேயனின் ஆன்மீக அந்தஸ்தை சந்தேகத்திற்கிடமின்றி வெளிப்படுத்தும் இவரது விளக்கவுரையானது மிகவும் உயர்ந்த தரம் வாய்ந்ததாக அமைந்திருக்கிறது. இவர் எனக்கு தனிப்பட்ட முறையில் சென்ற பத்து வருடங்களாக நன்றாகப் பழக்கம்; இறைவன் மற்றும் நமது அன்புக்குரிய குரு மகராஜ் சுவாமி சிவானந்தாஜியின் கிருபையைப் பூரணமாகப் பெற்ற இவர் ஆன்மீகத்தில் வளர்ச்சி அடைந்திருப்பதை நான் நேரில் கண்டு அறிந்திருக்கிறேன். அருட்செல்வர் அருணகிரிநாதரின் ஞானார்த்தம் ததும்பும் இந்த நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அளித்தது, இவர் செய்த ஒரு மிகப்பெரிய ஆன்மீக சேவையே. இதன்மூலம் இவர் உலகத்தினரின் ஆழமான நன்றிக்குப் பாத்திரரானார்.

இந்த ஆங்கில மொழிபெயர்ப்பு, “The Divine Life” எனப்படும் நமது சங்கத்தின் ஆங்கில மாதாந்திர சஞ்சிகையின் ஒவ்வொரு இதழிலும், தொடர்கட்டுரையாக, 1969ஆம் வருடம் துவங்கி சென்ற மூன்று வருடங்களாக வெளிவந்தது; அது அச்சஞ்சிகையின் மதிப்பைப் பெருமளவு அதிகரித்தது என்று கூறினால் அது மிகையாகாது. நமது வணக்கத்துக்குரிய பூஜ்ய குருதேவர் சிவானந்த மகராஜ் அவர்களின் சிரத்தைமிக்க சீடரான இவர், குறிப்பிடத்தக்க ஆன்மீக முன்னேற்றம் மற்றும் (ஞான) முதிர்ச்சி அடைந்து வந்ததை நான் மிகப் பெருமையுடனும் திருப்தியுடனும் கவனித்து வந்துள்ளேன். இந்த அற்புதமான படைப்பினை தந்ததற்காக இவருக்கு நன்றி தெரிவித்து இவரை வாழ்த்துகிறேன். மேலும், மிகவும் தெளிவாகவும் மற்றும் திறத்துடனும் ஒளிரும் தனது விளக்கவுரைகள் மூலம் எந்த இறை அநுபூதியை இவர் இப்படைப்பில் விளக்கியுள்ளாரோ, அவ்வனுபூதியை இறைவன் இவருக்கு வழங்கி அருள வேண்டுமென்று நான் பிரார்த்தனை செய்து கொள்கிறேன். கந்தப் பெருமான், தனது தெய்வீக மகிமைகளோடு தன்னை இவருக்கு வெளிப்படுத்திக் கொண்டு, அபரோக்ஷ அநுபூதி என்னும் பேரானந்தத்தை இப்பிறவியிலேயே இவருக்குத் தந்து அருள்புரிய அவரை வேண்டிக் கொள்கிறேன்.

மிகவும் ஊக்கமளிக்கும், மறைபொருளை வெளிப்படுத்தும் அளவிடற்கரிய மதிப்புமிக்க இந்த நூலை உலகெங்கிலும் வாழும் மக்கள் படித்து பயன்பெற நான் வாழ்த்துகிறேன். மேலும், இந்நூல் பற்பல வெளிநாட்டு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு, அதன்மூலம் எண்ணற்ற உண்மையான சாதகர்கள் இதைப் படித்தும் பயன் பெற்றிட வாழ்த்துகிறேன். எனது மகிழ்ச்சியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்து இந்த முன்னுரையை எழுதுவதில் நான் ஆனந்தம் கொள்கிறேன். இந்த நூலைப் படிக்கும் வாசகர்கள் அனைவருக்கும் இறைவன் அருள் புரியட்டும்.

ஓம் ஸ்ரீ சரவணபவாய நம:!

சிவானந்த ஆசிரமம்,
ஸ்கந்த சஷ்டி பண்டிகை தினம், சுவாமி சிதானந்தா
26, அக்டோபர், 1971. தலைவர், தி டிவைன் லை:ஃப் சொசைட்டி

---

* இந்த முன்னுரையும் அடுத்து வரும் முன்னுரையும், 'தி டிவைன் லை:ஃப் சொசைடி' 1972ம் ஆண்டில் ஆங்கிலத்தில் வெளியிட்ட "KANDAR ANUBHUTI" என்ற எனது நூலில் இடம்பெற்றுள்ளன.

முன்னுரை – 2

சமய இலக்கியங்களில் ஒரு அழியாப் படைப்பெனக் கருதப்படும் அருட்செல்வர் அருணகிரிநாதரின் "கந்தர் அநுபூதி" யை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து தனது விளக்கவுரையுடன் வழங்கிய திரு கார்த்திகேயன் அவர்களின் இப்படைப்பை நான் முழுவதுமாக ஆழ்ந்த திருப்தியுடன் படித்து மகிழ்ந்தேன். திரு கார்த்திகேயனுடன் எனக்கு நீண்ட காலமாக தொடர்பு உள்ளதால், ஆன்மீக விஷயங்களில் இவரின் பேரார்வம், இறைவனுக்கு சேவை செய்து வாழ்வதில் தீவிர விருப்பம், இறைவனிடம் பக்தி, மேலும் பொதுவாகப் பிரச்சனைகளை நேர்த்தியாகக் கையாளும் திறமை ஆகியவைகள் இவருக்கு இருப்பதை நான் உணர்ந்திருக்கிறேன். இவரின் உள்ளார்வம் மற்றும் தான் பெற்றிருந்த ஆத்ம ஞானத்தை உலகத்தில் உள்ள சாதகர்கள் அனைவருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற இவரது நோக்கத்திலுள்ள நேர்மை ஆகியவைகளைப் பற்றியும் நான் சுயமாக உறுதி அளிக்க முடியும். ஆழ்ந்த ஆய்வுப்பொருளான ஆத்மாவைப் பற்றிய சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ளும் திறமை கொண்ட இவரைப்போன்ற எழுத்தாளர்களால்தான், அருட்செல்வர் அருணகிரியாரால் ஞானார்த்தமாக வழங்கப்பட்ட சாதனையின் உளவியல் மற்றும் நடைமுறைச் செயல்முறைகளைப் புரிந்து கொண்டு பிறருக்கு விளக்கி உரைக்க முடியும்.

இவரின் இவ்வுரை, இறைவனை அடைய விரும்பும் சாதகர்களின் நோக்கத்திலிருந்து எழுதப்பட்டுள்ளது; இதுதான் ஒரு ஜீவாத்மாவின் தேவைகளுக்கு உணவளிக்கும் ஒரு ஆன்மீக நூலுக்கு உரை எழுதுவதில் பின்பற்ற வேண்டிய சரியான முறையாகும். நாம் பின்னர் எப்படி இருப்போம் (அ) எப்படி இருக்க வேண்டும் என்பதில் நம் கவனத்தை செலுத்துவதைவிட, நாம் இப்போது எப்படி/ என்னவாக இருக்கிறோம் என்பதில்தான் நம் கவனம் அதிகமாக செலுத்தப்பட வேண்டும். நமது தற்போதைய நிலை பரிதாபகரமானது, --- பல சிக்கல்கள், காம உணர்ச்சிகள், உந்தல்களுடன் சிறிது ஆன்மீக நாட்டங்கள் ஆகியவை சேர்ந்த ஒரு குழப்பமான தொகுப்பாக உள்ளது. இவையனைத்தும் மனிதனின் அக வாழ்க்கையின் உண்மைகளை நோக்கும் ஒரு யதார்த்த அணுகுமுறையை பின்பற்றுவதன் அவசியத்தை சுட்டிக்காட்டுகின்றன. இவ்வணுகுமுறை மனிதனின் வெளி வாழ்க்கையைவிட அவனுடைய ஜீவாத்மாவின் நன்மையை பற்றிய கவனத்தைதான் அதிகம் கவர்ந்திழுக்கும். இம்மதிப்பீட்டில் நோக்கின், மிகத் தெளிவாகவும் விரிவாகவும் விளக்கம் செய்யப்பட்டுள்ள திரு கார்த்திகேயனின் இந்நூல், சுய-கட்டுப்பாடு

மற்றும் சுய-அமைதி பெறுவதற்காக ஆன்மீகப் பாதையில் போராடும் அனைத்து நேர்மையான சாதகர்களின் தினசரி வாழ்வில் அவர்களுக்கு வழிகாட்டுவதற்கு மிகவும் பொருத்தமானதாகிறது. இது மட்டுமல்ல. இறுதியில் அவர்களை வரவேற்க காத்துக் கொண்டிருக்கும் முழுநிறை இறை-அநுபூதியை அடைவதற்கு இந்நூல் மிகுந்த ஆற்றலுடைய துணையாகும். ஆகவே, இது கட்டுப்பாடான ஆன்மீக வாழ்க்கையை வாழ்வதற்கான வழிமுறையின் அழகான விளக்கம், அதன்மூலம் அடையப்படும் உச்ச இலக்கு (வாழ்க்கையின் குறிக்கோள்) (THE *SUMMUM BONUM* OF EXISTENCE) ஆகிய இரண்டின் விளக்கத்தை தன்னகத்தே கொண்ட ஒரு ஆழமான ஆய்வு நூல். நலம் பயக்கும் சக்திகளை உலகம் முழுதும் பரப்புவதற்காக இந்நூல் வரவேற்கப்படட்டும்.

ரிஷிகேசம், சுவாமி கிருஷ்ணானந்தா
25 மே, 1972. பொதுச் செயளாலர், தி டிவைன் லைஃப் சொசைடி

முகவுரை

எல்லாம் வல்ல இறைவன் கந்தப் பெருமான், சத்குரு சுவாமி சிவானந்த மகராஜ் மற்றும் அருட்செல்வர் அருணகிரிநாதர் ஆகிய மூவருக்கும் முதற்கண் எனது அனேக கோடி நமஸ்காரங்கள், ஆராதனைகள் மற்றும் வணக்கங்கள். இவர்கள் எப்பொழுதும் எனக்களித்து வரும் ஊக்கத்திற்காக, எனது மிகச் சிறிய காணிக்கையான இந்த ஆய்வு நூலை, அன்பு மற்றும் நன்றியுணர்வுடன்கூடிய சேவையாக அவர்களின் பாதார விந்தங்களில் சமர்ப்பிக்கிறேன். இவர்கள் என்னுள்ளிருந்து அவ்வாறு ஊக்குவித்து வழிகாட்டி இருக்காவிட்டால், இந்த ஆய்வை என்னால் செய்திருந்திருக்கவே இயலாதென்பது மட்டும் திண்ணம். அனைத்துப் புகழும் அவர்களுக்குரியதே! இப்பிறப்பிலேயே நாம் வாழ்க்கையின் குறிக்கோளான முக்தி அடைந்திட, இவர்கள் ஆசிகள் வழிகாட்டட்டும் என்பதே எனது பிரார்த்தனை.

சிவானந்த ஆசிரமத்தின் பஜனை மண்டபத்தில் அமைந்துள்ள சிறிய கோயிலில் ஆத்ம (தற்)சிந்தனை நிலையில் எழுந்தருளியிருக்கிறார் கந்தப் பெருமான். யாத்திரிகர்களும் பக்தர்களும், ஆன்மீக வாழ்வைத் தேடுபவர்களும், விரும்பி நாடுபவர்களும், கவிஞர்களும் தத்துவவாதிகளும், அருட்செல்வர்களும் ஞானிகளும், இந்தியர்களும் வெளிநாட்டவர்களும் ஆகிய பலதரப்பட்டவர்களும் சுவாமி சிவானந்த மகராஜின் புனித ஆசிரமத்திற்கு, பற்பல காரணங்களுக்காக வந்த வண்ணம் உள்ளனர் --- வெறுமனே தரிசனம் செய்வதற்கு, பூஜ்ய ஸ்தாபகரை போற்றி வணங்குவதற்கு, ஆத்ம ஆறுதல் பெறுவதற்கு, மனச் சாந்திக்கு, யோகத்தையும் வேதாந்தத்தையும் கற்பதற்கு, இந்திய கலாசாரம் மற்றும் மதத்தைப் பற்றி கற்றுக்கொள்ள என பற்பல காரணங்களுக்காக, வந்த வண்ணம் உள்ளனர். அவ்வாறு அங்கு வந்தவர்கள் பஜனை மண்டபத்தை அடைந்து கந்தப் பெருமானின் விக்கிரஹத்தைக் கண்டவுடன், இந்தக் கடவுள் யார் என்றறிவதில் பேரார்வம் கொள்கின்றனர்.

அருட்செல்வர் அருணகிரிநாதர் தனது திருப்புகழ்ப் பாடல் ஒன்றின் ஒரு வரியில், "கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்று" என்று கூறுகிறார் --- அதாவது, (ஆறுமுகப் பெருமானின் ஆறு முகங்களில்) ஒரு முகமானது அவரது புகழை பாடும் பக்தர்களின் கர்மவினைகளை அழித்தொழிக்கிறது. இதிலிருந்துதான், கந்தப் பெருமானின் மகிமையைப் பற்றி நான் எழுத வேண்டும் என்ற

எண்ணமே எனது மனதில் தோன்றியது. 'தி டிவைன் லைஃப்' ("The Divine Life") என்ற பெயரில் ஒரு ஆங்கில மாதாந்திர இதழை 'தி டிவைன் லைஃப் சொசைடி' (சிவானந்த ஆசிரமம், ரிஷிகேஷ்) வெளியிடுகிறது. இவ்விதழில் கந்தப் பெருமானைப்பற்றி கட்டுரைகளை தொடராக எழுதுவதுதான் என்னுடைய நோக்கத்தைப் பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி என்று நான் நினைத்தேன். ஆனால், எழுதுவதற்குவேண்டிய விஷயத்தை எங்கிருந்து எடுத்துக் கொள்வது?

அருணகிரியார் அருளிச் செய்த "கந்தர் அனுபூதி, 51 செய்யுள்கள் கொண்ட ஒரு தத்துவ நூல். அதன் செய்யுள்களின் பொருள் என்னவென்று முழுதும் அறிந்து கொள்ளாமலேயே, நான் சில வருடங்களாக அதை நித்திய பாராயணம் செய்து வருகிறேன் அச்செய்யுள்களில் மறைந்திருக்கும் சக்தியின் மகிமையை என்னவென்று சொல்வது! நன்றாகப் பொருள் தெரியாமல் பாராயணம் செய்தும்கூட, அது எனது உள்ளத்திற்கு வேண்டிய ஆறுதலை எப்பொழுதும் தந்தது, தந்து கொண்டே இருக்கிறது. அவ்வாறு அதை நித்தியமும் பாராயணம் செய்து வந்தபோது, அச்செய்யுள்களில் வெளிப்படையாகத் தெரியும் அர்த்தத்தைத் தவிர, மிகவும் ஆழ்ந்த ஆன்மீக உட்கருத்து நிறைந்து இருப்பதை சிறிதுசிறிதாக உணர்ந்தேன்.

அந்த ஆண்டுகளில் (1960 மற்றும் 1970களில்), ஆசிரமத்தில் ஸ்ரீ சுவாமி கிருஷ்ணானந்தாஜி அவர்கள் ஸ்ரீமத் பகவத் கீதை, உபநிஷத்துகள் போன்ற வேதாந்த நூல்களை மிகவும் தெளிவாகவும், பகுத்தறிவிற்கு முற்றிலும் உகந்த முறையிலும், உன்னதமான ஆழ்ந்த ஆய்வுடனும் விளக்கி சொற்பொழிவுகள் ஆற்றிவந்தார். அவற்றைக் கேட்கும் கிடைத்தற்கரிய பாக்கியம், எனக்கும் மற்ற ஆசிரம சாதகர்கள், சன்னியாசிகள், ஆசிரமத்திற்கு வந்துபோகிறவர்கள் ஆகிய அனைவருக்கும் கிடைத்திருந்தது. அவருடைய சொற்பொழிவுகளைக் கேட்கக்கேட்க, நான் தினமும் பாராயணம் செய்யும் "கந்தர் அநுபூதி" யில் சுவாமிஜி அவர்கள் மிகவும் நேர்த்தியாக விளக்கும் பகவத்கீதை, உபநிஷத்துகள் போன்ற வேதாந்த நூல்களிலுள்ள தத்துவங்கள் பொதிந்துள்ளன என்பது எனக்கு தெளிவாகப் புரிந்தது. எனவே, கந்தப் பெருமானின் புகழையும் மகிமையையும் நான் பாடிமகிழ்வதற்கு மிகவும் சுலபமான மற்றும் உன்னதமான வழி, அருட்செல்வர் அருளிய கந்தர் அநுபூதி நூலுக்கு ஓர் விளக்கவுரை எழுதுவதுதான் என்று எண்ணினேன்; ஏனெனில், கந்தர் அநுபூதிச் செய்யுள்களில் மறைமுகமாகக் கூறப்பட்டுள்ள உபநிஷத்துகள் மற்றும் வேதாந்த நூல்களின் அறிவுரைகளை அதில் நன்கு வெளிக்கொண்டுவர இயலும்;

அதே தருணத்தில், அநேக செய்யுள்களில் கூறப்பட்டுள்ள முருகனின் பல்வேறு அம்சங்கள் மற்றும் அவரது வெற்றிச்செயல்களை ஆதாரமாகக் கொண்டு அவரின் அவதாரம், லீலைகள், மகிமைகள், ஆகியவைகள் பற்றி நன்கு விளக்கமாக விவரிக்க இயலும். இவ்வாறு, கந்தர் அநுபூதி விளக்கவுரைக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் சொசைட்டியின் மாத இதழில் எழுத முடிவு செய்தேன்.

ஆனால், தமிழிலும் சமஸ்கிருதத்திலும் உள்ள வேதாந்த நூல்களில் எனக்கு போதிய ஞானமில்லை. மேலும், கட்டுரை எழுதுவதில் இது எனது முதல் முயற்சி. எனவே, இந்தப் பணியைத் தொடங்குவதில் சிறிது தயங்கினேன். எனவே, தொடர்கட்டுரையை மாதப் பத்திரிகையில் எழுதத் துவங்குவதற்கு முன்னால், கந்தர் அனுபூதியின் 51 செய்யுள்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தேன்; மேலும் ஒவ்வொரு செய்யுளுக்கும் சுருக்கமான உரையும் எழுதி, ஒரு முழு கையெழுத்துப் பிரதியைத் தயார் செய்தேன். அப்பிரதியை எடுத்துக் கொண்டு, ஸ்ரீ சுவாமி கிருஷ்ணானந்தாஜி மகராஜிடம் சென்றேன். அவர் சொற்பொழிவுகளில் தந்த வேதாந்த அறிவுரை-களைத்தான் இச்செய்யுள்களை விளக்கி உரைப்பதில் நான் உபயோகித்திருந்தேன். சங்கத்தின் முக்கிய செயலாளரும், மாத இதழின் ஆசிரியருமான ஸ்ரீ சுவாமி கிருஷ்ணானந்தாஜியிடம் எனது விளக்கவுரை பிரதியை அளித்து, அதைப் படித்துப் பார்த்து, உரிய திருத்தங்களையும் செய்திடுமாறு பிரார்த்தித்தேன். ஓய்வின்றி பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டு இருந்த அவர் உடனே எனது பிரார்த்தனையை ஏற்றுக்கொண்டு, தனது பணிகளுக்கு நடுவே இதையும் படித்து, தேவையான திருத்தங்களையும் மிகவும் கவனமாகவும் பொறுமையாகவும் செய்து தந்தார். இதற்காகவும், மற்றும் இவ்விஷயமாக மேன்மேலும் விளக்கங்கள் தரவும் மற்றும் வழிகாட்டிடவும் அவரை எப்பொழுது அணுகினாலும் உடனே அதற்கும் செவிசாய்த்து என்னை அன்புடன் ஊக்குவித்த சுவாமிஜி கிருஷ்ணானந்த மகராஜுக்கு நான் பட்டுள்ள நன்றிக்கடன் கடலினும் பெரியது. இவ்வாறாக, "God Experience" (இறை-அநுபவம்) என்ற தலைப்பில் இத்தொடர் கட்டுரையின் முதல் கட்டுரை சங்கத்தின் "தி டிவைன் லைஃப்" (The Divine Life) ஆங்கில மாதஇதழில், 1969 மார்ச் மாதம் வெளியாகியது. 1971 செப்டம்பரில் இக்கட்டுரைத் தொடர் நிறைவு பெற்றது. பின்னர், இத்தொடர் 'தி டிவைன் லைஃப் சொசைடி' -யால் (The Divine Life Soceity) ஒரு புத்தகமாகவே "கந்தர் அநுபூதி" (Kandar Anubuthi) என்ற தலைப்பில் (ஆங்கிலத்தில்) 1972இல் வெளியிடப்பட்டது. "கந்தர் அநுபூதி" புத்தகமானது முதன் முதலில் சங்கத்தின் ஆசியுடன் பிறந்த எளிய முறை இதுதான். ஆனால், தெய்வீக சங்கல்பமும் இறைவனின்

நோக்கமும், நான் எந்த நோக்கத்துடன் இந்நூலை எழுத ஆரம்பித்தேனோ, அதிலிருந்து மிகவும் வேறுபட்டு இருப்பதாகத் தோன்றுகிறது.

அருட்செல்வர் அருணகிரியாரின் 'கந்தர் அநுபூதி' நூல் பண்டிதர்களாலும் பக்தர்களாலும் மிகவும் உயரியதாக மதிப்பிடப்படுகிறது; ஏனெனில், ஒவ்வொரு செய்யுளும் கருத்தாழம் மிக்கதாகவும், மனிதர்களின் பல்வேறு அடுக்குகளைத் (different layers of one's personality) தொடுவதாகவும் உள்ளன. ஆனால், இச்செய்யுள்களுக்குள் ஒன்றுக்கொன்று தொடர்போ சம்பந்தமோ இருப்பதாகத் காணப்படாததால், இந்நூல் அருட்செல்வரால் ஒரே சமயத்தில் இயற்றப்படவில்லை என்றும், இச்செய்யுள்களை தனித்தனியே பல்வேறு கால கட்டங்களில் அவர் இயற்றியுள்ளார் என்றும், இவைகளுக்குள் எவ்வித மையக் கருத்தும் இல்லை என்றும், இது ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் எழுதப்பட்ட தத்துவ நூல் அல்ல என்றும் பெரும்பாலோரால் கருதப்படுகிறது. ஆகவே, இத்தொடரை இதழுக்காக எழுதும்பொழுது, நானும் அவர்களைப் போலவே எண்ணி, ஒவ்வொரு செய்யுளையும் தனித்தனியாகக் கருதி, அதற்கேற்ப விளக்கவுரைகளையும் எழுதியிருந்தேன்.

இருப்பினும், செய்யுள்களின் விரிவான விளக்கம் ஒவ்வொரு இதழிலும் பிரசுரமாகி வரும்பொழுது, சில செய்யுள்களுக்கு இடையில் மேற்போக்காக கருத்துகளின் இணைப்பு இருப்பது எனக்குத் தெரிந்தது, குறிப்பாக நோக்கின், செய்யுள்கள் 12 மற்றும் 13; 28 மற்றும் 29; 33, 34 மற்றும் 35; 42, 43 மற்றும் 44; 39 மற்றும் 43-க்கும்; 2 மற்றும் 43 இவற்றுக்கு இடையேயுள்ள தொடர்ப்பை இதற்குச் சான்றாகக் குறிப்பிடலாம். இதனால், இதிலிருந்து, நூலின் முதலிலிருந்து கடைசிவரை எல்லா செய்யுள்களுக்கிடையேயும் இவ்வாறான கருத்துத் தொடர்ப்பு, வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும், தங்க இழைபோல் நிச்சயமாக ஊடுருவி இருக்கவேண்டும் என்று என்னைத் தீவிரமாக எண்ணச் செய்தது. "கந்தர் அநுபூதி" (இறை-அநுபூதி) என்ற இந்நூலின் பெயர் குறிப்பாகத் தெரியப்படுத்துவதுபோல், அருணகிரியார் இதைக் கொடுப்பதின் நோக்கம், சாதகர்கள் இறை-அனுபவத்தை அடைய இது உதவ வேண்டுமென்பதே. அதனால் இச்செய்யுள்களுக்கிடையில், சாதகர்கள் தங்கள் இலக்கை அடைந்திட வழிகாட்டும், ஒரு தொடர்புள்ள உட்கருத்து கட்டாயம் இருந்துதான் தீரும் என்ற எண்ணம் என்னுள் வலுப்பெற்றது, அவ்வாறான தொடர்பு வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும், வேத மந்திரங்களில் மறைமுகமாக இருப்பதுபோல், கண்டிப்பாகச் செய்யுள்களில் புதைந்திருக்க வேண்டும். இம்மாதிரியான எண்ணம் எனக்குள் மிகவும்

வலுப்பெற்றுக் கொண்டிருந்தாலும், அப்படிப்பட்ட ஒரு திட்டவட்டமான தொடர்ப்பைக் காண முடியவில்லை. இருப்பினும், இவ்வரிய நூலின் பின்புலத்தில் ஒரு மகத்தான நோக்கம் கண்டிப்பாக இருந்துதான் ஆகவேண்டும் என்ற ஓர் எண்ணம் எனது ஆழ்மனதில் வேலை செய்துகொண்டே இருந்தது. செய்யுளுக்குச் செய்யுள் சங்கிலித் தொடராக உட்கருத்து இருந்துதான் தீரும் என்ற அந்த திடமான நம்பிக்கை அழிக்க முடியாததாக இருந்து வந்தது, அதனால், நான் தினசரி அன்றாடக் காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கும்-போதுகூட அது சூட்சுமமாக மனதில் செயல்பட்டுக் கொண்டே இருந்தது. ஆசிரமத்தின் பின்புறத்திலுள்ள இமயமலையின் காட்டு வழிகளில் மாலை வேளையில் தினசரி நான் தனியனாக உலாவப்போவது வழக்கம், அப்பொழுது இவ்வெண்ணம் மேலெழும்பி வந்து இதைப்பற்றி ஆழ்ந்து சிந்திப்பதை என்னால் தவிர்க்க முடிய-வில்லை; அப்பொழுது, செய்யுள்களில் புதைத்துள்ள இரகசியமான தத்துவப்பொருள் என் மனதில் மின்வெட்டொளிபோல் மிளிரும், ஆனால் பனிபடர்ந்ததுபோல் மிகவும் மங்கலாகத்தான் இருக்கும். எனவே, பின்னர் அத்தொடர் கட்டுரைகள், புத்தகமாக 1972ல் "கந்தர் அனுபூதி" என்ற தலைப்பில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்டபோது அதில், மற்ற நூலாசிரியர்களைப் போலவே, நானும் ஒவ்வொரு செய்யுளையும் தனித் தனியாக பாவித்துத்தான் விளக்கியிருந்தேன்; ஆனாலும், ஒவ்வொரு செய்யுளின் விளக்கவுரையின் முடிவிலும் அச்செய்யுளில் புதைந்துள்ள முன்/பின் செய்யுள்களுடனுள்ள தொடர் கருத்தை (தத்துவப்பொருளை), சாதகர்களுக்கு உதவியாய் இருக்கும் என்று கருதி, [ ] அடைப்புக்குறிக்குள் தந்திருந்தேன். ஏனெனில், செய்யுள்கள் ஒன்றுக்கொன்று தொடர்பற்ற தனித்தனியானவை என்று அதற்குமேல் என்னால் கருத இயலவில்லை, --- "கந்தர் அநுபூதி" , இறை-அநுபூதி அடைய சாதகர்களுக்கு வழிகாட்டும் ஒரு தத்துவ நூல் என்பது என்னுடைய உறுதியான நம்பிக்கை.*[1] எனவே, அப்புத்தகத்தின் முகவுரையில் நான் பின்வருமாறாக

---

*[1] {பின்னர் இப்புத்தகத்தின் இரண்டாவது பதிப்பு 1990லும், மூன்றாவது பதிப்பு 2005லும் வெளி வந்தது, மேலும் இப்புத்தகம் இரு அன்னிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு -- *இத்தாலி* மொழியில் 1999லும், *ஜெர்மன்* மொழியில் 2009லும் -- புத்தகங்களாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன என்பதை இத்தருணத்தில் தாழ்மையுடன் நான் பகிர்ந்து கொள்கிறேன்}.

குறிப்பிட்டிருந்தேன்: *"இந்நூலில் பூடகமாகவும் மறைபொருளாகவும் சொல்லப்பட்டுள்ள தத்துவங்களை எடுத்தியம்பி, இது ஒரு தத்துவ நூல் (treatise) என்பதை எடுத்துக்காட்ட, பின்னர் ஒருநாள் இன்னொரு புத்தகம் எழுத வேண்டுமென்று நினைத்ததுண்டு. அதில் ஒவ்வொரு செய்யுளிலும் சங்கிலித் தொடராக ஓடும் அந்த வேதாந்த சாரத்தை வெளிக்கொணர்ந்து விளக்கி சாதகர்களுக்கு மிகவும் பயன்படும் ஒரு புத்தகமாக அமைத்திட நினைத்தேன் --- (ஓர் சாதகன் தன் சாதனையைத் தொடங்குவதற்குத் தேவையான வழிகாட்டுதலிலிருந்து ஆரம்பித்து, அச்சாதனையை அவன் மேற்கொள்ளும்போது அவன் அவ்வப்போது எதிர்கொள்ளும் தடைகளை சமாளிப்பதற்கும் உதவி புரிந்து, அவன் இறுதியாக இறை-அநுபூதியை பெற்றிடும் வரையில் வழிகாட்டும் ஓர் நூல்)."* "கந்தர் அநுபூதி" நூலின் மீதான எனது நம்பிக்கை இவ்வாறாக அசைக்க முடியாததாக இருந்ததால்தான், இந்த "உட்பொருள் உணர்த்தி பக்தி-ஞான அருள்வழி காட்டும் **கந்தர் அநுபூதி"** ('The Esoteric KANDAR ANUBHUTI') என்ற தலைப்பில் இப்புத்தகமாக வெளிவருகிறது. குருதேவ் சிவானந்த மகராஜ் மற்றும் கந்தப் பெருமானின் கிருபைதான், இப்பணிக்கு தொடக்கத்திலிருந்து வழிகாட்டி ஊக்கமளித்தது. இந்த தெய்வீக சங்கல்பம் நிறைவேறும்வரை அவர்கள் என்னை ஒரு கூஷண நேரம்கூட திருப்தியுடன் ஓய்வெடுக்க விடவில்லை.

செய்யுள்களில் புதைந்துள்ள உட்கருத்தைப் புரிந்துகொள்ள முயலும் பொழுது, நாம் ஒரு விஷயத்தை கவனத்தில் கொள்வது நல்லது; அதாவது, அருட்செல்வர் அருணகிரியார் தன்னை ஒரு சாதகனாகக் கருதிக் கொண்டு கந்தர் அனுபூதியை இயற்றியுள்ளார் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே, நாம் இச்செய்யுள்களை பாராயணம் செய்யும் சமயத்தில், இவை அருணகிரியாரின் சொந்த வாழ்க்கையையோ அல்லது அவரது அனுபவங்களையோ குறிப்பிடுவனவல்ல என்பதை நன்றாக மனதில் கொள்ளவேண்டும்; ஆன்மீகப் பாதையில் செல்லும் ஒரு சாதகன் பாடுவதாக (அல்லது தன்னையே அந்தச் சாதகனாக) பாவித்துக் கொண்டு பாடவேண்டும். இவ்வாறு செய்து வந்தால், இதில் புதைந்துள்ள மறைபொருளை உணர ஏதுவாகும்; அவை தாமே உள்ளிருந்து வெளிப்படும்.

இந்த எனது புதிய முயற்சியானது ஒரு சாதகனுக்கேனும் அவனது ஆன்மீக இலக்கை அடையும் பயணத்தில் ஒரு சிறிதளவேனும் உதவியாய் இருக்குமாயின், அதுவே என் முயற்சிக்கு கிடைத்த அங்கீகாரம் (வெகுமதி) ஆகும். இந்த விளக்கவுரையை எழுதுவதில் நான் ஈடுபட்டிருக்கும்போது, பல

உயரிய ஆன்மீக உண்மைகளும் இரகசியங்களும் எனக்கு வெளிப்பட்டன; எனவே, நிச்சயமாக, இதை எழுதியதன் மூலம் பெருமளவில் பயனடைந்தவன் நான்தான் என்பதில் ஐயமில்லை.

ஒவ்வொரு செய்யுளும் பின்வரும் முறையில் விளக்கப்பட்டுள்ளது:

அ) முதலில், அருட்செல்வர் அருளிய **செய்யுள்.** (வாசிப்பதற்கு எளிதாகவும், வாசிக்கும் பொழுதே பொருளைப் புரிந்து கொள்ள பயன்படுமாறும் அளவிலும் சொற்கள் பிரித்து அமைக்கப்பட்டுள்ளன.)

ஆ) இரண்டாவதாக, செய்யுளின் **பொழிப்புரை** (முழுமையான பொருள் புரிவதற்காக சில சொற்கள் அடைப்புக்குள் தரப்-பட்டுள்ளன.)

இ) மூன்றாவதாக, செய்யுளிற்கான விரிவான **விளக்கவுரை**. {செய்யுள்களுக்கிடையில் உள்ள இரகசிய உட்கருத்துத் தொடர்பை விளக்கமாக வெளிப்படுத்தும் விதத்தில் (வேதாந்த தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட) ஒரு விவேகமான அணுகுமுறையில் செய்யுள்களுக்கு விளக்கம் அளிக்க முயற்சிக்கப்பட்டுள்ளது.}

செய்யுள்களில் கந்தப் பெருமானின் பெயர்கள், மகிமைகள் மற்றும் லீலைகள் ஆகியவைகளின் குறிப்புகள் வரும்போது, ஸ்கந்த புராணத்திலிருந்து அதற்கேற்ப நிகழ்வுகள், கதைகள் மற்றும் குறிப்புகள் ஆகியவைகள் தொகுக்கப்பட்டு இந்த நூலில் சேர்க்கப்பட்டுள்ளன.

'தி டிவைன் லை்ப் சொசைடி' பதிப்பித்த எனது 'Kandar Anubuthi' (ஆங்கில) புத்தகத்திலிருந்து தேவையான பகுதிகளை, எனது புதிய புத்தகமான "The Esoteric Kandar Anubuthi" யில் உபயோகித்துக் கொள்வதற்கு இசைவும் அநுமதியும் தந்த சொசைடிக்கு நான் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"The Esoteric Kandar Anubhuti" என்ற எனது ஆங்கிலப் புத்தகத்தை தமிழில் மொழி பெயர்த்துத் தரும் (இந்த மொழி பெயர்ப்பு) ஓர் பிரம்ம பிரயத்தனமான பணியை, ஆன்மீகச் சேவையாக மேற்கொண்டு, மிகவும் சுலபமாக படிக்கக்கூடியதொரு சரளநடையில் அதனை (இந்த மொழி பெயர்ப்பை) அமைத்துத் தந்த முனைவர் திரு கி. பாலச்சந்திரன் [M. A. (Economics), Ph. D (Management)] அவர்களுக்கு எவ்வார்த்தைகளைக் கூறி என் இதயபூர்வமான நன்றியை தெரிவிப்பது என்று எனக்குத் தெரியவில்லை. மிகப்பெரிய இப்பணியை நிறைவாகச் செய்து தருவதற்கு அவர் எடுத்துக்கொண்ட மிகக் குறுகிய கால அவகாசமான ஒரு வருடத்திற்குள், வேறு யாராலும்

இதனைச் செய்திருக்க இயலாதென்பது என் நிச்சயமான அபிப்பிராயம். நேபாளம், ஸ்ரீலங்கா மற்றும் இந்தியாவின் பலபகுதிகளுக்குப் புனித யாத்திரைகள் மேற்கொள்ளுதல், தனது மற்ற பணிகள் இவற்றுக்கிடையில், இந்த மொழிபெயர்ப்புப் பணியை ஒரு வருடத்திற்குள் செய்வதென்பது அவருக்கு சாத்தியமாயிருந்தது என்றால், தான் எடுத்துக்கொண்ட பணியை எப்பாடுபட்டாவது பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும் என்ற அவரது அர்ப்பணிப்பு பாவனை மற்றும் உறுதிப்பாடுதான் அதற்குக் காரணமாயிருந்திருக்க வேண்டும். கந்தப் பெருமானின் கிருபைதான் அவர்மூலம் இவ்வாறு செயல்பட்டிருக்கிறது என்பது சர்வ நிச்சயம். இதெல்லாம் பெருமான் மற்றும் அவர் பக்தர்களின் மகிமையே. பெருமானின் கிருபை அவரது வாழ்க்கையை எல்லாவிதத்திலும் செறிவூட்டி, இப்பிறவியிலேயே இறை-அனுபூதியை அவருக்கு அருளிட வேண்டி இறைஞ்சுகிறேன்.

முனைவர் பாலச்சந்திரன் அவர்கள் இத்தமிழாக்கப்பணியை ஏற்பதற்கு மூல காரணமாயிருந்த பூஜ்யஸ்ரீ ஸ்வாமி கிருஷ்ணாத்மாநந்த சரஸ்வதி, ஆசார்யா, சின்மயா மிஷன், ஓசூர், தமிழ்நாடு, அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை சமர்ப்பித்திட நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். அவர் தனது ஆசியை எனக்கு வழங்கி அருளுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

கந்தப் பெருமானின் கிருபை நம்முடைய ஆன்மீகப் பாதையில் ஒளிதந்து, வழிகாட்டி, நமது முயற்சிகளை வெற்றி பெறச்செய்து, அருளிட வேண்டும் என்று நான் முழுமனதுடன் பிரார்த்திக்கிறேன்.

சிவானந்தா ஆசிரமம், ரிஷிகேஷ்

8வது செப்டெம்பர், 2019. **N.V.** கார்த்திகேயன்

கந்தர் அநுபூதி

ஓர் அறிமுகம்

அருட்செல்வர் அருணகிரிநாதர் தமிழ்நாட்டின் எண்ணற்ற (நாயன்மார்கள் போன்ற) திருத்தொண்டர்களில் தனிச்சிறப்புடன் திகழ்பவர். அவர் அருளிச்செய்த, இரகசிய உட்கருத்துகள் கொண்ட, "கந்தர் அநுபூதி" ஒரு ஆழ்ந்த மெய்யியல் மற்றும் ஆன்மீக தத்துவ நூல். இதில் 51 செய்யுள்கள் உள்ளன. இது *மந்திர-சாஸ்திரம்* என்று அனைவராலும் போற்றி மதிக்கப்படுகிறது. இதில் அடங்கியுள்ள உயரிய ஆன்மீக விஷயங்கள் மற்றும் கருத்தாழம் ஆகிய விசேஷங்களால் அருணகிரியாரின் நூல்களிலேயே இது மிகச்சிறந்தது எனக் கருதப்படுகிறது, செய்யுள்களும் மிகமிகச் சிறியவை, ஆனால் கருத்தில் மிகமிக உயரியவை, உன்னதமானவை. "கந்தர் அநுபூதி" நூலும் மூர்த்தியில் சிறிதானலும் கீர்த்தியில் மிகவும் உயர்ந்தது. இதன் தலைப்பு குறிப்பிடுவதைப்போல், இந்நூல் இறை-அநுபூதி (பெறுவதைப்) பற்றியதே. சில கந்தர் அநுபூதி பதிப்புகளில், 100 செய்யுள்கள் இருக்கின்றன, எனினும் பிந்தைய 49 செய்யுள்களும் பின்னர் சேர்க்கப்பட்டவை என்றும், அருணகிரியாரால் இயற்றப்பட்டதல்ல என்றும் அனைவராலும் கருதப்பட்டு பொதுவாக நிராகரிக்கப்படுகிறது.

சிவபெருமானின் ஆன்மீக (சக்தியிலிருந்து தோன்றிய) மைந்தனின் பலபெயர்களில் ஒன்று "கந்தன்" (சமஸ்கிருதத்தில் "ஸ்கந்தன்") ஆகும். கந்தப் பெருமானின் மற்ற முக்கியப் பெயர்களாவன: ஷண்முகன், கார்த்திகேயன், குகன், வேலாயுதன், முருகன், ஆறுமுகன், போன்றவைகளாகும். இவர் பகவான் கணேசரின் இளைய சகோதரன். "அநுபூதி" என்பது ஒரு சமஸ்கிருதச் சொல், அப்படியே அதே அர்த்தத்தில் தமிழிலும் கையாளப்படுகிறது. "அநுபூதி " என்றால் நேரடியான அல்லது சொந்த இறை-அநுபவம். அதாவது, ஜீவாத்மா பரமாத்மாவுடன் (ஆன்மீக) ஐக்கியத்தை அடைவது. இதுவே இரண்டற்ற அல்லது அத்வைத ஐக்கியநிலையென்று (வேதாந்த சாஸ்திரங்களில்) குறிப்பிடப்படுகிறது. இதுதான் *ஆத்ம-சாக்ஷாத்காரம்* (அ) நேரடியான சுய-அநுபவம். எனவே, "கந்தர் அநுபூதி" என்பது கந்தப் பெருமானின் நேரடியான அநுபவம் (அ) கந்தப் பெருமானுடன் தெய்வீக-ஐக்கிய அநுபவம். மேலும், அருணகிரியாருக்கோ, கந்தப் பெருமான் வெறும் *இஷ்ட-தேவதை* மட்டுமல்ல; ஆனால் [அவரே பல செய்யுள்களில் (2, 13, 28, மற்றும் 49) வெளிப்படுத்தியுள்ளபடி] கந்தப் பெருமான் எல்லையில்லாப் பரம்பொருளும் (பரபிரம்மமும்) ஆவார். ஆகவே, எளிய சொற்களில்

சொல்லுவதானால், "கந்தர் அநுபூதி" என்றால் "இறை-அநுபவம்" (அ) "இறைவனின் *சாக்ஷாத்காரம்*" என்றாகும்.

அருட்செல்வர் அருணகிரியார் பல கவிதை நூல்களை அருளியுள்ளார்; அவற்றில் தலைசிறந்தது 'கந்தர் அநுபூதி' . இது 51 செய்யுள்களை மட்டுமே கொண்ட மிகச்சிறிய படைப்பாக இருந்தாலும், இது ஆன்மீக ஞானத்தில் மிக உயர்ந்ததாகவும், ஆழமான கருத்துக்கள் நிறைந்ததாகவும் உள்ளது (முன்பே கூறியபடி, மூர்த்தி சிறிதானாலும், இதன் கீர்த்தி மிகப்பெரிது). பரம்பொருளை நாடும் ஆன்மீக சாதகர்களுக்கு இது ஒரு அரிய ஞானப் பொக்கிஷம், மற்றும் இறைவன்பால் அன்பு பாராட்டுபவர்களுக்கு (பக்தர்களுக்கு) இது ஒரு பக்திச் சுரங்கம். இது *பக்தி* மற்றும் *ஞானம்* ஆகிய இரண்டும் மர்மமாகக் கலக்கப்பட்ட ஒரு அசாதாரண கவிதைப் படைப்பு. பக்தியும் ஞானமும் ஒன்றையொன்று மிஞ்சுகிறது; இதயத்தைத் தொட்டு தூய உணர்வுகளை தூண்டுகிறது, அதே சமயத்தில், புத்திக்கு அப்பாற்பட்ட ஆழமான சிந்தனைகளை தூண்டுகிறது. இது ஒரு *மந்திர-சாஸ்திரம்* (அ) மறைபொருள் தத்துவ ஆய்வு நூல் என்றும், முனிவர் திருமூலர் அருளிச்செய்த *'திருமந்திரம்"* எனும் புகழ்வாய்ந்த மந்திர-சாஸ்திர நூலுக்கு இணையானது என்றும் கருதப்படுகிறது. இதிலிருந்து இதன் மகத்துவத்தை நாம் அறியலாம். திருமூல முனிவர் ஒரு வருடகாலம் சமாதியில் ஆழ்ந்திருந்து வெளிப்பட்ட பின் ஒரே ஒரு மந்திரத்தை அளித்துவிட்டு, திரும்பவும் சமாதியில் ஆழ்ந்து விடுவார், இவ்வாறாக 3000 மந்திரங்கள் கொண்ட படைப்பு "திருமந்திரம்" . சைவ சித்தாந்தத்தின் பன்னிரு திருமுறைகளில், "திருமந்திரம்" பத்தாவது திருமுறையாகப் போற்றப்படுகிறது. அதேபோல, "கந்தர் அநுபூதி" கந்தப் பெருமானின் "முருகவேள் பன்னிரு திருமுறை" களில், பத்தாவது திருமுறையாக அவரது பக்தர்களால் போற்றப்படுகிறது. இவ்வாறாக, கந்தர் அநுபூதியின் மகிமை மற்றும் மகத்துவத்தை ஓரளவு தெரிந்துகொள்ள இயலும்; ஆனால் அதன் முழு மகத்துவத்தையும் சக்தியையும் உண்மையிலேயே ஒருவன் உணர வேண்டுமானால், அது அவன் இதயத்தில் அமர்ந்து, அவனது அநுபவமாகவே ஆக வேண்டும்.

கந்தர் அநுபூதி நூலில் வெளிப்படையாகவும் பூடகமாகவும், பல மந்திரங்கள் உள்ளனவென்று சரியாகத்தான் நம்பப்படுகிறது. பெருமானின் பெயர்களான முருகன், கந்தன், சண்முகன், குகன், வேலவன், ஆறுமுகன் ஆகிய அனைத்துமே தனித் தனி மந்திரங்கள்தான்; கந்தர் அனுபூதியில் இம்மந்திரங்கள் நிறைந்துள்ளன. மேலும், பல செய்யுள்களில் பல மந்திரங்கள் சூத்திர வடிவங்களில் மர்மமாக உள்ளன. உதாரணத்திற்கு, செய்யுள் 1ல் *"வேலும் மயிலும்*

துணை" , செய்யுள் 36ல் *"நாதா குமரா நம:",* செய்யுள் 37ல் *"(நான்) இறையோன் பரிவாரம்"* , செய்யுள் 51ல் *"குருவாய் வருவாய் அருள்வாய் குகனே"* --- என்று இருப்பதைக் குறிப்பிடலாம். இம்மந்திரங்களின் விளக்கங்களை அந்தந்த செய்யுளின் விளக்கவுரையில் காணலாம். கந்தர் அநுபூதி ஒரு மந்திர சாஸ்திரம் என்று கருதப்படுவதற்கு இன்னுமொரு காரணமும் உள்ளது. மந்திரம் என்பதற்கு சொற்பொருள் விளக்கம்: *"மனனாத் த்ராயதே இதி மந்த்ர:"* --- "எதை திரும்பத் திரும்ப ஜபம் செய்வதால் (அ) தியானிப்பதால், ஒருவன் சம்சார சக்கரத்திலிருந்து விடுபடுகிறானோ (காப்பாற்றப்படுகிறானோ), அது 'மந்திரம்' எனப்படுகிறது." உண்மையில், இந்த நூலின் மறைபொருள் மற்றும் இது சுட்டும் கருத்துகளை ஒருவன் ஆழ்ந்து சிந்தித்து தியானித்து வந்தால் போதும், அதுவே அவனை பந்தத்திலிருந்து விடுவித்து முக்தியை அளித்து விடும்.

கந்தப் பெருமானும் வேலும் ஒன்றே. வேல் அற்புத சக்திகளைக் கொண்ட ஒரு திவ்ய ஆயுதம். அதைக் கொண்டு முருகன் அசுரர்களை வதம் புரிந்தார். அந்த வேல் பூரண ஞான-சொரூபம்; அது உள்ளிருக்கும் அசுரர்களான (அ) எதிரிகளான அவித்யை (அறியாமை), காமம் (ஆசை) மற்றும் கர்மம் (கர்மபலன்) ஆகியவைகளை அழித்தொழித்து, ஜீவர்களை பிறப்பு-இறப்பு பந்தத்திலிருந்து விடுவிக்கிறது. வேல் ஒரு மர்மமான தெய்வீக சக்தி, அருட்செல்வர் அருணகிரியாரும் இதனை மந்திர-வேல் என்று தனது திருப்புகழ் பாட்டு ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். கந்தர் அநுபூதி நூலிலுள்ள 51 செய்யுள்களில், 25ல் அப்படிப்பட்ட வேலிடம் நேரடியாக பிரார்த்தனைகள் செய்யப்பட்டுள்ளன. இக்காரணத்தினாலும், இந்நூல் ஒரு மந்திர சாஸ்திரம் என்று கருதப்படுகிறது.

ஆக, பெருமானின் பெயர்களான மந்திரங்களால் நிரம்பப்பட்டு இருப்பதாலும்; சூத்திர வடிவத்தில் மர்மமாக மந்திரங்களை தன்னகத்தே கொண்டிருப்பதாலும், இம்மந்திரங்களை ஒருவன் உச்சரித்தும், தியானித்தும் வந்தால் அவை அவனை சம்சாரத்திலிருந்து விடுவிப்பதாலும்; அறியாமையை அழிக்கும் தெய்வீக சக்தி படைத்த வேலின்மேல் தியானமும் அந்த வேலிடம் பலதடவை பிரார்த்திப்பதாலும்; இந்த அற்புத மந்திர-சாஸ்திரமான கந்தர் அனுபூதியை ஒருவன் தினசரி பாராயணம் செய்து வந்தால், அவன் எதை எவ்விதத்தில் வேண்டுமென்று நேர்மையாகப் பிரார்த்தனை செய்கிறானோ, அதை அவ்விதத்திலேயே தந்திடும் சக்தி அதனிடமுள்ளது. எனவே, கந்தப் பெருமானின் பக்தர்களுக்கு, "கந்தர் அநுபூதி" தினமும் (பக்திப் பரவசத்துடன்) பாராயணம் செய்யப்படும்

ஒரு தெய்வீக நூல். கந்தர் அநுபூதி நூலிலிருந்து ஒரு செய்யுளையோ (அ) செய்யுளின் ஒரு பகுதியை மட்டுமோ உச்சரித்துப் பிரார்த்தனை செய்ததன்மூலம் தாங்கள் பெற்ற அற்புதப் பாதுகாப்புகளை விவரிக்கும் பல பக்தர்களை இன்றும்கூட நாம் காணலாம். அவ்வாறான நிகழ்வுகளில் இரண்டு பின்வருமாறு:

(1) கந்தர் அநுபூதியை அனுதினமும் பாராயணம் செய்துவந்த பக்தன் ஒருவன் ஒருநாள் ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்கு ஒரு காட்டு-வழியில் சென்று கொண்டிருந்தான். வழியில் திடீரென்று ஒரு திருடன் வந்து அவனை மிரட்டினான். அப்போது அவன் தன்னிடமிருந்த ஒரு வெற்றிலையின் காம்பைக் கிள்ளி, அதைத் "தொளைபட்டுருவத் தொடு வேலவனே" என்று சொல்லி திருடனை நோக்கி எறிந்தான் --- [பொருள்: "தனது வேலைப் பாய்ச்சி (அசுரன் சூரபத்மனின் இதயத்தை) தொளைத்து அழித்த ஓ வேலாயுதப் பெருமானே,"] (செய்யுள் 4ன் கடைசி வரி). அந்தோ, என்ன ஆச்சரியம்! அந்த வெற்றிலைக் காம்பே வேலைப்போல் வேலைசெய்து அத்திருடனைத் தாக்கி அந்த இடத்திலேயே கொன்றுவிட்டது.

(2) சென்னையைச் சேர்ந்த சைவ சித்தாந்த மகாசமாஜம் "கந்தர் அநுபூதி" என்ற ஒரு புத்தகத்தை அனைத்துச் செய்யுள்களின் மூலம், மற்றும் அதனதன் யந்திரம் (அ) சக்ரம், மூல-மந்திரம் ஆகியவைகளுடன் பதிப்பித்து உள்ளது. அந்த சமாஜத்தின் துணை காரியதரிசியான ஸ்ரீ எம். பி. தியாகராஜ முதலியார், B.A., அவர்கள் இப்படைப்பை அளித்தவராவார். கந்தர் அநுபூதி செய்யுள்கள் மற்றும் யந்திரங்களில் சித்தி அடைந்தவரும் மற்றும் யந்திரங்களையும் மூல மந்திரங்களையும் தன் தியானத்தில் பெற்றவருமான ஒரு சன்னியாசியிடமிருந்து, முதலியார் அவர்கள் அவற்றில் உபதேசம் (தீட்சை) பெற்றிருந்தார். அவர் அப்புத்தகத்தில் எழுதியுள்ள ஒரு சுவாரசியமான சம்பவத்தின் சாரம் வருமாறு:

"அது 1956ம் வருடம். திரு எட்வர்ட் ஜேம்ஸ், என்ற ஒரு அமெரிக்கர் தேவி உபாசனை செய்து வந்தார், அப்பொழுது அதை தொடர்வதில் அவருக்கு சில தடைகள் ஏற்பட்டன. எனவே, அவர் அமெரிக்காவிலிருந்து திருவாளர் முதலியார் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி, அதில் தனக்கு ஏற்படும் தடைகளைக் களையும் வழிமுறையை பரிந்துரைக்குமாறு வேண்டியிருந்தார். முதலியார் அவர்கள், அவருக்கு அளித்த பதிலில், இத்தகைய தடைகளைக் களைவதற்கு, முழுமுதற் கடவுளான கணேசப் பெருமானை வழிபடுதல் அவசியம் என்று சொல்லி, கந்தர் அநுபூதியின் முதல் செய்யுளை (ஆடும்பரி வேல்…..), அதன் மூல-மந்திர ஜபம் மற்றும்

யந்திர பூஜையுடன் பாராயணம் செய்யுமாறு அவருக்கு பரிந்துரைத்தார். திரு ஜேம்ஸும் அவ்வாறே செய்துவந்தார். சற்றேறக்குறைய மூன்று மாதங்களில், அவர் ஒரு வியக்கத்தக்க அநுபவத்தை அடைந்தார். அதைப்பற்றி அவர் பின்வருமாறு கூறியுள்ளார்: *'நான் தியானத்தில் ஆழ்ந்திருந்தபொழுது, வெள்ளை ஆடைகளை உடுத்திக்கொண்டு, கமண்டலத்தைக் தன் கையில் பிடித்துக்கொண்டு ஒரு வயதான மனிதர், பல யானைகள் புடைசூழ, எனது அறையில் தோன்றி தன் கமண்டலத்திலிருந்து சிறிது நீரை எடுத்து எனக்கும் என்னுடன் தியானத்தில் ஆழ்ந்திருந்த என் மனைவிக்கும் வாயில் ஊற்றினார். உடனே எல்லாமே ஒரு ஒளிப்பிரகாசமாகி மறைந்தது. அன்றிலிருந்து நான் முழுவதுமாக மாற்றப்பட்டுவிட்டேன், என் தேவி உபாசனையை எவ்விதத் தடைகளுமின்றி செய்து வருகிறேன்.'"*

மேல்கூறிய சம்பவங்களிலிருந்து, இடைவிடாமல் முறையாக கந்தர் அநுபூதியை தினசரி பாராயணம் செய்து வந்தால் அடையக்கூடிய பலவிதமான அனுகூலங்களை நம்மால் நன்கு அறிந்திட முடியும். ஒரு செய்யுள் (அ) ஒரு செய்யுளின் ஒரு வரி இவ்வளவு பலன்தர முடியுமென்றால், இந்நூலை முழுமையாக முறையாக ஒருவர் பாராயணம் செய்து வந்தால் அவரால் எதைத்தான் அடைந்திட இயலாது? சுயநலமற்று, எந்தப் பிரதிபலனையும் பெருமானிடமிருந்து எதிர்பார்க்காமல், 51 செய்யுள்களையும் தினமும் ஒருவர் பாராயணம் செய்து வந்தால், அவரது உடல் மற்றும் உளவியல் நோய்கள் குணமாகும்; அவர் அனைத்து ஆபத்துக்களிலிருந்தும் காப்பாற்றப்படுவார்; மேலும், அவருக்கு பெருமானிடம் தூய அன்பு பெருகும் மற்றும் உயரிய (ஆத்ம) ஞானமும் கிடைக்கும். இது எனது அசைக்க முடியாத நம்பிக்கையும் அநுபவமும் ஆகும்.

எனக்குத் தெரிந்தவரையில், கந்தர் அநுபூதி நூலிற்கு ஆங்கிலத்தில் ஒரு சிலரால் செய்யுள்கள் மட்டும் வெறுமனே மொழிபெயர்க்கப்பட்டு உள்ளனவே தவிர, முழு நூலுக்கு விளக்கவுரையுடன்கூடிய படைப்புகள் எதுவும் இல்லை. ஆனால், தமிழில் பல்வேறு வகையான விளக்கவுரைகள் உள்ளன; அவை ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட நோக்கமோ அல்லது விருப்பமோ உடையவையாக இருக்கின்றன --- மாணவர்களுக்கான விளக்கவுரைகள், எளிமையாக படிக்கும்பொழுதே பொருள் விளங்க வேண்டுமென்ற நோக்குடன் பிரத்யேகமாக எழுதப்பட்டவை; பொதுமக்களுக்கான விளக்கவுரைகள், தொடர்ச்சியாக பல உபன்யாசங்களில் கூறப்பட்டதை, பின்னர் தொகுத்து

வெளியிடப்பட்டவை; அறிஞர்களுக்கான விளக்கவுரைகள், பல்வேறு தமிழ் நூல்களிலிருந்து தொகுக்கப்பட்ட பல மேற்கோள்களுடன் வெளியிடப்பட்டவை; பக்தர்களுக்கான விளக்கவுரைகள், பெருமானின் மகிமை மற்றும் மகத்துவத்தை வெளிப்படுத்தும் விதமாக அவருடைய தெய்வீக பராக்கிரம லீலைகள், அவரின் அவதாரகாலத்தில் நடந்த நிகழ்ச்சிகள் மற்றும் கதைகளுடன் (பக்தர்களின் உள்ளத்தில் இறை-நம்பிக்கையை வளர்த்திடும் நோக்கத்துடன்) எழுதப்பட்டவை; இவ்வாறு பல வகைகளில் உள்ளன. பல விளக்கவுரைகள் சைவ சித்தாந்த தத்துவங்கள், மற்றும் வேதாந்த தத்துவங்களை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டு உள்ளன. ஆனால் சாதகர்களுக்கும் மெய்ப்பொருளை நாடுகின்றவர்களுக்கும் அவர்களின் சாதனையில் உதவியாக இருக்க, அவர்களின் காட்சிக் கோணத்திலிருந்து செய்யுள்களை விளக்கிப் பொருள் கூறுவதே என்னுடைய முயற்சியின் முக்கிய நோக்கம்; வெறுமனே ஆய்வு அல்லது இலக்கியப் புலமை ஆர்வத்தில் இது எழுதப்படவில்லை. ஆகையால், செய்யுள்களில் வரும் பொருட் செறிவுள்ள, கூர்மையான சொற்றொடர்கள், வார்த்தைகளின் பின்புலத்தில் மறைந்திருக்கும் பகுத்தறிவுக்கேற்ற காரணங்களைக் கண்டுபிடிப்பதற்கான பெரு முயற்சி செய்யப்பட்டுள்ளது; சாதகர்களின் மனதில் அவர்களுக்கு அவசியமான திடமான நம்பிக்கையை உண்டாக்கும் நோக்கத்துடன், இது மிகுந்த பகுத்தாய்வுடன் செய்யப்பட்டுள்ளது; இந்த திடமான நம்பிக்கை, சாதகர்கள் தங்கள் சாதனையில் பிறழாமல் இருந்து இறைவனை அடையும்வரை அதைத் தொடர்ந்து செய்வதில் ஒரு மிகப்பெரிய சொத்து என உறுதியாகக் கூறலாம்.

என்னைப் பொருத்தவரை, “கந்தர் அநுபூதி” முழுமையாக ஆன்மீகத் தன்மை கொண்ட ஒரு நூல்; எனவே மக்களை மகிழ்விப்பதற்காக எந்தவிதமான தரக்குறைவான மற்றும் விசித்திரப்பாணியில் அமையும் பொருள்விளக்கங்கள் இதற்குப் பொருந்தாது என்று இங்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது ஒரு புனித நூல், எனவே இது புனிதமான முறையில் மரியாதை மற்றும் பக்தி பாவத்துடன் அணுகப்பட (நடத்தப்பட) வேண்டும். இத்தகைய ஓர் அரியபடைப்பை உலகிற்குக் கொடுத்த முனிவர் அருணகிரியாரின் மனம் மற்றும் அவரது நோக்கத்தை புரிந்து கொள்ள நாம் முயற்சி எடுப்பது பொருத்தமானதாகத்தான் இருக்கும்; எனவே, புலன்கள் மற்றும் உலகியல் சம்பந்தமான உணர்ச்சி பூர்வ கருத்துக்களைத் தவிர்த்து, தெய்வீகமான முறையில் செய்யுள்களை விளக்குவதுதான் உசிதம். ஆகவே, செய்யுள்களின் பொருள், கருத்து மற்றும் விளக்கத்தை ஒரு ஆன்மீக சாதகரின் பார்வைக் கோணத்தில்

தருவதற்குத்தான் நான் முயற்சி செய்திருக்கிறேன். இம்முயற்சி, "கந்தர் அநுபூதி" என்ற தலைப்பிற்கு தகுந்ததாகவும் மற்றும் அருணகிரியார் தான் பெற்ற பேரின்பத்தை மற்றவர்களும் பெற்றிட வேண்டும் என்று விரும்பியதை நிறைவேற்றும் வகையிலும் இருக்கும். ஆகவே, பாண்டித்தியம், அறிவாற்றல், இலக்கியச் சிறப்பு, இலக்கணச் சுத்தம் ஆகிய விஷயங்களுக்கு அதிக முக்கியத்துவம் இந்த நூலில் தரப்படவில்லை. ஆனால், ஆன்மீக சாதகர்களின் நடைமுறைப் பயன்பாட்டுக்கு இந்த நூல் மிகவும் உபயோகமாயிருக்கும். அவர்கள் கீழான இயல்பை தினசரி எதிர்த்துப் போராடத் தேவையான புரிந்துணர்வையும் பலத்தையும் தருவது, படிப்படியாக அவற்றை கடந்துசெல்ல உதவுவது, இறுதியில் அவர்கள் வாழ்க்கையின் இலக்கான இறை-அநுபவத்தை அடைய உதவுவது ஆகிய ஆன்மீக விஷயங்களுக்குத்தான் இந்த நூலின் விளக்கவுரையில் அதிக முக்கியத்துவம் மற்றும் கவனம் தரப்பட்டுள்ளது. எனவே, இதிலுள்ள இலக்கிய, இலக்கணக் குறைபாடுகளைப் பொருட் படுத்தாமல், விஷயத்தில் கவனத்தைச் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒரேஒரு சாதகன் அவன் தன் இலக்கை நோக்கி பயணிப்பதற்கு இப்படைப்பானது ஒரு சிறிதளவேனும் உதவி செய்தால்கூட, அதுவே எனக்கு மகத்தான திருப்தியையும் மகிழ்ச்சியையும் தரும்.

கந்தப் பெருமானின் கிருபை நம்முடைய ஆன்மீகப் பாதையில் ஒளிதந்து, நமது முயற்சிகள் வெற்றி பெறுமாறு செய்யட்டும் என்று பெருமானிடம் நான் முழுமனதுடன் பிரார்த்திக்கிறேன்.

----- **N.V.** கார்த்திகேயன்

உட்பொருள் உணர்த்தி

பக்தி-ஞான அருள்வழி காட்டும்

கந்தர் அநுபூதி

****

இந்த ஆராய்ச்சி ஏன்? எதற்காக?

“கந்தர் அநுபூதி” நூல், அருட்செல்வர் அருணகிரிநாதரின் நூல்களில் தலைசிறந்ததாக, அதாவது ‘முகட்டில் பதித்த ரத்தினம்’ போன்றதாகக் கருதப்படுகிறது. இது 51 செய்யுள்களைக் கொண்ட மிகச் சிறிய நூலாக இருப்பினும், பொருளிலும் உட்கருத்துக்களிலும் மிகவும் ஆழமானது. இதை ஒருவன் தினசரி பாராயணம் செய்து வந்தால், அது அவனது ஆத்ம-உணர்வை மேலெழுப்பி உயரிய விழிப்புணர்வு நிலைக்கு கொண்டு செல்லும். ஆயிரக்கணக்கான பக்தர்கள் இதை தினசரி தவறாமல் முறைப்படி பாராயணம் செய்துவந்ததால் பெருமகிழ்ச்சியும் நற்பயன்களும் அடைந்துள்ளனர். கற்றறிந்த பண்டிதர்கள் இதிலுள்ள ஞானத்தின் ஆழத்தையும் மற்றும் ஆன்மீக அனுபவங்களையும் கண்டு ஆச்சரியமடைகின்றனர். மணற்கேணியை தோண்டத் தோண்ட அதில் குபுகுபுவென்று நீர் பொங்கி நிரம்புவதைப்போல, இதை ஒருவன் தொடர்ச்சியாகப் பலகாலம் முறையாகப் பாராயணம் செய்தும், கற்றும் வந்தால், இதனுடைய உட்பொருள்கள் மேன்மேலும் தாமாகவே வெளிப்படுகின்றன. எனவே, கந்தர் அநுபூதி நூலுக்கு பக்தர்களான எழுத்தாளர்களாலும் அறிவுமுதிர்ந்த ஆராய்ச்சியாளர்களாலும் உரைகள் எழுதப்பட்டுள்ளன. ஏனெனில், அவர்கள் ஒவ்வொருவரும் இது விஷயமாக மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள தங்களிடம் அரிய ஞானம் இருப்பதாக நினைத்தார்கள். ஆனால், எனது இம்முயற்சி, கந்தர் அநுபூதியில் உள்ள மறைபொருளையும் ரகசியமான உபதேசங்களையும் ஆராய்ந்து, இறை-அனுபூதியை அடைய அவை காட்டும் பக்தி-ஞான அருள் வழியைக் அறிவதுதான்.

அருட்செல்வர் அருணகிரியாரின் ஆசியை வேண்டி தாயுமானவ சுவாமிகள் பின்வருமாறு பிரார்த்தித்துள்ளார்:

"கந்தர் அநுபூதி பெற்று கந்தர் அநுபூதி சொன்ன
எந்தை அருள் நாடி இருக்கும் நாள் என்னாளோ?"

{"கந்தப் பெருமானின் அநுபூதியை நேரடியாகப் பெற்று, (பின்னர்) 'கந்தர் அநுபூதி' நூலை இயற்றி அருளிய என் ஆன்மீக தந்தையின் (அருட்செல்வர் அருணகிரியாரின்) அருளை நாடிப் பெற்றிருக்கும் நாள் எப்பொழுது வருமோ?"}

அருட்செல்வர் அருணகிரியார் இயற்றி அருளிய நூல்களில் அவர் புகழ்பெறக் காரணமாக இருப்பது திருப்புகழ்தான். இது நாம் அனைவரும் அறிந்ததுதான். அப்படி இருக்கும்போது, தாயுமானவ சுவாமிகள் அருணகிரியாரின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கும்பொழுது, அருணகிரியாரின் மற்ற நூல்களும் மகத்தானவையாக இருப்பினும், அவற்றைப் பற்றி எதுவும் பேசாமல், அருணகிரியாரைப் போற்றிப் புகழ கந்தர் அநுபூதி நூலை மட்டும் ஏன் அவர் தேர்ந்தெடுத்தார்? அதற்கு மகத்தான காரணங்கள் அவரிடம் இருந்திருக்க வேண்டும்; மேலும், கந்தர் அனுபூதியில் மிக மிக அசாதாரணமான, உள்ளார்ந்த விஷயங்கள் இருப்பதாக அவர் கருதியிருக்க வேண்டும். அது என்னவாக இருக்கக்கூடும்? அதையறிய ஆழ்ந்து சிந்தனை செய்ய வேண்டும்.

தாயுமானவ சுவாமிகள் மேற்கூறியவாறு பொருட்செறிவுடன் போற்றிப் புகழ்ந்து உரைப்பதிலிருந்து நாம் சில முக்கியமான அர்த்தமுள்ள கருத்துக்களை உறுதி செய்யலாம்:

(1) சில விரிவுரையாளர்கள் கந்தர் அநுபூதி நூல் அருணகிரியார் வெவ்வேறு சமயங்களில் அவரின் அவ்வப்போதைய மனப்போக்கிற்குத் தகுந்தவாறு பாடியது --- சமயம் ஆன்மீகரீதியில் மனம் உயர்நிலையில் இருந்தபோது, சாதனை செய்யும் சமயத்தில் மனம் கலங்கியிருந்தபோது, பலவீனங்களையும் தடைகளையும் கடந்திட பெருமானின் அருள் வேண்டிப் பிரார்த்தித்தபோது, என்று பலவகை மனப்போக்கிற்கும் சூழ்நிலைக்கும் தக்கவாறு தனித்தனியாக இயற்றப்பட்ட செய்யுள்களின் தொகுப்பு என்கின்றனர். இத்தகைய நோக்கு சரியானதாகத் தோன்றவில்லை, ஏனெனில் அருணகிரியார் இறை-அநுபவத்தை முழுமையாகப் *பெற்றபின்னர்தான்* கந்தர் அனுபூதியை அருளிச்செய்தார்.

(2) இன்னொரு பார்வை மிகவும் வேடிக்கையானது; இதன்படி அருணகிரி-கிளி தேவலோகத்திற்குச் சென்று பாரிஜாத மலரை கொண்டுவந்து அரசனின் கண் பார்வையை மீட்டெடுத்தபின், திருவண்ணாமலை அருகே ஓர் அரச மரத்தில் அமர்ந்து, தனது

அலகால் ஒவ்வொரு செய்யுளாக ஒவ்வொரு அரச இலையில் எழுதி கீழே போட்டது என்றும் அவை ஒன்றாகத் திரட்டப்பட்டதே கந்தர் அநுபூதி நூல் என்றும் அதனால்தான் செய்யுள்களுக்குள் தொடர்பு இல்லை என்றும் சொல்லப்படுகிறது. இத்தகைய கருத்து பொது அறிவிற்குக்கூட பொருத்தமானதாகப் படவில்லை; ஏனெனில், ஒரு கிளியால் செய்யுள்களை எழத முடியுமென்றால், செய்யுள்களின் எண்களையும் அத்துடன் எழுதியிருக்கலாமே! ஏன் அவ்வாறு செய்யவில்லை? அது செய்யுள்கள் இயற்றியதை நாம் நம்பும்போது, அதுதான் எண்களையும் எழுதியதென்று நம்ப, தாராளமனம் கொள்ளக்கூடாதா? மற்றும் சிலர், கிளி திருத்தணிகைக்குப் பறந்து சென்று முருகப்பெருமானின் கையில் அமர்ந்து கொண்டு, கந்தர் அநுபூதி நூலைப் பாடியதாகக் கூட சொல்கிறார்கள்.

இவ்விரு கருத்துகளும் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல, ஏனெனில் அவை தாயுமானவ சுவாமிகள் சொன்னதற்கு மாறாக உள்ளன --- அவர் 'கந்தர் அநுபூதி' "சொன்ன **எந்தாய்**" என்றுதான் சொன்னாரே தவிர, "சொன்ன **என்கிளி**" என்று சொல்லவில்லை.

'கந்தர் அநுபூதி சொன்ன **எந்தாய்**' என்று தாயுமானவர் சொல்வதிலிருந்து, கந்தர் அநுபூதி நூலை அருணகிரியார் ஒரு கிளியாய் இருந்து அருளினார் என்று கருதுவதை அவர் ஏற்றுக்கொள்வதாகத் தோன்றவில்லை.

(3) கந்தர் அநுபூதி செய்யுள்களை அருணகிரியார் பல்வேறு சமயங்களில் இயற்றினார் என்றும், அதை ஒரு நூலாக தொகுத்தது அருணகிரியாரல்ல என்றும், வேறு யாரோ அதை தொகுத்தனர் என்றும், இதற்கு மறுசீரமைப்புத் தேவை என்றும் சிலர் கூறுகின்றனர். இத்தகைய கருத்து அர்த்தமற்றதாகத் தோன்றுகிறது, ஏனெனில் 500 ஆண்டுகளுக்கும் மேலாக அது மாற்றப்படாமல் நமக்கு வந்து சேர்ந்துள்ளது, மேலும் அது அருணகிரியார் இயற்றியது என்று தாயுமானவர் போன்ற மகாமுனிவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது, மேலும் எண்ணற்ற பக்தர்கள் இதை தினசரி முறையாகப் பாராயணம் செய்து பல நல்ல பலன்களை அடைந்துள்ளனர். அருட்செல்வராலேயே அருளப்பட்ட இந்நூலின் செய்யுள்களின் வரிசைக்கிரமம் திருப்திகரமில்லை என்றால், அதை ஒரு சாதாரண மனிதன் மறுசீரமைப்பு செய்தால் அது எப்படி திருப்திகரமாய் இருக்கக்கூடும்? மேலும், அதை மறுசீரமைப்பு செய்வதில் ஒரு அபாயம் உள்ளது. அவ்வபாயம் என்னவெனில் ஒருவர் ஒருவிதத்தில் மறுசீரமைப்பு செய்தால், அது மற்றவர்க்கு திருப்தி இல்லாமற்போய், அவர் இன்னொரு வகையில் மறுசீரமைப்பு

செய்யக்கூடும். இவ்வாறாக பலர் செய்திடக்கூடும். இதன் விளைவு என்னவாகும்? கந்தர் அநுபூதி நூலிற்குப் பலவகையான பதிப்புகள் வந்து, ஒவ்வொருவரும் தனது பதிப்பே உண்மையானது என்று வாதாட, அது பெரும் குழப்பத்திற்கு வழிவகுக்கும் அபாயம் உள்ளது. எனவே, மாமுனிவர் அருணகிரிநாதருக்கும், அவர் தந்த தெய்வீக வெகுமதியான கந்தர் அநுபூதிக்கும், செய்யுள்களின் வரிசைக் கிரமம் மறுசீரமைக்கப்பட வேண்டுமென்று நினைப்பதைவிட, பெரிய தீங்கும் அவமதிப்பும் வேறெதுவும் இருக்கமுடியாது.

இந்நூலிற்கு மறுசீரமைப்புத் தேவை என்று யாராவது கருதினால், அவர் தான் அருணகிரியாரைவிட அறிவிலும் தகுதியிலும் சிறந்தவர் என்று தன்னை பறைசாற்றிக் கொள்கிறார் என்று பொருள். அவ்வாறெனில், அவர் தானே புதிதாக ஒரு 'அநுபூதி' நூலை இயற்றி விடலாமே! எதற்காக அவர் அறிவாற்றலால் அல்லாமல் இறைவன் அருளால் படைக்கப்பட்ட ஒரு புனித நூலில் தலையிட வேண்டும்?

இதேபோல், இந்நூலைப்பற்றி வேறு சில கருத்துகளும் உள்ளன, நாம் அதைப்பற்றியெல்லாம் பேசப்போவதில்லை. இவ்வாறு விதவிதமான கருத்துகள் சொல்லப்படுவதற்கு காரணம் ஒன்றேஒன்றுதான், அதாவது, செய்யுள்களில் ஒரு நேர்மையான தொடர்பு அல்லது கோர்வை (அதாவது ஒரு செய்யுளுக்கும் மற்றொரு செய்யுளுக்கும் உள்ள கருத்துத் தொடர்பு) வரிசைமுறையை அவர்களால் காண இயலாமைதான் காரணம். அதனால்தான், இந்நூல் பல்வேறு செய்யுள்களின் தொகுப்பு என்றும், அருட்செல்வரால் தரப்பட்ட ஒரு முழுமையான படைப்போ அல்லது ஒரு தத்துவ நூலோ அல்ல என்றும் கருதுவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை. ஆனால், இச்செய்யுள்களிலுள்ள தொடர்பை நம்மால் அறிந்துகொள்ள இயலவில்லை என்பதை ஒத்துக்கொள்வதும் ஒரு தொடர்பை (எவ்வளவு அதிருப்திகரமாய் இருக்குமாயினும்) கண்டுபிடிக்க முயல்வதும்தான் நற்புத்திக்கு உசிதமாய் இருக்கும். இதற்கு மாறாக தெய்வீக அருட்கொடையான இந்நூலில் தலையிடுவது முறையல்ல என்பது என்னுடைய கருத்து.

தாயுமானவ சுவாமிகள் காலத்திலேயே இம்மாதிரியான கருத்துக்கள் பரவி இருக்கலாம். அவர் ஒரு ஞானியானதால், அவைகளை மறுக்காமல் அல்லது அவைகளில் உண்மை இல்லையென்று நேரடியாகக் கூறாமல், உண்மையை மட்டும் தனது புகழுரையில் கூறியுள்ளார், அது தானாகவே மற்ற கருத்துகளை நிராகரித்து விடுகிறது.

"கந்தர் அநுபூதி" ஒரு முறையான தத்துவநூல்தான், *சிதறிக்கிடந்த செய்யுள்களின் கலவை அல்ல, என்பது திருப்புகழ் பாடல்கள் சிலவற்றிலிருந்தும் தெரிய வருகிறது.*

(4) அருட்செல்வர் அவர்கள் தன் திருப்புகழ் பாடல் 1211ல் *("ஆசைகூர் பத்தனேன் ……")* சொல்லியபடி, கந்தப் பெருமானுக்கு ஒரு பாமாலை சூட்டிட நெடுநாளாக பக்திமிக்க ஆசை கொண்டிருந்தார். கந்தர் அநுபூதி நூலை இயற்றி அவருடைய அவ்விருப்பத்தை நிறைவேற்றிக்கொண்டார் எனச் சில ஆசிரியர்கள் கருதுகிறார்கள். அந்த திருப்புகழ் பாடலின் முதல் பகுதி இவ்வாறு உள்ளது: "நான் உன்மீது ஆசைமிக்க பக்தியுள்ளவன், --- உனக்கு ஓர் மாலை அணிவிக்கும் ஆசை எனக்கு உள்ளது. (எத்தகைய மாலை?) என்னுடைய 'மனம்' (எண்ணங்கள்) என்பதையே தாமரை மலராகக் கொண்டு, அதன் நடுவே அன்பு என்கின்ற நாரைக்கொண்டு, நாவிலே அழகாகவே கட்டி, ஞானம் எனும் நறுமணம் வீசும், --- அந்த மாலை ஒளியுடன் விளங்கவும், மாசில்லா புனிதர்களின் புத்தி களிப்படையவும், --- ஒரு மாத்ருகா புஷ்ப மாலையை **உந்தன் பவளம் போன்ற செங்கமலப் பாதங்களில்** சமர்ப்பிக்கும் பாக்கியம் என்று எனக்குக் கிடைக்குமோ!".

"மாத்ருகா புஷ்ப மாலை" என்பது சமஸ்கிருத மொழியின் 51 எழுத்துக்களைக் (**அ**விலிருந்து **க்ஷ**வரை எழுத்துக்கள்) கொண்டு இயற்றப்பட்ட பாடல்களினாலான ஒரு படைப்பு. இதுவே 'அக்ஷர மாலை' என்றும் அழைக்கப்படுகிறது; அதாவது எழுத்துக்களாலான (பா)மாலை. 'மாத்ருகா புஷ்ப மாலை' என்பதன் அர்த்தம், "(எண்ணிக்கை 51க்கு இணையாக) 51 பாடல்களைக்கொண்ட ஒரு நூல்" என்றும் சொல்லப்படுகிறது. கந்தர் அநுபூதி நூலும் 51 செய்யுள்களைக் கொண்டிருக்கிறது என்பதால், அது 'மாத்ருகா புஷ்ப மாலை' என்றாகிறது.

இத்திருப்புகழ் பாடலின் முக்கிய கருத்துக்களாவன: இது (கந்தர் அநுபூதி) மனக்கமலமெனும் **மலர்களாலான பாமாலை**; இம்மாலையானது **கந்தப் பெருமானின் பாதகமலங்களில்** சமர்ப்பிக்கப்பட வேண்டும். மனம், ஜீவாத்மாவின் மற்றொரு பெயர்; பெருமானின் பாதகமலங்கள், பரமபதம் (அ) மோட்சத்தைக் குறிக்கிறது. எனவே மனக்கமல மாலையை இறைவனின் பாதகமலங்களில் சமர்ப்பிப்பது என்றால் ஜீவாத்மாவை பரம்பொருளான பிரம்மத்தில் அர்ப்பணம் செய்வது என்று அர்த்தம், அதாவது, *ஆத்ம-சாக்ஷாத்காரம்* அடைவது அல்லது இறைஅநுபவம் அடைவது என்று பொருள்.

இத்தகைய கருத்து திருப்திகரமானதாகவும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாகவும் தோன்றுகிறது, ஏனெனில் கந்தர் அநுபூதி நூல் 51 பாக்களைக் கொண்டது, மேலும் அருணகிரியார் அவர்களே இதை **"செஞ்சொற் புனைமாலை"** --- அதாவது 'அழகிய தமிழ்ச் சொற்களால் புனையப்பட்ட மாலை' --- என்று காப்புச் செய்யுளில் குறிப்பிடுகிறார். அநேகமாக, இச்சொற்றொடரின் மூலம் அருணகிரியார் திருப்புகழ் பாடலில் (1211) அவர் கூறிய 'மாத்ருகா புஷ்ப மாலை' என்ற சொற்றொடரைத்தான் சுட்டிக் காட்டுகிறார் என்று எண்ணத் தோன்றுகிறது. "செஞ்சொற் புனைமாலை" என்ற சொற்றொடரில் உள்ள "மாலை" என்ற சொல் தனிச் சிறப்பு வாய்ந்தது, அதாவது இந்நூலானது வெறும் உதிரி மலர்களின் (செய்யுள்களின்) சேர்க்கையல்ல; ஆனால், உண்மையில் இது ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் இயற்றப்பட்ட முழுமையான நூல், அதாவது ஒரு தத்துவ நூல் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது.

(5) திருத்துருத்தி என்ற ஊரில் அருணகிரியார் அருளிய "மலைக் கனத்தென மார்பினிலே" என்ற திருப்புகழ் பாடலை (850) நோக்குமிடத்து, கந்தர் அநுபூதி நூல் பல செய்யுள்களின் தொகுப்பல்ல, ஆனால் பெருமானின் பிரத்யேக அருளாணைப்படி அவரால் தரப்பட்ட ஒரு ஆய்வுநூல் என்பது தெளிவாகிறது. பொதியமலை என்ற ஊரில், அருணகிரியார் பெருமானிடம் வேல் மற்றும் மயிலின் முத்திரை (சின்னங்)களை தனது உடலில் பதித்திடுமாறு பிரார்த்திக்கிறார் *("வெடித்த வார்குழல்"* --- திருப்புகழ்: 413). ஏற்கனவே (4ல்) கூறியபடி, அவர் "மாத்ருகா புஷ்ப மாலை" -யை பெருமானுக்குச் சூட்ட விரும்பினார் *("ஆசைகூர் பத்தனேன்"* --- திருப்புகழ்: 1211). பெருமான் இவ்விரு பிரார்த்தனைகளையும் திருத்துருத்தியில் நிறைவேற்றித் தருகிறார்: அருணகிரியாரை (கந்தர்) அநுபூதியை பாடப் பணித்து, வேல், மயில் சின்னங்களை அவர் தோளின்மீது பதித்து அருளினார். திருத்துருத்தியில், அருணகிரியார் ஒரு கனவுக்காட்சி கண்டார்; அதைப் பற்றி "மலைக் கனத்தென மார்பினிலே" என்ற திருப்புகழ் பாடலின் (850) ஒரு பத்தியில் இவ்வாறு கூறுகிறார்:

அடைக் கலப்பொரு ளாமென நாயெனை
அழைத்து முத்திய தாமநு பூதியெ
னருட்டி ருப்புக ழோதுக வேல்மயி லருள்வோனே.

""அடைக்கலம் (சரணம்) கொடுக்கப்பட்டவன் எவ்விதம் காப்பாற்றப் படுவானோ, அவ்விதம் நாயனைய அடியேனை அன்புடன் அருகில் அழைத்து, (எனது இரு தோள்களிலும் எனைக் காக்கும் கவசமாக) வேற்பொறி மயிற்பொறி இட்டு, "எனது அருளும் எனது தெய்விக

புகழும் (திரு+புகழ்) நிறைந்த முத்தியாகிய (அல்லது முத்தியைத் தரவல்ல) கந்தர் அநுபூதியை ஓதுக" எனத் திருவாய் மலர்ந்தருளியவனே!""
(**குறிப்பு:** முத்தியைத் தரவல்லது கந்தர் அநுபூதி. எனவே அருணகிரிநாத பெருமான் கந்தர் அநுபூதியையே முத்தி என்று கூறுகின்றார்.)

அக்கனவுக் காட்சியிலிருந்து எழுந்தவுடன், அருணகிரியார் தனது இரு தோள்களிலும் வேல் மற்றும் மயிலின் சின்னங்கள் பொறிக்கப் பட்டிருப்பதைக் கண்டு பெருமகிழ்ச்சியடைந்தார். அவரிடம் ஆனந்தம் பெருக்கெடுத்து கரைபுரண்டோடியது; உத்வேகம் பீரிட்டுக் கிளம்பியது, உடனே அவர் பெருமான் இட்ட கட்டளையை நிறைவேற்றும்விதமாக "கந்தர் அநுபூதி" நூலை அநேகமாக **அங்கேயே அப்பொழுதே** இயற்றினார்போலும். வேல் மயில் சின்னங்கள் பொறிக்கப்பட்டதால், அதற்கு நன்றி பாராட்டும்விதமாக, கந்தர் அநுபூதியின் முதற் செய்யுளை **"ஆடும் பரி வேல்" ,** (ஆடும் மயில் மற்றும் வேல்) என்றே தொடங்கினார்; மேலும், 51 செய்யுள்களுடைய இந்நூலில், **வேல்** 25 செய்யுள்களிலும், **மயில்** 8 செய்யுள்களிலும் குறிப்பிடப்பட்டும், பிரார்த்திக்கப்பட்டும் இருப்பதைக் காணலாம். அதேபோல, **"அருள்"** (கிருபை) எனும் சொல் காப்புச் செய்யுளில் தொடங்கி, முதல் செய்யுள், மற்றும் நூல் முழுவதிலும் ஆங்காங்கு பல இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது; விசேஷமாக அநுபூதி செய்யுளான 43லும், கடைசி செய்யுளிலும் (51) குறிப்பிடப்பட்டு போற்றப்பட்டுள்ளதைக் காணலாம்.

இப்பொழுது நாம் தாயுமானவரின் பாராட்டிற்கு திரும்பவும் சென்று, அதிலிருந்து மேலே தொடர்வோம். கந்தர் அநுபூதி அல்லது இறை- அநுபவத்தை அடைந்த **பின்னரே,** அருணகிரியார் "கந்தர் அநுபூதி" நூலை அருளினாரென்று தாயுமானவர் சொல்கிறார். எனவே, இந்நூலிலுள்ள 51 **செய்யுள்கள் ஒவ்வொன்றும்** அருணகிரியார் பெற்ற வெவ்வேறு இறை- அநுபவங்களைப் பற்றி விவரிப்பதாக இருந்தால், நாம் அதை அப்படியான இறை-அநுபூதிப் பாடல்களின் தொகுப்பு என்று சொல்லலாம். ஆனால், அது அப்படி இல்லை. ஒரு சில செய்யுள்களே இறை-அநுபவங்களைப் பற்றி விவரிக்கின்றன; மற்ற பல செய்யுள்கள் இறை-அநுபவத்திற்கு யாதொரு சம்பந்தமும் இல்லாமல் வினோதமானதாக உள்ளன. இறை-அநுபூதி பெற்றபின்னர் இயற்றப்பட்ட இந்நூல் ஏன் வினோதமான தன்மையுள்ள செய்யுள்களைக் கொண்டுள்ளன? அருணகிரியார் ஏன் சில செய்யுள்களில் பாலியல் மற்றும் மரண பயம் போன்ற விஷயங்களில் உதவியற்று இருப்பதுபோல்

தெரிவித்து தவித்து, பெருமூச்சுவிட்டு நெட்டுயிர்த்து, அழுது, புலம்புவதாகச் சொல்கிறார்? உதாரணங்கள்: **"வளைபட்ட கைம்மாதொடு மக்களெனும், தளைபட்டழியத் தகுமோ தகுமோ"** -- "கையில் வளையல் அணிந்த பெண் (மனைவி) மற்றும் குழந்தைகள் என்னும் குடும்பத்தில் கட்டுண்டு சிக்கி நான் அழிகிறேனே, இது (உன் பெருமைக்கு) தகுமோ? பெருமானே, இது முறையோ?" (செய்யுள்-4); **"மகமாயை களைந்திட வல்லபிரான், முகமாறு மொழிந்தும் ஒழிந்திலனே; அகமாடை மடந்தையர் என்றயரும், ஜகமாயையுள் நின்று தயங்குவதே."** -- "ஷண்முகப் பெருமான் மகாமாயையே அழிக்கக் கூடிய திறமை கொண்டவர். 'ஷண்முகா' , 'ஷண்முகா' ('ஆறுமுகா' , 'ஆறுமுகா') என்று நான் அவர் பெயரைப் பலமுறை ஜபித்துக் கொண்டிருந்தாலும், மனதை மயக்கும் வீடு (மண்ணாசை), சொத்து (பொன்னாசை), மனைவி (பெண்ணாசை) ஆகிய உலகமாயையில் சிக்கிக் கொண்டு, அவைகளை இன்னும் விடுவதற்கு முடியவில்லையே" (செய்யுள்-5); **"மட்டூர்குழல் மங்கையர் மையல்வலைப் பட்டூசல்படும் பரிசென்று ஒழிவேன்"** ---- "பெருமானே! தேன் சொறியும் வாசனைப் பூக்களை தன் கூந்தலில் சூடும் மங்கையரின் மையல் வலையில் அகப்பட்டு, என் மனம் அலைபாய்ந்து ஊசலாடிக்கொண்டிருக்கும் இந்நிலையிலிருந்து நான் என்றுதான் விடுபடுவேன்?" (செய்யுள்-9); **"அடியைக் குறியாது அறியாமையினால் முடியக் கெடவோ முறையோ முறையோ"** --- "அறியாமையின் தாக்குதலால் தங்கள் திருவடிகளைச் சிந்திக்க இயலாமல் நான் முற்றிலும் அழிந்திடத்தான் வேண்டுமோ! இது நியாயமோ, ஓ பெருமானே, இது நீதியோ?" (செய்யுள்-23); **"கூர்வேல்விழி மங்கையர் கொங்கையிலே சேர்வேன் அருள்சேரவும் எண்ணுமதோ"** --- "கூரிய வேல் போன்ற பார்வையை உடைய மங்கையர் கொங்கைகளில் சேர்ந்து தழுவி வாழ்ந்தவனாகிய எனக்கு, உனது கிருபையைத் தந்தருள நினைக்க மாட்டாயா?" (செய்யுள்-24); இவ்வாறாக மேலும் பல செய்யுள்களில் கூறுகிறார்: (செய்யுள்கள்: 10, 16, 25, 27, 31, 33, 34, 35, 39 மற்றும் 50).

இச்செய்யுள்களில், இரண்டைப்பற்றி மட்டும் நாம் விரிவாகக் காண்போம். **"வளைபட்ட கைம்மாதொடு மக்களெனும், தளைபட்டழியத் தகுமோ தகுமோ"** -- "கையில் வளையல் அணிந்த பெண் (மனைவி) மற்றும் குழந்தைகள் என்னும் குடும்பத்தில் கட்டுண்டு சிக்கி நான் அழிகிறேனே, இது (உன் பெருமைக்கு) தகுமோ? பெருமானே, இது முறையோ?" (செய்யுள்-4); **"சிந்தாகுல இல்லொடு செல்வமெனும் விந்தாடவி என்று விடப்பெறுவேன்"** ---- "மனதிற்குத் துயரங்களைத் தருகின்ற, அடர்ந்து-பரந்திருக்கும்

விந்தியமலைக் காடுகளைப் போன்றிருக்கும் குடும்பம் மற்றும் செல்வத்தை விட்டு நான் எப்போது விடுதலை பெறுவேன்?" (செய்யுள்-33). இவ்வாறாக அருணகிரியார் இச்செய்யுள்களில் பெருமானிடம் குறைபட்டுக்கொண்டு அழுகிறார், ஆனால் இந்நூலிற்கு முன்னரே இயற்றப்பட்டதாகக் கருதப்படும் அவரது 'கந்தர் அலங்காரம்' என்ற நூலிலோ, பாலியல் இச்சையெனும் கடலை தான் நிரந்தரமாகக் கடந்து விட்டதாகவும், மரண பயத்தையும் வென்று விட்டதாகவும் உறுதியுடன் பிரகடனப்படுத்துகிறார். *மேலும், கந்தர் அநுபூதி நூலை இயற்றிய சமயத்தில் அவர் இல்லறவாசியல்ல, வீடுவாசலற்ற ஒரு துறவியாக இருந்தார்.* இந்த இரு விஷயங்களைக் கருத்தில் கொண்டு இப்புலம்பல்களை ஆராய்ந்தால், இவை அவரது சொந்த வாழ்க்கை நிலையையோ, அநுபவங்களையோ நிச்சயமாகக் குறிப்பிடுபவையல்ல; குறிப்பிடவும் முடியாதென்று நமக்குத் தெளிவாக விளங்கும். மேலும், தாயுமானவ சுவாமிகள் அருணகிரியார் மற்றும் கந்தர் அநுபூதி பற்றி சொன்னவைகள் தவறு என்றும் நாம் நினைக்க இயலாது. பின்னர் இச்செய்யுள்களை எப்படி எடுத்துக் கொள்வது? இல்வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான அறிவுரையை அவர் இச்செய்யுள்களின் மூலம் தந்துள்ளார் என்று எடுத்துக்கொள்ளலாமா? அல்லது, கிரகஸ்த ஆசிரம வாழ்க்கையை நிந்தனை செய்வதாகக் கொள்ளலாமா? இல்லை; அப்படியெல்லாம் கருதிட இயலாது. ஏனெனில், இல்வாழ்க்கையில் யாதொரு தவறுமில்லை; கிரகஸ்த வாழ்க்கை ஒரு தார்மீகமான நேர்மையான வழி; உயரிய வாழ்க்கைக்கான ஒரு பாதுகாப்பான பாதை, மற்றும் இது மற்ற மூன்று ஆசிரமவாசிகளுக்கும் ஆதரவு தருகிறது. (**'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை'** என்கிறது திருக்குறள்). மேலும், இல்வாழ்க்கையில் இருக்கும் கோடிக் கணக்கானவர்களில் எவ்வளவுபேர் உண்மையில் இத்தகைய அறிவுரையை வரவேற்று ஆதரிப்பார்கள்? அல்லது, மனைவி, குழந்தைகள் மற்றும் செல்வம் ஆகியவைகள் பந்தம் என்று உண்மையாகக் கருதி, அவைகளைத் துறந்திட எவ்வளவுபேர் உண்மையில் விரும்பி முன்வருவார்கள்? முந்தையப் பிறப்பிலிருந்து கொண்டுவரப்பட்ட ஆன்மீக சம்ஸ்காரங்கள் எந்த அரிய சில கிரகஸ்தர்களில் கொஞ்சம் வலுவாக உள்ளதோ, அச்சிலரே இவ்வாறு செயல்பட முன்வருவர். அதை விசிறி, கொழுந்துவிட்டு எரியும் பெருந்தீபோல் ஆக்குவது இந்த செய்யுள்களின் நோக்கமென்று தோன்றுகிறது. செய்யுள்கள் தன்மையில் இருப்பது (First person singular) இதற்கு மிகவும் உதவியாய் இருக்கிறது. மேலும், எவரிடம் ஆன்மீக சம்ஸ்காரம் பலவீனமாக இருக்கிறதோ, அதை இந்நூல் தூண்டிவிட்டு வலுவடையச் செய்யும்; அது இல்லாதவர்கள், ஆனால் அதற்குத் தயாராக இருப்பவர்களின்

கைகளில் இந்நூல் எப்படியோ சென்று அதைத் தூண்டிவிடும். உலக இன்பங்களில் ஆழ்ந்து அதிலேயே மூழ்கி திருப்தி கண்டு வாழ்கிறவர்களைத் தவிர, மற்றவர்களின் கைகளில் எப்படியோ சென்றடையும். (செய்யுள்-17 பார்க்கவும்).

இந்நூலின் மற்றவிதமான சில செய்யுள்களைப் பற்றிப் பார்ப்போம்! **"அடியைக் குறியாது அறியாமையினால் முடியக் கெடவோ முறையோ முறையோ"** --- "அறியாமையின் தாக்குதலால் தங்கள் திருவடிகளைச் சிந்திக்க இயலாமல் நான் முற்றிலும் அழிந்திடத்தான் வேண்டுமோ! இது நியாயமோ, ஓ பெருமானே, இது நீதியோ?" (செய்யுள்-23); **"மதிகெட்டு அறவாடி மயங்கி அறக் கதிகெட்டு அவமே கெடவோ கடவேன்"** --- "என் அறிவு குலைந்து, (மன) வேதனை அடைந்து, மதி மயங்கி, தர்மத்தின்படி வாழ்ந்தால் கிடைத்திடும் அந்த நற்கதியாகிய அநுபூதியை இழந்து, நான் வீணாகக் கெட்டு அழிந்து போவேனோ? (செய்யுள்-50). போன்றவை. இச்செய்யுள்கள் ஒருபொழுதும் அருணகிரியாரைக் குறிக்க முடியாது. ஏனெனில், அவர் ஆயிரக் கணக்கில் திருப்புகழ் பாடல்கள், கந்தர் அலங்காரம் போன்ற நூல்களை இயற்றியவர். கந்தர் அநுபூதியை இயற்றுவதற்கு முன்னரே, அவர் இறை-ஆனந்தத்தில் திளைத்திருந்தவர். அத்தகையவரிடம் அறியாமை எப்படி இருக்க முடியும்?

மிகவும் ஆழ்ந்து, பாரபட்சமற்ற முறையில் இவற்றைப்பற்றி சிந்திக்கும்போது, மேற்கூறிய செய்யுள்கள் மற்றும் சில செய்யுள்களில் சித்தரிக்கப்படும் நிலைமைகள் நிச்சயமாக அருணகிரியாரைப் பற்றியவை அல்ல என்றும்; இறைவனை அடைய தீவிர இச்சை, எந்த அரிய சில சாதகர்களுடைய மனதில் எழுந்துள்ளதோ, அவர்கள் அப்பாதையில் முன்னேறிட அவர்களுக்கு உற்சாகமூட்டி, சரியாக வழிகாட்டிட மேற்கண்ட பாடல்கள்மூலம் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், நாம் ஒப்புக்கொள்ள வேண்டிய அவசியத்திற்குத் தள்ளப்படுகிறோம். எனவே, முக்கியமாக இந்நூலானது அத்தகைய நிலைமையிலுள்ள சாதகர்களுக்குச் சரியான வழியைக் காட்டிடுவதற்காகவே அவரால் படைக்கப்பட்டது என்றே சொல்லலாம்; அதாவது, ---- ஒரு ஆன்மீக சாதகனின் சாதனையின் தொடக்கத்திலிருந்து துவங்கி, அவன் அப்பாதையில் எதிர்கொள்ளப்படும் கஷ்டங்கள் மற்றும் இடையூறுகள், அவற்றை சமாளித்து வெல்லும் வழிகள், அவன் அப்பாதையில் திகைத்து நின்றுவிடாமல் இருக்கவும், அவன் கடந்து செல்ல நேரிடும் பல்வேறு துயரமளிக்கும் மற்றும் ஊக்குவிக்கும் அநுபவங்களை குரு/இறைவனின் அறிவுரை மற்றும் கிருபையால் வெற்றிகொள்வது,

உச்சகட்டமாக மகத்தான இறை-அநுபவத்தை (அடைவது) உணர்வது, இறைவனில் தன்னிலை இழந்த ஞானியாக (ஜீவன்முக்தராக) முதிர்ச்சி பெறுவது, ஒரு நடமாடும் தெய்வமாக உலகில் அனைவருக்கும் ஆனந்தத்தை வாரி வழங்கி வாழ்வது, மனித வர்க்கத்தின் நலன்களை மட்டுமே விரும்புவது என்பது வரையில் சாதகர்களுக்கு வழிகாட்டவேண்டி படைக்கப்பட்டது.

மேற்குறிப்பிடப்பட்ட நோக்கத்தை திறம்பட செயல்படுத்திடும் பொருட்டு, செய்யுள்கள் தன்மையில் (தன்னை முன் நிறுத்தி) பாடப்பட்டுள்ளன. இதன் மூலம், ஒருவன் இவற்றைப் பாடும்போது (அ) பாராயணம் செய்யும்போது, இவை அவன் இதயத்தைத் தொட்டு, அவனிடம் தேவையான உணர்வை தட்டி எழுப்பும். இது இந்நூலின் **நோக்கம்** என்னவென்பதை மறைமுகமாகக் சுட்டுகிறது; அதாவது, அருணகிரியார் எதை தன் சுய அநுபவத்தில் (இறை அனுபவம்) உணர்ந்து மகிழ்ந்திருந்தாரோ, அந்த நிறை ஆனந்த (இறை) அநுபவத்தை அடைந்திடும் வழியைச் சாதகர்களுக்குக் காட்டுவதற்காகவே அவரால் இந்நூல் படைக்கப்பட்டது, ஆக இது இறையனுபூதி/ஆத்மானுபூதி பற்றிய ஒரு ஆய்வுநூல் அல்லது ஒரு தத்துவ நூலாகும்.

ஆய்வுநூல் அல்லது தத்துவநூல் என்றால், ஒரு விஷயத்தை முறையாகக் கையாளும், விவரமாக ஆராயும் நூல் என்று அர்த்தம். எனவே, "கந்தர் அநுபூதி" ஆய்வுநூலில் ஆன்மிக சாதனையை ஒருவன் தொடங்குவதிலிருந்து ஆரம்பித்து, அவன் அதில் படிப்படியாக முன்னேறி, சாதனையின் குறிக்கோளான **அனுபூதி**யை அடைவதுவரை, ஒரு செய்யுளுக்கும் அடுத்ததற்கும் இடையே கருத்துத் தொடர்ப்பு இழைபோல் இருக்கவேண்டியது மிகவும் அவசியம். ஆனால், இந்நூல் செய்யுள்களை மேலோட்டமாகப் பார்த்தால் யாதொரு கருத்துத் தொடர்ச்சியையும் காணமுடிவ-தில்லை; எனவே, அத்தொடர்ச்சியானது வெளிப்படையாகத் தெரிய-வில்லையென்றால், அது நிச்சயம் இரகசியமாக மறைக்கப்பட்டு (மறை-பொருளாக) இருக்க வேண்டும் என்று நினைப்பது இயற்கை. ஆகையால், ஒரு சாதகன், சாதனையின் முதல் கட்டத்திலிருந்து தொடங்கி, இறுதி இலக்கான இறை-அநுபவத்தை அடையும்வரை, அவனுக்கு வழிகாட்ட, செய்யுள்களில் வெளிப்படையாக சொல்லப்பட்ட அறிவுரைகளைத் தவிர, அவற்றில் உபதேசங்கள் இரகசியமாக (மறைபொருளாக --- உட்கருத்தாக) அமைந்து இருக்கவேண்டும் என்று நாம் திடமாக நம்பலாம்.

இப்பொழுது: (1) "கந்தர் அநுபூதி" நூலின் பெயரும், அதன் செய்யுள்களின் வரிசைக் கிரமமும் அருணகிரியாலேயே செய்யப்பட்டன என்றும், இந்த ஆய்வுநூலை அவர் கொடுத்ததன்

நோக்கம் சாதகர்கள் இறைவனை அடைவதற்கு வழிகாட்டியாய் இருப்பதற்காகத்தான் என்றும்; (2) 'கந்தர் அநுபூதி' என்ற தலைப்பிற்கு முழு நியாயம் செய்திட வேண்டுமானால்; (3) இறை-அநுபவத்தை அடைந்த *பின்னரே* அருணகிரியாரால் 'கந்தர் அநுபூதி' நூல் இயற்றப்பட்டது என்று அந்நூலுக்கு தாயுமானவ சுவாமிகள் கொடுத்த பாராட்டுதலுக்கு நாம் மரியாதை செலுத்துவோமாகில்; (4) இந்நூலை பாமாலை *(செஞ்சொற் புனை மாலை)* என்றும், முக்தியைத் தரவல்லது என்றும் கருதுவோமாகில் --- இவை அனைத்தையும் நாம் ஏற்றுக்கொள்ளாமல் இருக்க முடியாது --- (இதை *'மாத்ருகா புஷ்ப மாலை'* என்று ஒப்புக்கொள்ளப்பட்டாலும் ஒப்புக்கொள்ளப்பட வில்லை என்றாலும்), இந்நூலில் ஒரு உட்பொருள் மகத்துவம் இருக்கவேண்டும் என்று நாம் திடமாக நம்புவது மிகப்போருத்தமே, நியாயமுமே. ஏனெனில், வெறுமனே இறைவனை போற்றிப்புகழும் செய்யுள்கள் (அ) செய்யுள்களின் தொகுப்பை ஓதுவதால் மட்டுமே ஒருவர் இறை-அநுபவம் அடைந்திட உதவி செய்யமுடியாது; காரணம், அது அவ்வளவு சுலபத்தில் அடையக்கூடிய அனுபவம் அல்ல. அது படிப்படியாக முன்னேறி, கொஞ்சம்கொஞ்சமாக மலர்ச்சி அடையும் அனுபவமாகும். இடைவிடாத அப்பியாசத்தின் (பயிற்சியின்) மூலம்தான் *அநுபூதியை* அடைய முடியும்; ஆழ்ந்த புரிதலுடன் முறையாக செய்யப்படும் பயிற்சியே அப்பரிபூரண நிலையை அடைய வழிகோலுகிறது. இதனாலேயே கந்தர் அநுபூதி நூல் மற்ற அனைத்து நூல்களிலிருந்தும் வேறுபட்டு உள்ளது ---- மற்றவர்களின் நூல்களிலிருந்து மட்டுமல்ல, அருட்செல்வர் அருணகிரியாரின் மற்ற நூல்களிலிருந்தும்கூட வேறுபட்டு தனிச்சிறப்புடன் திகழ்ந்து வருகின்றது. திருப்புகழ் பாடல்கள், கந்தர் அலங்காரம், போன்ற அவருடைய படைப்புகள் பாடுவதற்கு, பாராயணம் செய்வதற்கு, பஜனை செய்வதற்கு, உபயோகப்படலாம், அவைகள் இறை-ஸ்துதி (அ) இறைவனைத் துதிக்கும் பாடல்கள். அவைகளில் ஆன்மிக அறிவுரைகள் கூட ஆங்காங்கே இருக்கலாம், ஆனால் 'கந்தர் அநுபூதி' அப்படிப்பட்டதல்ல; ஏனெனில், வெறுமனே ஓதுவது மட்டும் ஒருவனை அநுபூதி (அ) இறை-அநுபவத்தை அடையச்செய்ய முடியுமென்று எதிர்பார்க்க முடியாது. அநுபூதியை அடைவதற்குத் தேவை, ஒரு முறையான, புரிதலுடன் செய்யப்படும் ஆன்மீகப் பயிற்சி --- அதுதான் இவ்வரிய கந்தர் அநுபூதி நூலில் தரப்பட்டுத் துல்லியமாக விளக்கப்பட்டுள்ளது. **"கந்தர் அநுபூதி"** என்ற தலைப்பை (1) "இறை-அநுபவம்" என்றும், (2) "இறை-அநுபவம் பெற அழைத்துச் செல்லும் பயிற்சி" என்றும் நாம் கூறினால், அது தவறானதாக இருக்காது என்று நான் நினைக்கிறேன்.

"கந்தர் அநுபூதி" நூலை ஆழ்ந்து நோக்கும்போது, எல்லாச் செய்யுள்களும் ஒரேமாதிரியாக இல்லையென்பதையும், ஒரே வகையைச் சேர்ந்தவையல்ல என்பதையும் நாம் காண்கிறோம்; அதாவது எல்லாச் செய்யுள்களும் பிரார்த்தனை வடிவத்திலோ (அ) உதவியைக் கோரும் வேண்டுகோள் வடிவத்திலோ (அ) ஆன்மீக அநுபவங்களின் வெளிப்பாடுகளாகவோ (அ) அறிவுரைகளாகவோ (அ) எச்சரிக்கைகளாகவோ இல்லை. சில செய்யுள்கள் உணர்ச்சிகளைத் தொட்டு ஊக்குவிக்கின்றன; சில செய்யுள்கள் கழிவிரக்கம், கவலை மற்றும் பிரார்த்தனைகளை வெளிப்படுத்துகின்றன; சில தனக்கு அருளப்பட்ட பிரத்யேக ஆசீர்வாதத்திற்கு நன்றி தெரிவிப்பதாக உள்ளன; சில சாதகர்கள் பின்பற்றுவதற்காக தெளிவான அறிவுரைகளைத் தருகின்றன; சில உயரிய ஆன்மீக அநுபவங்களை அடைவதற்கான ஞானத்தையும் இரகசிய உத்திகளையும் தந்தருளுகின்றன; இது மட்டுமல்ல, இப்படியான பலதரப்பட்ட செய்யுள்கள் விசித்திரமான முறையில் இங்குமங்கும் தூவப்பட்டுள்ளன. இவ்வாறாக இருப்பது, இந்நூல் இறைவனை அடைவதற்கான ஒரு ஆய்வுநூலாக இருக்கவேண்டும் என்பதை சுட்டிக்காட்டி வலியுறுத்துகிறது. ஏனெனில் ஆன்மிகப் பயிற்சியில் ஈடுபட்டு முயன்றுவருகிறவர்கள் தங்கள் பாதையில் விதவிதமான மனநிலைகளையும், அனுபவங்களையும் கடந்து செல்லவேண்டியதாய் இருக்கும், ஆகையால் இத்தகைய நூலில், அத்தனைவித கூறுபாடுகளும் அவசியம் தேவையாகிறது. (இதனால்தான் செய்யுள்களின் வரிசைக் கிரமத்தை மறுசீராய்வு செய்வது உசிதமல்ல என்று முன்னர் கூறினோம், ஏனெனில் அவ்வாறு செய்தால், அது இப்படைப்பின் நோக்கத்தையே குலைத்துவிடும்.) இந்நூலில் செய்யுள்களின் வரிசைக் கிரமமானது கணக்கிடப்பட்டு மிக நேர்த்தியாக இப்படைப்பின் நோக்கத்திற்கு ஏற்றவாறு, அருணகிரியாரால் விசேஷ நோக்கத்தில் தொகுக்கப்பட்டுள்ளது. (ஆனால், பார்ப்பதற்கு தாறுமாறாக இருப்பதுபோல் மேற்போக்காகத் தெரிவதால், இது ஒரு முழுமையாகக் கொடுக்கப்பட்ட நூலல்ல; பலவகையான செய்யுள்களின் தொகுப்பு என்று சிலரால் கருதப்படுகிறது). ஒவ்வொரு செய்யுளின் உட்கருத்து அல்லது விஷயம், அக்குறிப்பிட்ட செய்யுளில் அச்சாதகன் எந்நிலையில் இருக்கிறானோ, அந்நிலைக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டிருக்கும். அதாவது ஆன்மீகத் தேடலுக்குத் தேவையான அறிவுறுத்தலை அல்லது வழிகாட்டுதலை வழங்குகிறதாகவோ, அல்லது அவனது அப்போதைய மனநிலையை, அநுபவங்களை வெளிப்படுத்துவதாகவோ, அல்லது அவன் அப்போது எதிர்கொள்ளும் தடைகளை வெற்றிகொள்ள இறைவனின் கிருபையை வேண்டி பிரார்த்திப்பதாகவோ, அல்லது இது

போன்று ஏதோ ஒன்றாகவோ இருக்கும். ஒவ்வொரு கட்டத்திலும், குறிப்பிட்ட செய்யுள் மூலம், அச்சாதகனின் உணர்ச்சி நிலைக்கு ஏற்ற வெளிப்பாட்டை வெளிக்கொணருமாறு (நூலில் செய்யுள்களின் வரிசை கிரமமானது) வடிவமைக்கப்பட்டுள்ளது. சாதகன் ஒருவன், தனது ஆன்மீக சாதனையில் தொடர்ந்து ஈடுபட்டு, இச்செய்யுள்களை தினசரி பாராயணம் செய்து வரும் பொழுது, வெவ்வேறு செய்யுள்களைப் பாடும்போது, வெவ்வேறு சமயங்களில் பின்வருமாறு உணருவான்: "ஓ, அருணகிரியார் எனக்காகவே இச்செய்யுளைத் தந்துள்ளார்" , (அ) "இந்தச் செய்யுள் துல்லியமாக என் பரிதாபமான நிலையை சித்தரிக்கிறது" , (அ) "எனது தியான-அநுபவத்திற்கு இந்த செய்யுள் சரியாகப் பொருந்துகிறது" , மற்றும் இவை போன்றவை.

உண்மையில் பார்த்தால், கந்தர் அநுபூதி நூல், ஒரு சாதகன் தனது ஆன்மிக சாதனையில் எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறான் (அ) முன்னேறியிருக்கிறான் என்பதை அறிந்து கொள்ள உதவும் ஒரு ஆன்மீக பாரமானி எனலாம்; எச்செய்யுளை ஓதும்போது, அவனது இதயமானது வெகுவாக அதில் ஐக்கியமாகி லயிக்கிறதோ, அதை வைத்து அவன் இப்பொழுது (ஆன்மீக பயிற்சியில்) எந்நிலையில் இருக்கிறான் என்பதை அறிந்து கொள்ளலாம்.

அருணகிரியார் தனது திருப்புகழ் பாடல்களிலும் தன்னுடைய மற்ற நூல்களிலும், ஆன்மீகம் மற்றும் சமய விஷயங்களைப்பற்றி பொதுவாக எல்லாவற்றையும் எல்லா இடங்களிலும் சொல்லியுள்ளார். திருப்புகழையும் மற்ற நூல்களையும் முறையாக ஓதிவரும் ஒருவனுக்கு உலக விவகாரங்களில் ஒருவிதமான வெறுப்பு ஏற்பட்டு, இறைவனை அடையவேண்டுமென்ற அவா அவனிடம் உதிக்கலாம். மேலும் இறைவனை அடைவதற்குரிய சாதனைகளையும் செய்ய அவன் விரும்புவான்; ஆனால், அதற்கு என்ன செய்வது, எங்கிருந்து தொடங்குவது, என்பது தெரியாமல் ஒரு தவிப்பில் இருப்பான். எனவே, அத்தகைய நிலையிலுள்ள ஆன்மீக சாதகர்களுக்கு உதவிடும் வகையிலும், இறை-அநுபவத்தை அடைவதற்கான வழிமுறைகளை விளக்கமாக ஆராயவும் ஒரு நூலைப் படைத்திடுமாறு அருணகிரியாரைத் திருத்துருத்தியில் கந்தப் பெருமான் தூண்டிப் பணித்ததின் விளைவாகவே "கந்தர் அநுபூதி" அவரால் படைக்கப்பட்டது என்று தோன்றுகிறது.

இப்படியாக, அருணகிரியாரின் ஒவ்வொரு படைப்பும் அதற்கே உரிய நோக்கம், விசேஷத்துவம் மற்றும் அழகுடன் விளங்கினாலும், அவருடைய அனைத்து படைப்புகளிலும் கந்தர் அநுபூதி மணிமகுடமாகத் திகழ்கிறது என்று நாம் கருதலாம். அருணகிரியார் தந்த நூல்கள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாகச் சேர்த்து

"அருணகிரி வேதம்" என்று கருதுவோமாகில், அதில் *"கந்தர் அநுபூதி"* நூல் **"அநுபூதி-உபநிஷத்"** ஆகும். அது ஒரு *மந்திர சாஸ்திரம்*; அவருடைய நூல்கள் வரிசையில் கடைசியில் அமைந்துள்ள ஞானப் பகுதியாகும். உபநிஷத்துக்கள் தகுதி பெற்ற மாணாக்கர்களுக்குத் தரப்படும் ரகசிய உபதேசங்கள்; ஏனெனில், பக்குவமடையாத மனங்களால் உபநிஷத மந்திரங்களைப் புரிந்து கொள்ள முடியாது. கந்தர் அநுபூதி செய்யுள்கள் உபநிஷத மந்திரங்களைப் போன்றவைதான். அவை உபநிஷத மந்திரங்கள்போல சுருக்கமாக, பொருட்செறிவு மிக்கதாக, ஆழ்நிலை தியானத்தில் ஈடுபடவும், பல பயனுள்ள அநுபவங்களை அடையவும் தேவையான பல இரகசிய குறிப்புகளைத் தருபவையாகவும் உள்ளன. உண்மையில் கந்தர் அனுபூதியில் எல்லா மகாவாக்கியங்களும் இருக்கின்றன. இதை செய்யுள்களின் விளக்கவுரைகளில் நாம் பின்னர் விரிவாகக் காண்போம். இந்த ஆய்வு (மறை)நூலானது உபநிஷத்தின் நோக்கங்களை மிகவும் அருமையாக நிறைவேற்றுகிறது என்று எவ்விதத் தயக்கமுமின்றி நம்மால் கூற இயலும். உண்மையில், இது ஒரு 'மந்திர- சாஸ்திரம்' தான். எனவேதான், அருட்செல்வர் அருணகிரியாரை போற்றிப் புகழ தாயுமானவ சுவாமிகள் 'கந்தர் அநுபூதி' நூலை பிரத்யேகமாகத் தேர்ந்தெடுத்துள்ளார் போலும்!

அடுத்ததாக எழும் கேள்வி: (இந்நூலில்) அறிவுரைகள் ஏன் மறைபொருளாக (இரகசியமாக) மறைத்து வைக்கப்பட வேண்டும்? அருட்செல்வர் அவைகளை வெளிப்படையாகவே ஏன் செய்யுள்களில் சொல்லவில்லை? அப்படிச்செய்வது ஒரு பொதுவான பழக்கம்; அதற்குக் காரணமும் உண்டு. பொதுவாக, ஆன்மீக உண்மைகள் இரகசியமாகவே (மந்திரங்களில் மறைத்து) வைக்கப்படுகின்றன, ஏனெனில் பக்குவமடையாத, தகுதிபெற்றிராத மனதையுடைய சாதகர்களுக்கு இவை அளிக்கப்பட்டால், இவை தவறாக புரிந்துகொள்ளப்பட்டு, தவறான விளக்கங்கள் செய்யப்பட்டு, திரித்துக் கூறப்படக்கூடும். அதனால் இவை எப்பொழுதுமே மறைத்து வைக்கப்படுகின்றன; பெருமுயற்சியின் மூலம்தான் அவைகளை அடைய முடியும், அதற்காகச் சில நிபந்தனைகளும் விதிக்கப்பட்டு உள்ளன. எந்த ஒரு நூலும் எவருக்கும், எல்லோருக்கும் எளிதில் கிடைக்கக் கூடுமாகையால், அதன் பொருள்கள் யாரும் சுலபமாக அறியமுடியாத முறையில் மறைபொருளாக வைக்கப்பட்டு இருக்கின்றன. இதனால், செய்யுள்களை பிரார்த்தனை வடிவத்திலும், தற்சார்பு உடையதாகவும் (தன்மையில்) கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஒரு பக்தன் (அ) சாதகன், ஆரம்ப காலத்தில் மனப்பக்குவம் இல்லாத நிலையில் இருந்தபோதிலும், இந்நூலை

சுவாத்யாயம் செய்து (சுயமாகப் பயின்று) வரும்போது (அ) பாராயணம் செய்துகொண்டே வரும்போது, பாடல்கள் தன்மையில் இருப்பதாலும், அதன் சொற்கள் சக்தி வாய்ந்ததாகவும் குறிப்பிட்ட நோக்கத்துடன் அமைக்கப்பட்டதாகவும் இருப்பதால், இவை அவன் மனதை படிப்படியாக உயர்த்தி, அருட்செல்வர் பாடல்களை எந்த உணர்ச்சியுடன் பாடினாரோ அல்லது எந்த உணர்வை ஊட்டும் நோக்கத்துடன் பாடினாரோ, அந்த உணர்ச்சியை, உணர்வை ஊட்டுகின்றன. இதனால் நாம் இந்நூலை ஓதும் பொழுது, அருட்செல்வரே நம்மூலம் ஓதுவது போன்ற உணர்வை நமக்கு ஏற்படுத்துகிறது. நாம் அவருடைய மனநிலையோடு இணைந்து-விடுகிறோம், அதனால் தேவையான மனப்பக்குவமும் உணர்வும் நமக்குள் அவசியம் ஏற்பட்டுவிடும். இவ்வாறாக, செய்யுள்களில் இரகசியமாகப் புதைந்துள்ள உட்பொருள்கள் காலப்போக்கில் நமக்குள்ளிருந்து தெளிவாகப் புரியுமாறு தெரிவிக்கப்படுகின்றன. இக்கருத்துக்கள் செய்யுள்களில் வெளிப்படையாக சொல்லக் கூடியவையல்ல; அவ்வாறு சொல்லப்பட்டாலும், அது நமக்கு தெளிவாக விளங்காது; அந்த விளக்கம் தாமாகவே நமக்குள்ளிருந்து "வெளிப்படவேண்டும்." அப்படி வெளிப்படும்போது அதை பாதுகாக்கவேண்டும். மிகவும் கஷ்டப்பட்டு சம்பாதித்த செல்வம் மதிக்கப்பட்டு பாதுகாக்கப்படுகிறது; அதேபோல், ஞானத்தை அதற்கும் மேலான கவனத்துடன் பாதுகாக்கவேண்டும்.

இப்பொழுது, எளிதில் அறிய முடியாதவாறு செய்யுள்களில் இரகசியமாக மறைத்து வைக்கப்பட்டுள்ள உட்பொருளைப் பற்றி ஒரு சில வார்த்தைகள். இந்நூலில் சில இடங்களில், சில செய்யுள்களில் கருத்துத் தொடர்ச்சி வெளிப்படையானதாகவும் மற்றும் கிட்டத்தட்ட மேற்பரப்பிலேயே இருப்பதையும் காணலாம், உதாரணத்திற்கு, செய்யுள்கள் 12, 13; செய்யுள்கள் 28, 29; செய்யுள்கள் 33, 34, 35; செய்யுள்கள் 42, 43; 44; செய்யுள்கள் 39 மற்றும் 43க்கும் இடையில்; செய்யுள்கள் 2 மற்றும் 43க்கும் இடையில்; போன்றவைகளைக் கூறலாம். இச்செய்யுள்களில் வெளிப்படையாகவே காணப்பட்ட கருத்துத் தொடர்சிகளால்தான், மற்ற செய்யுள்களுக்கு இடையேயும்கூட இவ்வாறான கருத்துத் தொடர்ச்சி நிச்சயமாக இருக்கவேண்டும் என்ற எண்ணத்தை எனக்கு ஏற்படுத்தியது. அதாவது, அக்கருத்துத் தொடர்ச்சி நூல் முழுவதிலும் இருக்கவேண்டும்; அது வெளிப்படையாகத் தெரியவில்லையென்றாலும், நிச்சயம் அது இரகசியமாக மறைத்து வைக்கப்பட்டிருக்கவேண்டும். சிலவற்றில் மேலோட்டமாகவே அது தெளிவாக உள்ளது; சிலவற்றில் அது செய்யுளின் ஒரு வரி அல்லது சொற்றொடரில் இலைமறை கனிபோல்

உள்ளடங்கி இருக்கிறது; சிலவற்றில் ஒரு சொல்லில் அது உட்கிடையாகத் தொக்கி இருக்கிறது; மற்றும் சிலவற்றிலோ, அது மிகவும் ஆழமாக முழு செய்யுளின் அடிப்படை *மெய்க்கருத்தாக* இரகசியமாக புதைந்திருக்கிறது, செய்யுள்களைத் தொடர்ந்து திரும்பத் திரும்ப பலமுறை பாராயணம் செய்யும்போது, காலப்போக்கில் உட்பொருள் வெளிப்படுகிறது, தெளிவாக அறிந்துகொள்கிறோம். இக்காரணங்களினால்தான், பெருமானிடம் அன்பு கொண்டு, அவரிடம் சரணாகதி செய்து, தினசரி முறையாக முழு கந்தர் அநுபூதியையும் பாராயணம் செய்வது (*சுவாத்யாயம்* செய்வது) அவசியம் ஆகிறது; அவ்வாறாகச் செய்து வந்தால், எந்த நூலிலும், ---- இந்த நூல் உட்பட, இதுவரை வெளியிடப்பட்ட உண்மைகளைவிட அதிகமான உண்மைகள் சாதகனின் இதயத்தில் தாமாகவே வெளிப்படுத்தப்படும். இந்த முயற்சி கந்தர் அநுபூதி நூலுக்கு மட்டுமின்றி, இதைப்போன்ற மற்ற நூல்களுக்கும் உபயோகமாய் இருக்கும்.

முன்பே விளக்கியபடி, *இந்த நூலில் செய்யுள்களின் பொருள்விளக்கங்கள் ஒரு சாதகனின் நிலையிலிருந்து தரப்படுகிறது, அருணகிரியார் அவ்வாறாகவே இருந்துகொண்டு கந்தர் அநுபூதி பாடல்களைப் பாடியுள்ளார்.* ஏற்கனவே சொன்ன இதைத் திரும்பவும் இங்கு வலியுறுத்தவேண்டி இருக்கிறது; ஏனெனில், செய்யுள்கள் தன்மையில் இருப்பதால், இதில் விவரிக்கப்படுபவை, அருணகிரியாரின் சொந்த வாழ்க்கையையும் சொந்த அநுபவங்களையும் குறிக்கின்றன என்று அடிக்கடி தவறாக எண்ணும் நிலை ஏற்படுகிறது. **எனவே, இந்நூலைப் படிக்கும்பொழுது, இதில் கூறப்பட்டவை, அருட்செல்வரின் சொந்த வாழ்க்கை அல்லது அநுபவங்களைக் குறிப்பிடவில்லை என்பதை நாம் மறக்காமல் நினைவில் வைத்துக்கொண்டு, குழப்பம் அடையாமல் இருக்க வேண்டும்.** ஏனெனில், எந்த ஒருவருடைய அநுபவங்களோ, அறிவுரைகளோ, *அவரைப்போல் ஆவதற்கு* மற்றவர்களுக்கு உதவ முடியாது, ஒருவேளை அவை மற்றவர்களுக்கு குறிப்பால் உணர்த்தவோ (அ) ஊக்குவிக்கவோ வேண்டுமானால் பயன்படலாம்; மேலும், இரண்டு நபர்களின் அநுபவங்கள் ஒருபொழுதும் முற்றிலும் ஒரேமாதிரியாக இருக்க முடியாது; ஏனெனில், இரண்டு நபர்களின் கர்மங்கள் முற்றிலும் ஒரேமாதிரியாக இருக்க முடியாது, எனவே, சுவாமி சிவானந்த மகராஜ், "ஒவ்வொருவரும் தனக்கு அசைக்கமுடியாத திட நம்பிக்கையூட்டும் தன்னுடைய சொந்த அனுபவங்களைப் பெறவேண்டும்." என்று கூறியிருக்கிறார்கள். அதனால்தான் மனித சரித்திரத்தில் இதுவரை இரண்டாம் ஸ்ரீராமரோ, ஸ்ரீகிருஷ்ணரோ, ஏசுநாதரோ, (அ) புத்தரோ இல்லை; அதேபோல், இரண்டாவது வசிஸ்டரோ, வியாசரோ,

வால்மீகியோ, (அ) துளசிதாசரோ இல்லை; அதேபோல், இரண்டாவது சங்கரரோ, ராமானுஜரோ, கபீர்தாசரோ, (அ) மீராபாயோ இல்லை; அதேபோல், இரண்டாவது துக்காராமோ, ஞானதேவரோ, நாயன்மார்களோ, ஆழ்வார்களோ, (அ) அருணகிரியாரோ இல்லை; அதேபோல், இரண்டாவது ராமகிருஷ்ணரோ, அரவிந்தரோ, ரமண மகரிஷியோ, (அ) சுவாமி சிவானந்தரோ இல்லை; இன்னும் சொன்னால் இந்தப் பெயர்ப்பட்டியல் தொடரும். --- இந்த அனைத்து மகான்-களுக்கும் நேரடி சிஷ்யர்கள், அவர்களாலேயே பயிற்றுவிக்கப்-பட்டவர்கள், பின்பற்றுபவர்கள் பலர் இருந்தாலும், அவர்களது உபதேசங்கள் இப்பொழுதுகூட பலரால் கடைப்பிடிக்கப்பட்டுவந்தாலும், அவர்களைபோல் இரண்டாவதாக எவரும் உருவாகவில்லை, உருவாகவும் முடியாது. அப்படி நிகழ்ந்திருந்தால், இவ்வுலகம் பலகாலத்திற்கு முன்னரே சொர்க்கலோகமாக ஆகியிருக்கும்; நரகம் காலியாகவே இருந்திருக்கும். ஆக, எந்த இரு நபர்களின் அநுபவங்களும் ஒருபொழுதும் முற்றிலும் ஒத்துப்போகாது; ஒருவரின் அனுபவம் மற்றொருவருக்கு ஒரு சிறிதளவுக்குமேல் உதவவும் முடியாது, பார்க்கப்போனால், நமது சொந்த அநுபவங்களே நமக்குப் பெருமளவில் உதவியாய் இருப்பதில்லை! பல தடவை நாம் தவறுகளை, தகாத காரியங்களைச் செய்து, அதனால் துன்பமும் அடைந்து வருகிறோம், இனிமேல் மறுபடியும் தவறு செய்திடாமல் இருக்க கவனமாக இருப்போமென்று தீர்மானிக்கிறோம். ஆனால், சிறிது காலத்திற்குள்ளேயே, உதவியற்றவராய், அதே தவறுகளை திரும்பத்திரும்பச் செய்கிறோம்! எனவேதான், அர்ஜுனன் பகவான் ஸ்ரீகிருஷ்ணரிடம் பின்வருமாறு கேட்கிறான்: "ஓ பகவானே! மனிதனுக்கு இச்சையில்லாத போதும் அவனை வலியக் கொண்டு புகுத்தி பாவம் செய்யத் தூண்டுவது எது?" (*அதகேந ப்ரயுக்தோ'யம் பாபம் சரதி பூருஷ: அநிச்சந்நபி வார்ஷ்ணேய பலாதிவ நியோஜித:*) --- (பகவத் கீதை : 3-36). அனைத்தும் ஒரு மர்மம்போல் தோன்றுகிறது! மகான்களின் வாழ்க்கை, மனிதர்களுக்கு மகத்தான ஊக்கம் அளித்து சரியான வழிகாட்டுதலையும் அளிக்கிறது; நாம் அவர்களைப் பின்பற்ற முயற்சியும் செய்கிறோம், எனினும் நம்மால் அவர்களைப்போல் உருவாக முடிவதில்லை. மனித முயற்சி தேவையானதுதான்; இருப்பினும், இறை-கிருபை மட்டும்தான் வெற்றியைத் தந்திடும் என்றுத் தோன்றுகிறது. ஆகவேதான், "எங்கு யோகேஸ்வர: கிருஷ்ணரும் (இறை-கிருபையும்), வில் ஏந்திய அர்ஜுனனும் (மனித முயற்சியும்) சேர்ந்துள்ளதோ, அங்கு வளமும் வெற்றியும் மகிழ்ச்சியும் கொள்கையில் உறுதியும் நிலைபெறும்; இ஼்து என் மதம்" (*யத்ர யோகேஸ்வர: கிருஷ்ணோ யத்ர பார்தோ*

தநுர்தர:। தத்ர ஸ்ரீர்விஜயோ பூதிர்த்ருவா நீதிர்மதிர்மம॥) என்று பகவத் கீதை (18-78) உபதேசத்தின் நிறைவில் ஸஞ்ஜயர் கூறியிருக்கிறார்.

இந்த உன்னதமான இரகசிய உட்பொருள் விளக்கம், பல ஆண்டுகளாக நான் செய்துவரும் தினசரி பாராயண நேரங்களில் எனக்கு வெளிப்படுத்தப்பட்டதை அடிப்படையாகக் கொண்டது. எனது இப்படைப்பை பகவான் குகப்பெருமான் தமது இதயங்களில் அமர்ந்திருக்கும் பேறுபெற்ற கற்றறிந்த பெருமக்களும், ஞானிகளும், அனுபவம்பெற்ற அன்பர்களும் ஆய்வு செய்து, இதன் தகுதியறிந்து ஏற்றுக்கொள்ள பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன். இந்நூலில் இரகசியமாக மறைந்துள்ள தத்துவத்தை வெளிக்கொணர்வதற்கான இம்முயற்சி ஒரு ஆரம்ப முயற்சியே; இதை மேலும் செம்மைப் படுத்தவேண்டிய அவசியம் இருக்கக்கூடுமென்று நான் முழுமையாக உணர்கிறேன்.

கந்தப் பெருமான் நம்மை ஆசீர்வதித்து, நாம் அவருடன் ஐக்கிய மாகிட நமக்கு வழிகாட்டி அருள்புரியட்டும் என்பதே என் பிரார்த்தனை.

---- என். வி. கார்த்திகேயன்

அருணகிரிநாதரின்

வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்[2]*

பரம்பொருளாகிய கந்தப் பெருமான், குருதேவ் சுவாமி சிவானந்தஜீ மகராஜ் மற்றும் அருளாளர் அருணகிரிநாதர் ஆகியோரைப் போற்றிப் பணிந்து வணங்கி அவர்களின் திருவடிகளில் இந்த நூலைப் பூஜை மலராகப் பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்.

அத்வைத ஆசார்யர் ஆதிசங்கரர், ஷண்மத ஸ்தாபனம் செய்தார்; ஆறுசமய வழிபாட்டை வகுத்தளித்தார். இந்து ஆறு வழிபாட்டு முறைகள் அல்லது மரபுகளில் ஒன்று கௌமாரம். இந்தப் மரபைச் சார்ந்தவர்கள் (கௌமாரர்கள்) மதிப்புடனும், மரியாதையுடனும் குமரனை, ஸ்கந்தனை, சண்முகனை மற்றும் கார்த்திகேயனை பரம்பொருளாகப் போற்றி வழிபடுகின்றனர். கௌமார குருநாதர்களில் அருணகிரிநாத சுவாமிகளை முதன்மையான குருவாகவும், ஆன்மீக வழிகாட்டியாகவும் மதித்துப் பாராட்டிப் போற்றுகின்றனர். அருணகிரிநாதர் திருவண்ணாமலையில் வாழ்ந்து வந்தார். இது பஞ்சபூத ஸ்தலங்களில் ஒன்றான அக்னி ஸ்தலம். இந்த புனிதத் திருத்தலம் மற்றும் பல காரணங்களாலும் புகழ் பெற்றது. இது, நினைத்தாலே முக்தி தரும் திருத்தலம் என்று நம்பப்படுகிறது.

முற்காலத்தில் வாழ்ந்த துறவிகள் மற்றும் ஞானிகள் வாழ்க்கையைப் போலவே அருணகிரிநாதர் வாழ்க்கை சம்பந்தமாகவும் ஆதாரபூர்வமான பதிவுகள் இல்லை. அவரது பிறப்பு, ஜாதி சம்பந்தமாக உறுதியான தகவல்கள் கிடைக்கவில்லை. ஆகவே, இயற்கையாகவே அவரைப்பற்றி பல தகவல்கள் பரவிக் கிடக்கின்றன. அவரைப் பற்றிய சிறுசிறு விஷயங்களில்கூட பல்வேறு விதமான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் எது சரி, எது தவறு என்று நம்மால் அறிந்து கொள்ள முடியவில்லை. அருணகிரிநாதரின் வரலாற்றை அதிகமதிகமாகப் படிக்கப்படிக்க அதிகமதிகமான குழப்பங்கள்தான் மனதில் ஏற்படுகின்றன. அருணகிரிநாதரைப் பற்றி எழுதிய நூல் ஆசிரியர்கள் இறைவன் மீதும் அருணகிரிநாதர் மீதும் கொண்டுள்ள பக்தியால் பல்வேறு விஷயங்களை எந்த ஆதாரமும் இன்றி

---

[2] * என்னுடைய "அறுமுகனருளால் பாவி ஞானியாக மாறிய அருணகிரிநாதரின் அற்புத சரிதம்" என்ற ஆச்சரியத்தில் ஆழ்த்தும் ஆய்வு நூலிலிருந்து (112 பக்கங்கள் கொண்டது) தொகுக்கப்பட்டது.

எழுதியுள்ளனர். எனக்குக் கிடைத்த சில நூல்களைப் படித்தபின் அருணகிரிநாதரைப் பற்றி நூல் எழுத நான் தயங்கினேன். ஏனெனில், ஏற்கனவே இருக்கும் குழப்பம் போதாதென்று நானும் குழப்பத்தை அதிகரித்துவிடுவேனோ என்று எண்ணினேன். ஆனால், இருக்கும் குழப்பம், முரண்பாடுகளில் சிலவற்றையாவது எனது நூல் தெளிவுபடுத்தும் வகையில் அமையுமாயின், மற்றுமொரு விளக்கமான நூலை எழுதுவதில் தவறில்லை என்று எண்ணி எழுதத் தீர்மானித்தேன். எனவே நம்பத் தகுந்த ஆதாரங்களை மட்டும் தொகுத்துச் சேர்க்க முயற்சி செய்திருக்கிறேன். எது எப்படி இருந்தாலும் பல்வேறு நூல்களில் கூறப்படுவதுபோல அருளாளர் அருணகிரிநாதர் அடைந்த அருள், ஞானநிலை சாதாரணமானதல்ல என்பது மட்டும் உறுதி.

அருளாளர் அருணகிரி நாதரின் போற்றத்தக்க வாழ்க்கை வரலாற்றை அகச்சான்றுகள் மற்றும் கல்வெட்டுச் சான்றுகளின் அடிப்படையில் சுருக்கமாக பின்வருமாறு கூறலாம்.

வடதேசத்திலிருந்து வந்து திருவண்ணாமலை அருகில் முல்லந்திரம் மற்றும் பிற கிராமங்களில் குடியமர்ந்த கௌட பிராமண குடும்பத்தில் பிறந்தவர் அருணகிரிநாதர். அவர் திருவண்ணாமலையில் வாழ்ந்து வந்தார். அவர் இளமைப் பருவத்திலிருந்தே தமிழ் மற்றும் சமஸ்கிருத மொழிகளைக் கற்றுத் தேர்ந்திருந்தார். அவருக்கு நன்கு கல்வி போதிக்கப்பட்டது. அவர் நன்கு வளர்க்கப்பட்டார். அவருக்கு திருமணமாகி மனைவி, குழந்தைகள் மற்றும் உறவினர்கள் இருந்தனர். ஒருவேளை அவருக்கு நற்கல்வி அளிக்க அவரது பெற்றோர்கள் திருவண்ணா-மலைக்கு வந்து வசித்திருக்கலாம் அல்லது திருமணமானபிறகு ஜீவனம் நடத்துவதற்காக அவர் திருவண்ணாமலைக்கு வந்திருக்கலாம். அவருக்குத் திருமணம் ஆகி குழந்தைகள் இருந்தாலும் விதிவசத்தால் அவர் திருவண்ணாமலையில் விபச்சாரிகளின் மோக வலையில் சிக்கித் தவித்தார். சிற்றின்பச் சேற்றில் மூழ்கினார். விபச்சாரிகளை திருப்திப்படுத்த தன் செல்வம் முழுவதையும் இழந்தார். மேலும் கருமிகளைப் புகழ்ந்து பாடிப் பணம் பெற்று விபச்சாரிகளுக்கு கொடுத்தார். அவர்களுடன் கொண்ட தகாத உறவால் அவர் குணப்படுத்த முடியாத நோயினால் பாதிக்கப்பட்டார். உற்றார் உறவினரும் விபச்சாரிகளும் அவர் நிலை கண்டு ஏளனமாகச் சிரித்தனர். அனைவரும் அவரை வெறுத்து ஒதுக்கினர். காலம்தான் குணப்படுத்தும் மகத்தான சாதனம். அருணகிரி தனது செயலுக்காக வெட்கப்பட்டார். கிடைத்தற்கரிய மனிதப் பிறவியைத் தான் வீணாக்கிவிட்டதற்காக வருந்தினார். வேதனைப்பட்டார். ஒரு முதியவர் அவரைப் பார்த்து முருகப் பெருமானை வழிபடுவதிலும், தியானிப்பதிலும், அவரிடம் பிரார்த்தனை செய்வதிலும் நேரத்தைச்

செலவிடுமாறு அறிவுரை கூறினார். அதன்படி கோவில் கோபுரத்தின் அருகில் அமர்ந்து இறைவன் மீது மனதைச் செலுத்தி தியானித்தார். ஆயினும் மனம் அமைதி பெறவில்லை. இறுதியாக, தரம் தாழ்ந்த தனது வாழ்க்கையை முடித்துக்கொள்ளவும், தான் செய்த பாவத்துக்குப் பரிகாரம் தேடவும் அவர் தன் வாழ்க்கையை முடித்துக்கொள்ள முடிவு செய்தார். கோவில் கோபுரத்தின் உச்சிக்கு ஏறிச் சென்றார். முருகனைப் பிரார்த்தித்தார். தற்கொலை செய்துகொள்ள கோவில் கோபுரத்திலிருந்து கீழே குதித்தார். அவர் பூமிக்கு அருகில் வரும்போது அவர் வணங்கும் முருகன் தனது அபார கருணையினால் அவரை தனது திருக்கரங்களில் தாங்கிப்பிடித்து காப்பாற்றினார். தனது வேல் கொண்டு அருணகிரியின் நாவில் "ஓம்" எனும் புனிதமான பிரணவ மந்திரத்தை எழுதினார். அவருக்கு ஒரு ஜபமாலையைத் தந்தார். தனது புகழைப் பாடுமாறு அருளாணை பிறப்பித்தார். பாடுவதற்கு 'முத்தைத்தரு' என்று முதலடியும் எடுத்துக் கொடுத்தார். பாவியான அருணகிரி நொடிப் பொழுதில் இறைஞானம் பெற்ற பரமஞானியாக மாற்றம் பெற்றார். தீராத நோய் தீர்ந்து முழுமையான ஆரோக்கியமான உடல்நலம் பெற்றார். பல்வேறு தெய்வீக அனுபவங்களைப் பெற்றார். அவர் முகம் அருட்பொலிவுடன் பிரகாசித்தது. கோவில் கோபுரத்தின் அடிவாரத்தில் அருணகிரியை முருகன் காப்பாற்றிய இடத்தில் முருகனுக்கு ஒரு கோவில் உள்ளது. அது *"கோபுரத்து இளையனார் கோவில்"* என்றழைக்கப்படுகின்றது. அருணகிரியார் வீடுவாசலற்ற துறவியானார். எப்பொழுதும் இறைவன் புகழைப் பாடும் பணியே பணியாய் மேற்கொண்டார். திருவண்ணா-மலையில் கோவில் கொண்டிருக்கும் இறைவனைப் போற்றிப் புகழ்ந்து பாடினார். அவர் புகழ் திக்கெட்டும் பரவியது. அந்த தேசத்து மன்னன் பிரவுட தேவன் அருணகிரிநாதரைப் போற்றி வணங்கி அவர் பக்தராக மாறினார். அருணகிரியாரைக் காப்பாற்றியருளிய முருகனை மன்னன் தரிசிக்க விரும்பினார். அதற்காக அருணகிரியை வேண்டினார். அருணகிரியும் அதற்காகக் கூட்டிய ஒரு சபையில் 'அதலசேடநாராட' என்ற திருப்புகழ் பாடலைப்பாடி முருகப்பெருமானை காட்சி அளிக்கப் பிரார்த்தித்தார். அவ்வண்ணமே, முருகப் பெருமான் மன்னன் மற்றும் திரளாகக் கூடியிருந்த மக்கள்முன் ஒரு கம்பத்திலிருந்துத் தோன்றி, ஆடிடும் மயில் மீது ஏறிவந்து காட்சி தந்தார். மன்னன் பெருமகிழ்ச்சி அடைந்தான். மக்களும் மகிழ்ச்சி அடைந்தனர். முருகன் கம்பத்திலிருந்து வெளிப்பட்டு காட்சியளித்த இடத்தில் முருகனுக்குக் கோயில் இருக்கிறது. அது *"கம்பத்து இளையனார் கோவில்"* என்று அழைக்கப்படுகின்றது. *கர்ண பரம்பரைக் கதைகளில் கூறப்படுவதுபோல முருகனை தரிசித்ததால் மன்னன் கண்பார்வையை இழக்கவில்லை; மன்னன் கண்பார்வைபெற பாரிஜாத மலரைக் கொண்டுவர அருணகிரி தேவலோகம் செல்லவுமில்லை.*

இந்த சம்பவத்துக்குப் பிறகு அருணகிரி திருத்தல யாத்திரை செய்தார். இந்தியா முழுவதும் உள்ள முருகன் திருக்கோவில்களையும் மற்ற கோவில்களையும் தரிசித்தார். அங்கு கோவில் கொண்டுள்ள முருகனையும் மற்ற தெய்வங்களையும் போற்றிப் புகழ்ந்து பாடினார். இந்த யாத்திரையில் அவருக்குப் பலவிதமான அனுபவங்களும் இறைவன் தரிசனமும் கிடைத்தன. திருச்செந்தூரில் முருகன் குழந்தை வடிவில் வந்து நடனமாடி காட்சி அளித்தார். இந்தத் தலத்தில் அருணகிரிநாதர் வில்லிபுத்தூராருடன் இலக்கிய விவாதத்தில் ஈடுபட்டு, "கந்தர் அந்தாதி" பாடி, அவரை வென்றார். அதன்பின் கடல் கடந்து ஈழம் (இலங்கை) சென்றார். ஸ்ரீலங்காவில் அவர் அருக்கோணமலை மற்றும் கண்டி ஆகிய ஊர்களுக்குச் சென்று தரிசித்தார். அதன்பிறகு அவர் பிரசித்தி பெற்ற கதிர்காமம் சென்றார். பிறகு அவர் இந்தியாவுக்குத் திரும்பி வந்து அகத்திய முனிவர் தங்கித் தவம் செய்த பொதிகைமலை சென்றார். அங்கு, "இறைவா! (i) நீ என்னை உன் அருகில் அழைத்துப் பெரிய தவசிகள் கூட்டத்தில் சேர்வாயாக என்று எனக்கு அருள் புரிந்து, (ii) வேல், மயில் ஆகிய சின்னங்களைப் பொறித்து அருள்வாயாக," என்று பிரார்த்தனை செய்தார். அங்கிருந்து திருத்துருத்தி என்னும் தலத்திற்குச் சென்றார். அங்கே முருகன் அருணகிரியின் கனவில் தோன்றி, அவரது தோள்களில் வேல் மற்றும் மயிலின் சின்னங்களைப் பதித்து "கந்தர் அனுபூதி" பாடல்களைப் பாட அருளாணை பிறப்பித்தார். அருணகிரி உடனடியாக கந்தர் அனுபூதிப் பாடல்களை திருத்துருத்தியிலேயே பாடியிருப்பார் என்றே தோன்றுகிறது, பொதிகைமலையில் அகத்தியர் போன்ற தவசீலர்கள் பட்டியலில் தன்னையும் சேர்த்துக் கொள்ள இறைவனிடம் பிரார்த்தித்தார். திருத்தணிகையில் தங்கி, இறைவன் சித்தம் களிகூர ஆழ்நிலை தியானத்தில் ஈடுபட அருள்புரியுமாறும் அவர் பிராத்தனை செய்தார். அங்கிருந்த வட இந்திய யாத்திரையைத் தொடங்கி காசி, ஹரித்வாரம், கயிலை மலை, மற்றும் பூரியில் ஜகந்நாதரையும் தரிசித்துத் திரும்பிவரும்போது இந்த இரு வேண்டுதல்களையும் நிறைவேற்ற முருகன் அவரை திருத்தணிகைக்கு வருமாறு அழைத்தார். அதன்படி, அருணகிரி திருத்தணிகை சென்று சில ஆண்டுகள் தங்கி ஆழ்நிலை தியானத்தில் ஈடுபட்டார். கடும் தவம் செய்தார். அந்த வேளையில் அற்புதமான திருவகுப்புப் பாடல்களை இறைவன் உள்ளம் மகிழ்ச்சி அடையும் பொருட்டுப் பாடினார். எனவே, இவற்றில் விபச்சாரிகளின் காமக் களியாட்டங்கள் பற்றிய குறிப்புகள் முற்றிலும் இல்லை. மரணபயம் பற்றிய குறிப்பும் ஒரு சில பாடல்கள் தவிர மற்ற பாடல்களில் இல்லை. இறுதியாக, அவர் எங்கிருந்து தனது திருத்தல யாத்திரையைத் தொடங்கினாரோ அந்த சொந்த ஊரான திருவண்ணா-மலைக்கு வந்தார். இந்த பாரத யாத்திரையின்போது அவர் 16000 திருப்புகழ் பாடல்களைப் பாடியதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அவற்றில் சுமார்

1300 பாடல்களே நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவர் யாத்திரையின் போது 'கந்தர் அனுபூதி', 'கந்தர் அந்தாதி', 'கந்தர் அலங்காரம்' மற்றும் பிற நூல்களையும் பாடியுள்ளார்.

அருணகிரிநாதர் தனது நீண்ட யாத்திரையை நிறைவு செய்து திருவண்ணாமலைக்குத் திரும்பி வந்தபோது மன்னன் பிரவுட தேவன் உரிய மரியாதையுடன் வரவேற்றான். அருணகிரியார் தனது இறுதிக் காலத்தை தியானத்தில் தவத்தில் கழித்தார். நாளடைவில் இறைவனோடு இரண்டறக் கலந்து, அத்வைத நிலையாகிய சாயுஜ்ய நிலையை அடைந்தார். அவர் தனது பூத உடலை உதறித்தள்ளியபோது, தனக்கு இறைவனை தரிசிக்கும் வாய்ப்பை அருளித்தந்த அருணகிரி-நாதருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் மன்னன் பிரவுடதேவன், அவர் உடலை திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயிலில் மேலைப் பிராகாரத்தில் அடக்கம் செய்து, அத்துடன் அவருக்கு ஒரு சிறிய கோவிலும் அமைத்தான். அதில் அருணகிரிநாதரின் கல் விக்கிரஹத்தைப் பிரதிஷ்டை செய்து, அதற்கு தினசரி பூஜை செய்வதற்கும் ஏற்பாடு செய்தான். இந்தச் சமாதிக் கோவிலை இன்றும் நாம் காணலாம்.

என்னே மன்னனின் புத்திக்கூர்மையும், பெருந்தன்மையும், நன்றியறிவும், அருணகிரியாரிடம் பக்தியும் மற்றும் விசுவாசமும்! அன்று கோவில் கோபுரத்திலிருந்து குதித்து தற்கொலை செய்து கொள்ள அருணகிரியார் முயன்றபோது அவரை முருகப் பெருமான் தடுத்து **ஆட்கொண்ட இடம்** (*கோபுரத்து இளையனார் கோவில்*); அருணகிரியின் வேண்டுதலுக்கு செவிசாய்த்து மன்னன் மற்றும் மக்கள் மத்தியில் கம்பத்திலிருந்து வெளிப்பட்டு முருகன் **காட்சி அளித்து அருளிய இடம்** (*கம்பத்து இளையனார் கோவில்*), --- இந்த இரண்டு இடங்களும் (கோவில்களும்) உள்ள **திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர்** கோவில் வளாகத்துக்கு உள்ளேயே, அருணகிரிநாதர் **அடக்கமான இடமும்** (அருணகிரிநாதரின் சமாதியும், அத்துடன் *அவருக்கு ஒரு சிறு கோவிலும்*) அமைத்தான் மன்னன் பிரவுட தேவன். இது அவனது மிகவும் போற்றத்தக்க செயல்.

(இந்தச் சிறு சமாதிக் கோவிலில் அருணகிரிநாதரின் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. திருத்தணிகையில் அருணகிரிநாதர் நீண்ட காலம் தவத்தில் ஈடுபட்டிருந்தபின் அவரது உடல் அமைப்பு எப்படி இருந்தது என்பதை இந்த விக்கிரஹம் வெளிப்படுத்துகிறது).

இவ்வாறு அருணகிரிநாதர் போற்றத்தக்க இறைஞானம் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்தார். மனிதசக்திக்கு அப்பாற்பட்ட அற்புதச் செயல்களை நிகழ்த்திக் காட்டினார். மக்களை சம்ஸார வாழ்க்கை எனும்

மாயையிலிருந்து விடுவித்தார். அவர்கள் நிரந்தரமாக இறைவனைப்பற்றிய விழிப்புணர்வுடன் வாழ வழிகாட்டினார். அவர் இன்றும்கூட பக்தர்களுக்குத் தேவையான வழிகாட்டுதலைத் தந்து கொண்டிருக்கிறார். பக்தர்கள் ஆன்மீகப் பூரண நிலையை அடைய வழிகாட்டுகிறார். அருணகிரிநாதரின் அருளாசி நமக்கு என்றும் கிடைக்கட்டும். அனைத்து அருளாளர்கள் மற்றும் ரிஷி முனிவர்களின் அருளாசி மனிதகுலத்துக்கு என்றென்றைக்கும் கிடைக்கட்டும்.

---- **N.V.** கார்த்திகேயன்.

அருளாளர் அருணகிரிநாதரின் சமாதி-கோவில்

அருணகிரிநாதர் அடக்கமான இடம்

<u>படம் 1</u>: அருணகிரிநாதரின் புனிதமான சமாதி மண்டபம். இங்கே அவர் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. அதற்கு முன்புரத்தில் அவருக்கு சிறிய கோயில் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (படம் 2ஐக் காண்க.)

<u>படம் 2:</u> படம் 1ல் உள்ள அருணகிரியார் சிறிய கோயிலின் நெருங்கிய தோற்றம். ---- முன்னால் பலி பீடமும், பக்கத்தில் கணபதி விக்ரஹமும் உள்ளன.

<u>படம் 3:</u> படம் 2ல் உள்ள கோவிலின் உள்ளே, பலி பீடத்திற்குப் பின்னால், பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள அருணகிரிநாதரின் திருவுருவச்சிலை. அதற்கு தினசரி பூஜை செய்யப்பட்டு வருகிறது.

வேலும் மயிலும் துணை

கந்தர் அநுபூதி

(முருகப் பெருமான்)

அருளாளர் அருணகிரிநாதர்

(திருச்செங்கோடு)

வேலும் மயிலும் துணை

கந்தர் அனுபூதி

காப்பு

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்து உருகத்
தஞ்சத்தருள் சண்முகனுக்கு இயல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக்கரவானை பதம் பணிவாம்.

நூல்

ஆடும் பரிவேல் அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனியானை சகோதரனே. 1

உல்லாச நிராகுல யோக விதச்
சல்லாப விநோதனும் நீ அலையோ
எல்லாமற என்னை இழந்த நலம்
சொல்லாய் முருகா சுரபூ பதியே. 2

வானோ புனல்பார் கனல் மாருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனையாண்ட இடம்
தானோ பொருளாவது ஷண்முகனே. 3

வளைபட்டகைம் மாதொடு மக்களெனும்
தளைபட்டழியத் தகுமோ தகுமோ
கிளைபட்டெழு சூருரமும் கிரியும்
தொளைபட்டுருவத் தொடு வேலவனே. 4

மகமாயை களைந்திட வல்லபிரான்
முகமாறு மொழிந்தும் ஒழிந்திலனே
அகமாடை மடந்தையர் என்றயரும்
ஜகமாயையுள் நின்று தயங்குவதே. 5

திணியான மனோசிலை மீது உனதாள்
அணியார் அரவிந்தம் அரும்புமதோ
பணியாஎன வள்ளிபதம் பணியும்
தணியா அதிமோக தயாபரனே. 6

கெடுவாய் மனனே கதிகேள் கரவாது
இடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவேதனை தூள்படவே
விடுவாய் விடுவாய் வினையாவையுமே. 7

அமரும்பதி கேள் அகமாம் எனுமிப்
பிமரங்கெட மெய்ப்பொருள் பேசியவா
குமரன் கிரிராச குமாரி மகன்
சமரம்பொரு தானவ நாசகனே. 8

மட்டூர்குழல் மங்கையர் மையல்வலைப்
பட்டூசல்படும் பரிசென்று ஒழிவேன்
தட்டூடறவேல் சயிலத்து எறியும்
நிட்டூர நிராகுல நிர்ப்பயனே. 9

கார்மாமிசை காலன்வரில் கலபத்து
ஏர்மாமிசை வந்தெதிரப் படுவாய்
தார்மார்ப வலாரிதலாரி எனும்
சூர்மாமடியத் தொடு வேலவனே. 10

கூகாஎன என்கிளை கூடி அழப்
போகாவகை மெய்ப்பொருள் பேசியவா
நாகாசல வேலவ நாலுகவி
த்யாகா சுரலோக சிகாமணியே. 11

செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மாஇரு சொல்லற என்றலுமே
அம்மா பொருளொன்றும் அறிந்திலனே. 12

முருகன் தனிவேல்முனி நம்குருவென்று
அருள்கொண்டு அறியார் அறியுந் தரமோ
உருவன்று அருவன்று உளதன்று இலதன்று
இருளன்று ஒளியன்று என நின்றதுவே. 13

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்று
உய்வாய் மனனே ஒழிவாய் ஒழிவாய்
மெய்வாய்விழி நாசியொடும் செவியாம்
ஐவாய்வழி செல்லும் அவாவினையே. 14

முருகன் குமரன் குகன்என்று மொழிந்து
உருகும் செயல்தந்து உணர்வென்று அருள்வாய்
பொருபுங்கவரும் புவியும் பரவும்
குருபுங்கவ எண்குண பஞ்சரனே. 15

பேராசைஎனும் பிணியில் பிணிபட்டு
ஓராவினையேன் உழலத் தகுமோ
வீரா முதுசூர்பட வேல் எறியும்
சூரா சுரலோக துரந்தரனே. 16

யாமோதிய கல்வியும் எம்மறிவும்
தாமேபெற வேலவர் தந்ததனால்
பூமேல் மயல்போய் அறமெய்ப் புணர்வீர்
நாமேல் நடவீர் நடவீர் இனியே. 17

உதியா மரியா உணரா மறவா
விதிமால் அறியா விமலன் புதல்வா
அதிகா அநகா அபயா அமரா
வதிகாவல சூர பயங்கரனே. 18

வடிவும் தனமும் மனமும் குணமும்
குடியும் குலமும் குடிபோகியவா
அடியந்தமிலா அயில்வேல் அரசே
மிடியென்று ஒருபாவி வெளிப்படினே. 19

அரிதாகிய மெய்ப்பொருளுக்கு அடியேன்
உரிதா உபதேசம் உணர்த்தியவா
விரிதாரண விக்ரம வேளிமையோர்
புரிதாரக நாக புரந்தரனே. 20

கருதா மறவா நெறிகாண எனக்கு
இருதாள் வனசந்தர என்றிசைவாய்
வரதா முருகா மயில் வாகனனே
விரதா சுரசூர விபாடணனே. 21

காளைக் குமரேசன் எனக் கருதித்
தாளைப் பணியத் தவம் எய்தியவா
பாளைக்குழல் வள்ளிபதம் பணியும்
வேளைச் சுரபூபதி மேருவையே. 22

அடியைக் குறியாது அறியாமையினால்
முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக்ரம வேல் மகிபா குறமின்
கொடியைப் புணரும் குணபூதரனே. 23

கூர்வேல்விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வேன் அருள்சேரவும் எண்ணுமதோ
சூர்வேரொடு குன்று தொளைத்த நெடும்
போர்வேல புரந்தர பூபதியே. 24

மெய்யேஎன வெவ்வினை வாழ்வை உகந்து
ஐயோ அடியேன் அலையத் தகுமோ
கையோ அயிலோ கழலோ முழுதும்
செய்யோய் மயிலேறிய சேவகனே. 25

ஆதாரம் இலேன் அருளைப் பெறவே
நீதான் ஒருசற்றும் நினைந்திலையே
வேதாகம ஞான விநோத மனோ
தீதா சுரலோக சகாமணியே. 26

மின்னேநிகர் வாழ்வை விரும்பிய யான்
என்னே விதியின் பயன் இங்கிதுவோ
பொன்னே மணியே பொருளே அருளே
மன்னே மயிலேறிய வானவனே. 27

ஆனா அமுதே அயில்வேல் அரசே
ஞானாகரனே நவிலத் தகுமோ
யானாகிய என்னை விழுங்கி வெறும்
தானாய் நிலைநின்றது தற்பரமே. 28

இல்லேஎனும் மாயையில் இட்டனை நீ
பொல்லேன் அறியாமை பொறுத்திலையே
மல்லேபுரி பன்னிரு வாகுவில் என்
சொல்லே புனையும் சுடர் வேலவனே. 29

செவ்வான் உருவில் திகழ்வேலவன் அன்று
ஒவ்வாதது என உணர்வித்த (அ)துதான்
அவ்வாறு அறிவார் அறிகின்றது அலால்
எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவே. 30

பாழ்வாழ்வு எனுமிப் படுமாயையிலே
வீழ்வாய்என என்னை விதித்தனையே
தாழ்வானவை செய்தனதாம் உளவோ
வாழ்வாய் இனிநீ மயில்வாகனனே. 31

கலையே பதறிக் கதறித் தலையூடு
அலையே படுமாறு அதுவாய் விடவோ
கொலையேபுரி வேடர்குலப் பிடிதோய்
மலையே மலைகூறிடு வாகையனே. 32

சிந்தாகுல இல்லொடு செல்வமெனும்
விந்தாடவி என்று விடப்பெறுவேன்
மந்தாகினி தந்த வரோதயனே
கந்தா முருகா கருணாகரனே. 33

சிங்கார மடந்தையர் தீநெறிபோய்
மங்காமல் எனக்கு வரம்தருவாய்
சங்க்ராம சிகாவல ஷண்முகனே
கங்காநதி பால க்ருபாகரனே. 34

விதிகாணும் உடம்பை விடா வினையேன்
கதிகாண மலர்க்கழல் என்று அருள்வாய்
மதிவாணுதல் வள்ளியை அல்லது பின்
துதியா விரதா சுரபூபதியே. 35

நாதா குமரா நமவென்று அரனார்
ஓதாய் என ஓதியது எப்பொருள் தான்
வேதாமுதல் விண்ணவர் சூடுமலர்ப்
பாதா குறமின் பதசேகரனே. 36

கிரிவாய்விடு விக்ரம வேல் இறையோன்
பரிவாரம் எனும் பதம் மேவலையே
புரிவாய் மனனே பொறையாம் அறிவால்
அரிவாய் அடியோடும் அகந்தையையே. 37

ஆதாளியை ஒன்றறியேனை அறத்
தீதாளியை ஆண்டது செப்புமதோ
கூதாள கிராத குலிக்கிறைவா
வேதாள கணம்புகழ் வேலவனே. 38

மாவேழ் சனனம்கெட மாயைவிடா
மூவேடணை என்று முடிந்திடுமோ
கோவே குறமின்கொடி தோள்புணரும்
தேவே சிவசங்கர தேசிகனே. 39

வினை ஓடவிடும் கதிர்வேல் மறவேன்
மனையோடு தியங்கி மயங்கிடவோ
சுனையோடு அருவித் துறையோடு பசும்
தினையோடு இதணோடு திரிந்தவனே. 40

சாகாது எனையே சரணங்களிலே
காகா நமனார் கலகம் செயுநாள்
வாகா முருகா மயில் வாகனனே
யோகா சிவஞான உபதேசிகனே. 41

குறியைக் குறியாது குறித்தறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலும்
செறிவற்று உலகோடு உரை சிந்தையுமற்று
அறிவற்று அறியாமையும் அற்றதுவே. 42

தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன்பு அருளால்
ஆசா நிகளம் துகளாயின பின்
பேசா அநுபூதி பிறந்ததுவே. 43

சாடும் தனிவேல் முருகன் சரணம்
சூடும்படி தந்தது சொல்லுமதோ
வீடும் சுரர்மாமுடி வேதமும் வெம்
காடும் புனமும் கமழும் கழலே. 44

கரவாகிய கல்வியுளார் கடைசென்று
இரவாவகை மெய்ப்பொருள் ஈகுவையோ
குரவா குமரா குலிசாயுத குஞ்
சரவா சிவயோக தயாபரனே. 45

எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ
சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனையாள்
கந்தா கதிர்வேலவனே உமையாள்
மைந்தா குமரா மறைநாயகனே. 46

ஆறாறையும் நீத்து அதன்மேல் நிலையைப்
பேறா அடியேன் பெறுமாறு உளதோ
சீறாவருசூர் சிதைவித்து இமையோர்
கூறா உலகம் குளிர்வித்தவனே. 47

அறிவொன்று அறநின்று அறிவார் அறிவில்
பிறிவொன்று அறநின்ற பிரான் அலையோ
செறிவொன்று அறவந்து இருளே சிதைய
வெறிவென்றவரோடு உறும் வேலவனே. 48

தன்னந்தனி நின்றது தான் அறிய
இன்னம் ஒருவர்க்கு இசைவிப்பதுவோ
மின்னும் கதிர்வேல் விகிர்தா நினைவார்
கின்னம் களையும் க்ருபைசூழ் சுடரே. 49

மதிகெட்டு அறவாடி மயங்கி அறக்
கதிகெட்டு அவமே கெடவோ கடவேன்
நதிபுத்திர ஞான சுகாதிப அத்
திதிபுத்திரர் வீறடு சேவகனே. 50

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே. 51

ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம்
ஓம் ஓம் ஓம் ஓம் ஓம்
ஓம் ஓம் ஓம் ஓம்
ஓம் ஓம் ஓம்
ஓம் ஓம்
ஓம்

உட்பொருள் உணர்த்தி
பக்தி-ஞான அருள்வழி காட்டும்

கந்தர் அநுபூதி

(அத்வைத அநுபவ ஆய்வுநூல்)

அருட்செல்வர்
அருணகிரிநாதர் அருளியது

உட்பொருள் உணர்த்தி
பக்தி-ஞான அருள்வழி காட்டும்

கந்தர் அநுபூதி

****

==========

காப்புச் செய்யுள்

==========

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்து உருகத்
தஞ்சத்தருள் சண்முகனுக்கு இயல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக்கரவானை பதம் பணிவாம்.

பொழிப்புரை: "தன்னைத் தஞ்சம் அடைந்தவரின் கல் போன்று கடினமாய் இறுகிய நெஞ்சை, தன் கருணையால் நெகிழ்ந்து உருகும்படி அருள்புரியும் ஷண்முகப் பெருமானைப் புகழ்ந்து, செவிக்கினிய செழுமை நிறைந்த அழகிய தமிழ் சொற்களால் தொடுக்கப்பட்ட (கந்தர் அனுபூதி எனும்) இப்பாமாலை, திக்கெட்டும் பரவி சிறந்திடவே, ஐந்துகர ஆனைமுகத்தோனின் (ஸ்ரீ விக்னேஸ்வரரின்) தாமரைப்பாதம் பணிந்து வணங்குவோம்."

விளக்கவுரை

காப்பு என்பது 'பாதுகாப்பு' --- தடைகளிலிருந்து பாதுகாப்பு. ஒரு நூலை படைத்திட விழையும் ஒருவர், அப்படைப்புச் செயல் எவ்வித

தங்கு தடைகளும் இன்றி நன்கு நிகழ்ந்து புகழுடன் வெற்றியடைந்திட, இறைவனின் அருள் வேண்டி இயற்றப்படும் தொடக்கச் செய்யுள் காப்புச் செய்யுள் என்று அழைக்கப்படும். அருட்செல்வர் அருணகிரிநாதரும் தன் அனுபூதிப் படைப்பான 'கந்தர் அனுபூதி' நன்கு வெளிப்பட விநாயகரைத் துதித்து ஒரு காப்புச் செய்யுளைப் புனைந்து தொடங்குகிறார். இப்படைப்பான கந்தர் அனுபூதியானது வெற்றியும், புகழும் பெற்றுச் சிறந்திட, முழுமுதற் கடவுளான ஐங்கரத்தோனின் (ஸ்ரீ விக்னேஸ்வரரின்) அருளை வேண்டுகிறார். இக்காப்புப் செய்யுளின் முதலிரண்டு வரிகளிலேயே, கந்தப் பெருமானையும் மிக நேர்த்தியாக பெருமைப்படுத்திப் பாடியுள்ளார்; இதிலிருந்து கந்தப்பெருமானின் மீது அவர் கொண்டிருந்த அளிவிலா அன்பு மிகவும் மேலோங்கி இருந்தது நன்கு விளங்குகிறது. ஸ்ரீ கணேசரின் அருளால், இவ்வனுபூதிப் படைப்பான 'கந்தர் அனுபூதி', அதனைப் பாடுபவர், எழுதுபவர், கேட்பவர், படிப்பவர், இதனைப் படைத்த மெய்ஞானி, கந்தப் பெருமான் ஆகிய அனைவருக்கும், தமிழ் மொழிக்கும் பெரும்புகழை ஈட்டித் தரும்.

இவ்வுயரிய படைப்பான கந்தர் அனுபூதியின் புகழ் மேன்மேலும் பரவிட ஐங்கரத்தோன் ஸ்ரீ கணேசரை நாம் பணிந்து வணங்குவோமாக. ஐந்துகரத்தின் செயல்களை தமிழ் மறைநூல்கள் கீழ்கண்டவாறு விளம்புகின்றன:

1. எழுத்தாணி பிடித்த கரம் : படைக்கும் தொழில்.
2. மோதகம் ஏந்திய கரம் : காக்கும் தொழில்.
3. அங்குசம் தரித்த கரம் : அழிக்கும் தொழில்.
4. பாசக்கயிறுடைய கரம் : மறைக்கும் தொழில்.
5. தும்பிக்கை (5-வது) கரம் : அருள்பாலிக்கும் தொழில்.

இந்நூல் அழகிய இனிய தமிழ்மணம் கமழும் சொற்களால் தொடுக்கப்பட்ட பாமாலை. அழகிய மணம் பரப்பும் பூக்களால் தொடுக்கப்பட்ட பூமாலையானது உபயோகத்திற்கு வந்த ஓரிரு மணிநேரத்தில், அல்லது அதிக பட்சம் ஒருசில நாட்களில் பொலிவுகுன்றி வாடி - வதங்கிவிடுகின்றது. ஆனால் இந்த செஞ்சொற் பாமாலையின் பொலிவோ, நாளாக நாளாக அதிகரிக்கிறது. பலப்பலமனிதர்கள் இப்பாமாலை பற்றிக் கேட்டறிந்து, இதனைப் படித்து, பாடி, தங்கள் இடர்கள் நீங்கி, பெரும்பயன் அடைந்து வருவதால், மேன்மேலும் கூடி வருகின்றது. எனவே, இச்செஞ்சொற் பாமாலை இறைவனின் இதயத்திற்கு, பூமாலைகளைவிட, பிரியமானதாக இருக்கின்றது.

சூரியனின் முன் நின்று தன்னை வெளிப்படுத்திக் கொள்கின்றவனுக்கு, சூரியன் ஒரு ஹிதத்தை அளித்து அருளுகிறார்.

அதுபோல, இறைவனிடம் தஞ்சமடைந்தவர்களை இறைவன் எப்பொழுதும் தனது அருட்கிரணங்களால் அரவணைத்துப் பாதுகாக்கின்றார். ஹிதம் தந்து அரவணைப்பது சூரியனின் இயல்பான சுபாவம். தான் செய்த தவறுகளுக்காக மனம் வருந்தி, தன் இயலாமையை உணர்ந்து, இறைவனின் மேன்மை மற்றும் அருமை பெருமைகளை நன்கறிந்து, போற்றி அவரது பாதகமலத்தில் முழுமையாக சரணடைகின்ற பக்தர்களின் அநேக ஆசைகளால் கட்டுண்டு கல்போன்று இறுகிவிட்ட நெஞ்சங்களை, தன் கருணையால் நெகிழ்ந்துருகச் செய்வது இறைவனின் இயல்பு.

கந்தப் பெருமானின் அவதாரம்

கந்தப் பெருமானின் அவதார மகிமை பற்றி 'கந்த புராணம்' எனும் தமிழ்மறை பின்வருமாறு கூறுகிறது: தொன்றுதொட்டு யுகயுகமாக தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையே நடந்து வந்த எல்லாப் போர்களிலும், தேவர்களே மீண்டும் மீண்டும் வெற்றியடைந்து வந்தனர். சுரசா எனும் ஒரு அரக்கி, தங்கள் குலத்தின் தோல்விகளுக்கு ஒரு முடிவுகண்டு பழிதீர்த்துக் கொள்ள, காஷ்யப மகாமுனிவரை ஏமாற்றி திருமணம் செய்து கொண்டாள். அவர் மூலம் சூரபத்மன், சிங்கமுகன், தாரகாசுரன் ஆகிய மூன்று புதல்வர்களை பெற்றெடுத்தாள். அவர்கள் கடுமையான தவம் செய்து சிவபெருமானின் அருளையும், பலப்பல வரங்களையும், பிறர் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்திருக்கும் சக்தியையும் அவரிடமிருந்து பெற்றிடப் பணித்தாள். அவர்களும் அவ்வாறே செய்தனர். பின்னர், அம்மூவரும் தேவர்களுக்கு பலவித இன்னல்களைத் தந்தனர். தேவர்களுடன் போர் தொடுத்து தேவலோகத்தைக் கைப்பற்றினர். அவர்களை மான பங்கப்படுத்தியும், கீழ்மைப்படுத்தியும், பணியாளர்களாக ஆக்கியும் அவமானப் படுத்தினர். இவர்களின் அசுரச் செயல்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக மேன்மேலும் வளர்ந்து வந்தது. இவற்றையெல்லாம் இனிமேலும் தாங்கிக்கொள்வதற்கு சக்தியற்ற நிலைமையை அடைந்த அனைத்து தேவர்களும் இந்திரனின் தலைமையில், சதுர்முக பிரும்மாஜி மற்றும் ஸ்ரீவிஷ்ணு பகவான் ஆகியோரை முன்னிறுத்தி, கயிலை மலைக்குச் சென்று கயிலைநாதரை தரிசித்தனர். தங்களை உடனடியாகக் காத்தருளுமாறுகூறி கதறி அழுதவாறே சிவபெருமானை சரணடைந்தனர். அவர்களின் பால் இரக்கம் கொண்ட சிவனார் அவர்களைக் காத்தருள்வதாகக் கூறி அவர்களுக்கு நம்பிக்கையளித்தார். அவ்வாறு உறுதியளித்தவர், மீண்டும் தியானநிஷ்டையில் (Meditation) ஆழ்ந்தார். அவரை அந்த சமாதி நிலையிலிருந்து விழித்தெழச் செய்ய, தேவர்கள் காமதேவனை

(மன்மதனை-Cupid) ஈடுபடுத்தினர். சிவனாரிடம் அவனுக்கிருந்த பயத்தினால், காமதேவன் அச்செயலைச் செய்யத் தயங்கினான். தேவர்களின் வற்புறுத்தலினால், அவன் தன் வில்லில் மலரம்புகளைத் தொடுத்து எய்தி சிவனாரின் தியானத்திற்கு இடையூறு செய்தான். இவ்வாறு தனது தியானத்திற்கு இடையூறு ஏற்பட்டதால், சிவனார் தனது மூன்றாவது கண்ணிலிருந்து அக்னிப் பிழம்பை வெளிப்படுத்தினார். அந்த அக்னி காமனை எரித்து சாம்பலாக்கியது. இதையறிந்த தேவர்கள் சிவனாரின் காலடியில் விழுந்து வணங்கி, சற்றும் தாமதிக்காமல் தம்மைக் காத்தருளுமாறு வேண்டினர்.

அசுரர்கள் சிவனாரிடமிருந்தே வரங்களைப் பெற்றதனால், சிவன் தன் உருவில் அவர்களை வதைக்க இயலாது. எனவே. ஈசானம் முதலிய ஐந்து திருமுகங்களோடு அதோமுகமொன்றும் கொண்டு ஆறுமுகங்களை உடையவரானார். அந்த ஆறுமுகங்களிலுள்ள நெற்றிக்கண்களிலிருந்து (Third Eye), ஆறு அக்னிச் சுடர்கள் (ஜோதிகள்) வெளிப்பட்டு அகண்டாகாசம் முழுவதையும் நிறைத்தது. எதிர்பாராமல் நிகழ்ந்த இச்சம்பவத்தினால், தேவர்கள் மிகவும் பயந்து நடுங்கினர். 'அச்சப்படாதீர்கள் காப்பாற்றுகின்றேன்' என்று அபயமளித்து, அக்னிச் சுடர்களை தன் கரங்களில் இருத்தினார். பின்னர், அவர் அக்னிச் சுடர்களை, வாயு மற்றும் அக்னி தேவர்களிடம் கொடுத்து, கங்கையிடம் அளிக்கக் கட்டளையிட்டார். பெரும்சக்தி வாய்ந்த அக்னிச் சுடர்களை சுமந்து செல்ல தயங்கிய இத்தேவர்களுக்கு, விசேஷ சக்தியை தந்தருளினார். சிவன் கொடுத்த விசேஷ சக்தியினால், வாயுதேவர் மிகவும் கஷ்டப்பட்டு சிறிது தூரம் சுமந்து சென்றார். தன்னால் இயலாதென்ற நிலையில், அக்னிதேவரிடம் அக்னிச் சுடர்களை கொடுக்க, அவர் விரைந்து சென்று கங்கையில் இட்டார். கங்காதேவியாலும் அக்னிச் சுடர்களின் வெப்பத்தை தாங்க இயலாததால், அவள் அவற்றை சர-புதர்களால் சூழப்பட்ட சரவணப் பொய்கை என்ற தடாகத்தில் சேர்த்தாள். என்ன ஆச்சர்யம்! அக்னிச் சுடர்களைத் தாங்கிய சரவணப் பொய்கைக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. ஆனால், ஒரு அதிசயம் நிகழ்ந்தது. சரவணப் பொய்கையைச் சென்றடைந்த அந்த ஆறு அக்னிச் சுடர்கள் ஆறு தாமரைப் பூக்களின் மேல் தெய்வீக ஒளி பொருந்திய ஆறு அழகிய குழந்தைகளாகத் தோன்றி காட்சி அளித்தன. பகவான் ஸ்ரீவிஷ்ணு, பிரும்மாஜி, மற்றும் அனைத்து தேவர்களும்/ தேவதைகளும் ஆங்கு வருகை தந்து சுப்ரமணிய சுவாமியின் அவதாரம் நிகழ்வதைக் கண்டு பெருமகிழ்ச்சியில் திளைத்தனர். தேவர்கள், ஆறு கார்த்திகைப் பெண்களை அழைத்து அக்குழந்தைகளுக்கு பாலூட்டி வளர்க்கப் பணித்தனர். அவ்வாறே அவர்களும் செய்தனர். அச்சமயத்தில் அங்கு

சிவனாரும் - பார்வதியும் தோன்றினர்; அப்பொழுது பார்வதி தேவி ஆறு குழந்தைகளையும் ஒருங்கே தன் கரங்களில் எடுத்தாள். அந்த ஆறு குழந்தைகளும் ஓர் உடல், ஆறு முகங்கள், மற்றும் பன்னிரு கரங்கள் உடையதாக உருப்பெற்றன.

ஆறுமுகங்கள்கொண்ட குழந்தை **ஆறுமுகப் பெருமான் (ஷண்முகர்)** என்று அழைக்கப்பட்டார் ---- தன்னைத் தஞ்சம் அடைந்த அனைவருக்கும் அருளை அள்ளி வழங்குவதே இந்த அவதாரத்தின் முக்கிய நோக்கம்.

அவரே **கந்தன் (ஸ்கந்தன்).** "ஸ்கந்தன்" என்றால் "வெளிப்பட்டவன்" ---- அக்னிச் சுடர் வடிவாக சிவனாரின் நெற்றிக் கண்களிலிருந்து 'வெளிப்பட்டு' அவதாரமாகத் தோன்றியதால் அவருக்குப் பெயர் ஸ்கந்தன் (கந்தன்). ஆறு குழந்தைகளும் ஒருங்கிணைக்கப்பட்டு ஐக்கியப்பட்டதால் அவரே கந்தன் என்றும் அழைக்கப்படுகிறார்.

இருபத்தேழு விண்மீன்களில் மூன்றாவது விண்மீன் குழுமமான கார்த்திகை தேவதைகளால் வளர்க்கப்பட்டதால், அவரே **'கார்த்திகேயன்'** என்றும் அழைக்கப்படுகிறார்.

சரப்புதர்களின் நடுவில் அமைந்த சரவணப் பொய்கையில் அவதரித்ததால் அவர் **'சரவணபவன்'** என்றும் அழைக்கப்படுகிறார்.

அவர் என்றும் இளமையாகவும், மிகுந்த அழகுடனும் இருப்பதால் தமிழ் மொழி பேசப்படும் பிரதேசங்கள் மற்றும் தமிழிலக்கியங்களில் எல்லாம் அவர் **"முருகன்"** என்றும் அழைக்கப்படுகிறார்.

எல்லையற்றதும் / பூர்ணமானதுமான தூய உணர்வாக (Absolute-Brahman) பரபிரம்மமாக இருப்பதால் அவரே **"சுப்ரமணியன்"** என்றும் அழைக்கப்படுகிறார்.

மேலும் பக்தர்களின் இதயக் குகைகளில் வசிப்பதனால், அவர் **"குகன்"** என்றும் அழைக்கப்படுகிறார்.

இப்பெயர்களைத் தவிர இவ்விறைவனுக்கு மக்களால் சூட்டப்பட்டுள்ள பெயர்கள் அநேகம். சிவனாரின் மூன்றாவது (நெற்றிக்) கண்ணாகிய ஞானக்கண்ணிலிருந்து அவதரித்ததால், கந்தன் ஒப்பில்லா பிரம்ம ஞானத்தைக் குறிப்பதாகவும், தூய உணர்வான (சுத்த சைதன்யமான) சிவனாரின் அவதாரமாகவும் கருதப்படுகிறார். இவ்விஷயங்களை நன்கு நினைவில் இருத்துதல், கந்தர் அனுபூதியை நன்கு படித்துணரப் பயன்படும்.

கந்த புராணத்தை தமிழில் இயற்ற ஷண்முகக் கடவுளால் முதலடி எடுத்துக் கொடுக்கப்பட்டு, பணிக்கப்பட்ட கச்சியப்ப சிவாச்சாரியார் (கி.மு. 7ம் நூற்றாண்டு), கந்தப்பெருமானின் அவதார

மகிமையை வெகு துல்லியமாகவும், மிக அழகாகவும் இரண்டு செய்யுள்களில் பின்வருமாறு விளக்கிக்கூறுகிறார்:

"அருவமாயும் உருவமாயும் அநாதியாயும் ஒன்றாயும் பலவாயும் பரப்பிரமமாயும் விளங்கும் ஜோதிப்பிழம்பே ஒரு திருமேனியாக வடிவுகொள்ளக் கருணை வெள்ளம் பொழியாநின்ற ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களுங் கொண்டு ஒப்பற்ற முருகக் கடவுள் உலகம் உய்யும்வண்ணம் திருவவதாரம் செய்தருளினார்."

"எக்காலத்தும் தூய்மையாயும், எங்கும் நிறைந்துள்ளவருமான அந்த முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான், சொற்களினாலும், மனதினாலும், மற்றும் ஏன் வேதங்களினாலும்கூட அறிவதற்கு மிக அரிதானவர். அவரே கருணையுடன் ஆறு திருமுகங்களை உடையவராகத் தோன்றியருளிச் சரவணப் பொய்கையில் செந்தாமரை மலர்மீது இனிது வீற்றிருந்தருளினார்."

அந்த ஆறுமுகங்களின் பெருமை அளவற்றது, விளக்கமுடியாதது. அவை தமிழ்மறை நூல்களில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது. முன் கூறியதுபோல, ஆறுமுகனாகத் தோன்றிய இறைவனின் ஆறுமுகங்கள் விழிப்புணர்வு, மற்றும் ஐம்பூதங்களின் சேர்க்கையைக் குறிக்கின்றது. மேலும் இந்த ஆறு முகங்களும் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, மேல், கீழ் ஆகிய ஆறு திசைகளையும் நோக்குகின்றன; அவற்றை அறிவதாக விளங்குகின்றன. அவர் எங்கும் வியாபித்து அனைத்தையும் அறிபவராக உள்ளார், ஆறுமுகங்கள் இறைவனின் ஆறுகுணங்களான ஞானம், வைராக்கியம், புகழ், செல்வம், செழிப்பு, மற்றும் சக்தியை வெளிப்படுத்துபவையாக அமைந்துள்ளன. மேலும், அந்த ஆறு முகங்களே நம் சூட்சும சரீரத்தில் ஆறு யோக சக்கரங்களை ----- மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தம் மற்றும் ஆக்ஞா சக்கரங்களைக் குறிக்கின்றன. பரமாத்ம தத்துவரூபமான ஆறுமுகப் பெருமானின் ஆறு முகங்களில் ஒவ்வொரு முகம் ஆறு யோக சக்கரங்களின் அதிஷ்டான தேவதைகளான கணேசர், பிரம்மாஜி, விஷ்ணு, ருத்ரர், மகேஷ்வரர் மற்றும் சதாசிவர் ஆகியவர்களின் முகத்தின் ரூபத்தைக் கொண்டுள்ளது.

சிறு வயதில் அநேக பால-லீலைகளைச் செய்தபின், கந்தப் பெருமான் அவருடைய அவதாரத்தின் நோக்கத்தைப் பூர்த்தி செய்ய, தேவர்களின் சேனாதிபதியாக பொறுப்பேற்றார். பின்பு, அசுரர்களுடன் போர் புரிந்து, *ஞானசக்தியாகிய* தன்னுடைய வேலினால் அவர்களை

வதம் செய்தார். தேவர்கள் அனைவரையும் அசுரர்களின் சிறையிலிருந்து மீட்டு, தேவலோகத்தில் மீண்டும் வாழ வழி செய்தார். இந்திரன் நன்றிக்கடனை வெளிப்படுத்தும் பொருட்டு, தன் மகள் தெய்வயானையை கந்தப்பெருமானுக்குத் திருமணம் செய்து கொடுத்தார். தெய்வயானை *கிரியா சக்தியை* குறிக்கிறாள். பின்னர், *இச்சா சக்தி*யான வள்ளி தேவியை, கந்தப் பெருமான் மணம் புரிந்தார். இவ்வாறாக, கந்தப்பெருமான் சக்திகளின் அதிபதி; அவரிடம் சரணடைபவர்களுக்கு அவர் வரங்களை அருள்கிறார்.

ஸ்ரீகிருஷ்ணர் யசோதையின் மகன்; கம்சனை அழித்தவர்; அல்லது பார்த்தனுக்கு சாரதி மட்டுமல்லாமல் அவர் பரப்ரம்ம பரமாத்மாவே என்று ஸ்ரீமத் பகவத் கீதையிலிருந்து அறிகிறோம். அதைப்போலவே கந்தப் பெருமான் தேவசேனாதிபதியோ அல்லது அசுரர்களை அழித்தவரோ மட்டுமல்லாமல், பேருணர்வு தத்துவமான பரமாத்மாவே குறிப்பிட்டதொரு நோக்கத்தை செயல்படுத்-வதற்காகவே வந்த அவதாரம் என்று நாம் அறிய வேண்டும். உண்மையில், கந்தப் பெருமானின் அவதாரமென்பது இப்பிரபஞ்-சத்திலும் தனியொருவனின் வாழ்க்கையிலும் அன்றாடம் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது. சிக்கல்களைக் களைய இறைவனின் தலையீடு எப்பொழுதெல்லாம், எங்கெல்லாம் தேவையோ, அங்கெல்லாம், அப்பொழுதெல்லாம் அச்சிக்கல்களை சரி செய்வதற்-கேற்ற முறையில் அவர் தன்னை தோற்றுவித்துக் கொள்கிறார். மகாபலி சக்கரவர்த்தியை வெற்றி கொள்ள, அதிசக்தி கொண்ட பரசுராமராகவோ, பகவான் ஸ்ரீராமராகவோ, அல்லது ஸ்ரீகிருஷ்ணராகவோ அவதரிக்காமல், சிறுவன் வாமனனாக வந்ததை உதாரணமாகச் சொல்லலாம். பரமாத்மாவான அவர் எல்லையில்லா சக்தி கொண்டிருப்பினும், எதிர்ப்படும் இடரை எதிர்கொள்ள எத்தனை சக்தி போதுமோ அதற்கேற்றவாறே தன்னை தோற்றுவித்துக் கொள்கிறார். தேவைக்கு அதிகமான சக்தியுடன் தன்னை அவர் ஒருபொழுதும் வெளிப்படுத்திக் கொள்வது கிடையாது; சக்தியை பரமசிக்கனமாகவே எப்பொழுதும் கையாள்கிறார். ஆகையால், பக்தர்கள் அவரே நேரில் வந்து அருள விரும்பினாலும், அது தேவையற்றதாயின், தன்னை நேரில் வெளிப்படுத்திக் கொள்வதில்லை; உடல் பலம், புத்தி கூர்மை, பணம்-பொருள்கள் என்று அவர்களின் அப்போதைய தேவைக்கேற்ப மறைமுகமாக வெளிப்படுத்திக் கொள்கிறார். அவர் அந்தந்த சமய சந்தர்ப்பங்களில் ஜீவர்கள் அடைய விரும்பும் இலக்குகள் நிறைவேறத் தேவையான சக்தியுடன் மட்டுமே வெவ்வேறு உருவங்கள் மற்றும் பெயர்களில் தன்னை உலகில் வெளிப்படுத்திக் கொள்கிறார் ---- ஆனால் நமக்கு

அவர் எவ்வாறு புலப்பட்டாலும் அல்லது நாம் அவரை எப்படி புரிந்து கொண்டாலும், அவர் தன்னில் எவ்வித மாற்றமும் இல்லாத பரம்பொருளாகவே எப்போதுமிருக்கிறார்.

==========

செய்யுள் – 1

==========

ஆடும்பரி வேல் அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனியானை சகோதரனே.

பொழிப்புரை: "ஓ இறைவா! தேவர்களை தேடிச் சென்று போருக்கிழுத்துத் துன்புறுத்தி வந்த கஜமுகன் என்ற அசுரனைப் போரில் வென்ற ஒப்பற்ற ஸ்ரீ கணேச பகவானின் இளைய சகோதரனே! 'ஆடும்மயில், வேல், மற்றும் அழகியசேவல்' என்று பாடும் பணியையே எனது நிரந்தரமான புனிதப் பணியாகத்-தந்தருள்வாயாக."

விளக்கவுரை

"ஓம்" எனும் புனித மந்திரத்துடன் மந்திர-சாஸ்திரமான கந்தர் அனுபூதியின் இம்முதற்செய்யுள் தொடங்குகிறது; இச்செய்யுளின் முதற்சொல்லான 'ஆடும்' என்ற சொல்லில் 'ஓம்' என்கிற ஓங்கார மந்திரத்தின் அட்சரங்களான 'அ', 'உ', 'ம' என்ற மூன்று எழுத்துக்களும் அடங்கியுள்ளன. இப்படியாக, மந்திரங்களிலேயே மிகவும் உயர்ந்ததும் மங்கலத்தைத் தருவதுமான "ஓம்" என்னும் பிரணவத்துடன் இந்நூல் தொடங்குவதே இந்நூலின் சூட்சுமம். இது ஒரு மந்திர-சாஸ்திரம் என்பதையும் குறிக்கிறது. "ஓம் வேலும் மயிலும் துணை" என்ற மகத்தான தமிழ்மறை மந்திரம் "ஆடும்பரி, வேல், அணிசேவல்" என்ற இச்செய்யுளின் முதல் வரியில் மறைந்து இருக்கிறது. அது, 'வேலும் மயிலும் என்னுடைய ஒரே பாதுகாப்பு/ உறுதுணை" என்ற பொருள்படும். இந்த மந்திரத்தை, (அல்லது வேறு எந்த மந்திரம் ஆனாலும் சரி) இடைவிடாமல் எப்பொழுதும் ஜபம் (Chanting or Repeating) செய்துகொண்டிருக்க அருள்புரியுமாறு வேண்டப்படுகிறது.

ஆடியவாறு நிற்கும் மயில் 'ஓம்'-ஐ குறிக்கும். வேல் என்றால் 'பேரறிவு' (அ) ஆத்மஞானம் (Supreme Knowledge). விடியற்காலையில், சேவல் கூவி சூரியனின் வருகையை உலகிற்கு அறிவிக்கும்; கந்தப் பெருமானின் கொடியில் இருக்கும் தெய்வீகச் சேவல், ஞான-சூரியனின் உதயத்தை (மெய்ஞானத்தை) சுட்டிக்காட்டும். கழுத்தானது

நிமிர்ந்து நீண்டு இருக்கும் நிலையில் கூவிக்கொண்டிருக்கும் சேவல் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்குமாதலால், 'அணி (அழகான) சேவல்' என்கிறார் அருணகிரியார். 'ஆடும்' என்று மயிலுக்கும், 'அணி' என்று சேவலுக்கும் அடைமொழிகள் தரப்பட்டுள்ளன; ஆனால், வேலுக்கு எவ்வித அடைமொழியும் தரவில்லை! ஏனெனில், வேல் என்பதே 'மெய்ஞானம்', மற்றும், அதுவே எவ்வித அடைமொழியும் தேவைப்படாத பரம்பொருள் தத்துவமான இறைவன்.

வேல் என்ற சொல்லுடன் இன்னொரு சொல் சேர்த்து "கூர்-வேல்", "வெற்றி-வேல்", "கதிர்-வேல்" என்று பின்னர் சில செய்யுள்களில் வருகிறதென்றாலும், அவைகள் அடைமொழிகளாக பயன்படுத்தப்படாமல், எந்த பண்பு அந்தக் கட்டத்திற்கு தேவையோ, அப்பண்பே வேலுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது.

'*கஜ* என்றால் 'யானை'; '*முக* என்றால் முகம். *கஜமுகன்* என்பவன் யானைத் தலை கொண்ட ஒரு அசுரன். அவன், எந்த அஸ்த்திரங்களாலும் (ஒரு தேவ மந்திரத்துடன் பிரயோகிக்கப்படும் ஆயுதம்), சஸ்த்திரங்களாலும் (அதனதன் சக்தி மட்டும் உடைய ஆயுதம்), தன்னை அழிக்க முடியாத திவ்ய வரம் ஒன்றை சிவபெருமானிடமிருந்து பெற்றிருந்தான். அதனால், தேவலோகம் சென்று தேவர்களை இம்சிப்பதை, தன் வேலையாகக் கொண்டிருந்தான். தேவர்கள் சிவனாரிடம் சென்று, தங்களின் வேதனையை விவரித்துக் கூறி, அந்த அசுரனைக் கொன்று தங்களைக் காத்திட வேண்டினர். சிவன் கட்டளையிட, (அந்த அசுரனைப் போன்றே) யானை முகம் கொண்ட கணேச பகவான், கஜமுகாசுரனுடன் போரிட்டு, தன் தந்தத்தினாலேயே அவனைக் கொன்றார்; இச்செயல் வேறு எவராலும் செய்ய இயலாத செயற்கரிய செயல். ஆகவே, அவர் "ஈடிணையற்ற கணேசா" எனப் போற்றப்படுகிறார்.

யாருக்காக இந்நூல் இயற்றப்பட்டது?: கந்தர் அனுபூதி ஒரு இறை-அனுபவ ஆய்வு நூல்; தத்துவங்களை வெறுமனே அலசி ஆராய்வதால் எவ்வித பயனும் அடையப்படுவதில்லை என்பதால், தத்துவங்கள் சுட்டும் அனுபவத்தை அடைய விரும்பும் ஒரு சாதகன் கைக்கொள்ள வேண்டிய சாதனைகள், மற்றும் அதனை செயல்படுத்தும் வழிமுறைகளை மையப்படுத்தி இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. அதனால், இந்நூலின் முதல் செய்யுளே சாதகனின் ஆன்மீக வாழ்க்கையை சீரமைப்பதற்காக, இடைவிடாது இறைவனின் நாமத்தை ஜபம் (Japa) செய்வதையும், மற்றும் அவரின் புகழைப் போற்றிப் பாடுவதையும் (Naama-Smaranam) முக்கிய சாதனைகளாக அறிமுகப்படுத்துகிறது. 'ஓம் வேலும் மயிலும் துணை'

என்ற மந்திரத்தை உள்ளடக்கி 'ஆடும் பரி வேல் அணி சேவல்' என இச்செய்யுள் தொடங்குவதையும், மேலும், அந்த உயரிய மந்திரம், இறைவனின் புகழ் மற்றும் இறை-நாமாவை எப்பொழுதும் பாடிக்கொண்டிருப்பதையே தனது ஒரே பணியாக்கி அருளிட 'பாடும் பணியே பணியாய் அருள்வாய்' என்று இந்த சாதகன் வேண்டுவதையும் பார்த்தோம். இவற்றிலிருந்து, பல்வேறு சாதனைகள் புரிவதன் மூலம் இறைவனைத் தேடி, முக்தியைப் பெறவதையே நோக்கமாகக்கொண்டு, அதற்கென்றுத் தம்மை அர்ப்பணித்துக்கொண்ட ஆன்மீக சாதகர்களுக்கு முக்கியமாக உபயோகப்படுவதற்காக இந்த ஆய்வுநூல் இயற்றப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது.

இறைவனைத் தேடி அடைந்துவிட வேண்டுமென்ற உயரிய விருப்பம் ஒருவனின் வாழ்வில் எப்பொழுது ஏற்படுகிறது? இது மனித அறிவிற்கு எளிதில் விளங்காத புதிர்! ஒரு பரம ரகசியம்! இறைவனின் அருளால் தான் ஒருவன் அவன் பாதங்களை வணங்க இயலும் என்ற பொருளில் *'அவன் அருளால் அவன் தாள் வணங்கி'* என்று மாணிக்க வாசகப் பெருமான் கூறியதே இக்கேள்விக்கான பதில். 'ஒருவனுக்கு, இறைவனுடன் இரண்டறக் கலக்கவேண்டும் என்ற எண்ணம் ஈஸ்வரனுடைய அனுக்கிரகத்தால் மட்டுமே தோன்றுகிறது' என்கின்றது *'அவதூத கீதை' ("ஈஸ்வர அனுக்ரஹாத் ஏவ பும்சாம் அத்வைத வாசனா")*.

எவனொருவன் தன் வாழ்க்கையில் இன்பங்கள், துன்பங்கள், சீர்கேடுகள் ஆகிய அனுபவங்களை வெகுவாக கண்டிருக்கிறானோ; இந்த உலக வாழ்க்கையை இதுவரை வாழ்ந்தது போதும், இதில் சாரம் ஒன்றுமில்லை என்று எப்பொழுது நினைக்கிறனோ; சொத்து சுகங்களை பெற நீண்டகாலம் பெருமுயற்சி செய்த பின், அம்முயற்சிகள் முடிவில் துக்கத்தையே தருகின்றன என்று எப்பொழுது உணர்ந்து விரக்தியடைகிறானோ; அவனே இங்கு (இவ்வுலகில்) அடைவதற்கென்ற தகுதியுடைய குறிக்கோள் ஒன்று இல்லவே இல்லை என்று இறுதியில் உணர்கிறான். இவ்வுலகில் அனைத்துமே அநித்தியமானவை, அழிபவை. ஆனால், அவனுக்கு வேண்டியது, அவன் தேடுவது நீடித்து நிலைத்து இருக்கும், நிரந்தர ஆனந்தத்தைத் தரும் ஒன்று. அது எது என்றோ, எங்கு இருக்கிறது என்றோ, அதை எப்படி அடைவதென்றோ தெரியாமல் அவன் தவிக்கிறான். ஆனால், அதை அடைய அவன் முழுமனதுடன் தேடுகிறான். அந்த ஒன்றை எப்படியாவது விரைவில் அடைந்திட வேண்டுமென, அவன் மனம் மீண்டும் மீண்டும் நினைத்து, ஏங்கித் தவிக்கிறது. அத்தகைய தருணத்தில்தான், இறைவனின் அருட்-கடாட்சம் அவன் மேல் விழுந்து, இறைவனால் மீட்கப்படுகிறான்.

அப்பொழுது மிகவும் மாயமாக அவன் மனம் இறைவன்பால் ஈர்க்கப்படுகிறது. எவ்விதத்தில் அது நடைபெறும் என்று சுட்டிக்காட்ட இயலாது; ஏனெனில், அது நடைபெறுவதற்கான காரணம் பின்வருவனவற்றில் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம்:

- வாழ்க்கையில் முக்கியமான தருணம், நெருக்கடி நிலை, பேரிடர் போன்ற ஏதோ ஒன்று நடக்கும்போது, அவன் கைக்கு ஒரு ஆன்மீக நூல் அகஸ்மாத்தாக (திடீரென்று) வந்து சேருவது.
- ஒரு *ஸத்-சங்கம்* அல்லது ஆன்மீக சொற்பொழிவு நிகழும் இடத்திற்கு (தனக்கு விருப்பம் இருக்கிறதோ இல்லையோ) தற்செயலாகப் போக நேரிட்டு அதில் பங்கேற்பது,
- ஒரு வயோதிகரோ, குழந்தையோ சொன்ன ஓரிரு வார்த்தைகளைக் கேட்பது,
- அல்லது வேறு ஏதாவது ஒரு நிகழ்ச்சி நடப்பது,

இவைகளில் ஏதோ ஒரு காரணத்தால், 'நிரந்தர ஆனந்தம் என்பது இறைவனிடம் மட்டுமே இருக்கிறது, அதையடைய வேண்டுமானால் இறைவனை நாடி இருப்பதைத் தவிர வேறொரு வழியும் இல்லை' என்று அவன் உணர்கிறான். அந்நிலையில், அவனது மனம் மர்மமாக திடீரென்று இறைவனை நொக்கித் திரும்பும். அப்படிப்பட்ட இறை நாட்டம் கொண்டவர்களுக்குத்தான், கந்தர் அனுபூதி எனப்படுகிற இந்நூல் உரித்தாகுகிறதே தவிர, இவ்வுலகை இன்னும் இன்பமளிக்கும் ஒரு சுரபியாகக் கருதி வாழ்பவர்களுக்கல்ல.

[**முக்கியக் குறிப்பு**: '*பாடும் பணியே பணியாய் அருள்வாய்*' என்ற இப்பிரார்த்தனையை இச்செய்யுளில் அருணகிரியார் செய்வது தனக்காகவா? இல்லை, இல்லவே இல்லை என்று அடித்துக் கூறலாம். ஏனென்றால், தான் செய்த தவறான செயல்களுக்காக வருந்தி, தன்னையே மாய்த்துக் கொள்ள கோவில் கோபுரத்தின் மீதேறி கீழே குதித்து விழுந்த அருணகிரியை இறைவனே காப்பாற்றி, தன் புகழை விரிவாகப் பாடுமாறு முதல் அடியையும் எடுத்துக் கொடுத்து தடுத்தாட்கொண்டார். அதன்பின்னர், அருணகிரியார் தன் வாழ்க்கை முழுவதையுமே இறைவனைப் பாடிப் போற்றி துதிப்பதிலேயே கழித்து வந்தார். இப்படியாக, அவர் இயற்றிய நூல்கள் பல, முக்கியமாக பல்லாயிரக்கணக்கில் திருப்புகழ் பாடக்கள். இவையனைத்தையும் இயற்றியபோதே, அவர் இறை அனுபவம் பெற்றிருந்தார் என்பதும், தெய்வீக அன்பு தந்த ஆனந்த பரவசத்தில் ஆழ்ந்திருந்தார் என்பதும் அவரது படைப்புகளிலிருந்தே நமக்கு நன்கு விளங்குகின்றது. ஜீவன்முக்தி நிலை அடைந்து ஞான-ஆனந்தத்தில் திளையும் துறவியாக விளங்கினார். இறைவன் அவர் கனவில் தோன்றி, அவருடைய புகழும் அருளும் நிறைந்த முக்தியைத்

தரவல்ல கந்தர் அனுபூதியைப் பாடுமாறு அருளாணையிட்டபடி, அருணகிரியார் அதை இயற்றினார். எனவே, அருணகிரியார் தனக்காகத்தான் இந்த பிரார்த்தனையை இந்நூலின் முதல் செய்யுளில் வைத்தார் என்று கருதுவது சரியாகாது. மற்றவர்கள் அதைப்பாடி, அதன் அறிவுரைகளைப் பின்பற்றி முக்தி அடைய உதவியாய் இருப்பதற்காக, அவர் தன்னை முன்னிலைப்படுத்திப் பாடியுள்ளார் என்பதுதான் சரி. ஏதோவொரு தெய்வீக சக்தியால் திடீரென்று ஆன்மீகப் பாதையில் செலுத்தப்பட்டு, இறைவனை அடைந்திடும் நோக்கோடு வாழ்க்கையை வாழத் துவங்கியிருக்கும் ஒரு சாதகன் செய்யும் பிரார்த்தனையாகவே அவரால் இது அமைக்கப்பட்டு உள்ளதென்று சொல்வது சாலப் பொருந்தும். எனவேதான், செய்யுள்களை (இம்முதல் செய்யுள் உட்பட) (தன்னை முன்னிருத்தி) ஒருமை-தன்மையில் (First Person Singular-ல்) இயற்றியுள்ளார். அதனால், இச்செய்யுள்களை எவர் பாடினாலும், அவை அவர் தனக்காகச் செய்யப்படும் பிரார்த்தனையாகிவிடுகிறது, அதற்கேற்ப அவரின் உணர்வுகளும் மாறி, அதற்குரிய நற்பலன்களும் கிடைக்கும். எனவே, அருணகிரியார் தன்னை முன்னிருத்திப் பாடியதிலிருந்து, அச்செயுள்களில் செய்யப்படும் பிரார்த்தனைகள் அவருக்கு என்றும் பிரச்சனைகள், அனுபவங்கள் அவருடையன என்றும் தவறாக நினைக்கக் கூடாது. ***திரும்பக்கூறின், இந்நூலின் எந்த ஒரு செய்யுளில் செய்யப்படும் பிரார்த்தனையோ, கூறப்பட்டுள்ள பிரச்சனையோ, அனுபவங்களோ அருணகிரியாரைச் சார்ந்தவை அல்ல, அதாவது அவை அவருடைய சொந்த வாழ்க்கையையோ அனுபவங்களையோ குறிப்பனவல்ல; அவைகள் ஆன்மீக இலக்கை அடைய முயலும் ஒரு சாதகனின் நிலைமையையும் அனுபவங்களையும் மட்டுமே குறிக்கின்றன. எனவேதான், கந்தர் அனுபூதியின் இவ்விளக்கவுரைக்கு "உட்பொருள் உணர்த்தி பக்தி-ஞான அருள்வழி காட்டும் கந்தர் அனுபூதி" என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. (The title of the Original, in English, is "The Esoteric KANDAR ANUBHUTI"). ஆகவே, இவ்விளக்கவுரையைப் படிக்கும்போது, முதலிலிருந்து கடைசிவரை, இதை நினைவில் இருத்திக் கொள்ளுவோமாக.***

==========

செய்யுள் – 2

==========

உல்லாச நிராகுல யோக விதச்
சல்லாப விநோதனும் நீ அலையோ
எல்லாமற என்னை இழந்த நலம்
சொல்லாய் முருகா சுரபூ பதியே.

பொழிப்புரை: "ஓ தேவலோகத்திற்குத் தலைவனான முருகப் பெருமானே! பேரின்பமும், துன்பமற்ற நிலையும், யோகமும் ஆகியவைகளும், மற்றும் நல்லதையே சங்கல்பித்து (எண்ணி), நல்லதையே பேசி, லீலா வினோதங்களைச் செய்பவனும் நீயல்லவோ? நான் அனைத்துப் புறப்பற்றுகளிலிருந்தும் விடுபட்டு, நானெனும் அகந்தையிலிருந்தும் விடுபடும் அந்த அநுபூதி 'நலத்தை' நீ எனக்கு உபதேசித்து அருள்வாயாக".

விளக்கவுரை

"ஓ முருகப் பெருமானே, நீ ஆறுவிதமான பண்புகளை உடையவன்; பற்றுக்களிலிருந்தும், அகங்காரத்திலிருந்தும் விடுதலை தரும் உயர் 'நலம்' (அநுபூதி) பெறுவது பற்றி எனக்கு அறிவுறுத்துவாயாக." இப்பிரார்த்தனையில் அருணகிரியார் கடவுளின் ஆறு விசேஷ குணங்களை பட்டங்களாக்கி அவருக்கு அணிவித்து மகிழ்ச்சி அடைகிறார். அவையாவன:

(1) **"உல்லாசம்"** --- பேரின்பம். இறைவனே மகிழ்ச்சி. அவரே களிப்பு. அவரே ஸச்சிதானந்தம் (*ஸத்- சித்- ஆனந்தம்*), அதாவது, அவர் எங்கும் வியாபித்து எப்பொழுதும் இருக்கிறார் (*ஸத்*); சைதன்ய சொரூபமாக இருக்கிறார் (*சித்*); விழிப்புணர்வின் பேரானந்தமாக இருக்கிறார் (*ஆனந்தம்*). அவர் சர்வ-சக்தி, சர்வ-ஞானம் மற்றும் சர்வ-வியாபியாயும் இருப்பதால், அதன் தூய மெய்யுணர்வு காரணமாக அவர் (என்றும் எப்பொழுதும்) பேரின்ப சொரூபமாயிருக்கிறார். அப்பேரின்பம், சுய-ஆனந்த நிலை; அதுவே ஆனந்தம்; பிறபொருள்களிலிருந்து பெறப்படும் இன்பமல்ல. அப்பேரின்ப நிலை அவரைத் தவிர வேறெதிலிருந்தும் பெற இயலாத ஒன்று.

(2) **"நிராகுலன்"** --- துக்கங்கள் துன்பங்கள் அற்றவன். நாம் ஒவ்வொருவரும் சில சமயம் மகிழ்ச்சி அடைகிறோம், ஆனந்தக் களிப்படைகிறோம், ஆனால் அந்த மகிழ்ச்சி ஒரு கலப்படமற்ற (துக்கம் கலக்காத) மகிழ்ச்சியாக இருப்பதில்லை. நாம் ஏதாவது ஒன்றினால் மகிழ்வுற்றுக் கொண்டிருக்கும்போதே, வேறொரு எண்ணம் உள்ளிருந்து கொண்டு வேதனையைத் தருகிறது. மேலும், நமது மகிழ்ச்சியோ குறுகிய காலத்திற்கே இருந்து, வலி மற்றும் துக்கத்திற்கு வழி விட்டு மறைகிறது. ஆனால், இறைவன் அப்படியல்ல. அவரே பேரின்பம். அவருக்கு துக்கம், வலி, துன்பம், மகிழ்ச்சியற்ற நிலை என்பதெல்லாம் கிடையாது --- அவைகளால் அவர் ஒருபொழுதும் பாதிக்கப்படாதவர். இக்கருத்தை வலியுறுத்துவது இரண்டாவது பண்பான "நிராகுலன்" (துக்கமற்றவன்) என்பதாகும்.

(3) **"யோகம்" (யோகி)** --- அவரால் எதனால் உல்லாசமாகவும் (மகிழ்ச்சியாகவும்) நிராகுலனாகவும் (துக்கத்திலிருந்து விடுபட்டவ-ராகவும்) இருக்க முடிகிறது? அவர் யோகீஸ்வரனாகவும், எப்பொழுதும் யோகத்தில் (அ) சகஜ சமாதியிலிருக்கும் ஒரு மகாயோகியாக இருப்பதுவே அதற்குக் காரணம். மேலும், ஆன்மீகப் பாதையில் செல்லும் சாதகர்களுக்கு, அவர் யோகத்தை, அதாவது தன்னுடனான ஐக்கியத்தை, வழங்குகிறார்.

(4) **"இதம்"** (நலம்) --- இறைவன் பேரின்பமயமாகவும், துக்கமற்றவராகவும், யோகத்தின் ஈஸ்வரனாகவும் இருப்பதால் நமக்கு என்ன பயன்? அவர் இவைகளாக மட்டுமல்லாமல் "இதம்" செய்பவராகவும் இருக்கிறார்; அதாவது, அவர் நம் அனைவரின் "நலம்" அல்லது இதத்தை விரும்பி, நாம் நன்றாக வாழ வேண்டும் என்று சங்கல்பிப்பவராகவும் இருக்கிறார். இல்லையேல், யார் நலமாக, சுகமாம இருக்கமுடியும்?

(5) **"சல்லாபன்"** --- அவர் வெறும் நலம் விரும்பியாக மட்டுமில்லாமல், அன்பாகப் பேசுபவராகவும் இருக்கிறார். அவரே "சல்லாபன்" --- அதாவது நமக்கு குருவாக வந்து தேவையான உபதேசத்தையும், அறிவுறுத்தல்களையும் தந்தருள்கிறார். அறியாமையின் காரணமாக, நமக்கு எது நன்மையைத் தரும் என்று கூட நமக்குத் தெரியாது; அதனால், எது நமக்குத் துன்பத்தைத் தருமோ, அதை நல்லது என்று நினைத்து, அதை அளிக்குமாறு இறைவனிடம் பிரார்த்தனைகூடச் செய்கிறோம். ஆனால், அவரோ

நமக்கு எது நல்லதோ அதைத் தர சங்கல்பித்து, அதையே பேசி, அதையே தந்தருளுகிறார்.

(6) **"விநோதன்"** --- இறைவன் அதியற்புதங்களைப் புரியும் தலைவன்! தனது மாயையால், தனது லீலையாக (திருவிளை-யாடலாக), தன்னை இப்பெரும் பிரபஞ்சமாகத் தோற்றுவித்துக் கொள்கிறார்; அனைத்து ஜீவர்களும் தங்கள் தங்கள் கர்ம வினைகளை அனுபவித்து கழிப்பதற்கேற்றவாறு இப்புவனங்களைப் (சூழ்நிலை-களைப்) படைத்தருளுகிறார்; பின்னர், அவர்கள் மேல் கருணை கொண்டு அவரே தன் மாயையிலிருந்து அவர்களை விடுவித்து அருள்பாலிக்கிறார். அவரைத் தவிர இவ்வற்புதத்தைச் செய்ய வல்லவர் வேறொருவர் உளரோ! எனவே அரவர் **லீலா-விநோதன்** என்று அழைக்கப்படுகிறார்.

இறைவன் பேரின்பம், துக்கங்கள் அற்றவன், யோகத்தின் ஈஸ்வரன். இது இறைவனின் இயற்கையான இயல்பு, அதாவது, அவன் அவனாகவே இருக்கும் நிலை. ஆனால் அவர் இதம், சல்லாபன், விநோதனும் கூட. இவை அவர் நம்முடன் கொள்ளும் தொடர்பு. நம் நலம் விரும்பி, நலத்தை உபதேசித்து, நலம் நல்குபவர் அவர். அவரே இப்பிரஞ்சமாகத் தோன்றி, நம் குருவாக வந்து, நமக்கு உபதேசித்து, வழிகாட்டி, தன்னை நமக்கு வெளிப்படுத்திக் கொண்டு, முடிவில் தன்னுள்ளேயே நம்மை ஐக்கியப்படுத்திக் கொள்கிறார். இதையெல்லாம் அவர் எவ்வாறு செய்தருளுகிறார் என்பது ஆச்சரியமான விஷயம். இவையெல்லாம் அவர் "*லீலை*" அல்லது திருவிளையாடல். இவ்வாறாக, பேரின்பமானவரும், துக்கமில்லாதவரும், யோகத்தின் ஈஸ்வரனுமான இறைவன் நம் "நலம்" விரும்பி, அதை நமக்கு உபதேசித்தும், தந்தும் அருளுகிறார். இறை-அநுபூதியே அந்த "நலம்".

முருகப் பெருமானுக்கு உரித்தான கணக்கற்ற வழிபாட்டுத் தலங்களில், முக்கியமான ஆறு தலங்கள், 'ஆறுபடை வீடு' எனப் போற்றப்படுகின்றன:

1. திருப்பரங்குன்றம் --- மதுரையிலிருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ளது.
2. திருச்செந்தூர் (திருச்சீரலைவாய்) --- திருநெல்வேலிக்கு கிழக்கே கடற்கரையில் உள்ளது.
3 பழனி --- (திருவாவினங்குடி) திண்டுக்கல் நகருக்கு மேற்கே உள்ளது.
4. சுவாமிமலை --- (திருவேரகம்) கும்பகோணம் அருகில் உள்ளது.
5. திருத்தணி --- அரக்கோணம் அருகில் உள்ளது.

6. பழமுதிர்சோலை --- மதுரைக்கு அருகில் உள்ளது.

இறைவனின் ஆறு விசேஷ குணங்களான உல்லாச, நிராகுல, யோக, இத, சல்லாப, வினோத, ஆகியவை முறையே இந்த ஆறு படைவீடுகளையும் குறிப்பதாகக் கருதப்படுகிறது.

மேலும், இந்த ஆறு படைவீடுகளும் நம் ஒவ்வொருவரின் சூட்சும சரீரத்தில் உள்ள ஆறு அதிஷ்டான சக்கரங்களின் அறிகுறி என்றும் கருதப்படுகிறது - ஆதலால், சண்முகப் பெருமான் இந்த ஆறு சக்கரங்களுக்கும் ஈஸ்வரன் ஆகிறார்.

"ஓ கடவுளே, ஆறு குணங்களின் ஈஸ்வரனாகிய நீ எனக்கு அந்த 'நலம்' வழங்குவாயாக." --- என்று இந்தச் செய்யுளில் பிரார்த்தனை செய்யப்படுகிறது. அந்த 'நலம்' என்ன? அது இரு-வகையான பாக்கியங்களை அடைவது --- ஒன்று, அனைத்து புறப் பற்றுகளிலிருந்து விடுபடுவது **(எல்லாம் அற);** மற்றொன்று, நானெனும் அகந்தையை தானெனும் இறைவனில் இழப்பது **(என்னை இழந்த நலம்).** இதுவே நாம் ஒவ்வொருவரும் விரும்பியடைந்திட வேண்டிய நலமாகும்.

'எல்லாம் அற' --- அனைத்தும் அற்றுப்போதல் - என்பது அந்நலத்தால் அடையப்படும் முதல் பாக்கியம். இது எவ்வாறு இயலும்? இவ்வுலகில் கோடிக் கணக்கான பொருள்கள் உள்ளன. அவைகள் அனைத்தையும் இல்லாமல் செய்வது எப்படி? இது முடிகிற காரியம் அல்ல. - பொருள்களை இல்லாமல் செய்ய இயலாது. பின்னர், 'எல்லாம் அற' என்பதன் பொருள்தான் என்ன? அவைகளிலிருந்து நாம் பின்வாங்குவது என்பதேயாகும் (அதாவது அவை உண்மையல்ல என்று தெரிந்து, அவற்றின் மீதான பற்றுக்களைத் துறப்பது). பின்வாங்குவது எப்படி? வேதாந்த தத்துவத்தில், *நேதி-நேதி* என்ற கோட்பாட்டின்படி பொருள்களை ஆராய்வதன்மூலம் பொருட்களிலிருந்து பின்வாங்குவது சுலபம். இதன் முழு விவரம் அடுத்த செய்யுளில் கூறப்படுகிறது. அவ்வாறு பின்வாங்கி, மனது உட்பட அனைத்து இந்திரியங்களையும், முழுக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்த பின்னர், அச்சாதகனிடம் எஞ்சி நிற்பது அகந்தை எனப்படும் 'நான்' என்ற எண்ணம் மட்டும்தான். அந்த 'நான்' அல்லது 'என்னை' என்பதும் இழக்கப்படவேண்டும். எங்கே? எப்படி?

'என்னை இழந்த' --- அந்த நானெனும் (அகந்தை) எண்ணமும் இழக்கப்பட்ட நிலை 'என்னை இழந்த' நிலையாகும். ஆனால், அந்த 'நான்' என்பதை இழப்பது எப்படி? எங்கே? எங்கும் நிறைந்திருக்கும்

கடலின் நீரானது ஒரு இடத்தில் எழுச்சி அடைந்து அலை தோன்றுவது போலவே, பேருணர்வு தத்துவமானது தனியுடலொன்றில் ஜீவனாக வலியுறுத்திக் கொள்ளும்பொழுது, அந்த ஜீவனின் மனதில் நானெனும் அகந்தை தோன்றுகிறது. பின்னர், அவ்வலையின் எழுச்சி அடங்கியவுடன், அலையாக எழுந்த நீரானது, திரும்பவும் கடலிலேயே ஒன்றாகக் கலந்து நீராகின்றதல்லவா! அவ்வாறே நானெனும் தனி உணர்வு, 'எல்லாம் அற்று' அமிழும்போது, இறைப்பேருணர்வில் இரண்டறக் கலந்து, தன்னை இழக்கிறது. 'எல்லாம் அற - என்னை இழ' என்ற மந்திரம், சாதகனுக்கு புறப்பற்றிலிருந்து விடுபட்டு, இறைவனில் இரண்டறக் கலந்து, அநுபூதி எனும் நலமடையும் ஒரு முழுமையான சாதனை மார்க்கத்தைத் தருகிறது என்கிறார் மெய்ஞானி அருணகிரியார்.

'எல்லாம் அற என்னை இழந்த' என்ற நிலையானது அதேபோன்று தோற்றமளிக்கும் எதிர்மறை (Negative) நிலைகளான தூக்கம், மயக்கம், கோமா போன்ற நிலையாக இருக்கக் கூடும் என்று சிலர் தவறாகக் கருதலாம். அது அப்படிப்பட்ட எதிர்மறை நிலையல்ல; நேர்மறையான நிலை (Positive) என்று வற்புறுத்துவதற்காக அதை 'நலம்' என்கிறார் அருட்செல்வர். தூக்கம், மயக்கம், போன்ற நிலைகள் 'நலமான நிலைகளல்ல'. ஏனெனில் அந்நிலைகளிலிருந்து ஒருவன் வெளிவரும்போது, அவைகள் அவனை பரமாத்மாவுடன் ஐக்கியப்படுத்தாமல், முன்பிருந்த பரிதாப நிலைக்கே திரும்பத் தள்ளுகிறது. எனவே, 'என்னை இழந்த' என்ற நிலையென்பது, பரமாத்மாவில் தன்னை இழக்கும் (உயரிய) பரம நிலையே, தூங்குவது போன்ற எதிர்மறை நிலைகளல்ல என்பதை அருணகிரிநாதர் தெளிவுபடுத்தியுள்ளார்..

இறைவன் மட்டுமே உண்மையான "நலம்"; நாம் நலம் என்று கருதும் உலகப் பொருள்கள் அனைத்தும் நலமற்ற வெறும் சுமையே. எனவே, இறைவனில் தன்னை இழப்பது நலம், உலகினில் தன்னை இழப்பது நலமல்ல; ஏனெனில், உலகமே நாம் அனுபவிக்கும் அனைத்து துக்கங்களுக்கும் துயரங்களுக்கும் காரணம்; இறைவனோ பேரின்பத்தின் பிறப்பிடம், அவன் துக்கமற்றவன், யோகத்தின் ஈஸ்வரன். அதனால் இறைவனில் நானெனும் அகந்தையை இழப்பதுதான் உண்மை நலம்,

அந்த நலத்தை அடையும் ஒருவன் ஞானியாகிறான்; இச்செய்யுளில் குறிப்பிட்டுள்ளபடி இறைவனுக்கு இயற்கையிலமைந்த ஆறு குணங்களும் ஞானிக்கும் தானே வந்தமைகிறது. ஞானிகளான

அவர்கள் எப்பொழுதும் பேரின்பத்தில் திளைத்தும், துக்கம் மற்றும் துன்பங்களிலிருந்து விடுபட்டும், யோகத்தில் ஆழ்ந்தும், உலக நன்மையை மனதில் இருத்தி மக்களுக்கு எது நன்மை தருமோ, அதை உபதேசித்தும் வாழ்கிறார்கள். பகவானின் லீலா விநோதங்களில் பங்கு கொள்பவர்களாய், பகவான் அனைத்து ஜீவராசிகளுக்கும் உதவுவதைப்போல், அவர்களும் பலவழிகளில் மக்களுக்கு உதவி செய்கிறார்கள். இது எதனாலென்றால், ஞானிகள் இவ்வுலகில் இறைவனின் பிரதிநிதிகள்; அவர்களின் மூலம் இறைவன் செயலாற்றுகிறான்.

சாதனை அல்லது ஆன்மீகப் பயிற்சியின் ஆரம்பம் முதல் செய்யுளில் சொல்லப்பட்டது. அந்த ஆன்மீக சாதகன் நடைமுறை பயிற்சிகளான ஜபம் செய்தல், பரமனின் புகழைப் போற்றி கீர்த்தனையில் ஈடுபடுதல் போன்ற சாதனைகளை செய்யத் தொடங்கிவிட்டான். எனினும் அவ்வாறு பயிற்சி செய்வது எதற்காக, சாதனையின் நோக்கம் யாது, என அச்செய்யுளில் கூறப்படவில்லை; 'பரமனை அடைவதே' அதாவது 'மோட்சம் பெறுவதே' (இறை-அனுபூதியே) இச்சாதனையின் குறிக்கோள் என இந்த இரண்டாம் செய்யுளில் தெளிவாக்கப் படுகிறது. எனவே, அச்சாதகன் எல்லாம் வல்ல முருகனிடம், 'எல்லாம் அற' (புறப்பற்றுக்கள் அனைத்தையும் விடுத்து) - 'என்னை இழந்த' நிலை தரும் (அகங்காரத்தை இறைவனிடம் இழப்பதனால் கிடைக்கப்பெறும்) அந்நலத்தை தனக்குத் தந்தருள வேண்டுகிறான். அந்நலத்தையே *சிரேயஸ்* (அர்த்தம்: நல்லது) என்று *கடோபநிஷத்* என்ற வேதாந்த நூல் கூறுகிறது. அந்நலம்தான் ஆறு விசேஷ குணங்கள் படைத்த எம்பெருமான் முருகன். 'இதுதான் குறிக்கோள்' என்கிற தெளிவு ஒவ்வொரு சாதகனிடமும் முதலிலிருந்தே இருத்தல் அவசியம்; இல்லையேல் பெயர், புகழ், சொத்து, சுகம் போன்ற ஆசைகளால் இழுக்கப்பட்டு சாதகன் பாதை மாறிடும் அபாயம் உண்டு. எனவே, 'பாடும் பணியை பணியாய் அருள்வாய்' என்று சாதகன் வேண்டுவது தன் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளவோ, அல்லது புகழுடைய ஒரு சங்கீத மேதையாவதற்கோ அல்ல; பரமனை அடைவதற்கே. சாதகனின் இப்பிரார்த்தனை பூரணமாக நிறைவேறுவதை, 43-ம் செய்யுள் விவரிக்கிறது.

ஒருவிதத்தில், கந்தர் அனுபூதியில் இனி வரும் செய்யுள்கள் அனைத்தும் "எல்லாம் அற, என்னை இழந்த நலம்" என்பதின் விரிவான விளக்கமே எனலாம்.

செய்யுள்-1ல் (ஸ்)கந்தன், முருகன், குகன் போன்ற எந்த இறைவனின் பெயரும் பயன்படுத்தப் படவில்லை; வெறுமனே, 'கணேச பகவானின் சகோதரனே' என்று மட்டும் அழைக்கப்பட்டார். இவ்விரண்டாம் செய்யுளில்தான், முதன் முதலாக இறைவன் பெயர் சொல்லப்படுகிறது; அது '**முருகன்**'. 'முருகன்' என்றால் வேதாந்த நூல்களில் **"பிரம்மம்"** என்று கூறப்படும் "பரம் பொருள்" (Absolute) என்றாகும். எனவே, முன்பே பார்த்தபடி, கந்த புராணத்தை இயற்ற ஷண்முகப் பெருமானால், முதலடி எடுத்துக் கொடுக்கப்பட்டு, பணிக்கப்பட்ட கச்சியப்ப சிவாச்சாரியார் (கி.மு. 7ம் நூற்றாண்டு), கந்தப் பெருமானின் அவதார மகிமையை துல்லியமாகவும், அழகாகவும் இவ்வாறு கூறியுள்ளார்: *"அருவமாயும் உருவமாயும் அநாதியாயும் ஒன்றாயும் பலவாயும் **பரப்பிரமமாயும்** (Supreme Brahman), விளங்கும் ஜோதிப்பிழம்பே ஒரு திருமேனியாக வடிவுகொள்ளக் கருணை வெள்ளம் பொழியாநின்ற ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களுங் கொண்டு ஒப்பற்ற **முருகக் கடவுள்** உலகம் உய்யும்வண்ணம் திருவவதாரம் செய்தருளினார்."* இவ்வாறு, கச்சியப்பர் முருகனும் பிரம்மனும் ஒன்றென்கிறார். அதாவது, முருகன் என்ற தமிழ் சொல்லும், பிரம்மம் என்ற சமஸ்கிருதச் சொல்லும் ஒன்றே. முருகனே பிரம்மம். பிரம்மமே முருகன். என்ன ஆச்சரியம்! கந்த புராணத்தில், கந்தப் பெருமானின் அவதாரத்தை விவரிக்கும் பொழுது, அந்த அவதாரத்திற்கு 'கந்தன்' என்ற பெயரையோ அல்லது வேறு எந்தப் பெயரையோ சூட்டாமல், '**முருகன்**' என்று பெயர் சூட்டுகிறார். இது பெரும் ஆச்சரியம் தானே. முருகன் என்றால் பிரம்மம் என்பது 13-வது செய்யுளில் உறுதிபடுத்தப்படுவதைக் காணலாம்.

இச்செய்யுளின் பிரார்த்தனை, பக்தி நெறியில் செல்லும் ஒரு பக்தனின் பார்வைக் கோணத்திலிருந்து செய்யப்பட்டுள்ளது. இதற்கு அடுத்த (மூன்றாம்) செய்யுளின் பிரார்த்தனை, ஞான நெறியைச் சார்ந்த வேதாந்தப் பார்வைக் கோணத்திலிருந்து செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு பக்தியும், ஞானமும் ஒருங்கிணைந்து கைகோர்த்துச் செல்வதை கந்தர் அனுபூதி நூல் முழுவதிலும் காணலாம்.

==========

செய்யுள் – 3

==========

வானோ புனல்பார் கனல் மாருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனையாண்ட இடம்
தானோ பொருளாவது ஷண்முகனே.

பொழிப்புரை: "ஓ ஷண்முகப் பெருமானே! உண்மை அல்லது மெய்ப்பொருள் எது? நிலமா, நீரா, நெருப்பா, காற்றா, ஆகாயமா? (அதாவது பஞ்ச பூதங்களா? அதில் ஏதாவதொன்றா?); அல்லது புலன்சார் அறிவு உதிக்கும் நிலையா? (அல்லது அப்புலன் விஷயங்களிலிருந்து தோன்றும் உலகியல் அறிவா?); அல்லது ஓதப்படும் (மெய்யறிவின் ஆதாரமான) நான்கு வேதங்கள்தானோ?; அல்லது மனமோ?; அல்லது "நான்" எனப்படும் அகந்தையோ?; அல்லது அந்த அகந்தை (ஆட்கொள்ளப்பட்டு) கரைந்து அமிழ்கிற "இடம்"ஆகிய "தான்"ஓ? (அதாவது, நானெனப்படும் அகந்தை எதில் ஒடுங்குமோ, அந்த "அது"-வோ?)".

விளக்கவுரை

சாதகன் சென்ற (2வது) செய்யுளில் தன் வாழ்வின் குறிக்கோளாகிய '*எல்லாம் அற என்னை இழந்த நலம்*' தந்தருளுமாறு இறைவனை வேண்டினான். அது ஒரு பக்தனின் நோக்கிலிருந்து செய்யப்பட்டது. அதுவே இங்கு வேதாந்தப் பார்வையிலிருந்து விளக்கப்படுகிறது. நித்திய மெய்ப்பொருள் தத்துவத்தை தன் பகுத்தறிவின் துணைகொண்டு எவ்வாறு தீர்க்கமாக விசாரணை செய்வது, மற்றும் முடிவில் அதை எங்கு எப்படி அடைவது என்பதற்கான செயல்முறையை இம்மூன்றாம் செய்யுள் சுட்டிக் காட்டுகிறது. இது, வேதாந்த தத்துவத்தின் *நேதி-நேதி* (இது அல்ல, இது அல்ல) என்ற கோட்பாட்டைப்போன்றது. இச்செயல்முறையில், உலகில் இருப்பவைகளையெல்லாம் ஒவ்வொன்றாக ஆராய்ந்து, அவற்றை 'இது இல்லை', 'இது இல்லை' என்றுத் தள்ளியபிறகு, கடைசியில் எது மிஞ்சுகின்றதோ, அதை மெய்ப்பொருளாக அறிவது. அந்த மெய்ப்பொருள் (மெய்யுணர்வு) என்பது பஞ்ச பூதங்களும் அல்ல, புலன்சார் அறிவும் அல்ல, வேதங்களும் அல்ல, மனதும் அல்ல, 'நான்'

எனப்படும் அகந்தையும் அல்ல (*எல்லாம் அற*). பின் எதுதானென்றால், 'அகந்தை' எனும் தனித்தன்மை (Individuality), எதில் அமிழ்ந்து, கரைந்து, ஐக்கியமாகின்றதோ --- *என்னை இழந்த* 'இடம்' எதுவோ --- "அது"தான் "தான்" எனப்படும் மெய்ப்பொருள்'. அந்த மெய்ப்பொருளானது நம் ஒவ்வொருவரின் இதயத்தில் என்றும் எப்பொழுதும் "தான்" எனும் ஆத்ம தத்துவமாக ஒளிர்கிறது; அகந்தை கைதுறந்து விடப்பட்டால் அல்லது அத்தத்துவத்தில் கரைந்துவிட்டால், அதை 'தன்னில் தானாகவே' உணரலாம்.

இது ஒரு மிகவும் ஆழ்ந்து சிந்திக்க வைக்கும் செய்யுள்! எது உண்மைப் பொருள்? நம் கண்ணெதிரே இருக்கும் எண்ணற்ற பொருள்களை உடைய இந்த ஸ்தூல உலகமே நமக்கு உடனடியாகத் தெரியும் யதார்த்தமான உண்மை. ஆனால், இப்பொருள்கள் அனைத்தும் பஞ்ச மகாபூதங்கள் எனப்படும் மண், நீர், நெருப்பு, காற்று, மற்றும் ஆகாயம் எனும் ஐந்து பெரிய தனிமங்கள் மாறிமாறி, வெவ்வேறு விகிதங்களில் ஒன்றுக்கொன்று இணைந்து பலவிதமாக சேர்ந்ததினால் உருவாகியவை. இத்தனிமங்கள் உண்மைப் பொருளா? இல்லை. ஏனெனில், ஒருபொழுதும் மாறாமலும், மற்றும் என்றுமிருப்பது (முக்காலத்திலும் இருப்பது) எதுவோ, அதுதான் மெய்ப்பொருள். ஆனால், இவ்வுலகப் பொருள்களும், தனிமங்களும் எப்பொழுதும் மாறிக்கொண்டும், தோன்றி மறைந்து கொண்டும் இருப்பவை. அவை உண்மைப்பொருள் ஆகா. அடுத்ததாக, ஐம்பொறிகள் எனப்படும் ஞான-இந்திரியங்களால் ஏற்படும் பார்த்தல், கேட்டல், தொட்டு உணர்தல், ருசித்தல், நுகர்தல் ஆகிய அறிவு அந்த உண்மைப்பொருளா? இல்லை. ஏனெனில், அவ்வுணர்வுகள் தரும் இந்திரியங்களே மாறும் தன்மை படைத்தவை. அடுத்ததாக, அறிவுக் களஞ்சியமாக மதிக்கப்பட்டு, தொன்றுதொட்டுக் கற்பிக்கப்பட்டும், கற்கப்பட்டும் வருகின்ற நான்கு வேதங்கள்தான் அந்த உண்மைப்-பொருளா? இல்லை. காரணம், அந்த வேதங்கள் (உபநிஷதங்கள்) அந்த உண்மைப்பொருள் தத்துவத்தை தியானிக்கும் முறை அல்லது உத்திகளைத்தான் தருகின்றதே தவிர, அவைகளே உண்மைப்-பொருளல்ல. அதனால்தான் வேதங்கள்கூட அம்மெய்ப்பொருளை அடைய முடியாமல் திரும்புகின்றன என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. அடுத்ததாக, இந்திரியங்கள் தரும் தகவல்களுக்கேற்ப செயல்படும் மனம் தானோ அந்த உண்மைப்பொருள்? அதுவும் இல்லை. இறைவன் (உண்மைப்பொருள்) மனோதீதன் (செய்யுள்-26). அடுத்ததாக, எங்கும், எல்லாவற்றிலும் தன்னை வலியுறுத்திக் கொள்ளும் அந்த நானெனும் அகந்தையோ அந்த உண்மைப்பொருள்? அதுவும் இல்லை. இவைகளில் எந்த ஒன்றும் அந்த உண்மைப்-பொருளாக இருக்க முடியாது. ஏனென்றால், இவையனைத்தும்

எப்பொழுதும் மாறிக்கொண்டேயிருக்கும் *ஸத்துவம், ரஜஸ், தமஸ்* ஆகிய முக்குணங்களின் சேர்க்கையால் வெவ்வேறு விதமாக மாறிக்கொண்டே இருப்பதையே தன்னியல்பாகக் கொண்டிருக்கும் (Change alone is the changeless law of nature) பிரகிருதி தத்துவத்திலிருந்து தோன்றியவை. ஆனால், இவ்வாறு விசாரணை செய்து அறியும் தத்துவம் ஒன்று இருக்கவேண்டும். மேலும் அது நிரந்தரமானதாக, அதாவது தன்னில் எவ்வித மாறுதல்களையும் அடையாததாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் மற்றவைகளில் ஏற்படும் மாறுதல்களை அது காணமுடியும். எந்த தத்துவம், தான் தன்னில் எவ்வித மாறுதல்களையும் அடையாமல், இவ்வாறு விசாரணை செய்கிறதோ அந்த விசாரிக்கும் தத்துவம், விழிப்புணர்வு (Consciousness) (அ) பேரறிவு (Intelligence) எனப்படும்; அது தூய புத்தி / அகந்தையில் உண்மைப்பொருளின் (ஆத்மாவின்) பிரதிபலிப்பு. அது ஒருபொழுதும் உண்மையற்றதாக ஆகமுடியாது. புத்தி, அகந்தை, மனம், இந்திரியங்கள் ஆகிய ஊடகங்களின் மூலமாக அந்த பிரதிபலிப்பான நானெனும் அகந்தையாக செயல்படும்போது, அது அவைகளுடன் ஒன்றாகி, அவைகளின் தன்மைகளுக்கு ஆளாகிறது, அதாவது அவைகளால் கட்டுப்படுத்தப் படுகிறது.. ஆனால், மேற்கூறியவாறு விசாரணை செய்வதன்மூலம் தன்னை உலகப் பொருள்களின் மீதான நாட்டத்திலிருந்து முதலில் பொறிகளுக்குள் உள்வாங்கி (திரும்பி), பின்னர் பொறிகளிலிருந்து மனதுக்கும், மனதிலிருந்து புத்தி, மற்றும் அதிலிருந்து அகந்தைக்கும் படிப்படியாக பின்வாங்கிக் கொண்டு ஆன்மசாதனை செய்யும் பொழுது, முன்னர் அவைகளால் ஏற்பட்ட கட்டுப்பாடுகளிலிருந்து படிப்படியாக விடுபட்டு, இறுதியில் தன் இதயத்தில் உறையும் ஆதாரமான ஆத்மாவில் தன்னை முழுவதுமாக இழக்கிறது; ஆத்மாவில் ஆட்கொள்ளப்படுகிறது. அந்த ஆத்மா, "எனை ஆண்ட இடம்"ஆகிய "தான்"; அதுவே "பொருள்" ----- உண்மைப் பொருள், பரம்பொருள் தத்துவம்; அதுவே ஷண்முகப் பெருமான்.

உண்மைப்பொருள் எது என்று அறியும் *முயற்சியில்* அகந்தை தோல்வியையே அடைகிறது. ஏனெனில், உண்மைப்பொருள் 'அறியப்படும்' ஒன்று அல்ல, ஆனால் "அனுபவமாக" உணரப்படுவது. எப்பொழுது? நானெனும் அகந்தை அற்றுப் போகும்போது, மெய்ப்பொருள் தன்னைத்தானே "அனுபவமாக" வெளிப்படுத்திக் கொள்கிறது. அகந்தை, உண்மைப்பொருளை தேடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும்வரை, அதை உணர முடியாது. ஆனால் அகந்தை இந்த தவறைத்தான் செய்கிறது. வெளியுலகப் பொருள்களில், ஐம்பொறிகளின் மூலம், மனம் மற்றும் புத்தியால் உண்மைப்-

பொருளைத் தேடும்போது, இந்த முயற்சிகளில் அது தோல்வி அடைகிறது. பின்னர், இவை உபயோகமற்றவை என்று அறிந்து, இவற்றிலிருந்து படிப்படியாக பின்வாங்கும்போது, அகந்தையும் படிப்படியாக சூட்சுமமாகிக்கொண்டே வருகிறது. இருந்தாலும், அது செயல்படுவதையும் நானெனும் உணர்வையும் மட்டும் இழப்பதில்லை. ஆனால், அது கடைசியில் தன் ஆதாரமும் இருப்பிடமானதுமான இதய குகையை அடையும்போது, அங்கு மிளிரும் ஆத்மாவில், (தானெனும் மெய்ப்பொருள் உணர்வில்) தன்னை இழந்துவிடுகிறது, மறைந்துபோகிறது. அப்பொழுது அவ்வகந்தையான நானெனப்படும் தனித்தன்மை முற்றிலுமாகக் கரைந்து அழிந்து போய்விடுகிறது - "என்னை இழந்த நலம்" அடையப் படுகிறது. இதற்கு ஒரு உதாரணம். ஒரு உப்பினால் செய்யப்பட்ட பொம்மை கடற்கரையில் நின்றவாறே அக்கடலின் விஸ்தீரணம், மற்றும் ஆழம் எவ்வளவு என்றறிய கண்ணுக்கு எட்டியவரை கடலைப் பார்த்துக்கொண்டே இருந்தால், அதை அறியமுடியாது. ஆனால், அப்பொம்மை (தான் உற்பத்தியான) அக்கடலினுள் இறங்கி உள்ளே செல்லச்செல்ல, அது கொஞ்சம்-கொஞ்சமாகக் கரைந்துகொண்டேபோய், கடைசியில் கடலாகவே ஆகி, தன்னையே கடலாக 'அறி'ந்து' கொள்ளும்.

(ஒவ்வொரு ஜீவ) "உடலின் மையத்தில் பாவக்கறைகளற்ற பரிசுத்தமான சிறிய இதய தாமரை உள்ளது. அது பரமாத்மாவின் உறைவிடம், அதற்குமுள்ளே ஆனந்தமயமான ஆகாசவெளி ஒளிர்கிறது. அதை தியானம் செய்தல் வேண்டும்" என்று *மகாநாராயண* உபநிஷத் உபதேசிக்கிறது.

நானெனப்படும் அகந்தையழிவதே மெய்ப்பொருள் அநுபவம். (கோவில் கர்ப்பகிரகத்தின் முன்னாலுள்ள திரை விலக்கப்படும்-பொழுது, திரைக்கு பின்னாலுள்ள இறைவனின் தரிசனம் நமக்குக் கிடைப்பதுபோல) இவ்வாறு மெய்ப்பொருளாகத் தன்னை அறிவதே மெய்யறிவு. அறிபவனை அறிவது அறிவு (ஞானம்).

இதயத்தையும் புத்தியையும், பிரார்த்திக்கும் மனநிலையையும் நுண் விசாரணை செய்யும் இயல்பையும், பக்தியையும் ஞானத்தையும் மிக லாவகமாகக் கலந்த சாதனைமுறையை மிகவும் பயனைத்தரும் விதமாக கந்தர் அனுபூதி முழுவதிலுமே அருணகிரியார் கையாண்டுள்ளார். இது கூர்ந்து நோக்கவேண்டிய ஒரு மிகவும் சுவாரஸ்யமான விஷயம். ஒரு பறவை மேலே மேலே சென்று பறப்பதற்கு அதன் இரு சிறகுகளும் உறுதுணையாக அமைகிறது. அவ்வாறே இவ்விரண்டு சாதனை யுக்திகளான பக்தியும்

ஞானமும், பேரின்பம் தரும் இறை-அனுபவத்தை அச்சாதகன் அடைய துணை செய்கின்றன. இவ்வாறு, அச்சாதகன் பக்தனாக முந்தையச் செய்யுளில் செய்த பிரார்த்தனையானது, இச்செய்யுளில் ஆத்ம விசாரணையாக தொடரப்பட்டு, இப்படியாகப் பின்வரும் செய்யுள்களில் மேன்மேலும் வலுவூட்டப்பட்டு, இலக்கை அடைவதுவரை தொடரப்படுகிறது.

இந்த ஆன்மிக ஆய்வில், புறப்பொருள்களிலிருந்து (குடும்பம் முதலானவை - செய்யுள்-4) பின்வாங்கி உள்நோக்கிப் பயணிக்கத் தொடங்கும் அச்சாதகன் முதலில் தனக்கு வந்து, தன்னை உடலாகக் கருதுகிறான். பின்னர், அவன் உடலல்ல, ஆனால் உண்மையில் ஆத்மா என்று அறிவுறுத்தப்படுகிறான் (செய்யுள்-8). இவ்வாறு ஸ்தூல உடலிலிருந்து துவங்கி, சூட்சும உடல், காரண உடல் என்று மேன்மேலும் உள்நோக்கிச் செல்லும் பயணம், அவை அனைத்தையும் தாண்டி கடவுள், பிரம்மம், மற்றும் ஆத்மாவெனப்படும் மெய்ப்பொருளை (Self or Atman) அவன் உணரும்வரை தொடர்வதைக் காணலாம் (செய்யுள்-42, 43, 44). "தான்", "அது" இவையிரண்டும் பரம்பொருளைக் குறிப்பனவே என்பது செய்யுள் **3, 13, 28, 49** etc., இவைகளிலிருந்து புலப்படும்.

==========

செய்யுள் – 4

==========

வளைபட்ட கைம்மாதொடு மக்களெனும்
தளைபட்டழியத் தகுமோ தகுமோ
கிளைபட்டெழு சூரரமும் கிரியும்
தொளைபட்டுருவத் தொடு வேலவனே.

பொழிப்புரை: "ஓ முருகா! உனக்கெதிராகத் தன் சுற்றம் புடைசூழப் போருக்கு வந்த சூரபத்மனின் மார்பையும் க்ரௌஞ்ச மலையையும் துளைத்து ஊடுருவிப் போகுமாறு வேலைச் செலுத்திய வேலாயுதப் பெருமானே! கையில் வளையல் அணிந்த பெண் (மனைவி) மற்றும் குழந்தைகள் என்னும் குடும்பத்தளையில் கட்டுப்பட்டு சிக்கி நான் அழிகிறேனே. இது (உன் பெருமைக்கு) தகுதியோ? பெருமானே, இது முறையோ?"

விளக்கவுரை

அந்த சாதகன் ஜபம், பஜனை முதலியவைகளைச் செய்துகொண்டு தனது (ஆன்மீக) சாதனையைத் தொடங்கி விட்டான் (செய்யுள்-1). இச்சாதனையின் மூலம் தான் அடையவேண்டிய இலக்கைப் பற்றிய ஒரு தெளிவான கருத்தையும் கொண்டு விட்டான் (செய்யுள்-2, 3). தனது ஆன்மீகப் பயிற்சியை மேலும் வலிவுடையதாக்கிக்கொள்ள, அச்சாதகன் வேதசாஸ்திர நூல்களை கற்கவும், ஸத்சங்கம் மற்றும் ஆன்மீக சொற்பொழிவுகளில் பங்கேற்கவும், ஆசிரமங்களுக்குச் சென்று வரவும் ஆரம்பிக்கிறான். இவற்றைச் செய்வதற்கு பெருமளவு நேரம் தேவைப்படுகிறது. ஆனால், இச்சாதனைகளை தொடர்வதில் பலவிதமானத் தடைகளை எதிர்கொள்கிறான். முதன்முதலில் வரும் தடைகள் ஸ்தூல ரூபத்தில் இருக்கின்றன ----- மனைவி, மக்கள் போன்றவர்களால் ஏற்படும் வெளிச் சுற்றுப்புற சூழ்நிலைத் தடைகள்தான் முதலில் எதிர்ப்படுகிறது. வாழ்க்கையில் இதுவரை அவனது மகிழ்ச்சிக்கு ஊற்றுக்கண்ணெனக் கருதப்பட்டு வந்த அவன் குடும்பமே, தற்போது அவனால் ஒரு தளையாகக் கருதப்படுகிறது. ஏனெனில், அது அவனது தற்போதைய குறிக்கோளுக்குப் புறம்பாக ஆகிவிட்டது, மேலும் அது அவனுடைய பெரும்பாலான நேரத்தையும்

சக்தியையும் வேண்டி நிற்பதால், அது அவனது சாதனையில் குறுக்கிடுகிறது, அவனது சாதனையை பாதிக்கிறது.

வெளிப்படையாகப் பார்க்கும்போது, குடும்பம் ஒரு பந்தமாகத் தோன்றுகிறது. ஆனால், உண்மையில், அவனது பூர்வ ஜன்ம கர்மங்களே அவ்வாறான சூழ்நிலைமைகளைக் கொணர்ந்து, அவ்வாத்மாவை சம்சார பந்தத்தில், உலக வாழ்க்கையில், ஆழ்த்துகிறது (செய்யுள்-27). அறியாமை காரணமாக, குடும்பம், சொத்து, அந்தஸ்து ஆகியவைகள் சந்தோஷத்தை அளிக்கும் என்று முன்னர் நினைத்தான், அவைகளை பெருமுயற்சி செய்து அடைந்தான். அவைகளும் சிலகாலம் அவனை இன்பத்தில் ஆழ்த்தத்தான் செய்தன. ஆனால், அவைகளை அடைந்து, சிலகாலம் நன்கு அனுபவித்த பிறகு, அவைகளின் வசீகரம் சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கி, பின்னர், ஒரு காலகட்டத்தில், அவனால் அவைகளுடன் சந்தோஷமாக வாழவோ, வேண்டாமெனத் தூக்கி எறியவோ முடியாதநிலை வந்தமைகிறது. இத்தகைய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்ட அச்சாதகன், இருதலைக் கொள்ளி எரும்புபோல, எவ்வாறு பரிதவிக்கிறான் என்பதை, இச்செய்யுள் நேர்த்தியாகச் சித்தரிக்கிறது. அவ்வாறாகிவிட்ட தன் நிலைமையை நினைத்து அவன் நொந்து கொள்கிறான். சில சமயங்களில், ஒருக்ஷண நேரத்திற்கு, பந்தமென்று உணரப்படும் தன் குடும்பத்தை அவன் துறக்க விரும்புவான்; ஆனால், அதேசமயம், அவன் ஏற்றுக்கொண்ட குடும்பப்பொறுப்பும், அவனுக்கு இன்னும் அவற்றின்பால் உள்ள கவர்ச்சியும், பற்றும் அவனை அவ்வாறு செய்ய விடுவதில்லை. இவ்வாறு உணரும் நிலைகூட இறைவன் அருளால் மட்டுமே ஒருசில பாக்கியசாலிகளுக்குக் கிடைக்கிறது. அப்பொழுதுதான், இச்செய்யுளில் முறையிடுவதைப் போல் ஒருவனால் வேண்ட முடியும். அந்த நிலையிலுள்ள அச்சாதகன் இறைவனிடம் கதறியழும் குரல் இச்செய்யுளில் தொனிக்கிறது. இவ்வாறாக, இச்செய்யுளில் வைராக்கியம் எனும் விதை விதைக்கப்படுவது தெரியவருகிறது; அச்சாதகனின் மனதில் ஈண்டு விதைக்கப்பட்ட அவ்வைராக்கிய விதையானது முளைத்து, மரமாக வளர்ந்து, சில காலத்திற்குப்பின் அநுபூதி எனும் இனிய பழத்தை அளிப்பதைப் பின்வரும் பகுதிகளில் போகப்போகக் காண்போம்.

சாதனை எனும் ஆன்மீகப் பயிற்சி, ஆண், பெண் எனும் இரு பாலாருக்கும் சரிசமமாக உரித்தானதே; அது ஜீவாத்மாவின் பரிணாம வளர்ச்சி சம்பந்தப்பட்டதே தவிர, அதன் உடலைப் பற்றியதல்ல. மேலும், ஆத்மாவில் ஆண்-ஆத்மா, மற்றும் பெண்-ஆத்மா

என்றெல்லாம் கிடையாது. ஆகையால், மனைவி, கணவனுக்கு பந்தம் என்று சொன்னால், கணவனும் மனைவிக்கு அவ்வாறே பந்தம் என்று அர்த்தம் கொள்ள வேண்டும். இந்நூலின் விளக்கவுரையில் எங்கெல்லாம் மனைவி/பெண் என்று வருகிறதோ, அங்கெல்லாம் அது கணவனுக்கும்/ஆணுக்கும் சாலப் பொருந்தும் என நாம் மனதில் கொள்வோமாக.

ஒரு சாதகனின் (ஆணோ, பெண்ணோ) வாழ்க்கை, உள்ளிருக்கும் தெய்வீகத் தன்மையைப் படிப்படியாக விரிந்து மலரச் செய்வதாகும்; அதில் அவன் எதிர்கொள்ளும் தடைகளும் அவற்றைப் படிப்படியாக வெல்லுவதும் சேர்ந்திருக்கிறது. சாதனையில் ஒரு தடை கடக்கப்பட்டவுடன், அதைவிட மிகவும் வலிவானதும், நுண்ணியதுமான இன்னொரு தடை அவனைத் தாக்கும்; அதை வென்றிட அதிகக் கடுமையான சாதனையும் இறைவனிடம் மேலும் சரணமடையவும் வேண்டியிருக்கும். இம்முயற்சி இறைவனின் கிருபையை அவன்பால் ஈர்க்கும். இப்படியாக, மேலும் மேலும் கடும்முயற்சி, மேலும் மேலும் இறைவனருள் ------ இறுதி இலக்கான மோட்சம் அடையப்படும்வரை இச்சாதனை செயல்முறை தொடரப்பட வேண்டும். சாதனை சிறிது கால விஷயமல்ல; அது வாழ்நாள்பயிற்சி. அதனால்தான் *"பாடும் பணியே பணியாய் அருள்வாய்"* என்று முதல் செய்யுளிலேயே பிரார்த்தனை செய்யப்பட்டது. பிரச்சனைகளைப் படிப்படியாக சமாளித்து, வென்று, அநுபூதி அடைய, இறைவனின் கிருபை இணைந்த சாதகனின் விடாமுயற்சி மிகவும் அவசியம்.

சிவபெருமானிடமிருந்து பலவித திவ்ய வரங்களை வேண்டிப் பெற்று பெரும் சக்தி அடைந்திருந்த அசுரன் சூரபத்மன், தனது சுற்றம் புடை சூழ கந்தப் பெருமானுடன் கடும்சமர் புரிந்தான். அப்போரில் அவனுக்கு உதவிட வந்திருந்த அனைவரும் அழிக்கப்பட்டபின், அவன் மட்டும் தனித்து நின்றபோது, அவன் பலவித உருவங்களை மாறிமாறி எடுத்து (கந்தப் பெருமானுடன்) போர் புரிந்தான்; ஒருமுறை பல கிளைகளைக் கொண்ட மிகப்பெரிய 'மா' மரமாகி கந்தப் பெருமானை எதிர்த்தான். பெருமான் தன் வேலாயுதத்தால் அம்மரத்தை பிளந்து அழித்தார். இவ்வாறு, சுப்ரமணியப் பெருமான் ஒரு விளையாட்டுப் போல, தன் திவ்ய ஆயுதமான வேலால் சூரனைத் துளைத்துக் கொன்றார். இதையே இச்செய்யுளில் "கிளைபட்டு எழுசூர் உரமும் கிரியும் தொளைபட்டு உருவத்தொடு வேலவனே" என்று கூறப்பட்டுள்ளது.

சூரபத்மனின் தம்பியான தாரகாசுரனின் சேனைத்தலைவர்களில் ஒருவன் க்ரௌஞ்சன். அவன் பல வழித்தடங்களைக் கொண்ட மலையாக உருவெடுத்துக் கொள்வான். வழிப்போக்கர்கள், அதிலும் முக்கியமாக ரிஷிகளும், முனிவர்களும், அவ்வழிகளில் நடந்து மலைக்குள் வந்தவுடன், அசுரனான அக்ரௌஞ்சமலை அனைத்து வழிகளையும் தன்னுள் மூடிக்கொண்டு, அவர்களைக் கொன்றுவிடும். இதுவே க்ரௌஞ்சனின் பொழுதுபோக்காக இருந்தது. ஒரு சமயம், சிவபெருமானின் உத்தரவின்படி அகஸ்திய முனிவர் இமயமலையிலிருந்து தென்திசை நோக்கிப் புறப்பட்டார். க்ரௌஞ்சன் இவரையும் தன் தீய யுக்திக்கு ஆளாக்க முயன்றான். ஆனால், அகஸ்தியர், தன் உள்ஞணர்வின் மூலமாக சரியான நேரத்தில் அதை உணர்ந்து, க்ரௌஞ்சனை பின்வருமாறு சபித்தார்: "பின்னர் ஒருகாலத்தில் கந்தப் பெருமான் எறியப்போகும் வேலினால் நீ பிளக்கப்பட்டு அழியும்வரை மலையாக இருக்கக் கடவாய்'. கந்தப் பெருமான், தேவர்களின் சேனைக்குத் தலைமைதாங்கி சூரபத்மனை அழிப்பதற்காக இமயமலையிலிருந்து தென் திசை நோக்கிச் செல்லும்போது, இந்த (க்ரௌஞ்ச) மலையை எதிர்கொண்டார்; உடனே தன் கூரிய வேலை எறிந்து அம்மலையாக நின்ற க்ரௌஞ்ச அசுரனைக் கொன்றார். இந்த (க்ரௌஞ்ச) மலை, பத்ரி-கேதார்நாத் யாத்திரை மார்க்கத்தில் (உத்தரகாண்டம் மாநிலம்) *ருத்திர பிரயாகை* என்னும் ஊருக்கு அருகில் உள்ள 'அகஸ்திய முனி' என்ற கிராமத்திற்குப் பக்கத்தில் இன்றும் இருக்கிறது. பெரிய மலையாய் நின்ற இவ்வசுரனைக் கொன்ற கந்தக் கடவுளுக்கு இம்மலையின் உச்சியில் ஒரு அழகிய ஆலயமும் அமைந்துள்ளது.

இச்செய்யுளில் குறிப்பிடப்பட்டுள்ள மலையானது, சூரபத்மனைத் தொடர்ந்து சென்றும், அவனுக்கு பல வழிகளில் உதவிக் கொண்டிருந்ததும், அவ்வேலால் பிளக்கப்பட்டதுமான 'ஏழுகிரி' என்ற மலையாகவும் கூட இருக்கலாம்.

இங்கு மலை எனப்படுவது கர்மாவையும், சூரபத்மன் என்பது அவித்தையால் போஷிக்கப்படும் அகந்தையையும் குறிப்பிடுகிறது. எவ்வாறு மலையும், அசுரனும் கந்தப் பெருமானின் வேலால் மட்டுமே அழிக்கப்பட இயலுமோ, அவ்வாறே கர்மமும், அவித்தையும் (அறியாமையும்) ஞானத்தால் மட்டுமே அழிக்கப்பட இயலும். எனவே, அச்சாதகன் "இறைவா, நீ அசுரனையும் மலையையும் அழித்தாய். நான் மட்டும் கர்மம் மற்றும் அவித்தை (மனைவி மற்றும் மக்கள்) ஆகிய தளைகளின் பாதிப்புக்கு ஆளாகத்தான் வேண்டுமா?" என்றுக் கதறுகிறான். வெறும் மனித முயற்சியை மட்டும் கொண்டு இந்த

சம்சார பந்தத்தை எவராலும் வெட்டிட இயலாது. மனைவி மற்றும் குழந்தைகள் மீதான பாசப் பிணைப்பு மிகவும் உறுதியாக கெட்டிப்பட்டு இருப்பதால், தெய்வ கிருபை தவிர வேறெந்த ஒன்றினாலும் அதனை அறுத்திட இயலாது. இச்செய்யுளில் அருணகிரியார் கையாண்டிருக்கும் சொற்களில் விசேஷ சக்தி பொதிந்துள்ளது. ஒரு தீவிர சாதகன் இப்பாடலை வெறுமனே சிலமுறை திரும்பத்திரும்பப் பாடினாலே கண்ணீர் விட்டு கதறத் தொடங்குவான், மேலும் அது பெருங்கருணை படைத்த கந்தப் பெருமானின் இதயத்தையும் நெகிழச்செய்யும், என்பதில் சிறிதும் ஐயமில்லை.

==========

செய்யுள் – 5

==========

மகமாயை களைந்திட வல்லபிரான்
முகமாறு மொழிந்தும் ஒழிந்திலனே.
அகமாடை மடந்தையர் என்றயரும்
ஜகமாயையுள் நின்று தயங்குவதே.

பொழிப்புரை: "ஆறுமுகப் பெருமான் மகாமாயையே அழிக்கக் கூடிய திறமை கொண்டவர். "ஆறுமுகம்", "ஆறுமுகம்" என்று நான் அவர் பெயரைப் பலமுறை ஜபித்துக் கொண்டிருக்கிறேன். இருந்தும், மனதைச் சோர்வு அடையச்செய்யும் வீடு (மண்ணாசை), சொத்து (பொன்னாசை), மனைவி (பெண்ணாசை) ஆகிய உலகமாயையில் சிக்கி கலங்கிக் கொண்டிருப்பதிலிருந்து நான் இன்னும் விட்டு விலகப்பெற்றேனில்லையே".

விளக்கவுரை

சாதனையின் ஆரம்ப காலத்தில், தான் தினசரி வழக்கமாகச் செய்துவரும் வெவ்வேறு செயல்களுடன், சிறிது நேரம் ஜபம், பாராயணம் ஆகியவற்றையும் செய்துவந்தாலே இறைவனை அடைந்து விடலாம் என்று அச்சாதகன் தவறுதலாக நினைத்தான். அவ்வாறு சில காலம் (சில வருடங்கள்) செயல்படுத்திய பின்னர், அது அவ்வளவு சுலபமில்லை என்று உணர்கிறான். முன்புபோல் அவனால் தன் குடும்பத்தோடு ஒட்டி மகிழ்ச்சியாக வாழவோ அல்லது குடும்பத்தை விட்டுவிடவோ முடியாமல் தவிக்கிறான் (செய்யுள்-4). எம்பிரான் *மகாமாயையை* அழிக்கவல்லவரென்று அவனுக்குத் தெரியும். அவருடைய திருநாமங்களை அவன் தினசரி ஜபம் செய்தும் வருகின்றான். எனினும், வெறுமனே சலிப்பைத்தான் தருகின்றன வீடு, சொத்து, மனைவி எனப்படும் *உலகமாயையில்* சிக்கி அவதிப்படுவதிலிருந்து அவனால் விடுபட முடியவில்லை. ஏன்? இதற்கான காரணம், இச்செய்யுளிலேயே உள்ள 'மொழிந்து' என்ற சொல்லில் மறைமுகமாக இருக்கிறது. எப்படி ஒரு ஒலித் தகடு இசைக்கருவி (CD Player) எந்திரகதியால் ஒலி செய்கிறதோ, அதைப்போல் அவன் உதடுகள் மட்டும் ஒரு எந்திரத்தைப்போல் ஜபம் அல்லது பாராயணம் செய்கின்றன (மொழிதல்). ஆனால் அவன்

இதயம் (மனம்) அதில் சிறிதும் ஒன்றுவதில்லை. உதடுகள் எந்திரத்தைப்போல் இறைநாம ஜபம் செய்யும்போதே, மனம் அதே நேரத்தில் இரகசியமாக உள்ளூர மண், பொன், பெண் இவைகளையே நாடுகிறது. இதற்குக் காரணம், இறை நாமத்தை முழுமனதுடன் ஜபிப்பதில் அடையப்பெறும் இனிமையை (பரம சாந்தியை) அவன் இன்னும் சுவைக்காததே. இது ஒவ்வொருவருடையவும் பொதுவான அனுபவம்; அதாவது, ஜபம் (அ) பாராயணம் என்று ஏதோ ஒன்றை நாம் செய்யத் தொடங்கும்போது, தொடங்கிய சிறிது நேரம்வரை மனதானது அதில் ஓரளவுக்கு ஒன்றியிருப்பதையும், பின்னர் உதடுகள் மட்டும் இயந்திர கதியில் ஜபிப்பதையும், மனம் தனியாக தனக்குள்ளுக்குள், நமக்குத் தெரியாமலேயே, தனக்குப் பிடித்த விஷயங்களில் லயித்திருப்பதையும் காண்கிறோம். நம் மனம் அப்படிப்பட்ட ஒரு தந்திரசாலி. அதன் மூலம்தான் மாயை தன் காரியத்தை செய்கிறது, நம்மை உலகியலில் சிக்க வைக்கிறது.

(உலக (அ) ஜகன்) மாயையின் சாராம்சம் வீடு, செல்வம் மற்றும் பெண் (மனைவி, மக்கள்). இவைகளுடன் பற்று (ஆசை) கொண்டு சிக்கிக்கொள்கிறான் மனிதன். இவை மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்று சொல்லப்படும் மூன்று ஏடணைகள் ("அடிப்படை ஆசைகள்"). வீடு, செல்வம் மற்றும் பெண் (மனைவி, மக்கள்) ---- இந்த மூன்றும் "மூவேடணை" (சமஸ்கிருதத்தில் *'ஏஷணாத்ரயம்'*) அல்லது "அடிப்படை ஆசை"களின் *ஸ்தூல-வடிவம்,* அதாவது ''ஸ்தூலப் பொருள்களின் மீது பற்று." இவ்வேடணைகளின் *சூட்சும-வடிவம்* "பேராசை" ('ஏக்கம் அல்லது அடங்கா ஆசை') என 16-ம் செய்யுளிலும், *காரண-வடிவம்* 'மாயையிலிருந்து பிரியாத அல்லது வேறுபடாத நிலை' என 39-ம் செய்யுளிலும் முழு விவரங்களுடன் அச்செய்யுள்களில் காண்போம். மண்ணாசை, பொன்னாசை, மற்றும் பெண்ணாசை ---- இம்மூன்றும் அதிருப்தி, சோர்வு, மற்றும் துன்பத்தையே தருபவையென்று தெரிந்தபோதிலும், அவைகளின் மீதான பற்றை போக்கிக் கொள்வதென்பது கடினமான விஷயம்தான். ஜபம், பாராயணம் போன்ற சாதனைகளை ஒரு சாதகன் தொடர்ந்து செய்கிறான் என்றாலும், அவ்வேடணை பற்றிய ஆசை மற்றும் எண்ணங்கள் அவன் ஆழ்மனதில் தொடர்ந்து இருக்கத்தான் செய்கின்றன; அவற்றிற்காக அவன் இதயம் ஏங்கித் தவிக்கிறது. இவ்வேடணைகள் தன்னை சீர்குலைக்கின்றன என்று நன்கு தெரிந்திருந்தும், அவன் மனம் அவற்றையே விழைகின்றதேயொழிய, மகாமாயையிலிருந்து விடுதலை தரவல்ல இறைவன்பால் அவன் மனம் நாட்டம் கொள்வதில்லை. இதனால்தான் அதனை "மாயை" என்கிறோம்;

அதாவது, காரணமற்ற, நியாயமற்ற, புரிந்துகொள்ள முடியாத, அறிவுக்கு அப்பாற்பட்ட மதிமயக்கம் என்று கூறுகிறோம்.. இதற்கு என்ன உபாயம்! சாதகன் அன்புடனும், பக்தியுடனும், பொறுமையுடனும் விடாது தொடர்ந்து இறைவன் நாமத்தை ஜபம் பண்ணிக்கொண்டே இருக்கவேண்டும். நாமத்தை உச்சரித்த மாத்திரத்திலேயே இதயம் உருகிடும் நிலை வந்தடையும்வரை, இச்சாதனைகளை பொறுமையுடன் விடாது செய்யவேண்டும். இது கடினம்தான், ஆனால் மிகவும் அவசியம். இறைநாமாக்களை வெறுமனே உதட்டால் ***மொழிந்து*** *வந்தால் மட்டும் போதவே போதாது;* மனமும் அம்மொழிதலில் முழுமையாக ஈடுபட்டு, வேறு எவ்வித எண்ணங்களும் இன்றி, இறைவனில் லயித்து, இதயத்தில் இறைவனை *உணர வேண்டும்,* இதற்கு இறைவனருள் நிச்சயமாகத் தேவை. எனவே, அச்சாதகன் 15-ம் செய்யுளில் இவ்வாறு வேண்டுகிறான்:

"*முருகன் குமரன் குகன்என்று மொழிந்து*
உருகும் செயல்தந்து உணர்வென்று அருள்வாய்."

{இறைவனே! "முருகன், குமரன், குகன்" என்று மொழிந்து (ஜபம் செய்து), அப்படி மொழியும்போது என் மனதை உருகிடுமாறு செய்து, உங்களை என் நெஞ்சில் உணர்ந்து அனுபவிக்க எப்போது அருள்புரிவீர்?"} இச்செய்யுளில் (செய்யுள்-5) 'மொழிந்து' - அதாவது, வெறுமனே உதடால் ஜபம் செய்து என்ற சொல்லை மட்டும் பயன்படுத்திய அருணகிரியார், 15-வது செய்யுளில், 'உருகி', 'உணர' என்ற சொற்களையும் சேர்த்துள்ளார். வெறும் இயந்திரகதியில் செய்யப்படும் ஜப சாதனை மட்டும் போதாது; உணர்ச்சி பூர்வமான 'மனோபாவ'மும் அச்சாதனையில் இணைய வேண்டும் என்பதே இங்கு வலியுறுத்தப்படும் கருத்து. இருந்தாலும், சாதனையின் தொடக்கம் 'மொழிதல்' மூலமேயாம். வெறும் மொழிதலோடு ஆரம்பிக்கப்படும் சாதனை அன்புடனும், பக்தியுடனும் விடாது தினந்தோறும் தொடரப்படும்பொழுது, காலப்போக்கில், அவனுடைய சாதனையின் சக்தி, அம்மந்திரத்தின் சக்தி மற்றும் ஈஸ்வரனின் கிருபையும் ஒன்றுசேர்ந்து தேவையான மனோபாவத்தை உண்டு பண்ணும். அதனால் அவன் மனமும் நெகிழ்ந்து உருகி, நெஞ்சுக்குள்ளே இருக்கும் இறைவனையும் உணரச்செய்யும். இது திண்ணம். அதன்பின், மூவித ஏடணைகளின் மீதான பற்று சாதகனிடமிருந்து தானே விலகிவிடும், (பழுத்த பழம் தானே மரத்திலிருந்து பிரிந்து விழுவது போல்).

அருணகிரியார் எவ்வளவு அழகாகவும், நேர்த்தியாகவும் உண்மைகளை சித்தரிக்கிறார்! எல்லாம்வல்ல ஆறுமுகப்பெருமான் மகாமாயையை அடியோடு களைந்திட வல்லமையுடையவர். இது

பூரண உண்மை. மேலும் நாம் அப்பெருமானுடைய நாமாவை ஜபம் செய்து வருகிறோம் என்பதும் உண்மை. அப்படிஇருந்தும், நாம் (சாதகர்கள்) இவ்வுலக மாயையிலிருந்து விடுபடவில்லை என்பதும் அதைவிட மேலான உண்மையே. இது விசித்திரமாக இருக்கிறதல்லவா? ஆனால், சாதனையில் உண்மையாக ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவருடைய அனுபவமும் இதுதான். இறைவனின் நாமாவை ஒரே ஒருமுறை சொன்னாலே அது ஒருவனுடைய மயக்கத்தை (மாயையை) "அழித்திட வல்லது", என்று தீவிரமாகப் பேச்சளவில் சொல்லக்கூடும்; அது உண்மையாகவும் இருக்கக்கூடும். ஆனால், வாஸ்தவத்தில் நடப்பதுதான் என்ன? முருக பக்தர்கள் அனைவரும் அவன் நாமத்தை ஆண்டாண்டு காலமாக இன்றளவும் ஜபம் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். அவ்வாறு செய்து கொண்டிருக்கிறவர்கள் அனைவரும் மாயையிலிருந்து விடுபட்டு விட்டார்களா என்று கேட்டால், அநேகமாக 'இல்லை' என்றுதான் பதில் கிடைக்கும். அப்படி சாதனை செய்யும் கோடிக்கணக்கானவர்களில் யாரோ ஒருவன் இறைவனின் கிருபை கிடைக்கப்பெற்று, அதனால் அவன் கல்நெஞ்சு நெக்குருகி நெகிழ்ந்து இறைவனை உணருகிறான். அருணகிரியார் பேச்சளவு ஞானியல்ல; எனவே, உண்மைகளை மட்டுமே வெளிப்படையாகவும் உணர்ச்சியுடனும் நேர்த்தியாக எடுத்துரைக்கிறார். அதனால், அதில் அவர் மிகவும் வல்லவர் என்று உயர்வாக அனைவராலும் மதிக்கப்படுகிறார். தாயுமானவ சுவாமிகள், அருணகிரியாரின் இக்கலை நயத்தை வியந்து பின்வருமாறு கூறுகிறார்:

"ஐயா அருணகிரி அப்பா உன்னைப்போல
மெய்யாக ஓர்சொல் விளம்பினர் யார்?"

'ஓ அருணகிரி, என் ஆன்மீகத் தந்தையே. தங்களைப்போல உண்மைகளை வெளிப்படையாக நேர்த்தியுடன் எடுத்துரைத்தவர் எவரேனும் உண்டோ?' (இல்லை என்ற அர்த்தத்தில் வினவுகிறார் எனச் சொல்லவும் வேண்டுமோ).

அச்சாதகன் நீண்டகால இடைவிடாத தொடர்ந்த சாதனை மற்றும் ஈஸ்வர கிருபை ஆகிய இரண்டின் அவசியத்தை நன்கு உணர்கிறான். பழைய சம்ஸ்காரங்களை (உள்ளுணர்வில் ஆழமாக பதிந்துள்ள முந்தைய பிறப்பு அனுபவங்கள் ஏற்படுத்திய சுவடுகளை/ தடங்களை) அவ்வளவு எளிதாக அழித்திட இயலாது. மிகவும் பலம் வாய்ந்த மூன்று ஏடணைகளைக் கடப்பதும் அவ்வளவு சுலபமல்ல. அவைகளோ விலகிட மறுத்து பிடிவாதம் பிடிக்கும். இந்நிலையில், அவனுக்குத் தேவை இடையறாத சாதனை. அச்சாதனை மிகநீண்ட காலத்திற்கு இடைவிடாது தொடரப்பட வேண்டும். இறையருளால்

(ஈஸ்வர கிருபையால்) மட்டுமே அவைகளை அழித்தொழிக்க இயலுமென்றாலும், அவ்விறையருளைப் பெறுவதற்கு, இடைவிடாத ஆன்மீக சாதனை மிகமிக அவசியமாகிறது.

==========

செய்யுள் – 6

==========

திணியான மனோசிலை மீது உனதாள்
அணியார் அரவிந்தம் அரும்புமதோ
பணியாஎன வள்ளிபதம் பணியும்
தணியா அதிமோக தயாபரனே.

பொழிப்புரை: "'நான் என்ன பணி செய்ய வேண்டும்' என்று கேட்டு, வள்ளியின் பாதங்களைப் பணியும், மற்றும் வள்ளி மீது தணியாத அன்பு கொண்ட எல்லையற்ற பரிவின் உறைவிடமுமான பெருமானே! கல் போன்று இறுகிய என்னுடைய நெஞ்சத்தில், உனது அழகிய தாமரை போன்ற தாள் மலருமோ! (மலர்வதற்கு அருள் புரிவாயாக.) "

விளக்கவுரை

குடும்பம் (பெண்ணாசை), செல்வம் (பொன்னாசை), சொத்து (மண்ணாசை) ஆகிய மூவித ஏடணைகளின் மீதான பற்றினாலும், சுயநலத்தாலும், நெஞ்சானது கனத்துப்போய் கல்லாகிவிட்டது (செய்யுள்–5). அப்படி ஏற்கனவே (கல்லாகி) சுருங்கிய அந்நெஞ்சினில், பெருமானின் பாதகமலங்கள் எங்ஙனம் மலர்ந்திட இயலும்?

தன் சாதனையும், சுய முயற்சியும் இப்பற்றுகளை (ஏடணை) சமாளித்திட போதுமானதல்ல என்பதை நன்குணர்ந்து கொண்டுவிட்ட அச்சாதகன், கருணைமழை பொழிவதையே தன் இயல்பாக கொண்டுள்ள அத்தயாபரனின் இரக்கத்தையும், கிருபையையும் வேண்டி அவரைச் சரண் புகுகின்றான். பெருமான், அவர் தாள், அவர் நாமா – இவை அனைத்தும் ஒன்றே, வேறு வேறல்ல.

அருணகிரியார் இந்நூலில் முதன் முதலாக ஸ்ரீ வள்ளி தேவியை இச்செய்யுளில் அறிமுகப்படுத்துகிறார், இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயம். வள்ளி தேவியார் முருகப்பெருமானை திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்ற ஒரே நோக்கம் கொண்டு, எப்பொழுதும் அவர் நினைவில் ஆழ்ந்திருந்தார். ஆனால், அவர் எங்கே இருக்கிறார், அல்லது அவரை எப்படி சந்திப்பது என்பது தேவியாருக்குத் தெரியாது. இருப்பினும், தேவியின் பக்தி

ஆத்மார்த்தமாக ((முற்றிலும் உண்மையானதாக) இருந்ததால், அப்பக்தியே அவரை தேவியின்பால் ஈர்த்துவிட்டது. அதாவது, அவரே தேவியை வலியத் தேடிப்போனார். எனினும், முதல் முறை சென்றபொழுது, தன்னை யார் என காட்டிக் கொள்ளாமல் சென்றார். எப்பொழுதும் இறைவனைப் போற்றி அவன் நாமாவைப் பாடிக் கொண்டிருந்தாலும் (செய்யுள்-1), மாயையை கடக்க சக்தியற்ற (செய்யுள்-5) அந்த பக்தனான சாதகனை (ஜீவாத்மாவை) வள்ளி தேவி குறிக்கிறார். எனவே, இறைவனே வள்ளியைத் தேடிப்போய் அவளுக்கு உதவியதைப் போல், உடனே வந்து தன்னையும் காத்தருளுமாறு, அனைவருக்கும் இயல்பாகவே கருணை காட்டும் தயாபரனாகிய பெருமானை, அச்சாதகன் தன் நெஞ்சாற வேண்டுகிறான். மாயையை அழிக்கவல்ல பெருமானின் பரம்பொருள்-தத்துவ அம்சத்தைவிட, கருணையே உருவான அவரின் திருஅவதார அம்சத்தினிடம், கிருபை புரிந்திடுமாறு ஒருவன் தன் அடிநெஞ்சிலிருந்து பிரார்த்தித்தால், அவர் உடனே மிகவும் மகிழ்ச்சியடைந்து, குருவாய் வந்திடுவார்.

சுந்தரவல்லி, மற்றும் அமிர்தவல்லி ஆகிய இருவரும் விஷ்ணு பகவானின் புதல்விகள். அவ்விருவரும் ஒருசமயம் சிவனாரின் உறைவிடமான கைலாசம் சென்றனர். அங்கு கந்தப் பெருமானை அவர்கள் சந்திக்க நேர்ந்தது. கந்தனது பேரழகினால் வசீகரிக்கப்பட்ட அவ்விருவரும், அவரது துணைவிகள் ஆக விழையும் தங்கள் விருப்பத்தை அவரிடம் தெரிவித்தனர். இரக்க குணவானான அவர், அவர்களுடைய முன்மொழிவுகளை ஏற்றுக் கொண்டு, முந்தையவரை வேடுவகுல அரசனான நம்பிராஜனின் மகள் ஸ்ரீ வள்ளியாகவும், பிந்தையவரை இந்திரனின் மகள் ஸ்ரீ தெய்வயானையாகவும் அவதரித்திடப் பணிந்தார்.

கன்வ முனிவரின் சாபவசத்தால், விஷ்ணு பகவானும் லக்ஷ்மி தேவியும் ஒரு காட்டில் முறையே சிவமுனி (ஒரு ஊமை முனி) மற்றும் மானாக ஆகி அலைந்து திரிந்து வந்தனர். சிவமுனி ஒருசமயம் அம்மானை பார்க்க நேரிட்ட பொழுது, தான் அதன்பால் வியத்தகு முறையில் ஈர்க்கப்பட்டதாக உணர்ந்தார்; அதுவும் அவர்பால் அன்பு கொண்டது. இவ்வாறு பரஸ்பரமாக பார்த்ததினால், மான் ஒரு பெண் (மனித) குழந்தையை ஈன்றது. அக்குழந்தையானது தன்னிலிருந்து மிகவும் வித்தியாசமாக இருந்ததால், அந்த மான் வள்ளிக்கொடிகளின் அருகிலிருந்த ஒரு குழியில் அக்குழந்தையை விட்டுச் சென்றது. அக்குழந்தையானது வேடுவ அரசனான நம்பிராஜன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டது. தனக்கு குழந்தை இல்லாததால், அவர் மிக்க மகிழ்ச்சியுடன் அக்குழந்தையை எடுத்துச் சென்று "வள்ளி"

என்று பெயர் சூட்டி வளர்த்தார். தன் குழந்தைப் பருவத்திலிருந்தே, ஸ்ரீ வள்ளி தேவியார் முருகப் பெருமானின் மேல் உயரிய அன்பு கொண்டு, அவரைத்தவிர வேறு எவரையும் திருமணம் புரியமாட்டேனென்ற தீர்மானத்திலிருந்தார். தேவியார் வளர வளர, பெருமானின் மீதான பக்தியும் வளர்ந்து கொண்டே போனது; எப்பொழுதும் அவர் நினைவாகவே இருந்தார். இச்செய்தியை தேவமகரிஷியான நாரதர் முருகப் பெருமானுக்கு தெரிவிக்க, அவரும் தான் வள்ளியை ஏற்றுக்கொள்ள வேண்டிய தருணம் வந்துவிட்டதை உணர்ந்தார்.

வேடுவ குலத்தின் மரபின்படி, வள்ளி தினைப் புனத்தில் கதிர்களை காவல்காக்கும் பொறுப்பேற்று, பறவைகளை கவண் கொண்டு துரத்தி வந்தார். கந்தப் பெருமான், தானே வள்ளியை வலியத் தேடி, தினைப் புனத்திற்குச் சென்றார். முதலில் ஒரு வேடுவனைப்போல் வேடம் தரித்துச் சென்றார். அடுத்து, ஒரு தள்ளாத கிழவன்போல் சென்றார். இவ்வாறு அவர் அவள் பக்தியை பலவாறு சோதித்து, முடிவில் தன்னையே (முருகனாக) வெளிப்படுத்திக் கொண்டார். பின்னர், அவளை மணந்தார்.

‘வள்ளி இருந்த இடத்திற்கு முருகன் தானாகவே தேடிப்போனது மட்டுமல்லாமல், அவளை விழுந்து வணங்கியும், அவளுக்கு தான் எவ்விதத்தில் சேவை செய்ய வேண்டும் என்றும் கேட்டார்’. இதிலிருந்து தெரிவதென்னவென்றால், பெருமான் தன் பக்தர்களைத் தன்னுடன் ஐக்கியப்படுத்திக் கொள்வதோடல்லாமல், அவர்களின் அனைத்து (*யோகக்ஷேம*) தேவைகளையும் தானே பூர்த்தியும் செய்து வைக்கிறார் என்பதே. பெருமானின் பரிவு (தயை) அத்தகையதாயிருக்கிறது. இதன்மூலம், அருணகிரியார் இச்செய்யுளில் சொல்லுவதென்னவென்றால், ஒரு பக்தன் பெருமானை உண்மையாக நேசித்து, அவரை அடைய விரும்புகிறானெனில், அவன் சரியான சாதனைமுறைகளை அறியாவிட்டாலும், அல்லது அறிந்தும் அதன்படி சாதனை செய்யாவிட்டாலும், தானே அவனைத் தேடிப்போய் அவனை அப்படியே ஏற்றுக் கொள்கிறார் என்பதே. பெருமான் பக்தனிடம் கொண்டுள்ள அன்புக்கு அளவேயில்லை. பரமாத்மாவுடன் ஐக்கியமடைந்திட விரும்பும் ஒரு ஜீவாத்மாவை, வள்ளி தேவிக்கு ஒப்பிடலாம். எப்படியும் முருகப் பெருமானை திருமணம் செய்துகொள்வதென்று வள்ளி திடமாக நிச்சயம் செய்திருந்தாலும், அவளுக்கு அவர் எங்கிருக்கிறார், அவரை அடையும் வழி என்ன என்பனவெல்லாம் தெரிந்திருக்கவில்லை. அதேபோல், ஜீவாத்மா (சாதகன்) அக்ஞானத்தின் விளைவானதால், அவனுக்கு இறைவனைப்-பற்றிய சரியான ஞானம் கிடையாது -- இறைவன் எங்கிருக்கிறான்,

எப்படி அவனையடைவது என்பது அவனுக்குத் தெரியாது; எனவே அவன் தன்னுடைய சுயமுயற்சியால் பரமாத்மாவை அடைய முடியாது. எனினும், பரமாத்மாவை அடைய அவன் தன் மனதார தீவிரமாக ஆசைப்பட்டால், அவர் தானே அவனிடம் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறார்; தக்க தருணம் வரும்பொழுது, அவரே குருவாக வந்து, சிஷ்யனை நன்கு பயிற்றுவித்து, சோதித்து, முடிவில் அஜ்ஜீவனை தன்னுள்ளேயே ஐக்கியப்படுத்திக் கொள்கிறார், எப்படி அவர் வள்ளியை ஆட்கொண்டாரோ அப்படியே. ஒரு ஜீவன் தன் மனதார பரமனை அடைய விரும்பினால், பரமன் ஒரு குருவின் உருவில் வந்து, அந்த ஜீவனை சரியான வழியில் செலுத்தி, தன்னை அடைய வைத்து விடுகிறார். பரமாத்மா பக்தனுக்கு கருணை மற்றும் பரிவுகாட்டுவதில் எவ்வித வரம்பும் கொள்வதில்லை என்பது இதிலிருந்து தெள்ளெனத் தெறிகிறதல்லவா! எனவேதான், அவரை "தயாபரன்" என இச்செய்யுள் வர்ணிக்கிறது. அவர் கருணை, மற்றும் பரிவு பரிபூரணமாக உடையவராக இருக்கிறார்.

பெருமானின் தாள் இங்கு தாமரை மலருக்கு உவமையாக்கப்படுகிறது. ஏனெனில், எப்படி தாமரை படர்ந்து மலர்வதற்கு சேறு எனப்படும் மென்மையான பூமி தேவையோ, அப்படியே (பெருமான் தாள் பதிய, மலர), சாதகனின் நெஞ்சு பரமனை நினைத்து உருகி (சேறுபோல்) மென்மையாவது மிகவும் அவசியம் .

இச்செய்யுளில் பயன்படுத்தப்பட்ட 'தணியா' என்ற சொல்லிற்கு 'திருத்தணி'-யில் குடிகொண்ட கந்தக் பெருமானே' என்றும் ஒருசிலர் பொருள் கொள்கின்றனர் ('திருத்தணி' முருகனின் ஆறு படைவீடுகளில் ஒன்று என செய்யுள் 2ல் பார்த்தோம்).

==========

செய்யுள் – 7

==========

கெடுவாய் மனனே கதிகேள் கரவாது
இடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவேதனை தூள்படவே
விடுவாய் விடுவாய் வினையாவையுமே.

பொழிப்புரை: "ஓ மனமே, (உண்மை தன்மையில்லாததும், விரைந்தழியும் இயல்பும் கொண்ட இந்த உலக விஷயங்களை உண்மையென்றுக் கருதியதால்), நீ மிகவும் கெட்டொழிகின்றாய். இப்பொழுது, இதிலிருந்து மீட்சி பெற்று முக்தியை அடையும் வழியைக் கூறுகிறேன், உன்னிப்பாகக் கேட்பாயாக: ஒளித்து வைக்காமல் அன்புடன் தானம் செய்வாயாக; கூறிய வேலை ஏந்திய முருகப் பெருமானின் தாமரைப் பாதங்களை தியானித்திருப்பாயாக. (இவ்வாறு நீ செய்தால், கண்டிப்பாக) யுகாந்திரங்களாக உன்னை தொடர்ந்து துன்புறுத்திவரும் இப்பிறப்பு-இறப்பு துயரத்தை பொடிப்பொடியாக்கி எரித்திடுவாய்; மேலும், (புண்ய-பாபம் எனப்படும்) அனைத்துக் கர்மங்களிலிருந்தும் வெகு சீக்கிரத்தில் விடுபடுவாய்."

விளக்கவுரை

தன்னுடைய ஆன்மீக ஆர்வம் நிலைத்திருக்கவும், மற்றும் மேலும் அதை வலுப்படுத்திக் கொள்ளவும், அச்சாதகன் உயரிய (வேத) சாஸ்திரங்களை முறையாகக் கற்றல், ஸத்சங்கங்களில் பங்கேற்றல், மகான்களுடன் தன்னை தொடர்புபடுத்திக் கொள்ளுதல் போன்ற பல சாதனைகளை செய்து வருகிறான். ஆறாம் செய்யுளில் அவன் செய்த பிரார்த்தனையானது வெகு தீவிரமானதாகவும், உளமார்ந்ததாகவும் இருந்ததால், பெருமானிடமிருந்து அதற்கான மறுமொழியும் எதிர்பாராத முறையில் உடனே வந்தமைகிறது. பெருமான் எப்பொழுதும் தன் உருவத்தில் நேரடியாக உதவ வருவதில்லை; வள்ளி தேவிக்காக அவர் வந்த பொழுதுகூட முதலில் வேறு ஒரு உருவில் வந்ததுபோல, புத்தகம், வயதான மனிதர், ஆன்மீக வகுப்பு, ஸத்சங்கம், அல்லது உபதேசம் பெறுவதெற்கென்று அவன் சென்று

பார்க்கும் மகான்கள், ஆகிய பல வழிகளில் ஏதோ ஒன்றின் மூலம் சாதகனுக்குத் தேவையான உபதேசத்தை அருளுவார்..

அவனுக்குக் கிடைக்கும் உபதேசம்:

(1) உன்னிடமிருக்கும் செல்வத்தை வறியவர்க்கு வழங்குவாயாக. (இவ்வாறு தானம் செய்தால் இருவித பயன்கள் ஏற்படும்: 1. மற்றவர்களின் துன்பநிலை கண்டு மனம் நெகிழ்வதால் கல்லாகியிருக்கும் உன் (அச்சாதகனின்) நெஞ்சு உருகி மென்மையாகும், 2. செல்வத்தின் மீதான பற்று - *'வித்தேசணா'* எனப்படும் ஏடணை -- அறவே நீக்கப்படும்).

(2) பெருமானின் பாதங்களை தியானிப்பாயாக. (தானம் செய்து மென்மையாக்கப்பட்ட நெஞ்சில், அத்தியானம் பெருமானின் தாமரைப் பாதங்களை, சேற்றில் செந்தாமரை மலர்வதுபோல, மலரச் செய்யும்).

இவ்விரு உபதேசங்களும் அந்த சாதகனால் கடைபிடிக்கப்படும்பொழுது, கந்தப் பெருமானின் கிருபையை அவன் பெறுகிறான்.

இச்செய்யுளில் 'நினைவாய்' என்ற சொல் விசேஷமான அர்த்தத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது. முன்னர் (5-ம் செய்யுளில்), அச்சாதகன் வெறுமனே மனதில் பதியாமல், உதட்டளவில் இறைநாமாவை (மந்திரங்களை) உச்சரித்துவந்தான். எனவே அங்கு 'மொழிந்து' என்ற சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது, அதாவது இயந்திர கதியில் உள்ளம் தொடாமல் தன் உதடுகள் மட்டும் இறைநாமாவை உச்சரித்தன, மொழிந்தன. ஆனால், இச்செய்யுளில் சொல்லியபடி, இனிமேல் தொடர்ந்து தானதர்மங்கள் செய்வதால் நெஞ்சம் உருகி பக்குவப்படுகிறது; அத்துடன், அப்பக்குவப்பட்ட மனதினால் பெருமான் பாதங்களை 'நினைப்பதால்' (தியானம் செய்வதால்), அது அனைத்து கர்மபலன்களும் விரைவில் அழிபட ஏதுவாகிறது. அவைகளின் பலனாய் முடிவில்லா பிறப்பிறப்பு சுழற்சிக்கும் ஒரு முடிவு எட்டப்படுவது திண்ணம். எனவே, முதல்படியாக, பெருமானின் கிருபையானது குருவின் உபதேசமாக அவனுக்குக் கிடைக்கிறது. (அடுத்த செய்யுளில்.)

ஒருவனின் சம்சார பந்தத்திற்கும், மோட்சத்திற்கும் மனம் தான் காரணம். எனவே, மனதுக்கு முறையான கல்வி புகட்டுவது அவசியம். அதனால்தான், இச்செய்யுளில் மனதுக்கு அறிவுரை வழங்கப்படுகிறது. அறியாமையின் விளைவான மனம், நிலையில்லாத உலகப் பொருள்களை உண்மையானவை என்று எண்ணி, எப்பொழுதும் அவைகளையே நினைத்து, அவைகளின் பின்சென்று, அவைகளில் தன்னை சிக்கவைத்துக் கொண்டு, கடைசியில் வெகு

மோசமான துன்பத்தில் ஆழ்கிறது. இதுதான் சம்சார பந்தத்தை ஏற்படுத்தும் *'விஷய-சிந்தனை* (உலகப் பொருள்கள் பற்றிய சிந்தனை) என்றழைக்கப்படுகிறது. உலகப் பொருள்களை சிந்திப்பதால் ஏற்படும் பேரழிவு பற்றி ஸ்ரீமத் பகவத்கீதை நமக்கு எச்சரிக்கை விடுக்கிறது. "ஓர் பொருளைப்பற்றி நினைப்பதால் அதன்மீது பிடிப்பு (பற்று) உண்டாகிறது, அப்பற்றிலிருந்து ஆசையும், ஆசையிலிருந்து கோபமும், கோபத்திலிருந்து மதிமயக்கமும், மதிமயக்கத்திலிருந்து ஞாபக மறதியும், ஞாபக மறதியிலிருந்து விவேகத்தின் அழிவும், கடைசியில் விவேகத்தின் அழிவினால், தானே அழிந்து போகிறான்." (கீதை : 2: 62,63). இத்தகைய பேரழிவு ஏற்படாமல் தடுக்க வேண்டுமானால், அதன் மூலகாரணம் முளையிலேயே கிள்ளியெறியப்படவேண்டும். மனதை உலகப் பொருள்களின் நினைவில் மூழ்கிடாமல் தடுத்திட வேண்டும். ஆதலால்தான், தன்னிடத்திலிருக்கும் செல்வத்தை (பொருள்களை) தானம் செய்திட மனதிற்கு ஆலோசனை கூறப்படுகிறது. ஆனால், தானம் எவ்வாறு செய்யப்பட வேண்டும்? கொடுக்க மனசில்லாமல், எரிச்சலுடனோ, வெறுப்புடனோ (கடோ உபநிஷதத்தில் நசிகேதனின் தந்தை செய்ததுபோல்) தானம் கொடுக்கக் கூடாது இறைவன் மீது மிக்க பக்தியுடன் அவரையே நினைத்தவண்ணம், தானமாகக் கொடுக்கப்படும் பொருளைப் பற்றி சிந்தித்து கொண்டிருக்காமல், தானம் கொடுக்கப்பட வேண்டும். இவ்வாறு செய்தல் *பகவத்-சிந்தனை, ஆத்ம-சிந்தனை, பிரம்ம-சிந்தனை* எனப்படுகிறது; இது *விஷய-சிந்தனை* என்று முன்னர் கூறப்பட்ட பிணிக்கான மாற்றுமருந்து. எதையாவது தானமாகக் கொடுக்கும்போது, தானமாக தரப்படும் பொருளைப் பற்றிய சிந்தனை அறவேயின்றி, இறைசிந்தனையுடன் தரப்பட வேண்டும். அவ்வாறு செய்வதெப்படி?

தானத்தைக் கொடுப்பவர், தானமாக கொடுக்கப்படும் பொருள், தானத்தைப் பெறுபவர், தானம் கொடுக்கும் செயல் அனைத்தும் இறைவனே என்ற எண்ணத்துடன் தானம் செய்யவேண்டும்; ஏனெனில், அனைத்தும் இறைவனே, அனைத்தும் அவருக்கே சொந்தமானது. எப்படி தானத்தை பெறுபவர் இறைவனின் படைப்போ, அதேபோல் தானத்தைக் கொடுப்பவர், தானமாக கொடுக்கப்படுகிற பொருள் ஆகிய இரண்டும்கூட அவருடைய படைப்பே. அனைத்தும் உலகளாவி தோன்றியிருக்கும் இறைவனின் அங்கங்களேயாகும். இவ்வாறு தியானித்து, அதிலேயே நிலைத்திருப்பது *'பிரம்ம-கர்ம-சமாதி'* நிலையாகும்; இந்நிலையை பகவத் கீதை (4:24) இவ்வாறு விளக்குகின்றது: "அர்ப்பணம் செய்தல் பிரம்மம்; நெய் முதலிய ஹவிஸும் பிரம்மம்; பிரம்மமாகிய அக்னியில் பிரம்மத்தால் அர்ப்பணம் கொடுக்கப்படுகிறது. இப்படியாக, கர்மத்தில் பிரம்மத்தை

எப்பொழுதும் காண்பவனால், அப்பிரம்மமே அடையப்படுகிறது." இந்த ஞானாமாகிய அக்னியே முடிவற்ற பிறப்பிறப்பு தரும் சம்சார சுழற்சியை எரித்து சாம்பலாக்குகிறது. இருக்கும் அனைத்தும் இறைவனாகிய பிரம்மம் என காணப்படும்பொழுது, ஜீவத்வம் என்ற ஒன்று தனித்தன்மையுடன் இருக்கும் வாய்ப்பு எங்கிருந்து வரும்? அகண்ட பரந்த கடலைப் போன்றது பிரம்மம் அல்லது இறைவன்; எப்படி அலைகளுக்குக் கடலை விடுத்து தனித்த இருப்பு இல்லையோ; அப்படியே கொடுப்பவரும், கொடுக்கப்படுவதும், பெறுபவரும் பிரம்மம் என்ற இருப்பிலிருந்து தனித்து இருப்பதில்லை,

நாம் தற்போது அனுபவித்து வரும் துன்பங்களுக்கும், ஜன்ம ஜன்மாந்திரமாக நம்மை தொடர்ந்திடும் முடிவில்லா சம்சார சங்கிலிக்கும், கர்மங்களே காரணம்; அத்தொடர் சங்கிலியின் ஒரு வளையமே இந்த ஜன்மம் என்று அருணகிரியார் கூறுகிறார். இப்பிறவிப்பிணியைப் போக்கும் அருமருந்தாக தானம், மற்றும் இறைதியானம் ஆகிய இரண்டையும் அவர் கொடுக்கிறார், ------ கர்மங்களைக் களைந்திட தானம், பிறப்பிறப்பை இல்லாமல் செய்திட தியானம். "தானம் பெரும்பாவங்களை சமாதி கட்டுகிறது" என்கிறார் இயேசு கிறிஸ்து. 'யக்ஞும், தான தர்மம், தவம் ஆகிய மூன்றும் ஞானிகளுக்கு மேலும் புனிதம் தரும்' என்கிறார் கிருஷ்ண பகவான் (பகவத் கீதை18: 5).

ஆசைகளும், பேராசைகளுமே, நாம் பாவம் செய்வதற்கான காரணங்கள்; இவைகள் நெஞ்சத்தை (சுயநலமாக்கி) சுருங்கச் செய்கிறது. இப்பிணிகளுக்கு தானம் ஒரு மிகச்சிறந்த மாற்று மருந்து. தானம் சுருங்கிய நெஞ்சத்தை பரந்துவிரியச் செய்து, பிறரின் துன்பங்களை கண்டு இரக்கம் கொள்ளச் செய்து, அவர்கள்பால் அன்பும் பொழிந்திடச் செய்யும். தானம் செய்யச் செய்ய மனிதனின் சுயநலம் குறைந்து, பரந்த மனப்பான்மை வளர்கிறது. மற்றவர்கள் படும் கஷ்டத்தை அவனால் உணரமுடிகிறது. எனவே, தானம் செய்யும் செயலானது, (சாதகனின்) நெஞ்சத்தை கசிந்துருக வைத்து, மென்மையானதாகவும் ஆக்கிவிடுகிறது. அதனால், சென்ற செய்யுளில் அவன் வேண்டிக்கொண்டவாறு, இறைவனின் தாமரைப் பாதம் அவன் நெஞ்சினில் மலர்ந்திட தேவையான தகுதியை தந்து விடுகிறது. சுருங்கக்கூறின், தானம் நெஞ்சை தூய்மையாக்கி, பக்குவப்படுத்துகிறது; அத்துடன் இறைவனை மட்டுமே நினைத்து தானமானது செய்யப்படும்பொழுது, அது அப்பக்குவமடைந்த நெஞ்சினில் இறைவனின் பாதங்கள் பதித்திடத் தேவையான

தகுதியையும் தருகிறது. தானமும், இறைதியானமும் இவ்வாறு ஒருங்கி இணைக்கப்படும்பொழுது, முக்தி அடையப்படுகிறது.

தானம் எனப்படும் சொல் பரந்த அர்த்தத்தில் இங்கு உபயோகிக்கப்படுகிறது. ஒருவன் தனது சொத்தை அல்லது அதில் ஒரு பங்கை தருவது மட்டும்தான் தானதர்மம் என்று கொள்ளலாகாது. ஒருவன் தன் சிந்தனையிலும், உணர்ச்சியிலும், எண்ணங்களிலும், மனப்பாங்கிலும் ஆகிய அனைத்திலும் உதாரத்தன்மை உடையவனாக இருக்கக் கூடும், இருக்க வேண்டும். அப்பொழுதுதான் மற்றவர்களுடன் அநாவசியமாக சண்டைசச்சரவு இல்லாமல், ஒத்துவாழ முடியும். அவ்வாறு இருப்பதே சிறப்பு. ஒருவன் தன் சொத்து, கல்வி, திறமை, ஞானம் போன்ற எத்தனையோ விஷயங்களை தானமாகக் கொடுக்கலாம். ஆனால், ஞான-தானமே தானம் அனைத்திலும் சிறந்ததாக எண்ணப்படுகிறது. எதனாலெனின், மற்ற எல்லாவகை தானங்களின் பலன் நீண்டகாலம் நிலைத்திருப்பதில்லை; ஞானதானம் மட்டுமே நிரந்தரமான நன்மையை நல்குகிறது.

தியாகமின்றி தானதர்மமில்லை. அனைத்து தானதர்மத்திலும் தன் இன்பத் தியாகம் அடக்கம். தன்னுடைய சொந்த இன்பத்தை தியாகம் செய்யாமல் தானதர்மம் செய்யமுடியாது. அது உடல், உணர்ச்சி, அகந்தை ஆகியவைகளின் இன்பத்தை சம்பந்தப்பட்டதாக இருக்கக்கூடும். இப்படித் தியாகமில்லாத தானம், தானமாகாது; அது வெறும் ஆரவாரமாகும். பல்வேறு வகையான தானங்களை (தியாகங்களை) சாதகன் செய்வது, தன் இறுதிக் குறிக்கோளை அடைய உதவும் பயிற்சியே. இவ்வாறு அவன் செய்து பழகிவருவது, கடைசியில் தன்னுணர்வையே (Individuality) பேருணர்வில் (Universality) தியானத்தின் மூலம் தன் இறுதித் தியாகமாக அளித்திடுவதற்கே ஆகும். இப்படியாக, தனது என்று சொல்வதற்கு ஒன்று கூட மிச்சம் வைக்காமல் அனைத்தையும் --- பணம், திறமை, அகந்தை, கடைசியில் தன்னையே பரமனுக்கு --- சமர்ப்பணம் செய்து விடவேண்டும். எதையும் மிச்சம் வைத்துக்கொள்ளாமல் கொடுத்துவிட வேண்டும். எதுவும் மீதம் இருக்கக் கூடாது. தன்னுணர்வு கூட அறவே இல்லாமல் போக வேண்டும். அதனால்தான் இச்செய்யுள் 'இடுவாய்' (தானம் கொடுப்பாயாக) என்று மட்டும் உபதேசிக்காமல், '**கரவாது** இடுவாய்' (எதையும் ஒதுக்கி/ ஒளித்து வைக்காமல், அனைத்தையும் தானம் கொடுப்பாயாக) என்று உபதேசிக்கிறது. மீதியில்லாமல் எல்லாவற்றையும் கொடுப்பதுவே தானம். இப்படியாக, தன்னிடமிருக்கும் அனைத்தும் தானம் செய்யப்பட்டு, அத்துடன் இறைவனின்மேல் தியானம் செய்வதன்மூலம் தன்னுணர்வு எனப்படும்

தன்னையே வியாபித்திருக்கும் பேருணர்வு எனப்படும் பரமனில் அர்ப்பணிக்கப் படும்போது, கர்ம தளையானது அறுபட்டு, சம்சார பந்தம் ஒரு முடிவிற்கு வருகின்றது. தானமும், தியானமும் கர்ம பந்தங்களை அறுத்து, பிறவிப் பெருங்கடலையும் கடக்கச்செய்யும் கருவிகள். தானம் வெளிப்படையான (பொருள்களின்) தியாகம், தியானம் அந்தரங்க (ஆன்மீக) தியாகம்; புறத் தியாகம் தானம்; அகத் தியாகம் தியானம். தானம் தியானத்திற்கு வழிவகுத்து, அதற்கான ஆயத்தத்தையும் செய்கிறது.

செய்யுள்-2ல் சொல்லப்பட்ட 'எல்லாமற என்னை இழந்த நலம்' என்ற நிலையை அடைவதற்கு உபயோகமான செயல்முறை பயிற்சி இந்தச் செய்யுளின் உபதேசம். அங்கு அது (சாதகன்) பெருமானிடம் செய்யப்பட்ட பிரார்த்தனை, இங்கு இது (சாதகனின்) மனதிற்கு அளிக்கப்படும் உபதேசம்; அங்கு அடையவேண்டிய குறிக்கோள், இங்கு அதற்கான வழி. எவ்வளவு அழகாக உண்மைகளை அருளாளர் அருணகிரியார் தந்தருளுகிறார் பார்த்தீர்களா!

==========

செய்யுள் – 8

==========

அமரும்பதி கேள் அகமாம் எனுமிப்
பிமரங்கெட மெய்ப்பொருள் பேசியவா
குமரன் கிரிராச குமாரி மகன்
சமரபொரு தானவ நாசகனே.

பொழிப்புரை: "ஓ குமரப் பெருமானே! ஓ (இமயமலையின் அரசனான) இமவானின் புதல்வியின் (பார்வதியின்) மைந்தனே! தங்களை எதிர்த்துப் போரிட்ட அசுரர்களை நாசம் செய்தவனே!. ஓ பெருமானே, (ஆத்மாவின்) உறைவிடமான இவ்வுடலை 'நான்' என்றும், என் உறவினரை 'எனது' என்றும், எண்ணும் என் மதிமயக்கம் நீங்கும்படி தாங்கள் எனக்கு மெய்ப்பொருளைப் பற்றி விளக்கிப் பேசியதை என்னென்று சொல்லுவேன்!"

விளக்கவுரை

தன்னிடமிருப்பதை தானமாகக் கொடுக்கும் செயல் சாதகனின் மனதை விரிவு படுத்தி, அவனை சுயநலமற்றவனாக ஆக்கியது. கடவுளுடைய பாத கமலங்களை தியானம் செய்வதின்மூலம் கடவுளின் மீது அவனுக்கு இருக்கும் அன்பு மேலும் வலுப்படுகிறது. அதே சமயம், அவனது குடும்பத்தின் மேல் அவன் வைத்திருக்கும் பாசப்பற்றை வலுவிழக்கச் செய்கிறது. இவ்வாறாக சிறிது காலத்திற்கு, அச்சாதகன் தானம் (தொண்டு) செய்ததும் ஆழ்ந்து (கடவுளை) தியானம் செய்து வந்ததும் (செய்யுள்-7), கடவுளின் கிருபையைப் பெறுவதற்கு அவனைத் தகுதி உடையவனாக ஆக்கியது. "கடவுளின் கிருபை குருவடிவாக வருகிறது", என்கிறார் சுவாமி சிவானந்தர் (அவருடைய "குரு தத்துவம்" என்ற புத்தகத்தில்). அதன்படி, அக்கிருபையானது ஒரு மகானாக (குருவடிவாக) வந்து, அவனுக்குத் தேவையான அறிவுரைகளை அவர் வழங்குகிறார். ஒன்று, அவனே ஒரு மகானிடம் சென்று அறிவுரைகளை வேண்டிப் பெறலாம்; அல்லது தற்செயலாக சந்திக்க நேர்ந்த எதோ ஒரு மகான் அவனுக்கு அறிவுரைகளை வழங்கி அருளலாம். அது எப்படியாக இருந்தாலும், அது நடந்ததற்குக் காரணம் கடவுளின் கிருபைதான்; ஆனால் இது அவனுக்கு இப்பொழுது தெரியாது. (பின்னர் செய்யுள்கள் 13 & 17

இதைத் தெளிவு செய்வதைக் காணலாம்). அந்த மகான் அச்சாதகனுக்கு உண்மைத் தத்துவத்தைப்பற்றி விளக்கிக் கூறுகிறார்:

"இந்த சரீரம் அழியக்கூடியது, ஆனால் அது ஆனந்த-ஸ்வரூபமான ஆத்மாவின் உறைவிடம். நீ இந்த சரீரமல்ல. உண்மையில் 'நீ' (பிரம்மம் எனும்) ஆத்மாவே. உன்னுடைய குடும்பம், சொத்து, மற்றுமனைத்தும் உன்னுடையதல்ல; நீ வந்தபோது அவற்றை கொண்டுவரவில்லை, போகும்போது எடுத்துக்கொண்டு போக முடியாது. எனவே இப்பொழுதும் அவை உன்னுடையதல்ல. அனைத்தும் இறைவனால் படைக்கப்பட்டது; அனைத்தும் அவனுடையது. உன்னுடையதென்று நினைப்பது பிரமை (மதிமயக்கம்). உன் பூர்வஜன்ம கர்மவினையின் பயனாக உனக்கு அவை சிறிது காலத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அவற்றின்மேல் பற்று வைத்தால், நீ துன்பப்படுவாய், துக்கப்படுவாய். பற்றற்றவனே சுகமாய் இருப்பான். ஆகவே, நீ பற்றற்று சுகமாய் இரு."

தான் இந்த உடல் என்றும், குடும்பம், சொத்து சுகங்கள் அனைத்தும் 'தன்னுடையது' என்றும் அச்சாதகன் இதுகாறும் தவறாகக் கொண்டிருந்த மதிமயக்கத்தை, மேற்கூறிய அறிவுரை (தற்காலிகமாக) அவனை விட்டு விலகச்செய்கிறது. ஆனால், இந்த அறிவுரை அவனது அறியாமையை முற்றிலும் அழித்துவிட்டது என்று கொள்ளக்கூடாது; இந்த அறிவுரை அவனுக்கு 'தான் உண்மையில் ஆத்மாவே, இந்த உடல் அல்ல' என்ற புதிய அறிவார்ந்த புரிதலை மேலெழுந்தவாறாக மட்டும் ஏற்படுத்துகிறது. இதுதான் அந்த மகானால் (குருவால்) கொடுக்கப்பட்ட முதன்முதல் அறிவுரை; வாய்மொழியாக செய்யப்பட்ட இந்த அறிவுரை ---- **'பேசுதல்'** என்ற வெளிச்செயலின் மூலமாக தரப்பட்ட ஒன்று. எனவேதான், செய்யுளில் **"பேசியவா"** என்று சொல்கிறார் அருணகிரியார்.

கடவுளின் கிருபைதான் (குருவடிவாய்) அந்த மகானாய் வந்தது, அவனுக்கு அறிவுரையும் கொடுத்தது என்று அச்சாதகனுக்கு இன்னும் தெரியாது. அந்த மகான் அவனுடைய குரு என்றும் அவனுக்கு இப்போது தெரியாது. இது பின்னர்தான் தெரிய வருகிறது (13-ம் செய்யுள்).

குருவின் உபதேசமானது அச்சாதகனது மனதைத் தட்டி எழுப்பி விழிப்புறச் செய்தது. அதனால் மனஎழுச்சிபெற்று, மதிமயக்-கத்திலிருந்து தான் விடுபட்டுவிட்டதுபோல் நினைக்கிறான். அதற்குக் காரணம் குருவின் பலமான ஆன்மீக சான்னித்தியம், மற்றும் அவர் செய்த உபதேசத்தின் சக்தியுமே ஆகும். இவ்விரண்டும், தான் விடுதலையடைந்ததாக தற்காலிகமாக அவனை நினைக்க வைத்துவிடுகிறது. ஆனால், வெகுசீக்கிரமே அவன் திரும்பவும்

பழைய (மதிமயக்க) நிலைக்கே சென்று விடுகிறான்; எனினும், அவன் தற்போது பெற்ற அறிவுரை அவன் மனதில் நன்றாகப் பதிந்திருக்கிறது; அந்த மதிமயக்கத்திலிருந்து நிரந்தரமாக விடுதலையடைந்து, நிரந்தர ஞானம் பெற வேண்டுமெனில், அவன் மேலும் தொடர்ந்து தீவிர சாதனைகள் செய்ய வேண்டும். அர்ஜுனன் வாழ்வில் நடந்ததாக மகாபாரதம் கூறுவதை வைத்து நாம் இதை புரிந்து கொள்ளலாம் - குருக்ஷேத்ர யுத்தகளத்தில் பகவான் யோகேஸ்வர கிருஷ்ணரே முழுமையான ஆத்ம ஞானத்தை அர்ஜுனனுக்கு புகட்டியது (கீதை வாயிலாக புகட்டப்பட்ட அந்த ஆத்மஞானமானது அனைத்து சாஸ்திரங்களின் சாரம்; இதை திரட்டி அளித்ததோ சாக்ஷாத் பகவான்), அதை அவரிடமிருந்து அர்ஜுனனும் மிக்க சிரத்தையுடன் பெற்றுக்கொண்டது, தன் மதிமயக்கம் முழுதும் தீர்ந்தது என்று அப்பொழுது சொன்னது, ஆகியவைகளை நாம் மகாபாரதம் மூலம் அறிவோம். ஆனால் அந்த யுத்தம் முடிந்தபின், அவன் திரும்பவும் அதே பழைய அர்ஜுனனாகிவிட்டதாக அதே மகாபாரதம் இயம்புவதையும் அறிவோம். ஏன் அவனுக்கு இவ்வாறாக ஆனதென்றால், அவன் பெற்ற விஸ்வரூப தரிசனமும், ஆத்ம ஞானமும் அவனால் சாதனை செய்து பெறப்படவில்லை; அவனை ஊக்குவிப்பதற்காக தன் யோகசக்தியைப் பிரயோகித்து பகவானால் அவனுக்குத் தற்காலிகமாக அவை "கொடுக்கப்பட்டது"; எனவேதான் அவன் பழையநிலைக்குத் திரும்பினான்.

குருவின் முதல் உபதேசமானது எப்படிப்பட்டதென்றால், அடர்ந்து படர்ந்த பாசியால் முழுவதுமாக மூடப்பட்டதனால் உள்ளிருக்கும் நீர் வெளித்தெரியாதிருக்கும் ஒரு குளத்தில் வீசப்பட்ட பெரிய கல்லின் எடை ஏற்படுத்தும் அதிர்வினால் பாசி சிறிது நேரம் விலகி, குளத்தில் நீர் இருப்பதை வெளிப்படுத்திய பின்னர், மறுபடி பாசி ஒன்று சேர்வதைப் போன்றது. இதனால் என்ன ஆதாயம் என்று கேட்டால், நீரற்றது என்று நினைக்கப்பட்ட அந்த குளத்தில் நீர் இருப்பது தெரிய வந்ததுதான். அப்படியே, குருவின் உபதேசம், தான் உண்மையில் ஆத்மாதான் என்றும், இதுகாறும் தானென்று நினைத்துக் கொண்டிருந்த அவ்வுடல் தானல்ல என்றும் அச்சாதகனை, தற்காலிகமாகமாவது, நன்றாக உணரச்செய்கிறது. இது அடுத்த செய்யுளில் தெரியும்.

இந்த முதல் தொடர்பில், குரு அச்சாதகனுக்கு *'ஹிதோபதேசம்'* எனப்படும் இதமாக பேசியவாறு அறிவுரை செய்கிறார். அதன் மூலம் குழப்பத்தால் பாதிக்கப்பட்ட மனநிலையிலிருந்த அவனுக்கு பெரிய ஆறுதலளிக்கிறார். ஆனால், இங்கு குருவானவர் ஆத்மாவைப் பற்றி "பேசுகிறார்." அவ்வளவுதான்.

“உபதேசம்” என்று சொல்லிக்கொள்கிற வகையில் (தீக்ஷை) எதையும் உண்மையில் இப்பொழுது அவர் அளிக்கவில்லை; சாதகனை நன்கு தயார் செய்த பின்னரே “உபதேசம்” (தீக்ஷை) அருளுகிறார் (செய்யுள்-20). அதனால்தான், இப்பாடலிலும், 11-வது பாடலிலும் *‘மெய்ப்பொருள் பேசியவா’* என்ற சொற்களை பிரயோகித்து; 20-வது செய்யுளில் *‘உபதேசம் உணர்த்தியவா’* என்ற சொல்லை உபயோகிக்கிறார் அருணகிரியார்.

‘குமரன்’ என்ற சொல்லிற்கு ‘என்றும் குமரன், எப்பொழுதும் இளைஞன், மாற்றம் என்ற ஒன்றை அறியாதவன் - மாற்றமடையாதவன் - அதாவது பரம்பொருள்’ என்பது அர்த்தம். குமரன் என்றால் தீமையை அழிப்பவன் என்றும் பொருளாகும். ஜீவத்வத்திற்குக் காரணமான அறியாமையே தீமைகளில் மிக மிகக் கொடியது. இந்த அறியாமையினால் ஒருவன் தன்னைத் தன் உடலாகக் கருதுகிறான். மேலும், தன் மனைவி, மக்கள், வீடு ஆகியவைகளை நிலையானது, தனக்குப் பிரியமானவை மற்றும் தன்னுடையது என்றும் கருதுகிறான். குமரப் பெருமான் (குருவாக வந்து) ஆத்மா எனும் மெய்ப்பொருள் தத்துவத்தைப்பற்றி பேசுவதன் மூலம் இந்த மயக்கத்திற்குக் காரணமான அறியாமையை விலக்குகிறார்.

காப்புச் செய்யுளில் சிவபெருமானின் மூன்றாவது கண்ணிலிருந்து வெளிப்பட்ட தீப்பிழம்புகள் மூலமாக கந்தப் பெருமானின் அவதாரம் சரவணப் பொய்கையில் ஆறு தாமரை மலர்களில் ஆறு குழந்தைகளாக நிகழ்ந்தது என்று பார்த்தோம். பின்னர், பொய்கைக்கு பார்வதி தேவி சிவபெருமானுடன் வந்து அந்த ஆறு குழந்தைகளையும் வாரி அணைக்க, ஆறு முகங்களும், பன்னிரு கரங்களும் கொண்ட ஒரு உடலாக இணைந்த ஆறுமுகக் பெருமான் (‘ஷண்முகன்’) உருவெடுத்தார். அவர் இப்செய்யுளில் ‘இமவானின் புதல்வி பார்வதி தேவியின் மைந்தனே’ என்று அழைக்கப்படுகிறார்..

பிறிதொரு காலத்தில், கந்தப் பெருமான் அசுரர்களுடன் சமர் புரிந்து, சூரபத்மனையும் அவனது சகாக்களையும் அழித்தார். அவரே சாதகர்களின் உள்ளெதிரிகளான அறியாமை, ஆசை, பேராசை ஆகிய அசுர குணங்களோடும் சமரிட்டு அழித்தொழிக்கிறார். அதனால், கந்தப் பெருமான் (உள்ளும் புறமும் இருக்கிற) அசுரர்களை அழிப்பவன் என்று கொண்டாடப்படுகிறார்.

அருணகிரியார் இச்செய்யுளின் இரண்டாவது பாதியில் இக்கடவுளின் மூன்று வெவ்வேறு அம்சங்களை வைத்து பிரார்த்திப்பது மிகப்பெரிய ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்தது:

1. குமரன்: (அழிவில்லாமல் என்றும் இருக்கும் **நித்திய-அம்சம்** - அதாவது முக்காலத்திலும் இருக்கும் **பரம்பொருள்**);
2. பார்வதி மைந்தன்: (**அவதார-அம்சம்**, --- அதாவது எங்கும் பரவி இருக்கும் சைதன்ய-ஸ்வரூபமான பரம்பொருள், உலக நன்மையின் பொருட்டு, உடல் தாங்கி அவதாரமாகத் தோன்றுவது);
3. அசுரர்களை வதம் செய்தவன்: (**குரு-அம்சம்** - சாதகனின் அறியாமை முதலான அசுர குணங்களை உபதேசத்தினால் அழித்தல்).

இவ்வாறாக, நித்திய மெய்ப்பொருள் தத்துவமானது அவதாரமாகத் தோன்றுகிறது, மேலும் சாதகனின் குருவாகவும் வருகிறது; என்றாலும், அது அந்த மெய்ப்பொருள் தத்துவமான பிரம்மமாகவே இருக்கிறது --- இந்த மகத்தான உண்மையை அருணகிரியார் வெளிப்படுத்துகிறார். ஆனால், இந்த உண்மை இச்செய்யுளில் மறைபொருளாக (மறைமுகமாக) இருக்கிறது; செய்யுள்-13இல் வெளிப்படையாக, தெளிவாக சொல்லப்படுகிறது.

இப்படியாக, பரம்பொருளும் குருவுமான குமரப் பெருமான் கொடுத்த அறிவுரை அச்சாதகனுடைய மதிமயக்கத்தை (தற்காலிகமாக) நீக்கியது. அறியாமையினால், உடலை நானெனப்படும் ஆத்மாவாகவும், ஆத்மாவை உடலாகவும் தவறாக நினைத்து, அதன் காரணமாக, நெருங்கிய தொடர்பிலுள்ளவர்களை தன்னுடையவர்கள் என்று சொந்தம் பாராட்டுகிறான். ஆனால், உடல் ஒரு ஜடப்பொருள்; ஏனென்றால், அதில் உணர்வு இல்லை. அதால் தன்னையும் அறிந்து கொள்ள இயலாது; மற்ற பொருள்களையும் அறிய இயலாது. அந்த ஜடவுடலில் தற்காலிகமாக உறையும் ஆத்மா அதற்கு உயிரூட்டுவதால் அது உணர்வு உடையதாகத் தோன்றுகிறது. எனவே, உடல் ஆத்மா அல்ல; ஆத்மா உறையும் உறைவிடம் மட்டுமே. எனினும், இன்னதென்று விவரித்துக் கூறிட இயலாத அறியாமையின் காரணமாக, ஆத்மா தன்னை உடலாகவே கருதுகிறது. இத்தவறான கருத்து 'பிரமை' என்று சம்ஸ்கிருதத்தில் சொல்லப்படுகிறது; கவிதை நெறிக்கு ஏற்ப, இந்த பிரமையையே 'பிமரம்' என்று இச்செய்யுளில் திரித்து அழைக்கப்படுகிறது. குருவின் மெய்ப்பொருள் பற்றிய அறிவுரை, பிமரம் கெட --- அதாவது, அறியாமை விலக, -- உதவுகிறது.

தானம், மற்றும் தியானம் ஆகிய சாதனைகளால் மனது ஓரளவுக்கு சுத்தமாகும் பொழுது, பெருமான் தானே ஒரு குருவாக எழுந்தருளுகிறார். குரு என்பவர் மனித ரூபம் தாங்கி வரும் பெருமானே. எனவே, குரு மற்றும் அவதார புருஷர்களை (வெறும்)

சாதாரண மனிதர்கள் என்று கருதக்கூடாது; ஆனால், பொதுவாக சாதகர்கள் இத்தவறுதலை செய்கின்றனர். அப்படி செய்யக் கூடாது. பகவான் ஸ்ரீகிருஷ்ணர் ஸ்ரீமத்பகவத் கீதையில் (9:11-ல்) கூறுவதை இங்கு நினைவில் கொள்வோம்: "நான் ஒரு மானிட உருவம் எடுக்கும்போது, என்னுடைய பர சொரூபத்தையும், நான் உயிர்களுக்கு எல்லாம் ஈசனாயிருப்பதையும் அறியாத மூடர்கள், என்னை ஒரு சாதாரண மனிதன் என்றெண்ணி அவமதிக்கின்றனர்". ஆன்மிகப் பாதையில் அடிஎடுத்து வைத்துள்ள ஒரு புதுசாதகனால் மெய்ப்பொருள் தத்துவத்தை உடனேயே முழுவதுமாக புரிந்து கொண்டுவிட இயலாது. உணர்தல், வணங்குதல், சேவை செய்தல், பழகுதல், தியானித்தல் ஆகியவைகளைச் செய்ய ஏதுவான ஏதோவொரு வடிவம் இருந்தால்தான், சாதனையின் ஆரம்ப காலகட்டங்களில், மனதால் அவைகளில் ஈடுபாடு கொள்ள இயலும். ஆகையால்தான், பெருமான் குருவாய் வருகிறார்; எனவே குருவும் அவ்வாறே கருதப்பட வேண்டும். பரமாத்மா ஒரு அவதாரத்தை எடுத்து, சாதகனுக்கு கடவுளை அடையும் வழியைக்காட்டிட மனித உருவில் குருவாக வருகிறார். நம்மை அவர் நிலைக்கு (இறைநிலை) எடுத்துச்செல்லுவதற்கு பெருமான் நம்முடைய (மனித) நிலைக்கு கீழிறங்கி வருகிறார். இதுவே "அவதாரம்" (*அவதரணம்*) என்று அழைக்கப்படுகிறது.

==========

செய்யுள் – 9

==========

மட்டூர்குழல் மங்கையர் மையல்வலைப்
பட்டூசல்படும் பரிசென்று ஒழிவேன்
தட்டூறவேல் சயிலத்து எறியும்
நிட்டூர நிராகுல நிர்ப்பயனே.

பொழிப்புரை: "க்ரௌஞ்ச பர்வதத்தை துளைத்துச் செல்லுமாறு தன் வேலை எய்திய கடுமையானவரும், துன்பமற்றவரும், பயமற்றவருமான வேலாயுதப் பெருமானே! தேன் சொறியும் வாசனைப் பூக்களைச் சூடும் மங்கையரின் மோக வலையில் அகப்பட்டு, ஊஞ்சல்போல் என் மனம் ஊசலாடி தடுமாறிக்கொண்டிருக்கும் நிலையிலிருந்து நான் என்றுதான் விடுபடுவேன்?".

விளக்கவுரை

குருவால் (சென்ற செய்யுளில்) தரப்பட்ட அறிவுரைகளின் தாக்கம் சிறிது காலத்திற்குப் பின் பலவீனமடைகிறது. அப்பொழுது, அவனிடம் பழிவாங்க இத்தனை நாட்களாகக் காத்துக்கொண்டிருந்த, சாதகனின் ஆழ்மனதில் புதைந்து கிடக்கும் ஆசைகள் எனும் பழைய *சம்ஸ்காரங்கள்* உடனே வெளிப்பட்டு அவனை தொந்தரவு செய்யத் தொடங்குகின்றன. இனிய சுகந்தத்தை வெளிஉமிழும் பூக்களை கூந்தலில் சூடிய மாதர்களை நினைத்த / கண்ட மாத்திரத்தில் அவன் மனம் சிதறி அலைபாயத் தொடங்குகிறது. மோக வலைப்பட்டு, மனம் கடிகார 'பெண்டுலம்' போல் பெண்கள் அழகின் ஈர்ப்பு மற்றும் கடவுளின் மேதக்க அழகு ஆகிய இரண்டிற்குமிடையே ஊசலாடுகிறது.

சென்ற செய்யுளில் குரு செய்த அறிவுறுத்தல், தான் உடல் அல்ல என்றப் புரிதலை சாதகனின் புத்தியில் ஏற்படுத்தியிருந்தாலும், அவன் புலனின்பப் பொருள்களின் மீதான வசீகரங்களிலிருந்து, குறிப்பாக மகத்தொந்தரவு செய்யும் பெண்களின் மீதான மோகத்திலிருந்து, விடுபடவில்லை. அவன் தன் புலன்களைக் கட்டுப்படுத்தி, இறைதியானத்தில் ஈடுபட முயலத்தான் செய்கிறான். ஆனால், அவன் மனமோ அவன் இலட்சியத்திற்கும்

கண்ணெதிரேயுள்ள பொருள்களுக்கும் இடையே, --- கடவுளின் சக்திக்கும், ஏங்கவைக்கும் புலன்விஷயங்களுக்கும் இடையே; தன் அறிவார்ந்த புரிதலுக்கும், தினசரி வாழ்க்கை நடைமுறையில் ஏற்படும் சலனங்களுக்கும் இடையே --- அகப்பட்டுப் படாதபாடுபடுகிறது. இம்மாதிரியான இக்கட்டான சமய சந்தர்ப்பங்களை, அனேகமாக ஒவ்வொரு உண்மையான சாதகனும் எப்பொழுதாவது அவசியம் (ஒருமுறையோ, பலமுறையோ) எதிர்கொண்டுதான் இருப்பான். எனவே, அச்சாதகன் கடவுளிடம் சரண் புகுந்து, இவ்வாறு கேட்கிறான் : 'ஓ ஈஸ்வரா, எப்பொழுது நான் இத்தகைய இக்கட்டுகளிலிருந்து விடுபடுவேன்?'

மனம் இவ்வாறு ஊசலாடித் தவிக்கும் நிலை ஒவ்வொரு சாதகனும் அனுபவிக்கும் ஒன்றுதான். அவன் தன் மனதை நிலைநிறுத்த ஒரு இலக்கு வைத்திருக்கிறான்; அதாவது, ஒரு இஷ்ட தேவதையை இலக்காகத் தெரிந்தெடுத்து, அதன் வடிவத்தை தியானம் செய்ய விழைகிறான். ஆனால், அவனுக்கு இன்பத்தை ஈட்டும் விஷயங்கள், அவனை அவ்வாறு செய்ய விடுவதில்லை; அவைகள் அவன் மனதை வசீகரித்து, அவனது கவனத்தை இலக்கிலிருந்து வலுக்கட்டாயமாக திருப்பி, தம்வசம் ஈர்த்துக் கொள்கின்றன. அவன் எவ்வளவுதான் கடினமாக முயற்சித்து, தன் மனதை அவைகளிலிருந்து மீட்டு, தன் இலக்கான கடவுளின் மேல் பொருத்தினாலும், அடுத்த ஒருசில மணித்துளிகளிலேயே, மனம் திரும்பவும் அச்சிற்றின்ப விஷயப் பொருள்கள் வசமாகி விடுவதை அறிகிறான். தன் இலக்கான இதயத்திலிருக்கும் ஆத்மா/இறைவன் (உள்ளுணர்வு) மற்றும் வெளியிலிருக்கும் இன்பம்தரும் பொருள்கள் ஆகிய இவ்விரண்டிற்கும் இடையேயும்; எண்ணத்தை தன் இலக்கின்மேல் ஒருமைப்படுத்தும் முயற்சி மற்றும் எண்ணத்தை தன்வசம் ஈர்க்கும் உலகப் பொருள்கள் ஆகிய இவ்விரண்டிற்கும் இடையேயும்; மனம் ஊசலாடிக் கொண்டிருப்பது சாதகனுக்கு மிக்க சிரமத்தைத் தருகிறது, இது அவனுக்கு ஒரு பெரிய சோதனையும்கூட. இத்தகைய வருத்தத்தைத்தரும் மன ஊசலாட்டங்கள் கடவுளின் கிருபை ஒன்றினாலன்றி வேறு எவ்விதத்திலும் ஓயாது. எனவே, அக்கிருபையை வேண்டி அச்சாதகன் இச்செய்யுளில் பிரார்த்தனை செய்கிறான்.

மோக வசப்பட்ட அன்பு ஒரு வலைக்கு இங்கு ஒப்பிடப்படுகிறது; ஏனெனில், எப்படி க்ரௌஞ்ச பர்வதத்தின் உள்ளே செல்லும் பாதைகளில் சென்று மாட்டிக்கொண்டவர்கள் அதிலிருந்து வெளிவர முடியாமல் தவித்தனரோ, அப்படியே ஒரு வலைக்குள் அகப்பட்டுக் கொண்ட எவராலும் அவ்வளவு எளிதில் தன்னைத் தானே விடுவித்துக்

கொள்ள இயலாது. அதேபோல், எப்படி கந்தனின் வேல் மட்டுமே அப்பர்வதத்தை துளைத்துத் தூள்தூளாக்கியதோ, அப்படியே கடவுளின் கிருபையால் மட்டுமே ஒருவன் தன்னை மோக வலையிலிருந்து விடுவித்துக் கொள்ள இயலும். அதனால்தான், அச்சாதகன் தன் பிரார்த்தனையை இவ்வாறு வைக்கிறான்: "பெருமானே, தாங்கள் தானே வேலாயுதத்தை க்ரௌஞ்ச பர்வதத்தின் மீதுப் பாய்ச்சினீர்கள், அதுபோல் தாங்களே என் மீது தங்கள் கருணையை ஏன் பாய்ச்சக்கூடாது?" ஒவ்வொரு பாடலிலும், அருணகிரியார் கந்தக் கடவுளை அப்பாடலின் கருத்திற்கேற்ற அடைமொழியிட்டு அழைப்பது இந்நூலின் சிறப்பு. எனவே, இச்செய்யுளில் ஷண்முகக் கடவுளை வேலாயுதத்தைப் பாய்ச்சி க்ரௌஞ்ச பர்வதத்தை தூளாக்கிய (மறக் கருணை கொண்ட) நிட்டூரனே (*"வேல் சயிலத்து தட்டூடற எறியும் நிட்டூர*") என்கிறார், க்ரௌஞ்சனெனும் அசுரனை 'பெருமான் பிறிதொரு காலத்தில் வந்து கொல்லும் வரை, பர்வதமாக இருக்கக் கடவாய்' என்று அகஸ்திய முனிவர் சபித்ததை 4-ம் செய்யுளில் விரிவாகப் பார்த்தோம், அதற்கேற்ப அசுரனுக்கெதிராக தயவுதாட்சன்யமின்றி கொடும் கோபத்துடன் போரிடும் நிட்(ஷ்)டூரன் என்று அடைமொழி தருகிறார்.

பெருமான் "நிட்டூரன்" ---- கடுமையானவன், கொடும்கோபி, மறக்கருணை. அவர் யுத்தத்தில் எதிரிகளை வதம் செய்வதில் மட்டுமல்ல, தன் பக்தர்களின் உள்ளெதிரிகளான ஆசை, பேராசை, கோபம், அகந்தை போன்ற அசுர குணங்களைத் தன் கிருபையை பொழிவதன் மூலம் வதம் செய்வதிலும் நிட்டூரனே.

பெருமான் "துன்பமற்றவர்" ---- அவர் அனைத்திலும் எல்லையற்றவர், எனவே எந்த வகையான துன்பங்களும் அவரை பாதிப்பதில்லை. ஆகையால் அவர் எப்போதும் ஆனந்தத்தில் மூழ்கியிருப்பவர். அவர் பேரின்பம் - ஆனந்தமயம். மேலும் அவர் தன் பக்தர்களை துன்பமற்றவர்களாகச் செய்கிறார்.

பெருமான் "பயமற்றவர்". அதிபயங்கர சூரபத்மன், மற்றும் எண்ணற்ற அசுரர்களுடன் சமர் புரிவது அவருக்கு ஒரு விளையாட்டுப் போன்றது. தன் பக்தர்களுக்கு பயமற்ற நிலையாகிய முக்தியை அளிப்பவராகவும் இருக்கிறார்.

அச்சாதகன் கடவுளின் பிரத்யேகமான கருணையை தந்தருள 'ஓ நிட்டூரனே, என்னைக் காத்தருள்வாய்' என்று வேண்டுகிறான்; ஏனெனில் இந்த மதிமயக்கம் எனும் மாயையை, --- தந்திரமாக சிக்க வைக்கும் பெண்களின்மேலுள்ள காமமயக்கத்தை --- வெறும் மனித முயற்சியால் மட்டும் கடக்க முடியாது. நயமான கண்டிப்போ, புத்திமதியோ இங்கு பயனளிக்காது. பின் எதுதான் பயனளிக்கும்

என்றால், ஒருவனை இந்தக் கொடும் பிணியிலிருந்து விடுவிக்க கடவுள் நிட்டூரனாகி (மறக்கருணை) கடுமையான முறைகளை உபயோகிக்க வேண்டியிருக்கும்.

இச்செய்யுள் பெண்களுக்கு எதிரானது அல்ல, அவர்களைக் கண்டிப்பதும் அல்ல; ஆண்களின் வலிவின்மையையும் மட்டுமீறிய ஆசையினால் காமமயக்கத்தில் கட்டுண்டு அவர்கள்படும் துன்பத்தையும் எடுத்துக் காட்டுகிறது. மேலும் எப்படி ஆண்கள் பெண்களின்மேலுள்ள காமமயக்கத்தால் துன்பப்படுகிறார்களோ, அதைப்போல பெண்களும் ஆண்களின்மேலுள்ள காமமயக்கத்தால் துன்பப்படக்கூடும். இருபாலரும் இத்துன்பத்திலிருந்து விடுபட இறைவனின் அருளை நாடவேண்டும்.

==========

செய்யுள் – 10

==========

கார்மாமிசை காலன்வரில் கலபத்து
ஏர்மாமிசை வந்தெதிரப் படுவாய்
தார்மார்ப வலாரிதலாரி எனும்
சூர்மாமடியத் தொடு வேலவனே.

பொழிப்புரை: "ஓ வேலவனே! எப்பொழுதும் வெற்றி மாலைகளால் அலங்கரிக்கப் பட்டிருக்கும் திருமார்பை உடையவனே! வலன் என்ற அசுரனுக்குப் பகைவனான இந்திர லோகத்திற்கு (தலைவனான இந்திரனுக்கு) எதிரியான, மாமரமாகி நின்ற சூரபத்மன் அழியும்படி செலுத்திய வேலாயுதக் கடவுளே! (என் உயிரை எடுத்துப்போக) யமதர்ம ராஜா தன் கரிய எருமை வாகனத்தில் வருவாராயின், அழகிய தோகைகளை உடைய உனது தெய்வீக மயில் வாகனத்தில் ஏறி வந்து, எனக்குக் காட்சி தந்து அருள்வாய்!"

விளக்கவுரை

காமமயக்கத்தில் கட்டுண்டு துன்பப்படுவதுடன் (செய்யுள்-9), சில சமயங்களில் சாதகன் தனக்கு மரணம் வரக்கூடும் என்றும் எண்ணுகிறான். சாதகனின் மனப்போராட்டம், அதனால் ஏற்படும் மன வருத்தம், அவன் இயற்றும் தவங்கள் மற்றும் சாதனைகள், ஏறிடும் வயது, போன்ற காரணங்களால், அவன் உடல் மெலிந்து வருவது இப்படி எண்ணக் காரணமாய் இருக்கலாம். இதற்கு அர்த்தம் அவன் இறப்பதற்கு பயப்படுகிறான் என்றல்ல; ஆனால், அவன் மிகவும் தீவிர சாதகனானதால், கடவுளை அடைவதற்கு முன் இறந்திட அவன் விரும்பவில்லையென்பதே இதன் பொருள். மேலும், மரணத்தை நினைவில் இருத்துவதும் சாதனையில் உதவிசெய்யும் ஒரு முக்கிய அங்கமே, அது அவனை மேலும் தீவிரமாகக் கடவுளிடம் சரண் அடையச்செய்யும். எனவே, "ஒருவேளை யமன் என் உயிரை எடுத்துப்போகத் தன் கரிய எருமை வாகனத்தில் ஏறி வருவாராயின், அழகிய தோகைகளை உடைய உனது தெய்வீக மயில் வாகனத்தில் நீ ஏறி வந்து என்னைக் காப்பாயாக," என்று அவன் கடவுளிடம் பிரார்த்திக்கிறான்.

வலன் என்றொரு அசுரன் இருந்தான். அவன் சிவபெருமானைக் குறித்து கடும் தவம் செய்து, அவரிடமிருந்து "தான் இறந்த பிறகு, தன் உடல் நவரத்தினங்களாக மாறவேண்டும்' என்ற வரத்தை வேண்டிப் பெற்றான். அவ்வாறு வரம் பெற்றபின், தேவர்களின் அரசனான இந்திரனுடன் ஒரு போர் புரிந்து, அவனை தோற்கடித்தான். இந்திரன், போரில் தோற்றிருந்தாலும், அவனுடைய வீரத்தை மெச்சி தன்னிடமிருந்து ஒரு வரம் கேட்டுப்பெறுமாறு வலனிடம் கூறினான். இதைக் கேட்ட அவ்வசுரன் சிரித்து, "என்னால் போரில் தோற்கடிக்கப்பட்ட நீ என்னை வரம் வேண்டிப் பெறச் சொல்கிறாயே! வேண்டுமானால் நான் உனக்கு ஒரு வரம் தருகிறேன், கேட்டுப் பெறுவாயாக", என்றான். இந்திரன் தனக்குக் கிடைத்த வாய்ப்பை நழுவவிடாமல், அசுரனை "யாகத்தில் பலியிடும் ஒரு பசுவாக ஆக" வேண்டினான். அவனும் அவ்வாறு செய்ய, அவ்வசுரனை இந்திரன் அழித்தான். அவ்வாறு, வலன் இறந்தவுடன், அவன் சிவனாரிடமிருந்து பெற்ற வரத்தால், அவன் உடல் நவ (ஒன்பது) ரத்தினங்களாக மாறியது – 1. இரத்தம் – மாணிக்கம் / ரூபி, 2. பல் – முத்து, 3. மயிர் – வைடூரியம், 4. எலும்புகள் – வைரம், 5. பித்தம் – மரகதம், 6. கொழுப்பு – கோமேதகம், 7. சதை / ஊன் – பவளம், 8. கண் – நீலம், 9. கபம் – மஞ்சள் எனப்படும் புஷ்பராகம்.

வலனை இவ்வாறு தவறான முறையைப் பிரயோகித்துக் கொன்றதாலும், மேலும் வேறு பல கொடுமைகளைச் செய்ததாலும், இந்திரன் சூரபத்மன் என்ற அசுரனால் பலவிதமாக துன்பப்படுத்தப்பட்டான். சூரபத்மன் இந்திர லோகத்தின்மேல் படையெடுத்து அதை எரித்தான். எனவே, "வலன் என்ற அசுரனைக் கொன்ற இந்திரனுக்கு எதிரியானவன் சூரபத்மன்" என்று சொல்லப்பட்டுள்ளது.

சூரபத்மனும், அவன் படைவீரர்களும், வரலாறு அதுவரைக் காணாத, ஒரு பெரும் போரை கந்தக் கடவுளுடன் தொடுத்தனர். பெருமான் அவன் படை, தேர் மற்றும் அனைத்தையும் அழித்தார். சூரபத்மன் ஒரு ஆதரவுமின்றித் தனியாக நின்றான். அப்படியிருந்தும், அகந்தையே உருவமான அவனை, அவ்வகந்தை விடவில்லை. அவன் அழியவேண்டிய காலமும் வந்து சேர்ந்துவிட்டது. ஆயினும், அந்த சூரபத்மன் சிவபெருமானை நோக்கிப் பெரும் தவம் செய்து, அவருடைய பூரண ஆசியைப் பெற்றிருக்கிறான். ஆனால், அந்த சிவபெருமானே தற்போது அவனுடன் போர்புரியும் முருகப் பெருமானாக வந்திருக்கிறார் என்பதை அவன் அறிந்திலன். இருந்தும், அவன் முன்பு செய்த தவம் மற்றும் இப்போது வீரத்தோடு செய்த கடும்போரிலும் மிக்க மகிழ்ச்சியடைந்த கந்தப் பெருமான், அவன்பால் இரக்கம் கொண்டு, தனது விஸ்வரூபத்தை அவனுக்குக் காட்டி அருளினார். விஸ்வரூப

தரிசனத்தை அவன் பெற்றது ஒரு கிடைத்தற்கரிய ஆசியே; அதைப் பெற்ற அவன் அவரது தெய்வீகத் தன்மையை உணர்ந்து, அவரைப் பணிவுடன் வணங்கினான்.. ஆனால் என்ன பயன்? அவனிடமிருந்த அகந்தையின் சக்திதான் என்னே! முருகப் பெருமான் தன் விஸ்வரூப தரிசனத்தை விலக்கிய அடுத்த நிமிடத்திலேயே முருகப் பெருமான் கடவுள் என்பதை அவன் மறந்து, தன் அஸ்த்திரங்களுடன் திரும்பவும் போர் புரியத் துவங்கினான். இப்பொழுது, தனியொருவனாக ஆகியதால், தனது மாயா சக்திகளை முழுமையாகப் பிரயோகித்து, அவன் ஒன்றன்பின் ஒன்றாக வெவ்வேறு உருவங்கள் எடுத்துப் போரிட்டான். பெருமானும் ஒவ்வொன்றாக அவைகளை அழித்துக்கொண்டே வந்தார். கடைசியில், அவ்வசுரன் ஒரு 'மா'-மரமாகத் தோன்றினான். நடுக்கடலில் நன்றாக வேரூன்றி, கிளைகளுடன் ஆகாயம் வரை வளர்ந்து, பூமியையும் ஆகாயத்தையும் பயங்கரமாகக் குலுக்கி அதிரச் செய்து, தேவர்கள் உட்பட அனைவரிடத்திலும் பேரச்சத்தை அவன் உருவாக்கினான். பூமியும், சொர்க்கமும் பொடிப்பொடியாகி விடும்போல் தோன்றியது. உடனே, கந்தப் பெருமான் தன் கூரிய வேலாயுதத்தை அம்மாமரத்தின் மீது எறிந்து அதை இரண்டாகப் பிளந்து அவ்வசுரனைக் கடலில் வீசினார். சூரபத்மனை இவ்வாறு வேல் எய்தி அழித்தவரும், தனது மார்பில் எப்பொழுதும் வெற்றிவாகைகளைத் தரித்திருப்பவருமான வேலாயுதக் கடவுளிடம், அச்சாதகன் "ஓ பெருமானே, ஒரு வேளை யமன் என் உயிரைப் பறிக்க வந்தால், நீ உன் மயில்மீது வந்து என் முன் தோன்றி என்னைக் காப்பாயாக', என்று பிரார்த்தனை செய்கிறான்.

மரண பயத்தைப் போக்கிக் கொள்வதற்கு இச்செய்யுள் மிகவும் உகந்த பிரார்த்தனையாகும். இறைவன்மேல் பக்தி கொண்டிராத லௌகீகவாதிகளை மட்டுமே யமன் நெருங்குவார். கரிய எருமை வாகனத்தின் மீது அமர்ந்து யமன் வரும் கோலமே பயங்கர அச்சத்தை ஏற்படுத்தும். அதே சமயம், வெற்றிவாகை சூடிய மார்புடன், அழகிய தோகைகளையுடைய மயில் மீது அமர்ந்து பவனி வரும் வசீகரமான கந்தனின் உருவமே பக்தனின் பயம் போக்கி உள்ளத்தைக் குளிரவைக்கும், அந்த ஜீவாத்மாவுக்கும் ஆறுதலளிக்கும். எனவே, இந்த பிரார்த்தனை (விடுக்கப்படுகிறது). இவர்கள் இருவருக்கிடையில் என்னே அற்புதமான பேதம்! – ***கார் மாமிசை காலன்*** (கரிய எருமை வாகனத்திலமர்ந்து வரும் அதிபயங்கர யமன்) ஒருபுறம், மறுபுறம் ***கலபத்து ஏர் மாமிசை கந்தன்*** (அழகிய தோகைகளை உடைய மயில் வாகனத்திலமர்ந்து வரும் வசீகர கந்தன்). என்னே கந்தன் மகிமை!

==========

செய்யுள் – 11

==========

கூகாஎன என்கிளை கூடி அழப்
போகாவகை மெய்ப்பொருள் பேசியவா
நாகாசல வேலவ நாலுகவித்
தியாகா சுரலோக சிகாமணியே.

பொழிப்புரை: "நாகாசலத்தில் (திருச்செங்கோட்டு மலை மீது) குடிகொண்டுள்ள வேலாயுதப் பெருமானே! நான்குவகைக் கவிபாடும் ஆற்றலை அளிப்பவரே! தேவலோகத்தின் சிகாமணியே! எனது சுற்றத்தார் ஒன்றுகூடி, 'கூகா' என்று கூச்சலிட்டு குழுமி, ஒப்பாரி வைத்து அழுமாறு நான் இறந்து போகாதிருக்கும்வண்ணம், உயரிய மெய்ப்பொருள் பற்றி அறிவுரைகள் தந்தருளிய அற்புதம்தான் என்னே!"

விளக்கவுரை

முன்பு கொடுத்த குருவின் அறிவுரைகள் (செய்யுள்-8) அச்சாதகனுக்கு உடனடியாகத் தேறுதலை அளித்தது. ஆனாலும், புலனின்பப் பொருள்களின் வசீகரமும் (செய்யுள்-9), மரண எண்ணமும் (செய்யுள்-10) அவனைத் தொந்தரவு செய்ய ஆரம்பித்தன. அவ்வாறு மிகவும் கலக்கமடைந்த நிலையில், சாதகன் தன் குருவிடம் திரும்பவும் உதவி பெற விரைகிறான். அவனது கலங்கிய மனதின் நிலையையும், அவன் இப்போதிருக்கும் இக்கட்டான நிலையையும் நன்குணர்ந்து கொண்ட குரு, உயரிய மெய்ப்பொருள் தத்துவத்தைப் பற்றி அவனுக்குத் திரும்பவும் அறிவுறுத்துகிறார்; ஆனால், இம்முறை மேலும் ஆணித்தரமாக அவன் புத்தியில் நன்கு பதிகிறமாதிரி அறிவுறுத்துகிறார்: "நீ அழியக்கூடிய இந்த சரீரமோ இந்திரியங்களோ அல்ல. அவை உன்னை ஏமாற்றுகின்றன. நீ அந்த உண்மையான 'நான்' எனப்படும் 'ஆத்மா', அந்த ஆத்மா ஆனந்தமயமானது, அழியாதது, அழிக்கவும் முடியாதது," என்றெல்லாம் பலவாறாக அவனுக்கு மெய்ப்பொருளைப் பற்றி எடுத்துரைக்கிறார். அவர் மேலும் அவனுக்கு உறுதி கூறினார்: "பயப்படாதே. இந்தத் துன்பங்களிலிருந்து நீ விடுபடுவது நிச்சயம், நீ இப்பிறப்பிலேயே பரம்பொருளை அடைவாய். நிரந்தரமாக ஆனந்தத்தில் மூழ்கி

இருப்பாய்." குருவின் (குருவாக வந்துள்ள பெருமானின்) இத்தகைய உறுதிமொழி அச்சாதகனுக்கு, தான் சாதாரண மனிதர்களைப் போல் இறக்கப் போவதில்லை என்றும், எனவே தன் சுற்றத்தினர் தன் சவத்தைச் சுற்றி குழுமி, அழுது, ஒப்பாரி வைத்திடும் நிலைமையும் ஏற்படாது என்றும் திடமான நம்பிக்கையைக் கொடுத்தது.

செய்யுள்கள் 8 மற்றும் 11-ல், 'மெய்ப்பொருள் "பேசியவா"' என்று கூறியிருப்பதிலிருந்து, அச்சாதகன் குருவிடமிருந்து பெற்றது கடவுள், மெய்ப்பொருள் அல்லது ஆத்மாவைப் பற்றிய "அறிவுரைகள்" மட்டுமே, அவை உண்மையில் "உபதேசம்" அல்ல. (உண்மையான "உபதேசம்" (தீக்ஷை) பின்னர்தான் அவனுக்குக் கிடைக்கிறது ---- செய்யுள்-20ல்).

தென்னிந்தியாவில் சேலத்தின் அருகிலுள்ள நகரம், திருச்செங்கோடு. அந்த நகரத்தின் மறுபெயர் 'நாகாசலம்' ஆகும். ஆங்கு உள்ள ஒரு அழகிய மலையின் உச்சியில் அமைந்த கோவிலில் கந்தப் பெருமான் அனைவராலும் போற்றித் தொழப்படுகிறார். அருணகிரியார் அவரது தலயாத்திரையின்போது சென்று தரிசித்த கோவில்களில் இது முக்கியமானதொன்று. இது அவர் மனத்தைக் கொள்ளைகொண்டது. இதற்கான காரணங்கள் பல --- வசீகரமான ரூபம் கொண்ட கந்தப் பெருமான் (மூர்த்தி), கோவில் அமைப்பின் பாங்கு, அக்கோவில் அமைந்துள்ள இடத்தின் அழகு, ஆகியவைகள் ஆகும். இதனால் தன் மனதை இங்கு பறிகொடுத்த அருணகிரியார், 'கந்தர் அலங்காரம்' எனும் தனது மற்றொரு நூலில், பின்வருமாறு கூறுகின்றார்: "இந்த திருச்செங்கோட்டு தேவனின் அழகைக் கண்டு களித்து, அவனைத் தொழ நான்முகக் கடவுளான பிரம்மாஜி நாலாயிரம் கண்களுடன் என்னை படைக்காமல் போனாரே!" அருணகிரியார் இத்தலப் பெருமானைப் போற்றிப் பல திருப்புகழ் பாடல்கள் பாடி, அப்பெருமானிடமிருந்து ஒரு வரமும் பெற்றார்; 'நீ எங்கிருந்தாலும், "கந்தா" என்று என்னை விளித்துக் கூப்பிட்டால், யான் அங்கு உடனே வருவேன்'. திருச்செங்கோட்டுப் பெருமானின் பெருமை அத்தனை சிறந்தது.

முருகப் பெருமான் தமிழ் மொழியை அளித்ததால், தமிழ்-தெய்வம் என்று போற்றப்படுகிறார். ஆதலால், அவர் தமிழ் மொழியின் நான்கு வகைகளான கவிதைகளையும் ------ ஆசு கவி, மதுர கவி, சித்திர கவி, வித்தார கவி எனப்படும் நான்குவித கவிதைகளையும் ---- இயற்றும் புலமையைத் தர வல்லவர் ஆவார்.

ஆசு கவி : கொடுத்த பொருளை அடுத்த பொழுதிற் பாடும் பாட்டு (கவி).

மதுர கவி : இனிமையும் இசையும் பெருகப் பாடுங் கவி.

சித்திர கவி : சித்திரத்தில் அமைத்தற்கு ஏற்பப் பாடும் இறைக் கவி.

வித்தார கவி : விரிவாகப் பாடும் பிரபந்தம் (செய்யுள் நூல்).

==========

செய்யுள் – 12

==========

செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மாஇரு சொல்லற என்றலுமே
அம்மா பொருளொன்றும் அறிந்திலனே.

பொழிப்புரை: "சிவந்த நிறம் கொண்ட மானின் (மான் வடிவத்தில் இருந்த லக்ஷ்மி தேவியின்) மகளாகப் பிறந்த வள்ளியைக் கவர்ந்தவரும், மகிமை வாய்ந்தவரும், பிறப்பும் இறப்பும் (ஆதியும், அந்தமும்) அற்றவருமான முருகப் பெருமான், 'சொல்லற' (மௌனமாக) 'சும்மா இரு' என்ற அக்கணமே, நான் (இந்த உலகப்) பொருள் ஒன்றையும் அறியவில்லை! என்ன ஆச்சரியம்!"

விளக்கவுரை

பிரம்ம தேவனின் மானசீக புத்திரர்களான சனகர், சனந்தனர், சனாதனர் மற்றும் சனத் குமாரர் என்ற நான்கு குமாரர்களும் சிவனாரின் இன்னொரு ரூபமான தக்ஷிணாமூர்த்தியிடம் சென்று, பரம்பொருளை அடையும் யோகத்தை உபதேசித்திட வேண்டினர். அவர் யோக நிலைகளை அவர்களுக்கு விளக்கி உபதேசம் செய்தார். முடிவில், யோகத்தின் கடைசி நிலையான "சமாதி" நிலையை உபதேசிக்க வேண்டிய கட்டத்தில், அவர் "சொல்லற" மௌனமாகி ------ ("சமாதி"யில் ஆழ்ந்து) அந்த நால்வரையும்கூட "சும்மா இரு"த்தல் நிலையில் (சமாதி நிலையில்) இருக்கச் செய்தார். அதாவது, அவர் **'சொல்லற'** (ஒன்றும் பேசாமல்) இருந்து, அவர்களையும் **'சும்மா இரு'**-ங்கள் என்று சொல்லாமற் சொல்லி, மௌனமாக ஆக்கி 'சமாதி' நிலையை அடைய வைத்தார். அவர்களுக்கு வார்த்தைகளால், பேச்சால் எவ்வித உபதேசமும் செய்யாமல், அச்சமாதி நிலையை அனுபவிக்க வைத்தார். சமாதி நிலை என்பது ஆழ்ந்த மௌன நிலை. அந்நிலையை அவர்களும் அடையமாறு செய்ய, தானே மௌனமாக இருந்து உபதேசித்தார். சமாதிநிலையை உபதேசித்திட தானே சமாதிநிலையில் இருந்து, சொற்களால் எவ்வித உபதேசமும் செய்யாமல் அவர்களையும் சமாதிநிலை எய்த வைத்தார். எப்படி அவர் சொல்லாமல் சொல்லி சமாதிநிலையை வெளிப்படுத்தினார்

அல்லது அனுபவிக்கவைத்தார் என்பது ஆன்மிகத் துறையில் ஒரு மிகப்பெரிய மர்மம் தான்!

மேலே கொடுக்கப்பட்ட உதாரணம் புரிந்து கொள்வதற்காக தரப்பட்ட ஒன்று. பிரம்ம தேவனின் மானசீக புத்திரர்களானதால், அந்த நால்வரும் பிறந்ததிலிருந்தே உலக விவகாரங்களால் சிறிதும் களங்கப்படாத முற்றிலும் தூய்மையான மனம் கொண்டிருந்தனர்; ஆகையால், சமாதியில் எப்பொழுது வேண்டுமானாலும் நுழையத் தகுதி பெற்றிருந்தனர். ஆனால், அச்சாதகனோ சாதனையின் ஆரம்ப நிலையிலே இருப்பதால், உண்மை சமாதி நிலையை அடைவதற்கான தகுதியை இன்னும் பெற்றிருக்கவில்லை. எனவே, அவனுக்கு குருவானவர் கணநேர கண்ணோட்டமாக (glimpse), அதாவது மாதிரிக்கு (sample-க்கு), ஒரு தற்காலிக சமாதி அநுபவத்தைத் தந்தருளினார். அதை எவ்விதத்தில் அவனுக்கு அருளினார்? குரு கிட்டத்தட்ட இவ்வாறு செய்தாரெனலாம்: குரு சாதகனை தன் முன்னால் அமரச் சொல்லி, அவனைக் கண்களை மூடிக்கொண்டு, இறைவனைப்பற்றி நினைக்கச் சொல்வார். அதே சமயம் தானும் கண்களை மூடிக்கொண்டு, புலனிந்திரியங்கள், மனம் ஆகியவைகளைத் திரும்பப் பெற்று, சமாதிநிலைக்குள் புகுவார். சமாதிக்குள் நுழையும் அத்தருவாயில், குரு **'சொல்லற'** (பேசாமல், மௌனியாய்) ஆகி விடுவார் ---- அந்நிலையில் புலன்களும், மனமும் அடங்கியிருக்கும். இவ்வாறு, அவர் சமாதியில் ஆழ்ந்து விடுவார் ----- உண்மையான 'மௌனம்' **'சொல்லற'** ஆகிவிடுவார். சமாதியில் ஆழ்ந்த குருவானவர் சாதகனின் மனதில் (ஆத்மாவில்) நுழைந்து, அச்சமாதி நிலையை அவன் மனதிலும் தூண்டி விடுவதன் மூலம், அவனை **"சும்மா இரு"**க்கச்செய்து (மௌனமாக்கி) சமாதியில் ஆழ்த்துகிறார். அவர் இவ்வாறு அவனை ஒரு சமாதி நிலையைத் தற்காலிகமாக அநுபவிக்க வைக்கிறார். அவ்வாறு செய்தவுடன் **("என்றலும்")**, அவனுள் என்னதான் நடக்கிறது? சாதகன் தன் உடல், சுற்றுப்புறம், பரந்த உலகம் ஆகியவைகளைப் பற்றிய உணர்வை இழந்துவிடுகிறான்; (உலகிலுள்ள) பொருள்கள் எதுவும் அவனுக்குத் தெரியாது போகின்றன --- **"பொருள் ஒன்றும் அறிந்திலன்".** அத்தருணத்தில், குருவானவர் சாதகனின் விழிப்புணர்வாகவே தன்னை தோற்றுவித்துக் கொண்டு (இக்குருவாக வந்தவர் பெருமானே என அடுத்த செய்யுளில் காண்போம்), அவனுக்கு மௌனமாக "அறிவுரை" செய்கிறார். அப்பொழுது இறை-உணர்வு ஜீவ-உணர்வில் புகுந்து அதை மேற்கொண்டுவிடுகிறது. ----- அதாவது, கற்பிப்பவரும் கற்பவனும் இரண்டறக் கலந்து வேறுபாடுகளற்று ஒன்றாகி இருக்கின்றனர். எனவே, சுருங்கக் கூறின், குரு தன்னில் தானே

சமாதியில் ஆழ்வது **'சொல்லற'** *(சொல்லல்)* --- (மௌனமாக அறிவுரை சொல்லல்) --- அதாவது பேசாமல் பேசுதல்; அவர் சாதகனின் உள்ளே (ஆத்மாவில்) நுழைந்து, அவனை (தற்காலிகமாக) சமாதி நிலையில் ஆழ்த்துவது **'சும்மா இரு'** என்ற மௌனமான அறிவுரையாகும். (அதாவது, '**சும்மா இருக்கச் செய்தல்**'). இப்படியாக, இறை-உணர்வை (பேருணர்வை) சாதகனில் தூண்டிவிடுவதுவே (1) பேசாமல் (*சொல்லற*) செய்யும் அறிவுரையும், (2) சும்மா இருக்கச்செய்யும் (*சும்மா-இரு*) அறிவுரையும் ஆகும். அதாவது, *'சும்மா இரு'* என்ற குருவின் அறிவுறுத்தல் சாதகனுக்கு *'சொல்லற'* (பேசாமலேயே) வழங்கப்பட்டது. குரு சாதகனை 'சும்மா இரு' என்று சொற்களால் சொல்லவில்லை. அதாவது இவ்அறிவுறுத்தல், பேச்சு, சைகை போன்ற நேரலை வழிமுறையின் மூலமோ எண்ணப்-பரிவர்த்தனை மூலமோ நடைபெறவில்லை. பின் எவ்வாறுதான் நடைபெற்றது என்று கேட்டால், அதற்குப் பதில்: இது ஒரு புரியாத, புதிரான, ஆன்மீக "நிகழ்வு"; ஆத்மாவால், ஆத்மாவின்மூலம் ஆத்மாவிற்கு நடைபெறும் ஒரு ஆன்மீக செயல்முறை ---- மறை பொருளான / விந்தையிலும் விந்தையான/ மர்மமான ஆன்மீக நிகழ்வு என்று கூறலாம். குரு அல்லது இறைவன் தன்னையே சாதகனின் ஆத்மாவாக வெளிப்படுத்திக் கொள்கிறார். இது தெய்வீகக் கிருபையினால் நடைபெறும் நிகழ்ச்சி; வெறும் மனித முயற்சியினால் அடையக்கூடியது அல்ல. அந்தோ! இந்த ஆன்மீக விழிப்புணர்வில், *தற்போதைக்கு* ஜீவனும் இல்லை, உலகம் கூட இல்லாமற் போய்விடுகிறது.

ஆகையால், பரம்பொருளான குரு ஒருவனின் (ஜீவனின்) நெஞ்சத்தில் பேரமைதியாக (பரமாத்ம-உணர்வாக) தன்னை வெளிப்படுத்திக் கொள்வது "**சொல்லற்ற**" (செய்துகொள்வது); அதே சமயம் ஜீவாத்மா-உணர்வு அதில் ஈர்த்துக்கொள்ளப்பட்டு *'மௌனம் ஆதல்'* அல்லது **'சும்மா இருத்தல்'**; உடனே உலக-உணர்வு இல்லாமல் போவது **'பொருள் ஒன்றும் அறிதல் இல்லாமை'** ---- ஆகிய இம்மூன்றும் ஒரே நேரத்தில் நடைபெறுகிறது. இது, (*'செம்மான் மகளைத் திருடும் திருடன்'*) பெருமான் வள்ளியைக் கவர்ந்ததின் ஆன்மிக முக்கியத்துவத்தின் சாரம். வள்ளி எங்கிருந்தாளோ அங்கேயே முருகன் நடு இரவில் சென்று, அவளுடைய உற்றாரும் சுற்றமும் உறங்கும்பொழுது, அவளைக் கவர்ந்து வந்தார் அல்லவா! அதுபோலவே, குருவானவர் (பரம்பொருள்) சாதகனின் நெஞ்சத்திற்குள் நுழைந்து (அதைக் கவர்கிறார்), சமாதி நிலை அனுபவத்தை நடுஇரவு வேளையில் [அதாவது புலன்களும், மனமும் சும்மா இருக்கும் (நடுஇரவு போன்ற) வேளையில்], தருகிறார்.

மெய்ப்பொருள் தத்துவத்தைப் பற்றி தான் அறிவுறுத்திய பின்னரும் (செய்யுள்-8), அச்சாதகன் மிகவும் அமைதி குலைந்து காணப்படுவதை கண்ணுற்ற (செய்யுள்கள்-9,10) குரு, மேலும் தேவையான அறிவுறுத்தலை திரும்பவும் பலமாகத் தந்தார் (செய்யுள்-11); அதோடல்லாமல் அவனுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதற்கென, இச்செய்யுளில் மேலே கூறியவாறு, அந்த மெய்ப்பொருளைப் பற்றிய கணநேர கண்ணோட்டத்தை (glimpse), தனது ஆன்மிக சக்தி கொண்டு தந்தருளுகிறார். இது ஒரு திணறடிக்கும் அத்வைத (இரண்டற்ற) விழிப்புணர்வு அனுபவம். குருவானவர் எவ்வாறு இந்த அனுபவத்தைத் தந்தருளினார்? சொற்களால் தரவில்லை, சொல்லற்ற மௌனம் மூலமாக (*சொல்லற*) அவனை "*சும்மா இரு*"க்க வைத்தார்; அப்படிச்செய்ததுமே (*என்றலுமே*), அவன் உடல் மற்றும் இவ்வுலகப் பொருள்களின் அறிதல் போய், "*அம்மா! 'பொருள் ஒன்றும் அறிந்திலனே*" என்று ஆச்சரியத்தில் ஆழ்ந்து, தன்னுணர்வை இழந்த நிலையை அடைகிறான். பின், அவன் என்னதான் அனுபவித்தான்? அந்த நிலையிலிருந்து வெளிவந்து, பழைய நிலைக்குத் திரும்பியவுடன், அடுத்த செய்யுளில், அவனே அந்த நிலையில் தான் அனுபவித்ததை எடுத்துரைக்கிறான். அத்தகைய உயரிய சமாதிபோன்ற அனுபவத்தைத் தனக்குத் தந்தருளியது (குருவாகி வந்த) பெருமானே என்பதும் அந்த நிலையில் அவனுக்கு வெளிப்படுத்தப்பட்டது. என்ன ஆச்சரியம்!

மகா ஞானிகள், யோகிகளே இம்மாதிரி அனுபவங்களைத் தர வல்லவர்கள். அவர்களுக்கு இது சகஜம். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், தொடுவதன் மூலமே, தன் சிஷ்யனான விவேகானந்தருக்கு ஆன்மீக விழிப்புணர்வைத் தந்து பரமானந்த நிலையைத் தந்தருளினார்; அப்பரவச நிலையில் சைதன்யத்தை மட்டுமே அவர் எங்கும் கண்டார்.

ஆனால், அச்சாதகன் பெற்ற அந்த நிலை, தனது இலக்கான இறைவனை அடைந்ததாகாது; இறை-அனுபூதி அல்ல. இருந்தபோதிலும், பேருணர்வை (இறை-அனுபூதியை) அனுபவிப்பது சாத்தியமே என்று புரிய வைக்கவும், மேலும் தன்னால் அவனை வழிகாட்டி அவ்அனுபவத்தை பெற்றிடச்செய்ய முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டிடவும், குருவானவர் அமைதி குலைந்திருந்த சிஷ்யனுக்கு ஒரு கூஷணநேரம் அந்த அனுபவத்தைத் தற்காலிகமாக, மாதிரிக்கு (sample) தந்தருளுனார். இந்த தற்காலிக அனுபவம் சாதகனுக்கு பெருமான் மற்றும் குருவின் இயல்பைப் பற்றிய நுண்ணறிவையும் (உள்நோக்குப் பார்வை) கொடுக்கிறது. இந்த

உண்மையை அவன் சாதாரண நிலைக்குத் திரும்பிய பின், அவனே கூறுவதை அடுத்த செய்யுளில் காணலாம்.

மிகவும் உயரிய இந்த மெய்ப்பொருள் தத்துவத்தை அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளும் விதத்தில் எடுத்துச் சொல்வதில் அருணகிரியார் மிகவும் வல்லவர் என்பதை இச்செய்யுள் எடுத்துக்காட்டுகிறது. தாயுமான சுவாமிகள் அருணகிரியாரின் இத்திறனை மிகவும் வியந்து போற்றிப் புகழ்கிறார்.

பெருமான் (இறைவன்) மிகவும் மகிமை வாய்ந்தவர். அவருடைய மகிமைகளை மனிதர்கள் புரிந்து கொள்வது என்பது மிகமிக அரிது. அவர் அழிவில்லாதவர், பிறப்பும் இறப்பும் இல்லாதவர். நம்மைப்போல் அவர் கர்மத்தின் விளைவினால் பிறப்பதுமில்லை, இறப்பதுமில்லை. ஆனால், தன் சுய-இச்சையினால் (தடையற்ற விருப்பம்) பக்தர்களின் வேண்டுகோள்களை நிறைவேற்ற மனித உரு தாங்கி அவ்வப்பொழுது அவதாரம் எடுக்கிறார். மனித குலத்தை உய்விக்க பெருமான் "கீழ் இறங்கி வருவது" *அவதாரம்*. பரம்பொருள் இந்தப் பிரபஞ்சத்தில் தோன்றுவது *அவதாரம்*. உண்மையில், இறை-உணர்வு (பேருணர்வு) கீழிறங்கி வந்து ஜீவ-உணர்வை மேலான தன்நிலைக்கு உயர்த்திச் செல்வதுதான் அவதாரங்களின் நோக்கம்.

செய்யுள் ஆறில், மானின் புதல்வியாக ஸ்ரீ வள்ளி தேவி பிறந்தாள் என்று ஏற்கனவே பார்த்தோம். பிறந்ததிலிருந்தே, வள்ளி பெருமான் மேல் அபரிமிதமான அன்பை வைத்திருந்தாள், அவள் வளர வளர அதுவும் மேன்மேலும் வளர்ந்து வந்தது. இதை அறிந்த முருகன், ஒருநாள் மாறுவேடம் புனைந்து வள்ளி காத்துவந்த தினைப்புனம் சென்று, தேவியின் பக்தியை பலவாறு சோதித்துப் பார்த்தார். தேவியினுடைய உறுதியான பக்தியைக் கண்டு மகிழ்ந்து, தன்னுடைய சுயரூபத்தை வெளிப்படுத்திக் கொண்டு, தான் கூடிய சீக்கிரமே அவள் வீட்டிற்கு வந்து தேவியை மணம் புரிந்து கொள்வதாக உறுதியளித்தார். எனவே, வள்ளி தேவி இரவு பகல் பாராமல் எப்பொழுதும் அவரின் வருகைக்காக ஆசையுடன் காத்திருந்தார். ஒருநாள், நடுஇரவில் அனைவரும் தூங்கிக்கொண்டிருக்கும்போது அவள் வீடு சென்று, எவரும் அறியாதவாறு அவளைக் கடத்திச் சென்று, மணம் புரிந்து, தன் தெய்வீக துணைவியாக்கிக் கொண்டார். அதனால், அவரை '*செம்மான் மகளைத் திருடும் திருடன்*' என்று இச்செய்யுள் வர்ணிக்கிறது.

உண்மையில், பெருமான் ஒரு மிகப்பெரிய கள்வன்; ஏனென்றால், அவர் தன் பக்தர்களின் நெஞ்சைக் கவர்ந்து செல்கிறார். நடுஇரவில் அவர் வள்ளிதேவியைக் கவர்ந்தார் என்பதில் ஓர் ஆன்மீகத் தத்துவமும் உள்ளது. "வள்ளி" பெருமானுடன் இரண்டற

கலந்திட விரும்பும் ஒரு ஜீவாத்மாவைக் குறிக்கும். பெருமானை அடைந்திடத் தீர்மானித்து, சாதனைகளை பேரார்வமுடன் செய்து வரும் சாதகனை, பெருமான் வள்ளிக்குச் செய்ததுபோல், பலவாறு சோதித்துக் கடைசியில் அவனுடைய மனதில் ஆன்மீக அனுபவங்களையும் திட நம்பிக்கையும் கொடுத்து, அதன்மூலம் அவனை சீக்கிரம் ஆட்கொள்ளப்போவதை உணர்த்துகிறார். 'ஜீவாத்மா'-வும் (சாதகனும்) அத்தகைய பெருமகிழ்ச்சிக்குரிய தருணத்திற்காக ஆவலுடனும், விழிப்புடனும் காத்திருக்கிறது; நடுநிசியில், அனைவரும் தூங்கி, அனைத்தும் அமைதியாக (சத்தமின்றி) இருக்கும் தருணத்தில் பெருமானும் தோன்றுகிறார். "நடுநிசி" என்பது புலன்கள், மனம், மற்றும் புத்தி ஆகியவைகளின் சக்தி வெளிவிஷயங்களிலிருந்து திரும்பப் பெறப்பெற்று, பெருமானை அடையவேண்டும் என்ற பேரார்வத்தால் விழுங்கப்படுவதால் அவை செயற்படாமல் போகின்றன. அத்தருணத்தில் பெருமான் ஜீவாத்மாவைக் கவர்கிறார்/திருடுகிறார் ------ பரமாத்ம-உணர்வு ஜீவாத்ம-உணர்வைத் தன்வசப்படுத்திக் கொள்ளுகிறது.

இதில், ஆன்மீகத்தின் பரம ரகசியம் ஒன்று வெளிப்படுத்தப்பட்டு இருக்கிறது. இறைவன் தோன்றிட வேண்டுமானால் அல்லது உயர்ந்த ஆன்மிக-உணர்வை விழிப்புறச் செய்ய வேண்டுமானால்:

(1) மனதின்கண் உள்ள ஆசைகளைப் பூர்த்திசெய்வதற்காகப் பொருள்களுடன் தொடர்ப்புகொள்ள வெளிச்செல்லும் புலன்களின் போக்கையடக்கி,

(2) புலன்களைத் தூண்டிடும் மனதின்கண் உள்ள ஆசைகளை நீத்து,

(3) தன் உண்மை நிலையான ஆனந்த-சொரூபத்தை மறந்ததனால், அந்த ஆனந்தத்தைப்பெற, உள்ளுணர்வு (ஆத்மா) மனதின்மூலம் ஆசைகளாகப் பரிணமித்து வெளிச்செல்லும் தவறான தன்மையை விட்டு,

தன் உறைவிடமான இதயத்திற்குத் திரும்பிவந்து அதில் நிலை பெற வேண்டும்.

==========

செய்யுள் – 13

==========

முருகன் தனிவேல் முனி நம்குருவென்று
அருள்கொண்டு அறியார் அறியுந் தரமோ
உருவன்று அருவன்று உளதன்று இலதன்று
இருளன்று ஒளியன்று என நின்றதுவே.

பொழிப்புரை: "உருவம் உடையது அன்று, உருவம் இல்லாதது அன்று; உள்ளது அன்று, இல்லாதது அன்று; இருள் அன்று, பிரகாசம் அன்று; என்று சொல்லும் தன்மையில் நின்ற "அது"வே (அப்பரம்பொருளே அல்லது பரமாத்மாவே) முருகப்பெருமான் என்றும், (அதுவே) இணையற்ற வேல் தாங்கிய முனிவன் என்றும், (அதுவே) நம் குரு என்றும் (அப்பெருமான்) திருவருள்கொண்டு அறிய-மாட்டாதவர்கள் அறியவும் முடியுமோ!" (திருவருளைக் கொண்டு அறிபவர்களைத்தவிர மற்றவர்களால் அறியமுடியாது.)

விளக்கவுரை

சென்ற செய்யுளில், குரு (மௌனித்து) தன்னையே பேரமைதி தத்துவமாக அச்சாதகனில் வெளிப்படுத்திக் காட்டிய பொழுது, அச்சாதகனும் அமைதியாகி, இந்த உலகைப் பற்றிய '(பொருள்) ஒன்றும் அறிந்திலனே' என்று வியந்து கூறுவதைப் பார்த்தோம். அவ்வாறு பொருள் ஒன்றும் அறியாத நிலையில், அவன் வேறு என்னதான் அறிந்து கொண்டான்? மனிதனின் சாதாரண புரிதலுக்கு அப்பாற்பட்ட ஒன்று, அப்பொழுது அவனுக்கு வெளிப்படுத்தப்பட்டது! அந்த அசாதாரண அநுபவத்திலிருந்து அவன் மீண்டபோது, அதை **"என நின்ற அது"** என்று இறந்த-காலத்தில் குறிப்பிடுகிறான். அவன் அனுபவித்தது மெய்ப்பொருள் தத்துவம். அதை அவன் **'அது'** என்கிறான். {பரம்பொருள் (அ) மெய்ப்பொருள், தமிழில் **'அது'**; சம்ஸ்கிருதத்தில் **'தத்'**; ஆங்கிலத்தில் **'That'** என்று கூறப்படுகிறது.} அந்த 'அது' (அ) மெய்ப்பொருளைப் பற்றிய அவனுடைய அநுபவம் என்ன? அது *விவரிக்க இயலாத ஒன்று*. ---- உருவம் உடையது அன்று, உருவம் இல்லாதது அன்று; உள்ளது அன்று, இல்லாதது அன்று; இருள் அன்று, பிரகாசம் அன்று; என்ற எவ்விதத்திலும் விவரிக்கமுடியாத ஒரு விசித்திரமான அனுபவம். மேலும்,

அவ்வநுபவம் அவனுக்கு உணர்த்தியது என்னவெனில், (i) அந்த "அதுவே" முருகன், "அதுவே" ஒப்பில்லா வேலாயுதம் தாங்கிய பெருமான், "அதுவே" நம் குரு; (ii) மேலும், இறையருள் பெற்ற ஒருவரால‌ன்றி, வேறு எவராலும் அதனை அறிந்திட இயலாது என்பதேயாகும்.

இந்த உண்மை சாதகனுக்கு ஒரு மிகப்பெரிய திருவெளிப்பாடு. அதில் அவன் அறிந்து கொண்டது மூன்று உண்மைகள்: (1) அந்த மெய்ப்பொருள் தத்துவமானது விவரிக்க இயலாதது; (2) அந்த தத்துவமே முருகன், அதுவே வேல் தாங்கிய பெருமான், அதுவே அவனுக்குக் குருவாகவந்து செய்யுள் 8, 11இல் "மெய்ப்பொருள் பேசிய" மகான்; மேலும் (3) அதனை அறிவதற்கு தெய்வக் கிருபை ஒன்றே வழி. இறைவனும் குருவும் ஒன்றே என்ற உண்மை, அஞ்ஞான இருளில் அலையும், கேவலம் பகுத்தறிவைக் கொண்டு மட்டும் அறிந்திட முயற்சிப்போருக்கு வெளிப்படாது. தெய்வக் கிருபையாகிய ஒளி மட்டுமே இதனை வெளிப்படுத்தும். அதனால் தான் *'அருள் கொண்டு அறியார் அறியுந் தரமோ'* என்று இச்செய்யுள் கூறுகின்றது.

இவ்வாறு உணர்த்தப்பட்ட பிறகு, அச்சாதகன், குரு வேறு, பெருமான் வேறு என்று வித்தியாசம் பார்க்காமல், இருவரையும் ஒன்றாகவே பார்க்கிறான். சிறிதளவும் வித்தியாசம் இல்லாமல், இருவரும் ஒருவரே என்று உணர்கிறான். "குருவே பிரம்ம தேவன, குருவே விஷ்ணு, குருவே சிவன், குருவே சாக்ஷாத் பரப்பிரம்மம். அத்தகைய குருவிற்கு நமஸ்காரங்கள்." என்று குரு-கீதை சொல்கிறது. (*குருர் பிரம்மா, குருர் விஷ்ணு, குருர் தேவோ மஹேஷ்வர:, குரு: சாக்ஷாத் பரம் பிரம்ம, தஸ்மை ஸ்ரீ குரவே நம:*). எனவே, இனிமேல், அவன் குருவை ஒரு மனிதனாகப் பார்க்கவில்லை, மகானாகக்கூட பார்க்கவில்லை, இறைவனாகவே பார்க்கிறான். சாதகன் பெற்ற இந்தத் தற்காலிக அனுபவம், தனது உயரிய இலக்கான இறை-அநுபவத்தை அடைய அவனுடைய குரு வழிகாட்டி அதை அடையச்செய்வார் என்பதில் அவனுக்கு உறுதியான நம்பிக்கையைக் கொடுத்தது.

எனினும், சாதகனுடைய இந்த அநுபவம், உண்மை இறை-அநுபவம் அல்ல. அவன் இறை-அநுபவம் அடைந்துவிட்டான் என்று கருதிடக் கூடாது; சாதகனின் பரிதாப நிலையைக் கண்ணுற்ற குரு (செய்யுள்கள்: 9 & 10), அவன் மீது கருணை கொண்டு, அவனை ஊக்குவிப்பதற்காக 'அளித்த' ஒரு வகையான 'தூண்டப்பட்ட' சமாதி நிலை தான் இது; அதுவும், ஒரு 'வரையறுக்கப்பட்ட நோக்கத்திற்காகத்தான்' -- அதாவது, குருவானவர், தன்னுடைய உண்மையான இயல்பிலும், அச்சாதகனை இறை-அநுபவம் பெற வழிகாட்டிட தனக்கு உள்ள ஆற்றலிலும் அவனுக்கு நம்பிக்கை

உண்டாக்கவேதான். மேலும், அவன் அனுபவித்தது "வரையறுக்கப்-பட்டது" ஏனெனில், பரம்பொருள்தான் முருகன், வேல் தாங்கிய பெருமான், தன் குரு *என்பதுவரைக்கும்தான்* அவன் அநுபவித்தான்; அது அரைகுறையானது. காரணம்? அந்தப் பரம்பொருள் இவை மூன்றுமட்டுமல்லாமல், அதுவே அனைத்தும், அதுவே முழுப் பிரபஞ்சமும், அதுவே தன்னுள் இருக்கும் 'ஆத்மா' (குகன்) கூட என்றும் அவன் உணரவில்லை. (இவ்வாறெல்லாம் அனைத்தும் பரம்பொருளே என்று அவன் பூரண இறை-அனுபவம் பெற்ற பின்னர்தான் அதை உண்மையில் உணர்வான் -- செய்யுள்கள் 44 & 51.) அவன் இப்பொழுது பெற்ற அனுபவம் ஏன் "வரையறுக்கப்- பட்டது"? அத்தகைய வரையறுக்கப்பட்ட அனுபவமே இப்பொழுது அவன் இருக்கும் நிலைக்குப் போதுமானதாக இருந்ததென்பதே காரணம். ஏனெனில், அவன் ஆன்மிக சாதனையின் தொடக்க நிலையில் இருந்ததால், அனைத்தும் பரம்பொருளே என்றும், அதுவே தன்னுள்ளும் உறைகிறது என்றும் உணரும் அளவிற்கு, அவனது மனது முழுத்தூய்மை / தகுதி பெற்றிருக்கவில்லை; எனவே, அவன் அப்பொழுதிருந்த நிலையில் பரம்பொருளை எவ்வாறு அவனால் உணர இயலுமோ, அவ்வாறு மட்டுமே அவனுக்கு உணர்த்தப்பட்டது எனலாம். ஆன்மீக திருவெளிப்பாடுகளும் அனுபவங்களும், ஒருவன் அதைப் பெற்று அனுபவிக்கக்கூடிய தகுதிக்கேற்ப, படிப்படியாகத்தான் கொடுக்கப் படுகின்றன. அதனால்தான், சென்ற செய்யுளில் அவன் அனுபவித்தது, சாதனைசெய்து அதன்மூலம் அடையப்பெற்ற பூரண இறை-அனுபவ நிலை அல்ல, ஆனால் கிருபையினால் அவனுக்குத் தற்காலிகமாக தரப்பட்ட ஒன்றுதான். எனவேதான், அவன் *'அருள் கொண்டு அறியார் அறியுந் தரமோ'* என்று கூறுகிறான். அது உண்மையான இறை-அனுபவம் அல்லாது, 'கொடுக்கப்பட்ட' கணநேரத் தோற்றமானதால், அதிலிருந்து சாதாரண நிலைக்கு மீண்ட பின்னர், அதை ஞாபகப்படுத்தி விவரிக்க முயற்சிக்கும்போது, அது வெறும் ஆய்வறிவாகிறது. எனவே, அதைச் சரியாக விவரிக்க முடியவில்லை; ஆதலால், அவன் அதை எதிர்மறைச் சொற்களில் *"உருவன்று, அருவன்று, உளதன்று, இலதன்று, இருளன்று, ஒளியன்று என நின்றதுவே"* எனக் கூறுகிறான். ஆனால், குருவிடமிருந்து மேலும் உபதேசம் பெற்று (செய்யுள்-20), அதன்படி இடைவிடாது நெடுங்காலம் உபாசித்து (செய்யுள்-21லிருந்து), மனதையும், நெஞ்சையும் தூய்மைப்படுத்திக் கொண்டு, தீக்ஷை பெற்று, தியானத்தில் ஆழ்ந்து, இறுதியில் உண்மையான சமாதி நிலை பெற்று (செய்யுள்கள் - 42, 43, & 44) கடவுளைப் பூரணமாக அடைந்து, எப்பொழுதும் ஆனந்தக் களிப்புடன் இருக்கும் நிலையான ஜீவன் முக்தனாகிய பின்னர் (செய்யுள் 51), அச்சாதகன் *"உருவாய், அருவாய், உளதாய்,*

இலதாய்,.....” என்று நேர்மறையாக இப்பிரஞ்சத்திலுள்ள அனைத்தும் மெய்ப்பொருள் தத்துவமே –- எந்த ஒன்றையும் விட்டுவிடாது எல்லாவற்றையும் (தன் உள்ளுறையும் குகன், மற்றும் குரு உட்பட அனைத்தையும் அடக்கி / சேர்த்து) –- என்று வர்ணிப்பதைக் காணலாம்.

இவ்வாறு அவனுக்கு குரு தன் கிருபைகொண்டு அளித்த இறை-அநுபவமானது, (செய்யுள்-12), தற்காலிகமாக தூண்டப்பட்ட (மாதிரியான) சமாதி காட்சியே. மகாபுருஷர்கள், மகாத்மாக்கள், யோகிகள், அசாதாரணமான சக்தி கொண்ட (‘பிரம்ம நிஷ்ட குரு’ என்றழைக்கப்படும்) குருமார்கள் ஆகியவர்களால் மட்டுமே இம்மாதிரியானத் தற்காலிகச் சமாதி நிலையை தன் சிஷ்யர்களுக்குத் தர இயலும். மேலும், அவர்களால் மட்டுமே, சாதகன் ஆன்ம சாதனையின் இறுதி இலக்கை அடையும் வரை வழிகாட்டி, அவ்வழியில் அவ்வப்பொழுது அச்சாதகர்கள் எதிர்கொள்ளும் அனைத்து இடர்களையும் களைந்து காத்திட இயலும். பகவான் ஆதிசங்கரர் “விவேக சூடாமணி” என்ற நூலில் (வி.சூ.செய்யுள்:2) இதன் மகத்துவத்தைப் பற்றி *“துர்லபம் திரயமேவைதத் தேவாநுக்கிரக ஹேதுகம்; மனுஷ்யத்வம், முமுக்ஷுத்வம், மஹாபுருஷ சம்ஸ்ரய:”* என்று கூறியுள்ளதை இங்கு நினைவு கொள்வோம்: “மூன்று விஷயங்கள் கிடைப்பது மிக மிக அரிது, கடவுளின் கிருபையால் மட்டுமே அவை நமக்குக் கிடைக்கப்பெறும்; அவையாவன: 1. மனிதப் பிறவி (*மனுஷ்யத்வம்*), 2. எல்லாவிதமான வரையறைகள், துக்கம், துன்பம் ஆகியவைகளிருந்து விடுதலை பெற்று, முக்தியடைவதில் தீவிர ஆசை (*முமுக்ஷுத்வம்*), 3. கவனிப்பு, வழிகாட்டுதல் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை ஒருசேர அருளும் மகாபுருஷரின் கண்காணிப்பைப் பெறுதல் (*மஹாபுருஷ சம்ஸ்ரய:*). தன் அதிர்ஷ்டத்தினால் இப்படிப்பட்ட ஒரு மஹாபுருஷரின் கவனிப்பைப் பெறும் சாதகனுக்கு எவ்விதமான பயமோ கவலையோ இல்லை. அவன் பூரண பாதுகாப்பைப் பெறுகிறான். முக்தியைப் பெறவேண்டும் என்ற தீவிரமான இச்சையில் ஒருவன் உண்மையாக இருந்தால், அவனுக்கு இறைவனே ஒரு மஹாபுருஷ- குருவாக வருவார், அல்லது ஒரு மஹாபுருஷ குருவை அவன் சந்தித்திடச்செய்வார்.

இச்செய்யுளில், மேலும் குறிப்பிடத்தக்க ஒரு முக்கிய விஷயம் உள்ளது. அது யாதெனில், அருணகிரியார் ‘நம் குரு’ என்றுதான் குறிப்பிடுகிறாரே தவிர, ‘என் குரு’ என்றோ அல்லது ‘உன் குரு’ என்றோ குறிப்பிடவில்லை. இதன் மூலம் அவர் அறிவுறுத்துவது என்னவெனில்: ‘ஒவ்வொரு மஹாபுருஷரான குருவும் இறைவனின் அவதாரம்; எனவே, நாம் அவர்களுக்குள் (உயர்ந்தவர், தாழ்ந்தவர்

என்று) வேறுபாடு படுத்திப் பார்க்கக்கூடாது. சுவாமி சிவானந்தர் *'குரு தத்துவம்'* (Guru Tattwa) என்ற தன் புத்தகத்தின் தொடக்கத்தில் கூறியதை இங்கு நினைவில் கொள்வது நல்லது: "சாதகனை வழிநடத்த இறைவனே குருவின் உருவில் தோன்றுகிறார். இறை-அருளே குருவாக உருவெடுக்கிறது. குருவைக் காண்பதென்பது இறைவனைக் காண்பதேயாம்....."

இச்செய்யுளில் அமைந்துள்ள "முருகன் - தனி வேல் முனி - நம் குரு" என்ற அடைமொழி வாசகங்களின் வரிசை கிரமத்தையும், அதன் உள்-அர்த்தங்களையும் எட்டாவது செய்யுளில் இடம் பெற்ற "குமரன் - கிரிராச குமாரி மகன் - சமரம் பொரு தானவ நாசகன்" என்பதோடு ஒப்பிடுவது ஒரு சுவாரஸ்யமான விஷயம். இவ்விரண்டு செய்யுள்களின் வாசகங்களையும் நாம் உன்னிப்பாகக் கூர்ந்து கவனித்தால், இச்செய்யுளில் எக்கருத்து வெளிப்படுத்தப்பட்டு இருக்கிறதோ அஃது எட்டாம் செய்யுளில் சூசகமாக கூறப்பட்டுள்ளது என்பது விளங்கும். குருவாக வந்தது பெருமானே என்ற உண்மை எட்டாம் செய்யுளில் வெளிப்படையாகக் கூறப்படவில்லை; ஏனெனில். அச்சாதகன் அன்றிருந்த நிலையில் அவ்வுண்மையை அறிந்திருக்க வேண்டிய அவசியம் இல்லாததால் அது சூசகமாக கூறப்பட்டிருந்தது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் இச்செய்யுளில், அவ்வுண்மை தெளிவாகவும், வெளிப்படையாகவும் தரப்பட்டுள்ளது --- எந்த ஒரு உண்மை முன்பு ரகசியமாக வைக்கப்படிருந்ததோ அது அவனுக்கு இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டது என்பது இதிலிருந்து தெரியவருகின்றது.

அந்த மெய்ப்பொருளே முருகப் பெருமான், அதுவே வேலாயுதம் தாங்கிய முனிவன், அதுவே நம் குரு. இதனால், மெய்ப்பொருள் என்பது ஒன்று, முருகன் என்பவர் இன்னொன்று, வேல் என்பது வேறொன்று, குரு என்பவர் பிறிதொன்று என்று நினைத்தல் தகாது; அந்த ஒரு மெய்ப்பொருளே இவை அனைத்துமாகத் தோன்றி உள்ளது என்று உணர்தல் வேண்டும். இந்த உண்மை இறையருளால் மட்டுமே உணர்ந்து அனுபவிக்கக்கூடும்.

உருவமோ அருவமோ, உள்ளதோ இல்லாததோ, இருளோ பிரகாசமோ என்று சொல்லமுடியாத மெய்ப்பொருளே முருகக் கடவுளும், ஒப்பில்லா வேலும், குருவும் ஆனபடியால், உருவம் கொண்டு தோன்றிக் கொண்டிருக்கும் பிந்தைய மூன்றிற்கும், உண்மையில் உருவம் இல்லாத நிலையும் இருக்கவேண்டுமல்லவா? ஆம். முருகன், வேல், குரு ஆகிய மூன்றும் உண்மையில், மெய்ப்பொருளைப்போலவே, உருவமற்ற தூய உணர்வே (*சைதன்யமே*) ஆகும். ஆனால், சிரத்தையுடன் தியானம் செய்பவனுக்கும்,

பக்தனுக்கும் உதவியாயிருக்க அவை உருவுடையனவாகக் காட்சியளிக்கின்றன. எனவே, அவை ஒவ்வொன்றும் இரண்டு அம்சங்களைக் கொண்டவைகளே ---- பௌதிக (உடல் சார்ந்த - உருவம்) மற்றும் ஆன்மிக (உள்ளம் சார்ந்த - அருவம்) ஆகிய இரண்டு அம்சங்கள்.

சாதனையின் ஆரம்ப கட்டங்களில், மனதால், அதிலுள்ள அசுத்தங்கள் காரணமாக, மெய்ப்பொருளை உள்ளபடி அறிய/தியானம் செய்ய முடிவதில்லை. எனவே, தியானம்செய்ய, அந்த மனத்திற்கு ஒரு பற்றுகோல், அல்லது ஒரு ஆதரவு, அல்லது ஒரு வடிவம் அவசியம் தேவைப்படுகிறது. ஆகவே, எல்லா வடிவங்களுக்கும் அப்பாற்பட்ட பரமாத்மா, பல்வேறு தெய்வீக ஆயுதங்களை ஏந்திய உருவம் கொண்ட இஷ்ட தெய்வங்களாகத் தோன்றுகிறார், மேலும் அவரே மனித வடிவம் கொண்டு ஒவ்வொருவரின் குருவாகவும் தோன்றுகிறார்.

அந்த மெய்ப்பொருளே முருகன், வெற்றி வேல் தாங்கிய பெருமான், நம் குரு; இந்த உண்மையை அருள் கொண்டு மட்டுமே உணரமுடியும் என்று செய்யுளில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் யாருடைய அருள் கொண்டு என்று கூறப்படவில்லை. உண்மைதான்; ஆனால், அதற்கு அவசியம் இல்லை! ஏனெனில், இம்மூன்றும் ஒன்றேயானதால், இம்மூவரில் யாரேனும் ஒருவரின் அருளாசியால் உணரப்படுகிறது என்று வெளிப்படையாகச் சொல்ல வேண்டிய-தில்லை. இவ்வுண்மையும்கூட அவ்வருளால்தான் வெளிப்படுத்தப்-படுகின்றது. உண்மையில், இது ஒரு மிகப் பெரிய ஆச்சரியம்தானே! இது ஒரு பரம ரகசியமான, மர்மம் நிறைந்த "கிருபை-சக்கரம்"; ---- கிருபை மூலம் வெளிப்படுத்தப்பட்டு, கிருபை மூலம் அறியப்பட்டு, கிருபை என அறியப்படுகிறது; அனைத்தும் கிருபையே, கிருபையைத் தவிர வேறொன்றுமில்லை.

புத்திசாலித்தனத்திற்கோ, புரிதலுக்கோ, அறிவுக்கோ இங்கு வேலையுமில்லை / இடமுமில்லை. அனைத்தும் கிருபையே. அக்கிருபை என்பதே மெய்ப்பொருள்; அதுவே முருகன், அதுவே வெற்றி வேல் பெருமான், அதுவே குருவும்; அதுவே அருணகிரிநாத-குருவும்கூட. உயரிய ஞானத்தையும் அதையறியும் சாதனங்களையும் இவ்வொரு செய்யுளிலேயே தந்தருளிய அருணகிரிநாத குருவுக்கு பலகோடி நமஸ்காரங்கள்!

==========

செய்யுள் – 14

==========

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்று
உய்வாய் மனனே ஒழிவாய் ஒழிவாய்
மெய்வாய்விழி நாசியொடும் செவியாம்
ஐவாய்வழி செல்லும் அவாவினையே.

பொழிப்புரை: "ஒ மனமே! கதிர்வேலைக் கையில் ஏந்தி இருக்கும் முருகப் பெருமானின் திருவடியைப் பெற்று, நற்கதியைப் (முக்தியைப்) பெறுவாயாக. உடல், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களின் வழியே (உலகியல் பொருள்களை அனுபவிக்க) வெளிச்செல்லும் ஆசைகளை ஒழித்து விடுவாயாக, (முழுவதும்) ஒழித்து விடுவாயாக."

விளக்கவுரை

(பன்னிரண்டு மற்றும் பதின்மூன்றாம் செய்யுள்களில்) சாதகனுக்கு அருளப்பட்ட அரிய அனுபவத்திலிருந்து மீண்டு, அவன் சாதாரண நிலைக்கு வந்தபின், அவனுக்கு, குருவானவர் ஆன்மிக சாதனைகளைத் தொடர்ந்துசெய்து அவன் குறிக்கோளை விரைவில் அடைவதற்காக மேலும் இவ்வாறு அறிவுறுத்துகிறார்: "ஒ மனமே! வேல் தாங்கி நிற்கும் முருகப் பெருமானின் மலர்பாதம் பற்றி, அவர் கிருபையை அடைந்து, உன்னை காப்பாற்றிக் கொள்வாயாக. (இவ்வாறு செய்வதன் மூலம்) மெய், வாய், கண், மூக்கு, காது ஆகிய ஐந்து வழிகள் மூலம் வெளிச்செல்லும் ஆசைகளைத் துறப்பாயாக, முழுவதுமாக துறப்பாயாக." இவ்வறிவுறுத்தலின் மூலம் குருவானவர் சாதகனுக்கு குறிப்பால் உணர்த்துவது: "பெண்கள் மீதான ஈர்ப்பு போன்ற பிரச்சனைகளுக்குக் காரணம் அப்- பொருள்களோ, அல்லது அவைகளை விரும்பும் புலன்களோ அல்ல; மனதிலுள்ள ஆசைகள் மட்டுமே காரணமாகும். அப்படியானால், அவ்வாசைகளை என்ன செய்வது! ஒன்று, அவற்றைத் துறக்க வேண்டும்; அல்லது இறைவனிடம் அடைக்கலம் புகுவதன்மூலம் அவை உணர்ச்சி மேம்பாடு (Sublimation) செய்யப்பட வேண்டும்." பிரச்சனைகளிலிருந்து உய்வதற்கு இது ஒன்றே வழி. ஆகையால்தான், இறை-தாள் பற்றி ஆசைகளைக் களைந்திட குருவானவர் அவனுக்கு அறிவுறுத்துகிறார்.

இதுவரை புறப்பொருள்களைச் சுற்றியே அமைந்திருந்த சாதனை இச்செய்யுளில்தான் (முதன்முதலாக) உள்முகமாக மனதின்பால் திருப்பப்படுவதைக் காணலாம். வெளிப்புற-சாதனை சிறிது சிறிதாக உட்புற-சாதனையாக மாற ஆரம்பிக்கிறது.

மனதைப் பற்றிய மற்றும் சாதனைகளின் சூட்சுமமான அரிய ரகசியங்கள் இச்செய்யுளில் (மனதைச் சீர்படுத்துவதற்காக) வெளிப்படுத்தப் பட்டுள்ளன. ஒரு பொருள் நமக்குப் பிடிக்கவில்லையானால், நாம் அதை தூக்கி எறிகிறோம். அதுபோல ஆசைகளை ஒதுக்கித்தள்ள முடியாது. ஆத்ம (ஜீவ) சக்தியின் வெளிச்செல்லும் தன்மையின் உணர்ச்சி பூர்வமான வெளிப்பாடுகளே ஆசைகள்; எனவே அவ்வளவு எளிதாக அவைகளை விட்டுவிடவோ, வலுக்கட்டாயமாக தூக்கி எறியவோ, அல்லது மன உறுதி மூலம் கட்டுப்படுத்தவோ இயலாது. அவைகளைத் தூய்மைப்படுத்தி, நயமாக்கி, தெய்வீகச் சிந்தனையில் ஈடுபடுத்தி, உள்முகமாகச் செல்லவைத்து, இறைவனில் அல்லது ஆத்மாவில் நிலைபெறச் செய்யவேண்டும். ஆகவே, ஆசைகளைத் துறந்திட இறைவனைப் பற்றுவது ஒன்றே வழி. எனவே தெய்வப்புலவர் திருவள்ளுவர் *"பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு"* (பொருள்: மற்றெல்லாப் பற்றுகளையும் விட்டொழிப்பதற்கு, பற்றற்றவனாகிய இறைவனின் பாதங்களை இறுகப் பற்று.) என்று கூறுகிறார்.

ஆன்ம அனுபவம் எனப்படும் அனுபூதியை பெறுதற்கு ஆசைகளே தடையாக உள்ளன. அவை ஒருவனை வெவ்வேறு திசைகளில் இழுத்து, அவனைச் சிதைத்து, அவனுடைய மன அமைதியையும் மகிழ்ச்சியையும் அறவே இழக்கச்செய்கின்றன. ஆன்மீக விடுதலைக்கு (முக்திக்கு) ஆசைதான் மிகப்பெரும் தடை. எனவேதான், ஆசையை விட்டுவிட மனதிற்கு புத்திமதி தரப்படுகிறது. விட்டுவிட வேண்டியது மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்துவதற்கே, "விடுவாய்" "விடுவாய்" என்று இரண்டு முறை கூறப்பட்டுள்ளது: **"ஒழிவாய் ஒழிவாய், ஐவாய்வழி செல்லும் அவாவினையே."** ஆனால், எவ்விதம் விட்டுவிடுவது? "முருகப் பெருமானின் பாதங்களில் அடைக்கலம் ஆவதன் முலம்." இதைத்தவிர வேறு ஏதேனும் வழியுள்ளதா? வேறொரு வழியும் இல்லை; இருக்கும் ஒரே வழி -- **"முருகன் கழல் பெற்று உய்வாய்"** என்பதுவே.

இறைவனின் தாளில் அடைக்கலம் புகாமல் ஆசைகளை விட்டொழிப்பதென்பது முடியவே முடியாது. அது ஏன் அப்படி? இதைத் தெரிந்து கொள்வதற்கு, ஆசைகளின் வடிவமைப்பு பற்றிய ஒரு சிறிய ஆய்வு அவசியமாகிறது. அவ்வாய்வில் கொஞ்சம் ஆழமாகச் சென்று, ஆசைகள் இருப்பதற்கான காரணங்களைக் கண்டுபிடிக்க வேண்டும்.

ஆசை என்றால் என்ன? அல்லது, ஆசை ஏன் உண்டாகிறது? இவ்வாறான ஆழ்ந்த சிந்தனை செய்தால், ஆசைகள் உடலையோ, புலன்களையோ, ஏன் மனதைக்கூட சார்ந்தவை அல்ல; உண்மையில் இவையெல்லாம் ஆசைகள் (ஆத்ம-சக்தியின் 'வேகம்') தம்மை வெளிப்படுத்திக்கொள்ளும் வழிகள். இந்த சக்தி உடலின் உள்ளுறையும் ஆத்மாவைச் சார்ந்தது. அறியாமை காரணமாக, பரமாத்மாவிடமிருந்து தன்னை வேறாக நினைக்கும் ஜீவாத்மா (Individual soul) அல்லது தனித்தன்மை கொண்டுவிட்ட ஆத்மா, தனது மூலாதாரமான பரமாத்மாவுக்குத் திரும்பி, அதனுடன் ஐக்கியமாகி ஆனந்தநிலையை அடைய ஏங்குகிறது. இந்த ஏக்கமே பக்தி, பேரார்வம், முமுக்ஷுத்துவம் அல்லது முக்தி/ வீடு / ஆன்ம விடுதலை/ பரமானந்த நிலை அடைவதில் தீவிர விருப்பம், எனப் பலவாறாக அழைக்கப்படுகிறது. பரமாத்மாவுடன் திரும்பவும் ஐக்கியம் அடைய ஜீவாத்மா கொண்டிருக்கும் இந்த அடங்காத விருப்பம் உண்மையானதும், பாராட்டுதற்குரியதும் ஆன ஒன்றுதான்; எனினும், அறியாமை காரணமாக, தான் இழந்த ஆனந்தத்தை உலகப் பொருள்களிலிருந்து அடையலாம் என்ற பொய்யான நம்பிக்கை கொண்டு, அந்த ஜீவாத்மா அவைகள்மீது கொள்ளும் விருப்பமாக மனது மற்றும் புலன்களின் வாயிலாக வெளிப்படுகிறது. இவ்வாறு வழிதவறி வெளிப்புறத்தில் மகிழ்ச்சி தேடும் முயற்சியே ஆசை என அழைக்கப்படுகிறது. இதற்கு மாற்று உட்புறம் (ஆத்மாவை) நோக்கி இச்சக்தியை திருப்பி அனுப்புவதே ஆகும். இதுவே சரியான வழி. மையத்திலிருந்து விலகிச் சென்றுவிட்ட ஒருவன் மையத்தை திரும்பவும் அடைய விரும்பினால், இங்குமங்கும் சென்று கொண்டிராமல், மையத்தை நோக்கி திரும்பி நடக்க வேண்டும். அப்படியே புலன்களின் வாயிலாக வெளிப்பட்டு ஆசை என ஆகிவிட்ட அந்த ஆத்ம-சக்தி புலன் விஷய உலகில் சஞ்சரிப்பதைவிட்டு, தன் ஆதாரமான ஆத்மாவிற்கு திரும்ப வேண்டும். இந்த செயல்முறை, ஆசைகளை மேன்மைப்படுத்துதல், இறை-பக்தி, ஆத்ம தியானம், சாதனை என்று பலவாறாக அழைக்கப்படுகிறது. ஐம்புலன்கள் வாயிலாக வெளிப்படும் ஆசைகளை விட்டுவிடுவதற்கான ஒரே வழி பரம்பொருளான இறைவனிடம் அடைக்கலம் புகுவதுதான். இச்செய்யுள் அவ்வாறு செய்திட மனதை அறுவுறுத்துகிறது.

ஆன்மீக முன்னேற்றத்திற்கு ஆசைகள் எவ்வாறு தடையாக இருக்கின்றன என்பதையும், அதனால் அவற்றைக் களைய வேண்டிய அவசியத்தைப் பற்றியும் அறிவுரைகள் இச்செய்யுளில் மிக மறைமுகமாகக் கூறப்பட்டிருப்பதால், அவை நமது கவனத்திற்கு வராமல் போய்விடக்கூடும். ஆசைகள் புலன்களை ஊக்குவித்து,

கிளர்ச்சி அடையச் செய்து, அவைகளின் வாயிலாகத் தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றன, இவ்வாறு மனதையும், உணர்வையும் வெளியில் செல்லச் செய்கின்றன. இது ஆன்மீக சாதனைக்கும் பரம்பொருளை அடைவதற்காகச் செய்யும் உயரிய முயற்சிகளுக்கும் நஞ்சாகிறது. ஆசைகளின் வெளிச்செல்லும் போக்கு, ஜீவாத்மாவைத் தூண்டி, புற உலகோடு தொடர்பு கொள்ளச்செய்வதன் மூலம், அந்த ஜீவாத்மாவைத் தன்னில் தானே திருப்தியுடன் நிலைத்திருக்க விடாமல் செய்கின்றது. இதுவே நம் அனைவரின் மகிழ்ச்சியற்ற நிலைக்குக் காரணம். உணர்வு தன்னில் தானே நிலைத்திருப்பது --- ஆத்மா தன்னில் உறைவது --- இதுதான் உண்மையான ஆனந்தம் என்று சான்றோர் சொல்கின்றனர்; இந்த உண்மையான பேரானந்தத்தின் ஒரு சிறு துளியை தினமும் நாம் ஒவ்வொருவரும், ஆழந்த உறக்க நிலையில் எதிர்மறையாக அனுபவிக்கிறோம்; ஆனால், அனுபவிக்கும் உணர்வு அப்பொழுது இல்லாமல் அனுபவிக்கிறோம்..

ஆழ்ந்த உறக்கநிலையில், பொருள்கள் இல்லை, அவற்றுடனான தொடர்பும் இல்லை, புலன்களும் மனதும் செயல்படுவதில்லை; எனினும் ஒருவன் மிகவும் ஆனந்தமாக இருக்கிறான். தூக்கத்தில் ஆனந்தமும், அமைதியும் அனுபவிக்கப்படுவதால், ஒவ்வொருவரும் தூங்குவதற்காக ஏங்கித் தவிக்கிறார்கள். ஒருவனுக்கு உடல் உபாதைகளும் மன உளைச்சல்களும் இருக்கலாம், ஆனால் அவை அனைத்துமே ஆழ்ந்த தூக்க நிலையில் மறைந்து விடுகின்றன. தூக்கம் நமக்குத் தேவையான மகிழ்ச்சி, ஆறுதல், அமைதி, ஓய்வு ஆகிய அனைத்தையும் ஒருசேரத் தருகின்றது; வேறு எந்த வழியிலிருந்தும் இவைகளை அடைந்திட இயலாது. தூக்கத்தில் இவை எங்கிருந்து வருகின்றன? உடலுக்கும், புலன்களுக்கும், மனதிற்கும் உள்ளே இருக்கிறது அந்த பேரின்பம் மற்றும் பேரமைதியின் ஸ்வரூபமான ஆத்மா (உணர்வு, சைதன்யம், இறைவன், கடவுள், பெருமான்). உறங்கும்போது, மனம் தற்காலிகமாக அந்த ஆனந்த ஆத்மாவில் உறைகிறது. ஆனால், விழித்து எழுந்தவுடன், மனம் புலன்களைக் கொண்டு செயல்படும்பொழுது, இந்த ஆதார சக்தியிலிருந்து விலகி வெளியே போய் விடுவதால், பேரின்ப நிலையை இழக்கிறது. ஆழ்ந்த தூக்க நிலையில் மனம் இவ்வாதாரத்திற்குத் திரும்பும்பொழுது, ஆத்மானந்தத்தை அனுபவிக்கிறது. ஆனாலும், தூக்க நிலையில் அறியாமை எனும் மெல்லிய திரை ஒன்று மனதை ஆத்மாவில் கலந்துவிடாமல் தடுக்கிறது, எனவே நாம் ஆத்ம-ஆனந்தத்தை எதிர்மறையாகத்தான் நுகர முடிகிறது. மேலும், தூக்கத்திலிருந்து விழித்தவுடன், பழையபடி துக்கத்தை எதிர்கொள்கிறோம். ஆனால், நெடிய சாதனைகள் மூலம்

சமாதி நிலையை அல்லது இறைவனை அடையும் பொழுது, அறியாமையெனும் திரை நிரந்தரமாக அழிந்துவிடுகிறது; உண்மையான மகிழ்ச்சியும் பேரானந்த நிலையும் எப்பொழுதும் நிலைத்து நிற்கிறது. இந்நிலையை அடைவதற்காகவே, மனம் இறைவனின் பாதங்களை இறுகப் பற்றி உய்வடையுமாறு பணிக்கப்படுகிறது --- **"கைவாய் கதிர்வேல் முருகன் கழல் பெற்று உய்வாய் மனனே."** அதன்பிறகே, மனம் புலன்களின் மூலம் வெளிப்படும் ஆசைகளை அடியோடு விட்டுவிட முடியும்.

ஆன்மிகப் பேரின்பத்தை பெற்றிட எதற்காக ஆசைகளைத் துறந்திட வேண்டும்? நாம் ஏன் ஆத்மாவின் ஆனந்தம், ஆசைகளைப் பூர்த்திசெய்து அதிலிருந்து வரும் இன்பம் இவை இரண்டையும் ஒருசேர அனுபவித்து மகிழக்கூடாது? என்ற ஒரு சந்தேகம் நம்மில் எழலாம். ஆம், அவ்வாறு செய்ய இயலுமென்றால், எவ்வளவு அருமையாக இருந்திருக்கும். ஆனால், துரதிஷ்டவசமாக, முன்பே குறிப்பிடப்பட்ட காரணங்களால், அவற்றை ஒருசேர அனுபவித்திட இயலாது. சிறிதளவு நாம் சிந்தித்தாலே அவ்விரண்டும் சேர்வதென்பது முடியவே முடியாதென்பது உடனே புரிந்துவிடும். அவ்விரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டது; ஒன்று உள்நோக்கிச்செல்வது, மற்றொன்று வெளிநோக்கிச்செல்வது. எனவே, ஒரே சமயத்தில் அவ்விரண்டும் இணைந்து இருக்க முடியாது; எப்படி வெளிச்சமும் - இருட்டும், பகலும் - இரவும் ஒரே சமயத்தில் ஒருசேர இருந்திட இயலாதோ அப்படியே இவையும் இணைந்திருக்க முடியாது.

இரண்டையும் சேர்ந்து அனுபவிக்க இயலாதென்றால், ஆசைகளை மட்டும் பூர்த்தி செய்து அதன் மூலம் இன்பம் பெற்று வாழ்ந்திடலாமே? எதற்காக ஆசைகளைத் துறக்க அறிவுறுத்துகிறீர்கள்? ஏனென்றால், ஆசைகளைப் பூர்த்தி செய்வதென்பது ஓர் இயலாத காரியம். மேலும், ஆசைகள் அலைகள் போல் முடிவற்றுத் தொடரும் தன்மை படைத்தவை. ஆசைகள் முடிவற்றவை, "ஆசைக்கோர் அளவில்லை" என்பது எல்லோரும் அறிந்ததே. மேலும், ஆசைகள் பூர்த்தி செய்ய இயலாதவை என்பதே அனைத்து வேதங்களின் முடிவான வாக்கு; அனைத்து மனிதர்களின் அனுபவங்களும் அதுவே. இன்பத்தை அனுபவிப்பதன்மூலம் ஆசைகளைப் பூர்த்தி செய்ய முயன்றால், மேன்மேலும் அவ்வின்பத்தை அனுபவிக்க வேண்டும் என்ற ஆசைகள் தூண்டப்படுகின்றன; தீயில் வார்க்கப்பட்ட நெய்மூலம் தீ நன்கு கொழுந்துவிட்டு எரிந்து மேன்மேலும் நெய்யை வார்த்திட வைப்பது போல, இன்பத்தை அனுபவிப்பதன்மூலம் ஆசைகளெல்லாம் பூர்த்திசெய்யப்பட்டு, எனக்கு இனி ஆசைகளே இல்லையென்று சொல்பவர் எவருமில்லை. மேலும், ஆசைகள்

பூர்த்தி செய்யப்படும் முறையில் பல தோஷங்கள் காணப்படுகின்றன; அதனால், பாவங்களும் விளைகின்றன. எனவே, ஆசைகளைப் பூர்த்தி செய்யவும் இயலாது; அவைகளைப் பூர்த்தி செய்ய முயற்சிப்பது விரும்பத்தக்கதும் அல்ல.

ஆசைகளைப் பூர்த்தி செய்ய இயலாதென்றால், அவைகளை வலுக்கட்டாயமாக அமுக்கிவைத்து, அவைகளிலிருந்து விலகி சுதந்தரமாக இருக்க முடியுமா? அது இயலாத காரியம். ஏனெனில், ஆசைகள் ஆத்ம-சக்தியின் வெளிச்செல்லும் 'வேகம்'; அவை எந்த வழியிலாவது எப்படியாவது தம்மை வெளிப்படுத்திக் கொள்ளத்தான் செய்யும். எனவே அந்த 'வேகத்தை' வெகுநாள் தடுத்துவைக்க முடியாது, அப்படிச்செய்ய முயல்வது, மிகச் சக்திவாய்ந்த ஒரு சுருள் வில்லைக் (spring) கையால் அமுக்கிவைத்துக் கொண்டிருப்பதைப் போலாகும். ஆனால், எவ்வளவு நேரம் அப்படி வைத்திருக்க முடியும்? நமக்குத்தெரியும், அப்படிக் கட்டுப்பாட்டை ஒரே சீராக தளர்ந்திடாமல் வைத்திடுதலும் முடியாது, கட்டுப்பாடு சிறிதளவு தளர்வு அடைந்தாலும், உடனே அவ்வேகம் (ஆசைகள்) வெடித்து, சீறிக் கிளம்பி விடும். மேலும், அடக்கப்பட்ட ஆசைகள் பெரும்பாலும் மக்களை பித்துப் பிடித்தவர்களைப் போல் வெறி கொள்ளச்செய்து, அவர்களைக் கிறுக்கர்களாக்கி விடுகின்றன.

எனவே, ஒரு சக்தியை ஏதாவதொரு விதத்தில் உபயோகப்படுத்தாமல் வெறுமனே ஓரிடத்தில் தேக்கி வைத்திட இயலாது. ஒரு நதியின் நீரை ஒரு அணையில் தேக்கினால், அந்நீரை கால்வாய்கள் மூலமோ அல்லது ஏதாவதொரு விதத்திலோ வெளியேற்றி சரியாக உபயோகத்திட வேண்டும்; இல்லையேல் தேக்கப்பட்ட நீரின் அழுத்த சக்தி ஏதாவது ஒருசமயம் அணையையே (உடைத்து) அடித்துச் சென்று விடும். எனவே, ஒரு சக்தி அல்லது ஆற்றல் வெறுமனே உபயோகத்திற்கு வராமல் தடுக்கப்பட முடியாது; ஏதாவது ஒரு விதத்தில் அதை உபயோகத்திற்கு கொண்டுவந்துதான் தீர வேண்டும். இதிலிருந்து தெரிவதென்னவென்றால், ஆசைகளை முழுவதும் அனுபவித்து இல்லாமல் செய்வதும் இயலாது, அடக்கவும் இயலாது, நிரந்தரமாக தடை செய்வதும் இயலாது. பின் என்னதான் செய்ய வேண்டும்? "ஆசைகள் பதங்கமாக்கப்பட வேண்டும்; மேன்மைப்படுத்தப்பட வேண்டும். உலக விஷயங்கள் மீதான ஆசைகளை மடைமாற்றி, பிரார்த்தனை, பூஜை, பஜனை, பக்தி, தியானம் ஆகியவைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம், இறைவன் பால் திருப்புவது ஒன்றே வழி. வேறெந்த வழியிலும் ஆசைகளைக் கையாள இயலாது; ஏனெனில், ஆசைகளை நிறைவேற்றி கழிக்கவோ,

அடக்கி வைக்கவோ செய்யப்படும் முயற்சிகள் எதுவும் வெற்றி பெறாது.

'ஐம்புலன்கள் மூலம் வெளிப்படும் ஆசைகளை விட்டுவிடுவாயாக' என்பதுதான் அறிவுரை. ஏனெனில், ஏதாவது ஒரு புலன் கட்டுப்படுத்தப்படாமல் விட்டுவிடப்பட்டால், ஆசையெனும் பெரும் சக்தி அதன்மூலம் கசியத் தொடங்கி, அளவில் பெரிதாகி எப்பொழுது வேண்டுமானாலும் வெளிப்பட்டு, பேரழிவை ஏற்படுத்தும். எனவே, அவ்வாறு ஆகிவிடாமற்செய்து, சக்தியானது முழுமையாகப் பாதுகாக்கப்பட்டால்தான், அச்சக்தியை இறை-தியானத்தில் செலுத்த இயலும்.

"ஓ மனமே, இறை-பாதத்தைப் பற்றி உய்வாயாக; அனைத்து ஆசைகளையும் விட்டுவிடுவாயாக." மனம் இறைவனை தியானித்தோ, அடைந்தோ தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும் இயலும்; அல்லது பொருள்களைச் சிந்தித்து அவை மீதான ஆசை வசப்பட்டு தன்னை அழித்துக் கொள்ளவும் முடியும். எனவே, இறை-சிந்தனை என்பது உலகியல் பொருள்களின் மீதான சிந்தனைக்கு ஒரு சரியான மாற்று மருந்து; இறை- சிந்தனை என்பது *'ஆத்ம சிந்தனை'* / *'ஈஸ்வர சிந்தனை'* என்றும், பொருள்- சிந்தனை என்பது *'விஷய சிந்தனை'* என்றும் வேதாந்தத்தில் அழைக்கப்படுகிறது. முந்தையது மோட்சத்திற்கும், பிந்தையது பந்தத்திற்கும் (துக்கத்திற்கும்) ஒருவனை அழைத்துச் செல்கிறது. எதனால் அப்படி? ஏனெனில், மனதால் ஒருவித எண்ணமும் இன்றி ஒரு நிமிடம்கூட இருக்க இயலாது; மேலும், *ஒரு சமயத்தில் ஒரு விஷயத்தைப் பற்றி மட்டுமே மனதால் சிந்திக்க இயலும்*. மனதைப் பற்றிய இந்த மிகப்பெரிய ரகசியத்தை சாதனை செய்பவர்கள் அறிந்து, அதை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மனம் இறைவனைப் பற்றி சிந்தித்து பக்தி செய்து தன்னை உய்வித்துக் கொள்ளலாம்; அல்லது ஆசைகளின் விஷயங்களைப் பற்றி சிந்தித்து, அது தரும் இன்பங்களை நுகர்ந்து, முடிவில் முடிவற்ற துன்பங்களில் உழலலாம். அதனால்தான், "மனமே ஒருவனின் பந்தத்திற்கும், மோட்சத்திற்கும் காரணம்" (*மன ஏவ காரணம் மனுஷ்யானாம் பந்த மோக்ஷயோ:)* என்று *அமிர்தபிந்து உபநிஷதம்* (செய்யுள்-2) சொல்கிறது. விஷய சிந்தனையில் வசப்படாமல் மனமானது காக்கப்பட வேண்டுமானால், ஏதாவது ஒரு உயரிய, மிக வசீகரமான, மிக அழகான, மேலும் மகிழ்வளிக்கும், மனதைத் தன்னில் முழுதும் லயிக்கும் இலக்கு ஒன்று அதற்குத் தரப்பட வேண்டும் --- இலக்குகளிலேயே மிகவும் சிறந்த இலக்கு பரமானந்த இறைவனே, பரம்பொருளே, ஆத்மாவே. ஆகவேதான், "கையில் வேல் தாங்கிய முருகப் பெருமானின் தாமரை

பாதத்தில் அடைக்கலமாகி, உய்வடைவாயாக; மேலும், அனைத்துப் புலன்கள் வாயிலாக வெளிப்படும் ஆசையை துறந்துவிடுவாயாக" என்று மனம் அறிவுறுத்தப்படுகிறது.

ஏழாம் செய்யுளில், "ஓ மனமே, ஏன் துன்பப்படுகிறாய். இப்பொழுது, முக்தி அடைய ஒரு உபாயம் உள்ளது, அதைக் கேளாய்: எதையும் பதுக்கி வைத்துக் கொள்ளாமல், அனைத்தையும் தானம் செய்வாயாக; கூர் வேல் தாங்கிய பெருமானின் தாமரைப் பாதத்தை தியானம் செய்வாயாக," என்று கூறப்பட்டது. இச்செய்யுளில் (14-ல்), "ஓ மனமே! கதிர்வேலை கையில் தாங்கி நிற்கும் முருகப் பெருமானின் மலர்ப்பாதம் பெற்று உய்வாயாக. ஐம்புலன்களின் வழியே தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் ஆசைகளை ஒழித்து விடுவாயாக, ((முழுவதுமாக) ஒழித்து விடுவாயாக," என்று அறிவுறுத்தப்படுகிறது. இவ்விரண்டு செய்யுள்களையும் நன்கு ஆராய்ந்து பார்த்தால், ஒரு பெரிய இரகசியம் காணப்படும். அதாவது, தானம் செய்வதற்கு இறைவனைச் சிந்திக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. அவனைச் சிந்திக்காமலும் தானம் செய்ய முடியும். (அப்படிச்செய்பவன் மோட்சம் அடைவான் என்று கூற இயலாது). ஆனால், ஆசைகளை விடவேண்டுமென்றால், இறைவனைப்பற்றி முதலில் சிந்தித்தல் அவசியம். இறைவனைச் சிந்தித்து அவன் கழல்களைப் பெறாமல் ஆசைகளை விடுவதென்பது இயலாத காரியம். ஆன்மீக வழிமுறையில் பொதிந்துள்ள அரும்பெரும் இரகசியங்களையும் படிப்படியாக முன்னேறுவதையும் எவ்வளவு துல்லியமாகவும் நேர்த்தியாகவும் அருணகிரியார் வெளிப்படுத்திக் கொண்டு வருகிறார் பார்த்தீர்களா!

==========

செய்யுள் – 15

==========

முருகன் குமரன் குகன்என்று மொழிந்து
உருகும் செயல்தந்து உணர்வென்று அருள்வாய்
பொருபுங்கவரும் புவியும் பரவும்
குருபுங்கவ எண்குண பஞ்சரனே.

பொழிப்புரை: "வானுலகத்தோரும் இவ்வுலகத்தோரும் போற்றி வணங்குகின்ற குரு சிரேஷ்டரே! எட்டு திவ்ய குணங்களின் உறைவிடமே! "முருகன், குமரன், குகன்" என்று மெய்யன்புடன் உங்கள் திருநாமங்களை மொழிந்து (ஜபம் செய்து), என் உள்ளம் உருகும் நிலை தந்து, உங்களை என் நெஞ்சில் உணர்ந்து அனுபவிக்க எப்போது அருள்புரிவீர்?" (விரைவில் அருள்புரிவீராக!)

விளக்கவுரை

சாதகனுக்கு சமாதி நிலையை அறிமுகப்படுத்திய பின்னர் (செய்யுள்-12), குருவானவர் அவனை இறை-பாதம் பெற்று உய்வடையுமாறும், அதன் மூலம் ஆசைகளை விட்டுவிடுமாறும் அறிவுரை செய்தார் (செய்யுள்-14). அவ்வறிவுரைகளால் உந்தப்பட்ட சாதகன், நாம ஜபம், பஜனை, கீர்த்தனம் ஆகிய சாதனைகளைத் தீவிரமாக மேற்கொள்கிறான். இந்த பக்தி சாதனை, ஆசைகளையும் மனதின் வெளிச்செல்லும் போக்கையும் ஓரளவுக்கு வலுவிழக்கச் செய்வதில் உபயோகமாயிருக்கிறது. ஆனால், மனமும் இதயமும் சேராமல், வெறுமனே வாயால்மட்டும் செய்யப்படும் நாம ஜபம், கீர்த்தனை முதலியவைகளால் (மொழிதலால்) யாதொரு பயனும் விளைந்திடாது என்று அவன் அறிந்திருக்கிறான் (செய்யுள்-5). மேலும் தனது முயற்சி மட்டும் போதாது; அதோடு கடவுளின் கிருபையும் சேர்ந்திட வேண்டுமென்றும் அச்சாதகன் அறிந்திருக்கிறான். எனவே, அவன் இப்பொழுது குருவாகிய இறைவனை கிருபை காட்டுமாறு வேண்டுகிறான். அவ்வருளால், "முருகன், குமரன், குகன்" என்று அவன் சொல்லும்பொழுதே, அவன் மனம் நெக்குருகி, அவனுள்ளே உறையும் இறைவனை அவன் உணருமாறு செய்ய வேண்டுகிறான்.

கடவுளைப் பற்றுவது, ஆசைகளைத் துறப்பது ஆகிய இரண்டும் ஒன்றுக்கு பின்னர் மற்றொன்றாக தனித்தனியாக செய்யப்படும்

சாதனைகள் அல்ல. அவை இரண்டும் ஒரே சமயத்தில் செய்யப்பட வேண்டிய சாதனைகளே; ஏனெனில், மனதால் ஏதாவது ஒன்றைப்பற்றி மட்டுமே ஒரு சமயத்தில் சிந்தித்திட இயலும். இறைவனைப் பற்றி சிந்தித்தால், விஷய சிந்தனையான ஆசைகளுக்கு இடமில்லை. எவ்வளவிற்கு மனம் இறைவனை நாடிச் செல்கிறதோ, அவ்வளவிற்கு அது ஆசைகளிலிருந்து விடுபட்டு, ஆசைகளை பலம் இழக்கச் செய்கிறது. எனவே, இறைநாம ஜபம், சங்கீர்த்தனம் போன்ற சாதனைகள் மனப்பூர்வமாகவும், தொடர்ச்சியாகவும் வெகுநாள் செய்யப்படும்பொழுது, ஆசைகளின் தீவிரம் நாளடைவில் நீர்த்துக்கொண்டே போய், இறுதியில் அவை இருக்குமிடமே தெரியாமல் மறைந்து விடுகின்றன. ஆசைகள்தான் ஒருவனின் மனதையும், நெஞ்சையும் கடினமாக்குகின்றன. ஆகையால், இறைநாம ஜபத்தை விடாமல் ஆத்மார்த்தமாக செய்துவந்தால், ஆசைகள் நாளடைவில் பலமிழந்து அழிந்து போகின்றன, மனம் தூய்மையாகித் தானாகவே நெகிழ்ந்து உருகுகிறது; நெஞ்சில் உறையும் இறைவன் உணரப்படுகிறான். இறைவனருளால் சாதகன் ஆத்ம-சாக்ஷாத்காரம் அடைகிறான். அவ்வருளைப் பெறுவதே இச்செய்யுளில் செய்யப்படும் பிரார்த்தனையின் நோக்கம்.

இந்தப் பிரார்த்தனை யாருக்குச் செய்யப்படுகிறது? "பொருபுங்கவரும் புவியும் பரவும் குருபுங்கவ எண்குண பஞ்சரனுக்கு." வானுலகத்தோரும் மண்ணுலகத்தோரும் போற்றி வழிபட்டுத் துதிக்கும் முருகப் பெருமானிடம் செய்யப்படுகிறது. சிவனாரிடமிருந்து பெற்ற விசேஷ வரங்களைக்கொண்டு அசுரன் சூரபத்மனும் அவனுடைய சகோதரர்களும் தேவர்களை தேவலோகத்திலிருந்து விரட்டியடித்தும், மேலும் பலவிதமாக அவமதிப்பு செய்தும் துன்புறுத்தினர். கந்தப் பெருமான் அவ்வசுரர்கள் அனைவரையும் போரில் அழித்து, அவர்கள் தந்துவந்த கடும் தொல்லைகளிலிருந்து தேவர்களைக் காப்பாற்றி, தேவலோகத்தையும் அவர்களுக்கு மீட்டுக் கொடுத்தார். எனவே, தேவர்கள் அனைவரும் பெரும் பக்தி சிரத்தையுடன் கந்தனை எப்பொழுதும் பூஜிக்கின்றனர். இவ்வுலகில் வாழும் மனிதர்களும் தங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள, துன்பங்களைக் களைந்திட, செல்வம் பெற்றிட, மகிழ்ச்சி அடைய, பக்தி பெருக, கடவுளை உணர --- எதுயெது தேவையோ அவை அனைத்தையும் அடைந்திட --- கந்தப் பெருமானை அணுகி, அவன் புகழைப் பாடி தங்கள் வேண்டுதல்களை சமர்ப்பித்து, தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யதுகொள்ள அவரை நாடுகின்றனர்.

கந்தப் பெருமான் பிரணவ மந்திரத்தின் ரகசிய மறைபொருளை சிவனாருக்கு உபதேசித்தார். மேலும், அகஸ்திய மகாமுனிவருக்கும்,

பராசர முனிவரின் ஆறு புதல்வர்களுக்கும் மெய்ஞான உபதேசத்தைத் தந்தருளினார். ஆகவே, முருகன் ஸத் குரு, ஆதிகுரு, குருபுங்கவ, என்றெல்லாம் போற்றிப் புகழப்படுகிறார்.

தேவர்களாலும் மனிதர்களாலும் போற்றப்படும் குரு சிரேஷ்டரான முருகன் "எண்குண பஞ்சரன்", எட்டு திவ்ய குணங்களின் உறைவிடம். இறைவனின் எட்டு குணங்கள் தமிழ் நூல்களில் விதவிதமாகக் கூறப்பட்டிருக்கிறது. அவற்றில் ஒன்று:

1. தன்னைத் தானே சார்ந்திருப்பவன் (சுதந்திரன் - Self Dependent),
2. தூய உடல் கொண்டிருப்பவன் (Immaculate Body),
3. இயற்கை உணர்வுடையவனாக இருப்பவன் (Natural Understanding),
4. அனைத்தும் அறிந்தவனாக இருப்பவன் (Omniscience),
5. மாயை நீங்கிய இயல்பினனாக இருப்பவன் {Naturally free from Maya (Attachments)},
6. எல்லையில்லா கிருபை உடையவனாக இருப்பவன் (Unlimited Grace),
7. முழுமையான ஆற்றல் பெற்றிருப்பவன் (Omnipotence),
8. எல்லையற்ற ஆனந்தம் பெற்றிருப்பவன் (Limitless Bliss).

மேற்கூறிய எண்குணங்களும் மற்றைய திவ்ய எண்குணங்களும் 'ஸத் - சித் - ஆனந்தம்' என்ற மூவகை பேரியல்புகளுக்குள் அடக்கம். எனவே, "எண்குண பஞ்சரன்" என்றால், முருகன் *ஸச்சிதானந்த பரப்ரம்மம்* என்று பொருள்.

இறை-நாமங்களில் எல்லையற்ற சக்திகள் பொதிந்து இருக்கின்றன; அவை பாவங்களை அழித்து மனதைத் தூய்மைப்-படுத்துகின்றன. இறைவனைவிட அவர் நாமங்கள் அதிக சக்தியுடையவையாகக் கருதப்படுகின்றன; ஏனெனில், இறைவன் ஒரு சிலரை மட்டுமே நேரடியாகக் காத்தருளினார், ஆனால், அவருடைய நாமங்களோ பலருக்கு முக்தியைத் தந்தருளியிருக்கின்றன, தந்துகொண்டுமிருக்கின்றன. ஒவ்வொரு இறைநாமமும் அண்ட அதிர்வுகளின் ஒரு சூட்சும வடிவம் (சூட்சும உறைவிடம்); ஒரு சக்திவாய்ந்த ஒத்திசைவு அதிர்வு; எனவே, அவை மனதில் ஏற்படும் ஒன்றுக்கொன்று முரணான எண்ண-அதிர்வுகளை அழிக்கும் திறன் கொண்டவை. மேலும், இறை-நாம ஜபம் அவ்வொத்திசைவு அதிர்வுகளை உடல் மற்றும் மனம் முழுவதும் பரப்புகின்றது. அதனால் மனம் பிரம்மாண்ட அதிர்வான இறைவனுடன் நன்கு இணைந்திருக்க முடிகிறது. எனவே, இறைநாம ஜபம் இடைவிடாது நீண்டகாலம் செய்யப்படும்போது, மனம் மேன்மேலும்

நுட்பமாகிக்கொண்டே போய், நெக்குருகி, இறைவனிலேயே தன்னைக் கரைத்துக்கொள்ளுகிறது. ஆகவே, 'முருகன், குமரன், குகன்', என்று அவர் திருநாமங்களை அனுதினமும் இடைவிடாது ஜபித்திடவும், அதன் மூலம் தன் மனதை நெகிழச் செய்து, நெஞ்சில் இறைவனை உணர்ந்து அனுபவிக்கவும் அருளுமாறு சாதகன் இறைவனிடம் வேண்டுகிறான்.

இதயத்தின் உணர்வுடன் இயைந்து செய்யப்படும் நாம-ஜபம் எளிதில் அடையக்கூடியதல்ல; ஏனெனில் மனம் அநேக அசுத்தங்களால் நிரம்பி இருக்கிறது. அந்த மனதை சுத்தம் செய்வதற்கே பலகாலம் பிடிக்கும், அதன் பின்னரே மனமும் நெஞ்சும் உருகிட இயலும். எனினும், அதற்காக உளச்சோர்வடைய வேண்டியதில்லை. சாதகன் பூரண நம்பிக்கையோடு, நீண்ட காலத்திற்கு இறை-நாமங்களை ஜபம்பண்ணி வந்தால், அந்த நாமங்களிலுள்ள சக்தியே விரும்பிய விளைவைத் தந்திடும் என்பது உறுதி. இறை-நாமங்களின் இடைவிடாத ஜபமே உரிய காலத்தில் நெஞ்சத்தையும் உருக்கி, கடவுளோடு ஒன்றுவதற்கும் வழிவகுக்கும். அது பூரண ஆன்மீக விழிப்புணர்வில் முடிவடையும். இப்படியாக எல்லா ஆன்மீக சாதனைகளின் இலக்கான இறைவனை, நம்முடைய உண்மைத் தத்துவத்தை, இறை-விழிப்புணர்வை அல்லது தெய்வீக அனுபவத்தை அடைவோம் என்பது உறுதி.

இறை-நாமத்தை நாம் ஜபிக்கும்போது, நமது மனம் உருக வேண்டும், நெஞ்சம் பரம்பொருளை உணர வேண்டும். அதாவது, நம்முடைய பேச்சு, எண்ணம், உணர்வு ஆகிய அனைத்தும் இறைவனுடன் ஒருங்கிணைய வேண்டும். அப்பொழுதுதான் இறை-அனுபவம் உண்டாகும். அவ்வாறு ஒருங்கிணையாமல், வாய்மட்டும் ஜபம்செய்தால், உலக அனுபவம் எனும் இந்த மாயை நம்மை விட்டு அகலாது; ஐந்தாம் செய்யுளில் சித்தரிக்கப்பட்ட நிலைமையில்தான் நாம் ("**ஜகமாயையுள் நின்று தயங்குவதே**") எப்பொழுதும் இருந்துகொண்டிருப்போம். எனவே, நாம் நம்பிக்கையை இழந்துவிடாமல். இறை-நாமாக்களை, அவரது பாதங்களின் மீது மிக்க அன்பும் பக்தியும் கொண்டு, இடைவிடாது பலகாலம் தொடர்ந்து ஜபம்செய்து வந்தால், காலப்போக்கில் மனதில் உருக்கமும், நெஞ்சில் தெய்வீக உணர்வுகளும் ஏற்படுமென்பது நிச்சயம். "ஒருவன் நீண்ட காலத்திற்கு, எந்தவித தடைகளுக்கும் இடம் தராமல், அன்போடும், முழு இசைவோடும் தொடர்ந்து சாதனை செய்துவந்தால், அவன் அதில் நிலைபெற்றுக் கொள்கிறான்," என்கிறார் பதஞ்சலி மகரிஷி (*ஸது தீர்ககால நைரந்தர்ய ஸத்கார சேவிதோ த்றுட பூமிஹி*" - யோக சூத்ரா: சமாதி பாத:14).

இறை-நாம ஜபம் எண்ணற்ற ஆசைகளால் கனத்துப் போயிருந்த நெஞ்சை நெகிழ்த்தி, இறுதியில் இறை-விழிப்புணர்வுக்கு அழைத்துச் செல்கிறது. இது பக்தி யோக சாதனை. இந்த சாதனை, *நாமஜபம் - நெஞ்சுநெகிழ்தல் - இறையநுபவம்* ஆகிய மூன்று படிகளைக் கொண்டது; இச்செயல்முறையை, வேதாந்த சாதனையின் *வாசனா-க்ஷயம், மனோ-நாசம்,* மற்றும் *தத்வ-ஞானம்* ஆகிய மூன்று படிகளுடன் ஒப்பிடலாம்.

நுட்பமான / சூட்சுமமான ஆசை, '*வாசனை*' எனப்படும். மனம் என்பது வாசனைகளால் நிரம்பிய ஒரு மூட்டை மட்டுமே. எப்படி நூல் இழைகள் இல்லையேல் துணி என்ற ஒன்று இருக்க முடியாதோ, அப்படியே வாசனைகள் இல்லாதபோது, மனம் என்ற ஒன்றே இல்லாமற் போகிறது. நாம் ஒரு பொருளைப் பற்றி சிந்திக்கும்போது, அதன் மீது ஆசை ஏற்படுகிறது. அந்த ஆசை எனப்படும் அலை அல்லது அதிர்வு மனத்தின் அமைதியை, சமநிலையைக் கெடுக்கிறது. ஒரு பொருளின் சிந்தனை, ஆசையாகி, மனதின் அமைதியைக் கெடுக்கும் திறன் பெற்றிருக்கிறது. அப்படியே, இறைவனின் சிந்தனை மனதில் அமைதி அல்லது சமநிலையை உருவாக்கும் திறன் பெற்றிருக்கிறது. அதாவது இறை-சிந்தனையால் மனதிலிருக்கும் ஆசைகள் அழிக்கப்பட்டு, மனதில் அமைதி நிலவுகிறது. இவ்வாறான ஆசைகளின் அழிவு அல்லது மனதிலிருந்து வாசனைகளின் இழைகளை அறுக்கும் செயல், *வாசனா-க்ஷயம்* என்றழைக்கப் படுகிறது. இந்த *வாசனா-க்ஷயம்* பக்தி மார்க்கத்தில் நாமஜபத்தால் ஏற்படுகிறது. *ஈஸ்வர-சிந்தனைக்கும்* (நாம-ஜபத்துக்கும்), *விஷய-சிந்தனைக்கும்* (உலகப்பொருள்-சிந்தனைக்கும்) பலன்களில் எவ்வளவு வித்தியாசம்!

ஒரு துணி உருவாவதற்குக் காரணமான நூலிழைகள் ஒவ்வொன்றாக அதனின்று இழுத்து எடுக்கப்படும்பொழுது, துணி என்ற ஒன்றே இல்லாமல் போவதுபோல, *வாசனை* எனும் எண்ண இழைகளால் உருவாக்கப்பட்ட மனதிலிருந்து ஒவ்வொரு இழையாக, படிப்படியாக வாசனைகள் அழிக்கப்படும்போது, மனமே இல்லாமல் போய்விடுகிறது. இவ்வாறு, *வாசனா-க்ஷயம், மனோ-நாசத்திற்கு* (மனது அழிவதற்கு) வழிவகுக்கிறது. இது இறை-நாமங்களை தியானிப்பதன் (நாமஜபம் செய்வதன்) காரணமாக, நெஞ்சம் உருகுவதைக் குறிக்கிறது. மனம் அவ்வாறு அழிக்கப்படும்போது, சுயமாக பிரகாசிக்கும் தன்மை கொண்ட ஆத்மா ஒளிமயமாக பிரகாசத்துடன் ஜொலிக்கிறது; சூரியனை மறைத்திருக்கிற மேகம் விலகும்போது, சூரியன் தானே பிரகாசிப்பது போல. சூரியன் எப்பொழுதும் இருக்கிறது, சதா பிரகாசித்துக் கொண்டுதானிருக்கிறது; நாம் சூரியனை

உருவாக்கவுமில்லை அல்லது அதற்கு வெளிச்சம் தரவும் இல்லை; நீராவிகளின் தொகுப்பாலான மேகங்கள் சிதறியதால் திரை விலக்கப்பட்டு, மறைக்கபட்டிருந்த சூரியன் தானே பிரகாசிக்கிறது. இதேபோல், *வாசனா-க்ஷயம்* (ஆசைகளின் நாசம்) நிகழும்போது, ஆசைகளின் மூட்டையான மனம் அழிக்கப்படுகிறது (*மனோ-நாசம்* ஏற்படுகிறது); பின், நம் நெஞ்சில் எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஆத்மாவை அனுபவரூபமாக உணருகிறோம். இதுவே *தத்வ ஞான*மாகும்.

எனவே, வாசனா-க்ஷயம் மனோ-நாசத்திற்கும், மனோ-நாசம் தத்வ- ஞானத்திற்கும் வழிவகுப்பதுபோல; இறை நாமத்தை ஜபிப்பது, மனதை நெகிழ வைத்து, பின்னர் இறை-அனுபவத்திற்கு இட்டுச் செல்லும். இத்தகைய மிகப் பெரிதானதும் மிக அரிதானதுமான வேதாந்த உண்மைகள் இந்த செய்யுளில் வெகு எளிமையான முறையில் அளிக்கப்பட்டுள்ளன. "தத்வ- ஞானம்" என்பதை தமிழில் "உணர்வு" எனலாம், அதாவது இறை-விழிப்புணர்வு, இறை-அனுபவம் அல்லது இறை-உணர்வு எனலாம்.

இறை-நாமத்தை ஜபம் செய்தல் (மொழிதல்), மனது உருகுதல் (உருகுதல்), இறைவனை உணர்ந்து கொள்ளுதல் (உணர்தல்) --- இவை முறையே உடல், மனம் மற்றும் நெஞ்சத்தின் (இருதயம்) நிலைகளையும், அல்லது ஸ்தூல, சூட்சும மற்றும் காரண (ஆன்மீக) நிலைகளையும் குறிக்கும் என்று சொல்லலாம். பக்திப் பாதையோ அல்லது ஞானப் பாதையோ, எதுவாக இருந்தாலும், கடக்கப்பட வேண்டிய நிலைகள் கிட்டத்தட்ட ஒரே மாதிரியானவையே, அந்நிலைகளைக் குறிக்கும் சொற்களில்தான் வேறுபாடு உள்ளது.

ஜப சாதனை, இறைவனை அடைய வைக்கும் / உணர வைக்கும் சக்தி படைத்தது. ஜபம் தியானத்திற்கும், தியானம் ஆன்மீக விடுதலையான மோட்சத்திற்கும் அழைத்துச் செல்கிறது. எனவே, சுவாமி சிவானந்த மகராஜ், ஜப சாதனையை இறைவனையடைய செய்யப்படும் ஒரு முழுமையான சாதனையாகக் கருதுகிறார்.

"முருகன் - குமரன் - குகன்" என்ற கந்தப்பெருமானின் பெயர்களின் கிரமத்திற்கும், "மந்திர ஜபம் - மனது உருகுவது - நெஞ்சு உணர்தல்" என்ற செயல்களின் கிரமத்திற்கும் ஒரு விசேஷ முக்கியத்துவம் இருப்பது போல் தெரிகிறது. குகன் என்றால் 'இதய குகையில் உறைபவன்' அல்லது 'நெஞ்சில் குடியிருப்பவன்' எனறு பொருள்; அதாவது, 'குகன்' ஆத்மாவைக் (உண்மையான "நான்") குறிக்கும். 'உணர்வு' எனும் அனுபவமும் நெஞ்சோடு சம்பந்தப்பட்டது. இப்படியாக, இச்செய்யுளில் அருணகிரியார் உண்மையான "நான்" (Self)

அல்லது "ஆத்மா"வின் கருத்துப்படிவத்தை அறிமுகப்படுத்துகிறார் என்று தோன்றுகிறது. முதலில் *பகிரங்க* (வெளி விஷயங்களுடன் சம்பந்தப்பட்ட) சாதனைகளையும், பின்னர் மனம் மற்றும் ஆசைகள் சம்பந்தப்பட்ட சாதனைகளையும் போதித்து வந்த அவர், இச்செய்யுளில் *அந்தரங்க* சாதனை எனப்படும் உண்மையான உள்சாதனையைத் தொடங்கி வைக்கிறார்.

==========

செய்யுள் - 16

==========

பேராசை எனும் பிணியில் பிணிபட்டு
ஓரா வினையேன் உழலத் தகுமோ
வீரா முதுசூர்பட வேல் எறியும்
சூரா சுரலோக துரந்தரனே.

பொழிப்புரை: "ஓ, வீரனே! நெடிது காலம் வாழ்ந்த அசுரன் சூரபத்மன் அழியும்படி வேலாயுதத்தை எறிந்த சூரனே! தேவலோகத்தைக் காப்பாற்றியவனே! பேராசை எனும் (ஆழ்ந்து கிடக்கும் ஆசைகளின்) பிணியில் கட்டுண்டு, அதனால் நல்லது கெட்டதென்று ஆய்ந்தறியும் கூரறிவில்லாத தீவினையேனாகிய நான், (அவ்வினைகளின் பயனாக) பிறப்பு இறப்பு எனும் சுழற்சியில் சிக்கி உழலுவது (உமது பெருமைக்குத்) தகுதியாகுமோ?" (ஆகாது, ஆகவே நீ என்னைக் காத்தருள்வாயாக.)

விளக்கவுரை

சாதகன் (செய்யுள்-15-ல் விளக்கியவாறு) தனது சாதனையை மேலும் தீவிரப்படுத்தி, மனதை உருக வைத்திட முயற்சி செய்யும்பொழுது, அது அவ்வளவு எளிதான வேலையல்ல என்று அறிகிறான். இங்கே நாம் நன்றாக நினைவில் கொள்ள வேண்டிய விஷயம், ஒரு செய்யுளிலிருந்து மற்றொன்றிற்கான மாற்றமேற்பட சில காலம் பிடிக்கும் என்பதாகும். முந்திய செய்யுளில் தான் பெற்ற அறிவுரைகளை சாதகன் உடனே நடைமுறைப் படுத்தும்போது, பின்வரும் செய்யுளில் அதிலிருந்து வந்த அனுபவம் அல்லது விளைவு கூறப்படும்போது, அது அடுத்த நாளிலேயே வந்தது என்று கொள்ளக்கூடாது. சாதகன் அந்த நடைமுறையை தொடர்ந்து சிலகாலம் கடைப்பிடித்த பின்னரே (சில மாதங்கள் அல்லது ஆண்டுகள் கூட ஆகியிருக்கலாம்), அடுத்த செய்யுளில் சொல்லப் பட்டிருப்பதை அவன் அனுபவிக்கிறான். இப்படியாக, ஐம்புலன்களின் மூலம் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளும் ஸ்தூல ஆசைகளை (செய்யுள்-14), நீண்டகால சாதனையால் ஓரளவு அடக்கிய பிறகு, தன் மனதை உருகச்செய்ய மேலும் தீவிரமாக முயலும்போது, அவன் ஆழ்மனதில் புதைந்திருக்கும் சூட்சும ஆசைகள், அச்சாதகனை

வம்பிற்கு இழுத்து துன்புறுத்தத் தொடங்குகின்றன. ஆழ்மனதில் புதைந்து கிடக்கும் மிகசூட்சும விருப்பங்களையும், நாட்டங்களையும் தூண்டிவிட்டு, ஏக்கங்களாக மேலெழும்ப வைக்கின்றன. "பல காலமாக பூட்டப்பட்டிருந்ததால் ஒரு சமக்காள விரிப்பின் அளவிற்கு தூசிகள் ஆழமாக இறுகிப் படிந்துவிட்ட ஒரு அறையின் தரையை சுத்தம்செய்வது போன்றது இது. அவ்வாறு தரையைப் பெருக்கும்போது, தூசியானது மேலெழும்பி பெருக்குபவனின் கண்பார்வையை மங்கச்செய்து, பெருக்குவதை அவன் தொடர முடியாமற் செய்யும். ஆனால் அறையை சுத்தம் செய்தேயாக வேண்டுமென்று அவன் விரும்பினால், பெருக்குவதை எப்படியாவது சாமர்த்தியமாகத் தொடர்ந்துதான் ஆக வேண்டும்." என்கிறார் சுவாமி சிவானந்தா மகராஜ் அவர்கள். ஒரு தீவிர சாதகனின் நிலையும் இது போன்றதே.

ஆழ்ந்த சாதனைகள் மூலம் இறைவனில் மனதை நெகிழச் செய்ய முயற்சிக்கும்போது, தனக்கு எது நல்லது என்றறியும் பகுத்தறிவு இல்லாததால், முந்தையப் பிறவிகளில் அவனாலேயே விரும்பப்பட்ட பொருள்களின் மேலுள்ள ஆசைகளில், ஏக்கங்களில் (பேராசை) பூர்த்தி செய்யப்படாதவை தனது ஆழ் மனதில் நிறைந்திருப்பது அச்சாதகனுக்குத் தெரியவருகிறது. இந்த பூர்த்தி செய்யப்படாத ஆசைகளின், ஏக்கங்களின் மூட்டையே ஒரு "பிணி" ----- "பேராசை எனும் பிணி". இப்பிணி உடலைப்பற்றியதல்ல; உடல் அழியும்போது அதோடு அழிந்துபோய்விடும் பிணியல்ல; இறப்பினால் எவ்விதத்திலும் பாதிக்கப்படாத மனதிற்குரியது. மனதில் உள்ள அவ்வாசைகள் (பேராசைகள்) தங்களைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக அவனை மீண்டும் மீண்டும் தூண்டுவதன் மூலம், பிறப்பு இறப்பு எனும் சுழற்சியில் ஆழ்த்தி அதிலேயே உழலச் செய்கின்றன. எனவே, இந்த பயங்கரப் பிணியிலிருந்து விடுதலை பெற, அச்சாதகன் நாமஜபத்தை தீவிரப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், இறைவனிடம் தஞ்சமும் அடைந்து இவ்வாறு வேண்டுகிறான்: " முருகா! நான் பேராசை எனும் தீராத பிணி வசப்பட்டு பகுத்தறிவையிழந்து தீய கர்மங்களைச் செய்பவன்; அதனால், பிறப்பு இறப்பு என்ற சம்சாரச் சுழற்சியில் மாட்டிக்கொண்டு, நான் நிரந்தரமாக உழன்றுதான் ஆக வேண்டுமா? பெருமானே, இவ்வாறு நீங்கள் என்னை உழலவிடுவது நியாயமா? இது தகுமா / முறையா? தயவுசெய்து இதிலிருந்து என்னைக் காப்பாற்றி அருள்வீர்களாக. "சாதனை --- தடைகள் --- அடைக்கலம் / பிரார்த்தனை --- இறைவனின் கிருபை --- தடைகளைக் கடத்தல் ------ இப்படிப்பட்ட ஒரு சுழற்சி, சாதகன் தன் இலக்கை இறுதியாக அடையும் வரை (அதாவது சாதனையின் காலம் முழுவதும்) சாதகனுக்கு ஏற்படுவதையும், அது போகப்போக நுட்பமாகிக் கொண்டே போவதையும், நாம் காண்போம்.

"பேராசை" பற்றி அருணகிரியார் கருத்து என்ன? இதுபற்றி நாம் புரிந்து கொள்ள முயற்சிப்போம். வெறுமனே பேராசை அல்லது உலோபம் என்ற அர்த்தத்தில் நாம் சாதாரணமாக புரிந்துகொள்ளுவதுபோல் அல்ல இது. பின் என்ன! நம்முடைய ஒவ்வொரு அனுபவமும் --- பெரியது (அ) சிறியது, நல்லது (அ) கெட்டது, புனிதமானது (அ) அசுத்தமானது, விரும்பத்தக்கது (அ) விரும்பத்தகாதது, உலகியல் (அ) ஆன்மீக சம்பந்தப்பட்டது போன்ற எப்படிப்பட்ட அநுபவமாக அது இருப்பினும் --- நாம் அனுபவிக்கும் அதே சமயத்தில், நம் ஆழ்மனதில் ஒரு பதிவையும் (அடையாளம்) ஏற்படுத்தி விட்டுச் செல்கிறது. இந்த பதிவுகள் '*சம்ஸ்காரங்*கள்' என்று அழைக்கப்படுகின்றன. இந்த சம்ஸ்காரங்களிலிருந்து, '*வாசனைகள்*' எனும் நுட்பமான (சூட்சும) ஆசைகள் ஆழ்மனதிலிருந்து அந்த இன்பத்தை மறுபடியும் அநுபவிக்க வேண்டுமென்ற 'எண்ண' (*விருத்தி*) **(Vruththi)** வடிவமாக உணர்வு-மனதில் **(Conscious mind)** வெளிப்படுகின்றன. அதன் விளைவாக இன்பம் திரும்பத் திரும்ப அடையப்படும்போது, பலப்பல பதிவுகளை (சம்ஸ்காரங்களை) ஆழ்மனதில் மேன்மேலும் விட்டுச்செல்வதால், ஏற்கனவே அங்கிருக்கும் பதிவுகள் (சம்ஸ்காரங்கள்) மேன்மேலும் கெட்டியாகி ஸ்திரமடைகின்றன. இவ்வாறாக, ஆசைகள் மீண்டும் மீண்டும் பூர்த்தி செய்யப்பட்டு, இன்ப அநுபவங்கள் பெருவதன் காரணமாக, மேலும் கெட்டியாகி ஆழ்மனதில் ஆழமாக வேர் விட்டு ஸ்திரம் பெறுகின்றன. அவ்வாறு ஆழ்மனதில் பதிந்து ஸ்திரம் பெற்ற ஆசைகள், கட்டுக்கடங்காத அல்லது பிடிவாதமான ஆசைகளா- கின்றன. அதுவே 'பேராசை' என்று இச்செய்யுளில் குறிப்பிடப்படுகிறது. அப்பேராசைகள், சீர்தூக்கிப் பார்த்து செயல்படும் (விவேக) சக்தியை சிதைத்து, அவ்வாசைகளுக்கு மனிதனை அடிமைப்படுத்தி, அவைகளை மீண்டும் மீண்டும் அநுபவிப்பதற்காக வெவ்வேறு உயிரினங்களாக அவனை மறுபடி மறுபடி பிறக்க வைத்து சம்சார சக்கரத்தில் உழலச் செய்கிறது. இது அவ்வளவு எளிதில் குணப்படுத்தக்கூடிய ஒரு நோயல்ல.

இப்பேராசையானது மனதை ஆக்கிரமித்துக் கொண்டுவிட்ட காரணத்தால், சென்ற செய்யுளில் கூறப்பட்ட 'நாம ஜபத்தை' தினசரி செய்வதுகூட, ஒரு சுலபமான விஷயமாக இருப்பதில்லை. அதனால்தான், சிறிது நேரம் உட்கார்ந்து நாம ஜபம் செய்வது, இறைவனைப் புகழ்ந்து பாடுவது நேரத்தை வீணாக்கும் ஒரு வீண் வேலை என்று பெரும்பாலான மக்கள் நினைப்பதில் ஒரு ஆச்சரியமும் இல்லை. செல்வம் ஈட்டி இன்பம் துய்த்திடத் தூண்டும் இப்பேராசைகள், சில நிமிடங்களுக்குக்கூட அவர்களை அமைதியாக உட்கார்ந்து இறைவனை நினைக்கவோ, உள் அமைதியை அனுபவிக்கவோ அனுமதிப்பதில்லை. இந்த ஆசைகளின் சக்தி

அளப்பரியது! அவை மனிதனை உலுக்கியெடுத்து, ஆட்டம் காண வைத்து, மனதையும் புலன்களையும் கிளர்ச்சி பெற வைத்து, அவனை அமைதியாக இருக்க விடுவதில்லை. இந்த ஆசைகள் மனிதனைக் கவர்ந்து, முட்டாளாக்கி, வெளிப்புற விஷயங்களில் நாட்டம் கொள்ளச்செய்து, நிலையில்லாத செல்வம் மற்றும் தற்காலிக இன்பம் ஆகியவைகளை அடைவதற்காகப் போராட வைத்து, தன் பரிவாரத்தில் ஒன்றான துன்பத்தையும் அவனுக்குப் பரிசாக அளிக்கின்றன. இவ்வாறு மனிதன் தன் பேராசைகளால் அவனறியாமலே பந்தாடப் படுகிறான். என்னே பரிதாபமான மனித வாழ்க்கை! ஆசைகளின் கைப்பாவையாகத் தான் ஆகிவிட்டதுகூட அவனுக்குத் தெரியாது. அர்ஜுனன், பகவான் ஸ்ரீகிருஷ்ணரிடம் எவ்வளவு அழகாக இத்தகைய இழிவான நிலையைப் பற்றி கேட்டான் பார்த்தீர்களா: "ஒ ஸ்ரீகிருஷ்ண பகவானே! மனிதன் எதனால் உந்தப்பட்டு, தன் மனம் விரும்பாவிட்டாலும், ஏதோ ஒரு சக்தியால் கட்டாயப்படுத்தப்படுவது போல, பாவங்களைச் செய்கின்றான்" (ஸ்ரீமத் பகவத் கீதா III:36-37). பகவான் ஸ்ரீகிருஷ்ணர், ரகசியங்களிலெல்லாம் மிகவும் ரகசியமான உண்மையை இவ்வாறு வெளிப்படுத்தினார்: "இந்த பேராசையும், இந்த கோபமும்தான், மனிதனின் அனைத்து பாவச் செயல்களுக்கும் காரணம்; அவன் விரும்பாவிட்டாலும், அவனைப் பாவச்செயல்களில் தூண்டிவிடுகின்றன." எவ்வளவு நேர்த்தியாக பதில்! ஆசையும் கோபமுமே (கோபமென்பது நிறைவேறாத ஆசையின் பரிணாம வடிவமே) மனிதன் படும் துன்பங்களுக்குக் காரணம். ஆழ்ந்து நோக்கின், எல்லா பாவங்களுக்கும் இவ்விரண்டு அரக்க சக்திகளும்தான் மூல காரணம் என்பது புரியும். உலக நாடகத்தை நடத்திவைப்பது ஆசைகளே.

ஆசைகள் ஒருபொழுதும் பூர்த்தி செய்யப்பட முடியாதவை. நாம் அவற்றை பூர்த்தி செய்யச்செய்ய, அவை இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும் என்று கேட்கும் தன்மையது. நெய்யைத் தீயில் விட்டால், அத்தீ நன்கு வளர்ந்து, மேலும் நெய்யை வார்த்திடக் கேட்பது போன்றதே ஆசைகளும். ஆசைகள், ஒவ்வொரு முறை திருப்தி செய்யப்படும் போதும், அவை மேலும் வலிவடைந்து, மேன்மேலும் திருப்தி பெறத் தீவிரமாக முயற்சி செய்கின்றன. அப்படி ஆசைகளைத் திருப்தி செய்வதில் ஏதாவது தடை செய்தால்/தடுத்தால், அது கோபத்தை உண்டாக்குகிறது; கோபத்தின் அழிவுகரமான விளைவுகளை நாம் அனைவரும் நன்கறிவோம். கோபமடைந்த மனிதன் தனது சமநிலையை இழந்து, உண்மையாகவே ஒரு மிருகம்போல் மாறிவிடுகிறான்.

இவ்வாறு, ஆசைகள் விரும்பத்தகாத விளைவுகளுக்கு வழிவகுக்கின்றன. மாறாக, இறை நாமஜபம் செய்யும்பொழுதே இனிமையாகவும் திருப்திகரமாகவும் இருக்கிறது, நெஞ்சுக்கும் ஆறுதல் கிடைக்கிறது, இறுதியில் ஜீவாத்மாவிற்கு மோட்சத்தையும் அளிக்கிறது. எனினும், ஆழ்மனதில் சூட்சுமமாக புதைந்துள்ள ஆசைகள், மனிதனை அழிந்துபோகிற உலகப் பொருள்களைநாடிச் செல்லவைத்து, பின்னர் வாழ்நாள் முழுவதும் அவனை மீளாத்துன்பத்தில் ஆழ்த்துகின்றன. ஆசைகள் எனும் சக்கரத்தில் அகப்பட்டு மனிதன் உழன்றுகொண்டே இருக்கிறான். இப்போது இந்த பொருளுக்கும், மற்றொருசமயம் மற்றொன்டிற்குமாக. ஆசைகளின் பிடியில் அகப்பட்ட ஒரு கருவியே மனிதன். அந்தோ பரிதாபம்!

இந்தப் பேராசை எனும் பிணிக்கு *அவிவேகமே* (அதாவது நல்லது கெட்டதை பகுத்தறியும் ஆற்றல் இல்லாமையே) காரணமென்று அருணாகிரிநாதர் கண்டுபிடித்துள்ளார். மனித வாழ்விற்கும், அதில் பெருமளவு காணப்படும் துன்பத்திற்கும், இந்த பகுத்தறிவின்மையே காரணம். மனித வாழ்க்கை என்றாலே துன்பமாகக் காணப்படுகிறது. இந்த சரீர வாழ்க்கையில் உண்மையான மகிழ்ச்சி இல்லை. நம்மால் இன்பம் என்று அழைக்கப் படுபவைகளும்கூட, ஞானிகளால் துன்பமாகவே கருதப்படுகிறது; ஏனெனில், எல்லா இன்பங்களும் தற்காலிகமானதாகவும் பொய்யானதாகவும் இருப்பதோடல்லாமல், துன்பம், ஏக்கம், அமைதியின்மை, கவலை மற்றும் பாவம் --- இவற்றில் முடிவடைகின்றன. நம்முடைய துயரத்தின் காரணம் என்ன? நாம் உடல்தாங்கிய ஜீவனாகப் பிறந்திருப்பதே நமது துன்பங்களுக்குக் காரணம். அப்படி உடலுருவம் கொண்டு பிறப்பதற்குக் காரணம் நம் கர்மங்கள். இந்த அநித்திய உலகிற்கு கர்மங்களே நம்மை அழைத்து வருகின்றன. நாம் ஏன் கர்மங்களைச் செய்கிறோம்? அன்பு (அ) பகை, விருப்பு (அ) வெறுப்பு (*ராகம் - துவேஷம்*) கொண்டுதான் நாம் செயல்படுகிறோம்; பற்றுகள்தான் அன்பு அல்லது பகைக்கான காரணமாகிறது. சில நபர்கள் மற்றும் விஷயங்களுடன் நாம் பற்றுக் கொண்டிருக்கிறோம் என்றால், அவசியம் வேறு சில நபர்கள் மற்றும் விஷயங்களுடன் நாம் பகை/வெறுப்பு கொண்டிருக்கிறோம் என்பதைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இதற்கு பகுத்தறிவின்மை அல்லது சரியான புரிதல் (விவேகம்) இல்லாததுவே காரணமாகும். எல்லாம் இறைவனின் படைப்பு. எல்லாம் அவரின் அங்கங்கள். அவரிலிருந்து வேறுபட்டு எதுவும் இல்லை. அவரே அனைத்துமாய் உள்ளார். எல்லாவற்றின் உள்ளேயும் அவர் உறைகிறார். தோன்றிய அனைத்தும் மறைந்து போவது உறுதி. இதுவே உண்மை. அப்படியிருக்க, சிலவற்றின் மீது அன்பு

பாராட்டுவதற்கும், சிலவற்றை வெறுப்பதற்கும் எந்தவித காரணமும் இல்லை. ஆனாலும், அவிவேகத்தினால் நாம் அவ்வாறுதான் செய்கிறோம். அந்த அவிவேகம்தான் (பகுத்தறிவின்மைதான்) நாம் படும் அனைத்து துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் காரணம். *அக்ஞானம்* அல்லது அறியாமை தான் இந்த அவிவேகத்திற்கு மூல காரணம் என்றாலும், யதார்த்தமான (நடைமுறை) நோக்கத்தில் பார்த்தால், பேராசை எனும் பிணி, பிறப்பு, மற்றும் துன்பம் ஆகியவைகளுக்கு அவிவேகமே காரணம் என நாம் உறுதியாகக் கருதலாம்.

மீண்டும் மீண்டும் பிறந்து இறப்பதற்குக் காரணம் பேராசை. எனவேதான், அது ஒரு நோய் என குறிப்பிடப்படுகிறது. உள்ளபடி, இதுதான் உண்மையான நோய். உடலில் தோன்றும் நலிவுகளும் நோய்களும் உண்மையில் நோய்களேயல்ல, ஏனென்றால் அவை ஒரு குறுகிய காலத்திற்குத்தான் நம்மை தொந்தரவு செய்கின்றன, பின்னர் அவை குணப்படுத்தப்பட்டு விடுகின்றன (அல்லது, உடல் அழியும் பொழுது, அவைகளும் அழிந்துவிடுகின்றன). மனக் கோளாறு-களைக்கூட குணப்படுத்திவிட இயலும் அல்லது கட்டுப்படுத்தி வைக்க முடியும். தீராத நோய்கள்கூட, உடல் நீடிக்கும்வரைதான், நீடித்து இருக்கும்; உடல் இறக்கும்போது, அவை உடலோடு சேர்ந்து மறைந்து விடுகின்றன. அவைகளால் மறுபிறப்பு ஏற்படுவதில்லை; ஒருவனின் அடுத்த பிறவியில் அவைகள் தொடர்வதில்லை. ஆனால் இந்த அசாதாரண நோயான பேராசைகள் அடுத்தடுத்த பிறவிகளில்கூட ஒரு நபரை விட்டு வைப்பதில்லை; மாறாக அவைகளே மறுபிறவிகளுக்குக் காரணமாகின்றன. நிறைவேறாத ஆசைகள் தற்போதைய வாழ்க்கை முழுவதுமே ஒரு மனிதனைத் தொந்தரவு செய்வதோடல்லாமல், மறுபிறப்பிற்கும் காரணமாகின்றன; மேலும், அதற்கு பின்வரும் பிறப்புகளிலும் அவனைத் தொடர்ந்து தொந்தரவு செய்கின்றன. நாம் முன்னரே பார்த்ததுபோல, ஆசைகள் ஒருபோதும் பூர்த்தி செய்யப்பட முடியாதவை. ஆதலால், தெய்வீகக் கிருபையுடன் கூடிய ஆன்மீக சாதனைகள் மூலம் அவை பதங்கமாகப்படும் வரை (அ) துறக்கப்படும்வரை, அவை முடிவில்லாப் பிறப்புகளுக்குக் காரணமாகின்றன. ஆசைகளின் உண்மைத்தன்மை, அவைகளின் காரணங்கள், அவைகளைப் பதங்கமாக்கும் (தூய்மைப்படுத்தி மேன்மைப் படுத்தும்) முறை ஆகியவைகளைப்பற்றி நன்கு பகுத்தாராய்ந்து, அறிந்து (இதன் விவரங்களுக்கு செய்யுள்-14 பார்க்கவும்) செயல்பட்டு, இறைவனிடம் அடைக்கலம் புகுந்து, அவரின் கிருபையைப் பெறுவதன்மூலமே, ஆசைகளைப் பதங்கமாக்குவதோ / துறப்பதோ சாத்தியமாகும்.

எனவே, அச்சாதகன் பெருமானின் முன்னர் அழுது புரண்டு, கிருபையையும் தயையையும் தனக்கு உடனே தந்தருளிட அவரிடம் இறைஞ்சி மன்றாடி வேண்டுகிறான். எந்தப் பெருமானிடம் வேண்டுகிறான்? இப்பூவுலகம் முழுவதையுமே பல்லாண்டு காலம் ஆண்டதில் திருப்தி அடையாமல், தேவர்களை வென்று அவர்களை அடிமைப்படுத்தி தேவலோகத்தையும் தன் வசப்படுத்திய பேராசையும் அகங்காரமுமே உருவான சூரபத்மனைக் கொன்ற அந்த முருகப் பெருமானிடம் வேண்டுகிறான். அப்படிப்பட்ட பராக்கிரமம் கொண்ட சூரபத்மனையும், அவனது படை முழுவதையும், ஒரு சிறு விளையாட்டுப் போல, ஒருமுறை வேலாயுதத்தை எய்தி, அழித்து, தேவர்களுக்கு தேவலோகத்தையும் திரும்பப் பெற்றுத் தந்தார் முருகப் பெருமான். எனவேதான், அச்சமற்றவரென்றும், நெடிது வாழ்ந்திருந்த சூரனை அழித்தவரென்றும், தேவலோகத்தை பாதுகாத்தவரென்றும் முருகப்பெருமான் இச்செய்யுளில் புகழ்ந்து போற்றப்படுகிறார்.

எப்படி முருகப் பெருமானின் சக்தி-வேலால் மட்டுமே அசுரனான சூரபத்மனை அழிக்க முடிந்ததோ, அப்படியே இறை-கிருபையின் துணை கொண்டு மட்டுமே ஆசைகளை அழித்திட இயலும். எனவே, அச்சாதகன் இறைவனிடம் இவ்வாறு வேண்டுகிறான்: "ஓ பெருமானே! பல்லாண்டு காலமாக வாழ்ந்திருந்த சூரபத்மனை வேல் எறிந்து அழித்து, தேவர்களைத் காத்தவர் நீங்கள்! அவனைவிட மிகப்பயங்கரமான பேராசை எனும் பிணி என்னுள் இருக்கிறது. நான் இந்த பேராசைகளின் பிடியில் சிக்கி, விவேக சக்தியையும் இழந்து, நிரந்தரமாகத் துன்பப்பட வேண்டுமா? இது நியாயமாகுமா? உங்கள் கிருபை எனப்படும் வேல் கொண்டு, பேராசை எனும் அரக்கனாகிய இப்பெரும் பிணியை அழித்து என்னைக் காத்தருளும்." அவன் மேலும் வேண்டுகிறான்: "ஓ பெருமானே, நீங்கள் தேவலோகத்தைக் காத்தருளியதுபோல, என்னையும் காத்தருளக் கூடாதா? இது உங்களுக்கு ஒரு பெரிய வேலையா என்ன? என் மேல் தயை கொண்டு, என்னை காத்தருளுங்கள்."

மண் (வீடு), பொன் (பொருள்), பெண் (மனைவி) ஆகிய இம்மூன்றின் மீதுள்ள பற்றே ஜகன்-மாயா எனப்படும் உலக மாயையின் சாரம் என்று ஐந்தாம் செய்யுளில் அறிந்தோம். இம்மூன்றுமே, மூன்று ஏடணைகளின் *ஸ்தூல வடிவம்,* அதாவது "பொருள்கள்மீதான பற்று"; இவை அவன் வாழ்வில் சொல்லமுடியாத துன்பங்களைத் தந்தபோதும், அவற்றை விட்டொழிப்பதென்பது மிகவும் கடினம். இந்த மூன்று ஏடணைகளின் *சூட்சும வடிவம்* அவன் ஆழ்மனதில் படிந்திருக்கும் ஏக்கங்கள் எனும் "பேராசை"; இவை அவனை தொடர்-பிறப்பில் (சம்சாரத்தில்) ஆழ்த்துகின்றன என்று

இச்செய்யுளில் அறிகிறோம். இந்த மூன்று ஏடணைகளின் *காரண வடிவம்* மாயையிலிருந்து பிரிக்கமுடியாத (அதாவது மாயையோடு ஒன்றுபட்டிருக்கும்) நிலையை, 39-ஆம் செய்யுளில் சித்தரிப்பதைக் காண்போம்.

இப்பதினாறாம் செய்யுளுக்கும், முப்பத்தொன்பதாம் செய்யுளுக்கும் நேரடித் தொடர்பு உள்ளது. முப்பத்தொன்பதாம் செய்யுளில் சொல்லப்படும் "மூவித ஏடணை"களின் 'சூட்சும வடிவம்' இச்செய்யுளில் 'பேராசை' எனக் கூறப்பட்டுள்ளது; முப்பத்தொன்பதாம் செய்யுளின் 'மாவேழ் சனனம்', இச்செய்யுளில் 'உழலுதல்' (பிறப்பு - இறப்பு எனும் சம்சார சக்கரத்தில் தொடர்ந்து சுற்றுதல்) என்று குறிப்பிடப்படுகிறதெனலாம்.

==========

செய்யுள் - 17

==========

யாமோதிய கல்வியும் எம்மறிவும்
தாமேபெற வேலவர் தந்ததனால்
பூமேல் மயல்போய் அறமெய்ப் புணர்வீர்
நாமேல் நடவீர் நடவீர் இனியே.

பொழிப்புரை: "நாம் கற்ற கல்வியும், நமது அறிவும் வேலாயுதப் பெருமான் தாமே நமக்கு அருளியது. எனவே, இனிமேல் உலகத்தின்மேலுள்ள மயக்கத்தை ஒழித்து, பரம்பொருளுடன் முழுதும் ஒன்றுபட்டு இரு; அவன் மகிமைகளை என்றும் எப்பொழுதும் நாவினால் பாடிக் கொண்டே இரு".

விளக்கவுரை

சாதகன் தற்போது இருக்கும் நிலையை அடைய, அவன் சாதனையைக் கடைப்பிடிக்கத் தொடங்கி நீண்ட காலமாகிவிட்டது. இந்தக் காலகட்டத்தில், அவன் சமய மற்றும் ஆன்மீகப் புத்தகங்கள் பலவற்றை நன்கு கற்றறிந்து (*ஸ்வாத்யாயம் செய்து*), பல்வேறு ஸத்-சங்கங்களில் பங்கேற்று, குருவினிடமிருந்து அறிவுரைகளையும் பெற்றிருந்தான். அப்புத்தகங்கள், அவைகளிலிருந்து அவன் பெற்ற அறிவு முதிர்ச்சி, குருவின் அறிவுரைகள் ஆகிய அனைத்துமே, உண்மையிலே, வேலவப் பெருமானாலேயே அவனுக்குத் தரப்பட்டவை **{யாமோதிய கல்வியும் எம்மறிவும் (நாம்) பெற வேலவர் தாமே தந்தது}**. வேலவப் பெருமானே குருவாய் வந்து அவனுக்கு அறிவுரை தந்ததையும் நாம் ஏற்கனவே பார்த்துள்ளோம் (8, 11, 12 & 13-ம் செய்யுள்கள்).

'அதனால்' (ஆகையால்): வேலவராலேயே கொடுக்கப்பட்ட "யாமோதிய கல்வியும் எம்மறிவும்" எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் (அ) அது கொடுக்கப்பட்டதன் **நோக்கம்** என்ன, என்பதைக் குறிக்கின்றது. வேலவர் அதை எதற்காகக் கொடுத்தார்? நம் சாதனையில் முன்னேறப் பயன்படுத்தி, இறைவனை அடைவதற்குத்தான் கொடுத்தார்.

பேராசை எனும் பிணியில் அகப்பட்டு, விவேக சக்தியை இழந்து, பிறப்பு-இறப்பு எனும் சக்கரத்திலகப்பட்டு உழலுவதையுணர்ந்து, அதிலிருந்து விடுதலைபெற பிரார்த்தனை செய்த (செய்யுள்-16) சாதகனுக்கு இறைவன் இச்செய்யுளில் வழி காட்டுகிறார். '*அவிவேகம்*' ('விவேகம்' இல்லாமை) தான் எல்லாத் துன்பங்களுக்கும் காரணம். அதனால், அவிவேகத்தால் நம்மில் தோன்றிய ஏக்கங்கள் மற்றும் பூர்த்தி செய்யப்படாத ஆசைகள் எனப்படும் பிணிகளின் தாக்கத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்காக, பெருமானிடமிருந்தே பெறப்பட்ட அறிவுரைகளை சாதகன் இப்பொழுது செயல்படுத்த முயல்கிறான். அந்த அறிவுரைகள் என்னென்ன? அவைகளை பெருமான் எதற்காக அவனுக்குத் தந்தருளினார் என்று காண்போம்:

1. **"இனி"(யே)** - இனிமேல்,

2. **"பூமேல் மயல் போய்"** – பெயரும் உருவமும் கொண்ட இவ்வுலகப் பொருள்கள் (*நாம-ரூப பிரபஞ்சம்*) நிரந்தரமான மகிழ்ச்சியைத்தர இயலும் என்ற மயக்கத்தை (உலக மாயையை), விவேக சக்தியை வளர்ப்பதன் மூலம், ஒதுக்கித் தள்ளுவாயாக (உலக மாயையை விவேகத்தின் மூலம் கடந்து செல்வாயாக),

3. **"அற மெய்ப் புணர்வீர்"** – பெயர் மற்றும் உருவத்தால் மட்டும் வேறுபடும் இவ்வனைத்து உலகியல் பொருள்களின் பின்புலத்தில், அவைகளுக்கு ஆதாரமாயிருக்கும் மெய்ப்பொருளுடன் முழுமையாக ஒன்றுபடுவாயாக ----- ஒரே உண்மைப்பொருளாகவும், *ஸத்-சித்-ஆனந்த* சொரூபமாகவும் (*அஸ்தி-பாதி-பிரிய* சொரூபமாகவும்) இருக்கும் அப்பரம்பொருளுடன் நிரந்தரமாக ஐக்கியமடந்து உய்வாயாக. எப்படி?

4. **"நாமேல் நடவீர் நடவீர்"** – முருகன், குமரன், குகன் போன்ற இறை நாமங்களை விடாமல் தீவிரமாக நாவால் ஜபம் செய்து, அவனுடைய மகிமைகளை மனதாரத் துதித்துப்பாடினால், அது மனதையுருக்கி நெஞ்சில் இறை-உணர்வைத் தந்திடும். (செய்யுள் - 15).

ஆன்மீகப் பாதையில் எதிர்ப்படும் இடர்களையும், கஷ்டங்-களையும் விலக்குவதற்காக இருக்கும் ஒரே சாதனம் ஆன்மீக சாதனையை மேலும் கடுமையாக செயல்படுத்துவதுதான்; இதைத்தவிர வேறு எந்த சாதனமும் இல்லை. சூட்சும ஆசைகள் (பேராசை) நம்மைத் தொந்தரவு செய்கின்றன என்பதனால் (செய்யுள்-16), நாம் உறுதி தளர்ந்துபோய், அவைகளுக்கு அடிபணிந்து விடாமல், துணிந்து மேலும் முனைப்புடன் எதிர்த்துப் போராட வேண்டும். "கஷ்டங்கள்/தடைகள் நம்மை வெற்றிக்கு அழைத்துச்செல்லும் படிகள்" என்று சுவாமி சிவானந்த மகராஜ் சொல்கிறார். எனவே, முடிவில் மனம் உருகத்தான் செய்யும்; சாதகன் தன் குறிக்கோளை அடைவதில்

வெற்றி பெற்றே தீருவான். எனவேதான், '**நாமேல் நடவீர் நடவீர்**' என்பதில், 'நடவீர்' என்ற சொல் இருமுறை சொல்லப்பட்டிருக்கிறது. அதில், மேலே கூறப்பட்ட விளக்கம் அடங்கியுள்ளது. ஜபம் – துதித்தல் ஆகிய ஆன்மீக சாதனைகள், சாதகனால் மேன்மேலும் தீவிரமாக செயல்படுத்தப் படும்பொழுது, அவை தானாகவே தியானத்திற்கு வழிகோலி (அடுத்த செய்யுள்), பேராசை (ஏக்கங்கள்) எனும் மனநோயின் பிடியிலிருந்து விடுவித்து சாதகனைக் காத்திடும்.

மன ஏக்கங்களை விட்டுவிடுதல் என்பதே "*பிரத்யாகாரம்*" (அ) சுய கட்டுப்பாடு என்றழைக்கப்படுகிறது. '*விவேகம்*' (பொருள்களின் உண்மைநிலையை சரியாகப் புரிந்துகொள்ளும் பகுத்தறிவு) மற்றும் '*வைராக்கியம்*' (பற்றின்மை/விருப்பமின்மை) ஆகிய இவ்விரண்டையும் அடிப்படையாகக்கொண்ட *பிரத்யாகாரம்* கைகூடிய பின்னரே, சாதகனால் '*தாரணம்*' (மனதை ஒருமுகப்படுத்துதல்) மற்றும் '*தியானம்*' (ஒரே சிந்தனையில் மனதை நிலைநிறுத்தல்) ஆகிய ஆன்மீக சாதனையின் அடுத்தடுத்த உயர்நிலைகளுக்கு முன்னேறிச் செல்ல இயலும்.

தங்களுக்குத் தெரிந்ததை பிறருக்குப் பகிர்ந்தளிக்க விருப்பமில்லாத அறிவாளிகளிடம் சென்று யாசிக்காமல், ஆத்ம ஞானத்தை நேரடியாக இறைவனிடமிருந்தே வேண்டிப் பெறுமாறு 45-ம் செய்யுளில் அறிவுறுத்தப்படுவதை நாம் இங்கு கவனத்தில் கொள்வது பொருத்தமாக இருக்கும்.

முருகப் பெருமானே அச்சாதகனுக்கு குருவாக வந்து, அவன் உடலல்ல, அதிலுறையும் ஆத்மா என்று அவனுக்கு வாய்மொழியாகத் தந்த அறிவுரை (*ஹிதோபதேசம்*) (செய்யுள் – 7). அவனுக்கு வெறும் தத்துவார்த்தப் புரிதலாக அமைந்ததே தவிர, உள்ளார்ந்த நம்பிக்கையாக மாறிவிடவில்லை. ஆனால், அவன் தொடர்ந்து செய்த சாதனையாலும், குரு மேன்மேலும் அவனுக்குக் கொடுத்த அறிவுரை மற்றும் அனுபவங்களாலும் (செய்யுள்கள் 11 முதல் 14 வரை), அந்த தத்துவார்த்தப் புரிதல் இப்பொழுது உள்ளார்ந்த நம்பிக்கையாக மாறியமைந்து, சாதனையில் தொடர்ந்து செயல்படத் தேவையான மனபலத்தை சாதகனுக்குக் கொடுத்து ஊக்குவிக்கிறது.

நாம் ஓதிய நூல்கள், நமக்குக் கல்வி போதிக்கும் ஆசிரியர் (குரு), அவரிடம் கற்றதை நாம் புரிந்து கொண்டது, ஆகிய இவ்வனைத்தும் நமக்கு இறைவனால் நேரடியாகத் தரப்பட்டவை அல்லது ஏற்பாடு செய்யப்பட்டவை. இவ்வுலகிலிருக்கும் நூல்கள் எண்ணிலடங்காதவை. அவைகளில் எந்தப் புத்தகத்தைப் படித்தால் நாம் முன்பு பெற்றிருக்கும் அறிவிற்கு மேலும் வலிமை சேர்க்குமோ அவற்றை இறைவனே தேர்ந்தெடுத்துத் தருகிறான். ஒவ்வொரு

சாதகனும், பக்தனும் எல்லா புத்தகங்களையும் படிப்பது முடியாததல்லவா? (நூல்களோ அநேகம், நமக்கிருக்கும் நேரமோ மிகமிகக் குறைவு). எனினும், அவரவருக்கு எந்த புத்தகம் தேவையோ, அது எப்படியோ மர்மமாக அவரவருக்கு வந்து சேர்கிறது! இறைவனே அவ்வாறு கொண்டுவந்து சேர்க்கிறார்; ஆனால். இந்த இரகசியத்தை அவர் நமக்கு எளிதில் வெளிப்படுத்துவதில்லை.

மேலும், நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறு ஆசிரியரிடம் (குரு/ பள்ளி/ஆசிரமம்) செல்கிறோம், ஆனால், அங்கு ஒரு சமயத்தில் கற்கும் நூல் ஒன்றேயாயினும், அந்த ஆசிரியர் எப்படி கற்றுத்தருகிறாரோ, அதற்கேற்பவே நம் புரிதலும் அமைகின்றது. அனைத்திற்கும் மேலே, நாம் எதைப் படித்தோமோ அதைச் சரியாகப் புரிந்து கொள்வதும் (உள்ளிருந்து) இறைவனால் கொடுக்கப்படுகிறது. ஒரே ஆசிரியரிடமிருந்து ஒரே புத்தகத்தை பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவரின் புரிதலும் வெவ்வேறுவிதமாக உள்ளது. இதற்குக்காரணம், இறைவன் எவ்வளவுக்கு புரியவைக்கிறானோ அவ்வளவுக்கு மட்டும்தான் ஒருவன் புரிந்துகொள்ள முடியும். நம்மால் உண்மைத் தத்துவங்களை சரியாகப் புரிந்து கொள்ள முடிகிறதென்றால், அது இறைவனது கிருபையாலேதான். நமக்கு அருமையான புத்தகங்களைப் படிக்கும் வாய்ப்பு கிடைத்தால், நூல்களை நன்கு கற்ற, ஆன்மீக விழிப்புணர்வை நேரடியாக அடைந்த, நேர்மையான அன்பான ஒரு குருவின் வழிகாட்டல் கிடைத்தால், பரம்பொருளைப் பற்றிய மெய்ஞானத்தை நாம் அடையப் பெற்றால், இவற்றுக்குக் காரணம் இறைவனுடைய கிருபையே என்பது திண்ணம். எந்தெந்த புத்தகங்களை நாம் படித்திட வேண்டுமோ, அந்தந்த புத்தங்களை நம்மிடம் அனுப்பி வைப்பது இறைவனே; அவரே நம்மை நம் குருவுடன் சேர்த்து வைக்கிறார்; அப்புத்தங்களை படித்து முடித்து குருவின் அறிவுரைப்படி நாம் நடந்த பின்னர், கடைசியில் உயரிய ஞானத்தையும் அவரே நமக்கு உணர்த்துகிறார்; அதாவது, அவரே நம்முள் மெய்ஞானமாகப் பிரகாசிக்கிறார். சாதகன் தியானத்தில் ஆழ்ந்திருக்கும்பொழுது, அவன் இதுவரை எந்த புத்தகத்தில் படிக்காததும், குருவிடமிருந்து கேட்காததுமான உண்மைத் தத்துவங்கள் பல எங்கிருந்தோ அவன் உள்ளத்தில் உதிப்பதை உணர்கிறான். இது சாதகர்களின் அனுபவம். அவ்வுண்மைகள் எங்கிருந்து வருகின்றன? படித்தவை/கேட்டவை வெளிப்படுத்தியதை-விட அதிக அளவில், குருவாகிய இறைவன் அவன் உள்ளிருந்து அரிய இரகசிய உண்மைகளை வெளிப்படுத்துகிறார். இப்படியாக, ஆன்மீக சாதனையின் ஒவ்வொரு கட்டத்திலும் – சாதனையின் தொடக்கத்திலிருந்து இறுதியில் நாம் நிறைஞானியாகும்வரை -- இறைவன் நம்முடன் உறுதுணையாக இருந்து உதவி புரிகின்றார்.

இறைவனே புத்தகமாகவும், குருவாகவும், ஞானமாகவும் வருகின்றார். புத்தகம் ஒரு *ஜடப்பொருள்* (insentient object -- அது அறிவு செறிந்த உயிரற்ற பொருள்.) அதில் அறிவானது தத்துவ வடிவில் உள்ளது. அதாவது, அறிவானது புத்தகத்தில் *"இருப்பாக"* இருக்கிறது (Exists); அதுவே *"ஸத் "* (இருப்பு எனும்) சொரூபம் ஆகிறது. அடுத்து, குரு (உயிருள்ளவர்) விழிப்புணர்வுள்ளவர் (Conscious being); அவரே அறிவின் திருவுருவம் (ஞானப் பெட்டகம்), அவருடைய நடைமுறை வாழ்வில் ஞானம் 'பிரகாசிக்கிறது'. எனவே, குரு *"சித்"* (சைதன்யம்/ விழிப்புணர்வு) சொரூபம். மேலும், அவர் தன்னை ஞானமாக நம்மில் வெளிப்படுத்திக் கொள்ளும்பொழுது, நாம் ஞானசொரூபமாகவே ஆகி, ஆன்ம விடுதலையையும் பேரானந்தத்தையும் ஒரே சமயத்தில் அடைகிறோம்; இதுவே *"ஆனந்த"* சொரூபம். இவை ஞானத்தை (அறிவை) அடைவதற்கான படிப்படியான நிலைகள் – 1. புத்தகத்தில் இருக்கும் ஞானம் (வெளிப்படாது மறைந்திருக்கும் நிலை – Potential stage), 2. குருவிடமிருந்து வரும் ஞானம் (வெளித்தோன்றிய பிரகாசிக்கும் நிலை – Vibrant stage), மற்றும் 3. சுய-அனுபவமான ஞானம் (அநுபவ நிலை – Experience stage); ஞானத்தின் இருப்பு, ஞானத்தின் உணர்வு, மற்றும் ஞானத்தின் பேரின்ப நிலைகள், அதாவது *ஸத்-சித்-ஆனந்த* நிலை.

இச்செய்யுள் நமக்கு ஒரு மிகப்பெரிய பாடத்தையும் புகட்டுகிறது. இது நம் அகங்காரத்தை அகற்றிட உதவி செய்கிறது. நாம் பெற்ற கல்வியைப் பற்றிய, அல்லது அடைந்த ஆன்மீக ஞானத்தைப் பற்றிய அகங்காரம் விரும்பத்தக்கதல்ல. நாம் பெற்ற கல்வியும், அடைந்த ஞானமும் இறைவனால் தரப்பட்டவையேதவிர, நாமாகப் பெற்றவையல்ல. அதனால் இவைகளைப்பற்றி அகந்தை கொள்ள யாதொரு முகாந்திரமும் இல்லை. இவை நம்முடையது அல்ல, இறைவன் அருளியவை. ஆகவே அவைகளைப் பற்றி நாம் கர்வம் கொள்வதற்கு முகாந்திரமேது? எனவே, நம்மிடம் இருக்கும் அனைத்தும் இறைவன் நமக்கு தந்தவைகளே என்ற உண்மையை எப்பொழுதும் மறக்காமல் நினைவில் இருத்தி விநயமுடன் வாழ இச்செய்யுள் உபதேசிக்கிறது.

எத்தகைய புரிதலை இறைவன் நமக்குத் தந்தருளுகிறார்? வாழ்க்கைக்கு சிறிதும் சம்பந்தப்படாத புத்தக அறிவல்ல; ஆனால் வாழ்வாகவே இருக்கும் மெய்ஞானம் அல்லது ஆன்மீகப் புரிதலையே தந்தருளுகிறார். அப்புரிதல் நமது வாழ்க்கையுடன் நெருக்கமாக தொடர்பு கொண்ட, நம் வாழ்வின் ஒவ்வொரு தருணத்திலும் கடைபிடித்து அனுசரிக்கவேண்டிய, நடைமுறை அறிவு. அதுதான் என்ன? பெயர் மற்றும் உருவத்தில் பலப்பலவாக வேறுபட்டுத் தோன்றும் இவ்வுலகப் பொருள்களின் மீதுள்ள மதிமயக்கத்தை அறவே

ஒழித்துக் (போக்கிக்) கொண்டு (**பூமேல் மயல் போய்**), *ஸத் -சித்-ஆனந்தமான* மெய்ப்பொருளாகிய உண்மைத் தத்துவத்துடன் இணைபிரியாது ஒன்றி இருப்பதுவே (**அற மெய்ப் புணர்வீர்**).

எதனால் இவ்வுலகின் மீதான மதிமயக்கம் ஏற்படுகிறது? இந்த மயக்கத்திற்கு *அவிவேகம்* எனும் பகுத்தறிவின்மை (அ) உலகைப் பற்றிய சரியான புரிதல் இல்லாமையே காரணம். பெயர் மற்றும் உருவத்தினால் வேறுபடும் பொருள்களாலானது இவ்வுலகம்; எனவே இதை *நாமரூப பிரபஞ்சம்* என்று கூறுகிறோம். பொருள்களின் பின்புலத்திலுள்ள உண்மை தத்துவத்தைக் காணாமல், அவைகளின் பெயர் மற்றும் உருவங்களை (நாம-ரூப பேதம்) மட்டுமே காண்பது மதிமயக்கத்திற்கான காரணம். அதாவது, உண்மை தத்துவத்திற்கும் அதன் தோற்றத்திற்குமுள்ள வேறுபாட்டைக் காண இயலாமையே காரணம். பொருள்களின் *நாமரூப* வித்தியாசத்தால் அவற்றில் வெவ்வேறு மதிப்பைக் காண்பதால், பொருள்களின்மீது விருப்பமோ வெறுப்போ உண்டாகிறது. அதற்குப்பதிலாக, அவற்றின் பின்புலத்திலுள்ள சாரத்தை (அ) அதிஷ்டானத்தை காண்போமாகில், எவ்வித மதிமயக்கமும் ஏற்படாது. -- அபரிமிதமான விருப்பமோ, வெறுப்போ, முன்னுரிமையோ, அன்போ அல்லது பகைமையோ இருக்காது. இதை ஒரு உதாரணத்தின் மூலம் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

ஒரே மரக்கட்டையிலிருந்து பலப்பல வடிவங்களில் செய்யப்பட்டு விதவிதமான வண்ணங்கள் பூசப்பட்ட பொம்மைகள் – யானை, சிங்கம், குதிரை, பூனை, புலி, நாய், ஒட்டகம், முதலானவை – ஒரு குழந்தையின் முன்னே வைக்கப்பட்டால், அக்குழந்தை சில பொம்மைகளை விரும்பும், சிலவற்றை விரும்பாது. அதற்குக் காரணம், அது தான் பார்க்கின்ற உருவங்கள் மற்றும் அதன் பெயர்களை உண்மை என்று நம்புகிறது, அனைத்துப் பொம்மைகளும் ஒரே மரக்கட்டையிலிருந்துதான் செய்யப்பட்டவை என்ற அறிவு அதற்கு இல்லை. நாய் மற்றும் பூனை அதற்குப் பிடிக்கும், அவைகளை அன்புடன் தூக்கி, தன் மடியில் வைத்துக் கொள்ளும், கட்டியனைத்து முத்தமிடும், கொஞ்சி விளையாடிடும். அதே சமயம், சிங்கத்தைத் தொடக்கூட அஞ்சி பயப்படும். ஒவ்வொரு பொம்மையிலும் வெவ்வேறுவிதமான மதிப்பை, பயனைப் பார்ப்பதால் அதற்கேற்ப நடந்து கொள்ளும். ஆனால், வளர்ந்த பக்குவடைந்த மனிதனுக்கு அவைகளில் எந்த வேறுபாடும் தெரியாது. ஏனெனில், அவன் கண்களுக்கு அவைகளின் உருவங்கள் வெவ்வேறாகத் தென்பட்டாலும், அவ்வுருவங்கள் எதிலிருந்து உருவாயின என்பது தெரிந்திருப்பதால், அவனால் பெயர்கள்–வடிவங்கள் உருவாக்கும் பேதங்களை

பொருட்படுத்தாமல் இருக்க முடிகிறது. (மரத்தை கண்டுகொண்ட) அவன் (அக்குழந்தை செய்ததுபோல) நாயை விரும்பி கொஞ்சவும் மாட்டான்; சிங்கத்தைக் கண்டு அஞ்சவும் மாட்டான். எனவே, பெயர்-உருவம் தரும் பேதத்தை மட்டும் (நாம-ரூபத்தை) காண்பதுதான் உலகிலுள்ள பொருள்களின் மேல் நம்மிடம் ஏற்படும் மயக்கத்திற்குக் காரணம்; உண்மையில் பார்த்தால் அவைகள் அனைத்துமே ஒரே மூலப்பொருளிலிருந்து பலப்பல வேறுபாடுகள் செய்து உருவானவையே. எல்லாத் தங்க நகைகளும் உண்மையில் வெறும் தங்கம்தானே; அவற்றில் தங்கத்தைத் தவிர வேறொன்றும் கிடையாதுதானே? வளையல், ஆரம், மோதிரம், என்று பலவாறு நாம் சூட்டும் பெயர்கள் அந்த நகைகளின் வடிவ வித்தியாசத்திற்கே அன்றி, அவற்றின் மூலப் பொருளான தங்கத்திற்கு அல்ல. வடிவத்திற்கு ஏற்ப வெவ்வேறு பெயர்களால் அந்த நகைகள் அழைக்கப்பட்டாலும், அவைகளின் மூலப்பொருள் தங்கமே, தங்கத்தை அன்றி வேறொன்றுமில்லை. எனவே, அவை 'தங்க நகை' என்று அழைக்கப்படுகின்றன. மேலும், அவற்றின் பெயர்களில் உள்ள வேறுபாடு, அவற்றில் தங்கத்தைக் காண்பதில் எத்தடையும் செய்வதில்லை. அதைப்போலவே, இவ்வுலத்திலுள்ள பொருள்களின் நாம-ரூபங்கள், அவற்றின் சாரமான 'ஸச்சிதானந்தத்தை' கண்டு, அநுபவத்தில் உணர்வதற்கு எவ்விதத்திலும் தடையாக இருப்ப-தில்லை. இப்படியாக, பொருள்களின் பெயர்கள்–உருவங்களின் (நாம-ரூபங்களின்) மீதான மயக்கத்தைப் போக்கி, (**"பூமேல் மயல் போய்"**) அவைகளனைத்தின் ஆதாரமாயிருக்கும் *ஸச்சிதானந்தத்தை* உணர்ந்து, மனதை அதிலேயே ஸ்திரமாக (**"அற"**) நிலைத்திருக்கச் செய்தல் வேண்டும் (**"மெய்ப் புணர்வீர்"**). — "பூமேல் மயல் போய் அற மெய்ப் புணர்வீர்".

==========

செய்யுள் - 18

==========

உதியா மரியா உணரா மறவா
விதிமால் அறியா விமலன் புதல்வா
அதிகா அநகா அபயா அமரா
வதிகாவல சூர பயங்கரனே.

பொழிப்புரை: "பிறப்பு-இறப்பு அற்றவரும் (ஆதியந்தம் இல்லாதவர்), நினைப்பும் மறதியும் அற்றவரும், பிரம்மா - விஷ்ணு ஆகிய இருவராலும் அறியப்படாதவரும், பரிசுத்தமானவருமான பகவான் சிவபெருமானின் புதல்வனே! தலையாயவரே, பாபமற்றவரே, அடைக்கலம் தருபவரே, தேவலோகத்தின் தலைநகராகிய அமராவதியைக் காத்தவரே, சூரபத்மனுக்கு மரணபயத்தைத் தந்தவரே!"

விளக்கவுரை

"கந்தர் அனுபூதி" நூல் முழுதிலும் இந்தச் செய்யுள் மட்டும் தனித்தன்மை வாய்ந்தது. இறைவனைப்பற்றிய விவரணம், மற்றும் அவரின் மகிமைகள் மட்டுமே இச்செய்யுளில் கூறப்பட்டுள்ளன. உதவி வேண்டிடும் பிரார்த்தனைகள் இல்லை, உதவியற்ற நிலையைப் பற்றிய வருந்துதல்கள் இல்லை, விண்ணப்பங்கள் இல்லை, அறிவுறுத்தல்கள் இல்லை, கண்டிப்பு இல்லை, கிருபை அருளுதல் இல்லை, ஆன்மீக அநுபவங்கள் பற்றிய வர்ணனைகள் இல்லை, இது இல்லை அது இல்லை என்று அடுக்கிக்கொண்டே போகலாம். பார்ப்பதற்கு மிகவும் எளிமையாகவும், பெருமானைப் பற்றிய விவரணம் மட்டும் அடங்கிய செய்யுளாகத் தோற்றம் அளிக்கின்றது; உண்மையில் ஆராய்ந்து பார்க்கும் பொழுதுதான், இச்செய்யுள் பரம ரகசியமான தத்துவார்த்த அர்த்தம், தத்துவச் செறிவுகள், ஆன்மீக உட்பொருள் ஆகியவைகளை உள்ளடக்கியிருப்பது நமக்குப் புலப்படுகிறது.

முந்தைய செய்யுளில் சாதகன் மெய்ப்பொருளான *ஸச்சிதானந்தத்துடன்* தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டு அதிலேயே ஸ்திரமாக நிலைத்திருக்கவும், அதற்கான வழிமுறையாக ஜபம், இறை-நாமாக்களைப் பாடுதல் போன்ற சாதனைகளைத் தீவிரமாகச்

செய்திடுமாறும் அறிவுறுத்தப் பட்டதைப் பார்த்தோம். அந்த வழிமுறை பக்தி மார்க்கம். இப்பொழுது இச்செய்யுளில் ஞான மார்க்கம் (பாதை) எனப்படும் தத்துவார்த்த, ஆன்மீகப் பார்வைகொண்ட ஒரு செயல்முறை தரப்படுகிறது. நாம் முன்பே பார்த்தது போல, "கந்தர் அநுபூதி" நூல் முழுவதிலுமே, பக்தியும் ஞானமும் கைகோர்த்தே செல்கின்றன.

"பரம்பொருளாகிய *ஸச்சிதானந்தத்துடன்* ஐக்கியமாகி நிலைத்திருப்பாயாக (**அற மெய்ப் புணர்வீர்**)!" பரம்பொருள் எது? அதனுடன் ஐக்கியமாவது எவ்வாறு? சென்ற செய்யுளில் ஸச்சிதானந்தமே அனைத்து பெயர்கள்-உருவங்களின் பின்புலத்திலுள்ள உண்மை தத்துவம் என்று விளக்கப்பட்டது. அந்த ஸச்சிதானந்தமாகிய *பரப்பிரம்மத்திற்கு* இரண்டு நிலைகள் (aspects) உள்ளன:

1. 'எல்லாம் கடந்த நிலை' எனும் 'ஆழ்நிலை' (Transcendental aspect - **பிரம்மம்**).
2. 'ஊடுருவிய நிலை' எனும் 'உள்ளார்ந்துள்ள நிலை' (Immanent aspect - **ஆத்மா** (அ) **உண்மை "நான்"**).

எல்லையற்ற, எங்கும் நிறைந்த, எல்லாம் கடந்ததாய் அறியப்படும்பொழுது அது '**பிரம்மம்**' என அழைக்கப்படுகின்றது. அனைத்து ஜீவராசிகளிலும் மற்றும் எல்லாப் பொருள்களிலும் உள்ளார்ந்துள்ளதாய் (அ) அனைத்தையும் ஊடுருவிய உண்மைத் தத்துவமாக அறியப்படும்பொழுது அது '**ஆத்மா**' (அ) '**உண்மை நான்**' என அழைக்கப்படுகின்றது. **பிரம்மமும் ஆத்மாவும் வெவ்வேறான இரண்டு பொருள்களோ தத்துவங்களோ அல்ல**; இரண்டுவிதமான பார்வைக் கோணமே. ஒரே உண்மைத் தத்துவமான பரம்பொருளின் ஆழ்நிலை மற்றும் உள்ளார்ந்தநிலை என்ற இருபார்வைக் கோணங்களும், சவுகரியத்திற்காக சொல்லப்படும் இரண்டு பெயர்கள்தான். எனவே, ஆத்மாவே பிரம்மம்; '*அயம் ஆத்மா பிரம்ம*' என்கிறது *மாண்டூக்ய உபநிஷத்தின்* மகாவாக்கிய மந்திரம். இவ்வுண்மையை மிகவும் திறமையாக அருணகிரிநாதர் இச்செய்யுளில் கையாளுகிறார்: பகவான் சிவபெருமானை பிறவாதவர், அழியாதவர் என்று பிரம்மத்திற்குறிய இலட்சணங்களுடன் விவரித்த அருணகிரியார், அவரின் புதல்வரான கந்தப் பெருமானையும் கிட்டத்தட்ட அதே இலட்சணங்கள் கொண்டு (பிறவான், இறவான் என்றெல்லாம் ஏற்கனவே செய்யுள்-12இல் உள்ளபடி) இங்கு மேலும் இவ்வாறு விளக்குகிறார்: - "அதிகா! அநகா! அபயா! அமரவதிகாவல! சூர பயங்கரனே!"

இச்செய்யுளின் முதல் இரு வரிகளில் அருணகிரியார், பகவான் சிவனாரை 'உதியா மரியா (பிறப்பு - இறப்பு அற்றவர்), உணரா, மறவா'

(நினைப்பும், மறுப்பும் அற்றவர்) என்றெல்லாம் விவரித்திருப்பது, பரம்பொருளாகிய பிரம்மத்திற்கு உரித்தானவை. அச்சிவனாரின் புதல்வனான முருகப் பெருமானும் (குகனும்) அவ்வாறே 'பிறவான், இறவான்' என்றெல்லாம் செய்யுள்-12இல் விவரிக்கப்பட்டுள்ளார். மேலும், அசுரனைக் கொல்வதற்காக சிவனார் எடுத்த மற்றொரு உருவம் முருகன் அல்லது குகன் என்றும் நாம் அறிவோம். ஆகையால், குகனும், சிவனும் ஒன்றே. "குகன்" என்றால் "இதயக் குகையில் உறைபவர்" என்று பொருள், அதாவது, "ஆத்மா" அல்லது உண்மையான "நான்"; எனவே சிவனார், பிரம்மன்; முருகன் (குகன்), ஆத்மா. இவ்வாறு, அருணகிரியார் வேதங்களின் நான்கு மகாவாக்கியங்களில் ஒன்றான *'அயம் ஆத்மா பிரம்ம'* என்ற மந்திரத்தை இங்கு சூட்சுமமாகக் காட்டுகிறார். எனவே, ஒரே பரம்பொருள் தத்துவத்தின் இரு அம்சங்களான ஆத்மாவும் பிரம்மமும் ஒன்றே. ஆத்மா என்பது பரம்பொருளின் உள்ளார்ந்துள்ள நிலை **(Immanent aspect)**. இதுவே எஷ்டி என்றும் பிண்டம் **(Individual)** என்றும் அழைக்கப்படுகின்றன. பிரம்மம் என்பது பரம்பொருளின் எல்லாம் கடந்த நிலை **(Transcendental aspect)**. இதுவே, சமஷ்டி என்றும் அண்டம் **(Cosmic)** என்றும் அழைக்கபடுகின்றன. மேலும், ஆத்மாவை தியானிப்பதன் மூலம், *அவித்யா* எனப்படும் *அக்ஞானத்தை* அழித்திட இயலும். அந்த அவித்தையே சூரபத்மன். அதனால்தான், அருணகிரியார் 'குகனை' 'சூர பயங்கரன்' என்று குறிப்பிடுகிறார், அதாவது சூரபத்மனுக்கு (மரண) பயத்தைத் தருபவர்; எப்படியெனில், சாதகன் முழு ஆர்வத்துடன் ஆத்மாவின்மீது தியானம் செய்ய ஆரம்பித்தவுடனேயே, அது அவித்யைக்கு (சூரபத்மனுக்கு) மிக பயங்கரமான அச்சத்தை உண்டுபண்ணுகிறது, அவித்யைக்கு (சூரபத்மனுக்கு) வரப்போகும் மரணத்தைப்பற்றிய பயத்தை ஏற்படுத்துகிறது. அசுரன் உடனே கொல்லப்படவில்லை, அதனால்தான் மற்ற செய்யுள்களில் 'சூரனை அழித்தவன்' என்று முருகனை அழைப்பதுபோல அழைக்காமல், இச்செய்யுளில் 'சூர பயங்கரன்' என்றழைக்கிறார். சூரனை (அ) அவித்யாவை அழிப்பதென்பது மிக நெடிய யுத்தம் செய்த பின்னரே நடைபெறுகிறது. முதலில் சூரன் யுத்தத்திற்குத் தன்னை தயார் படுத்திக்கொண்டு, கடும் யுத்தத்தைத் துவக்குகிறான்; அதுபோலவே, மரண கிலி பிடித்த (அழியப்போகும்) அவித்யாவும், சாதகனை எப்படியெல்லாம் துன்புறுத்தல் செய்யப்போகிறதென்பதை நாம் பின்வரும் செய்யுள்களில் காணத்தான் போகிறோம். நீண்டு பலகாலம் யுத்தம் செய்தபின்னரே, சூரன் (அவித்யா) வேலினால் (ஞானத்தால் சமாதி அநுபவநிலையில்) அழிக்கப்படுகிறான் (செய்யுள்-42). இப்படியாக, பின்னர் ஆத்மாவின்-மேல் தியானம் செய்வதற்கு உபயோகமாக இருப்பதற்கு,

இச்செய்யுளில் *'அயம் ஆத்மா பிரம்ம'* என்ற மகாவாக்கியத்தை அருணகிரியார் உட்பொருளாகவும், மிக இரகசியமாகவும் புகுத்துகிறார். அருணகிரியார் ஒரு மிகப்பெரிய உளநூல் அறிஞர்.

இப்படியாக, சமயம் மற்றும் பக்தி முறைச் சாதனையிலிருந்து, தத்துவார்த்த மற்றும் ஆன்மீக முறைச் சாதனையான ஆத்மா (அ) தன்னிலை தியானத்திற்கு மாறுவதை இச்செய்யுள் குறிப்பிடுகிறது. உண்மைத் தியானம் எது என்பது இச்செய்யுளில் சூசகமாக தெரிவிக்கப்படுகிறது. இச்செய்யுளின் முதல் இரண்டு வரிகள் பிரம்மத்தின்/ஆத்மாவின் சொரூபத்தை வர்ணிக்கிறது; கடைசி இருவரிகள், அவித்யைக்கு (சூரபத்மன்) அச்சத்தை ஏற்படுத்தும் தன்னிலை/ ஆத்ம தியானத்தை செய்திடும் முறையைக் குறிப்பிடுகிறது.

உலகத்தின் மேலிருக்கும் மதிமயக்கத்தை விட்டு, உண்மைத் தத்துவத்தோடு (ஆத்மாவோடு) தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று (முந்தைய செய்யுளில்) இறைவன் கொடுத்த ஞானத்தைக் கொண்டு, அச்சாதகன் ஸச்சிதானந்த சொரூபனான முருகனைத் தன்னுள்ளேயிருக்கும் ஆத்மாவாக தியானிக்கத் தொடங்குவான். அத்தியானத்தை நீண்டகாலம் பயிற்சி செய்த பின்னர், அவனுக்குத் தன் மனதை ஆத்மாவில் நிலைநிறுத்த முடியும். ஆத்மாவில் மனதை ஒருமுகப்படுத்துதல் (*தாரணம்*), மற்றும் நிலைநிறுத்துதல் (*தியானம்*) செய்திடும்பொழுது, அது அறியாமையை கிலிபிடிக்கச் செய்து உசுப்பிவிடும், அதையே 'சூரபத்ம பயங்கரனே' என்று இச்செய்யுள் குறிப்பிடுகிறது.

இறைவனுக்கு பிறப்பும் இறப்புமில்லை. அவருக்கு ஆதியுமில்லை, அந்தமுமில்லை. இவ்வுலகிலுள்ள எல்லா ஸ்தாவர ஜங்கமங்களும் (உயிரற்ற மற்றும் உயிருள்ள அனைத்துப் பொருள்களும்) அவரிடமிருந்தே தோன்றுகின்றன; அவரால், அவரிலேயே போஷிக்கப்பட்டு பாதுகாக்கப் படுகின்றன; மேலும், இவ்வனைத்தும் அவரிடமே திரும்பி வருகின்றன, அவரிலேயே சேர்ந்து விடுகின்றன. ஆனால், அவரிடம் எவ்வித மாற்றமும் ஏற்படுவதில்லை. அவரைத் தவிர, இரண்டாவது என்ற வேறொன்றும் இல்லையாதலால், அவர் எதைப் பற்றியும் சிந்திப்பதுமில்லை, எதையும் மறப்பதுமில்லை. அத்தகைய அருமை பெருமைகளை உடைய பகவான் சிவபெருமானின் மகிமையை பகவான் பிரம்மதேவரும் விஷ்ணுதேவரும் அறிந்திலர்தானே! சிவனாரின் அடி-முடியை நன்கு தேடியும் இவ்விருவராலும் காண இயலவில்லை என்ற புராணக் கதையை இங்கு நினைவுபடுத்திக் கொள்வோம்.

ஒரு சமயம், பிரம்மாவும், விஷ்ணுவும் தான்தான் பெரிய பகவான் என்று சொல்லிக்கொண்டு வாதிட்டனர்; ஆனால் அவர்களால் இப்போட்டியை முடிவிற்குக் கொண்டுவர முடியவில்லை. கடைசியில், இருவரும் யுத்தம் செய்வது என்றும், அதில் யார் ஜெயிக்கிறாரோ அவரே பெரிய பகவான் என்றும் முடிவு செய்தனர். யுத்தம் ஆரம்பித்து, பல்லாண்டு காலம் நடந்து வந்தபோதிலும், அது ஒரு முடிவிற்கு வருகிறதாகத் தெரியவில்லை. எனவே, பகவான் சிவன், அந்த யுத்தத்தை முடித்து வைக்கத் தீர்மானித்து, அவர்கள் முன் ஒரு ஜோதி-மலைபோலத் தோன்றி மண்ணிலிருந்து விண்வரை பரவிநின்று அவர்களைத் திகைக்க வைத்தார். அது என்ன என்று அறிய ஆர்வம் கொண்டு, இருவரும் யுத்தமிடுவதை நிறுத்தினர். அச்சமயம், அவர்கள் ஓர் அசரீரி ஒலிப்பதைக் கேட்டனர்: "யார் பெரியவர் என்று நீங்கள் இருவரும் ஏன் வீணே சண்டை பிடிக்கிறீர்கள்? பகவான் சிவனுக்கு மட்டுமே உங்கள் இருவரின் சக்திகளைப் பற்றித் தெரியும். உங்களில் யாரொருவர் இந்த ஜோதி மலையின் அடியையோ முடியையோ காண்கிறீரோ, அவரே பெரிய பகவானாவார்."

இதைக் கேட்டவுடனே, பகவான் விஷ்ணு ஒரு பன்றி உருவெடுத்து பூமியைத் தோண்டிக்கொண்டு, அச்சோதியின் அடியைக் காணச் சென்றார்; பகவான் பிரம்மா ஒரு பெரிய அன்னப்பட்சி உருவெடுத்து, அதன் முடியைக் காண ஆகாயத்தை நோக்கி மேலே பறந்து சென்றார். எவ்வளவு தூரம் அவர்கள் சென்றாலும், அந்த ஜோதி அதையும் கடந்து இருப்பதைக் கண்டனர். இருவரும் தங்கள் முயற்சியில் தோற்று முற்றிலும் சோர்வடைந்தனர். அதே சமயத்தில், ஒளிமலையானது பகவான் சிவனாக மாறி அவர்களுக்குக் காட்சி அளித்தது. அவ்வாறு சிவனாரைக் கண்டதும் அவ்விருவரின் அகங்காரம் உடனே மறைந்தது. இருவரும் பகவான் சிவனையே பெரும் இறைவனாக ஒத்துக் கொண்டனர். உடனே சிவனார் திரும்பவும் அடி-முடி இல்லாத ஜோதியாக மாறி, பின் சிறிது சிறிதாகக் குறுகி ஒரு மலையாக மாறினார். இதுவே திருவண்ணாமலை என்ற க்ஷேத்திரத்தில் இன்றும் இருக்கும் 'அருணாசல மலை'. இந்த சம்பவம் ஒரு மகாசிவராத்திரியன்று நடந்ததென்று சொல்லப்படுகிறது.

சூரபத்மனும் மற்றும் பிற அசுரர்களும் சிவபிரானிடமிருந்து வரங்கள் பெற்றிருந்தனர். அதனால், சிவனார் தன் உருவிலேயே அவர்களைக் கொல்ல இயலாத நிலையில் இருந்தார்; மேலும், பிறிதொருவரும் அவர்களைக் கொல்ல முடியாது. எனவே, அவ்வசுரர்களை அழித்திட, சிவனார் தானே கந்தப் பெருமானாகத் தோன்றினார். ஆகையால், சிவனாரும் கந்தப் பெருமானும்

ஒருவரேயாவர். இதை வலியுறுத்தவே, "உதயா மரியா ..... விமலன் புதல்வா" --- "மாசில்லா சிவனாரின் புதல்வா" என்று கந்தப் பெருமான் இச்செய்யுளில் அழைக்கப்படுகிறார்.

அப்படிப்பட்ட கந்தப் பெருமானின் மகிமை அளவற்றது. மிகவும் பெரிய பகவான், பாபமற்றவன், தன் பக்தர்களின் பாபங்களை அழித்தொழிப்பவன் என்றெல்லாம் மிகவும் உயரியவராக அவர் விவரிக்கப்பட்டிருக்கிறார். ஒருவன் தன் முழுமனதினாலும் அவரையே நினைத்து, அவர் பாதங்களில் சரண் புகுந்தால், அவர் அவனுக்கு அடைக்கலம் நல்குவார். தன்னிடம் சரணடைந்த தேவர்களைக்காக்க சூரபத்மனைக் கொன்றார். அமராவதி பட்டிணத்தைத் தேவர்கள் திரும்பிப்பெறச் செய்தார். தேவர்களைக் காத்தார், அசுரர்களை அழித்தார் - இதன் பொருள்:

- தெய்வீக / கல்யாண குணங்களை கொண்டவர்களை (சாதகர்களை) அவர் காப்பாற்றுகிறார்.
- அசுர குணங்களைக் (கெட்ட நடவடிக்கைகளை) கொண்டவர்களை அவர் அழிக்கிறார். அதாவது, நல்லதை (நல்லவர்களை)க் காத்து, கெட்டதை (கெட்டவர்களை) அழிக்கிறார்.

மேலும், அவர் நம்மிடமுள்ள கெட்ட குணங்களை அழித்து, நல்ல குணங்களை வளரச்செய்கிறார்.

இச்செய்யுளின் இரண்டாவது பகுதியில் ஆத்ம-தியானம் செய்வது எப்படி என்பது கூறப்பட்டுள்ளது: "அதிகா அநகா அபயா அமராவதிகாவல சூர பயங்கரனே." --- "தலையாயவரே, பாபமற்றவரே, அடைக்கலம் தருபவரே, தேவலோகத்தின் தலைநகராகிய அமராவதியைக் காத்தவரே, சூரபத்மனுக்கு மரணகிலியைத் தந்தவரே!" அதாவது, "உயர்ந்தது, பாவமற்றது, இதயத்தின் இறைவன், அறியாமைக்கு எமன்", என்றெல்லாம் ஆத்மாவை தியானிக்க அறிவுறுத்தப்படுகிறது. ஆத்மாவை (உண்மையான "நான்"ஐ) விட உயர்ந்ததாக எதுவுமேயில்லை. இந்திரியங்களைவிட மனம் உயர்ந்தது, மனதைவிட புத்தி உயர்ந்தது, புத்தியைவிட உயர்ந்தது ஆத்மா, அந்த ஆத்மாவைவிட உயர்ந்தது என்று வேறு எதுவும் இல்லை, இல்லவேயில்லை. 'ஆத்மா, பாபமற்ற இதய-கமலத்திலிருக்கும் ஆனந்த-ஆகாசம்' என்று *மஹாநாராயண உபநிஷத்* விளம்புகிறது. அது பயமற்றது, ஆனால் அதற்கு பயந்துதான் நம்மிலிருக்கும் அனைத்து உறுப்புகளும் ஒருங்கிணந்து செயல்படுகின்றன. ஆத்மாவே இதயத்தின் (அமராவதியின்) ஈஸ்வரன் (பாதுகாவலர்). தேவர்கள் என்பது இந்திரியங்கள்; எப்படி தேவர்கள் அமராவதியைத் தலைநகராகக் கொண்ட தேவலோகத்தில்

வசிக்கின்றார்களோ, அப்படியே இதயத்தை தன் மத்தியில் (தலைநகராகக்) கொண்ட உடம்பில் இந்திரியங்கள் வசிக்கின்றன. கந்தப் பெருமானின் அபரிமிதமான சக்தி சூரபத்மனுக்கு கிலியைத் தருகின்றது; அதுபோலவே, ஆத்மாவின் எங்கும் நிறைந்த (Cosmic) உண்மை நிலையை சாதகன் தியானம் செய்யும்போது, அறியாமை எனப்படும் தனிமனித அகங்காரத்திற்கு (individuality) மரணபயம் தரப்படுகிறது. ஆத்மாவைப் பற்றிய தியானம் செய்யும்முறை இப்படியாக இச்செய்யுளில் அறிவுறுத்தப்படுகிறது: "ஆத்மா உயர்ந்தது, அது பாபமற்றது, அது பயமற்றது, அது என்னிடமுள்ள நற்குணங்களை ஆதரித்துத் தாங்குகிறது, என்னிடமுள்ள கெட்ட குணங்களை தாக்கி அழிக்கிறது, அது அறியாமைக்கு அச்சத்தை ஏற்படுத்துகிறது."

==========

செய்யுள் - 19

==========

வடிவும் தனமும் மனமும் குணமும்
குடியும் குலமும் குடிபோகியவா
அடியந்தமிலா அயில்வேல் அரசே
மிடியென்று ஒருபாவி வெளிப்படினே.

பொழிப்புரை: "ஓ ஆதியும் அந்தமுமில்லாத மகாராஜரே! ஓ, கூரிய வேல் தாங்கிய அரசரே (பெருமானே)! அறியாமையெனும் பாவி வெளிப்படின், என்ன பரிதாபம்! அழகும், செல்வமும், நல்ல மனநிலையும், உயரிய குணமும், பிறந்த குடியின் சிறப்பும், குலத்தின் கௌரவமும் ---- ஆகிய இவையனைத்தும் ஒருவனை விட்டு ஓடிப்போய் விடுகின்றனவே!"

விளக்கவுரை

முன்செய்யுளில் சொல்லியபடி, அச்சாதகன் அந்த ஆத்ம-தியானம் செய்யத் தொடங்குகிறான். அப்பொழுது, அச்செய்யுளில் கூறியபடி, அது அவித்யையை (அறியாமையை) அச்சுறுத்தத் துவங்குகிறது (சூரனுக்கு பயத்தை உண்டுபண்ணுகிறது). இந்த அறியாமையையே "மிடி" (வறுமை) மற்றும் "பாவி" (பழி, பாபம் புரிபவர்) என்று அருணகிரியார் இச்செய்யுளில் குறிப்பிடுகிறார். ஏனெனில், அக்ஞானமெனும் அறியாமையே "முதல் பாபம்" (Original Sin); அந்த அறியாமையே நாம் செய்கின்ற அனைத்து பாபச்செயல்களுக்கும் மூல காரணம், அனைத்துவகையான பாபங்களுக்கும் காரணமாயிருக்கும் காமம்-குரோதம்- உலோபம்- மோகம்- மதம்- மாச்சர்யம் ஆகிய மன விகாரங்களுக்கு அதுவே தூண்டுகோலாக அமைகிறது, நமக்குண்டாகும் அனைத்து பிரச்சனைகளுக்கும் அதுவே காரணம். எனவே, அறியாமையை "மிடி" என்கிறார் அருணகிரியார். இதுவே 23-ஆம் செய்யுளில் வெளிப்படையாகச் சொல்லப்படுகிறது.

'யோக வாசிஷ்ட'-த்தில் வசிஷ்ட மகாரிஷி ஸ்ரீராமருக்கு "அறியாமையே எல்லாவகையான வறுமையிலும் மிக மிக மோசமானது" என்று கூறுகிறார். அறியாமை நம் நெஞ்சில் வசிக்கிறது,

அதுவே நாம் அநுபவிக்கும் அனைத்துத் துயரங்களுக்கும் காரணம். ஜன்மாதி ஜன்மங்களாய் நாம் அதன் பிடியில் அகப்பட்டு, அதற்கு அடிமையாக வாழ்கிறோம். ஆனால், அது நம்மிடம் இருப்பதே நமக்குத்தெரியாது. என்ன ஆச்சரியம்! நாம் அதன் ஆதிக்கத்திற்கு ஆட்பட்டு, நம் வாழ்க்கை சரியாக இல்லாவிட்டாலும், நாம் சரியாகத்தான் வாழ்கிறோமென்று எண்ணி வருகிறோம். இதுவே அறியாமை. அந்த அறியாமை நம்மில் இருக்கிறதென்பதை, அதன் கிளைகளான அகங்காரம் (அ) தன்னை முன்னிருத்தும் நானெனும் 'பாவனை', *ராக-துவேஷம்* (அ) விருப்பு–வெறுப்பு, மற்றும் *அபினிவேஷம்* (அ) தேக-அபிமானமும் தேகப்பற்றும் ஆகியவைகளால் ஊகிக்கப்படுகிறது. அந்த அவித்யையை (அறியாமையை) நாம் தொந்தரவு செய்யாதவரையில், நமது நெஞ்சில் அது இருப்பதே நமக்குத் தெரிந்துவிடாமல் மறைந்து, வசதியாக ஓய்வு எடுத்துக்கொண்டு இருக்கிறது; ஆனால், சாதகனாவன் நாம-ஜபம், ஆத்ம-தியானம் ஆகியவைகளைச் செய்வதன் மூலம் தன்னை அச்சுறுத்த துவங்குகின்றானென்று தெரிந்தால், உடனே அது தன் மறைவிடத்திலிருந்து (நெஞ்சிலிருந்து) "வெளிப்பட்டு", அச்சாதகனின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடத் துவங்கும். அப்படி அது "வெளிப்படின்", --- வெளிப்படுகின்றபோது, ---- அது சாதகனின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை குலைக்கிறது. அவனது உடலுக்கு வியாதியைத் தந்து அவன் அழகையும், ஆன்மீக செல்வங்களையும், விவேகம் மற்றும் வைராக்கியத்தையும், உயரிய மனம் மற்றும் சீரிய குணம், குடும்ப மற்றும் குல கௌரவம், போன்ற எல்லாவற்றையும் குலைக்கிறது. (செய்யுள் 23 முதல் 27 வரை இதைப்பற்றி விரிவாகப் பார்ப்போம்). பதஞ்சலி மகரிஷி அவர்களும், தன் "யோக சூத்திரத்தில்" (I-3o) இவ்வாறான தடங்கல்கள் ஏற்படுமென்று சொல்கிறார். இந்த அறியாமையே **உண்மையான** வறுமை (மிடி), மற்றும் பாவி. இதுவே ஆன்மீக வறுமை. அருணகிரியார் 'வெளிப்படின்' என்ற வார்த்தையின் மூலம் இந்த அறியாமையைக் குறிப்பிடுகிறார் – 'வெளிப்படின்' என்றால், இதுவரை உள்ளிருந்த அது இப்பொழுது வெளித்தோன்றினால் (அ) வெளிப்பட்டால் என்று அர்த்தம்; இதிலிருந்து, மறைந்த நிலையில் அது முன்பே உள்ளிருந்தது என்பதும் தெரிய வருகிறது. எனவே, இங்கு "வெளிப்படின்" என்ற வார்த்தை, அறியாமையின் வெளிப்பாட்டை குறிக்குமே தவிர பொருளற்ற வறுமையைக் குறிக்கவில்லை என்பது நிச்சயம்; ஏனெனில் பொருள்-வறுமை, உறக்க நிலையில் ஒவ்வொருவரிடமும் மறைந்து இருக்கிறதென்றும், அங்கிருந்து வெளிப்படுகிறது என்றும் சொல்ல முடியாது. எனவே, இங்கு வெளிப்படின் என்பது அறியாமையையே குறிக்கிறதென்பது நிச்சயமாகிறது – ஏனெனில் அவித்யை (அறியாமை)

நம் ஒவ்வொருவரிடமும் *காரண-சரீர*மாக ஆழமாகப் புதைந்திருக்கிறது; அதுவே நம் ஜீவத்துவத்திற்கு (நானெனும் தனித்தன்மைக்கு) மூலகாரணம். மேலும், வறுமையால் மக்கள் "பாதிக்கப்படுவதாகக்" கூறப்படுகிறது, இதிலிருந்து இது ஒரு நபரை வெளியிலிருந்து பாதிக்கும் நிலை என்றாகிறதல்லவா? அதேபோல, வறுமையை வெளியிலிருந்து நீக்க முடியும், அதாவது மற்றவர்கள் பொருள் கொடுத்து உதவுவதன் மூலம் அல்லது சிரமப்பட்டு பொருள் சம்பாதிப்பதின் மூலம் வறுமையை நீக்கமுடியும். ஆனால், அறியாமையோ இறைவன் (அ) குருவின் கிருபையால் ஞானோதயத்தின் மூலம் மட்டுமே அழிக்க இயலும், வேறு எந்தவொரு விதத்திலும் இயலாது. அதனால்தான் இச்செய்யுள் 'அயில்வேல் அரசே' (கூர்மையான வேலாயுதத்தைத் தாங்கிய பெருமானே) என குறிப்பிடுகிறது. வேல் என்பது உயரிய (ஆத்ம) ஞானத்தை குறிக்கிறதென்பது நமக்குத் தெரிந்த விஷயம்தான்.

அச்சாதகன் சாதனையைப் புதிதாகத் துவங்கியவனல்ல (not a neophyte). அவன் வெகு காலமாகச் சாதனை செய்துவருவதால், அதில் அவன் நல்ல அளவுக்கு பழக்கமுடையவன், தேர்ச்சியும் பெற்றவன், முன்னேறியவனும்கூட. முன்செய்யுளில் கூறிய முறைப்படி, அவன் ஆத்ம தியானத்தை எப்பொழுதிலிருந்து தீவிரமாகச் செய்யத் துவக்கிவிட்டானோ, அப்பொழுதே அவனுடைய அறியாமைக்கு செய்தி கிடைத்து, உலுக்கப்பட்டது. அதனால், அவன் தொடர்ந்து சாதனை புரிவதற்கு நிறைய முட்டுக்கட்டைகளைப் போட கூடிய சீக்கிரமே அது ஆரம்பித்து விடும் என்று, அவன் ஓதிய கல்வி மற்றும் குருவின் அறிவுரைகள் மூலம் அவன் பெற்ற அறிவிலிருந்து (செய்யுள் -17) அவனுக்குத் தெரியும். மேலும், புத்தக-ஞானமும் குருவின் அறிவுரைகளும் மட்டுமே முட்டுக்கட்டைகளைச் சமாளிக்கப் போதாதென்றும் அவனுக்குத் தெரியும். எனவே, அத்தகைய சந்தர்ப்பம் வருவதற்கு முன்னால், அதிலிருந்து தன்னை காத்துக்கொள்ள, அவன் தன் குருவிடமிருந்து ஆத்ம தியானத்தை முறைப்படி தடங்கல்கள் இல்லாமல் செய்திட 'உபதேசம் உணர்த்திட', அதாவது தீக்ஷை (Initiation) பெற, விழைகிறான். ஏனெனில், தீக்ஷைதான் அவனுக்குத் தேவையான *உள்நிலை மாற்றத்தை* ஏற்படுத்தித் தந்திடும். தீக்ஷை கொடுப்பதன்மூலம் குரு தனது ஆன்மீகசக்தியை சாதகனுக்குப் *பாயச்செய்து*, அதன்மூலம் அவனது சாதனை-சக்தியை மேலும் வலிமைப்படுத்தி, வரப்போகும் முட்டுக்கட்டைகளை அவன் சுலபமாகச் சமாளிக்க வழி செய்கிறார். எனவே, அறியாமை வெளிப்பட்டு அவனை தாக்கும்பொழுது, அதற்கு அடிபணிந்து போய்விடாமல் அதிலிருந்து தன்னை பாதுகாத்துக்கொள்ள, சாதகன் குருவிடம் சரண் அடைந்து அவரிடமிருந்து தீக்ஷை பெற விரும்பி,

தீக்ஷை கொடுக்குமாறு ("உபதேசம் உணர்த்த" அடுத்த செய்யுள்) வேண்டுகிறான் – 'அடியந்தமிலா அயில் வேல் அரசே - ' என்று இச்செய்யுளில் சாதகன் கந்தப் பெருமானிடம் வைக்கும் முறையீட்டில், குருவிடமிருந்து தீக்ஷை உபதேசத்தை வேண்டுகிறானென்பது உள்ளடங்கியுளது எனலாம் (Implied meaning). குரு மற்றும் இறைவனாகிய கந்தப்பெருமான் ஆகிய இருவரும் ஒருவரே என்று பதின்மூன்றாம் செய்யுளில் நாம் ஏற்கனவே பார்த்தோம். அடுத்த செய்யுளில், குரு உபதேச தீட்சையை அருளுகிறார் (("உபதேசம் உணர்த்தியவா").

ஆசைகள் மற்றும் பேராசையெனும் ஏக்கங்களும் ஏற்படுவதற்கு காரணம் எதுவென்று யதார்த்தமாக ஆராய்ந்தால், *அவிவேக*மே (பகுத்தறிவின்மை) காரணம் என்று அருணகிரியார் குறிப்பிட்டதை நாம் ஏற்கனவே பார்த்தோம் (செய்யுள்– 16). பின்னர், சாதகன் தன்னில் விவேகத்தை உருவாக்கிக் கொண்டதால் அதுவே அவிவேகத்தை விரட்டிவிட்டதையும் (செய்யுள் – 17), அதன்பின் (செய்யுள் - 18) அவன் ஆத்ம-தியானம் செய்யத் துவங்கும்பொழுது அவிவேகத்தின் காரணமான அவித்யை (அறியாமை) உள்ளிருந்து தானே வெளிக்கிளம்பும் என்பதையும் பார்த்தோம். எப்படி ஒரு போர்க்களத்தில், முதலில் கடைநிலை அதிகாரிகள் மட்டும் போர் செய்வதையும், பின்னர் தேவைப்பட்டால் கடைசியாக தளபதியானவர் போரில் பங்கேற்பதையும் பார்க்கிறோமோ. அதுபோலவே, சாதகனின் அந்தரங்கப் போரிலும் இது நடைபெறுவதைக் காணலாம் .

எப்படி பொருள்களின் நாம-ரூபங்கள் அவற்றின் பின்புலத்தில் உள்ள *ஸச்சிதானந்த* உண்மையுடன் ஒன்றிணைவதற்குத் தடையாக உள்ளனவோ, அதேபோல அறியாமை மற்றும் அதன் விளைவுகள் ஒருவன் ஆத்ம-தியானம் செய்வதிலும், உள்ளிருக்கும் ஆத்மாவுடன் ஐக்கியப்படுத்திக் கொள்வதிலும் தடையாக உள்ளன.

வறுமை மூன்று வகைப்படுமெனலாம் ---- பொருள்-வறுமை, ஒழுக்க/தார்மீக-வறுமை, மற்றும் ஆன்மீக-வறுமை. பொருள் வறுமை கொடிது, தார்மீக/ஒழுக்க வறுமை அதைவிடக்கொடிது; ஆன்மீக வறுமையோ மிக மிகக்கொடிது. பொருள் இல்லாமையை ஒருவன் தனது முயற்சி மூலமோ, (அ) மற்றவர்கள் கொடுத்துதவும் தனத்தின் மூலமோ நீக்கிட முடியும். எனவே, பொருள் வறுமையை நீக்குவது எளிமையானதெனலாம். ஆனால், தார்மீக/ஒழுக்க வறுமை ஒருவனிடம் இருந்தால், அதிலிருந்து விடுதலை பெறுவது அவ்வளவு சுலபமல்ல. அதற்கு பிரம்ம பிரயத்தனம் (Herculean Task) செய்தால்தான் இயலும். எனினும், ஒருவன் உறுதியான முயற்சி செய்தால், முடியும். முயற்சி உடையார் இகழ்ச்சி அடைவரோ? ஆனால், அக்ஞானம்/ அறியாமை

எனப்படும் ஆன்மீக வறுமையை போக்குவதென்பது மனிதப் பிரயத்தனத்தினால் இயலாத காரியமென்றே சொல்லலாம். இவ்வறுமையால் நாம் எல்லோருமே கோடானகோடி பிறப்புகளாய் துன்பப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். இதனுடன் பிறந்து, இதனுடனேயே இறக்கிறோம். அறியாமை எனப்படும் 'முதல் பாபம்' நம்மை எப்பொழுது வந்தடைந்தது என்பது இறைவனுக்கு மட்டுமே தெரிந்த ஒரு விஷயம். நமது எல்லையற்ற *ஸச்சிதானந்த* சொரூபத்தை மறந்து, ஒரு குறிப்பிட்ட உடலுக்கு நம்மை கட்டுப்படுத்திக்கொண்டு, நொடிப்பொழுதில் விரைந்தோடி மாறி(அழிந்தி)டும் இவ்வுலகை உண்மையெனக் கருதி, சில பொருள்களை விரும்பியும் சிலவற்றை வெறுத்தும், இந்திரியங்கள் தரும் இன்பத்தில் (இந்திரிய சுகம்) மயங்கி அதற்காக மூடத்தனமாக செயல்கள் பலசெய்து, முடிவற்ற துன்பத்தில் நாம் உழன்று கொண்டிருக்கிறோம். இதைவிட கொடுமையான ஒன்று உளதோ? "நான் யார்? எனக்கு எது நல்லது? எப்படி அதைத் தேடி அடைவது?" என்றெல்லாம் நமக்குத் தெரியாதிருப்பதே உண்மையான வறுமை. ஞான சொரூபமாகவும், அதை உருவகப்படுத்திக் காட்டிடும் கூர்மையான வேலாயுதத்தைத் தாங்கியுமிருக்கும் இறைவன் (கந்தப் பெருமான்) ஒருவரால் மட்டுமே, இந்த ஆன்மிக வறுமையை அழித்திட இயலும். எப்படி வேலாயுதம் அசுரனைப் பிளந்தழித்ததோ, அப்படியே ஞானமெனும் வேல் நம்முள்ளிருக்கும் அக்ஞானமெனும் அசுரனை அழித்தொழிக்க வேண்டும். அப்படி நடந்தால்தான், நமக்கு முக்தியெனும் விடிவு பிறக்கும். பொருள் வறுமையை மற்றவர்கள் உதவியால் போக்கமுடிவதுபோல, ஆன்மீக வறுமையை மற்றவர்கள் உதவியால் போக்கமுடியாது; இறை–கிருபை (அ) குரு-கிருபை ஒன்றினால் மட்டுமே இவ்வறுமையைப் போக்கிட இயலும். எனவேதான், கூர்மையான வேலாயுதம் தாங்கிய அரசர்க்கரசனாகிய கந்தப் பெருமானிடம் இப்பிரார்த்தனை வைக்கப்படுகிறது.

'பாவி', 'வெளிப்படின்', என்ற அடைமொழிகள் 'மிடி'-க்கு (வறுமைக்கு) தரப்பட்டதிலிருந்து, பொருள்-வறுமையைவிட ஆன்மீக வறுமையான அறியாமைதான் குறிப்பிடப்படுகின்றதென்பது தெளிவாகிறது. அவித்யைதான் 'முதன் முதலில் விளைந்த பாபம்', அதனால், அதுவே 'பாவி' என்று குறிப்பிடப்படுகிறதை ஏற்கனவே பார்த்தோம்.

அவித்யை 'வெளிப்படின்' என்று கூறுவதன் அர்த்தம் யாதென பார்ப்போம். நாம் ஒவ்வொருவருமே அவித்யையின் விளைவு. நம் ஒவ்வொருவருள்ளும் அது உள்ளது. எனினும், நாம் அதை தொடாதிருக்கும்வரை, நமக்கு எல்லாமே சரியாக இருப்பதுபோல்

தோன்றுகிறது. நாம் ஓய்வு ஒழிவின்றி, முற்றிலும் வெளிஉலக விவகாரங்களில் மூழ்கி விடுவதால், நமக்குள்ளே (நான்கு கோசங்களைத் தாண்டி) ஆழத்திலிருக்கும் காரண சரீரமான *ஆனந்தமய* கோசம்வரை சென்று அவித்யையை சீண்ட நேரமில்லை. ஆனால், அச்சாதகன் சாதனைகளை உறுதியாகக் கடைப்பிடித்து ஓரளவு முன்னேற்றம் பெற்றபின், வெளிஉலக விவகாரங்களிலிருந்து தன்னை விலக்கிக்கொண்டு, உள்ளிருக்கும் ஆத்மாவை தியானிக்க முயலும் பொழுது (செய்யுள்-18), இதுகாறும் அவனுள்ளே எதனாலும் தொடப்படாமலும், எந்தவித தொந்தரவுக்கும் ஆட்படாமலும் இருந்துவந்த அக்ஞானமெனும் அவித்யை (அறியாமை) இப்பொழுது உசுப்பிவிடப்படுவதால், அவனைத் தாக்க முயல்கிறது. அது தன்னை எதிர்மறை சக்திகளாக வெளிப்படுத்திக்கொள்ள துவங்கி, அவனது ஆன்மீக முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போட்டு, ஆன்மீகச் செல்வமான விவேகம், வைராக்கியம், ஆகியவைகளை சிதைத்து. அவனது உடல் மற்றும் மன நலன்களையும் பாதிக்க முற்படும்.

தீவிர ஆன்மிக சாதனைகளைச் செய்வதென்பது, நல்ல கும்மிருட்டான ஒரு அறையின் மூலையில், தான் இருக்கிறதே எவருக்கும் தெரியாமல் உறங்கிக் கொண்டிருக்கும் ஒரு நாகப்பாம்பை தொந்தரவு செய்வதைப் போன்றதே. அப்பொழுது அது சீறிப் பாய்ந்து நம்மை தீண்ட முயலும். அப்படியானால், அதை ஏன் தொந்தரவு செய்ய வேண்டும்? அதை அப்படியே உறங்க விட்டுவிடலாமே? என்று நாம் கேட்கலாம். இது நல்ல கேள்விதான்! ஆனால் அப்படி செய்யவேண்டியது அவசியமே. ஏனெனில், அது உறங்கிக்கொண்டிருப்பதால் நமக்கு ஆபத்தே இல்லையென்றாகி விடாது. அது இருக்கின்றவரை, ஆபத்து வருவதென்பது திண்ணம்; ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் ஆபத்தை நாம் எதிர்கொள்ளத்தான் போகிறோம். அது எப்பொழுது வேண்டுமானாலும் விழித்துக்கொண்டு, நம்மைச் சீண்டலாமே! அது அழிக்கப்படும்வரை, பின்னர் ஒருநாள் அது தரவிருக்கும் பேராபத்திலிருந்து நாம் தப்பிப்பதென்பது முடியாது. அதே போன்ற ஒரு நிலைதான் அவித்யை விஷயத்திலும் உள்ளது. அது இருக்கின்றவரையில், நாம் இந்த மரண வாழ்விற்கு கட்டுப்பட்டு, பிறப்பிற்கு பின் இறப்பு, இறப்பிற்குப்பின் மற்றொரு பிறப்பு என்று தொடர்ந்து வேதனையடைந்துதான் தீர வேண்டும். அநுபூதி நிலை (அ) இறைவனை அடைந்து, அமைதி மற்றும் ஆனந்தநிலையில் நிரந்தரமாக உறைவதற்கு, ஒருநாள் இல்லாவிட்டால் மற்றொரு நாள், அவித்யையானது சாதனையின் மூலம் அழிக்கப்பட்டுதான் ஆகவேண்டும். இதைத்தவிர வேறு எந்த வழியும் இல்லை. நிலைமை அவ்வாறு இருக்கும்பொழுது, எதற்காக அவித்யையை அழிப்பதைத் தள்ளிப்போட வேண்டும்? எதற்காக

வேதனைகள் மிகுந்த வாழ்வினைத் தொடரவிட வேண்டும்? அறியாமை அழிக்கப்பட்டால்தான் மனிதன் உண்மையில் மகிழ்ச்சியாக, ஆனந்தமயமாக வாழ இயலும். எங்கும் வியாபித்திருக்கும் இறைவனில் தன்னை ஐக்கியமாக்கிக் கொள்வதே அந்த பேரின்பநிலை.

==========

செய்யுள் - 20

==========

அரிதாகிய மெய்ப்பொருளுக்கு அடியேன்
உரிதா உபதேசம் உணர்த்தியவா
விரிதாரண விக்ரம வேளிமையோர்
புரிதாரக நாக புரந்தரனே.

பொழிப்புரை: "ஓ பெருமானே! (இந்த சம்சாரமெனும் கடலை கடப்பதற்கான) பெரிய கப்பல் போன்றவரே! பராக்கிரமத்தை உடையவரே! அனைவராலும் விரும்பப்படுபவரே! தேவர்கள் விருப்பத்துடன் தியானிக்கும் பிரணவப் பொருளே (ஓங்கார மந்திரமே)! தேவலோகத்தைத் தாங்கிக் காப்பாற்றுபவரே! அடைவதற்கு மிகவும் அரிதாகிய மெய்ப்பொருளை அடியேன் (அதை அடைவதற்கு) உரிதாகும்படி எனக்கு நீவிர் உபதேசம் உணர்த்தியருளியது (உள்ளுணர்வாக தீக்ஷை கொடுத்தது) வியக்கத்தக்கதே!"

விளக்கவுரை

அச்சாதகன் ஆத்ம-தியானம் செய்யத் தொடங்கினான் (செய்யுள்-18). அப்பொழுது அறியாமை வெளிப்பட்டு அவனை தாக்குமென்று அறிந்த அவன் அதற்கு அடிபணிந்து போய்விடாமல் அதிலிருந்து தன்னை பாதுகாத்துக்கொள்ள, குருவிடம் சரணடைந்து அவரிடமிருந்து தீக்ஷை பெற விரும்பி, தீக்ஷை கொடுக்குமாறு ("உபதேசம் உணர்த்த") வேண்டினான் (செய்யுள்-19). இப்படியாகச் சரணடைந்த சாதகனுடைய பரிதாப நிலையையும் அவனுடைய ஊக்கமுள்ள நேர்மையையும் கண்ட குரு, அவனுக்குப் பொருத்தமானதும் தேவையானதுமான தீக்ஷை கொடுத்தார். ("உபதேசம் உணர்த்தினார்")

தீக்ஷை தருவதன் மூலம், குருவானவர் தனது ஆத்ம-சக்தியை சாதகனுக்குப் பாயச்செய்கிறார் (Transmits Spiritual Energy - **உணர்த்துதல்**) ---- "உபதேசம் உணர்த்தினார்"; சாதகனும் சக்தி ஒன்று தன்னுள் பாய்ந்ததை உணர்ந்தான் (**உணர்தல்**), அனுபவித்தான். அதனால்தான், முந்தைய செய்யுள்கள் 8 & 11-இல் 'மெய்பொருள் பேசியவா' (அதாவது உண்மை தத்துவத்தைப் பற்றிய அறிவுரை தான் சாதகனுக்குச் சொன்னார்), என்று சொன்ன அருணகிரியார்

இச்செய்யுளில் 'உபதேசம் உணர்த்தியவா' என்கிறார். "மெய்பொருள் பேசுதல்" (அறிவுரை கூறுதல்) மற்றும் "உபதேசம் உணர்த்துதல்" (தீக்ஷை கொடுத்தல்) -- இவ்விரண்டிற்குமிடையே மிகப்பெரிய வித்தியாசம் உள்ளது.

(**குறிப்பு:** *ஆத்மானுபூதி அடைந்த மகாபுருஷ குருவிடமிருந்து ஆத்ம-சக்தியை பாயப்பெற்ற ஒருவனுக்கே "தீக்ஷை" என்றால் என்ன என்று தெரியும்; ஏனெனில் அவன் அதை உணர்ந்திருக்கிறான், அனுபவித்திருக்கிறான். அதனால்தான், "அவ்வாறு அறிவார் அறிகின்றது அலால், எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவே" என்று செய்யுள்-30இல் சொல்லப்படுகிறது. அதை அனுபவிக்காதவர்கள் அதைப்பற்றிப் பேசலாம், எழுதலாம், படிக்கலாம்; அவ்வளவுதான்; சர்க்கரையை வாயில் போட்டு ருசித்தவனுக்கே "இனிப்பு" என்றால் என்ன என்று தெரியும்; மற்றவர்கள் அதைப்பற்றி எழுதலாம், படிக்கலாம்; அவ்வளவுதான்.)*

அப்படி தீக்ஷை (ஆத்ம-சக்தியைத்) தந்தருளியதன்மூலம், குருவானவர் சாதகனில் உள்ளார்ந்த உருமாற்றத்தை (Inner Transformation) ஏற்படுத்துகிறார். பின்னர், ஆத்ம தத்துவத்தை சரியான முறையில் தியானிக்கும் நுட்பத்தை அவனுக்கு உபதேசிக்கிறார்; இதன் மூலம் சாதகன் தேவையான ஆத்மபலம், அவித்யை தரப்போகும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள முடியும் என்ற உறுதியான நம்பிக்கை, குறிக்கோளை அடைவதற்கான தகுதி, ஆகிய அனைத்தையும் ஒருசேரப் பெற்றான். அதனால்தான் அவன் உணர்ச்சிபொங்க இவ்வாறு வியக்கிறான்: "தனக்கு உணர்த்திய இந்த உபதேசமே, அடைவதற்கு மிக அரிதான பரம்பொருளை அடைந்திடத் தேவையான தகுதியையும் ஆற்றலையும் தந்தருளி விட்டதே. என்னே ஆச்சரியம்!" ---- "**அரிதாகிய மெய்ப்பொருளுக்கு அடியேன் உரிதா உபதேசம் உணர்த்தியவா!**" ஆத்மாவை நன்கறிந்து உணர்ந்திருக்கும் (ஆத்ம-ஞானமுடைய) குருமார்கள், யோகிகள், ஆன்மீகத்தில் முதுநிலை எய்தியவர்கள் ஆகியவர்களாலேயே இவ்வாறு செய்திட இயலும்.

சாதகன் இவ்வாறு பெற்ற உபதேசத்தினால், அவனது அறியாமை அழிந்து விட்டதென்றோ அல்லது அவன் ஆத்ம-ஞானம் அடைந்து விட்டான் என்றோ கருதிவிடக் கூடாது; உண்மையில் நடந்ததென்னவெனில், அவன் ஆத்மாவை (இறைவனை) அடைவதற்கு வேண்டிய தகுதியை மட்டுமே பெற்றான் என்பதே (அவனை உரிதாகும்படிச் செய்தது). இந்த உபதேசத்தின் மூலம் அவன் பெற்ற ஆத்ம-பலத்தைக் கொண்டு, அவித்யையை அழித்திட அவன் ஆழ்ந்து

ஆத்ம-தியானம் செய்திட வேண்டும், அதற்காக அவன் மிகவும் கடுமையாக உழைத்துத்தான் ஆகவேண்டும். இதைப் பின்வரும் செய்யுள்களில் காண்போம்.

"**அரிதாகிய மெய்ப்பொருள்**" -- பரம்பொருளை அடைவது அரிதென்று ஏன் கூறப்படுகிறது? பரம்பொருள் தத்துவம் எங்கும் எதிலும் உள்ளது; அது சர்வ வியாபி, அதுவே அனைத்தின் ஆதாரமும், சாரமும். இப்படியாயிருந்தும், அதை அடைவது அரிதாக உள்ளது. ஏனெனில், சுபாவமாக வெளிநோக்குப் பார்வை கொண்ட மனதும் இந்திரியங்களும், கால-இட வரையறைக்குட்பட்ட இவ்வுலகப் பொருள்களில், அப்பரம்பொருளையும் ஒன்றாக (உருவம் தாங்கிய பொருளாக) நினைத்துத் தேடுகின்றன. பரம்பொருளாகிய இறைவன் எங்குமிருக்கிறார்; ஆனால், கால-இட வரையறைக்குட்பட்ட ஒரு பொருளாக அல்ல. அவரே *ஸச்சிதானந்தம்*, எங்கும் நிறைந்த இருப்பு, ஆத்மா, அனைத்தையும் அறியும் சைதன்யம்; ஆனால், காணப்படும் பொருளாக அல்ல. எனவே, எவ்வளவுதான் நாம் வெளிஉலகில் நாம-ரூபங்களில் அவரைத் தேடினாலும், அது பயன்படாது. (அவரிட-மிருந்து விலகித்தான் சென்று கொண்டிருப்போம்). அவரை அடைய வேண்டுமெனில், நமது மனதை உள்நோக்கச் செய்து, அவரை நம்முள்ளேயே, நமது நிஜ-ஸ்வரூபமாக, சைதன்யமாக (சித்) உணரவேண்டும்: தவம் செய்தல், நற்குணங்களை வளர்த்தல், இந்திரியங்கள் மற்றும் மனதிலிருந்து உள்வாங்குதல், இறைவனிடம் ஆசை கொள்தல், ஆன்மீகத் தியானத்தில் ஈடுபடுதல் ஆகிய சாதனைகளை விடாமல் செய்வதன் மூலம் இதனை அடைய வேண்டும். இறைவனே தேடுபவனுடைய சாரமும், ஆதாரமுமாக இருக்கும் ஆத்மா. அவனே உண்மையான தேடுபவன். அவன் ஒருவனே அறிபவனும் கூட. அதாவது, தேடி, அறிய விரும்பும் சைதன்யம் (Consciousness) அவனே. அறிபவன் அவனாக இருக்கும் பொழுது, அவனை அறிவது வேறு யார்? அவன் எப்பொழுதும் அறிபவனாகத்தான் இருப்பான், ஒருபொழுதும் அறியப்படும் பொருளாக ஆகமாட்டான். அதனால்தான், "ஆத்மாவை ஆத்மாவில் நிலைநிறுத்துதல்" யோக-சமாதி எனப்படுகிறது. எனவே, மெய்ப்பொருள் எனப்படும் உண்மை தத்துவத்தை அடைதலென்பது கடினம் என்று கூறப்பட்டது. பரம்பொருளாகிய உண்மை தத்துவத்தை ஆத்மாவாக தியானிப்பது ஒன்றே அவ்வுண்மையை உணர்ந்திடும் (அடைந்திடும்) வழி, அத்தகைய தியானம் செய்யும் நுட்பத்தைத்தான் குரு சாதகனுக்கு உணர்-உபதேசமாக (தீக்ஷை) அருளினார். அந்த உபதேசம், சாதகனுக்கு அத்தத்துவத்தை தியானித்து அடைந்திடும் தகுதியை தந்தருளியது. இதனால், சாதகனின் மனம் வெளிநோக்குப் பார்வை எனும் சுபாவத்திலிருந்து விடுபட்டு, உட்புறமாகத்

திரும்பப்படுகிறது (*அந்தர்முகம் ஆகிறது*). இதன்மூலம், தன்னுள்ளே இருக்கும் சூட்சும மற்றும் காரண சரீரங்களில் என்ன இருக்கிறது/நடக்கிறது என்பதைக்கூட அவன் காண இயலும்.

இச்செய்யுளின் இரண்டாவது பகுதியில் தரப்பட்டிருக்கும் கந்தப் பெருமானைப்பற்றிய விவரணைகள் பலவிதமாக விளக்கப்படுகின்றன, அதைப்பற்றியெல்லாம் இங்கு நாம் ஆராயப் போவதில்லை. மற்ற செய்யுள்களில் அவை விளக்கப்பட்டுள்ளன. இவ்விவரணைகள் இறைவனின் எல்லையற்ற பெருமை, சக்தி, மகிமை, ஆகியவைகளைக் கூறுகின்றனவென்று அறிந்தாலே போதும்.

==========

செய்யுள் - 21

==========

கருதா மறவா நெறிகாண எனக்கு
இருதாள் வனசந்தர என்றிசைவாய்
வரதா முருகா மயில் வாகனனே
விரதா சுரசூர விபாடனனே.

பொழிப்புரை: "மயிலை வாகனமாகக்கொண்ட முருகப் பெருமானே! கேட்ட வரங்களை வழங்குபவரே! தன்னுடைய பக்தர்களைப் பாதுகாக்கும் விரதம் பூண்ட தேவனே! சூரபத்மனை வேலால் பிளந்தவனே! நான் நினைப்பும் மறப்புமற்ற நிலையான முக்தியையடைய தங்களின் இரண்டு பாதத் தாமரைகளை எனக்குத் தந்தருள என்று திருவுள்ளம் கொள்வீர்?"

விளக்கவுரை

ஆத்மாவை தியானம்செய்து அதை உணர்ந்திடும் (அடைந்-திடும்) வகையின் நுட்பத்தைக் குரு சாதகனுக்கு உபதேசம் (தீக்ஷை) செய்தருளினார். அந்த உபதேசம், ஆத்மாவை அடைந்திடும் தகுதியை அவனுக்குத் தந்தருளியது (செய்யுள்-20).

குருவின் தீக்ஷையும், அதனுடன் வழங்கப்பட்ட மிகவும் ஆற்றல் கொண்ட சக்தியும், தான் கூடிய சீக்கிரமே இறைவனை அடைய வேண்டுமென்ற துடிப்பை அச்சாதகனிடம் ஏற்படுத்தியது. எனவே, அவன் தன் தியானத்தை மேலும் தீவிரப்படுத்தி, இவ்வாறு முருகப் பெருமானிடம் வேண்டுகிறான்: "கருதா மறவா நெறிகாண எனக்கு இருதாள் வனசந்தர என்றிசைவாய்?" ---- "நான் நினைப்பும் மறப்புமற்ற நிலையான முக்தியையடைய தங்களின் இரண்டு பாதத் தாமரைகளை எனக்குத் தந்தருள என்று திருவுள்ளம் கொள்வீர்?"

'**கருதா மறவா நெறி**' - 'நெறி' எனும் சொல்லிற்கு 'பாதை', 'நிலை', 'மோட்சம் ((முக்தி)' என்று பல அர்த்தங்கள் உண்டு. எனவே, இங்கு 'கருதா மறவா நெறி' என்பது முக்தி நிலையைக் குறிக்கும். 'கருதா மறவா நெறி'யும் 'பாத கமலங்களும்' ஒன்றே; இரண்டுமே 'முக்தி' எனப்படும் 'ஆத்ம விடுதலை'யைத்தான் குறிக்கின்றன. அதனால்தான் 'கருதா மறவா நெறி'காண, 'இருதாள் வனசந்தர' வேண்டுகிறான் அச்சாதகன். 'இருதாள்'களே முக்தி, அவை முக்திக்கு

வழி அல்ல. எனவே, அவைகளால் தரப்படும் 'கருதா மறவா நெறி'யும் முக்தியாகத்தானிருக்க வேண்டும், முக்திக்கு வழியாக அல்ல.

முக்தி என்பது பரமானந்த நிலை, இரண்டற்ற நிலை. அதில் இரண்டாவது பொருள் கிடையாது. அது 'தன்னந்தனி நின்றது' (செய்யுள்-49). எனவே அது 'கருதா மறவா' நிலை. அந்த நிலையில் கருதுவதற்கோ மறப்பதற்கோ வேறொன்றும் இல்லை. மேலும், அந்நிலையில் ஆத்மா (அ) சைதன்யம் தன்னிலேயே நிலைத்து இருப்பதால், அது தன்னைப்பற்றி கருத வேண்டியதுமில்லை, தன்னை மறக்கவும் முடியாது.

முக்தியென்பது எங்கோயிருக்கும் ஒரு இடமோ (அ) குறிப்பிட்ட இருப்பிடமோ அல்ல; அது, எல்லா பந்தங்கள், தளைகள் மற்றும் வரம்புகளிலிருந்தும் ஆத்மா மொத்தமாக சுதந்திரம் பெற்ற நிலையாகும்; அது ஒரு முழுமையான (பூரண) உணர்வு நிலை; *அகண்ட ஸச்சிதானந்தம்,* இரண்டற்ற நிலை. இந்நிலையில் சிந்திக்கவோ, மறக்கவோ இயலாது, ஏனெனில் சாதகனின் தனித் தன்மை (Individuality) இறைவனில் இரண்டறக் கலந்து, இறைவனாகவே ஆகிவிடுகிறது; 'நானெனப்படும்' அகங்காரம் மற்றும் 'என்னுடையது' எனப்படும் மமகாரம் ஆகிய இரண்டும் நீங்கிய நிலையே, 'இறைவன் பாதங்கள்' (அ) மோட்சம் என மறைகள் குறிப்பிடு-கின்றன. ஆகவே, இறைபாதங்கள் முக்தியை அடைவதற்கான ஒரு வழியல்ல; அவையே முக்தி. பதினெட்டாம் செய்யுளில், பகவான் சிவனார் (பரம்பொருள்) 'உணரா மறவா' என குறிப்பிடப்படுகிறார்; அதுவே இச்செய்யுளில் 'கருதா மறவா' எனறு குறிப்பிடப்படுகிறது.

18-ம் செய்யுளில் மேற்கொள்ளப்பட்ட இறை-தியானம் ஞானப் பாதைக்குரியது; அதுவே பக்திப் பாதையான இறை-பிரார்த்தனை மூலம் இச்செய்யுளில் பலப்படுத்தப்படுகிறது. 'கருதா மறவா நெறி' ஞானப் பாதையையும், 'இருதாள் தந்தருளுதல்' பக்திப் பாதையையும் குறிக்கின்றன என்று சொல்லலாம். இப்படியாக, சாதனையின் துவக்கத்தில் தோளொடு தோள் இணைந்து செயல்படத் துவங்கும் பக்தியும் ஞானமும், பின்னர் சாதனை நன்கு முன்னேற முன்னேற, அவை ஒன்றோடொன்று ஐக்கியமாகிக் கொண்டே போகின்றன.

புலன்களால் உணரப்படும் இவ்வுலகில், நாம் பெற்றிடும் அனுபவங்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று எதிர்மாறான ஜோடிகளால் நிர்வகிக்கப் படுகின்றன. அனைத்துமே ஜோடிகளாய் உள்ளன. நல்லது - கெட்டது, வெளிச்சம் - இருட்டு, அறியாமை எனும் அக்ஞானம் - அறிவு எனும் ஞானம். பிறப்பு - இறப்பு, விருப்பு - வெறுப்பு, பகல் - இரவு, நல்லொழுக்கம் - தீய ஒழுக்கம், எண்ணுதல் - மறத்தல், என்று

பட்டியலை மேன்மேலும் அடுக்கிக்கொண்டே போகலாம், அதற்கோர் முடிவென்பதில்லை. ஏன்? இவ்வுலகமோ வெறுமே புலன்களால் உணரப்படுவது (அ) சார்புடையது. நாமோ கால-தேச, இடம்-நேரம் ஆகிய வரையறைகளுக்குட்பட்ட உயிரினங்கள். நமக்கு வரையறையற்ற நிலை என்றால் என்னவென்றே தெரியாது. ஆனால், இறைவன், முக்தி, ஆன்ம விடுதலை, அறுதியுண்மை, *சித்* எனப்படும் தூய உணர்வு, ஆகியவைகளெல்லாம் எவ்விதமான வரையறைகளுமற்ற நிலைகள், *துவந்தங்கள்* எனப்படும் மேற்கண்ட எதிர்மாறான ஜோடிகள் இவைகளில் கிடையாது. நெருங்கவும் முடியாது. 'இறைபாதங்கள்', 'முக்தி', 'நினைப்பும் மறப்புமற்ற நிலை' ஆகியவைகளைப் பெற இச்செய்யுளில் செய்யப்படும் பிரார்த்தனை இத்தகைய 'வரையறையற்ற இருப்புநிலையை' அடைவதற்கே.

இச்செய்யுள் மற்றும் 35-ம் செய்யுளில், பாத தாமரைகளைத் தந்தருள வேண்டி செய்யப்படும் பிரார்த்தனை, பின்னர் செய்யுள்-44இல் பூர்த்தி செய்து வைக்கப்படுகிறது. மேலும் 'பாதங்கள்' என்பது 'முக்தி நிலை' என்பதும் அங்கு உறுதிப் படுத்தப்படுகிறது. செய்யுள்கள் 42, 43, 44 - 'முக்தி நிலை' அல்லது 'ஆத்ம அனுபூதி நிலை' யை வெளிப்படுத்துகின்றன.

அச்சாதகன் முருகப் பெருமானிடம் அவரது இரு தாள்களையும் தனக்கு தந்தருளுமாறு பிரார்த்திகிறான். பெருமானின் தாள்கள் என்பது பெருமானேதான். தாள்களை அருளுவதும், முக்தி (இறை உணர்வு) அடைவதும் ஒன்றேதான். நமக்கு, இறைவன் வழிபாடோ தியானமோ செய்யப்படும் பொருள். இவ்விரண்டிலும், அவர் நம்மைத் தவிர வேறானவர், நம்மிலிருந்து வேறு பட்டவர், நம்மிலிருந்து தனியானவர், அந்த அவருக்கு நாம் வழிபாடுகள் செய்கிறோம், அவரை நினைத்து தியானமும் செய்கிறோம். அவரை ஒரு பொருளாக்கி (உருவகப்படுத்தி), நாம் வழிபாடும் தியானமும் செய்கிறோம். ஆனால், அவ்வழிபாட்டிலும்/ தியானத்திலும் நாம் பிரார்த்திப்பதோ 'அவர் நம்முடன் ஒன்றிட வேண்டும்', 'அவர் தன்னை நம்மிடம் வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும்', 'அவரின் இரு தாள்களை நமக்குத் தந்தருளுள வேண்டும்', 'அவரையே நமக்கு அளித்திட வேண்டும்', என்பதுதான். இப்பிரார்த்தனைகள் அனைத்தும், இறைவனின் உருவநிலைக்கு நேரெதிரான உருவமற்ற முக்தி நிலையைப் பெறுவதற்காக இருக்கிறதல்லவா? இதிலிருந்து வெளிப்படுவது என்னவென்றால் இறைவன், அவரின் இரு பாதங்கள், முக்தி, ஆகிய எல்லாம் ஒன்றே என்பதுதான்.

"கருதா மறவா நெறியும் இருதாள் வனசமும்": நாம் இறைவனைப் பல்வேறு விதமாக வழிபடுகிறோம், தியானிக்கிறோம் -

-- நாம் விக்கிரக பூஜை செய்வதுபோல, அவர் நமது இதயத்தில் அமர்ந்திருப்பது போல, நம் முன்னால் அவர் நிற்பது போல, இவ்வாறு பற்பலவிதமாக அவரை தியானிக்கிறோம், 'சிந்திக்கிறோம்'; இது 'கருதுதல்', அதாவது, நாம்வேறு அவர்வேறு என கருதுகிறோம். ஆனால், இச்செய்யுளில் "**கருதா மறவா நெறிகாண**" வேண்டப்படுகிறது. நாம் செய்யும் தியானம், வழிபாட்டில் இறைவனைச் 'சிந்திக்கிறோம்', அதாவது அவன் வடிவம், பெயர் சார்ந்த சிந்தனைகள் இருக்கின்றன; அவனுடைய உண்மை சொரூபம் பற்றிய தியானமில்லை. அதனால், இவை அந்த உயரிய ((முக்தி) நிலையை அடையப் போதுமானதல்ல. பின் எப்படி அந்நிலையை அடைவது? இறைவனை இறைவனாகவே, அதாவது பகுக்கப்படாத (பெயர்-உருவமற்ற) பரம்பொருளாகத் தியானம் செய்ய வேண்டும். எப்படி? இறைவன் அனைத்திலும் உயரியவர், அவரே முழுமையானவர், அவரே எங்கும்-எதிலுமிருக்கும் இருப்பு, நாம் உட்பட அனைத்தும் இறைவனில் அடக்கம், அவர் அகண்டாகாரம், இரண்டற்றவர் -- இவ்வாறெல்லாம் அவர் தியானிக்கப்பட வேண்டும். இவ்வாறு பலகாலம் தீவிரமாகத் தியானம் செய்யப்படும்பொழுது, தியானம் ஆழமாக ஆழமாக, தியானிக்கும் தனி உணர்வு (சிற்றுணர்வு - Individuality) பரம்பொருளான பேருணர்வில் தன்னை இழந்துவிடுகிறது. ஜீவாத்மா பரமாத்வாவில் லயித்துவிடுகிறது. எப்படி ஒரு அலையானது, கடலின் ஆழத்தை அறியவிரும்பிக் கடலில் மூழ்கினால், அதனுள் ஆழ்ந்து தன்னை இழந்து, கடலாகவே ஆகிவிடுமோ, அப்படியே பகுக்கப்படாத இரண்டற்ற பரம்பொருளாக இறைவனை தியானிக்கும் ஜீவனும் அப்பரம்பொருள் தத்துவத்தில் கரைந்து விடுகிறது. அலை, கடலின் ஒரு தோற்றம், ஒரு பகுதி; இரண்டும் தண்ணீர்தான்.. அதேபோல் ஜீவாத்மாவும் பரமாத்மாவின் ஒரு தோற்றம், ஒரு பகுதி; இரண்டும் சைதன்யமே. இப்படியாக, ஜீவாத்மா பரம்பொருளில் கரைந்துவிடும் பொழுது, ஜீவன் என்ற ஒன்று இருந்தால்தானே, அதனால் சிந்தனை செய்யவோ, மறக்கவோ இயலும்? எஞ்சி இருப்பது ------ "வெறும் தானாய் நிலைநின்றது தற்பரமே" பரமாத்மா மட்டுமே, தன் அருமை பெருமையுடன் எங்கும் நிறைந்த சந்நிதானமாய், ஸச்சிதானந்தமாய் இருக்கிறது. தனி மனிதத்வம் (ஜீவத்வம்) என்பது இல்லாமல் போய்விடுகிறது. இது முக்தி நிலை. **'நான்' எனப்படும் அகங்காரம் மற்றும் 'என்னுடையது' எனப்படும் மமகாரம் ஆகிய இரண்டும் நீங்கும் இந்நிலையையே, 'இறைவன் பாதம் (தரிசனம்) வழங்குகிறது' என மறைகள் குறிப்பிடுகின்றன. அப்படியாக, இறை-பாதங்கள் வழங்கப்படும்- பொழுது, அதாவது தன்னில் (ஜீவனில்) தானாக (இறைவனாக) தோன்றும்பொழுது, தனித்தன்மையான ஜீவத்வம் மறைகிறது --- அதாவது, 'நான்', 'எனது' என்ற அகம்பாவமும்,**

மமகாரமும் அழிபடுகின்றன. இவ்வாறு ஜீவபாவம் அழிபடும்பொழுது, கருதும், மறக்கும் நிலைகள் கடக்கப்பட்டு (Transcended), கருதா மறவா நிலையில், ஜீவன் தன் ஆதாரமான இறைவனில் ஐக்கியமாகிறது, இந்நிலையே முக்தி (ஆன்ம விடுதலை) எனப்படுகிறது. அதனால்தான், கருதா - மறவா நிலையை அடைய (இது அறிவெனும் ஞானமார்க்கம்) இறைவனின் பாதபத்மங்களை வழங்குமாறு (இது பூஜா முதலிய பக்தி மார்க்கம்) சாதகன் பிரார்த்தனை செய்கிறான். எனவே, பக்தியினால் எந்நிலை அடையப்படுகிறதோ, அதுவே ஞானத்தினாலும் அடையப்படுகிறது; ஆகவே, இந்நிலையில் இரண்டும் ஒருங்கிணைந்து ஒன்றாகிவிடும். ஒன்றை அடைவதால், மற்றொன்றும் அடையப்படுகிறது. இரண்டு மார்க்கத்தினாலும் அடையப்படும் குறிக்கோள் (நிலை) ஒன்றே. 'பரா பக்தி' மற்றும் 'ஞானம்' ஆகிய இரண்டும் ஒன்றுதான், என்கிறார் சுவாமி சிவானந்த மகராஜ். அச்சாதகன், பக்தர்களுக்கு வேண்டியதை வேண்டியவாறு தந்தருளும் முருகப் பெருமானிடமிருந்து இக்கிருபையை வேண்டுகிறான்.

மயில் வாகனான முருகப் பெருமான் வரங்களை அளிப்பவர். பெருமானிடம் வேண்டப்படும் பிரார்த்தனைகள் உளமார்ந்ததாக இருப்பின், கேட்டது கேட்டபடியே கிடைக்கும். முருகப் பெருமான் பக்தர்களுக்கு சுலபத்தில் வரம் தந்து அருளுபவர். உளமார்ந்த பிரார்த்தனைகள் வீண்போவதில்லை; கண்டிப்பாய் அவர் அருளுகிறார். அவரே மயில்வாகன முருகப்பெருமான், அழியாத அழகு படைத்தவர், என்றும் இளமையானவர்.

முருகப் பெருமானுடனிட்ட போரில், சூரபத்மன் இறுதியில் ஒரு பெரும் மாமரமாகி நின்று போரிட்டபொழுது, பெருமான் தன்னுடைய கூரிய வேலாயுதத்தால் அதனை இரு கூறாகப் பிளந்தார். உடனே, சூரபத்மன் தன்னுடைய சுய அசுர உருவத்தை எடுத்தான். அதையும் அவ்வேல் இரு கூறாகப் பிளந்து, இரண்டு கூறுகளையும் கடலில் எறிந்தது. முருகப் பெருமானின் கூரிய வேலாயுதத்தால் மட்டுமே இச்செயற்கரிய செயலை செய்திட முடிந்தது. அதனால், அவர் அதிபயங்கரமான சூரபத்மனை அழித்தவர் என போற்றப்படுகிறார்.

==========

செய்யுள் - 22

==========

காளைக் குமரேசன் எனக் கருதித்
தாளைப் பணியத் தவம் எய்தியவா
பாளைக்குழல் வள்ளிபதம் பணியும்
வேளைச் சுரபூபதி மேருவையே.

பொழிப்புரை: "ஓ தேவலோகத்தின் ஈஸ்வரனான முருகப் பெருமானே! மேரு மலை போன்ற பெருமையுடையவரே! கமுகின் பாளை போன்ற நீண்ட கூந்தலையுடைய வள்ளிதேவியின் பாதங்களைத் தொழுகின்ற செவ்வேளாகிய பெருமானே! தங்களை *ஸச்சிதானந்தம்* எனக்கருதி (உணர்ந்து) தங்கள் பாதங்களைப் பணியும் சீரிய தவநிலையான பெரும் பாக்கியத்தை நான் அடைந்தேன். என்ன ஆச்சரியம்!"

விளக்கவுரை

இச்செய்யுளில் வெளிப்படையாக நமக்குக் காணப்படுவது-போல் இல்லாமல், மிகவும் சூசகமாக உட்பொருள் நிறைந்துள்ளது. இறைவனை இளமையானவரென்றும், பெரும்சக்தி படைத்தவ-ரென்றும் (குமரன் மற்றும் காளை எனக்) கருதி, அவர் தாளைப் பணியும் தவநிலை அடைந்தேனென்று சொல்வதாக இச்செய்யுளிற்கு விளக்கங்கள் தரப்படுகின்றன. இவ்வாறு கருதித் தாளைப்பணிவது எல்லா சாதாரண பக்தர்களும், துவக்க நிலையிலுள்ள ஆன்மீக சாதகர்களும்கூட செய்ய முடியும், செய்கிறார்கள். அதற்கு பெரும் தவமோ (அ) கடுமையான சாதனைகளோ நீண்டகாலம் செய்யத் தேவையில்லை. ஆனால், நாம் பணியும் இறைவன் (அவன் விக்ரஹம்) *ஸச்சிதானந்தம்* (பகுக்கப்படாத/ பிளவுபடாத, எங்கும் நிறைந்த, மொத்த இருப்பு - உணர்வு சைதன்யம் - ஆனந்தம்) என்று நினைத்து, அவ்வாறு உணர்ந்துகொண்டே, அவர் தாளைப்பணிவதற்கு, அர்ப்பணிப்பு பாவனையுடன் கூடிய நீண்டகால சாதனையும் குரு/இறை அருளும் இருந்தால்தான் முடியும். இது ஒரு பெரிய தவம், சுலபமாக அடையக்கூடியதல்ல. இதையே இச்செய்யுளில் 'தவம் எய்தியவா' என சாதகன் ஆச்சரியத்துடன் வியக்கிறான். இது மிகவும் முன்னேற்றமடைந்த தியான வகையைச் சார்ந்தது, இதை

ஒருவன் பெற்றிட மிக நெடிய காலமாக சாதகனைகளையும் செய்திருக்க வேண்டும், மேலும் அவனுக்கு இறையருளும் குரு அருளும் கிடைத்திருக்க வேண்டும், அப்பொழுதுதான் ஒரு சாதனுக்கு இது சாத்தியமாகியிருக்கும்.

"காளைக் குமரேசன்" --- இச்சொற்கள் பரம இரகசியமான உட்பொருளை கொண்டுள்ளன. 'காளை' என்றால் '**என்றும்/நித்திய இளமை**' எனப் பொருள், அதாவது '**நித்தியமாக இருப்பது**' அல்லது '**ஸத்**'. 'குமரன்' என்றால் "தீமைகளை அழிப்பவர்', அதாவது "'உலக மாயா' எனும் 'மாயை'யை அழிப்பவர்" எனப் பொருள்; அதாவது மாயையை அழிக்கும் '**ஞானம்**' அல்லது '**சித்**'. 'ஈசன்' என்றால் 'அனைத்தையும் கட்டி ஆள்பவர்', (அ) 'உயரிய/ மகா (ஈஸ்வர) சக்தி' எனப் பொருள், அதாவது இதில் அடங்கியுள்ள இரகசியப் பொருள் 'பரமானந்தம்' எனும் '**ஆனந்த நிலை**'. சுருங்கக் கூறின், 'காளைக் குமர ஈசன்' என்பது '**ஸத்-சித்-ஆனந்தம்**' என்பதேயாகும்.

கந்த அவதாரத்தைப் பற்றி முன்னர் (காப்பு செய்யுளில்) இவ்வாறு பார்த்தோம்: " 'பிரம்மமாய் நின்ற சோதிப் பிழம்பு' (ஸச்சிதானந்தம்) ஒரு மேனியாகி 'முருகப் பெருமானாக' அவதாரமெடுத்தது" என்று. முருகப் பெருமானின் முன்னர் வணங்கும் பொழுது, இப்படியாக அவரை எல்லையற்ற ஸச்சிதானந்தமாக நினைத்து, உணருதல் அனைவராலும் சுலபத்தில் அடையக்கூடியது அல்ல. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கோவில்களிலும், தங்கள் வீடுகளிலும் பெருமானை விழுந்து விழுந்து தினந்தோறும் வணங்கித்தான் வருகிறார்கள்; என்றாலும், அவர்களில் எவ்வளவு பேரால் அந்த ஸச்சிதானந்த சைதன்யத்தைத்தான் தாங்கள் வணங்குகிறோமென்று உணர முடிகிறது?

குருவின் தீக்ஷையும், அதனுடன் வழங்கப்பட்ட மிகவும் ஆற்றல் கொண்ட சக்தியும் (செய்யுள்-20), தான் கூடிய சீக்கிரமே இறைவனை அடைய வேண்டுமென்ற துடிப்பை அச்சாதகனிடம் ஏற்படுத்தியது. எனவே, அவன் தன் தியானத்தை மேலும் தீவிரப்படுத்தி, "கருதா மறவா நெறிகாண எனக்கு இருதாள் வனசந்தர என்றிசைவாய்?" (செய்யுள்-21) என்று தீவிர தியானம் மற்றும் பிரார்த்தனைகளை நெடுங்காலம் கடைபிடிக்கிறான், இவ்வாறு செய்வதென்பது மிகக் கடுமையான தவமாகிறது. இத்தவத்தின் விசேஷ பலனாக அவன் முருகப் பெருமானின் பாதங்களில் விழுந்து வணங்கும் பொழுதே, அவரை ஸச்சிதானந்த சொரூபமாக (இருப்பு - ஞானம்- ஆனந்தம்) நினைத்து அவ்வாறு உணரவும் செய்கிறான். இது அடைவதற்கரிய பெரும் சாதனைதானே? தன்னால் இவ்வரிய சாதனையை செய்ய முடிந்தது குறித்து பெருவியப்படைகிறான்! 'இது குருவருளாலும்

இறைவனின் அருளாலும்தான் நடந்தேறியது' என்று சொல்லாமல் தெரிவிக்கிறான்.

குருவாகிய முருகப் பெருமானின் உருவத்தின் பின்புலத்தில் ஸச்சிதானந்தத்தை சாதகனால் உணர முடிந்ததென்பதை 'பூமேல் மயல்போய் **அறமெய்ப்புணர்வீர்**' ----- (நாம-ரூப) பெயர், மற்றும் உருவத்தின் பின்புலத்திலுள்ள ஸச்சிதானந்தத்தைக் கண்டு (உணர்ந்து) கொள்வது ----- என்ற உபதேசத்தின் (செய்யுள்-17) முதல்-நிலை பயிற்சி எனக் கொள்ளலாம். இப்படியாக, முதன்முதலாக இறைவனின் பெயர்-உருவத்தில் மட்டும் ஸச்சிதானந்தத்தை உணரத்-துவங்கிய சாதகனுக்கு, நாளடைவில் **அனைத்து** பெயர்-உருவங்களிலும் ------ இப்பிரபஞ்சத்திலுள்ள (உயிரற்ற - உயிருள்ள) பொருள்கள் அனைத்திலும் ------ ஸச்சிதானந்தத்தை உணர்வது சுலபமாகிவிடும்.

குரு தீக்ஷை கொடுத்து, எவ்வாறு தியானம் செய்ய வேண்டும் என்ற நுட்பத்தையும் சாதகனுக்குத் தந்தருளினார் (செய்யுள் - 20). இதன்மூலம் ஆன்ம விடுதலையை அடைந்தேயாக வேண்டுமென்ற உறுதிபூண்டு, அவனும் இறை-தியானத்தை உடனே செய்யத் துவங்கினான் (செய்யுள்-21); குரு வழங்கிய தீக்ஷையின் உடனடி சக்தி வேகத்தால் அவன் தினசரி செய்யும் தியானத்தில் பெருவெற்றி பெறுகிறான். அவ்வாறு இறை-தியானத்தை அவன் தொடர்ந்து சிலகாலம் செய்துவர, அவன் பூஜை மற்றும் தியானம் செய்யும் உருவத்தின் பின்புலத்திலுள்ள ஸச்சிதானந்தப் பரம்பொருளை உணர முடிகிறது. இது அவனுக்கு பெரும் மகிழ்ச்சியை தருவதால், இறைவனின் எல்லையற்ற கிருபையை நினைத்து நினைத்து வியப்படைகின்றான். ஆனால், இத்தியானத்தால் உசுப்பிவிடப்படும் அவித்யை (அறியாமை), அவனுக்கு தீமைகளைச் செய்யத் துவங்கி-விடுகிறது; எனவே இத்தகைய அற்புத அனுபவங்கள் நீண்டகாலம் நீடிக்கவில்லையென்று நாம் பின்வரும் செய்யுள்களிலிருந்து அறிவோம்.

"இறை-பாதங்களைத் தொழும் பொழுதே, ஸச்சிதானந்தத்தை நினைத்து உணர்வது" ---- "காளைக் குமரேசன் எனக் கருதித் தாளைப் பணிய" ---- இந்த அனுபவத்தில், ஞானமும் (ஸச்சிதானந்தத்தை உணர்வது), பக்தியும் (இறைவனை பணிந்து தொழுவது) ஒன்றாகக் கலந்துவிடுகின்றன. அதனால்தான், இது பெரிய தவமாகவும், சாதனையில் வெற்றியாகவும் போற்றப்படுகிறது.

.இறைவனைப் பணிந்து தொழும்பொழுது, நாம் அவரை வெறும் பெயர்-உருவம் தாங்கிய ஒருவராகக் கருதாமல், ஸச்சிதானந்த-மாகவே நினைத்திட வேண்டும். நமது உடல் இறைவனின்

உருவத்தையோ படத்தையோ தொழ வேண்டும்; ஆனால் அதே சமயத்தில் நமது மனமோ அவரின் எல்லையற்ற சொரூபத்தில் நிலைத்திருக்க வேண்டும். நாம் தொழும் இறைவனின் நாம-ரூபம் எதுவாக இருந்தாலும் ---- சிவன், விஷ்ணு, இராமர், கிருஷ்ணர், ஸ்கந்தன், விநாயகர், தேவி, கிறிஸ்து, புத்தர் போன்று எதுவாக இருந்தாலும், அவை அனைத்தும் உண்மையில் ஸச்சிதானந்தம் என்ற ஒன்றே; நகைகளின் பெயர் - வடிவம் எதுவாகயிருந்தாலும், அவை அனைத்தும் உண்மையில் தங்கமே. இவ்வுண்மையை நாம் மனதில் இருத்தவேண்டும். நாம் எந்த தெய்வத்தை நினைத்தாலும், தியானித்தாலும், தொழுதாலும், அவர்களின் உண்மைப்பொருள் ஸச்சிதானந்தமே. அவ்வாறு செய்வோமாயின், அது நமக்கு ஒரு மிகப்பெரிய ஆசீர்வாதமாக அமையும்.

"இறைவனை ஸச்சிதானந்தமாக நினைத்து, அவர் பாதங்களைத் தொழுதல்" என்று கூறும்பொழுது, அவை, முறையே, இறைவனின் *சொரூப-இலட்சணத்*தையும், *தடஸ்த-இலட்சணத்*தையும் குறிப்பிடு-வதாகக் கொள்ளலாம். இறை-பாதம் தொழுதல் என்று சொல்லும்பொழுது, அவரின் உருவத்தை (அது எதுவாயிருப்பினும்) குறிக்கிறது ---- இது *தடஸ்த இலட்சணம்* எனப்படுகிறது. ஏதாவது குறிப்பிட்ட காரியத்தை நிறைவேற்றிட, இறைவன் ஒரு உருவம் தாங்கி அவதாரம் எடுப்பதென்பது இறைவனின் சார்பியல் அம்சத்தைச் சார்ந்தது (அதாவது, ஜீவ-ஜகத் சம்பந்தப்பட்ட ஈஸ்வர அம்சத்தின் அவதாரமெனலாம் - **Relativistic aspect of God**). இவ்வாறு சொல்வதால், அவர் அதே உருவத்தில் திரும்ப அவதாரம் எடுக்க மாட்டார் என்றோ, அல்லது தன் பக்தர்களுக்கு தரிசனம் தருவதற்காகக்கூட அந்த உருவத்தில் வரமாட்டார் என்றோ கருதலாகாது. அவரால் அனைத்தும் இயலும். ஆனால், இறைவன் உருவம் தாங்கி வருவதென்பது, அவரது சொரூப இலட்சணமுமல்ல; அவரது அடிப்படை இயல்பும் (**Essential Nature**) அல்ல. பின் எதுதான் அவரின் சொரூப இலட்சணம்? இறைவனின் சொரூப இலட்சணம் 'ஸச்சிதானந்தம்', 'இருப்பு-ஞானம்-ஆனந்தம்'. அவதாரத்திற்கு அவதாரம் தடஸ்த இலட்சணம் வேறுபடுகிறது, ஆனால், சொரூப இலட்சணமோ எப்பொழுதும் மாறாமல் அனைத்திலும் ஒரேமாதிரியாக இருக்கிறது. எனவே, இறைவனின் சொரூப இலட்சனத்தில் மனதை நிலைநிறுத்தி, அவரின் பல உருவங்களில் ஏதோ ஒன்றைப் பணிந்து தொழுவதற்கு ஒரு சாதகனால் முடிகிறதென்றால், அவன் நீண்ட காலமாக செய்துவந்த சாதனைகளின் பலனும், இறை-அருளும்தான் அதற்கு நிச்சயம் காரணமாயிருந்தன என்று கூறலாம்; ஏனெனில், மனிதனின் புத்தியால் இறைவனின் தடஸ்த இலட்சணத்தை எளிதாக அறிந்து- கொள்ள இயலும், ஆனால், அவரின் சொரூப இலட்சணத்தை ஒருவன் தன்

நெஞ்சத்தில் உணரவோ, அனுபவிக்கவோ வேண்டுமென்றால், அதற்கு இறைவனே அவன்பால் கிருபைகொண்டு அவ்வாறு வெளிப்படுத்தினால்தான் இயலும்.

நமது பிரார்த்தனைகள், வழிபாடு, தியானம், ஆகியவைகள் வெறுமனே தடஸ்த இலட்சணத்தை அடைவதோடு மட்டும் நின்று-விடலாகாது. இச் சாதனைகளின் ஒரே குறிக்கோள் சொரூப இலட்சணத்தை அடைவதற்காக இருக்க வேண்டும். பெருவாரியான மக்களால், அவரவர்களுக்குள்ள சமய நம்பிக்கை மற்றும் பழக்க-வழக்கத்திற்கேற்ப, செய்யப்படும் சாதனை, 'பொதுஜன சமயம்' **(Popular Religion)** என அழைக்கப்படுகிறது. அதனால், அச்சாதனைகள் மதத்திற்கு மதம் **(Religion)** வேறுபடுகிறது. ஆனால், சொரூப இலட்சண சாதனைகள், எல்லா மதங்களையும்சார்ந்த ஞானிகள் மற்றும் அருளாளர்களால் கடைப்பிடிக்கப்படும் 'தெய்வீக சமயத்தை'ச் **(Mystic Religion)** சார்ந்தது. எனவே, அவர்கள் எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களுடைய அனுபவங்கள் ஒரே மாதிரியாகவே இருக்கும். அவர்களுடைய அனுபவங்களிலோ, கருத்துக்களிலோ, அபிப்பிராயங்களிலோ எவ்வித வேறுபாடும் இருப்பதில்லை.

'பொதுஜன சமய'ங்களுக்கிடையேதான் சண்டைகள், சித்தாந்த சம்பந்தமான பிடிவாதம், ஆகியவை ஏற்படுகின்றன. இக்காரணங்களால் 'பொதுஜன சமயம்' (அ) இறைவனைப் பலவிதங்களில், பல உருவங்களில் தொழுவதை விட்டுவிட வேண்டுமா என்ற சந்தேகம் நமக்கு ஏற்படலாம்? அதற்கு பதில், இல்லையென்பதே. அதை விட்டுவிட வேண்டிய அவசியமில்லை, விரும்பத்தக்கதும் இல்லை. ஆரம்ப நிலையில் உள்ள சாதகனுக்கு, அவன் சாதனையைச் செய்யத் துவங்கும் ஆரம்ப காலகட்டங்களில், தன் மனதை ஏதேனும் ஒன்றில் நிலைநிறுத்துவது அவசியமாகிறது, அதற்கான ஒரு பிடிப்பை (மதம்) சமயம் அவனுக்குத் தந்து உதவுகிறது; அதை கொழுகொம்புபோல் பற்றினால்தான் அவனால் தெய்வீகத்தில் முன்னேற முடியும். எனவே, பல்வேறு மதங்களையும், அவைகளின் வெவ்வேறு நடைமுறைகளையும் ஒதுக்கித் தள்ள வேண்டிய அவசியமில்லை; பதிலாக, இவற்றை 'தெய்வீக மத'த்துடன் சேர்த்து உபயோகித்து, முன்னேறவேண்டும். கடைசியில் இவைகளைக் கடந்து மேலேறிச் செல்வதே உசிதம்.

இது எப்படியென்றால் கல்லூரிப் படிப்பு உயர்நிலைப்பள்ளியில் படித்ததை நிராகரிக்காமல், அதையும் பயன்படுத்தி, மேன்மேலும் முன்னேறிச் செல்வதைப்போல எனலாம். மேலும், கல்லூரிகள் இருக்கிறதென்பதால், நாம் ஆரம்ப மற்றும் உயர்நிலைப் பள்ளிகளை மூடி விடுவதில்லை; ஏனெனில், அவைகள்தான் உயர்படிப்பிற்குத்

தேவையான ஆரம்பக் கல்வியை தருகின்றன, கல்லூரி படிப்பிற்கான தகுதியையும் தருகின்றன, அத்தகுதி இல்லையேல் கல்லூரி படிப்பிற்கே செல்ல முடியாதல்லவா? அதுபோன்றதே, 'பொதுஜன மதமும்' எனலாம். மேலும், கல்லூரிப் படிப்பை தொடரத் தேவையான வசதி அனைவரிடமும் இருப்பதில்லை. ஆனால், ஒரு படிக்காத-வனைவிட உயர்நிலைப் பள்ளி கல்வி கற்றவன் சிறந்தவன்தானே. அதேபோல், அனைவராலும் 'தெய்வீக மதத்திற்கு' முன்னேறுவது சுலபமல்ல என்பது உண்மைதான் என்றாலும், அவன் குறைந்தது 'பொதுஜன மத'த்திலாவது இருந்தால், ஒரு 'உலகாயதவாதி' (உலகத்துக்கு அப்பால் எதுவும் இல்லை என்று நினைப்பவன்) எனப்படும் மதத்தை மறுதலிப்பவனைவிட அவன் சிறந்தவனாகத்தான் இருப்பானல்லவா! 'உலகாயதவாதி'யாக இருப்பவன் எல்லா சட்ட விரோத செயல்களையும், பாவங்களையும் செய்வான்; ஆனால், மதத்தைக் கடைப்பிடிப்பவன், இறைவனுக்கு பயந்தவனாகவும், தார்மிக மற்றும் ஆன்மீக வாழ்விற்கு மதிப்பளிப்பவனாகவும் இருப்பான். ஆனால், ஒருவன் வெறும் மதவாதியாக மட்டும் நிரந்தரமாக இருந்துவிடக் கூடாது. அம்மதவாதிக்கு 'பொதுஜன மத'த்தைவிட உயர்ந்த (ஆன்மீக) மதம் ஒன்று உள்ளது என்றும், முன்னது பின்னதற்கு வழிகாட்டி என்றும் அவனுக்கு குறைந்த பட்சம் தெரிந்திருக்க வேண்டும். பொதுஜன மதம் ஆன்மீக மதத்திற்கு வழி காட்ட வேண்டுமே ஒழிய, மதசம்பந்தமான சண்டை, சச்சரவுகளுக்கல்ல. தடஸ்த இலட்சணம், சொரூப இலட்சணம் ஆகிய இரண்டுமே இறைவனுக்குரியதே; எனவே, தடஸ்த இலட்சணம் நாளடைவில் நம்மை சொரூப இலட்சணத்துக்கு அழைத்துச் செல்லவேண்டும்.

"இறைவனை ஸச்சிதானந்த சொரூபமாக நினைத்து, அவன் பாதங்களில் பணிந்து தொழ வேண்டும்": "நினைப்பதென்பது" ஒருவனின் உள் மனப்பான்மை, ஆனால் "பணிந்து தொழுதல்" என்பது ஒருவனின் வெளிச்செயல். இதன் உட்கருத்து: ஒரு செயல் செய்யப்படும்பொழுது, சரியான பாவனையில் **(Attitude)** அது செய்யப்படவேண்டும். இறைவன் தாள் தொழும்பொழுது, எங்கும் வியாபித்திருக்கும் அவரது தன்மையும் உணரப்பட வேண்டும் என்பது இங்கு அழுத்தமாக கூறப்படுகிறது. சரியான பாவனை இன்றி, வெறுமனே வெளிச்செயல்களை மட்டும் செய்வது அர்த்தமற்றது, மற்றும் பாசாங்குத்தனமாக ஆகிவிடக்கூடும். இவ்வாறாகின், மதமும், மதச் சடங்குகளும், ஏன் தனிநபரின் மதச்சார்பற்ற தினசரி நடவடிக்கைகள்கூட, உயிரற்றதாகப் போய்விடும், --- அவை எவ்வளவுதான் வெளிப்புற ஆடம்பரத்துடனும், பெருமையுடனும் செய்யப்பட்டாலும் சரி.

ஆனால், இங்கு ஒரு சந்தேகம் எழலாம்: இறைவனின் எங்கும் வியாபித்திருக்கும் தன்மையை உணர்ந்திருக்கும் ஞானிகளும், அருட்செல்வர்களும்கூட, வெளிப்புற சடங்குகளான இறைவனைத் தொழுவது, வணங்குவது, வழிபாடு செய்வது ஆகியவைகளைத் தொடர்ந்து செய்யத்தான் வேண்டுமா? ஆமாம், செய்யத்தான் வேண்டும். அது தேவையான ஒன்றுதான். இறைவன் அவர்களின் நெஞ்சத்தையும், பாவனையையும் மட்டும்தான் பார்க்கிறார் என்றாலும், அவர்கள் புற வழிபாடுகளையும் செய்வது நல்லது; ஏனெனில், மகான்களும், ஞானிகளும் எதையெல்லாம் செய்கிறார்களோ, அதையே மக்களும் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்க முயற்சிக்கிறார்கள், மகான்களை தமக்கு ஒரு உதாரண புருஷர்களாக மதிக்கிறார்கள். எனவே, அவர்கள் பூஜை, வழிபாடு, பிரார்த்தனை ஆகியவைகளை (அவர்களுக்கு அவசியமில்லாததால்) செய்யாமல் விட்டுவிட்டால், அவர்களைப் பின்பற்றும் மக்களும் அவைகளைச் செய்யாமல் விட்டுவிடுவார்கள். ஆனால் மகான்களும், ஞானிகளும் வெளிப்படையாக பூஜை முதலியவை செய்யாமல் இறைவனை அவர்கள் நெஞ்சில் உணரமுடியும்; ஆனால் அப்படி சாதாரண மக்களால் உணர முடியாது. இத்தகைய மக்கள் தங்கள் வெளி - உள் (பக்தி - உணர்வு) ஆகிய இரண்டிலும் பிடிப்பில்லாமற்போய், நாளடைவில் தங்களை முற்றிலுமாக இழந்து விடுவார்கள். எனவே, ஞானிகள் - மகான்கள் பகிரங்க வழிபாடுகளை விட்டுவிடாமல் தொடர்கிறார்கள்; மற்றவர்கள் தங்களைப் பார்த்து, தம்மைப் பின்பற்றி பயன்பெறட்டும் என்பதற்காக அவர்கள் இவ்வாறு செய்கிறார்கள். மக்கள் அவர்களைப் பார்த்து இறைவழிபாடு போன்ற (பகிரங்க) பக்தி சாதனைகளைத் தொடர்ந்து கடைபிடிக்கும்பொழுது, நாளடைவில் சரியான மனப்போக்கையும் உணர்வையும் இறை-கிருபையால் இம்மக்கள் பெற்றுவிடுவார்கள். என்ன ஒரு ஆழமான அர்த்தம் உடைய செய்யுள் இது!! அருணகிரியார் ஒரு சில சொற்களிலேயே முழு ஞானத்தையும் எப்படி உள்ளடக்கி (மறைபொருளாக) தந்துவிடுகிறார் பார்த்தீர்களா!

இவ்வுலகிலேயே மிக உயர்ந்த மலையென்று மேரு பர்வதம் (மலை) அழைக்கப்படுகிறது. அதனுடைய நீளம், அகலம், உயரம் மற்றும் மகிமை ஆகியவைகளை ஒருவராலும் அளவிட இயலாது. அதுவே இப்பிரபஞ்சத்தின் அச்சு (ஆதாரம்) என கருதப்படுகிறது. அதேமாதிரிதான், மனிதனின் புரிந்து கொள்ளும் திறமைக்கும் - விளக்கத்திற்கும் அப்பாற்பட்டவராக, அனைத்துக்கும் ஆதாரமாக முருகப் பெருமான் இருக்கிறார். இவ்வளவு பெருமைவாய்ந்த இறைவன் கழுகின் பாளை போன்ற நீண்ட கூந்தலையுடைய

வள்ளிதேவியின் பாதங்களைத் தொழுகின்றார். என்னே அவருடைய மகிமை! என்னே அவருடைய தெய்வீகத் திருவிளையாடல்!!

==========

செய்யுள் - 23

==========

அடியைக் குறியாது அறியாமையினால்
முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக்ரம வேல் மகிபா குறமின்
கொடியைப் புணரும் குணபூதரனே.

பொழிப்புரை: "கூர்மையும் வீரமும் கொண்ட வேலாயுதத்தை ஏந்திய அரசே! மின்னல் கொடிபோன்ற குறமகளைத் (வள்ளியைத்) தழுவும் குணமலையே! அறியாமையின் விளைவாக தங்கள் திருவடிகளைச் சிந்திக்காமல் நான் முற்றிலும் அழிந்திடத்தான் வேண்டுமோ! இது நியாயமோ, ஓ பெருமானே, இது நீதியோ?"

விளக்கவுரை

'மிடி' (அ) 'வறுமை' என்ற சொல்லிற்கு அர்த்தம் 'அறியாமை' என்று முன்னர் குறிப்பால் உணர்த்தியதை (செய்யுள்–19), இச்செய்யுள் வெளிப்படையாகவே 'அறியாமை' (Ignorance - அக்ஞானம்) என்று குறிப்பிடுகிறது.

ஆழ்நிலை தியானம் தந்த அனுபவமும், ஆனந்தமும் (செய்யுள்கள்–21 & 22), சாதகனிடம் நீண்டகாலத்திற்கு நிலைத்திருக்க-வில்லை. இறைவனின் பாதம் பணியும் பொழுது, எங்கும் நிறைந்திருக்கும் அவரின் ஸச்சிதானந்த சொரூபத்தை நன்கு உணர முடிந்த சாதகனால், சில காலத்திற்குப் பின்னர் இறைவனின் பாதங்களைச் சிந்திக்கக்கூட முடியவில்லை! அவன் மனம் அமைதி குலைந்து தடுமாறிப் போனது. எதனால் அப்படி நிகழ்ந்தது? நெடியகாலத்திற்கு செய்யப்பட்ட அந்த ஆழ்நிலை தியானத்தினால், சாதகனின் நெஞ்சில் அவனுக்கே தெரியாமல் ஆனந்தமாக ஒடுங்கி இருந்து, மனம் மற்றும் அகங்காரத்தின் மூலம் எல்லாவிதமான தீமைகளையும் செய்து வந்த அந்த 'பாவி' எனப்படும் 'அறியாமை' மீது தீவட்டி போன்ற வெளிச்சம் நேராகப் பாய்ச்சப்பட்டது. அதனால் ஒடுங்கியிருந்த அறியாமை எழுப்பப்பட்டது, அச்சுறுத்தவும்பட்டது. எப்படி தூக்கத்தில் ஆழ்ந்திருக்கும் நாகப்பாம்பை தொந்திரவு

செய்தால், உடனே அது எழுந்து சீறிக் கடிக்க வருமோ, அப்படிப்பட்ட ஒரு நிலைதான் இது. எனவே, அவித்யை எனப்படும் அறியாமை விழித்தெழுந்து தன்னை சீண்டிய சாதகனை பழிவாங்கத் துவங்கி, அவனுக்குப் பேரழிவை ஏற்படுத்த முற்படுகிறது. அதனால், அவன் நிலைகுலைந்து போகிறான். முன்னர் இறை-பாதங்களைத் தொழும்பொழுதே எங்கும் நிறைந்த ஸச்சிதானந்த சொரூபத்தை உணர முடிந்த சாதகன் (செய்யுள்–22), இப்பொழுது இறை-பாதங்களை தன்னால் தியானிக்கக்கூட முடியாததை அறிகிறான். தன்னையே இழந்து விட்டதைப்போல் பரிதவிக்கிறான். அதனால், குழம்பிய மனநிலையிலிருந்த அவன் இறைவனிடம் இவ்வாறு வேண்டிக்-கொண்டே சரண் அடைகிறான்: "அறியாமையினால் அடியைக் குறியாது முடியக் கெடவோ முறையோ முறையோ" --- "இது நியாயமா? ஓ முருகப் பெருமானே! இது நீதியோ, இந்த 'பாவி' 'அறியாமை'-யால் நான் முழுவதும் அழிந்து போவதா? தாங்கள் கூர்மையான, வீரம்மிக்க வெற்றிதரும் வேலாயுதத்தைத் தாங்கியிருக்கும் இறைவனவல்லவா! தயவுசெய்து உடனே என்னைக் காப்பாற்றுங்கள்." தனது பரிதாபகரமான நிலையை உணர்ந்து அவன் பெருமானிடம் சரண் அடைகிறான். அறியாமையின் சக்திதான் என்னே!

சாதனையின் துவக்க காலத்தில், சாதகனின் பிரச்சனைகள் வெளிப்புறமானவை --- உடல் மற்றும் நனவு (physical or conscious level) ரீதியாக ஸ்தூல-சரீர சம்பந்தப்பட்ட பிரச்சனைகளாக இருந்தன (செய்யுள் – 4 முதல்). பின்னர் அவை உட்புறப் பிரச்சனையாயின – நுட்பமான (அ) ஆழ்மனது (subtle or sub-conscious level) ரீதியாக சூட்சும-சரீர சம்பந்தப்பட்ட பிரச்சனைகளாக இருந்தன (செய்யுள் – 14 முதல்). இப்பொழுது, அவை காரண (அ) நினைவற்ற (Causal or Unconscious level) ரீதியாக காரண-சரீர சம்பந்தப்பட்டப் பிரச்சனைகளாக மாறின. காரண-சரீரம்தான் அறியாமையின் இருப்பிடம், இவையிரண்டும் ஒன்றேயென்று சொல்லலாம்; அதில்தான் அநேக ஜன்மங்களாகச் செய்யப்பட்ட கர்மங்களின் பலன்கள் *'சம்ஸ்காரங்கள்'* என அழைக்கப்படும் பதிவுகளாக முத்திரை குத்தப்பட்டுள்ளன. ஆழ்ந்த தியானத்தினால், அறியாமை எழுப்பப்படும்பொழுது, இந்த 'சம்ஸ்காரங்கள்' தூண்டப்பட்டு பாம்புபோல் சீறி, காரண நிலையிலிருந்து சூட்சும மற்றும் ஸ்தூல நிலைகளுக்கு வெளிவந்து, சாதகனுக்குப் பலவிதமான பிரச்சனைகளை உண்டுபண்ணுகின்றன ----- உடல் வியாதிகள், மனதை ஒருமுகப்படுத்த முடியாத நிலை, முன்பு அனுபவித்த இந்திரிய போகங்களைத் திரும்பத் திரும்ப அனுபவப்பதில் தீவிர ஆசை, போன்ற பிரச்சனைகள் சாதகனை தாக்குகின்றன. இச்செய்யுளில் சொல்லப்பட்ட இறை-பாதங்களை சிந்திக்கக்கூட முடியாத சாதகனின் நிலை, அவனுக்குப் பின்னர் வரப்போகும்

பிரச்சனைகளின் ஒரு துவக்கமே; ஏனெனில், இப்பொழுது அந்த 'சம்ஸ்காரங்கள்' காரண-சரீரத்தில்தான் இருக்கின்றன. நினைவற்ற காரண நிலையில், மன உளைச்சல்கள் இருக்கும்பொழுதே, அச்சாதகனால் தியானம் செய்ய முடியவில்லை, இறைவனைச் சிறிதளவுகூட நினைக்க இயலவில்லை. பின்னர் அறியாமையின் தாக்கம், சூட்சும மற்றும் நினைவு மனநிலைகளுக்கு மேலெழும்பொழுது, அவனுக்கு இதைவிடப் பெரிய பிரச்சனைகள் ஏற்பட்டு, அவன் நாலாபக்கங்களில் இருந்தும் தாக்கப்படுவதைப் பற்றி, பின்வரும் செய்யுள்களின் மூலம் போகப்போக அறிவோம்.

இங்கு ஒரு கேள்வி எழலாம்: 'ஆத்மாவை தியானிக்கும்பொழுது, அறியாமை ஏன் பாதிக்கப்படவேண்டும்?' இதைப் பற்றி அறிய, நம் ஆளுமையின் சரீரகட்டுமான அமைப்பைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டும். நமக்கு முன்று சரீரங்கள் உள்ளன: உடல் எனும் ஸ்தூல சரீரம், மனம் முதலான சூட்சும சரீரம், அகம் எனும் காரண சரீரம். இதற்கேற்ப, நமக்கு மூன்று நிலைகள் உள்ளன – நனவு, கனவு, நினைவிழந்தநிலை எனும் மூன்று நிலைகள். அதேபோல், மூன்று ஸ்திதிகள் உள்ளன – விழிப்பு, சொப்னம், ஆழ்ந்த உறக்கம் எனும் மூன்று ஸ்திதிகள். ஸ்தூல-சரீரம், நனவு-நிலை, விழிப்பு-ஸ்திதி ஆகிய இவை வெளிப்படையான முதற்படி என்றால்; இவை ஒவ்வொன்றின் முந்தைய படி, இவற்றிற்கு உட்புறமும், மேலும் வியாபித்தும் பரவியுள்ளது. அறியாமை என்பது (கடைசி) மூன்றாவது படிபோன்ற காரண சரீரத்தில், நினைவிழந்த நிலையில், ஆழ்ந்த உறக்க ஸ்திதியில் இருக்கிறது. ஆத்மாவோ இம்மூன்று சரீரங்களையும், மூன்று நிலைகளையும், மூன்று ஸ்திதிகளையும் கடந்து அனைத்திற்கும் உள்ளுக்குள்ளாய் இருக்கிறது (இருப்பாக, உணர்வாக, ஆனந்தமாக – ஸச்சிதானந்த சொரூபமாக இருக்கிறது). அதனால்தான், இந்நிலையை "எல்லாம் கடந்த நிலை" (துரீய அவஸ்தா/ ஸ்திதி), "நான்காவது நிலை /படி/ ஸ்திதி" என்கிறோம். எனவே, "நான்காவது நிலை"யான ஆத்மாவின்மீது தியானம் செய்யும்போது, இம்மூன்று நிலைகளையும், மூன்றாம் நிலையிலுள்ள அறியாமையையும் கடக்கவேண்டி இருக்கிறது, அப்பொழுது அறியாமை தொந்திரவு செய்யப்படுகிறது.

வேல் கூர்மையானது, வீரமானது. அது தன் குறிக்கோளை ஒருபொழுதும் தவறுவதில்லை. இவ்வேல் கிரௌஞ்ச மலையைத் (அசுரனைத்) துளைத்து, சூரபத்மன் மற்றும் அவன் சகோதரர்களையும் அழித்தது. வேல் என்பது ஞானத்தைக் குறிக்கும், அது ஒன்றால்தான் அக்ஞானத்தை அழிக்க இயலும். 'இவ்வுலகப் பொருள்களை உண்மையென மதித்து, எங்கும் நிறைந்துள்ள இறைவனை மறந்து,

அதனால் துன்புறுவது' அறியாமை எனப்படுகிறது. இறைவனோ நற்குணங்களின் திருவுருவம். நாம் அவரை தியானித்தால், அவரது நற்குணங்கள் அனைத்தையும் அடையப் பெறுவோம், மேலும் அவர் கையிலிருக்கும் வேல் நமது அறியாமையை அழித்து விடும்.

முருகப் பெருமான் வள்ளியை மணந்தார். வள்ளியின் பூர்வீகம் தெய்வீகம், ஆனால் காட்டில் வாழும் வேடுவ குலத்தினரால் வளர்க்கப்பட்டாள். அதுபோல் ஜீவனும் உண்மையில் தெய்வீகம், ஆனால் பிரகிருதியின் உடல் – மனம் எனும் வலையில் அகப்பட்டிருக்கிறது. முருகப் பெருமான் வள்ளியை தழுவியது, அவர் தன்னை தியானிக்கும் மற்றும் தன்னிடம் சரண் புகும் ஜீவர்களை ஏற்றுக்கொள்கிறார் என்பதையே குறிக்கிறது.

==========

செய்யுள் - 24

==========

கூர்வேல்விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வேன் அருள்சேரவும் எண்ணுமதோ
சூர்வேரொடு குன்று தொளைத்த நெடும்
போர்வேல புரந்தர பூபதியே.

பொழிப்புரை: "சூரபத்மன், அவனது குலம், கிரௌஞ்ச மலை ஆகிய அனைத்தையும் துளைத்தழித்த போரில் வெல்லவல்ல நீண்ட வேலாயுதத்தைத் தாங்கிய முருகப் பெருமானே! இந்திர லோகத்தின் தலைவனே! கூரிய வேல் போன்ற கண் பார்வையை உடைய மங்கையர் கொங்கைகளில் சேர்ந்து தழுவி வாழ்ந்தவனாகிய எனக்கு, உனது கிருபையைத் தந்தருள நீ நினைக்க மாட்டாயோ?"

விளக்கவுரை

அறியாமை தொந்தரவு செய்யத் துவங்கியதால், சாதகனால் இறைவனின் பாதங்களை நினைக்கக்கூட முடியவில்லை (செய்யுள்-23). ஆனால், அறியாமை ஏன், எவ்வாறு அவனைத் தொந்திரவு செய்தது? ஆத்ம தியானம் வெகு தீவிரத்துடன் ஒருவனால் செய்யப்-படும்பொழுது, அவனது உட்புற சுத்திகரிப்பும் நடைபெறத் துவங்கு-கிறது. இது, பல்லாண்டு காலமாக பூட்டிவைக்கப்பட்டிருந்த ஒரு அறையைப் பெருக்கி சுத்தம் செய்வது போன்றது. தரையில் தூசிகள் ஓர் விரிப்பின் கணஅளவிற்குக்கூட படிந்து போயிருக்கலாம். அவ்வளவு தூசிபடிந்த தரையை சுத்தம் செய்யத் துவங்கினால், தூசிகள் மேலெழும்பி, சுத்தப்படுத்துபவன் எங்கே இருக்கிறானென்று- கூடத் தெரியாத அளவிற்குக் கண்பார்வையை மறைக்கும். அப்படிப்பட்ட ஒரு மனநிலைக்கு சாதகனும் இப்பொழுது தள்ளப்பட்டு விடுகிறான். காரண சரீரத்தில் மலைபோல் இதுகாறும் குவிந்து கிடந்த காம-வாசனைகள் (அ) *சம்ஸ்காரங்கள்* – அதாவது, இந்த ஜன்மம், மற்றும் முந்தைய பல ஜன்மங்களில் அவன் பெற்றிருந்த இந்திரிய-போக அநுபவங்களால், குறிப்பாக பாலின வேறுபாடுகளால், ஏற்படுத்தப்பட்ட பதிவுகள் – ஆத்ம தியானத்தினால் திடீரென கிளறிவிடப்பட்டதால் (செய்யுள்– 22) அவை அதிர்ச்சி அடைந்து, சீற்றத்துடன் மேலெழும்பி சூட்சும சரீரத்திற்கு வருகின்றன. அதனால், அவை அவன் புத்தியைக்

குழப்பி, மனசாட்சியை உறுத்தி, மனதை கலக்கத் துவங்குகிறது. இதுவரை புதைந்துகிடந்த காம-வாசனைகளின் வெளிப்பாடு, அவன் மனசாட்சியைக் கொத்தத் தொடங்குகிறது; அதன் தாக்கம் சாதகனை இறை-பாதங்களை நினைக்கக்கூட முடியாமல் செய்கிறது, மேலு ஆன்மிக சாதனையில் ஈடுபடத் தனக்கு உண்மையில் தகுதி உள்ளதா என்ற சந்தேகத்தையும் அவனிடம் ஏற்படுத்தி விடுகிறது. இம்மாதிரியான ஒரு பரிதாப நிலைக்கு தான் தள்ளப்பட்டுவிட்டதை அவன் இப்பொழுது உணர்கிறான். அதனால்தான், அச்சாதகன் இறைவனிடம் வாய்விட்டுக் கதறி, தான் செய்திருந்த பழைய தவறுகளுக்காக மனமார வருந்தி, தன்னை மன்னிக்கக் கோரி பிரார்த்திக்கிறான், தனக்கு உடனே கிருபையைப் பொழிய வேண்டுகின்றான். இதன்மூலம், இறைவனிடம் சாதகன் தன் குற்றங்களை இரகசியமாக (தன் இதயத்தில்) நேர்மையாக ஒப்புக் கொள்ளுகிறான். அதுவே பிராயசித்தமாகவும் மாறி, இறைவனின் கிருபையை அவனுக்குக் கிடைக்கச்செய்யும். (இதைப் பின்னர் காண்போம்.)

இறைவனின் சர்வ வியாபகத்துவத்தை உணர முடியாமல் போனபின்னர், அவரது தாள்களில் தன் மனதை நிலைநிறுத்தக்கூட முடியாமற்போகிறது (செய்யுள்-23); அதுமட்டுமல்லாமல், அவன் மனம் பெண்களுடன் முன்னர் அநுபவித்த இன்பங்களின் நினைவால் தொந்திரவு செய்யப்படுகிறது. அச்சாதகன் இப்பொழுதும் தன் குடும்பத்துடன் சேர்ந்துதான் வாழ்ந்து வருகிறான்; அதனால், அவனுக்குக் கடமைகளும், பொறுப்புகளும் உள்ளன. மேலும், பாலியல் உள்ளுணர்வு, கடந்த கால இன்ப அனுபவங்களின் நினைவுகள், மற்றும் அவைகளின் மீதான ருசி ஆகியவைகள், ஒருவனைவிட்டு எளிதில் அகலுவதில்லை. ஒருவனின் சொந்த முயற்சியால் மட்டும் அவைகளைக் கடப்பது இயலாத காரியம். அவைகளைச் சமாளிக்க இறைவனின் கிருபை அவசியம் தேவையே. எனவே, அவன் அவ்வின்ப அநுபவ நினைவுகளுக்கு திரும்பவும் அடிமையாகி, ஆன்மிகப் பயிற்சிகளை கைவிட்டுவிடாதிருக்க இறைவனிடம் தஞ்சம் அடைந்து தன்னை காத்தருள வேண்டுகிறான்.

இந்திரன், அசுரன் சூரபத்மனால் சித்திரவதைப் படுத்தப்-பட்டான். அவர் அவ்வசுரனுடன் போர் செய்தும், அவரால் அவனை தோற்கடிக்க முடியவில்லை. சூரபத்மன் இந்திரனின் தேவலோகத்-திற்குள் நுழைந்து, அதை எரித்து, இந்திரனையும் சிறைப் பிடித்து விடுகிறான். அதுபோலவே, பெண்களின் மீதான காமாக்னி ஆண்களை சித்திரவதைக்கு உள்ளாக்கி, அவர்களின் இதயங்களை எரித்து, அவர்களை அடிமைப்படுத்துகிறது. தனது சுயமுயற்சிகளால் அசுரனை

வெல்லமுடியாமல் போனதால், இந்திரன் பகவான் சிவனாரிடம் சென்று, அவரை முழுமையாகச் சரண் அடைந்து, அவர் கிருபையை வேண்டுகிறான். சிவனார் தானே கந்தப் பெருமானாகத் தோன்றி, கூரிய வெற்றி வேலால் சூரபத்மனை அழித்து, இந்திரனை காத்தருளுகிறார். அதுபோலவே, தனது சுயமுயற்சிகளால் காமத்தை வென்றிட முயன்று தோல்வியடந்த ஒருவன், கந்தப் பெருமானிடம் சென்று, முழுவதுமாக அவரை தஞ்சமடைய, அவரின் வேலெனும் கிருபை அவனுக்கு உதவி, அவனை காமாக்னியிலிருந்து விடுவிக்கிறது. அதனால், சாதகன் இவ்வாறு வேண்டுகிறான்: "ஓ கந்தப் பெருமானே! நீங்கள் தங்கள் வேலை சூரபத்மன் மீது எறிந்து, அவனை அழிப்பதன் மூலம், இந்திரனைக் காப்பாற்றினீர்கள். அதுபோல், என் மீது தாங்கள் இரக்கம் கொண்டு தங்கள் கிருபையின் மூலம், எனது இழிவான காம இயல்புகளை அழித்து, நான் தங்கள் அருள்பெற நினைக்கும் பாக்கியத்தை அருள்வீர்களாக."

உள்ளத்தை கொள்ளை கொள்ளும் பெண்களின் பார்வை, இங்கு கூர்மையானதும் அனைத்தையும் துளைத்துச் செல்லும் வேலுடன் ஒப்பிடப்படுகிறது. அவர்களின் பொல்லாத பார்வை ஆண்களின் மிகவும் வலுவான மனோதிடத்தைக்கூடக் குலைத்து விடுகிறது, அவர்களின் இதயத்தைக் கவர்ந்து, அவர்களை இங்குமங்கும் அலைக்கழித்து பரிதவிக்க வைக்கிறது; அவர்களின் தீய வழிகளுக்கு ஆண்களை இணங்க வைத்து விடும் (இது இரண்டு பாலாருக்கும் சமமாகவே பொருந்தும்; ஆண்களால் பெண்களும் இவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள்.). முருகப் பெருமானின் வேல் (கிருபை) மூலமே, வேல் போன்று துளைக்கும் பெண்களின் பார்வையின் விளைவுகளிலிருந்து தப்பித்துக் கொள்ள இயலும் என்று இச்செய்யுள் குறிப்பாகச் சொல்கிறது. மங்கையர் கொங்கையில் "சேர்வது", இறைவனின் அருள் "சேர்வதால்" தவிர்க்கப்படும் ---- ஒரு சேர்க்கை மற்றொரு சேர்க்கையை அழிக்கிறது. முருகனுடைய "போர்வேல்" சாதகனை மங்கையர் "கூர்வேல்" விழியிலிருந்து காப்பாற்றுகிறது. ஒரு 'வேல்' மற்றொரு 'வேல்'இல் இருந்து விடுதலையை பெற்றுத் தருகிறது. இச்செய்யுளில் என்ன அற்புதமான ஒப்பீடுகள்! என்ன ஒரு வியத்தகு சொல்லமைப்பு! 'தங்களது வேல், சூரபத்மனையும், கிரௌஞ்ச மலையையும் (அசுரன்) துளைத்தது (அழித்தது). தங்களது கிருபையெனும் வேல், பெண்களின் வேல் போன்று துளைக்கும் பார்வை மற்றும் அரவணைப்பிலிருந்து என்னை (மீட்டு) காத்தருளாதா?' என்று அச்சாதகன் பணிந்து வேண்டிக்கொள்ளுகிறான்.

அருணகிரிநாதர் அருளின இச்செய்யுளின் தாள அழகு மற்றும் பொருளாழத்தை விளக்க வார்த்தைகள் இல்லை.

==========

செய்யுள் - 25

==========

மெய்யேஎன வெவ்வினை வாழ்வை உகந்து
ஐயோ அடியென் அலையத் தகுமோ
கையோ அயிலோ கழலோ முழுதும்
செய்யோய் மயிலேறிய சேவகனே.

பொழிப்புரை: "திருக்கரங்கள், வேல், மற்றும் திருப்பாதங்கள் மட்டுமின்றி, உங்கள் திருமேனி முழுவதுமே செந்நிறமான முருகப் பெருமானே! மயிலின்மீது ஏறிய வீர மூர்த்தியே! கொடிய கர்மவினைகளால் ஆளப்படும் இவ்வாழ்வை உண்மையெனக்கருதி அதில் மகிழ்ந்து, உனது பக்தனான நான் (என் குறிக்கோளை மறந்து) அங்குமிங்கும் அலைவது (உன் மகிமைக்குத்) தகுமோ? இது நியாயமோ, ஓ பெருமானே?" (இது நியாயமில்லை. இதனை நீக்கி அருள்புரிவீராக!)

விளக்கவுரை

கர்மங்களுக்கு இருக்கும் மகத்தான சக்தியை இச்செய்யுளி-லிருந்து நாம் உணரலாம். அச்சாதகனோ ஆன்மீகப் பாதையில் போதிய அளவிற்கு முன்னேறியிருப்பவன்; குருவினிடமிருந்து தீக்ஷையும் உபதேசங்களும் பெற்றிருப்பவன்; மேலும் இவ்வுலகம் மற்றும் கடமைகள் அனைத்தும் பொய்யானவையென்று அறிந்து அவற்றைக் கைவிட முயற்சித்து வருபவன். எனினும், கர்மங்களின் சக்தியைப் பாருங்கள்! எவைகளையெல்லாம் அவன் நிராகரித்திட முயற்சித்துக் கொண்டிருக்கிறானோ, அவற்றை இப்பொழுது உண்மை-போல மகிழ்ச்சியுடன் ஏற்று செயல்பட வைக்கிறது!

அறியாமை சீறித் தாக்கும்பொழுது, சாதகன் அடையும் மோசமான நிலைமையை செய்யுள்கள் 23, 24 & 25 வெகு நேர்த்தியாகச் சித்தரிக்கின்றன. செய்யுள்-23ல், அறியாமை காரண-சரீரத்தை அசைத்து அவனை இறைவனின் பாதங்களைச் சிந்திக்கக்-கூட விடவில்லை; செய்யுள்-24ல், அது சூக்ஷ்ம-சரீரத்திற்கு வந்து காம-சம்ஸ்காரங்களைத் தூண்டி அவன் மனதைத் துன்புறுத்தியது; இப்பொழுது ஸ்தூல-சரீரத்திற்கு வந்து அவனை அலையச் செய்கிறது. இந்நிலைமையில் பல சாதகர்கள், ---- தமக்கு வழிகாட்டச் சரியான குரு இல்லாதவர்களும் அல்லது வழிகாட்டப்பட்டும் கவனமற்று செயல்படுபவர்களும் ----- சாதனை மார்க்கத்தை விட்டுவிட்டு,

முந்தைய சாதாரண வாழ்க்கைக்கே திரும்புகிறார்கள். ஆனால் இந்நிலையை அடைந்தும் அதற்கஞ்சாத சாதகர்கள், தங்கள் குரு கிருபையின் துணைகொண்டு, இம்மார்க்கத்தில் மேலும் தீவிரம் கொண்டு பிரயாசையுடன் உழைத்து, கர்ம பந்தத்திலிருந்து தங்களை நிரந்தரமாகவே விடுவித்துக் கொள்கிறார்கள். அதுபோன்ற ஒரு நிலையில் தான் அச்சாதகனும் இப்பொழுது இருக்கிறான். கர்ம-பந்தங்களால் (கர்மவினைகளால்) இந்நிலைக்குத் தள்ளப்பட்ட அச்சாதகன், அதிலிருந்து தன்னை முழுவதுமாக விடுவித்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை நன்கு உணர்கிறான்; எனினும், வாழ்க்கையின் தினசரி அத்தியாவசியத் தேவைகளையும், கடமைகளையும் பூர்த்தி செய்வதற்காக என்று அது அவனை (அவற்றை உண்மைபோல எண்ண வைத்து), இங்குமங்கும் அலைந்து திரியவைத்து {வீடு, அலுவலகம், கடைத்தெரு, நண்பர்கள் மற்ற சின்னச்சின்ன செயல்கள், ஆகியவற்றில் அவனை அயராது சுற்றிச்-சுற்றி வரவைத்து (**அலைதல்**)} அவற்றில் மகிழ்ச்சி கொள்ளச் செய்கிறது. இவ்வாறு அலைவதால், அவனால் தன் நேரத்தையும் ஆற்றலையும் முழுதுமாக, பரிபூரணமான வசீகரமுள்ள (**முழுதும் செய்யோய்**) முருகப் பெருமானிடம் செலுத்த முடியவில்லை. எனவே, தனது துரதிஷ்ட நிலையை நினைத்து நினைத்துப் புலம்பி இறைவனிடம் "நான் இப்படிக் கஷ்டப்பட்டுத்தான் ஆக வேண்டுமா? இது நியாயமா? நியாயமில்லைதானே. இந்த கஷ்டத்திலிருந்து என்னை விடுவித்துக் காத்தருள்வாயாக" என்று விண்ணப்பிக்கிறான்.

தியானத்தை தீவிரமாகச் செயல்படுத்துவதில், சாதகன் இவ்வுலகத்தை மறந்து அதைக்கடந்து செல்லுவதற்காக பெருமுயற்சி செய்கிறான். ஆனால், அந்த தியானத்தினால் மனதின் உள்ளே சுத்திகரிப்பும் நடப்பதால், வாசனைகள் மற்றும் சம்ஸ்காரங்கள் ஆழ்மனதிலிருந்து வெளிப்பட்டு மேலோங்கி நனவு நிலையை அடைகின்றன., பழைய அநுபவங்களின் நினைவுகளை உயிர்த்-தெழுப்பி அவைகளின் அணிவகுப்பை நடத்துவதன்மூலம், அவன் தியானத்தில் எதையெல்லாம் {உலகத்தையும் உலக வாழ்வையும்} உண்மையல்லவென்று நினைத்து மறக்கவோ/ கடக்கவோ நினைக்கிறனோ, அதற்கெல்லாம் உண்மைத்தன்மையை கற்பித்து விடுகிறது. சென்ற செய்யுளில் சாதகன் அடைந்த போராட்ட நிலை சூக்ஷம-சரீரத்தில் (மனதில்); அந்த உட்போராட்டத்தின் மற்றொரு முனைத்தாக்குதல் இப்பொழுது அவனது தினசரி வாழ்க்கையில் நிகழ்கிறது. ஆகையால், அவன் கதறி அழுது, பரிபூரணமான (**முழுதும் செய்யோய்**) முருகப் பெருமானிடம் முறையிடுகிறான்; அதாவது, அவன் ஆத்மாவில் நிலைபெற நிச்சயித்து தன் ஆத்ம தியானத்தை மேலும் தீவிரமாக்குகிறான். "இந்த நாம-ரூப உலகம் உண்மையல்ல;

அதைக் கடந்திட ஸச்சிதானந்த சொரூபமாகிய ஆத்மா அல்லது பரம்பொருள் மீது தனது மனதை நிலைநிறுத்தல் வேண்டும்" என்ற தெளிவான ஞானத்தை அவன் ஏற்கனவே பெற்றிருக்கிறான் (செய்யுள்-17). மேலும், குருவிடமிருந்து தீக்ஷையும் தியானத்தை சரியாகச் செய்திடும் வழிமுறை நுட்பத்தையும் உபதேசமாகப் பெற்றிருக்கிறான் (செய்யுள்-20). எனவே, தவிர்க்க முடியாத கர்ம வினையின் இடைவிடா செயல்பாட்டினால் உருவாகிய, நிலைத்திராத தன்மை படைத்த, இத்தடைகள் அவனை அவ்வளவு எளிதில் வழிதவறிவிடச் செய்யமுடியாது. அவைகளுக்கிருக்கும் சக்தி, சாதகனின் சாதனாசக்தியையும் குருவின் கிருபையையும் கூட வெற்றி கொள்ளும்போல் தோன்றக்கூடும். ஆனால் அப்படி முடியாது. கூடியசீக்கிரம் அவை தங்கள் இயல்பிற்கேற்ப வலிவிழந்து நீர்த்து விடும்; சாதகன் அவற்றை வெற்றி கொள்வது திண்ணம். தியானத்தில் ஏற்படும் அனைத்து தடைகளுக்குமான பரிகாரம், மேலும் தீவிரமாகவும், நீட்டித்தும் செய்யப்படும் தியானமே என்று அவனுக்குத் தெரியும். மொத்தத்தில் எப்படியிருந்தாலும், நேர்மறை எதிர்மறையை வென்றுதான் தீரும்; இறை- கிருபைதான் நிலைத்திருக்கும், கர்மங்கள் முடிவுக்கு வந்தே தீரும்.

இப்படியாக, பெருமானிடம் தன்னுடைய (பாவங்கள்/குற்றங்கள் பற்றிய) ஒப்புதல் வாக்குமூலத்தை தந்து, இறை-கிருபையைப் பெற்றுக்கொண்ட சாதகன் (செய்யுள்-24), கர்ம வாசனை மற்றும் சம்ஸ்காரங்கள் சுனாமி போன்று கடும் புயலாகி அவனைத் தாக்கியபோதிலும், அதற்கிடையிலேயே இறைவனைத் தன் ஆத்மா அல்லது பரிபூரண பரம்பொருளாகத் தியானம் செய்வதில் மேலும் வேகத்துடன் ஈடுபடுகிறான்.

முருகப் பெருமானின் கரங்களின் நிறம் செம்மை. அவை பக்தர்களுக்கு பாதுகாப்புத் தருகின்றன. அவை 'அபய கரங்கள்', அதாவது, பக்தர்களுக்கு அச்சமின்மையையும், ஆசிகளையும் வழங்குகின்றன. அவருடைய கரங்கள் முடிவில்லாமல் வரங்களைக் கொடுத்துக் கொடுத்து சிவந்தன. கந்தப் பெருமானின் முக்கிய தெய்வீக ஆயுதமான வேல், அசுரன் சூரபத்மனை துளைத்துச் சென்றதால் அதில் இரத்தம் தோய்ந்து சிவப்பாக ஆனது. தேவர்களும் பக்தர்களும் கந்தப் பெருமானின் பாதங்களைத் தொழுது- கொண்டிருப்பதால், அவை சிவப்பாகிவிட்டன.

முருகனின் கரங்கள் பாதுகாப்பைத் தருகின்றன. அவரது வேல் ஞானத்தைப் பொழிகிறது. அவரது பாதங்கள் முக்தியை அளிக்கின்றன. கரங்கள், வேல், பாதங்கள் ஆகியவைகள் மட்டுமன்றி, முருகப் பெருமானின் முழு சரீரமுமே செம்மை நிறம். செம்மை என்பது

நேர்மை, பெருமை, அழகு, ஆகியவைகளைக் குறிக்கிறது, அதாவது, பூரணத்துவம், அனைத்திலும் முழுமைபெற்ற நிலை. எனவே, சாதகன் அப்பூரண முருகப் பெருமானின் முன்வைக்கும் பிரார்த்தனை இதுவே: "ஓ பெருமானே! நீங்கள் பரிபூரணமானவர். என்னை இந்த அபூரணத்துவ உலகிலிருந்து விடுவிப்பாயாக. நானும் பூரணத்துவத்தை அடைந்திடும் சரியான வழியை, உண்மை வாழ்வைக் காட்டுவாயாக."

"மெய்யே என வெவ்வினை வாழ்வை உகந்து" - "கொடிய கர்மவினைகளால் ஆளப்படும் இவ்வாழ்வை உண்மையெனக்கருதி அதில் மகிழ்ந்து": இவ்வுலக வாழ்க்கை குறையுள்ளது, அபூரணமானது. காரண- காரிய சம்பந்த சட்டங்கள் கர்ம விதி எனப்படும்; அது ஈவு இரக்கமற்றது, தயவு தாட்சண்ணியம் பாராதது. அதுதான் ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையையும் கட்டுப்படுத்துகிறது, அடக்கியாளுகிறது. இவ்வுலகில் நடப்பது அனைத்தும் இந்த விதிக்கு உட்பட்டது. இவ்வுலகில் உள்ள பொருள்கள் மாறிக்கொண்டேயிருக்கின்றன, ஜீவராசிகள் தோன்றி மறைகின்றன, மக்கள் ஒருவருடனொருவர் சேர்வது - பிரிவது, ஆகிய அனைத்தும் இந்த கர்ம விதியின் வேலையேயாகும். இவையெல்லாம் நமக்குத் தெரிந்திருந்தாலும், மாறிக்கொண்டே இருக்கும் தன்மை படைத்த இவைகளை நாம் உண்மையென்று கருதி, அதிலிருந்து இன்பம் பெற முயன்று கொண்டுதானிருக்கிறோம். - கல்லிருந்து நார் உரிக்க முயல்வது போல. எதனால் உந்தப்பட்டு நாம் இவ்வாறு செய்கிறோம்? இதற்கும் அதேதான் பதில் - கர்ம விதியின் இடையறா செயல்பாடுகள்தான் அதற்குக் காரணம்.

கர்ம விதி என்றால் என்ன? அது எப்படி செயல்படுகிறது? இதை அறிவது சுவாரஸ்யமாக இருக்கும். இது ஒரு காரணம்-காரியம் சம்பந்தப்பட்ட விதி (சட்டம்- நியதி -நியமம்). புவி ஈர்ப்பு விதி, அணுப் பிணைப்பு விதி, போன்ற இயற்கையின் விதிகளில் இதுவும் ஒன்று. இவ்விதிகள் மனிதனால் உருவாக்கப்பட்டவையல்ல, எந்த ஒரு மதத்தையும் சார்ந்ததுமல்ல. இவைகளனைத்தும் இப்பிரபஞ்சத்தை சிருஷ்டித்த இறைவனால் பிரபஞ்ச ஆரம்பத்தில் தோற்றுவிக்கப்பட்ட இயற்கை விதிகள்; அதனால் இவை நம் அனைவருக்கும் சமமாகப் பொருந்தும், நாம் இவைகளை ஏற்றுக் கொண்டாலும்- கொள்ளாவிட்டாலும் சரி, நம்பினாலும் -நம்பாவிட்டலும் சரி, வேண்டும் - வேண்டாம் என்றாலும் சரி.

பிரபஞ்சம் (அ) அண்டம் (அ) இயற்கை என்பது எப்பொழுதும் பராமரிக்கப்படும் அனைத்துச் சக்திகளின் சமநிலை ஆகும். ஏதோ ஒன்று/ எவனோ ஒருவன் அதன் சமநிலையைத் தொந்திரவு செய்தால், உடனே அது தன் சமநிலைக்குத் திரும்ப முயலும், அவ்வாறு அது

திரும்பிட முயலும்போது, எப்படி சுவரில் அடிக்கப்பட்ட இரப்பர் பந்தானது உடனே அடித்தவரிடமே அதே வேகத்தோடு திரும்ப வருகிறதோ, அப்படியே தன்னை தொந்திரவு செய்த அதை (அவனை) உடனே திருப்பித் தாக்குகிறது. தான் தாக்கப்பட்டதால் சமநிலையை இழந்த பிரபஞ்சம், தன் சமநிலைக்கு திரும்ப முயலும்பொழுது ஏற்படும் எதிர்வினைகளே கர்ம-விதியின் செயல்பாடாகிறது.

ஒவ்வொரு தனிமனிதனும் ஒவ்வொரு அகங்கார மையம்; அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களின் ஆசைகளால் தூண்டப்பட்ட சுயநலமான எண்ணம் மற்றும் செயல்கள் மூலம் பிரபஞ்ச சமநிலையை தொந்திரவிற்கு உள்ளாக்குகிறார்கள். எனவே நம் ஒவ்வொருவரின் செயல்களும் (எண்ணங்கள் உட்பட) பிரபஞ்சத்தினிடமிருந்து சமமான எதிர்வினைகளை ஏற்படுத்துகின்றன, அந்த ஒவ்வொரு செயல்(எண்ணம்)களின் தீவிரம் மற்றும் நோக்கத்திற்குத் தகுந்தவாறு, 'எதை விதைக்கிறாயோ, அதையே அறுவடை செய்வாய்' என்ற பழமொழிபோல், நற்செயல்களிலிருந்து நற்பலன்களும் (புண்யம்), தீயதிலிருந்து தீயபலன்களும் (பாபம்) கிடைக்கிறது. இந்த கர்ம-விதி இடையறாது செயல்படுகிறது, அதற்கு நண்பனுமில்லை - விரோதியுமில்லை, அதன் செயல்பாடுகள் விஞ்ஞான முறைப்படி அமைந்துள்ளன. ஒவ்வொரு கர்மமும், அது எவ்வளவுதான் சிறியதாகயிருந்தாலும், அதற்குண்டானப் பலனை அளிக்காமல் போகாது. இரண்டுவித கர்மங்களின் பலன்களை ஒன்றுக்கொன்று சரியாக போய்விட்டது என்று சமன்படுத்திட இயலாது. இதை ஒரு உதாரணத்தின் மூலம் பார்ப்போம். ஒருவன் 10 நற்செயல்களையும், 8 தீய செயல்களையும் செய்கிறானென்றால், முந்தைய பத்திலிருந்து பிந்தைய எட்டைக் கழித்துவிட்டு, மீதியிருக்கும் இரண்டிற்கான (நற்)பலன்களை மட்டும் கொடுங்களேன்? - என்று கேட்டால், அவ்வாறு சமன்படுத்திட முடியாதென்ற பதில்தான் (கர்ம விதியின்படி) கிடைக்கும். பத்து நற்செயல்கள் மற்றும் எட்டு தீயசெயல்களுக்கான பலன்கள் தனித்தனியே அதனதன் தீவிரத்திற்கும், நோக்கத்திற்கும் ஏற்றவாறு (கர்மவிதியில்) தரப்படும். அதனால்தான் 'கர்மவிதி'யென்பது 'இரக்கமற்றது' / 'இணங்காதது' / 'தயவு தாட்சணியமற்றது' / 'பாரபட்சமற்றது' என்றெல்லாம் கூறப்படுகிறது. அதனால்தான், இந்த ஜன்மத்தில் எந்த தீயகர்மங்களையும் செய்யாத நல்ல மனிதர்கள்கூட, பெரும் கஷ்டங்களுக்கு உள்ளாவதை நாம் பார்க்கிறோம்; இதற்குக் காரணம் அவர்களின் முன்வினைப் பயன்களேயாகும். அதேபோல, இந்த ஜன்மத்தில் பல தீய செயல்களைச் செய்து வருபவர்கள்கூட வெகுசொகுசான வாழ்க்கையை வாழ்வதையும் பார்க்கிறோம், இதற்குக் காரணமும் அவர்களின் முன்வினைப் பயன்களே. உண்மையாகப் பார்த்தால், கர்ம

விதிகள் மிகவும் மர்மமானவை, கோரமானவை. ஆனால், அதே சமயத்தில், ஒருவன் செய்த நல்ல செயல்களுக்காக எதிர்காலத்தில் அவன் நற்பயன்களை அதி- நிச்சயமாக அடைவான் என்பதை அதே கர்ம-விதி உறுதிப்- படுத்துகிறது; அதேபோன்றே, இந்தவிதி தீய செயல்களுக்கும் பொருந்தும்.

நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் எதிர்விளைவை உண்டு பண்ணுகிறது. இது திண்ணம். நாம் செய்யும் 'செயல்', 'கர்மம்' எனப்படுகிறது; அதற்கான எதிர்விளைவு (அ) அதிலிருந்து வரும் பலன் (வினைப்பயன்/ 'கர்மபலன்') இதுவும் 'கர்மம்' என்றே குறிப்பிடப்படுகிறது. நாம் இப்பொழுது எடுத்திருக்கும் உடலெனும் சரீரத்திற்கு, நமது பூர்வஜன்ம கர்மங்களே காரணம்; மேலும் இப்பொழுதும் அவையே நம் வாழ்க்கையையும் நிர்வகித்து வருகின்றன. இதைத்தவிர, நாம் இப்பொழுது செய்து வரும் செயல்கள் அதற்கான விளைவுகளை உண்டாக்கி, நாம் பின்னர் எடுக்கப்போகும் ஜன்மங்களுக்குக் காரணமாகின்றன. எனவே, கர்மங்களே நமது வாழ்க்கைக்கு காரணமும், காரியமும் (இரண்டும்) ஆகின்றன; நாம் கர்ம-வித்தியால் முழுமையாக ஆளப்படுகிறோம். இது ஒரு முடிவில்லா வேலைக்கிரமமென்று தோன்றுகிறது. இதனால், இயற்கையாகவே நம்மில் பல கேள்விகள் எழுகின்றன: இதிலிருந்து வெளிவருவது எப்படி? வெளிவதற்கு ஏதாவது ஒரு வழியேனும் உள்ளதா? ஆமாம், நிச்சயமாக உள்ளது. இதற்கான தீர்வு பரிபூரணனான இறைவனைச் சேர்வதே ஆகும். நாம் கர்மவிதியின் ஆளுமையின் கீழ் வருவதற்கான காரணம், நாம் நம்மை கர்மங்களைச் செய்பவர்களாக நினைப்பதும், அச்செயல்களுக்கு உண்டான பலன்களை எதிர்பார்ப்பதுமேயாகும். ஆனால், கர்மவிதியின் ஆளுமைக்கு அப்பாற்பட்ட இறைவனை நாம் தஞ்சம் புகுந்தால், நாம் அக்கர்மவிதிகளிலிருந்து முழுவதுமாக விடுபட்டுவிடுவோம்.

இந்த நம் சரீரம் நாம் முன்ஜன்மங்களில் செய்த கர்ம-பலன்களின் விளைவு. இந்த ஜன்மத்தில் நாம் பெறும் சுக-துக்க அனுபவங்கள் அனைத்தும் நாம் முன்ஜன்மங்களில் செய்த கர்மங்களின் பயன்கள். எனவே, அந்த கர்மங்களின் வேகம் தணிந்தவுடன், நம் சுக-துக்க அனுபவங்களும் ஒருநாள் முடிவிற்கு வந்தே தீரும். ஆதலால், இந்த வாழ்க்கைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டியதில்லை. விருப்பப்படும் அனுபவங்கள் வாய்க்கும்- பொழுது அதிக சந்தோஷப்படவும் வேண்டியதில்லை; விரும்பப்படாத அனுபவங்கள் வாய்க்கும்பொழுது, மன அழுத்தத்துடன் மூழ்கிவிட்டது போல வருந்த வேண்டியதுமில்லை; ஏனெனில் இவ்விரண்டும் தாமாகவே ஒருநாள் கடந்து செல்லத்தான் போகின்றன (அவை

தற்காலிகமானவை). வாழ்க்கை தோன்றி மறைகிற தன்மையுடையது (செய்யுள்-27). அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையை நிலையான உண்மை என்றும், அதுவே எல்லாமென்றும் கருத வேண்டியதில்லை. இறைவன் ஒருவரே அறுதி உண்மை, பரிபூரணமானவர், அனைத்திலும் செம்மையானவர் (**முழுதும் செய்யோய்**). நாம் எந்நிலையில் இருந்தாலும் அவர் ஒருவரையே அடைய முயலவேண்டும். இல்லையேல், ஒரு காய்ந்த இலையானது காற்றினால் அங்கேயும், இங்கேயும் தூக்கி எறியப்படுவதுபோல, நம் வாழ்க்கையில் நடைபெறும் ஒவ்வொரு சிறிய சம்பவமும், நம்மை வெகு எளிதில் அலைக்கழித்து பந்தாடிவிடும். ஆனால், இறைவனில் சரண் அடைந்தவன், வலுவான காற்றினால் ஒரு துளிகூட அசையாதிருக்கும் மலையைப்போல், சிறிதும் பாதிக்கப்படாமல் இருக்க இயலும். எவனொருவன் இறைவனை நன்கு இருகப்பற்றிக் கொள்கிறானோ, அதாவது தன் மனதை இறைவனில் உறுதியாக நிலைநிறுத்துகிறானோ, அவனை வாழ்வில் கடந்து செல்லும் நிகழ்வுகள் ஒருபொழுதும் கலங்கடிப்பதில்லை. ஏனெனில், அவனுக்குத் தெரியும், இந்த அநுபவங்கள் வந்து போகும் தன்மை படைத்தவை, அவை தன் உள்ளிருக்கும் ஆத்ம தத்துவத்தை ஒன்றும் செய்திட இயலாதென்று. ஆனால், இவ்வுலகமே எல்லாம்; இதில் இருப்பவைகள் மட்டுமே உண்மை, இவைகளைவிட மேலான ஒரு பொருள் இல்லவேயில்லை என்று நினைக்கும் ஒரு சாதாரண மனிதனுக்கு, வாழ்க்கையில் நடக்கும் சிறிய சிறிய சம்பவங்கள்கூட அவனை எளிதாகக் கலங்கடித்து விடுகின்றன. அவனது வங்கியிலுள்ள பணம் கரைந்துவிட்டால், அவன் இடிந்துபோய் விடுகிறான். அவனுக்கு மிகவும் வேண்டிய ஒருவர் இறந்தால், அவன் வாழ்க்கையே முடிவுக்கு வந்துவிட்டதுபோல வருந்துகிறான். இவைகளெல்லாம் அதிர்ச்சியான சம்பவங்களாகி அவனது பலமற்ற மனதை உடைத்து விடுகின்றன. ஆனால், இறைவனிடம் பக்தியும் விசுவாசமும் உள்ளவனுக்கு, இவ்வுலகப் பொருள்கள் அனைத்தும் மாறும் தன்மையை உடையவை, எப்பொழுது வேண்டுமானலும் அவை தன்னை விட்டுச் சென்று விடலாம் என்று தெரியும்; அதனால் அவைகளால் அவன் ஒருபொழுதும் பாதிக்கப்படுவதில்லை. இவையெல்லாம் நிரந்தரமானவை என்று கருதுபவனே, விதியின் செயல்பாட்டின் காரணமாக அவசியமாக அவை அவனை விட்டு விலகும்பொழுது, பலமாக பாதிக்கப்படுகிறான். மனிதர்களும், பொருள்களும் ஒன்றுடன் ஒன்று கூடுவதும், பிரிந்து போவதும் கர்மவினைகளால் நடைபெறுகிறது, எப்படி நதியில் மிதக்கும் மரத்துண்டுகள் காற்றின் போக்கினால் சேர்வதும், பிரிவதும் நடைபெறுகிறதோ அப்படியே. கர்மவிதிகள் நமது மகிழ்ச்சியையோ

துக்கத்தையோ மதிப்பதில்லை. அவை அயராது செயல்படுகின்றன. எனவே, நாமும் இந்த உலகிலுள்ள அனைத்தும் நிலையற்றவை, வந்து போகும் தன்மையுடையவை என்று அறிந்து, செம்மை, பூரணம், மற்றும் நித்யமுமான இறைவனிடம் தஞ்சம் புகவேண்டும்; அவ்வாறு செய்தால், மாயையான வாழ்வில் நடைபெறும் சம்பவங்களால் ஒருபொழுதும் அலைக்கழிக்கப்பட மாட்டோம். இவற்றை எல்லாம் நன்கு அறிந்த அச்சாதகன், கர்மாவின் செயல்பாடுகளின் காரணத்தால் மோசமான நிலையை அடைந்து துன்பப்பட்டுக் கொண்டிருந்தபோதிலும். முழுதும் செம்மையான இறைவனிடம் சரண் அடைந்து, ஆத்ம தியானத்தை விடாமல் அதில் மேலும் தொடர்ந்து ஈடுபட்டுவருகிறான்.

நமது வாழ்க்கை இடைவிடாது செயல்படுகின்ற இரக்கமற்ற கர்ம விதிகளின் ஆளுமைக்குட்பட்டது. ஆனால், இக்கர்மவிதிகளின்படி கர்மபலத்தை தரும் இறைவனோ கிருபையை பூரணமாகக் கொண்டவர். நாம் இறைவனைச் சரண் புகாது இருக்கும்வரையில், இரக்கமற்ற கர்ம விதி நம்மிடம் செயல்படுகிறது. எப்பொழுது நாம் இறைவனை சரண்புகுகின்றோமோ, அப்பொழுது முதல் கர்மவிதி நம் மீது கொண்டிருந்த பிடிப்பை இழக்கிறது. எதுவரை "இவ்வுலகு உண்மையானது, கர்மங்களை நான்தான் செய்கிறேன், அக்கர்மங்களிலிருந்து பலன்களை நான் எதிர்பார்க்கிறேன்" என்றெல்லாம் நாம் கருதுகின்றோமோ, அதுவரை கர்ம விதியின் செயல்பாடுகளிலிருந்து தப்புவதென்பது இயலாது. 'காரணத்துவ பாவனை' (Idea of Agency) (அ) 'நான் செய்கிறேன், நான் அநுபவிப்பேன் என்கிற எண்ணம்' (கர்த்தா - போக்தா பாவனை - Doership and Enjoyership) தான் நம்மை கர்மவிதியின் ஆளுமையின் கீழ் கொண்டு வருகிறது; அதுவே நாம் அதற்கு அடிமையாவதற்கும் (பந்தப்படுவதற்கும்) காரணமாகிறது. ஆனால், ஒருவன் இறைவனிடம் சரண் புகுந்து, தன்னை அவரது கருவியாகக் கருதி அவரது மகிழ்ச்சிக்காகவும், அவர் விருப்பத்தில் பங்கேற்பதற்காகவும், அவற்றிலிருந்து எந்த பலன்களையும் எதிர்பார்க்காமல், அவற்றை இறை-வழிபாடாக பாவித்து, அவருக்குக் காணிக்கை செலுத்துவது போலச் செயல்களைச் செய்து வந்தால் --- இந்த கடினமான விதியின் பிடிக்கு அகப்படாமல் அவனால் தப்பிச் சென்றிட இயலும். கிருபையே வடிவான இறைவனை சரண் அடைந்து பணிவதே, இரக்கமற்ற கர்ம விதியின் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்வதற்கான ஒரே வழியாகும். கர்மவிதியானது, அதை உண்டாக்கிய இறைவனை சரணடைவதன் மூலமே வெல்லப்பட இயலும்; இறைவனின் மகாமாயையை அவருடைய கிருபையின் துணையால்தான் கடந்திடமுடியும். இதை பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் உபதேசத்திலிருந்து நன்கு அறியலாம்:

“முக்குணங்களால் ஆகிய என்னுடைய இந்த தேவ மாயையானது உண்மையில் தாண்ட முடியாதது; யார் என்னையே சரணடைகின்றார்களோ அவர்கள் மட்டுமே இந்த மாயையைத் தாண்டுகின்றார்கள்” (ஸ்ரீமத் பகவத் கீதை:7-14). கண்ணாமூச்சி ஆட்டமாடும் ஒரு குழந்தை, அவ்விளையாட்டை ஆரம்பித்து வைத்து நடத்திகொண்டிருக்கும் அதன் பாட்டியிடம் திரும்பி வரும்பொழுதுதான் அவ்விளையாட்டி- லிருந்து ஓய்வு பெறமுடிகிறது அல்லவா! அதுபோல, அச்சாதகன் இறைவனை திரும்ப அடைந்திட அருளுமாறு இவ்வாறு வேண்டுகிறான்: “ஓ இறைவனே, நீங்களோ பூரணமானவர்/ கருணாமூர்த்தி. இன்னும் எவ்வளவு காலம் இந்த இரக்கமற்ற கர்ம விதியின் பிடியில் சிக்கி நான் தொடர்ந்து உதைபட்டுக் கொண்டிருக்க வேண்டும்? எவ்வளவு காலம் நான் (பொய்யான) இவ்வுலகை உண்மையானதாகக் கருதி மகிழவேண்டும்? சரியான புரித- லெனப்படும் விவேகத்தை (பகுத்தறிவை) எனக்கு அருள்புரிவாயாக. உனது பாதங்களை நான் அன்புடன் வணங்கிட அருள்புரிவாயாக. என்னை காப்பாற்று, ஓ மாசிலாமணியே! ஓ மயில் வாகனனே! ஓ அனைத்துப் புகழுக்கும் உரியவனே! ஓ வீரனே! ஓ முழுதும் செய்யோய்! உனது அடிமையான நான் இந்த மாயையான வாழ்க்கையால் அவதிப்பட்டுக்கொண்டு இருக்கும்போழுது, உன்னை எப்படி ஆனந்தமூர்த்தி, பரிபூரணன் என்றெல்லாம் விளம்பிட முடியும்? எனது துன்ப வேதனை நிலை உனது பூரணமான நிலைக்குத் தகுமோ? தகாதுதானே! எனவே, என்னைக் காப்பாற்றுவீராக.”

==========

செய்யுள் - 26

==========

ஆதாரம் இலேன் அருளைப் பெறவே
நீதான் ஒருசற்றும் நினைந்திலையே
வேதாகம ஞான விநோத மனோ
தீதா சுரலோக சிகாமணியே.

பொழிப்புரை: "ஓ முருகப் பெருமானே! தேவலோகச் சிகாமணியே! வேத ஆகமங்களின் ஞானத்தை அருள்வதில் விநோதரே! மனதிற்கு அப்பாற்பட்டவரே (மனதினால் அடைய-முடியாதவரே)! ஓ பெருமானே, எனக்கு உங்களை விட்டால் வேறு எந்த ஆதரவும் இல்லை! (அப்படி இருந்தும்) நான் உங்கள் கிருபையைப்பெற்று உய்யுமாறு நீங்கள் ஒரு சிறிதளவேனும் சிந்திக்கவில்லையே! (என்னே என் பரிதாப நிலை!)"

விளக்கவுரை

குருவிடமிருந்து பெற்ற தீக்ஷை, உபதேசத்தால் (செய்யுள்-20), சாதகன், இறைவனின் தாள்களை வணங்கும்பொழுதே, அவரை ஸச்சிதானந்த சொரூபமாகவே உணரும் அற்புதமான அநுபவத்தையும் அடைந்தான் (செய்யுள்-22). ஆனால், அதன் பிறகு அறியாமையின் தாக்குதலுக்கு ஆளாகி, உள்ளும் புறமும் அவதியுற்று வந்தான் (செய்யுள்கள்- 23, 24 & 25). இருந்தும் இறைவன்மேல் நம்பிக்கை இழக்காமல், தன் சாதனையில் தொடர்ந்து (தடுமாற்றத்துடன்) ஈடுபட்டுவந்தான். இப்படியாக அவன் சிறிதுகாலம் அவதியுற்றுக் கொண்டிருந்திருக்க வேண்டும் ---- பல மாதங்களோ, ஏன் ஓரிரண்டு வருடங்கள்கூட இருக்கலாம்; ஏனென்றால், காரண சரீரத்தில் மண்டிக்கிடக்கும் மூட்டை மூட்டையான சம்ஸ்காரங்கள் மற்றும் வாசனைகள் வெளிக்கிளம்பி வரும்போது அவற்றுடன் சண்டையிட்டு சமாளிப்பதென்பது ஓரிரு நாள் அல்லது மாதங்களில் முடிந்துபோய் விடக்கூடிய காரியமல்ல. உள்ளிருந்து அறியாமை தாக்கியதால் அவன் தியானம் செய்யமுடியவில்லை; மனதில் காம-விகாரங்கள் எழும்பிவந்து துன்புறுத்தின; அவனது வெளி வாழ்க்கையிலும், தனது குடும்பத்திற்கு ஏராளமான கடமைகளைச் செய்வதற்காக இங்குமங்கும் ஓடுவதிலேயே அவனுடைய பெருமளவு நேரம்

விரயமாகியது. இப்படியாக அவனுடைய சாதனை தடுமாறியது. ஆக உள்ளும் புறமும், அவன் பிரச்சினைகளை சந்திக்க வேண்டி-யிருந்தது. ஆனால், அவன் மிக்க தைரியத்துடன் சமாளித்துக் கொண்டு, எப்படியோ தன் சாதனையையும் செய்துகொண்டு, இறைவனிடம் சரணடைந்து, உதவி செய்யுமாறு பிரார்த்தனையும் செய்துவந்தான். இருந்தும் அவரிடமிருந்து அவனுக்கு உதவி கிடைப்பதாகத் தெரியவில்லை. எனவே, அவன் 'ஆதார-மில்லாதவனாக' ('ஆதரவற்றவனாக') ஆகிவிட்டான். இது அவனது பொறுமையையும் மனோபலத்தையும் சோதிக்கும் நிலை. ஆனால், இறைவன் கைவிடமாட்டார் என்று அவனுக்குப் பூரண நம்பிக்கை இருந்தது. ஆதலால், மிகவும் மன்றாடி அவரது கிருபையை உடனே தந்தருளுமாறு முறையிடுகிறான்: "ஓ பெருமானே, நான் கஷ்டப்பட்டுக் கொண்டே இருக்கின்றேன், உங்கள் உதவி வேண்டி மன்றாடியும் வருகின்றேன். உங்களைத் தவிர எனக்கு வேறு எந்த ஆதரவும் இல்லை. ஆனால் நீங்களோ தங்கள் கிருபையை தருவது பற்றி ஒரு நொடிப்பொழுதுகூட நினைக்காமல் இருக்கிறீர்கள். இவ்வாறு இருப்பதை எவ்வளவு காலம் (என்னால்) பொறுத்துக் கொள்ள இயலும்?" இப்படியாக அவரது கிருபையைப் பெறுவதற்குச் செய்த பிரார்த்தனைக்கு ஆதாரம் கொடுக்க அவரைப் புகழத் தொடங்குகிறான்: "ஓ முருகப் பெருமானே! தேவலோக சிகாமணியே! வேத ஆகமங்களின் ஞானத்தை அருள்வதில் விநோதரே! தாங்கள் "மனோதீதர்!" --- மனத்தால் அடைய, நினைக்க முடியாதவர். அதனால், தாங்கள் எனக்கு தங்கள் கிருபையைத் தந்திட நினைக்காமல் இருப்பதற்குக் காரணம், நான் தங்களை நினைக்கவில்லை என்று தாங்கள் சொல்லமுடியாது!".

(பிராரப்த) கர்மமும் இறைகிருபையும் ஆகிய இரண்டும் ஒரே சமயத்தில் எப்படி வேலை செய்கின்றன என்பதை அறிவது ஒரு சுவாரசியமான விஷயம். கர்மங்கள் உண்மையில் அதிக பலம் கொண்டவை, இறை-கிருபையால் ஒரு சில சமயங்களில் அதன் முன்னால் நிற்கக்கூட முடிவதில்லை என்று தோன்றக்கூடும். ஆனால், இதிலுள்ள ஒரு பரம இரகசியத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டும். கர்மங்களின் சக்தி, தெய்வ கிருபையைக்கூடத் *தற்காலிகமாக* எதிர்த்து செயல்படக்கூடும்; ஆனால் அவைகளுக்கு ஒரு தொடக்கமும் உண்டு, முடிவும் உண்டு. எனவே, கர்மங்களை இயக்கிடும் சக்தி பலவீனமடைந்து என்றாவது ஒருநாள் முற்றிலும் இல்லாமற்போகும்; அப்பொழுது, கர்மங்கள் தானே முடிவடைந்து விடுகின்றன. ஆனால், இறை-கிருபையோ என்றும் வற்றாதது, மெதுவாகவும் சீராகவும் நாள்தோறும் வளர்ந்து, சாதகன் சமாதிநிலை எனப்படும் இறை-உணர்வை அடையும்வரை அது அந்தமடையாமல்

இருக்கின்றது. எனவே, சாதகர்கள் சாதனை செய்யும்பொழுது பொறுமையுடனிருக்க வேண்டியது மிகவும் அவசியம். கர்மங்கள் உடனேயோ (அ) சிறிது காலத்துக்கு பிறகோ முடிவிற்கு வந்தே தீருமென்பது திண்ணம்; இறை-கிருபை கட்டாயம் மேலோங்கி நிரந்தரமாக இருக்கும் என்பது அதைவிடத் திண்ணம்.

இவ்வாறாக, கர்மங்களின் பலமான தாக்குதல்களை இப்பொழுது அநுபவித்து வரும் சாதகனுக்கு, குருவின் தீக்ஷை, உபதேசம் மற்றும் இறை கிருபையின் சக்தி இறுதியில் தன்னைக் காப்பாற்றுமென்று அவனுக்கு நன்கு தெரியும்.

"வேதாகம ஞான விநோத" : வேத, ஆகமங்களின் இருப்பிடம் ஞானபண்டிதன் முருகன். அவனே ஞானம், ஞானஸ்வரூபன். அவன் ஞானத்தை வாரி வழங்குகிறான். அதுவே அவன் தொழில். ஆனால், அதற்காக அவன் பாடசாலைகள் அமைத்து, ஞானம் போதிப்பதில்லை. அவன் ஞானம் வழங்கும் விதமே விசித்திரம், வினோதம் -- ஔவைப் பிராட்டிக்கு வழங்கியது ஒருவிதம், 'சிவனார் மனம்குளிர உபதேசம்' பகர்ந்தது ஒருவிதம், அகஸ்தியமுனிக்கு உபதேசம் செய்தது ஒருவிதம், அருணகிரி-நாதருக்கு அருளியது ஒருவிதம், பாம்பன் சுவாமிகள், வள்ளிமலை சுவாமிகள், கிருபானந்தவாரியார் சுவாமிகள், குருஜி ராகவன் மற்றும் பலருக்கு அருளியது வெவ்வேறு விதம். நம்மைப்போன்ற பாமரர்களுக்கு அருளுவது ஒருவிதம். இப்படியாக அவன் செய்யும் விநோதத்திற்கு அளவே இல்லை.

"மனோதீதா" : அப்படிப்பட்ட ஞானஸ்வரூப முருகனை நினைத்த மாத்திரத்தில் ஸச்சிதானந்தத்தில் மூழ்கிய சாதகன் (செய்யுள்-22), அறியாமையின் தாக்குதலால் ஆரம்பத்தில் அவன் திருவடிகளை நினைக்க முடியாமல் போய்விட்டது (செய்யுள்-23). மேலும், அவன் இப்பொழுது இருக்கும் நிலை அடியோடு மோசமானது. எனவே, அவன் இறைவனைச் சரணடைந்து, அவரிடம் முறையிடுவதைவிட வேறு வழியில்லாமல் இவ்வாறு வேண்டுகிறான்: "ஓ பெருமானே! நான் உங்களைத்தவிர வேறு எவ்வித ஆதாரமும் இல்லாமல் தவிக்கிறேன். இருந்தும், நான் உங்கள் அருளைப்பெற நீங்கள் ஒரு சிறிதும் நினைக்கவில்லையே. பின் எனக்கு கதி ஏது? நான் உங்களை நினைக்காததால், நீங்கள் என்னை நினைக்கவில்லை என்று சொல்லாதீர், சொல்லக்கூடாது. ஏனெனில், நீங்கள் "மனோதீதர்", மனதால் எட்டப்பட/நினைக்க முடியாதவர். ஆதலால், என்னை நினைத்து அருளுவது உங்கள் பொறுப்பு. நீங்கள் ஒரு வினாடி நேரம் என்னைப் பற்றி

நினைத்தாலே, நான் தங்கள் கிருபையையும் இறை-அநுபவத்தையும் ஒருசேரப் பெற்றிடப் போதுமானது'.

சாதகன் இறைவனிடம் சரணடைந்து தன் சாதனையைச் செய்துவந்த போதிலும், கர்மங்களின் சக்தியினால் அவன் தன்னை "ஆதாரமற்றவன்" அதாவது ஆதரவற்றவன் என நினைக்கிறான். மேலும், அவன் சாதனையில் வெகுவாக முன்னேறியிருந்த போதிலும், அதில் முற்றிலும் நிலை பெறவில்லை. எனவே, அவனுக்கு இது ஒரு நெருக்கடியான நிலைமை, இதுவரை பெற்றிராத அளவிற்கு இறைவனின் ஆதரவு/அருள் அவனுக்கு கட்டாயம் தேவைப்படும் தருணமிது. இப்பொழுது, மேலிருந்து இறைவன் கைகொடுத்துத் தன்னை தூக்கிவிட்டுத்தான் ஆக வேண்டுமென்ற அவசியத்தை உணர்கிறான். எனவே, இறைவனிடம் கதறி "நீதான் ஒரு சற்றும் நினைந்திலையே" என்று முறையிடுகிறான். சாதகனின் தியான முன்னேற்றத்தில் இது ஒரு இடைப்பட்ட நிலை -- 'ஜீவ உணர்வு தன்னைமீறி, சர்வ-வியாபக (இறைவன்) உணர்வை அடைந்திட முயற்சிக்கும் நிலை'க்கு முன்னேறிட ஆயத்தம் செய்யும் தருணம் இது. சாதகன் தன்னுணர்வை மேன்மேலும் சரண் செய்து, இறைவனை முழுவதுமாகச் சார்ந்திட முயலும் நிலை இது, அதாவது ஜீவனாகிய தன்னை பரமாத்மாவுடன் இணைத்துக் கொள்வதற்காக, மேலும் ஆழமாக தியானம் செய்ய சாதகன் முற்படும் நிலை.

இந்த நிலையில் சில இரகசியங்கள் உள. (1) சாதகனிருக்கும் 'ஆதாரமற்ற' இந்த நிலையும் இறைவனின் கிருபையின் செயலே, அதாவது சாதகனை 'முற்றிலும் ஆதாரமற்ற'வனாக்கி, அவன் சரணாகதியைப் பூரணமாக்கி, பின்னர் அருளைப் பூரணமாகப் பொழிவதற்காகவே இந்த 'ஆதாரமற்ற' நிலை. இதற்கிடையில் கர்மங்களும் தங்கள் வேலையைச் செய்துவிட்டு, ஓய்ந்துவிடும். (2) "நீதான் ஒரு சற்றும் நினைந்திலையே" என்று சாதகன் சொல்கிறான். ஆனால், அறியாமையின் தாக்குதலை அவனால் இவ்வளவுதூரம் சமாளிக்க முடிவது இறைவனின் கிருபையினால்தான் என்பது அவனுக்குத் தெரியாது. இல்லையேல், கர்மங்களின் வெள்ளத்தின் வேகம் என்றைக்கோ அவனை சாதனையை விட்டுவிட்டு ஓடச்செய்திருக்கும் (செய்யுள்-19). "எல்லாம் இறைவனருள்" என்ற இரகசியத்தை அவன் பின்னர் உணர்கிறான்.

==========

செய்யுள் - 27

==========

மின்னேநிகர் வாழ்வை விரும்பிய யான்
என்னே விதியின் பயன் இங்கிதுவோ
பொன்னே மணியே பொருளே அருளே
மன்னே மயிலேறிய வானவனே.

பொழிப்புரை: "ஓ பெருமானே! தாங்கள் பொன்போல அருமை வாய்ந்தவர், மாணிக்கம் போன்று பிரகாசிப்பவர், மெய்ப்பொருள் தத்துவம், (முக்தியளிக்கும்) அருளே வடிவானவர், சர்வ-லோக அரசர், மயில் வாகனனான தேவாதி தேவன். (தாங்கள் இவ்வாறாக இருந்தும்) மின்னலைப் போன்று தோன்றி மறைந்திடும் இந்த உலக வாழ்க்கையை நான் விரும்பியது, என்ன ஆச்சரியம்! இது எனது தலை விதியின் பயன்தானோ!"

விளக்கவுரை

"மின்னல் போன்று தோன்றி மறையும் இவ்வாழ்க்கையை நான் விரும்பியதேன்? இதற்குக் காரணம் எனது விதியின் பயன்தானோ?" - என்றெல்லாம் சாதகன் வியப்புறுகிறான். நமது தற்போதைய வாழ்க்கை, நாம் விரும்பி, கேட்டுப் பெற்ற ஒன்று. இந்த வாழ்க்கை நமது 'விதியின் பயன்'. கர்மாவின் தாக்குதல்கள் ஏற்படுத்திய கொடூரங்களை பலகாலமாக அநுபவித்த காரணத்தால் (செய்யுள்கள் - 23 லிருந்து 26 வரை), அச்சாதகன் விதிக்கு (அ) கடந்தகால கர்மங்களுக்கு ('வெவ்வினை' - செய்யுள் 25) இருக்கும் பேராற்றலை - அபரிமிதமான சக்தியை -- மிகவும் நன்றாக உணர்ந்து கொள்கிறான். பழைய ஜன்மங்களில், அவிவேகத்தினால் பொருள்களின் உண்மைத் தன்மையைப்பற்றிய ஒரு சரியான புரிதலை கொண்டிராததால், அவன் புலன்-விஷய நுகர்ச்சி, இன்ப நாட்டம், பணம்-சொத்து ஆகியவற்றின் மீதான தனது தீராத தாகத்தைத் தணிக்கும் முயற்சியில் மாயைப் பொருள்களான கானல்நீர் பின்னால் ஓடித் திரிந்தான். அந்த ஆசைகளும், வீண் முயற்சிகளும் சேர்ந்து, அவனுடைய அறியாமையை (சம்ஸ்காரங்- களின் மூட்டையை) பலப்படுத்தி, அதன் கர்ம-வினைப்பயனாக அவனை பலவிதங்களிலும் தொல்லைக்கு உள்ளாக்கி வந்தது. இவ்வளவு நாள் அவைகளை

அனுபவித்தபின், அவன் தனது கஷ்டங்களுக்கான காரணங்களை இப்பொழுது நன்கு உணர்ந்து கொண்டுவிட்டான்; அதேசமயத்தில், அவனைத் துன்புறுத்தி வந்த சம்ஸ்காரங்களின் (வினைப்பயன்களின்) காலமும் அதன் முடிவடையும் தறுவாய்க்கு தற்போது வந்திருந்தது. எப்படி தடித்த, பரந்த, கரிய முகில்கள் சூரியனை மறைத்திடும்பொழுது இருள் சூழ்ந்து, இரவு போன்று தோன்றச்செய்து, பின்னர் அவை விலகத் துவங்கும்பொழுது வெளிச்சம் சிறிது சிறிதாகப் பரவத் துவங்கு- கின்றதோ, அப்படியே பல காலமாக அச்சாதகனை துன்புறுத்தி வந்த பழைய கர்மங்கள் முடியப்போகும் தறுவாய்க்கு வந்தபோது, அவனுடைய தியானத்தில் பலமும் புகழும் வாய்ந்தப்பெருமானுடைய காட்சியும் இலேசாகத் தெரியத் துவங்குகிறது. கூடிய விரைவில் ஞானசூரியனான பெருமானும், முழுமகிமையுடன் (தியானத்தில்) பிரகாசிப்பார். எனவே, அவன் வியந்து கூறுகிறான்: "ஓ பெருமானே, எனது விதி (அ) கர்மவினையின் ஆற்றல் எவ்வளவு மர்மமாக உள்ளது பாருங்களேன்; அது என்னை மின்னல் போன்ற இந்த நிலையற்ற வாழ்க்கையை விரும்பி தேர்ந்தெடுக்க வைத்து, இவ்வுலக விஷயங்களில் விருப்பம் இல்லாமலிருந்தும்கூட ஆர்வம் கொள்ளச் செய்து விட்டது! என்றாலும், தங்கள் கிருபையால் அவை இப்பொழுது முடிவடையும் தருணத்திற்கு வந்து விட்டன. வாழ்க தங்கள் கிருபையும் மகிமையும் ---- பொன்னே, மணியே, பொருளே, அருளே!"

"மின்னே நிகர் வாழ்வு" - வாழ்வு மின்னல் போல நிலையற்றது. முந்தைய ஜன்மங்களில், அச்சாதகன் விவேகம் எனப்படும் உலகைப் பற்றிய சரிதான புரிதல் இல்லாமலிருந்தான், இப்பொழுது அவனால் சரியான கோணத்தில் பார்க்க முடிகிறது - இந்த வாழ்க்கை நிலை இல்லாதது. இங்கிருக்கும் அனைத்துமே தோன்றி மறையும் தன்மையைக் கொண்டவை. மாறுவதென்பது இவ்வுலகத்தின் நியதி. மின்னல், தோன்றிய நொடிப்பொழுதிலேயே மறைவதைப்போல, வாழ்வும் வந்து போகிறது. எப்படி உணரப்படுவதற்கு முன்னரேயே, மின்னல் மறைந்து விடுகிறதோ; அவ்வாறே, இந்த (மனித) வாழ்க்கையும் நிச்சயமற்றது. இப்பொழுது இருக்கிறது போல் இருந்து, இப்பொழுதே மறைகிறது. இக் குறுகிய, நிச்சயமற்ற வாழ்க்கையும், ஒவ்வொரு தருணத்திலும் நோய், துன்பம், பதட்டம் ஆகியவைகளால் நிரம்பியதாகத்தான் இருக்கிறது. நம் கண் முன்னரே பொருள்களும் மனிதர்களும் அழிவதைத் தினமும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம், இருந்தாலும் அவைகளிலிருந்து இன்பம் பெறலாம் என்று ஆசை (வீண் நம்பிக்கையைக்) கொண்டு, அவைகளை விட்டுவிடாமல் வெகு கெட்டியாகப் பிடித்துக் கொண்டுதான் இருக்கிறோம். நமது உடல் கூட வியாதி, தேய்வு, மரணம்

ஆகியவைகளுக்கு உட்பட்டது; இவ்வுலகப் பொருள்களும் விரைவில் அழியக்கூடியது; ஒன்று நாமே இறந்து போய்விடலாம், அல்லது அவைகள் சொல்லிக்கொள்ளாமலேயே எந்நேரத்தில் வேண்டு-மானாலும் நம்மைவிட்டுக் கிளம்பி விடலாம். இவ்வாறெல்லாம் தோன்றி மறையும் தன்மை படைத்தது இவ்வாழ்க்கை என உணராது, சாதகன் தன் முந்தைய பல ஜன்மங்களாக மயக்கத்தில் ஆழ்ந்து, அவைகளின் பின்னர் வெகுவாக ஒடி, கெட்ட கர்மங்கள் பலவற்றைச் செய்தான் (தன் கணக்கில் பாவங்களை உருவாக்கினான்). ஆனால், இப்பொழுது சரியான புரிதல் (செய்யுள் -17), மற்றும் குருவின் உபதேசம் (செய்யுள் -20), ஆகியவை கிடைத்தபின், தானே முன்னர் செய்த கர்மங்கள் எவ்வாறெல்லாம் தன்னை துன்பத்தில் மூழ்கச் செய்கிறது என்பதை சாதகன் நன்கு அறிந்து கொள்கிறான் (செய்யுள்கள் -23 முதல் 26 வரை). இவ்வாறாகத் தான் படும் துன்பங்களுக்குத் தானே காரணமென்று சாதகன் உணர்ந்து, அதனுடன் சமரசம் செய்து, அதை தனது விதியென்று பெரிய மனம் கொண்டு ஏற்றும் கொள்கிறான்; மேலும், இந்த விதியின் பிடியிலிருந்து விலகிச் செல்வதற்கான ஒரே வழி அருள்மயமான, கருணைக் கடலான முருகப் பெருமானைச் சரண் அடைவதுதான் என்றும் அவன் அறிகிறான்.

எனவே, நம் பிரச்சனைகளுக்கு நாமே காரணம்; பிறரைப் பழி சொல்ல வேண்டியதில்லை என்பதைச் சாதகன் புரிந்துகொள்கிறான். தானிருக்கும் கொடூரமான சூழ்நிலையிலிருந்து தன்னை விடுவித்து அருள்புரியுமாறு இறைவனிடம் கெஞ்சுகிறான். இவ்வாறு அவன் மறுபடியும் மறுபடியும் (முன் செய்யுள்களில்) பிரார்த்தனை செய்துகொண்டே இருந்திருக்கிறான். கடைசியாக, இச்செய்யுளில், "பொன்னே, மணியே, பொருளே, அருளே" என்று இறைவனைப் புகழ்கிறான். இவையெல்லாம் வெகுகாலம் நீடித்திருக்கும் இயல்பு கொண்டவை. இவை மின்னல் போன்று தோன்றிமறையும் இயல்பு கொண்ட மனித வாழ்க்கைக்கு நேர்எதிரானது என்பது குறிப்பிடத்-தக்கது. இது, அவனது கதியற்ற நிலையையும் சரணாகதியையும் வெளிப்படுத்தும் மிக சக்தி வாய்ந்த இறைவனின் அருளை ஈர்க்கும் பிரார்த்தனை.

சாதகனின் துன்பகரமான, மிக மோசமான நிலையை 23 லிருந்து 27 வரையான செய்யுள்கள் விவரிக்கின்றன. பழைய கர்மங்களின் சுவடுகள் (சம்ஸ்காரங்கள்) ஆழமாக வேரூன்றியிருந்த அறியாமையிலிருந்து கிளம்பி, நனவு நிலைக்கு மேலெழும்பி வந்து, தன் முழுஆற்றலை வெளிப்படுத்தும்பொழுது, அது எந்த அளவிற்கு ஒருவனை தொந்திரவு செய்ய வல்லது என்பதை அவன் நன்கு

உணர்கிறான். அவன் எந்த அளவிற்கு கதியற்றவனாகிவிட்டான் என்பது, சென்ற நான்கு செய்யுள்களில் (23-27), மூன்றில் இறைஅருளை அவன் வேண்டியிருப்பதிலிருந்து புலப்படுகின்றது. அதிலும் முக்கியமாக கந்தர் அநுபூதி நூலிலேயே இந்த இரு செய்யுள்களில் (26 & 27) மட்டுமே, தொடர்ச்சியாக (ஒன்றன்பின் ஒன்றாக வரும் செய்யுள்களில்) சாதகன் இறைவனிடம் 'அருள்' வேண்டி மன்றாடுகிறான். அவனுடைய உதவியற்ற விரக்தி நிலையும், அவன் இறைவனின் கிருபையை அடையத் துடிக்கும் நிலையம் இதிலிருந்து தெரிய வருகிறது. மேலும், இது, அவனது வைராக்கியம் முதிர்ச்சியடையத் தொடங்குகிறது என்பதையும் தெரிவிக்கிறது. (அவனுடைய வைராக்கியம் முதிர்ந்து பக்குவம் அடைந்ததை செய்யுள்- 33ல் காணலாம்.)

இறைவன், தன் கிருபையை அருளுவதற்கு ஏன் இத்தனை கால தாமதம் செய்ய வேண்டுமென்று நாம் வியக்கலாம். இறைவன் அவ்வாறு செய்வதற்குச் சில காரணங்கள் உள்ளன:

1. அறியாமையிலிருந்து வெளிப்பட்டுச் செயல்பட்டுக்-கொண்டிருக்கும் கர்ம-விளைவுகள் அனைத்தும் சோர்வடைந்து கரைந்துவிட வேண்டுமென்று அவர் நினைப்பது.

2. சாதகனின் சரணாகதி முழுமையானதாக ஆகவேண்டும், அதற்காக அவனை அநாதையாக்கி, அவன் அனுபவிக்கும் துன்பங்களின் கடைசிக் கட்டத்தை அடையச் செய்ய வேண்டும். கடினமாக உழைத்து சம்பாதித்த சொத்து மட்டுமே மதிக்கப்படும். இறை-கிருபையும் அது போன்ற ஒன்றுதான். எனவே, இறைவன் தன் கிருபையை அருளுவதற்கு முன்னர், செயல்படத் தொடங்கிவிட்ட கர்மங்கள் அனைத்தும் முற்றுப் பெறட்டும் என்று காத்திருக்கிறார். இறைவன் தனக்குக் கட்டாயம் தன் கிருபையை அருளுவாரென்ற நம்பிக்கையுடன் சாதகனும், எல்லாப் பிரச்சினைகளுக்கும் இடையில், அவனது தடுமாறும் தியானப் பயிற்சியை விடாமல் தொடர்கிறான்.

இச்செய்யுளில், அவசியம் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்று உள்ளது. சாதகன் அருளை வழங்குமாறு இறைவனிடம் பிரார்த்தனை செய்யவில்லை; பதிலாக, இறைவனை 'அருளே' என்று அழைக்கிறான் --- '**பொன்னே**, **மணியே**, **பொருளே**, **அருளே**, **மன்னே**, **மயிலேறிய வானவனே**' என்று அழைக்கிறான். இறைவனே 'அருள்'. அவர் அருள் நிறைந்தவர்; அருளே உருவானவர்; *கருணாகரன்*. அவ்வாறாகவே அவர் அழைக்கப்பாடும்பொழுது, அவர் எப்படி மேலும் தாமதம் செய்திட முடியும்? அந்தோ! என்ன விந்தை!. கருணைக்கடலான முருகனே தன் கிருபையை ஒரு இடைவிடாத மழை போல்

சாதகன் மீது பொழியப் போவதை, அடுத்த செய்யுளில் நாம் பார்க்கத்தான் போகிறோம்!

இறைவனின் உண்மை சொரூபத்தைப் பற்றிய போதிய ஞானம் இல்லாமையினால், மாறிக்கொண்டேயிருக்கும் இவ்வுலகை நாம் உண்மையென்று எண்ணி, அதன் பின்னே செல்கிறோம். இறைவனின் உண்மை சொரூபம் என்ன? அது, "பொன்னே மணியே பொருளே அருளே மன்னே மயிலேறிய வானவனே." அவர் மட்டுமே மதிக்கத்தக்க (என்றுமே அழியாத) பொருள்; இவ்வுலகப் பொருள்கள் எல்லாம் அழியும் தன்மையைக் கொண்டவை. மிக அரியதும், உள்ளார்ந்த மதிப்பு கொண்டதும், சுயமாகப் பிரகாசிப்பதும், நீடித்து இருக்கும் தன்மைகளைக் கொண்டதுமான பொன்னைப் (தங்கத்தைப்) போன்றவர் அவர். நவரத்தினத்தில் ஒன்றான மாணிக்கம் போன்று சுயமாக ஒளிரும் தன்மை படைத்தவர். அவரே அனைத்தின் ஆதாரமான அந்தப் பரம்பொருள், உண்மை தத்துவம். இதற்கெல்லாம் மேலே, அவர் கருணையின் மொத்த உருவம், அன்பின் வடிவம், கிருபையின் ஸ்தூல வடிவம், கருணைக்கடல், கருணாமூர்த்தி, கருணாகரன், அன்பழகன். பிரபஞ்சப் பொருள்களோ அழியும் தன்மை படைத்தவை, ஆனால் அவரோ இப்பிரபஞ்சத்தின் நிரந்தர மன்னன் (மன்னர்களுக்கெல்லாம் மன்னன்). உண்மை பக்தர்களுக்கு உடனுக்குடனே ஆசிகளை வழங்கி அருளுவதற்காக, விரைந்து பறந்து செல்லும் மயிலைத் தன் வாகனமாகக் கொண்டவர்.

பல ஜன்மங்களாகவே மிகுந்த ஆவலுடன் உலகப் பொருள்களின் பின்னால் தானாகவே விரும்பிச் சென்று, அவைகளை ஆண்டு அநுபவித்து வாழ்ந்த சாதகன், இப்பொழுது 'எனக்கு அவைகள் தேவையில்லை; எனக்கு இறைவன் மட்டுமே வேண்டும்' என்று சொல்வதால் அவைகள் அவனை விட்டு விலகிவிடுமா என்ன? விலகவே விலகாது. நாம் முன்னர் வேண்டுமென்று விரும்பி, அவைகளின் பின்னால் சென்று அவைகளுக்கு அடிமையாகி-விட்டதனால், இப்பொழுது அவைகளை வேண்டாம் என்று நாம் ஒதுக்க நினைத்தாலும், அவைகள் நம் மீது கொண்டுள்ள பிடிப்பை சிறிதுகூட தளர்த்துவதில்லை. தாங்கள் உலகப் பொருள்களை ஒதுக்கிவிட்டு உண்மையான அன்புகொண்டு இறைவனை அடையக் கடும் முயற்சி செய்து வந்தபோதிலும், உலகப் பொருள்களின் தாக்கமும், துன்பமும். பாதிப்புகளும் தங்களைத் தொடர்வது ஏன் என்று புரிந்துகொள்ள முடியாமல் பெரும்பாலான பக்தர்களும், சாதகர்களும் வியக்கின்றனர். இறைவனிடம் உண்மையாகவே தங்களை அர்ப்பணித்துக்கொண்டு, அவரை நேர்மையுடன் தேடி (நாடி) வரும் பக்தர்கள், தங்களுக்குள்ளே உலகின் மேல் ஒரு புரிந்து-

கொள்ள முடியாத வேட்கை, நுட்பமான ஆசைகளின் வடிவத்தில், இருக்கும் ஒரு விசித்திரமான நிலையை உணர்கிறார்கள். ஆனால், அவர்களால் அதன் காரணத்தை அறிய முடிவதில்லை. இந்த புதிருக்கான விடையை அருணகிரியார் (இலைமறை காய்போல்) இங்கு குறிப்பிடுகிறார். முன்னர் அவர்கள் மிகவும் விரும்பி நேசித்து அடைந்து ஆண்டு அநுபவிக்க விரும்பிய பொருள்கள், இப்பொழுது அவர்கள் அவைகளை விரும்பவில்லை என்றாலும், அவர்கள் முன்னே தோன்றி அவர்களை ஆட்கொள்ள முயல்கின்றன. இதுவே (இதை அறியாததே) அந்த பக்தர்களின் தற்போதைய துன்பத்திற்குக் காரணம். ஆனால், இதை குறிப்பிடும் அருணகிரியார், அதனோடு ஒரு பெரும் இரகசியத்தையும் வெளிப்படுத்த விரும்புகிறார். 'முன்னர் அவன் அவைகளை தீவிரமாக விரும்பியதால், இப்பொழுது அப்பொருள்கள் அவனிடம் வந்து சேர்கின்றன; அதேபோல், இப்பொழுது அவன் அவைகளை விரும்பாததால், அவைகளைக் கொண்டுவந்த சக்திகளின் வலிவு தீர்ந்தவுடன், அவைகள் தாமாகவே அவனை விட்டு விலகிப் போய்விடும்' என்பதுதான் அந்த இரகசியம். எனவே, தற்போதைய சிரமங்கள், அவன் இறைவனைத் தேடும் முயற்சியில் தடை செய்ய விடக்கூடாது. முன்னர் நாம் விரும்பிய பொருள்கள் இப்பொழுது தானே நம்மிடம் வருவதுபோல, இப்பொழுது நாம் மனப்பூர்வமாக அடைந்திட முயற்சிக்கும் இறைவனும், ஒருநாள் நாம் அவரை அடையும் பாக்கியத்தை அருளத்தான் செய்வார். நாம் இறைவனை அடைந்திடும் ஏக்கத்துடன் கடும்முயற்சி செய்து வந்தால், *கடவுள் நமக்கு நிச்சயம் ஒருநாள் அருளுவார் என்ற ஒரு உத்தரவாதம் இதில் புதைந்திருக்கிறது.* இது திண்ணம்; இதுவே அந்த இரகசியம். நாம் உண்மையிலேயே இறைவனை விரும்பும்பொழுது-கூட, இந்த நிலையற்ற உலகத்தின் தொடர்ந்த பாதிப்புகள் நம்மை துன்புறுத்தக்கூடும்; ஆனால், அவை நம்மை அதையரியப் படுத்தக்கூடாது. மாறுதலாக, அதே சமயம், இந்த உத்திரவாதத்தை நினைவில் கொண்டு, (அதாவது இறைவனை அடைவது நிறைவேறுமென்பதை அந்த நியதி / விதி (சட்டம்) உறுதி அளிக்கின்றதை நினைவில் கொண்டு) நாம் இறைவனை அடைந்திடும் முயற்சியில் மேலும் தீவிரமாக ஈடுபட வேண்டும். தைரியமிழந்து, மனம் தளர்ந்து நிற்கும் சாதகர்களுக்கு எத்தகையதொரு ஊக்கம் இங்கு தரப்படுகிறது என்று பாருங்கள்!

ஆகையால், இவ்வுலக வாழ்க்கை நிரந்தரமற்றது என்பதை உணர்ந்துகொண்டு, நாம் நமது கவனத்தை பரமாத்மாவும், நித்திய உண்மையும், கருணைக் கடலும், தன்னை சரணடைந்தவருக்கு உதவ எப்பொழுதும் தயாராக இருப்பவருமான அந்த இறைவனின்பால் திருப்ப வேண்டும். அப்பொழுது, உலகம் நம்மை பாதிப்பதை

(கட்டுப்படுத்துவதை) விரைவில் நிறுத்திவிடும். மீண்டும் மீண்டும் நம்மை நித்தியமற்ற இவ்வுலக வாழ்க்கைக்கே திருப்பியனுப்பும் கர்ம விதியின் பிடியிலிருந்து தப்பித்திட நமக்கிருக்கும் ஒரே வழி இறைவனிடம் சரணாகதி செய்வதேயாகும். "ஓ பெருமானே! நிலையற்ற இவ்வாழ்வை நிலையானதெனக் கருதி இப்பொழுது நான் அடைந்து கொண்டிருக்கும் துன்பங்களுக்கு, எனது தலைவிதிதான் காரணமா?" ----- சாதனை செய்து ஆன்மீகத்தில் கணிசமான முன்னேற்றமடைந்த பின்னரும், இப்படிப்பட்ட சோர்வு மனப்பான்மை சாதகர்களின் வாழ்க்கையில் வருவது சகஜமே. ஆனால், இதைக் கண்டு சாதகன் இறை-நம்பிக்கையை இழந்து விரக்தியடையக் கூடாது. ஏனெனில் 'இறைவன் கருணையின் உருவம், அவரே என்றும் அழியாத பரம்பொருள், என்றும் மாறாத மெய்ப்பொருள்'. எப்படிப்பட்ட (ஒன்றுக்கொன்று மாறுபட்ட) ஒப்பீடு! மின்னலின் ஒளிக்கீற்று தோன்றிய நொடியிலேயே மறைந்திடுவதைப் போல, உலக வாழ்க்கையும் நிலையற்றது; இறைவன் நித்யமானவர், கருணை நிறைந்தவர். எனவே ஊக்கமற்ற மனநிலையிலுள்ள சாதகர்கள், தாம் இறையருளைப் பெறும் நாள் வெகு தூரத்தில் இல்லையென்ற ஆறுதல் கொண்டு, சாதனையை மேலும் தொடர வேண்டும் - இதுவே அருணகிரியார் தரும் அறிவுரை.

==========

செய்யுள் - 28

==========

ஆனா அமுதே அயில்வேல் அரசே
ஞானாகரனே நவிலத் தகுமோ
யானாகிய என்னை விழுங்கி வெறும்
தானாய் நிலைநின்றது தற்பரமே.

பொழிப்புரை: "ஓ கெடுதல் இல்லாத அமுதம் போன்ற இனிமையானவரே! கூரிய வேலை ஏந்திய அரசே! ஞானமே வடிவானவரே! (இதற்கும் மேலே) சொல்லமுடியுமோ? (முடியாது. ஏனெனில்), நானென்ற என்னை (Individuality) விழுங்கி, (வேறோன்றுமில்லாமல்) "வெறும் தானாய்" நிலை நின்ற "அது", "தத்" என்று சொல்லப்படும் பரம்பொருள்."

விளக்கவுரை

"பொன்னே மணியே பொருளே அருளே" என்று கூவி முறையிட்ட சாதகனுக்குக் கருணைக்கடலான முருகன் அருள்-மழையைப் பொழிந்தான். அதன்பயனாக சாதகன் ஆனந்தக்கடலில் மூழ்கினான். அந்த அபரிமித இறை-கிருபையால், இதுவரை அனுபவித்திராத ஆழ்ந்த தியானம் கைவரப்பெற்றான். அந்த ஆழ்ந்த தியானத்தில் அண்ட உணர்வின் (Cosmic Consciousness) விளிம்புவரை அவனால் தொட முடிந்தது. இறை-கிருபையால் என்னதான் சாத்தியம் இல்லை!

நீண்ட சோதனைக்குப் பின்னர், சாதகன் அனுபவித்த ஆழ்ந்த உண்மையான தியானத்தின் படிப்படியாக முன்னேறுகிற நிலைகளை விளக்கமாக விவரிக்கிறது இச்செய்யுள். இது ஒரு மிக அற்புதமான செய்யுள். இப்பொழுது அவன் அச்சோதனைகளை வெற்றிகரமாகக் கடந்துவிட்டான். அவனால் அவன் மனதில் எந்தவொரு எண்ணத் தடங்கல்களும் இன்றி முழுமன நிறைவுடன் தியானம் செய்ய இயலுகிறது; அந்த தியானத்தில் சாதகன் படிப்படியாக வெவ்வேறு நிலைகளின் அநுபவங்களைப் பெறுகிறான். ஆனால், இந்நிலைகள் நிச்சயமாக ஒரே நாளில் அடையப்படுவன அல்ல. நீண்டகாலம் முறையாக தியானம் செய்யப்படும்போது அவை படிப்படியாக அனுபவிக்கப் படுகின்றன. பொதுவாகக் கூறுவதானால், தியானிக்கும்

மனம் (அ) ஜீவ-உணர்வு மூன்று முக்கிய வழிக்கட்டங்களை அனுபவித்து, பின்னர் சமாதியின் ஆரம்ப நிலையில் நுழைகிறது; அந்த நிலை அண்ட உணர்வு (Cosmic Consciousness) (அ) இறைவன் (அ) ஆத்மாவின் வெளிவட்டத்தை (விளிம்பைத்) தொடுவது போன்றது. இதை சற்றேகுறைய சமாதி நிலை எனலாம்.

முதல் வழிக்கட்டம்: **"ஆனா அமுது"** – தியானம் துவைத நிலையில் (இருமை இயல்பு/இரட்டைத் தன்மையில்) துவங்குகின்றது, அதாவது, (1) தியானம் செய்பவன், மற்றும் (2) தியானிக்கப்படும் பொருள். ----- (1) தியானிக்கும் மனம்/உணர்வு, மற்றும் (2) தியானிக்-கப்படும் பொருளாக "ஆனா அமுது" (என்றுமிருக்கும் அமுதம்/ ஆனந்த சொரூபம்) எனப்படும் ஸச்சிதானந்த சொரூபமான இறைவன்/ ஆத்மா. இந்த துவைத நிலையில் தியானமானது துவங்குகின்றது. உண்மை தியானம் அமுதம்போல் தித்திக்கும் (அதாவது ஆனந்தத்தை தருகின்றது). தியானம் இவ்வாறு ஆனந்தத்தைத் தருவதால், சாதகன் அதைப் போதும் என்று ஒருநாளும் கூறாமல், மேன்மேலும் அதை அநுபவித்துக் கொண்டிருக்கவே விரும்புவான். இதற்கு நேர் எதிரானது புலன்களின் (இந்திரியங்களின்) வாயிலாக அடையப்படும் இன்பங்கள்; அவை குறுகியகால அநுபவத்திலேயே சலிப்பு மற்றும் வெறுப்பை அளிப்பதோடல்லாமல், புலன்களையும் தேய்மானப்படுத்தி, பதட்டம்-கவலை- வியாதி- பாவம் போன்றவைகள் ஏற்படவும் செய்கின்றன. ஆனால், ஒரு பக்தனுக்கு (அ) ஆன்மீக சாதகனுக்கு, இறைவனைப் பற்றிய எண்ணம்/ தியானம் முடிவற்ற ஆனந்தத்தைத் தருகிறது; அது ஒரு (நல்) வாழ்வு தரும் அமுதமாகிறது. இறைவனைப் பற்றிச் சிந்திக்கும்/தியானிக்கும் மனம், இறைசிந்தனையிலேயே மேன்மேலும் ஆழ்ந்து, அதில் இறைவனை தேவாம்ருதமாகவே அநுபவிக்கிறது. அவ்வாறு அமுதமாக சுவைக்கப்படும் பொழுது மேன்மேலும் இனிப்பாக ஆகிகொண்டே போகிறது (அதாவது, மனதில் ஆனந்தம் பெருகிக் கொண்டே போகிறது). இறை-தியானம் மேன்மேலும் ஆழ்ந்து செய்யப்படும்பொழுது, அவரின் மீது அதிக ஈடுபாடு வந்தமைகிறது. இறைவனை ஆழ்ந்து சிந்தனை செய்தால் அது தரும் மகிழ்ச்சி மிகவும் இனிமையானது என்பதால், அந்த பக்தன் அவரை ஒரு நொடி நேரம்கூட மறக்க விரும்புவதில்லை. அதனால், அது "ஆனா அமுது" என்று சொல்லப்படுகிறது. சில சமயங்களில், சாதகன் தியானம் தரும் ஆனந்த சுகத்தை அநுபவிப்பதற்காக, உணவு மற்றும் தூக்கத்தைக்கூட துறந்து விடுகிறான். இவ்வாறாக ஆழ்நிலை தியானமானது தொடர்ந்து சிலகாலம் செய்யப்படும்பொழுது, தியானிப்பவன் தியானிக்கப்படும் பொருளிலிருந்து (பரம்பொருள்) வேறுபட்டவன் என்ற துவைத பாவனையைக் கடந்து செல்கிறது.

இரண்டாவது வழிக்கட்டம்: **"அயில் வேல் அரசு"** – 'கூரான வேலாயுதத்தைத் தாங்கிய மன்னர்,' வேல் என்பது ஆத்ம ஞானத்தைக் குறிக்கும். ஞான சொரூபனான முருகனும் அவனுடைய வேலும் ஒன்றாகக் கருதப்படுகிறது. வேல் முருகப் பெருமானின் மீது சாத்தப்பட்டுள்ளது; அவரிடமிருந்து வேல் வேறுபட்டதல்ல; அது அவராகவுமில்லை. (வேலை அவரிடமிருந்து பிரித்துப் பார்த்திட இயலாது, எனினும் அது அவரோடு ஒன்றாகிவிடவுமில்லை.) அதுபோலவே, இந்த இரண்டாவது கட்டத்தில், தியானம் மிகவும் ஆழமாகப்போய், மனம் மிக நுட்பமாகி, சுத்தமாகவும் ஆகிவிடுகிறது; அதனால் மனம் (அ) ஜீவாத்மா, பெருமான்/ ஆத்மாவுடன் மிக நெருங்கி இருப்பதை உணர்கிறது. அந்நிலையில் அது இறைவனோடு ஒன்றாகவுமில்லை வேறாகவுமில்லை. அப்பொழுது, அது ஆத்மாவில் (வேல் போன்று) வெறுமனே சாத்தப்படுகிறதே தவிர, அதனுடன் ஐக்கியமடைந்து விடுவதில்லை. இப்படியாக, முதல் கட்டத்தில் இருந்த துவைத பாவனை கடக்கப்பட்டு, இந்த இரண்டாவது கட்டத்தில் 'ஒன்றாகவும் இல்லை; வேறாகவும் இல்லை' என்ற விசிஷ்டாத்வைத (அங்கம்-அங்கி) பாவனையை அடைகிறது.

"வேல்" நீண்ட காம்பு கொண்டு, அதன் இலை நடுவில் பரந்தும், மேலே நுணியில் கூர்மையாகவும் இருக்கும். தியானத்தின் உயர்ந்த நிலையில் உள்ள தியான மனோபாவம் (உணர்வு) வேல் போன்றது; அதாவது, ஆழமான சிந்தனை, பரந்த பார்வை, கூர்மையான புத்தி ஆகியவைகளை (உருவத்தில் வேலைப்போல்) கொண்டுள்ளது. முதல் கட்டத்தில் அநுபவிக்கப்பட்ட மகிழ்ச்சி, ஜீவனை ஆத்மாவிடம் மேன்மேலும் இழுக்கிறது. ஜீவனும் ஆழ்ந்த அநுபவத்திற்கு ஏங்கிக் கொண்டே, ஆத்மாவுக்கு மிக அருகில் சென்று, ஆத்மாவில் சாய்ந்து கொள்கிறது (வேல்போல்). சேகரிக்கப்பட்டு, குவிக்கப்பட்டு ஒருமுகப்-படுத்தப்பட்ட மனமானது, தியானத்தில் முழுவதுமாக ஆழ்ந்து, ஆத்மாவிற்கு மிக அருகில் சென்று அதுவாகவே ஆகிவிட்டதுபோல் உணரத் தொடங்குகிறது; அது (அதன் தனித்தன்மை இன்னும் இருந்தும்கூட) தியானப் பொருளோடு கிட்டத்தட்ட ஒன்றாகிவிட்டது-போல் உணர்கிறது; அதாவது, பெருமானிடம் வேல் இடம் பெற்றிருப்பது போல. இதுதான் இரண்டாவது கட்டம். இத்தகைய தியானமானது எவ்விதத் தடங்கல்களின்றி, இடைவிடாதும் அர்ப்பணிப்புடனும் தொடர்ந்து செய்யப்படும்பொழுது மேலும் ஆழமாகி, மூன்றாவது கட்டத்தை அடைகிறது.

மூன்றாவது வழிக்கட்டம்: **"ஞானாகரன்"** – ஞானமே உருவானவர். தியானத்தின் இந்த மூன்றாவது கட்டம் மிகவும்

உயரிய நிலை. இதில் இறைவன் ஞானாகரனாக, ஞானப்பிழம்பாக, ஸச்சிதானந்தக் கடலாக அனுபவிக்கப் படுகிறார். தியானத்தில் முழுவதுமாக ஒருமுகப்படுத்தப்பட்ட மனம் (ஜீவாத்மா), (எதன் உண்மை தத்துவம் பரமாத்மாவே) பலகாலமாக செய்துவரும் ஆழ்ந்த தியானத்தில் அது ஆத்மாவின்மேல் அமைந்திருந்து வந்ததால், அதன் மற்றும் அனைத்து ஜீவர்களின் ஆதார ஸ்தானமான அண்ட உணர்வெனப்படும் பரமாத்மாவில் ஐக்கியமாகும் தருவாயை அடைகிறது. இது, ஒரு நதியானது கடலில் சங்கமமாகும் தருவாயில் உள்ளது போன்றது. அந்த சங்கமமாகும் நதியானது வியந்து, "ஓ! கடல் எவ்வளவு பெரிதாக இருக்கிறது! எங்கு பார்த்தாலும் தண்ணீர், தண்ணீர் மட்டுமே உள்ளது!" என்று ஆச்சரியமடைகிறது. ஆனால், அதற்குமேல் தனக்கு என்ன ஆயிற்று என்று அதனால் நினைக்கவோ பேசவோ முடியாமற் போய்- விடுகிறது; ஏனெனில் அதற்குள் அது கடலால் விழுங்கப்பட்டு, அதில் அமிழ்ந்துவிடுகிறது. எனவே, கடலைப் பற்றி அது என்ன சொல்லமுடியும்? அந்த கடைசி கட்ட அநுபவத்திற்குப் பின்னர் ஜீவனின் நிலையும் அதேபோலத்தான் ஆகிவிடுகிறது. ஆத்மாவைத் தொடும் விளிம்பிலுள்ள ஜீவன் (இரண்டாவது கட்டம்), தியானத்தை மேலும் ஆழமாகச் செய்து, மூன்றாவது கட்டத்திலிருக்கும்போது கடலில் சங்கமமாகும் விளிம்பில் இருக்கும் நதி போலவே இருக்கிறான். அப்பொழுது ஜீவன் 'ஞானாகரனே' என்று வியக்கிறது; "ஓ ஞான வடிவமே! ஒளிமயமானவரே! பிரகாசமே பிரகாசம்! எங்கும் எதிலும் எல்லாப் பக்கங்களிலும் ஒரே பிரகாசம்!!' என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கையில், அதில் அமிழ்ந்துவிடுகிறது. எனவே, "ஞானாகரனே" என்று சொன்னபின், அதே வாக்கியத்தில், சாதகன் வியப்போடு "நவிலத்தகுமோ" --- '(இதற்கு மேல்) சொல்லமுடியுமோ (முடியாது)' என்று கூறுகிறான். இக்கட்டம் அடையப்படும் பொழுது தியானிக்கும் (ஜீவ) உணர்வு இறை/ஆத்ம உணர்வினால் ஆட்கொள்ளப்படுகிறது (ஜீவ உணர்வு ஆத்ம உணர்வினால் விழுங்கப்பட்டு விடுகிறது), ஆத்மா மட்டுமே ஞானாகரனாக (அத்வைதமாக) இருக்கிறது, இதற்குப் பின்னர் நடப்பது எதையும் வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது, ஏனெனில் 'யான்' என்றும் 'தியானிப்பவன்' என்றும் சொல்லிவந்த அந்த 'நான்' எனப்படும் 'ஜீவ' உணர்வு, 'அது' எனப்படும் உயரிய பரம்பொருளால் விழுங்கப்பட்டு, 'அது' (பரம்பொருள்) தானாக மட்டுமே எஞ்சி, (வெறும் தானாய்) 'இருப்பு நிலை'யாய் நின்று விடுகிறது – '**யானாகிய என்னை விழுங்கி, வெறும் தானாய் நிலை நின்ற அது தற்பரமே**'.

இச்செய்யுளின் முதல் இரு வரிகளில், அச்சாதகன் தியானத்தின் மூன்று கட்டங்களை அவன் எப்படி அனுபவித்து வருகிறானோ

அப்படியே அச்சமயமே அவைகளை வர்ணிக்கிறான்; எனவே, அவை நிகழ் காலத்தில் உள்ளன. அவனால் அதற்கு மேல் எதுவும் சொல்ல இயலவில்லை, ஏனெனில், "அது" ('தத்' அல்லது "அது" எனும் பரம்பொருள்) அவனை விழுங்கிவிட்டது. அதன்பின், தான் பெற்ற சமாதிநிலை போன்ற மேதக்க அவ்வநுபவத்தை, தன் நனவு நிலைக்குத் திரும்பிய பின்னர், நினைவுபடுத்திச் சொன்னது, செய்யுளின் இரண்டாவது பகுதியில் (கடைசி இரு வரிகள்) உள்ளது. எனவே, அது இறந்த காலத்தில் இருக்கிறது.

அச்சாதகன் அந்த மேதக்க அநுபவம் எப்படி இருந்தது, அவ்வநுபவம் வருவதற்கு முன்னர் எத்தகைய அநுபவங்கள் அவனுக்கு வந்தன என்றெல்லாம் விவரிப்பதன் நோக்கம், தன்னைப்போல் ஆன்மீக சாதனைகள் செய்து முயற்சிப்பவர்களுக்கு இம்மாதிரியான அநுபவங்கள் ஏற்பட்டால், அவர்கள் சரியான பாதையில்தான் சென்று கொண்டிருக்கிறோம் என்றும் அந்த மகத்தான அநுபவத்தை நெருங்கிக்கொண்டு இருக்கிறோம் என்றும் அறிந்து கொள்ள வசதியாயிருக்கும் என்பதுதான்.

அந்த மூன்றாவது கட்ட இறுதியில் அவன் அனுபவித்த 'விழுங்கிய' என்ற அநுபவத்திற்கு சற்றேறக்குறைய ஒத்த அநுபவம், நம் தினசரி வாழ்க்கையில் நிகழும் ஆழ்ந்த நித்திரை என்று கூறலாம். நாம் தூங்க விரும்பும்போது, முதலில் படுக்கையில் படுத்துக் கொண்டு, மனதை எல்லா அவயவங்களிலிருந்தும் மெதுவாக திரும்பப் பெற்று, அப்படி திரும்பப் பெறப்பட்ட (ஒருமுகப்-படுத்தப்பட்ட) மனம் அதன் உறைவிடமான இதயத்தை அடைகிறது. இதுவரை நமக்கு என்ன நடந்ததென்று தெரியும். பின்னர், எப்போது தூங்கினோம் என்றோ, எப்படி தூக்கம் வந்தது என்றோ அறியாமல் நாம் தூங்கி விடுகிறோம். நாம் நன்கு தூங்கிக் கொண்டிருக்கும் பொழுது, நமக்கு ஒன்றும் தெரிவதில்லை; ஏனெனி, அப்பொழுது நாம் காரண சரீரத்தில் இருக்கிறோம். அவித்யா/ அறியாமை/ அக்ஞானம்/ தமஸ்/ இருட்டு என்றெல்லாம் அழைக்கப்படும் காரண சரீரமென்பது சஞ்சித கர்மங்கள் (இதுவரை கோடானுகோடி ஜன்மங்களில் செய்த கர்மங்களின் பலன்கள் - அநுபவத்திற்கு வராத பலன்கள்) சேகரித்து வைக்கப்படும் வீடு (Store House). தூக்கநிலையில், அத்தகைய காரண சரீரத்தில் நாம் அமிழ்ந்து விடுகிறோம் அல்லது நாம் காரண சரீரத்தால் ஆட்கொள்ளப்படுகிறோம். தூக்கத்தின் பொழுது, நாம் இறந்து விடவில்லை, உயிருடன் தான் உள்ளோம், அப்பொழுது நமக்கு விழிப்புணர்வு (அ) பிரக்ஞை (அ) உணர்வு உள்ளது. எனினும் நமக்கு எதுவுமே தெரிவதில்லை. ஏன்? ஏனெனில், ஜீவ உணர்வு/ மனது/ அகங்காரம் அப்பொழுது *தமஸ்* அல்லது இருளால்

(அறியாமையால்) சூழப்பட்டிருக்கிறது,' விழுங்க'ப்- பட்டுள்ளது. அச்சமயத்தில், மனம்/உணர்வு இருப்பதால், நமக்குத் 'தெரியும்' **(We 'Know');** ஆனால், மனமானது *தமஸால்* அல்லது இருளால் சூழப்பட்டிருப்பதால், நமக்குத் தெரிவது **(We Know 'Nothing')** "ஒன்றுமில்லை" என்பது, அதாவது, நமக்கு எதுவும் தெரிவதில்லை. இது, ஒருவன் நன்கு திறந்திருக்கும் தனது கண்களோடு கும்மிருட்டறையில் இருப்பதுபோன்றது. அவன் கண்கள் திறந்தி-ருப்பதால், அவனால் பார்க்க இயலும்; அவன் பார்த்துக் கொண்டும்தான் இருக்கிறான், ஆனால் அவன் பார்ப்பது 'ஒன்றையுமேயில்லை' (He is 'seeing', but seeing 'Nothing'). ஏனெனில் அவனைச் சுற்றி ஒரே கும்மிருட்டு உள்ளது, அவன் இருட்டில் மூழ்கி இருக்கிறான். அவனால் எதையுமே பார்க்க இயலவில்லை (அதாவது, அவன் இருந்த நிலை "கண்ணிருந்தும் குருடு" என்கிற நிலை). அதுபோலவே, நாம் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும்பொழுது, மனம் / அகங்காரம்/ உணர்வு/ விழிப்புணர்வு இருக்கிறதால், நாம் 'அறிகிறோம்', ஆனால், 'ஒன்றுமில்லை' என்பதை அறிகிறோம். ஏனெனில், நாம் தூங்கும் சமயத்தில் இருளில் (தமஸில்) முழுவதுமாக அழுந்து/மூழ்கடிக்கப்பட்டு இருக்கிறோம். தூங்கும்போது நாம் 'ஒன்றும் அறியவில்லை' என்பதுகூட, தூங்கும் சமயத்தில் தெரியாது; தூங்கி விழித்த பின்னரே தெரிய வருகிறது. எனவே, தூக்கத்திலிருந்து விழித்த பின்னர், "நான் நன்கு தூங்கினேன். எனக்கு ஒன்றுமே தெரியாது (அச்சமயத்தில் இருள் மட்டுமே இருந்ததால்). நான் ஆனந்தமாக இருந்தேன்" என்று சொல்கிறோம். அதனால்தான், அது இறந்த காலத்தில் சொல்லப்படுகிறது. அதேபோல, சற்றேகுறைய சமாதி நிலையை அணுகிய அந்தக் கடைசி அநுபவத்தில், தியானிக்கும் உணர்வு பரம்பொருளால் 'விழுங்கப்பட்டு', அப்பரம்-பொருள் மட்டுமே 'இருக்கிறது' (That alone IS). தியானிப்பவன், 'எல்லையற்ற அறிவு/ சோதிப்பிழம்பு/ ஞானாகரன்' என்றெல்லாம் அறியப்படும் 'பரம்பொருள்' தத்துவத்தால் ஆட்கொள்ளப்படுகிறான். இது அவனுக்கு அப்பொழுது தெரியாது; அந்த அனுபவத்திலிருந்து சாதாரண நனவு உணர்விற்கு வந்தபின்னர், நினைவுபடுத்திப் பார்க்கும்போதுதான் தெரிய வருகிறது. எனவே, அச்சாதகன் இறந்த காலத்தைக் குறிக்கும் சொற்களால் **"யானாகிய என்னை விழுங்கி வெறும் தானாய் நிலை நின்ற அது தற்பரம்"** என்று கூறுகிறான். தன்னை, யான்/தியானிப்பவன் என்றெல்லாம் கருதும் 'நானெனும் உணர்வா'கிய 'ஜீவ-உணர்வை' விழுங்கி (**யானாகிய என்னை விழுங்கி**), வேறோன்றுமில்லாமல் (**வெறும்**) "தான் மட்டுமாய்" (**தானாய்**) நிலை நின்ற "அது" (**நிலை நின்றது**), "தத்" என்று சொல்லப்படும் பரம்பொருள் (**தத் பரம்**).' இவையெல்லாம் ஒரு பெரிய

மர்மம். நமது இவ்வளவு பெரிய விவர்ணனை எல்லாம் ஒரு பலவீனமான முயற்சியே. விவர்ணனை செய்து, அனுபவத்தை எடுத்துச் சொல்லமுடியுமோ! - **நவிலத் தகுமோ**! இருந்தாலும், இவ்விவர்ணனை ஓரளவிற்கு அதைப் புரிந்துகொள்ள உதவியாயிருக்கும்.

ஒரு இருட்டறையில், நாம் சாதாரண இருட்டால் உறையிடப்பட்டு மூடப்படுகிறோம்; ஆழ்ந்த தூக்கத்தில் நாம் உறையிடப்படுவது, ஆன்மீக இருட்டு எனும் அறியாமையால் (அவித்யை). ஆனால், சமாதி நிலையின் விளிம்பைத் தொட்ட அநுபவத்தில், நாம் உறையிடப்படுவது ஞானத்தால் (வித்யா/ பேரறிவு/ ஒளி/ எல்லையற்ற அறிவு), அதாவது பரம்பொருளால்.

"விழுங்கி": விழுங்கி என்றால் ஒன்று மற்றொன்றை விழுங்கியது, அதாவது நாம் உணவை விழுங்குவது போல, என்றெல்லாம் அர்த்தம் கொள்ளக் கூடாது. தியானத்தின் மிக உச்ச நிலையில், தியானம் செய்யும் நானெனப்படும் ஜீவ-உணர்வு இறைவனை ஞானாகரனாக அனுபவத்தில் உணரும்பொழுது, ஜீவாத்மா 'தத்' எனப்படும் பரமாத்மாவால் அனைத்து பக்கங்களிலிருந்தும் உறையிடுவதுபோல் சூழப்படுகின்றது; ஜீவன், 'தத்'தின் (பரம்பொருளின்) உள்ளடக்கமாகிறது; அதனால், ஜீவன் தன்னை 'தத்' விழுங்கி விட்டதாக உணர்கிறது.

"விழுங்கி" – நானெனப்படும் யானாகிய என்னை விழுங்கி, 'வெறும் இருப்பாக' நின்ற 'அது', "தத்" எனப்படும் பரமாத்மா (பரம்பொருள்). "விழுங்கி" என்ற சொல் மிகவும் மகத்துவபூர்ணமானது; அகங்காரமெனும் ஜீவ-உணர்வு அண்ட/பரமாத்ம-உணர்வில் 'மூழ்கியதே' தவிர, தன் தனித்தன்மையை இழந்து விடவில்லை என்பதை மறைமுகமாகக் குறிப்பிடுகிறது. ஏனெனில், அதன் மூல காரணமான அவித்யை (அறியாமை) அழிக்கப்படவில்லை; இந்த உண்மை அடுத்த செய்யுளில் வெளிப்படுத்தப்படுகிறது. 42-ம் செய்யுளில்தான், அறியாமை 'அற்றது' (அழிக்கப்பட்டது) என்று ஐயத்திற்கு இடமின்றி குறிப்பிடப்படுகின்றது. இங்கு அடையப்பட்டது தியானத்தின் ஒரு உயரிய நிலை மட்டுமே; இது தியானத்தின் இறுதி நிலையான சமாதி (பேருணர்வு) என்ற குறிக்கோளை அடைந்ததாக ஆகாது. அந்த இறுதிநிலையான சமாதி "அடையப்பட்டது" என்று ஆணித்தரமாகப் பின்னர்தான் (செய்யுள்கள் 42, 43 & 44) அறிவிக்கப்படுகிறது. பல சாதகர்கள் தியானத்தின் மூன்றாவது கட்டத்தின் உச்சத்தை ('விழுங்க'ப்பட்ட நிலையை) அடைந்ததும், சமாதி அவஸ்தையை/ இறைவனை அடைந்து விட்டதாகத் தவறாக நினைத்து, அத்துடன் தங்கள் சாதனையை விட்டு விடுகிறார்கள்.

ஆனால், அப்படிச் செய்யக்கூடாது. எனவே, சுவாமி சிவானந்தா மஹராஜ் அவர்கள் ஒரு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்: "இந்தக் கட்டத்தில், பல சாதகர்கள் தாங்கள் தங்கள் குறிக்கோளை அடைந்து விட்டதாகத் தவறாக எண்ணி, தங்கள் சாதனைகளை அத்துடன் நிறுத்தி விடுகிறார்கள்; அவர்கள் இங்குமங்கும் சென்று, உபதேசம் செய்யத்தொடங்கி, அனைத்துத் தர மக்களுடன் கூடி, சேர்ந்து வாழ்ந்து, இறுதியில் அதோகதி அடைகின்றனர். எனவே, இக்கட்டத்தில் அவர்கள் ஆன்மீகப் பயிற்சிகளை விட்டுவிடாமல், குறிக்கோளான இறைவனை அடையும்வரை தொடர்ந்து செய்ய வேண்டும்".

செய்யுள்-2ல் செய்யப்பட்ட பிரார்த்தனை 'என்னை **"இழந்த"** நலத்'தை, அதாவது முக்தியை, அடைவதற்கு. ஆனால், இச்செய்யுளில் (28) அனுபவித்த 'என்னை **"விழுங்கிய"**' நிலை முக்திநிலையல்ல; நாம் மேலே பார்த்ததுபோல் இது அண்ட-உணர்வின் விளிம்பைத்தொடும் ஒரு கண நேர கண்ணோட்டப் பார்வை மட்டுமே. இருந்தும், இதுவும் ஒரு மெச்சத்தக்க நிலைதான். என்றாலும், முக்தியை அடைய சாதனை தொடர்ந்து செய்யப்படவேண்டும்.

அருணகிரியார், 'தூய இருப்பாக' (**வெறும் தானாய்**) இருக்கும் **'தத்'** அல்லது பரம்பொருளை **"அது"** என்று குறிப்பிடுகிறார்; 'அவனோ', 'அவளோ' என்று அல்ல. இறைவன், இறைவி என்றுக் கடவுளை ஆண் தெய்வம் (அ) பெண் தெய்வம் என்றெல்லாம் வழக்கமாக நாம் கருதும் கோட்பாடுகள் கடக்கப்பட்டு, 'தத்' அல்லது 'அது' என்ற அந்த பூரண அனுபவத்தில் முடிவடைகின்றன. அதனால்தான், அருணகிரியார் அதை 'தத்' எனும் 'அது' என்கிறார். எந்த ஒன்று அறுதியானதோ, பரம்பொருளோ, பூரணமானதோ அந்த ஒன்று 'தூய இருப்பாக' (**வெறும் தானாய்**) மட்டுமே இருக்கின்றது. அவ்வளவுதான். அதைப்பற்றி இதற்கு மேல் சொல்வதற்கு ஒன்றும் இல்லை.

இங்கு, உற்சாககரமான ஒன்று கவனிக்கத்தக்கது. செய்யுள்-13-ல் 'அது' என்பதுவே 'முருகன்', 'தனி வேல் முனி', 'நம் குரு' என்று சொல்லப்பட்டது. இச்செய்யுளில் (28), "ஆனா அமுதே --- அயில் வேல் அரசே --- ஞானாகரனே" என்று கூறப்படும் மூன்று அநுபவ கட்டங்களும், 13-ம் செய்யுளில் தலை கீழான அநுபவ கிரமத்தில் "முருகன் -- தனி வேல் முனி -- நம் குரு" என்று இருக்கின்றன. இவ்விரண்டு செய்யுள்களில் கூறப்பட்ட அநுபவக் கிரமங்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகவும், சில அரிய உண்மைகளை வெளிப்படுத்துபவையாகவும் தெரிகின்றன:

- *முருகன்* மற்றும் *ஞானாகரன்* ஆகிய இரண்டும் அறுதி உண்மை தத்துவத்தைக் குறிக்கின்றன (அத்வைதம்).
- *தனி வேல் முனி* மற்றும் *அயில் வேல் அரசே* ஆகிய இரண்டும் வேற்றுமையுடன் கூடிய ஐக்கியத்தைக் குறிக்கின்றன (விசிஷ்டாத்வைதம்).
- *நம் குரு* மற்றும் *ஆனா அமுதே* அகிய இரண்டும் சிஷ்யன் –குரு, பக்தன்-பகவான், ஆகியவைகளை முறையே குறிக்கின்றன (துவைதம்).

ஆக, செய்யுள்-13ல், இறைவன் மனித வடிவில் குருவாகத் தோன்றுவது; அரூபமான அறுதி உண்மையானது உருவம் தாங்கி இந்த நனவு உலகில் தோன்றுவது (இறங்கு வரிசை). இச்செய்யுளில் (28ல்) மனிதன் இறைவன் நிலைக்கு உயர்வது, அதாவது ரூபம் தாங்கிய ஜீவன், அரூபமான பரமன் நிலையை உணர்வது (ஏறு வரிசை). 'அது' என்ற சொல் இரு செய்யுள்களிலும் உபயோகப் படுத்தப்பட்டுள்ளது; முந்தைய செய்யுளில் (13ல்) 'அது', 'குரு'வாக வருகின்றது; பிந்தைய செய்யுளில் (28ல்) 'ஜீவன்', 'அது'வால் விழுங்கப்படுகிறது.

பதிமூன்றாம் செய்யுளில் பெற்ற அநுபவமே இந்த இருபத்தெட்டாம் செய்யுளிலும் பெறப்பட்டதெனச் சொல்லக்கூடும்; என்றாலும் இப்பொழுது பெற்ற அநுபவம் உரிய சாதனைகள் செய்ததினால் (ஜீவ முயற்சியினால்) அடையப்பட்டது என்று அறிய வேண்டும். அதாவது, முந்தைய அநுபவம் சாதகனுக்குக் 'கொடுக்கப்பட்டது' (Given); பிந்தைய (தற்போதைய) அநுபவம் சாதகனால் 'அடையப்பட்டது' (Attained). முதலில் கொடுக்கப்பட்ட அநுபவம், அவனுக்குத் தேவையான ஊக்கத்தை வழங்கி, சாதனைகள் செய்து, போராடி அதை அடைவதற்காக.

==========

செய்யுள் - 29

==========

இல்லேஎனும் மாயையில் இட்டனை நீ
பொல்லேன் அறியாமை பொறுத்திலையே
மல்லேபுரி பன்னிரு வாகுவில் என்
சொல்லே புனையும் சுடர் வேலவனே.

பொழிப்புரை: "ஓ! மல்யுத்தம் செய்யத்தக்க வலிமை பொருந்திய, வீரமிக்க பன்னிரு தோள்களில் (தங்கள் மகிமையைக் கூறும்) எனது சொற்களை அணிந்துகொண்ட, ஒளி வீசுகின்ற வேலாயுதப் பெருமானே! இல்லை என்று சொல்லப்படும் இம்மாயையில் நீங்கள் என்னை வீழ்த்தினீர் (விழும்படிச் செய்துவிட்டீர்கள்)! (என்னே என் பரிதாப நிலை!) பொல்லாதவனாகிய என்னுடைய அறியாமையை நீங்கள் பொறுத்து (மன்னித்து, நீக்கி) விடவில்லையே!'

விளக்கவுரை

அந்த அளப்பரிய ஞானம் மற்றும் ஆனந்தம் கலந்த மகத்தான அநுபவத்தில் அகங்காரம் விழுங்கப்பட்டு, பரம்பொருள் மட்டுமே பிரகாசித்திருந்த நிலையில் (முந்தைய செய்யுள்), மாயை மறைந்து விட்டதாக (அ) இல்லாமல் போய்விட்டதாகத் தோன்றியது; சாதகனும் மாயையிலிருந்து தான் விடுபட்டுவிட்டது போலவும், அறியாமை தன்னை விட்டு விலகிவிட்டது போலவும் உணர்ந்தான். ஆனால், அவன் தன் (தியானத்திலிருந்து) நனவு நிலைக்குத் திரும்பியபொழுது, தான் இன்னும் மாயையின் பிடியில் இருப்பதையும், தனது குறைகள் முன்னர் இருந்தது போலவே உள்ளதையும், அவனது அறியாமையும் அப்படியே இருப்பதையும் உணர்கிறான், அதாவது அவனது அறியாமை மன்னிக்கப்படவோ, அழிக்கப்படவோ இல்லை ("**அறியாமை பொறுத்திலையே**"). மாயையும் அறியாமையும் ஒன்றே ----- முந்தையது அண்ட முழுதளாவியது; பிந்தையது தனிப்பட்ட ஜீவனுடையது. எனவே, "ஓ பெருமானே! நீங்கள் என்னை இல்லாததாயிருந்த மாயையில் (வாழும்படி) தள்ளிவிட்டீர்கள்! நீங்கள் இந்தத் தீயேனுடைய அறியாமையை மன்னித்தாயில்லை,

அழித்தாயில்லை! அந்தோ பரிதாபம்!" என்று அச்சாதகன் இறைவனிடம் பிரார்த்திக்கின்றான்.

சாதகன், தன்னுடைய தியானத்தின் உச்சநிலையில் சற்றேகுறைய அண்ட-உணர்வை அனுபவித்த பின்னர் (செய்யுள்-28), தன் பழைய நிலைக்கு வருகிறான். ஏனெனில், ஜீவத்துவத்திற்குக் காரணமான, கர்மங்களின் களஞ்சியமான மூல-அவித்யை என அழைக்கப்படும் அறியாமை அழிபடவில்லை, இன்னும் அவனிடம் இருக்கிறது. ("**பொல்லேன் அறியாமை பொறுத்திலை**"). சாதகன் தன்னைத் தானே பொல்லேன் (தீயவன்) என்று குறிப்பிடுவதிலிருந்து, அவனுடைய கணக்கில் தீர்க்கப்படாமல் இன்னும் அனுபவிக்கவேண்டிய சில தீய/ கெட்ட கர்மங்கள் (சஞ்சித கர்மா) இருப்பதை அவன் அறிந்துகொண்டான் என்பதும் தெரிய வருகிறது (இந்த விஷயம் செய்யுள்-31இல் வெளிப்படுத்தப்படுகிறது). இவற்றிலிருந்து அவன் செய்யுள்-28இல் பெற்ற அநுபவம், பூரண இறை-அனுபவம் இல்லை, (அ) அவன் இறைவனை அடையவில்லை என்பதும் தெளிவாகிறது. எனவேதான், விழுங்கி என்ற சொல், அறியாமை இன்னும் அழிபடவில்லை என்பதைக் குறிப்பதற்காக அங்கு உபயோகிக்கப்பட்டது என்ற உண்மை இச்செய்யுளில் உறுதிப்படுத்தப்படுகிறது. அதே சமயம், அச்சாதகன் 'பேசா அநுபூதி' (செய்யுள் -43) பெற்ற பிறகு (அதாவது, அவன் இறைவனை முற்றும் உணர்ந்த பிறகு), நனவு நிலைக்கு வந்தபின், அவன் அநுபவத்தை செய்யுள்-44ல் தன் தலையில் கிரீடமாக சூடப்பட்ட அந்த இறை-பாதங்களை, அவன் எல்லா இடங்களிலும் கமழ்வாதக் (காண்பதாகக்) கூறுகிறான்; இதிலிருந்து, அவனிடத்தில் மாயை இப்பொழுது இல்லை என்று தெளிவாகிறது. செய்யுள்-42ல் அவன், '**அறியாமை அற்றது**' (இல்லாமல் போய்விட்டது) என்பது தீர்மானமாக தெளிவாக்கப்படுகிறது; அதன்பின், செய்யுள்-43ல் "பேசா அநுபூதி பிறந்தது" என்று, இறை-அநுபூதி பூரணமாக அவனால் அடையப்பட்டது என்று அறிவிக்கப்படுகிறது; இவையிரண்டையும் தொடர்ந்து வரும் செய்யுளில் (44ல்), மோட்சம்/முக்தி நிலையான இறைவனின் தாமரைப் பாதங்கள் அவனுக்கு அளிக்கப்பட்டதென்பது உறுதி செய்யப்படுகிறது.

28ஆம் செய்யுளில் அனுபவித்த உயர்ந்த நிலையிலிருந்து கீழிறங்கி உலக அனுபவத்திற்கு வந்தது அச்சாதகனுக்கு மிக வருத்தமாக இருந்தது. அந்த உயர்ந்த அனுபவமும் இந்த உடனடி உலக அனுபவமும் ஒன்றுக்கொன்று நேர் எதிரெதிரானதும் மற்றும் சமரசமற்றதாகவும் இருந்தன. அந்த சற்றேகுறைய இறை-உணர்வைப் பெற்ற முந்தையநிலையில், ஸச்சிதானந்தம் (பரம்பொருள்) மட்டுமே

இருந்தது, மேலும் உலகம் (மாயை) என்ற ஒன்று உண்மையில் இல்லை என்று, அந்த அநுபவம் அவனை நம்ப வைத்தது; ஆனால், தியானத்திலிருந்து வெளிவந்த பின்னர், அவன் இவ்வுலகில் (மாயையில்) தான் வாழ வேண்டியிருந்தது, அதை சமாளிக்கவும் வேண்டியிருந்தது. அச்சாதகனின் தற்போதைய (இக்கட்டான) நிலையை "**இல்லே எனும் மாயையில் இட்டனை**" என்று இச்செய்யுள் எவ்வளவு துல்லியமாகவும், உருக்கமாகவும், மற்றும் மிக அழகாகவும் சித்தரிக்கிறது பார்த்தீர்களா!

"இல்லே எனும் மாயை": 'மாயா (மாயை)' என்பது ஒரு சமஸ்கிருதச் சொல், அதன் சொற்பிறப்பியல் அர்த்தம்: "எது (உண்மையில்) இல்லையோ (அது *மாயா*)". மாயா என்றால் என்ன? அது ஏன் இல்லையென்று சொல்லப்படுகிறது? என்பதைச் சற்று பார்ப்போம். எல்லையில்லா, பரிபூரண, இரண்டற்ற பரம்பொருள் (பிரம்மம்) எவ்வித நிபந்தனையுமற்ற இருப்பை உடையது. ஆகையால், அது இரண்டற்றது. எனவே அதற்குப் புறம்பாக மற்ற இன்னும் ஒன்று இருக்கமுடியாது. ஆகையால் அதுவும் இவ்வுலகமும், இரண்டும் இருக்க முடியாது. "இவ்வுலகம் உண்மையானது, அது எதையும் சார்ந்து இராமல் சுதந்திரமாக இருக்கிறது, அது பிரம்மத்தைச் சாராமல் தனியாக இருப்பது." ---- என்பது உண்மையென்று ஒப்புக்கொண்டால், எல்லையற்ற பிரம்மத்துக்கு ஒரு எல்லை வரையறையை (கட்டுப்பாட்டை) ஏற்றுக்கொள்வது போலாகும். பின்னர், பிரம்மம், பிரம்மமாக இருக்காது; அதாவது, பிரம்மம் ஒரு எல்லைக்குட்பட்டது என்றாகும், இது ஏற்கத்தக்கதல்ல. ஏனெனில், பூரணசுதந்திரமான எல்லையற்ற பரம்பொருளோடுகூடவே மற்றொரு சுதந்திரமான ஒன்று இருக்க முடியாது. எனவே, உலகிற்கு (உலகப் பொருள்களுக்கு) உண்மையில் இருப்பு உள்ளதாகக் கொள்ளலாகாது. அவை பரம்பொருளின் நிலை மாறுதல் அல்லது தோற்றம் மட்டுமே, (உண்மையில் இருப்பு என்பது பிரம்மத்தில் மட்டுமே உள்ளது; உலகமென்பது பிரம்மத்தின் நிலை மாறுதல் மட்டுமே. பிரம்மத்தின் இருப்பு உலகின் இருப்பாகத் தோற்றமளிக்கிறது), கடலிலுள்ள அலைகள் கடல் நீரின் நிலை மாறுதல் மட்டுமே (உண்மையில் கடல் நீரே கடல் அலையாக மாறித் தோன்றுகிறது). கடல் அலைகளுக்கு உண்மையில் தனியாக இருப்புமில்லை, உண்மையில் கடலிலிருந்து அலைகள் வேறானவையல்ல. அலைகள் நீரே; கடலும் நீரே, அலைகள் கடலே. ஆகையால், கடலைத்தவிர அலைகளுக்கென்று தனியான இருப்பு உண்மையில் இருப்பதாகச் சொல்வது, அறிவின்மையாகும்; ஏனெனில், அலைகள் தாம் இருக்கும் கடலின் இருப்பை மட்டும் பகிர்ந்து கொள்கின்றன. அதேபோன்றதுதான் இந்தப் பிரபஞ்சமும், இவ்வுலகமும். அதற்கென்று பரம்பொருளிலிருந்து வேறுபட்ட

தனியான இருப்பு என்பது கிடையாது. ஆனால், பலரால் இவ்வுலகம் உண்மை, அதற்குத் தனியான இருப்புத் தன்மை இருக்கிறது என்று கருதப்படுகிறது; அவர்கள் இவ்வுலகிற்கு அடிப்படையாக இருக்கும் பிரம்மத்தின் இருப்பைக் காண இயலாமையால், அதை மறந்து, இறுதியில் அப்படிப்பட்ட ஒன்றே இல்லையென்றும் மறுக்கின்றனர். "இறைவன் இல்லை; காணப்படும் இவ்வுலகமே உண்மை." இவ்வாறாக, உண்மையில் இல்லாத ஒரு உலகம் இருப்பதாகத் தோன்றுவதோடல்லாமல், எந்தப் பரம்பொருளே இவ்வுலகமாகத் தோற்றம் அளிக்கிறதோ அப்பரம்பொருளே புறக்கணிக்கப் படுகிறது. எப்படிப்பட்ட விசித்திரமிது! இது தான் 'மாயை' என அழைக்கப்படுகிறது. உண்மையில் இல்லாததை இருப்பதாகப் பார்ப்பதும், உண்மையில் இருக்கும் ஒன்றை பார்க்காமல், இல்லை என்பதும், --- இதுதான் மாயை. சரி, அப்படியானால், மாயை என்ற உண்மையான ஒன்று உள்ளதா? இல்லை. மாயைக்கு இருப்பு என்பதில்லை. அது உண்மையில் இருக்கும் ஒரு பொருளும் அல்ல; தோற்றத்திற்கும் உண்மைக்கும் (உலகத்திற்கும் பரபிரம்மத்திற்கும்) இருக்கும் சம்பந்தத்தை (அவ்வாறு ஒரு சம்பந்தம் இருக்குமெனில்) சரியாகப் புரிந்து கொள்ள இயலாத நிலைமையை விவரிக்கவே, 'மாயை' என்ற சொல்லை, நாமிருக்கும் இந்த அக்ஞான நிலையில், உபயோகிக்கிறோம். எந்த ஒன்று உண்மையில் இல்லையோ, ஆனால் இருப்பதுபோல் தோற்றம் அளித்துக் கொண்டிருக்கிறதோ, அந்த ஒன்றின் பரம்பொருளுடனான சம்பந்தத்தை திருப்திகரமாக விவரிக்க இயலாமையையே, 'மாயை' என்று கூறப்படுகிறது. (குறிப்பு: சதா 'தன்னந்தனி'யாக நிற்கும் பரம்பொருளுக்கு எதனுடனும் சம்பந்தம் இருப்பதாகச் சொல்ல இயலாது.) **உள்ளதுபோலத் தோற்றமளிக்கும் இவ்வுலகின்** புதிரற்ற புதிரைத் தீர்ப்பதற்காக உபயோகப்படுத்தப்பட்ட ஒரு சாதனமே இந்த மாயை. இது அல்ஜீப்ரா கணிதத்தில் சமன்பாட்டு கணக்குகளை (Equations) தீர்த்துவைப்பதற்காக, 'X' என்ற காரணியை சேர்த்துக் கொண்டு, பின்னர் சமன்பாட்டு கணக்கின் விடையானது காணப்படும்பொழுது, அந்த 'X' –காரணி தானே இல்லாமல் போய்விடுவதைப் போன்றது. "பேசா அனுபூதி பிறந்தது" போன்ற பரம்பொருள் அநுபவ நிலையில், இவ்வுலகமும் நானெனும் ஜீவனுமே இல்லாமல் போய்விடுகின்றபோது, மாயை எங்கு எப்படி இருக்க முடியும்? உலகமும், அதைத் தோற்றமளிக்கச் செய்யும் மாயையும் இல்லாமல் போய்விடுகின்றன. அதனால்தான், அதை **"இல்லே எனும் மாயை"** என்று சொல்லப்படுகிறது.

"என் சொல்லே புனையும் சுடர் வேலவனே": "பொன்னே, மணியே, பொருளே, அருளே, மன்னே, மயிலேறிய வானவனே" (செய்யுள்-27) என்ற அச்சாதகனுடைய புகழ் சொல்-மாலையைப்

புனைந்து கொண்ட பின்னரே, அந்த ஆனந்தத்தில் சற்றேகுறைய சமாதி அனுபவத்தை (செய்யுள்-28) அவனுக்குக் கொடுத்தருளினார் முருகப் பெருமான்!

"பொல்லேன் அறியாமை பொறுத்திலையே": சாதகன், தன்னைப் 'பொல்லாதவன்' என்று ஏன் சொல்லிக்கொள்கிறான்? அந்த சற்றேகுறைய சமாதி அனுபவத்தில், அவனுடைய முற்றிலும் ஒருமுகப்படுத்தப்பட்ட உள்நோக்கிய மனத்தால், முன் ஜன்மங்களில் அவன் செய்திருந்த பல கோரகர்மங்கள் இருக்கும் அறியாமை எனும் காரண சரீரத்தை, அவனால் பார்க்க முடிந்ததுபோலத் தோன்றுகிறது. ஆகையால்தான், அவன் சுய பச்சாதாபப்பட்டு : "பொல்லேன் அறியாமை பொறுத்திலையே" என்று கூறுகிறான்..

அறியாமையில் மூழ்கியிருக்கும் ஒருவன் இவ்வுலகை முற்றிலும் உண்மை என்று நம்புகிறான்; அதற்கேற்ப, அவனுடைய நடவடிக்கைகளும் உலகிலுள்ள அனைத்துப் பொருள்களும் உண்மையானவை என்ற உறுதியான நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டுள்ளன. உலகாயதவாதியான அவனுக்கு இவ்வுலகத்தைத் தவிர வேறு உண்மை, இறைவன் உட்பட, இல்லவேயில்லை. அவன் உலகப்பொருள்களைச் சேகரித்து, ஆட்கொண்டு, அநுபவித்து, இன்பமாய் இருக்க விரும்புகின்றான். உலகம்தான் அவனுடைய இறைவன். இப்படியாக, அவனுக்கு மாயை (இவ்வுலகம்) மட்டுமே ஒரு யதார்த்த உண்மை. ஆனால், ஆத்மானுபூதி பெற்ற ஒரு ஞானிக்கு, மாயை உண்மையில் இல்லவே இல்லை; ஏனெனில், அவர் மாயையின் உலக தோற்றத்தை கடந்து, இறைவனின் விழிப்புணர்வில் நிலைபெற்றிருக்கிறார். **சாதகன்தான்** இவ்விரண்டு நிலைகளுக்கிடையில் அகப்பட்டுத் தவிப்பவன்; அதுவும் ஓரளவு சாதனையில் முன்னேறி இருக்கும் ஒரு சாதகன். அவனுக்கு மாயை என்பது உண்மையானதும் இல்லை, உண்மையற்றதும் இல்லை. பரம்பொருள் மட்டுமே அறுதி உண்மை என்றும், இவ்வுலகத்திற்கு உண்மையான இருப்பு இல்லை என்றும் அவன் அறிவான். ஆனால், இப்புரிதல் ஒரு தத்துவார்த்த நிர்ணயமாக மட்டுமே அவனிடம் இப்பொழுது உள்ளது; இது அவனுடைய உண்மையான அநுபவமாக இன்னும் ஆகிவிடவில்லை. இப்பொழுது அவன் அநுபவத்தில் இருந்து அவனைத் திணற வைப்பது இவ்வுலகம்; அதனுடன்தான் அவன் விவகாரம் செய்து வாழவேண்டிய அவசியம் இருக்கிறது. அது தரும் யதார்த்த அநுபவத்தை அவனால் இன்னும் களைந்தெறிய முடியவில்லை. அவன் இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையில் இருக்கிறான். நாம-ரூபங்களை (இவ்வுலகை) புறம்தள்ளி, இவ்வுலகையே (விஸ்வரூப) இறைவனாக, ஞானிகள் பார்ப்பதுபோல்,

அவனால் பார்க்க இயலவில்லை. ஏனெனில் அவன் அப்பரம்பொருளை இன்னும் அடையவோ அநுபவிக்கவோ இல்லை. அதே சமயம், இவ்வுலகம் மட்டுமே தனக்கிருக்கும் ஒரே உண்மை என்று அதை கட்டியணைத்து வாழ்ந்திருக்கும் ஓர் உலகாயதவாதி போலவும் அவனால் இருக்க இயலவில்லை. ஏனெனில் உலகின் சாரமற்றதன்மையை அவன் புரிந்து கொண்டிருக்கிறான். இவ்வாறாக இரண்டுக்கும் இடைப்பட்டநிலை சாதகனுடைய நிலை. இந்நிலையிலுள்ள சாதகனுக்கு மாயை உண்மையுமில்லை, இல்லாததுமில்லை; இல்லை என்று "சொல்லப்படும்" மாயை --- "இல்லே எனும் மாயை". எனவே, அச்சாதகன் **"இல்லே எனும் மாயையில் இட்டனை"** என்று சொல்கிறான்.

==========

செய்யுள் - 30

==========

செவ்வான் உருவில் திகழ்வேலவன் அன்று ஒவ்வாதது என உணர்வித்த (அ)துதான் அவ்வாறு அறிவார் அறிகின்றது அலால் எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவே.

பொழிப்புரை: "(சூரிய உதய/அஸ்தமன நேரங்களில் சிவப்பாக இருக்கும்) செவ்வானம் போன்ற சிவந்த திருமேனி கொண்டு பிரகாசிக்கும் வேல்முருகப் பெருமானே! தாங்கள் அன்று நிகரற்றதென உணரச்செய்த பரம்பொருள் அனுபவத்தை (சற்றேகுறைய சமாதி அனுபவத்தை), ஒவ்வொருவரும் அவ்வாறே, தமக்குத்தாமே தன் அனுபவத்தில் உணரவேண்டும். (அதற்கு வேறு வழி இல்லை.) அந்த அனுபவத்தை மற்றொருவருக்கு எப்படி சொற்களால் விவரித்துக் கூற முடியும்!"

விளக்கவுரை

அந்த மகத்தான சற்றேகுறைய சமாதி அநுபவத்தில், யானாகிய என்னை விழுங்கி வெறும் தானாய் நின்ற 'அது', பரம்பொருள் என்று அச்சாதகன் உணர்ந்தான் (செய்யுள்-28), ஆனந்தமடைந்தான். பின்னர், இந்த 'இல்லே எனும்' இம்மாய உலகில் மீண்டும் வாழ வேண்டியிருக்கிறதே என்று துக்கப்பட்டான், மிகவும் வருந்தினான் (செய்யுள்-29). இந்த கழிவிரக்க மனநிலையிலிருந்து (ஏமாற்றத்திலிருந்து) தன்னை விடுவித்துக் கொள்வதற்காக, அச்சாதகன் அந்த நிகரற்ற அநுபவத்தை மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்திக் கொள்கிறான்; அவ்வாறு செய்வது அவனுக்கு அதிக மகிழ்ச்சியைத் தந்தது. அதுமட்டுமல்லாமல், அவன் மீண்டும் அவ்வநுபவத்தைப் பெற்றிட நம்பிக்கை மற்றும் உற்சாகத்துடன் முயற்சி செய்யத் தூண்டியது.

"அன்று ஒவ்வாதது என உணர்வித்த (அ)து": "அன்று". என்று? "கையோ, அயிலோ, கழலோ, முழுதும் செய்யோய்!"ஆன முருகன் (செய்யுள்-25), அச்சாதகன் செய்த பிரார்த்தனைக்கு இணங்கி, செய்யுள்-28இல் நிகரற்றதான (ஒவ்வாததான) சற்றேகுறைய சமாதி அனுபவத்தைத் தந்தருளிய "அன்று". எனவே, இச்செய்யுளில்

'செவ்வான் உருவில் திகழ் வேலவன் அன்று' என்றும் 'எவ்வாறு இசைவிப்பதுவே' என்றும் அதைக் குறிப்பிட்டு, அதற்கு நன்றியும் தெரிவிக்கிறான். அந்த அனுபவம் ஒப்பற்றது, ஒவ்வாதது (நிகரற்றது). ஏனெனில், இறை-கிருபையுடன் இணைந்த ஒரு மிகப்பெரிய போராட்டத்திற்குப் பின்னரே அது கிடைத்தது. எப்படி? அச்சாதகன் முதலில் குருவிடமிருந்து தியானத்தை சரியாகச் செய்திடும் வழிமுறை நுட்பத்தை தீக்ஷை-உபதேசம் பெற்று (செய்யுள்-20), பின்னர் இறைவனை அடைந்திட அந்த ஆழ்நிலை தியானத்தைத் தீவிரமாகப் பயிற்சித்து முயன்று அதில் ஓரளவு வெற்றியும் பெற்று (செய்யுள்கள்- 21 & 22), பின்னர் அவனுடைய காரண சரீரத்திலிருந்து நனவு நிலைக்கு மேலெழும்பிய சம்ஸ்காரங்கள் தாக்கி அவனை நிலைகுலையச் செய்து, பெருமானிடம் முழுமையாக சரணடைய வைத்து, அவர் உதவி மற்றும் கிருபையை வேண்டிட வைத்து (செய்யுள்கள்- 23, 24, 25, 26 & 27), பின்னர் அவனது சம்ஸ்காரங்கள் தீர்ந்து போய், அவன்மேல் பெருமானின் கிருபை எதிர்பாராத அளவிற்கு பொழியப்பட்டபோது, அவன் தியானத்தின் மூன்று கட்டங்களையும் படிப்படியாகக் கடந்து, சற்றேகுறைய சமாதி நிலையை அனுபவித்தான் (செய்யுள்-28). அந்த அநுபவத்தை 'நவிலத் தகுமோ?' (சொற்களால் விவரித்திட இயலுமோ) என்று வியந்தான்! அந்த ஒப்பற்ற அநுபவத்தை நினைவுபடுத்திக் கொண்டுதான், இச்செய்யுளில் "அன்று ஒவ்வாதது என உணர்வித்த அது" என்றும், "எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவே" என்றும் குறிப்பிடுகிறான் --- தாங்கள் அன்று என்னை நிகரற்றதென உணரச்செய்த பரம்பொருள் அனுபவத்தை (சற்றேகுறைய சமாதி அனுபவத்தை), ஒவ்வொருவரும் தானே தன் அனுபவத்தில் உணரவேண்டும். அல்லாமல், நான் அதை மற்றொருவருக்கு எப்படி சொற்களால் விவரித்துக் கூற முடியும்!"

"எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவே": அச்சாதகனுக்கு தியானத்தில் ஒரு மகத்தான அநுபவம் கிடைத்ததாகக் கேள்விப்பட்ட மற்ற சாதகர்கள், அநேகமாய் அவனிடம் வந்து அதைப்பற்றிக் கேட்டறிய ஆவல் கொண்டு வினவியிருப்பர் என்று தோன்றுகிறது. எனவே, அச்சாதகன் அந்த அநுபவம் ஒப்பற்றது தனித்துவமானது, அதைப்பற்றி விவரிப்பதென்பது இயலாது என்று அவர்களுக்குப் பதிலளிக்கிறான். மேலும், அது உள்ளநுபவமாக உணர்த்தப்பட்ட ஒன்று; ஆதலால், ஒவ்வொருவரும் அதை தானே தனது அனுபவத்தில் உணர வேண்டும், உணர முடியும். எனவே, அதைப் பிறருக்குச் சொல்லி விளங்க வைக்க முடியாது (எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பத்துவே) என்றும் சொல்கிறான். இந்த "எவ்வாறு இசைவிப்பத்துவே" என்பது இருபத்தெட்டாம் செய்யுளில்

‘நவிலத்தகுமோ’ என்று கூறப்பட்ட அந்த மகத்தான அநுபவத்தைக் குறிப்பிடுகிறது. இரண்டு சொற்களின் அர்த்தமும் ஒன்றே; அவை அந்த ஒரு அநுபவத்தையே குறிப்பிடுகின்றன.

அச்சாதகனுக்கு அந்த மகத்தான அநுபவத்திலிருந்து இவ்வுலக அநுபவத்திற்குத் திரும்பி வந்தது துன்பமயமானதாகவும் சமரசமடைய முடியாததாகவும்தான் இருந்தது (செய்யுள்-29). இருந்தாலும், அதே சமயம் அவன் பெற்றிருந்த ஆனந்தமயமான (சற்றேகுறைய சமாதிநிலை) அனுபவத்தின் (செய்யுள்-28) நினைவு மறுபடி மறுபடி அவன் உள்ளத்தை களிப்படையச் செய்கிறது, அதைத் தந்தருளிய தனது குருவுக்கு (பெருமானுக்கு) நன்றி செலுத்தச் செய்கிறது.

சூரிய உதயம் மற்றும் அஸ்தமன நேரத்தில் தோன்றும் செவ்வானத்திற்கு ஒரு சிறப்பு வசீகரமும், அழகும் இருக்கத்தான் செய்கிறது; அதை வார்த்தைகளால் போதுமான அளவுக்கு வர்ணனை செய்ய முடியாது. அது ஒப்புவமை இல்லாத அற்புதம். காண்பவனின் இதயத்தில் அது ஒரு இன்ப அதிர்வை உருவாக்குகின்றது. ஆகாயத்தின் ஒரு சிறுபகுதியில் தோன்றிடும் செவ்வானமே இவ்வாறு அருமையாய் இருக்கும்பொழுது, கரங்களும், தாள்களும் மட்டுமல்லாமல் முழுத் திருமேனியுமே சிவப்பாய் ஜ்வலிக்கும் அந்த முருகப் பெருமானின் பொலிவைப் பற்றி கேட்பானேன்! (செய்யுள்-25). முருகு என்றாலே அழகின் மொத்த உருவம். அவர் அழகிற்கே வசீகரம் தருபவர். அவரின் அழகிய வடிவத்திற்கு ஒரு நெருங்கிய ஒப்பீடாக சூரிய உதய-அஸ்தமன சமயத்திலுள்ள செவ்வானத்தை வேண்டுமானால் கூறலாம், ஆனால் அச்செவ்வானின் அழகையே விவரிக்கமுடியாது, அதற்கு ஒப்பீடுமில்லை! இப்படியாக, அறியப்படாததும் காணப்படாததுமான அரியபெருமையும் அழகும் கொண்ட ஒன்றை (முருகனை), அறியக்கூடியதும் காணக்கூடியதுமான ஒன்றன் மூலமே தெரியப் படுத்தப்படுகிறது. மேலும், அன்றாடம் அனுபவத்திற்கு வரும் செவ்வானத்தின் அழகைக்கூட நம்மால் அனுபவிக்க முடியுமே தவிர, அதை பிறருக்கு சொற்களால் விளக்கி தெரிவித்திட முடியாது. சிவப்பு நிறம் என்பது அழகைத் தவிர பூரணத்துவத்தையும் குறிக்கும். முருகப்பெருமான் உருவம் முழுவதுமே சிவப்பு நிறமானது. அவர் அழகிலும் மேன்மையிலும் பூரணமானவர். செவ்வானம் போல் பிரகாசிக்கும் அந்த முருகப் பெருமான், தனக்குவமை இல்லாத முருகப் பெருமான், அந்த ஒவ்வாததான (நிகரற்ற) அநுபவத்தை (சாதகனின் தியானத்தில்) உணர்வித்து அருளினார்.

தங்களுடைய (இறை) அனுபவங்களை சீடர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியாதபோதிலும், தேர்ச்சிபெற்ற குருமார்கள் சீடர்களுக்குப் பொருத்தமான வழிகளைக்காட்டி, அவர்களையே அந்த அநுபவங்களை அடையச்செய்ய இயலும். இறைவன் ஆணை பெற்ற, ஆத்மானுபூதி அடைந்த குருமார்கள் அந்த மகத்தான காரியங்களைச் செய்கின்றனர். அவர்கள் சக்தி அளப்பரியது. கற்கண்டின் இனிப்புச் சுவையை அனுபவித்த ஒருவர் அதை பிறருக்கு விளக்கி உரைக்கமுடியாது, ஆனால் பிறர் வாயைத் திறக்கச்செய்து, அதில் ஒரு சிறு கற்கண்டுத் துண்டைப் போட்டு, அதை சுவைக்க வைத்து, அதன் இனிப்பை அநுபவத்திடச் செய்ய இயலும். இனிப்பை அனுபவிக்க விரும்பும் ஒவ்வொருவரும் அவ்வாறு செய்துதான் ஆகவேண்டும். வேறு வழியில்லை. அதாவது வெறுமனே கண்களால் பார்த்தோ முகர்ந்துபார்த்தோ, எவராலும் இனிப்பை உணர முடியாது; கற்கண்டைத் தன் வாயிலிட்டு சுவைப்பதன் மூலமே அதை உணர இயலும். அதேபோல்தான் இறை-அனுபவமும். ஆகையால்தான், அச்சாதகன் எவ்விதத்தில் அந்த அநுபவத்தை அடைந்தானோ, அவ்விதத்திலேயே (உள்ளுணர்வாக) ஒவ்வொருவரும் அடைய வேண்டும், வேறு வழியேயில்லை. அதை விவரிக்க இயலாது. இறைவன் அருள்கூர்ந்து உள்ளுணர்வாக வெளிப்படுத்தினால்தான், அதை நாம் உணரலாம்.

==========

செய்யுள் - 31

==========

பாழ்வாழ்வு எனுமிப் படுமாயையிலே
வீழ்வாயென என்னை விதித்தனையே
தாழ்வானவை செய்தனதாம் உளவோ
வாழ்வாய் இனிநீ மயில்வாகனனே.

பொழிப்புரை: "ஓ மயில் வாகனப் பெருமானே! நிலையில்லாத உலகவாழ்வு என்னும் இந்த அழியக்கூடிய மாயையில் (மீண்டும்) விழுந்து துன்புறும்படி நீங்கள் என்னை விதித்துவிட்டீர்களே! (தாங்கள் அவ்வாறு செய்வதற்கு) நான் முந்தைய ஜன்மங்களில் செய்த இழிவான, பாவங்கள் நிறைந்த, இன்னும் அனுபவிக்கவேண்டிய கர்மங்கள் உள்ளனவோ? (ஆம், அப்படி உள்ளன என்ற ஞானத்தைத் தந்ததற்காக) நீவிர் நீடூழி வாழ்க!"

விளக்கவுரை

அச்சாதகன் பெற்ற சற்றேகுறைய சமாதி அனுபவம் (செய்யுள்-28) தந்த ஆனந்தத்தின் தாக்கத்தை அவனால் பலகாலத்திற்கு மறக்க முடியவில்லை. திரும்பத் திரும்ப அது அவன் ஞாபகத்திற்கு வந்துகொண்டே இருந்தது. ஆனால், அது இப்பொழுது கழிவிரக்கத்தையும், மகிழ்ச்சியையும் அளித்தது --- முருகன் தன்னை அர்த்தமற்ற இம்மாய வாழ்வில் விழும்படிச் செய்ததற்குக் கழிவிரக்கமும், எக்காரணத்திற்காக அவர் அவ்வாறு செய்தார் என்பது அவனுக்கு புரிந்து விட்டதால் மகிழ்ச்சியும் ஏற்பட்டது. அந்த நிகரற்ற அநுபவம் பெற்ற பின்னர் (செய்யுள்-28), அந்த பழைய மாய வாழ்விற்கே தன்னைத் திரும்பவும் அனுப்பியதற்காக, இதுகாறும் அவன் வெகுவாக வருந்தி வந்தான் (ஏன், சில சமயம் இறைவனை நிந்தனையும் கூட செய்து வந்தான்) {செய்யுள்- 29}. ஆனால், முருகன் அப்படிச் செய்தது அவருடைய சொந்த விருப்பத்தால் இல்லையென்றும், அச்சாதகன் முந்தைய ஜன்மங்களில் செய்த, இன்னும் அனுபவிக்க வேண்டிய கொடூரமான (பாவ) வினைகள் (சஞ்சித/ பிராரப்த கர்மங்கள்) பாக்கி இருப்பதால் என்றும் அவனுக்கு உணர்வித்தார். (இது பின்னர் செய்யுள்- 35 & 38ல் மேலும் தெளிவாகும்). எனவே, அச்சாதகன் "ஓ பெருமானே! நான்

முற்பிறவிகளில் செய்த **கொடூரமான கர்மங்கள்** (பாவபலன்களில்) சில இன்னும் தீராமல் மிச்சமிருக்கிறதோ?" (**"தாழ்வானவை** செய்தனதாம் உளவோ") என்று வியந்து முருகப் பெருமானைக் கேட்கிறான். இதற்கு விடை 'ஆமாம்' என்பது (அவனது) கேள்வியிலேயே தொக்கி நிற்கிறது. (இவ்வாறான சொற்களின் பிரயோகம் சர்வசாதாரணம்.) இவ்வாறு உண்மையை வெளிப்படுத்திப் புரிய வைத்ததற்கு மிக்க மகிழ்ச்சியுற்று, "வாழ்வாய் இனி நீ மயில்வாகனனே", என்று முருகனுக்கு நன்றியையும் தெரிவிக்கிறான். ஏனெனில், தான் படும் கஷ்டங்களுக்கான காரணம் ஒருவனுக்குத் தெரிந்துவிட்டால், அவன் அவற்றை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டு அனுபவிக்கலாம்; மேலும் அதற்கான பரிகாரம் காணுவதும் சுலபமாகிவிடும்.

"முன்பேதான் காரண சரீரத்திலிருந்து சம்ஸ்காரங்கள் வெளிவந்து அவனைத் துன்புறுத்தி, பலவீனமடைந்து, அழிந்துபோய் விட்டனவே (செய்யுள்கள் 23 முதல் 27 வரை). பின், இப்பொழுது மறுபடியும் எங்கிருந்து கொடூரமான கர்மங்கள் வந்தன?" என்று நாம் நினைக்கலாம். அது உண்மைதான். ஆனால், இதில் மிகப்பெரிய இரகசியம் உளது. அதாவது, சாதாரணமான அதிக பலமில்லாத கர்மவினைகளை அவ்வாறு அனுபவித்து அழித்துவிட முடியும், அழிந்தும்விட்டன. ஆனால், சில கர்மங்களை (மகா பாபங்களை) அப்படி அழிக்க முடியாது. ஏனெனில், அவை அனுபவத்திற்கு வந்தால், அவனை அழித்துவிடும்; அவை அவ்வளவு பயங்கரமானவை. ஆனால், அச்சாதகனுக்கு அப்படி இறக்க விருப்பமில்லை; அவன் இந்த ஜென்மத்திலேயே இறைவனை அடைய விரும்புகிறான். எனவே, முருகப் பெருமான் எஞ்சி இருக்கும் கொடூரமான கர்மங்களை அழிக்கும் வழியை அவனுக்கு உள்ளிருந்து தெரிவித்தார். "யாமோதிய கல்வியும் **எம்மறிவும்** வேலவர் தாமே தந்தது, அதனால் பூமேல் மயல்போய் அறமெய்ப் புணர்வீர்." (செய்யுள்-17) என்பதைத் தெரிவித்தான். அச்சாதகன் அநேக நூல்களைக் கற்றிருக்கிறான், ஆன்மீகச் சொற்பொழிவுகளைக் கேட்டிருக்கிறான், குருவிடமிருந்து உபதேசங்கள் பெற்றிருக்கிறான். இவையெல்லாம் முருகனே தந்தவை. இவைகளிலிருந்து அவன் கற்றறிந்தது (முருகன் உள்ளிருந்து தெரிவித்தது) என்னவென்றால், அவன் சந்நியாசம் எடுத்துக்கொண்டால் கர்மங்களை அனுபவிக்காமல், அவற்றை ஞான-அக்கினியில் எரித்துவிடலாம். முருகன் இப்படித் தெரிவித்ததற்கு அவருக்கு நன்றி செலுத்தி, 'வாழ்வாய் இனி நீ மயில்வாகனனே' என்றும் வாழ்த்துகிறான். மேலும், தன்னை சந்நியாசத்திற்கு தயார் செய்கிறான்.

“**படுமாயை**” ---- “அழிந்து படக்கூடிய மாயை” : இம்மாயை அழியக் கூடிய ஒன்று. விடாப்பிடியாக முயற்சி செய்தால், தன்னால் இதிலிருந்து வெகுசீக்கிரம் விடுபட முடியுமென்று அச்சாதகன் நினைக்கிறான் என்பது “படுமாயை” வார்த்தை உபயோகத்திலிருந்து தெரிய வருகிறது.

இவ்வுலக வாழ்வு நிரந்தரமானது அல்ல. அது வந்து போகும் தன்மையுள்ளது. அது நிலையற்றது. இவ்வாழ்வும் கனவைப் போன்று தோன்றி மறைவது. இருந்ததற்கான சுவடே தெரியாமல், பொருள்கள் மறைந்து போகின்றன. அதனால், புலன்களால் மட்டுமே உணரப்படும் தன்மை படைத்த (இவ்வுலக) வாழ்க்கை மாயை எனப்படுகின்றது. மாயை அழியக்கூடியது; அதாவது, என்றுமிருக்கக்கூடிய உண்மையான ஒன்று அல்ல. (மாயை ஆதியற்றது, ஆனால் அதற்கு அந்தம் உண்டு என்று சொல்லப்படுகிறது.) ஆத்மானுபூதி அடைந்த ஒருவனுக்கு அது இல்லாமற்போய்விடுகிறது. அதனால்தான். இங்கு மாயை “படு”, அழிந்து போகக் கூடியது, என்று குறிப்பிடப்படுகின்றது. அப்படியிருக்க, அழிந்துபோகும் தன்மையைக் கொண்ட அந்த மாயையால் எப்படியோ தோற்றுவிக்கப்பட்ட இவ்வுலகம் எவ்வளவு தோன்றிமறையக்கூடியதாக இருக்கவேண்டும்? இருந்தாலும், அது மிகவும் சரியான மற்றும் விஞ்ஞான பூர்வமான விதிகளால் (சட்டங்களால்) நிர்வகிக்கப்படுகிறது --- எதற்கும் பரிவு காட்டாத கர்மவிதி (காரண-காரிய விதி) அவைகளில் மிகவும் முக்கியமான ஒன்று. நாம் முன்னர் செய்த செயல்களுக்கான பலன்களை நிச்சயம் அறுவடை செய்துதான் ஆகவேண்டும்; எனவே, நமது இன்ப-துன்பங்களுக்கு நாமே காரணம். நமது தற்போதைய நிலைக்கு, இறைவனையோ (அ) மற்றவர்களையோ பழி கூறுவதால் யாதொரு பிரயோஜனமும் இல்லை. இப்புலன்சார் உலகில் நாம் துன்பத்துடன் வாழ்ந்து வருகிறோமெனில், அதற்குக் காரணம் இரண்டு: (1) இவ்வுலக வாழ்க்கை வெறும் தோற்றமென்று அறியாமல், அதை உண்மையென்று கருதி, அதற்காக ஆசைப்பட்டு, அதனுடன் ஒட்டி உறவாடி வந்தது. (2) நாம் இறைவனையும் அவரின் அருமை பெருமைகளையும் மறந்தது.

இறைவன் வெறுப்பினாலோ அல்லது தன் இச்சைப்படி வேண்டுமென்றோ நம்மை இந்த சம்சாரத்தில் விழச் செய்வதில்லை. அவர் எவரையும் வெறுப்பதுமில்லை, விரும்புவதுமில்லை. அவர் எல்லோரிடத்தும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறார். ஆனால், அவரது தெய்வீக விதியானது துல்லியமாக ஒவ்வொருவருக்கும் அவரவர் செய்த வினைகளுக்கேற்ப பலன்களைத் தருகின்றது. அவர் நீதியை வழுவாது வழங்குபவர். ஒருவன் எங்கு எந்தச் சூழ்நிலையில்

பிறந்தால் அவன் முன்பு செய்த வினைகளுக்கான பலன்களை அநுபவித்து, இறைவனை நோக்கி முன்னேற முடியுமோ அந்தச் சூழ்நிலையில் அவனைப் பிறவியெடுக்க விதிக்கிறார். ஏனெனில், கர்மங்கள் (கர்மபலன்களை அனுபவித்து) தீர்க்கப்பட்டாலொழிய, ஆன்மீக விடுதலையை அடைய முடியாது; ஆதலால், இறைவன் ஒவ்வொருவரின் ஆன்மிக வளர்ச்சிக்கு இவ்வாறு வழிவகை செய்கிறார். இவ்வாறு நாம் ஒவ்வொருவரும் நம் கர்மங்களை கழிப்பதற்கும், பின்னர் அமைதி-ஆனந்தத்தின் நிரந்தர உறைவிடமான இறைவனை ((முக்தியை) அடைவதற்கும் அவசியமான புலமாக விளங்கும், இந்தத் "தோன்றிமறையக்கூடிய" கொஞ்சகாலமே இருக்கும் உலகைப் படைத்தருளிய இறைவனுக்கு நாம் கடமைப் பட்டவர்கள்தானே? இவ்வுலகை இறைவன் நிரந்தமற்றதாகப் படைத்ததற்கு நாம் அவருக்கு நன்றி பாராட்ட வேண்டும். ஏனெனில், இவ்வுலகம் நிரந்தரமாகயிருக்கும் ஒன்றானால், அது நமக்கு துன்பங்களையும், துயரங்களையும் மட்டுமே தருவதாயிருந்தாலும், அதில் மோகித்து ஆனந்தப்படக்கூடும்! சரி. ஸ்ரீமத் பகவத் கீதை இவ்வுலகை *அநித்யம்* (நிலையற்றது) மற்றும் *அசுகம்* (சுகமற்றது) என்று வர்ணிக்கிறது; அது துக்கமயமானது மட்டுமல்ல, அது நிரந்தரமில்லாது தோன்றி மறையும் தன்மை கொண்டதும் ஆகும். சுகமற்றதாயிருந்தாலும், நிரந்தரமாக இருக்கக்கூடியதாய் இருந்திருக்குமாயின், நாம் அதனோடு ஒட்டிக்கொண்டு, அதிலேயே நிரந்தரமாக வாழவும் நினைத்திருக்கலாம் அல்லவா! ஒருவன் தன் கனவில் ஒரு பெரிய புதையல் கிடைத்ததாகக் கண்டால், அவன் எப்படியாவது அக்கனவை நீடிக்கச்செய்து அதிலேயே ஒரு செல்வந்தனாக இருக்க விரும்பக்கூடும் --- செல்வம் துன்பங்களையும் கவலைகளையும் கொடுப்பதாக இருந்தாலும் சரி. எனவேதான், கனவு மிகவும் குறுகிய காலத்திற்கே நீடிக்கிறது. நனவுலகோடு ஒப்பிடப்படும்போது கனவுலகு அநித்யமானதே. அதேபோன்றுதான், நிரந்தரமான இறை-உணர்வு விழிப்பு (அனுபூதி) நிலையோடு ஒப்பிடப்படும்போது (இம்மாயா) நனவுலக வாழ்வும் அநித்யமாகிறது, எனவேதான், இறைவன் தன் அநித்திய (படு)மாயையால் இந்த அநித்திய உலகைப் படைத்தார், அதையும் நமது நன்மைக்காகவே செய்தார். உண்மை இப்படி இருக்கும்பொழுது, அதன் அறிவு நமக்கு இல்லாத காரணத்தால், நாம் இவ்வுலகில் பிறந்ததற்கும், அநுபவிக்கும் துன்பங்களுக்கும் இறைவன் மீது பழிபோடுகிறோம். "ஓ பெருமானே, நீங்கள் என்னை இவ்வுலகில் பிறந்து துன்பப்படு என்று விதித்திருக்கிறீர்கள்; அந்தோ பரிதாபம், என் நிலை!" என்று புலம்புகிறோம். நாம் துன்பப்படுவதற்கு நாம்தான் காரணம், இறைவன் எவ்வகையிலும் காரணமல்ல, நாம்

முன்பு செய்த கர்மங்களின் பலனை அநுபவித்து வினையை கழித்துக் கொள்வதற்காகத்தான், இவ்வுலகில் அவர் நம்மை பிறக்கச் செய்தார், இவ்வாறு அவர் செய்தது நமது மேலான நன்மைக்கே என்பதை நாம் உணர்ந்து கொள்ளும் காலம் வரும். பின்னர், நாம் இறைவனின் மேன்மை, அருள், பரிவு, இரக்கம், ஆகிய அனைத்தையும் உணர்ந்து, அவரிடம் நன்றி பாராட்டி, அவரை இதய பூர்வமாக வாழ்த்தாமல் இருக்கமுடியாது. "பெருமானே, நீங்கள் எவ்வளவு கருணை உடையவர்! எவ்வளவு இரக்கம் உடையவர்! நீங்கள் நீடூழி வாழ்வீராக!" என்று இறைவனை போற்றிப் புகழ்வோம். இதையெல்லாம் எவ்வளவு உணர்ச்சி பூர்வமாக அருணகிரியார் இச்செய்யுளில் விளக்கி அருளியுள்ளார் பார்த்தீர்களா!

முற்பிறவியில் செய்த செயல்களின் பலனாகத்தான் நாம் நன்மை தீமைகளை அனுபவிக்கிறோம். இறைவனை, அவரது மகிமைகளைப் போற்றிப் புகழ்ந்து பாடி, நாம் அவரருளை நாடினால், நாளடைவில் அவரது மாயையைக் கடந்து செல்வதன் மூலம் சம்சாரத்திலிருந்தே விடுபட்டு விடலாம். இவ்வுலக வாழ்வு 'ஒளிந்து-மறைந்து-கண்டுபிடிக்கும்' விளையாட்டைப்போன்றது என்று கருதப்படுகிறது. பாட்டியம்மா இவ்விளையாட்டை துவக்கி வைக்கிறாள்; குழந்தைகள், விரும்பி மகிழ்ச்சியோடு விளையாடும்-வரை அவர்கள் இவ்விளையாட்டின் விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு இருக்கிறார்கள். ஆனால், ஒரு குழந்தை விளையாட்டில் சோர்வடைந்து விளையாட்டு போதுமென்று கருதி பாட்டியிடம் வந்தடையும்போது, அவ்விளையாட்டிலிருந்தும், அதன் விதிமுறை-களிலிருந்தும் அக்குழந்தை விடுவிக்கப்பட்டு விடுகிறது. எப்பொழுதுவரையில் ஒருவன் இவ்வுலக வாழ்க்கையை உண்மையென்று கருதியும், அதனை விரும்பி அநுபவித்தும் வருகின்றானோ, அப்பொழுதுவரை அவன் அதற்குக் கட்டுப்பட்டு அடிமையாகிறான். அந்நிலையில் இறைவனால் என்னதான் செய்ய முடியும்? ('அப்படியே மகிழ்ந்திருப்பாயாக' 'ததாஸ்து' என்று ஆசீர்வாதம் செய்வதைத் தவிர அவரால் வேறு என்னதான் செய்ய முடியும்?). ஆனால், அவ்வாறு வாழ்ந்த ஒருவன், மாய வாழ்வில் சலிப்புற்று, இதில் சாரமொன்றும் இல்லையென உணர்ந்து இறைவனை முழு மனதுடன் சரணடைந்தால், அவனது துன்பங்கள் முடிவிற்கு வந்துவிடும் (அவன் சம்சாரத்திலிருந்து விடுதலை பெற்று விடுகிறான்). சம்சாரத்திலிருந்து ஒருவன் விடுதலை பெற்றிட, இறைவனைச் சரண் புகுவது, அவரைப் புகழ்வது, அவரது மகிமைகளைப் பாடுவது, அவர் நாமங்களை ஜபம் செய்வது, அவரைத் தொழுவது மற்றும் தியானிப்பது, போன்ற சாதனைகளைச் செய்திடல் வேண்டும். "நான் முன்பு செய்த கர்மங்களுக்காக நீங்கள் என்னைச்

சம்சாரத்தில் விழச்செய்தீர்கள். ஆனால், இப்பொழுதிலிருந்து, உங்களது மகிமைகளையும் புகழையும் பாடுவதிலேயே நான் முழுமையாக என்னை அர்ப்பணிப்பேன், ஓ மயில் வாகனனே. நீவிர் நீடூழி வாழ்வீர்களாக!".

"ஓ பெருமானே! நீங்கள் ஸச்சிதானந்தம், ஆனந்தமயம், அதுவே எனக்குப் போதும்; கடந்துபோகும் துன்பமும் துயரமுமான என்னுடைய இவ்வுலக அநுபவங்கள் எனக்கு ஒரு பொருட்டேயல்ல," என்ற கருத்தே இச்செய்யுள் முழுவதும் பரவி இருக்கிறது. ஆன்மீகத்தில் முதிர்ச்சி பெற்று வெகுவாக முன்னேறிய சாதகனால்தான் இத்தகைய மனோபாவத்தைப் பெறமுடியும். இது பெறுதற்கரிய ஒரு விசித்திரமான நிலை. இதில், ஒரு சாதகன், அவனுடைய (பழைய) கர்மங்கள் தரும் சரீரத் துன்பங்களை அனுபவிக்கிறான்; ஆனால், அதேசமயம், அவன் இறைவன் மகிமைகளை இடைவிடாது மௌனமாக சிந்திப்பதன்மூலம் அந்தராத்மாவுடன் தியானத்தில் இணைந்திருந்து, ஆனந்தத்தில் மூழ்கி இருக்கிறான்.

==========

செய்யுள் - 32

==========

கலையே பதறிக் கதறித் தலையூடு
அலையே படுமாறு அதுவாய் விடவோ
கொலையேபுரி வேடர்குலப் பிடிதோய்
மலையே மலைகூறிடு வாகையனே.

பொழிப்புரை: "ஓ கந்தப் பெருமானே! கொடூரமான கொலைத் தொழிலைப் புரிகின்ற வேடர் குலத்தில் வளர்ந்தவரும் பெண்யானை போன்றவருமான வள்ளி தேவியை அணைத்த, மலைபோன்றவரே! கிரௌஞ்ச மலையை இரண்டாகப் பிளந்து வெற்றி-வாகைகளைச் சூடிக்கொண்டிருப்பவரே! சமய நூல்களைப் பற்றி, பதறிக் கதறி விவாதித்து, அலைகள் மோதுவதைப்போல் ஏற்படும் தலையிடியால் வேதனைப்பட்டு, அந்த வாதங்களில் மூழ்கி அவைமயமாகவே நான் ஆகிவிடலாகுமோ? (ஓ பெருமானே, அவ்வாறு எனக்கு ஆகிவிடாமல் காப்பாற்றுங்கள்.)"

விளக்கவுரை

முன்செய்யுளில் முருகன் உள்ளிருந்து தெரிவித்ததுபோல், அவன் சந்நியாசம் எடுத்துக்கொண்டால், அவனிடம் பாக்கியிருக்கும் பயங்கரமான பாவ கர்மங்களை அனுபவிக்காமல், அவற்றை ஞான-அக்கினியில் எரித்துவிடலாம் என்று தீர்மானித்து, அச்சாதகன் சந்நியாசம் எடுப்பதற்குத் தயார் செய்கிறான். "ஞானக்கனல் கர்மங்கள் அனைத்தும் எரித்துச் சாம்பலாக்கிறது" என்று ஸ்ரீமத் பகவத் கீதையும் பறை சாற்றுகிறது: "*ஞானாக்னி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதே ததா*" (4.37). இவ்வாறு அவன் செய்திடவில்லையெனில், அக்கர்மங்களை அநுபவித்து அழித்திட அவனுக்குப் பல பிறவிகள் எடுக்கவேண்டியிருக்கலாம்.

இந்த மாயவாழ்க்கையின் மீதான (வைராக்கியம்) பற்றற்ற மனப்பான்மை அச்சாதகனிடம் படிப்படியாக வளர்கிறது. முதலில் முளைவிட்டு, பின்னர்ச் செடியாகி, மரமாகி, பூத்துக் குலுங்கி, கடைசியில் பழமாகி பலன் தருகிறதென்பதை இந்நூலில் அருணகிரியார் விளக்குகிறார்.

- வைராக்கியம் முளைவிடுதல் - இந்நூலின் நான்காவது செய்யுளிலேயே 'வளைபட்ட கைம்மாதொடு மக்களெனும் தளைபட்டழியத் தகுமோ தகுமோ' என்கிறான் அந்த சாதகன்.
- பின்னர், அவனிடம் இந்த வைராக்கியச் செடி சிறிது சிறிதாக வளர்கிறது --- செய்யுள்-9 (மட்டூர்குழல்), செய்யுள்-16 (பேராசையெனும்).
- இவ்வாறு நாள்தோறும் செடியாக வளர்ந்து வந்த வைராக்கியம், பின்னர் ஒரு பெரிய மரமாகிறது ---- செய்யுள்- 25 & 27ல் 'மெய்யே என' & 'மின்னே நிகர்'.
- அந்த வைராக்கிய மரத்தில் பின்னர், தியாகம் (அ) சன்னியாசம் எனும் பூ மலர்கிறது ---- இந்த கர்மபந்தத்தில் இருந்து விடுபடுவதற்கு, சன்னியாசமே வழி என்று அவன் கருதுகிறான்.
- அந்த வைராக்கிய மரம், பலனாகப் பழங்களை இனிமேல் தரப்போகிறது --- **ஞானம்** ('வேல்' : செய்யுள்- 42), **அனுபூதி** ('பேசா அநுபூதி' : செய்யுள்- 43), **மோட்சம்** ('சரணம்' : செய்யுள்- 44') ஆகிய பலன்களை அச்சாதகன் பின்னர் பெறப்போகிறான்.

அதனால் அச்சாதகன் தன் மனதில் தற்போது ஓடும் சிந்தனைகளை, இயல்பாக சாஸ்திரங்களைக் கற்றிருந்த தன் குடும்ப உறுப்பினர்கள், பெரியவர்கள், சுற்றத்தினர், நண்பர்கள் ஆகியவர்களுக்கு வெளிப்படுத்துகிறான். தான் வீட்டைத் துறந்து சன்னியாசம் எடுத்துக் கொள்ளவேண்டிய அவசியத்தை அவர்களிடம் சொல்கிறான். ஆனால், எதிர்ப்பார்க்கப் பட்டதுபோல், அவனுடைய இந்த முடிவிற்கு குடும்ப உறுப்பினர்கள் பலர் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். மற்ற எல்லா விஷயங்களிலும் நிகழ்வது போலவே, இந்த விஷயத்திலும் ஒவ்வொருவரின் கருத்தும் வேறுபட்டது; ஏனெனில், சாஸ்திரங்களின் அறிவுரைகள்கூடப் பலவாறாக இருக்கின்றன. சாஸ்திர உபதேசங்கள் வெவ்வேறு மட்டங்களில் உள்ள மக்களுக்கு அவரவர்களின் தேவைகளுக்கும் தகுதிக்கும் தகுந்தவாறு கொடுக்கப்பட்டுள்ளதால், அவை ஒன்றுக்கொன்று முரண்பாடான மற்றும் குழப்பமான கருத்துக்களைச் சொல்வதுபோல் தோன்றும். ---- *"அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை; அஃதும் பிறன்பழிப்பது இல்லாயின் நன்று." "துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து இறந்தாரை எண்ணிக்கொண்டற்று."* (திருக்குறள்). எனவே, அச்சாதகனுடனான அவர்களின் விவாதங்கள் பெரும்பாலும் காரசாரமாக நடைபெற்றது. சாஸ்திர வாக்கியங்களை மேற்கோளாக்கி சிலர் அவனது தீர்மானத்தினை ஒட்டிப் பேசியனர், பலர் வெட்டிப் பேசியனர், அவர்களுக்குள்ளே விவாதங்கள் பெரும் கூச்சலுடன் "கதறியும் பதறியும்" நடந்து வந்தன. அவ்விவாதங்கள் அவனைப்

பற்றியதாக இருந்ததால், அவன் அவற்றில் மிகவும் ஈடுபாட்டுடன் பங்கேற்க வேண்டியதாயிற்று. அதனால் அவன் மனம் மிகவும் கலக்கமும் குழப்பமும் அடைந்தது. ஆனால், அவன் என்ன செய்யவேண்டுமென்று ஏற்கனவே தீர்மானித்துவிட்டதனால், இதிலெல்லாம் தன் நேரத்தை வீணாக்கிட விருப்பவில்லை. "பூமேல் மயல் போய் அற மெய்ப்புணர்வீர்" (இவ்வுலகின் மீதான மயக்கத்தைத் துறந்து, பரம்பொருளுடன் ஐக்கியமடைந்து, அதிலேயே நிலைபெறுவாயாக) என்று இறைவன் தந்த அறிவுரையின்படி அவன் நடந்திட சித்தம் கொண்டிருந்தான் (செய்யுள்-17). எனவே, இச்செய்யுளில் அச்சாதகன் "சமய நூல்களைப் பற்றி பதறிக் கதறி விவாதித்து, அதனால் ஏற்படும் அலைகள் மோதுவதைப்போல் தலையிடியால் வேதனைப் பட்டு, அந்த வாதங்களில் மூழ்கி அவைமயமாகவே நான் ஆகிவிடலாகுமோ? (ஓ பெருமானே, அவ்வாறு எனக்கு ஆகிவிடாமல் காப்பாற்றுங்கள்)", என்று பிரார்த்தனை செய்கிறான். இப்பிரார்த்தனையில் அச்சாதகன் தன் குடும்பத்தைத் துறந்து விடும் முடிவில் தளர்வடையாமல் இருப்பதற்குத் தேவையான மன உறுதியையும், சக்தியையும் தந்தருளுமாறும் வேண்டுகிறான் என்பது அடங்கியுள்ளது.

மனிதப்பிறவி கிடைத்தற்கு அரியது. அதன் முக்கியக் குறிக்கோள் இறைவனை அடைவது. அதை பசு-பட்சிகளைப்போல் உண்ணுவதிலும், உறங்குவதிலும், இந்திரிய சுகங்களை அனுபவிப்பதிலும் வீணாக்கிவிடக்கூடாது. அப்படிச்செய்தால் அடுத்த ஜென்மம் என்னவாகக் கிடைக்குமோ தெரியாது. இப்படியாக, சாஸ்திரங்கள் நம்முடைய ஆன்மீக முன்னேற்றத்திற்கு வழிகாட்டுகின்றன. சாஸ்திரக் கல்வி, பண்பையும் ஞானத்தையும் போதிக்கின்றன; ஞானத்திலிருந்து பணிவு ஏற்பட வேண்டும். அக்கல்வி செறுக்கடையச் செய்துவிடக்கூடாது. இதை சாஸ்திரங்கள் பற்பல விதங்களில் கற்பிக்கின்றன. கல்வியால் கர்வமடைந்தவர்கள் எவ்வாறெல்லாம் தங்கள் வாழ்க்கையில் கஷ்டப்பட்டார்கள் என்றும், முற்றும் கற்றிருந்தும் விநயத்துடன் வாழ்ந்த மகான்களின் மகிமை பற்றியும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன. நடத்தையைப் பற்றிய விதிகள், பண்புகளை வளர்த்துக் கொள்ளும் வழிமுறைகள், தியானம் செய்யும் முறைகள், பரம்பொருளை ஆழ்ந்து சிந்தனை செய்தல், இறை-அனுபூதி பற்றிய விஷயங்கள் ஆகியவைபற்றி சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளன. எனவே, சாஸ்திரங்கள் நன்கு கற்கப்பட்டு, அதன் போதனைகள் சரியாக புரிந்து கொள்ளப்பட்டு, அதன் உபதேசங்கள் ஒழுங்காக கடைபிடிக்கப்பட்டு, வாழ்க்கையின்

குறிக்கோளாகிய ஆத்மானுபூதி அடையப்பட வேண்டும். கல்வி, நடைமுறை ஆகி, நடைமுறை அநுபவமாக ஆகவேண்டும். கல்வி கற்பதன் நோக்கம், வாழ்க்கை நேர்மையாக வாழப்படுவதற்கும், வாழ்க்கையின் குறிக்கோளை அறிந்துகொள்வதற்கும், இறுதியில் இறை- அநுபவம் பெறுவதற்குமே. கற்பவை கற்றபின், கற்றதை தினசரி வாழ்வில் செயல்படுத்திட வேண்டும். கற்பது, வாழ்க்கையை வாழ்வதற்கே; வாழ்க்கையை வாழ்வது கற்பதற்கே. சுருங்கக் கூறின்: 'கற்பதே வாழ்க்கை; வாழ்க்கையே கற்பது'. வாழ்வின் குறிக்கோள் இறைவனை அடைவது, அதாவது, இறையுணர்வு பெறுவது; கற்பதின் நோக்கமும் அ஦ே.

திருக்குறளில் (1.2) தமிழ் மாமுனி திருவள்ளுவர், *"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்"* --- ('தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளை தொழாமல் இருப்பாரானால், அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன்தான் என்ன?') என்று கூறுகிறார். நாம் கற்ற கல்வி வாழ்க்கையோடு சம்பந்தப்படாமல் தனியாக இருந்துவிடக் கூடாது. இரண்டும் ஒன்றுடன் ஒன்று ஒட்டி உறவாடிக் கொண்டிருக்க வேண்டும்.

கற்பது, விவாதம் செய்வதற்கு அல்ல; பொருள் சம்பாதிப்பதற்கும் மட்டும் அல்ல. ஆனால், இன்றைய காலத்தில் கல்வி கற்பது பணம் சம்பாதிப்பதற்கு மட்டும்தான் என்றாகிவிட்டது நமது துர்பாக்கியம். சரியான வாழ்க்கை வாழ்வதற்குத் தேவையான அறிவை தற்காலக் கல்வி எவ்விதத்திலும் போதிப்பது இல்லை. அதாவது, வாழ்வை சரியாக எதிர்கொள்வதற்குத் தேவையான அறிவுத் திறனைக் கொடுத்தல், பிரச்சனைகளை சமாளித்து வாழ்க்கையை வாழவைத்தல், வாழ்க்கையின் குறிக்கோளை அடைய வழிகாட்டுதல் ஆகியவற்றில் எந்த ஒன்றையும் தற்காலக் கல்வி போதிப்பதில்லை. இதற்கு நேர்மாறாக, ஒருவன் பள்ளி (அ) கல்லூரிக் கல்வியை முடித்துவிட்டு வெளியேறிய பின்னர், அடுத்து என்ன செய்வதென்று புரியாமல், எந்தவொரு முடிவையும் எடுக்க முடியாமல் கலங்கி நிற்கிறான். உண்மையில், வாழ்க்கை அவனைத் திணற வைக்கிறது. அவனுக்கு வாழ்க்கையில் ஒரு குறிக்கோளும் இல்லை. ஏனெனில் அவன் பெற்ற கல்வி, அதை அவனுக்கு போதிக்கவில்லை. அவன் தனக்கு ஒரு வேலை கிடைத்திடாதா என்று எதிர்பார்த்து இங்குமங்கும் சுற்றிச் சுற்றி வருகிறான். அது ஒன்றே அவன் குறிக்கோளாகிவிட்டது. அதில் அவன் கற்ற கல்வி அவனுக்கு ஒருவேளை உதவலாம். ஆனால், கல்வி கற்பதன் நோக்கம், ஒரு

வேலையை சம்பாதித்துக் கொள்வதற்கு மட்டும்தான் என்று ஆகிவிடக்கூடாது. இதையே திருவள்ளுவர் மிக அழகாகவும் ஆணித்தரமாகவும் பின்வருமாறு திருக்குறளில் (40.1) கூறுகிறார்: *"கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக"*; அதாவது, 'கல்வி கற்க, நல்ல நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும், அவ்வாறு கற்ற பிறகு, கற்ற கல்விக்கு தக்கவாறு வாழ்வாங்கு வாழ வேண்டும்'. மேலும், அவர் பின்வருமாறு கூறுகிறார்: *"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு"* (குறள் 43.3). அதாவது, 'எப்பொருளை யார் யாரிடம் கேட்டாலும் (கேட்டவாறே ஏற்றுக் கொள்ளாமல்) அப் பொருளின் உண்மையை ஆராய்ந்து காண்பதே அறிவாகும்'. எனவே, கற்பது ஒரு வேலையைத் தேடிக்கொள்வதற்காகவோ (அ) வாழ்க்கை முழுவதையும் வீண் விவாதங்கள் செய்வதில் பாழாப்புவதற்காகவோ அல்ல என்பதை நாம் உணர வேண்டும்.

நாம் கற்ற கல்வி நமது வாழ்வில் இழைந்து, நம் அங்கமாகவே ஆகிவிட்டால், நாம் இறைவனின் அருமை பெருமைகளை உணர்ந்து விநயமுடையவர்கள் ஆகிவிடுவோம்; அப்பொழுது விதவிதமான போதனைகளின் மூலம் சாஸ்திரங்கள் நமக்கு எதை போதிக்கமுனைகின்றன என்பது தெரியவரும். அப்படியல்லாமல், கற்ற அறிவு நம் வாழ்வின் அங்கமாகாமல், புத்தகத்திலும் நம் புத்தியிலும் மட்டுமே இருந்துவிட்டால், நாம் அதைப்பற்றிய தற்பெருமையும் அகங்காரமும் அடைகிறோம். அதன் விளைவு என்ன? முற்றிலும் முரண்பாடானது போலத்தோன்றும் வேதாகம அறிவுரைகளை நாம் சரியாகப் புரிந்துகொள்ள முடியாமல், நம்மைப்போன்ற மற்றவர்களோடு வெட்டியாய்ச் சண்டையிட்டு வீண் விவாதங்களில் ஈடுபட்டு வாழ்வை வீணாக்குகிறோம். அவ்வாறாக நடக்கும் மத விவாதங்களிலும், சர்ச்சைகளிலும் என்ன நடக்கிறது தெரியுமா? மனிதன் தன் நல்லொழுக்கத்தை இழக்கிறான். அவன் வீணே தொண்டை தண்ணீர் வற்றக் கத்தி, கூச்சலிட்டு, மற்றவர்கள் கூறுவதை வெட்டி மறுக்கத் தொடங்குகிறான். அவன் மனக் கிளர்ச்சி பெற்று, முற்றிலுமாகக் குழம்பி, வீண் பரபரப்பையடைந்து, உனர்ச்சி வசப்பட்டு, முடிவில் மன அமைதியையே இழந்துவிடுகிறான். அவன் மூளை குழப்பத்தில் ஆழ்ந்து விடுகிறது. எவனுடைய கல்வி, அவனது உள்ளத்துடன் ஒன்றி வாழ்க்கையுடன் கலக்காமல், புத்தியில் வெறும் அறிவாக மட்டும் இருக்கிறதோ, அத்தகைய மெத்தப் படித்த மேதாவிகளின் நிலை பெரும்பாலும் இவ்வாறு அமைந்திருப்பதைக் காணலாம். அவர்கள் தங்கள் முழு வாழ்க்கையையும் மேன்மேலும் பல சாஸ்திரங்களைப் படிப்பதில் செலவிடுகிறார்கள். படித்த சாஸ்திரங்களில் என்னென்ன

குறைகள் உள்ளன என்றறிவதில் கவனத்தைச் செலுத்துகிறார்கள். தாம் படித்த விஷயங்கள்பற்றி மற்றவர்களுடன் சர்ச்சைகள் செய்து, தங்கள் தற்பெருமைகளின் அணிவகுப்பை நடத்திக் காண்பிப்பார்கள். அவர்கள் சூடான விவாதங்களில் வீணாக நுழைகிறார்கள், வேதவாக்கியங்களின் நுணுக்கங்களில் சிக்கிக்கொள்கிறார்கள், அவர்கள் கற்ற கல்வி ஒரு சுமையாகவும் பந்தமாகவும் மாறிவிடுகிறது; அவர்கள் கற்பதின் நோக்கத்தையும், வாழ்க்கையின் குறிக்கோளையும் ஒருசேர இழந்து விடுகிறார்கள். எனவே, "சூடான விவாதங்களில் வீணே ஈடுபட்டு, மனக் குழப்பம் அடைந்து, எதிராளியோடு கத்திப்பேசி சண்டையிட்டு, அறிவை மயக்கும் விவாதங்களில் என்னையே இழந்துவிட வேண்டுமா? ஓ பெருமானே! அவ்வாறு (எனக்கு) நிகழக் கூடாது. 'கற்பதின் நோக்கம் இறை-அனுபூதியை அடைவதற்கே' என்பதை நான் வாழ்க்கையில் ஒருபொழுதும் மறக்காமல் இருப்பேனாக. நான் கற்ற கல்வியால் நான் வாழ்க்கையின் குறிக்கோளிலிருந்து வழுவி, திசை திரும்பிவிடாமலிருக்க என்னை ஆசீர்வதிப்பீர்களாக", என்ற பிரார்த்தனை, நாம் ஒவ்வொருவரும் எப்பொழுதும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்பதற்கான எச்சரிக்கை ஆகும்:

வள்ளி தேவியார், வேடுவ இராஜனான நம்பிராஜன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு, வேடர்களின் மத்தியில் வளர்ந்தார். வேடுவர்கள் மிருகங்களைக் காட்டில் வேட்டையாடிக் கொன்று வந்தனர். அவர்கள் இயற்கையிலேயே கொடுங்குணம் கொண்டவர்கள். அவர்களிடையே வள்ளி தேவியார் வாழ்ந்து வந்தாலும், தேவியார் தெய்வீக குணம் படைத்திருந்தார்; எப்படி யானைகள் ஒரு சிறு சத்தம் கூட எழாமல் மிகவும் நளினமாக நடக்க வல்லதோ, அப்படியே அவரும் மிக நளினமானவர்.

வள்ளியம்மை ஜீவாத்மா; அவர் கொடூரமான வேடுவர்கள் மத்தியில் வாழ்ந்து வந்தார். வேடுவர், கொந்தளிக்கும் மனமும் இந்திரியங்களும். ஜீவாத்மாவின் இயல்பு புலன்களின் இயல்புகளிலிருந்து முற்றிலுமாக வேறுபட்டது. மனமும் புலன்களும் புலனின்பங்களின் வெறித்தனமான (காட்டு) விளையாட்டில் எப்பொழுதும் ஈடுபடுகின்றன. ஆனால், ஜீவாத்மாவோ இறைவனுக்குச் சொந்தமானது என்பதால், இறைவனையே நாட விழைகிறது. வள்ளி தேவியார் ஒரு யானைக்கும், முருகப் பெருமான் ஒரு மலைக்கும் ஒப்பிடப்பட்டிருக்கிறார்கள். மலையும், மலை சார்ந்த காடுகளுமே யானைகள் வாழுமிடம். அதேபோல், ஜீவாத்மாக்களின் உண்மையான உறைவிடம் இறைவனே, வேடுவர்களல்ல, அதாவது மனம் மற்றும் புலன்கள் (உடல்) அல்ல.

சூரபத்மனையும் மற்றும் பல அசுரர்களையும் வெற்றி கொண்டதால், வெற்றிவாகைகள் (மலர்மாலைகள்) எப்பொழுதும் வேலாயுதப் பெருமானின் மார்பில் திகழ்கின்றன. அவரிடம் வேல் உள்ளது --- அதுவே 'வெற்றி வேல்'. பிறிதொரு காலத்தில் முருகப் பெருமான் வந்து அழித்திடும்வரை மலையாகவே இருக்கும்படி அகஸ்தியர முனிவரால் சபிக்கப்பட்ட அசுரன் கிரௌஞ்சனை கொன்றதும் கந்தப் பெருமானின் வேல்தான்.

அசுரர்களை வதம் செய்த பெருமானின் அதே கரங்கள்தான் வள்ளி தேவியையும் அணைத்தன. இதன் தாத்பரியம் ----- எம்பெருமான் கொடூரமானவர்களுக்குப் பேரச்சம் தருபவராகவும், பக்தி செய்பவர்களுக்கு அன்புடையவராகவும் இருக்கிறார் என்பதாகும். அவர் தவறு செய்தவர்களை தண்டிக்கிறார். அதேசமயம் பக்தர்களிடம் அன்பு செலுத்துகிறார். அப்படிப்பட்ட வேலாயுதப் பெருமானிடம், "ஓ பெருமானே! நீங்கள் அசுரர்களையும், கிரௌஞ்ச மலையையும் அழித்து வெற்றி வாகை சூடியவர். தங்களின் திருச்சமூகத்தில் வள்ளியை ஏற்றீர்கள். தங்களால் கொடுக்கப்பட்ட என் கல்வியும் அறிவும் (செய்யுள்-17) என்னிடம் கர்வத்திற்கோ, தேவையற்ற விவாதங்களுக்கோ வழி வகுத்திடாமல் இருக்கட்டும்; நான் இறை-அனுபூதியை அடைய அது வழிவகை செய்யட்டும்." என்று அச்சாதகன் பிரார்த்தனை செய்கிறான்.

==========

செய்யுள் - 33

==========

சிந்தாகுல இல்லொடு செல்வமெனும்
விந்தாடவி என்று விடப்பெறுவேன்
மந்தாகினி தந்த வரோதயனே
கந்தா முருகா கருணாகரனே.

பொழிப்புரை: "ஓ கந்தப் பெருமானே! முருகா! கருணையின் உறைவிடமே! மந்தாகினிநதியில் வரத்தினால் உதித்தவனே! மனதிற்குத் துயரத்தைத் தருகின்ற, அடர்ந்து-படர்ந்திருக்கும் விந்தியமலைக் காடுகளைப் போன்றிருக்கும் (அதில் புகுந்தவர் அதிலிருந்து வெளிவரமுடியாது தவிப்பர்) குடும்பம் மற்றும் செல்வம் ஆகிய இவற்றிலிருந்து நான் எப்போது விடுதலை பெறுவேன்?" (இவற்றிலிருந்து என்னை விடுவித்து அருள்வாயாக.)

விளக்கவுரை

முந்தைய செய்யுளில் அச்சாதகன் குடும்பத்தைத் துறந்து, சன்னியாச வாழ்க்கை மேற்கொள்ள உறுதி பூண்டதைப் பார்த்தோம். அவ்வாறு துறந்திடும் விருப்பம் நாள்தோறும் மேன்மேலும் வலுவடைகிறது. அதற்குமேல் தன்னால் பொறுக்க முடியாது என்ற நேரமும் அவனுக்கு வரத்தான் செய்தது. அதனால், அவன் கருணாமூர்த்தியான பெருமானிடம் முறையிடுகிறான்: "ஓ கந்தப் பெருமானே! முருகா! கருணாகரனே! சிவனாரின் வரத்தால் மந்தாகினி (கங்கை) நதியில் அவதரித்தவரே! அனைத்து மனத் துயரங்களுக்குக் காரணமானதும், அடர்ந்த விந்திய மலைக் காடுகளை ஒத்த குடும்பம் மற்றும் சொத்து ஆகிய இந்த சம்சார பந்தத்திலிருந்து, நான் எப்போது விடுபடுவேன்?" (இப்பிரார்த்தனையிலேயே அதன் விடையான தீர்வும் அடங்கியுள்ளது.) இப்பிரார்த்தனைக்கு செவிசாய்த்து அருள்புரிந்த பெருமானின் கருணையால், அவன் தன் வீட்டைத் துறந்து, விந்திய மலைக் காடுகளுக்கு அப்பால், புனித மந்தாகினி (கங்கை) நதிக்கரையில் அமைந்திருக்கும் தன் குருவின் ஆசிரமத்தை அடைகிறான். ஒவ்வொரு செய்யுளிலும் அருணகிரியார் பெருமானை குறிப்பிடப் பொருத்தமான அடைமொழிகளைப் பயன்படுத்துகிறார்.

செய்யுள்கள் அடங்கிய இந்நூலில், முப்பத்திரண்டு செய்யுள்களுக்குப் பின்னர் இச்செய்யுளில் (33) தான், முதன் முதலாக கங்கையைப்பற்றி குறிப்பிடுகிறார். இதிலிருந்து அச்சாதகன் அங்கு சென்றிருக்கிறான் என்று குறிப்பிடுவதுபோல் தோன்றுகிறது. முருகப் பெருமான் 'மந்தாகினி தந்த வரோதயன்'. அவர் சிவபெருமானால் தேவர்களுக்கு வரமாகக் கொடுக்கப்பட்ட ஒரு அவதாரம். (இதன் முழு விவரம் காப்புச் செய்யுளில் கொடுக்கப்பட்டுள்ளது.) இந்த அவதாரமே அடுத்த செய்யுளில் 'கங்கா நதி பாலன்'' என்று கூறப்படுகிறது; 50வது செய்யுளில் பொதுவாக 'நதி புத்திரர்' என்று கூறப்படுகிறது. கங்கா நதிக்கு 'அலகனந்தா' என்ற ஒரு பெயரும் உண்டு. எனவே, அனைத்து நதிகளுமே கங்கையின் வெவ்வேறு பெயர்கள், பிரதிநிதிகள் எனலாம்.

(குறிப்பு: பொதுவாக எல்லா நதிகளுமே ---- ஏரிகள், குளங்கள், கிணறுகள், ஆகிய அனைத்து நீர்நிலைகளுமே ---- 'கங்கை' என்றுதான் கருதப்படுகிறது. இது நம்முடைய பண்பாடு (மரபு). அதனால்தான், தீபாவளி தினத்தன்று 'கங்கா ஸ்னானம் ஆயிற்றா?' என்று ஒருவரையொருவர் கேட்டுக் கொள்கிறார்கள், அவர்கள் அனைவரும் தங்கள் தங்கள் வீட்டிலேயே குளித்திருந்தாலும்கூட. எனவே, அச்சாதகன் கங்கை நதிக்கரையில் அமைந்திருந்த தன் குருவின் ஆசிரமத்தை அடைந்ததாகக் கூறப்படும்பொழுது, அந்த நதி எந்த நதியாகவும் இருக்கலாம்; எல்லா நதிகளும் கங்கைதானே!)

சம்சாரம் துயரமும் துன்பமும் நிறைந்தது. வீட்டு வாழ்க்கையில் இருக்கும் பிரச்சனைகள் எண்ணற்றவை. வீடு, வாசல் (சொத்து), மனைவி, மக்கள் (குழந்தைகள்) எல்லாம் துன்பங்களுக்கு மூல காரணம். இருந்தாலும், அவை மிகவும் வசீகரமாய் இருக்கின்றன, அதனால் அவைகளில் ஈடுபடுவதும் மிகவும் எளிதாயிருக்கிறது. அவை அழகாகவும், விரும்பத்தக்கதாகவும் தோற்றமளிக்கின்றன; அவை தூரத்தில் இருக்கும்வரை, அதாவது அவைகளை ஒருவன் அடையாதவரையில், அழகாகத் தோன்று-கின்றன. எனவே, அவைகளை அடைய மனிதன் பெருமுயற்சி செய்கிறான், மேலும் அவைகளை அவன் அடையும்வரை அமைதி-யின்றித் தவிக்கிறான். ஆனால், அவற்றை அடைந்து அநுபவித்த பின்னர், அவை தங்கள் வசீகரத்தை இழப்பதோடல்லாமல், அவனது மன வேதனைகளுக்கு காரணமாகிவிடுகின்றன. அவை அவனது மன அமைதியை முழுவதுமாக சூறையாடி, அவனை தூக்கமற்றவனாக்கி விடுகின்றன. குடும்ப வாழ்வின் துன்பங்களும், கவலைகளும் அனைவருக்கும் மிக நன்றாகத் தெரிந்திருக்கிறபடியால், இதற்கு மேலும் விவரிக்கத் தேவையில்லை தானே (கொல்லன் தெருவில்

ஊசி விற்க முயலுவது உசிதமல்லவே)? அவைகளுடன் ஈடுபாடு கொண்டபின்னர், அவற்றை அவன் விட்டுவிட விரும்பக்கூடும், ஆனால் அவனால் அவ்வாறு செய்ய இயலாது. அவன் அவற்றை விட்டுவிலக விரும்பினாலும், அவை அவனை ஒருபொழுதும் விடுவதில்லை. அவன் இவ்வாறு பரிதாபகரமாகச் சிக்கி, முடிவில் இறந்தும் போகிறான். குடும்பம் மற்றும் சொத்து ஆகியவைகள் தாங்கவொண்ணாத, விடுவித்துக் கொள்ள முடியாத, மனதைத் தளரச்செய்யும் தொல்லைகள் பலவற்றை தந்து, சலிக்க வைக்கும் இயல்பு கொண்டிருப்பதனால், அருணகிரியார் இவைகளை மத்திய இந்தியாவில் இருக்கும் விந்திய மலைக் காடுகளுக்கு ஒப்பிடுகிறார். எப்பொழுதும் பசுமையாயிருக்கும் விந்திய மலைக் காடுகள் அழகாகவும் கவர்ச்சிகரமாகவும் இருக்கும். அக்காட்டின் அழகினால் வசீகரிக்கப்பட்டு, ஒருவன் அதனுள் நுழைந்துவிட்டால், அதன் அழகை அநுபவித்துக்கொண்டே தன்னை மறந்து வெகுதூரம் அதனுள் சென்றுவிடுவான். அக்காட்டின் நடுவில் செல்லச்செல்ல அது மேன்மேலும் அடர்த்தியாகிக் கொண்டே போவதால், அவன் திரும்பிச் செல்லும் வழியை கண்டுபிடிக்க முடியாமல் திணறி, இறுதியில் காட்டு மிருகங்களுக்கு உணவாகி விடுகிறான். மனைவி, குழந்தைகள், சொத்து ஆகியவற்றுடனான இல்வாழ்க்கையும் இதே போன்றதுதான். இல்வாழ்க்கை ஆரம்பத்தில் கவர்ச்சிகரமாயிருந்து, பின்னர் பிரச்சனைகளுக்கு மேல் பிரச்சனைகளைத் தந்து, அவனை இன்னும் அதிக சிக்கல்களில் ஆழ்த்துவதனால், அவன் தன்னையே இழந்து விடுகிறான்; இப்பிரச்சினைகள் அனைத்தையும் சரிசெய்து தன்னை விடுவித்துக் கொள்ள அவன் முயற்சி செய்வதிலேயே அவனது வாழ்நாள் முழுவதும் ஓடிப்போய் விடுகிறது. அதனால், இறைவனை வழிபட நேரமும், சக்தியும் அவனிடம் இருப்பதில்லை. வீடு மற்றும் சொத்து ஆகியவைகளின் மீதான ஈர்ப்பு மன அமைதியையே குலைத்து விடுகிறது, மேலும் அவை ஆன்மீக முன்னேற்றத்திற்குப் பெரும் தடைகளாகி விடுகின்றன. இதை அருணகிரியார் இங்கு எடுத்துரைக்கிறார்.

குடும்ப வாழ்க்கையில் தவறு ஒன்றுமில்லை; வீட்டிலிருந்து கொண்டே இறைவனை வழிபட முடியும், அப்படி வழிபட்ட பலர் அவரை அடைந்திருக்கிறார்கள். எனினும், குடும்ப வாழ்க்கையில் இருக்கும் ஒரு சாதாரண மனிதன் தன் நிலமை வேறுவிதமாக இருப்பதையே பொதுவாகக் காண்கிறான். அவன் எல்லாப் பக்கங்களிலிருந்தும் துன்புறுத்தப்படுகிறான். அருணகிரிநாதர் ஒரு நடைமுறை அருளாளர், மக்கள் தங்கள் குடும்ப வாழ்க்கையில் சந்திக்கும் பரிதாப நிலையை தன் மனக்கண்ணால் அவரால் காணமுடியும். உள்ளதை உள்ளவாறே எடுத்துச் சொல்வதில் அவர்

வல்லவர் ---- உயரிய ஆன்மீக அனுபவங்களை மறை மொழியில் விளக்கிக் கூறுவதானாலும் சரி, அல்லது மோசமான இவ்வுலக வாழ்க்கையை மனதில் பதியும்படி தெளிவான முறையில் எடுத்து விவரிப்பதானாலும் சரி. இந்தக் "கந்தர் அநுபூதி" நூல் இறை-அநுபூதியெனும் இறையுணர்வு அநுபவங்களைப் பற்றிய ஆய்வு நூலானதால், அருணகிரியார் எதுஎது எப்படியெப்படி உள்ளதோ அப்படியப்படியே -- நமக்குப் பிடித்திருக்கிறதா இல்லையா என்றெல்லாம் பாராமல் – சொல்ல வேண்டி இருக்கிறது. அதனால், நாமும் அவைகளை அதனதன் உண்மையான அர்த்தத்தில் புரிந்துகொள்ள வேண்டும், விபரீதமாகப் புரிந்து கொள்ளக்கூடாது.

மனிதன் அநேகமாகத் தன்னறிவின்றியே பாலியல் மற்றும் பேராசையில் அகப்பட்டுக் கொள்கிறான். ஆனால், பின்னர்தான், அவன் செய்த தவறை உணர்ந்து, கடைசியில் அவைகளிலிருந்து விடுபட முயற்சிக்கும் பொழுது, அது முடியாத காரியமாகிறது. அவன் அவற்றை விட்டுவிடத் தயாராயிருக்கிறான், ஆனால் அவை அவனை விடுவதாக இல்லை. எப்படி விந்திய மலைக்காடுகளில் மாட்டிக் கொண்ட ஒருவன் எவ்வளவுதான் முயன்றாலும் அதிலிருந்து வெளியேவர வழி காணமுடியாமல் தவிக்கின்றானோ, அப்படியே இல்வாழ்க்கையில் முழுமையாக மாட்டிக்கொண்ட ஒருவன் அவைகளிலிருந்து தன்னை விலக்கிக் கொள்ள முடியாது பரிதவிக்கிறான். எனவேதான், அவன், "நான் எப்போது '*விடப்பெறுவேன்*?" என்று கடவுளிடம் கேட்கிறான். ஒருவன் தன்னுடைய சொந்த முயற்சியால் மட்டுமே இந்தப் பிரசனைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள இயலாது. எவ்வளவு தீவிரமாக அவன் அவற்றை விட்டுவிட முயற்சிக்கிறானோ, அதைவிடத் தீவிரமாக அவை அவனை இறுகப் பிடித்துக் கொள்ளும். இதற்கான தீர்வு, அவன் தன் மனதை இறைவன்மீது நிலைநிறுத்துவதுதான். *"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு"* --- "நம்மிடத்திலுள்ள எல்லா பற்றுக்களையும் விட்டொழிப்பதற்கு, பற்றில்லாதவனாகிய இறைவனுடைய தாளை மட்டும் நாம் பற்றிக் கொள்ள வேண்டும்." என்று திருவள்ளுவர் தனது குறளில் (34.9) கூறுகிறார். பெண்ணாசை மற்றும் பொன்னாசை இவைகளிலிருந்து நம்மை விடுவித்திட இறைவன் ஒருவரால் மட்டுமே இயலும். ஆகையால், 'விடப்பெறுவதற்காக' பிரார்த்தனை செய்யப்படுகிறது, 'விட்டுவிடுவதற்காக' இல்லை. அதனால்தான், அச்சாதகன் 'நான் எப்பொழுது விடுவேன்' என்று பிரார்த்தனை செய்யாமல், 'நான் எப்போது விடுவிக்கப்- படுவேன்' என்று பிரார்த்திக்கிறான். இறைவனுடைய கிருபையை பெற்றிடுவதே சம்சாரத்திலிருந்து

விடுபடுவதற்கான ஒரே வழியாகும். இரக்கமும் கருணையும் பூரணமாக முருகனிடம் குடிகொண்டு இருக்கின்றன. எனவே இச்செய்யுளில், "மந்தாகினி தந்த வரோதயனே, கந்தா முருகா கருணாகரனே, ... என்று விடப்பெறுவேன்?" என்று சாதகன் முருகப் பெருமானிடம் கேட்கிறான்.

கந்த அவதாரத்தில் ஒரு மகத்தான தத்துவம் இருக்கிறது. இறைவனுடைய அவதாரம் என்பது, வானம் (ஆகாசம்), காற்று (வாயு), நெருப்பு (அக்னி), நீர் (ஆப: - கங்கா), மண் (பிருத்வி) ஆகிய ஐந்து அடிப்படை கூறுகளினாலான (பஞ்ச பூதங்களாலான) இந்த வியவகார உலகில் (in the relative plane), பரம்பொருள் தத்துவம் தோன்றுவதைக் குறிக்கிறது. இது ஐங்கூறுகளின் காரியமான (சாதகனின்) மனதில் உதிக்கும் ஆன்மீக விழிப்புணர்வைக் குறிப்பிடுகிறது. இம்மனம் பெண்ணாசை மற்றும் பொன்னாசை ஆகியவைகளின் தொந்தரவிற்கு ஆளாகி, அவைகளிலேயே மூழ்கி இருந்தது; இதிலிருந்து மனதை (அச்சாதகனை) விடுவிக்கக் கோரி இச்செய்யுளில் பிரார்த்தனை செய்யப்படுகிறது. கந்தனுக்கு இன்னொரு பெயர் முருகன். முருகன் என்றால் "என்றும் இளமையாகவும், அழகாகவும், தெய்வத்தன்மையுடன் இருப்பவர்" என்று பொருள். அவர் அழகுக்கெல்லாம் அழகு; மேலும் அனைத்து விஷயங்களின் பின்புலமாயிருக்கும் தெய்வத்தன்மையும் அவரே ஆவார். அவரின் பிரதிபலிப்பே எப்பொருளிலும் காணப்படும் அழகு மற்றும் மதிப்பு ஆகும். வீடு, வாசல் (சொத்து), ஆகியவைகளில் நமக்கிருக்கும் ஈர்ப்பு, முருகப்பெருமானிடம் சரண் புகுந்து ஆத்மாவை அடையும் அவாவாக மடை (பண்பு) மாற்றப்பட வேண்டும். அவர் மந்தாகினி தந்தவரானாலும் சரி, வரத்தின் அவதாரமானாலும் சரி, கந்தனானாலும் சரி, முருகனானாலும் சரி, எப்படி வேண்டுமானலும் அவரை அழைத்துக் கொள்ளுங்கள்; ஆனால், அவர் ஒருவரே மொத்த கருணையின் உருவம், இரக்கத்தின் விளைவு. அத்தகைய பெருமானிடம், "ஓ கந்தப் பெருமானே! தேவர்கள் தங்கள் சொந்த சக்தியால் அசுரன் சூரபத்மனுடன் சண்டையிட முடியவில்லை. எனவே, அவர்கள் சிவனாரை வேண்ட, அவர் தந்த வரத்தினால் நீங்கள் அவதரித்தீர்கள், சூரபத்மனை அழித்தீர்கள். நானும் தேவர்களைப் போன்றே, வீடு, வாசல் ஆகியவைகளின் மீதுள்ள ஆசைகள் ஏற்படுத்திய பந்தங்களோடுச் சண்டையிட்டு என்னை விடுவித்துக் கொள்ள முடியவில்லை. என்மேல் கிருபை கொண்டு, என்னில் உதித்து, என்னை இவைகளின் பிடியிலிருந்து விடுவிப்பீராக, ஓ கருணைக் கடலே!" என்று அச்சாதகன் பிரார்த்தனை செய்கிறான்.

==========

செய்யுள் - 34

==========

சிங்கார மடந்தையர் தீநெறி போய்
மங்காமல் எனக்கு வரம் தருவாய்
சங்க்ராம சிகாவல ஷண்முகனே
கங்காநதி பால க்ருபாகரனே.

பொழிப்புரை: "ஓ ஷண்முகப் பெருமானே! போர்த் திறம் மிக்க மயிலை உடையவனே! கங்கையின் மைந்தனே! கருணையின் உருவமே! அலங்காரம் செய்துகொண்டு ஆடவரை மயக்கும் பொது மகளிரின் தீய வழியில் நான் சென்று அழிந்துபோகாதிருக்க எனக்கு வரம் தந்தருளுங்கள்!"

விளக்கவுரை

வீட்டைத் துறந்து, சந்நியாசம் எடுத்துகொள்ள, புனித கங்கை நதிக்கரையில் அமைந்திருக்கும் தன் குருவின் ஆசிரமத்தை அச்சாதகன் அடைந்தான் (செய்யுள்-33). சன்னியாச ஆசிரமத்தில் நுழைவதற்குமுன் தன்னைத் தயார் செய்து கொள்வதற்காக, அவன் முருகனிடம் ஒரு வரத்தைக் கேட்கிறான். "கங்கை நதியின் மைந்தனே! ஓ கருணைக் கடலே! வசியப்படுத்தும் மங்கையர்களின் தீய வழிகளில் நான் என்னை அறியாமலேயே சென்று பாழாகிவிடாமல் இருக்க எனக்கு வரம் வழங்குங்கள்" என்று கேட்கிறான். சிங்கார மங்கையர் வசப்பட்டு சீரழிந்துவிடாமல் இருக்க ஒரு *'வரம்'* தந்து அருள்புரியுமாறு வேண்டுகிறான்.

ஆன்மீக சாதனையின் ஆரம்ப காலகட்டத்தில், அச்சாதகன் மனைவி-மக்களின் அன்புவலையில் அகப்பட்டு காமத்தினால் துன்புறுத்தப் பட்டான் (செய்யுள்-4 & 5); பின்னர், குருவின் உபதேசம் பெற்ற பிறகு, பெண்களின் முன்னிலையிலோ (அ) அவர்களைப் பற்றிய எண்ணங்களினாலோ அவன் மனம் அவர்கள்பால் இழுக்கப்பட்டு ஊசலாடியது (செய்யுள்- 9); பின்னர், குருவிடமிருந்து தீக்ஷை பெற்று, தியானத்தை முறையாகச் செய்திடும் நுட்பத்தை அவரிடமிருந்து அறிந்து, தியானத்தின் மேம்பட்ட நிலைகளுக்கு அவன் முன்னேறிய பிறகு, அவனது ஆழ்மனதில் நுண்ணிய மற்றும் காரண நிலைகளில் புதைந்திருந்த கடந்தகால சிற்றின்ப அனுபவங்களின்

சுவடுகள் நனவு நிலைக்கு மேலெழும்பி அவனை தொந்தரவு செய்து வந்தன (செய்யுள்-24). இப்பொழுது, சற்றேகுறைய சமாதி அனுபவம் பெற்ற பின்னர் (செய்யுள்-28), இனிமேற்பட்டு காமத்தினால் பாதிக்கப்பட மாட்டோம் என்ற நம்பிக்கை அவனுக்கு வந்துவிடுகிறது. எனினும், ஆத்மானுபூதி பெற்றிடும்வரை இந்த அபாயம் இருப்பதால், வசியப்படுத்த முயலும் பெண்களால் தூண்டப்பட்டு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தீய வழியில் செல்வதிலிருந்து தன்னைப் பாதுகாத்துகொள்ள, முருகனிடம் வரம் தந்து அருளுமாறு வேண்டிக் கொள்ளுகிறான். இதில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், காமத்திலிருந்து விடுதலை பெற முன்பு பிரார்த்தனைகள் செய்ததுபோல் அல்லாமல், இப்பொழுது அவன் இறைவனிடம் வேண்டுவது ஒரு 'வரம்' மட்டும்தான்; அதாவது, அவன் சன்னியாசம் மேற்கொள்ள இருப்பதால் அத்தகைய சம்பவங்கள் ஒரு விபத்து போலவோ தற்செயலாகவோகூட தனக்கு நிகழ்ந்திடாதிருக்கவும், அவைகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும், இவ்வரத்தை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகத்தான் வேண்டுகிறான். இறை-கிருபையுடன் அவன் நித்திய கண்காணிப்புடன் இருக்கவேண்டியது மிகவும் அவசியம். ஏனெனில் ஒரு சிறு கவனக் குறைவு ஏற்பட்டாலும் தவறிவிடும் அபாயம் எந்த சமயத்திலும் நேரிடக்கூடும். பலகாலம் தனிமையிலிருந்து கடும்தவம் செய்த முனிவர்கள்கூட, சிறு கவனக் குறைவாக இருந்ததால், இக்காம உள்ளுணர்வுக்குப் பலியாகி விட்டதைப் பற்றிப் புராண இதிகாசங்கள் கூறுகின்றன. எனவே ஒருபொழுதும் இவ்விஷயத்தில் அசட்டையாக இருந்திடக்கூடாது. இறை-அனுபூதி பெற்றிடும்வரை, ஒருவன் எச்சரிக்கையாகத் தான் இருக்க வேண்டும். ஸ்ரீமத் பகவத் கீதை (2-59), "பரம்பொருளை ஒருவன் கண்டுணர்ந்த பின்னரே, புலனின்பப் பொருள்களின் மீதான அவனது ருசி அழிபடுகிறது" *(ரசோப்யஸ்ய பரம் திருஷ்ட்வா நிவர்ததே),* என்று அறிவிக்கிறது.

'கங்கைநதி பால', 'க்ருபாகரன்' ஆகிய இரு அடைமொழிகள் இச்செய்யுளிலும், 'மந்தாகினி தந்த வரோதயன்', 'கருணாகரன்' என்று முந்தைய செய்யுளிலும் குறிப்பிடப்படுவதிலிருந்து, பெருமானின் கிருபை கிடைத்து, அச்சாதகன் கங்கைக் கரையிலுள்ள ஆசிரமத்தில் சேர்ந்துவிட்டான் என்பதும், அவன் வேண்டிய வரங்கள் கிடைத்து விட்டன என்பதும் உறுதியாகத் தெரிகிறது.

ஒருவன் இறை-அநுபூதியை அடையும்வரையில், காமமும் அகங்காரமும் இறுதிவரை விடாப்பிடியாக அவனைத் தொடரும். ஒருவன் தன் வீடு, வாசல்களைத் துறந்து, ஏகாந்தத்தில் வாழ்வானாயின், மயக்கும் கன்னிகளின் வலையில் அவன் விழுந்து

விடுவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கத்தான் செய்கிறது. எனவே, அவ்வாறு தனக்கு நிகழ்ந்திடாமல் காத்தருளும்படியான ஒரு வரத்தை ஷண்முகப் பெருமானிடம் அச்சாதகன் வேண்டுகிறான். இது ஒரு நேரடியான மற்றும் எளிய பிரார்த்தனையாக அமைந்திருப்பது இதன் விசேஷம். இதுவரை நாம் பார்த்து வந்த செய்யுள்களில், பிரார்த்தனைகள் இச்செய்யுளில் உள்ள மாதிரி நேரடியாக இருக்கவில்லை --- 'எப்பொழுது அருளுவீர்கள்?', 'நான் துன்பப்படத்தான் வேண்டுமா?', 'எவ்வளவு காலம்? --- இவ்வாறான பரிதாபகரமான முறையீடுகளைத்தான் நாம் இதுவரை பார்த்தோம். ஆனால், இங்கே பிரார்த்தனை ஒரு நேரடி கோரிக்கையாயிருக்கிறது, "எனக்கு ஒரு வரம் தாருங்கள்". இது மிகவும் குறிப்பிடத்தக்கது. அப்போதைக்கு வேண்டுமானால் அவன் காமத்தினால் பாதிக்கப்படாமலும் பெண்களால் வசீகரிக்கப் படாமலும் இருக்கலாம்; ஆனால் அவன் காம உணர்வுகளை கடந்து விட்டதாகவோ, அதற்கு அடிபணிந்திட மாட்டேனென்றோ ஒருபொழுதும் நம்பிக்கையுடன் இருக்கமுடியாது. ஆகவே, இப்படிப்பட்ட தவறுகள் தன்னையறியாமலேகூட நிகழ்வதிலிருந்து தன்னைக் காத்துக் கொள்வதற்காக அவன் பெருமானிடம் வரம் கோருகிறான்.

கேட்கப்பட்டது வரம். வரமென்பது தெய்வீக நன்கொடை (அனுக்கிரகம்). வரத்தால் பிணி நிரந்தரமாகக் குணமாகிடும்; மனித முயற்சியில் அப்பிணி திரும்ப வரும் அபாயமுண்டு. எனவே, வரம் கோரப்படுகிறது. இந்த வரம் யாரிடம் கேட்கப்பட்டது? கிருபையின் உருவகமான "கிருபாகரனிடம்" கேட்கப்பட்டது. 'கிருபை' மற்றும் 'வரம் அளிப்பது' இவ்விரண்டும் சேர்ந்தேயிருக்கும் தன்மையுடையது. 'வரம் அளிப்பது' என்பது அருட்கொடை; அதாவது, தகுதியில்லாத பொழுதும் தரப்படுகிற ஒன்று. இது கிருபையால் தரப்படுவது. கிருபை கொண்டு தரப்படுவதுதான் வரம். அச்சாதகன் இங்கு வேண்டுவது அத்தகைய வரத்தைத்தான். எவ்வளவுதான் கடின முயற்சி செய்தாலும், பெண்ணாசையை சுய முயற்சியினால் மட்டும் களைந்திட இயலாது. யாருக்கெல்லாம் இறை-கிருபை கிடைத்ததோ, அவர்கள் மட்டுமே இப்பிணியிலிருந்து நிரந்தரமாகக் குணமடைந்தார்கள். காமத்தின் பிடியிலிருந்து ஒருவனை இறை-கிருபை மட்டுமே விடுவிக்க முடியும். எனவே, அச்சாதகன் கருணாகரனான பெருமானிடம் வரம் வேண்டி பிரார்த்தனை (இச்செய்யுளில்) செய்கிறான். பெருமான் இங்கு 'கங்காநதி பாலன்' என்று அழைக்கப்படுகிறார். முந்தைய செய்யுளில், முருகப் பெருமான் தேவர்களுக்கு வரமாக அளிக்கப்பட்டதையும், மந்தாகினியில் அவதரித்ததையும் நாம் பார்த்தோம். 'மந்தாகினி-தந்தவன்' (அ) 'கங்கை-புதல்வன்' இரண்டும் ஒன்றே. அவரே ஆறுமுகம் கொண்டவர். அவர்

ஆறுமுகக் கடவுள் (ஷண்முகர்). அதில் ஒரு முகம் 'கூறுமடியார்கள் வினை தீர்க்க வந்த முகம் - (வரம் தரும் முகம்)'. "ஓ ஷண்முகப் பெருமானே! கங்கையின் மைந்தனே! கிருபாகரனே! நீங்கள் வரமாகத் தேவர்களுக்கு அளிக்கப்பட்டீர்கள்! இப்பொழுது, நான் 'சிங்கார மடந்தையர் தீநெறி போய் மங்காமல் இருக்க' நீங்கள் எனக்கு வரமளியுங்கள்" என்று சாதகன் வேண்டுகிறான்.

==========

செய்யுள் - 35

==========

விதிகாணும் உடம்பை விடா வினையேன்
கதிகாண மலர்க்கழல் என்று அருள்வாய்
மதிவாணுதல் வள்ளியை அல்லது பின்
துதியா விரதா சுரபூபதியே.

பொழிப்புரை: "ஓ தேவலோகத்திற்கு ஈஸ்வரனே! ஓ கந்தப் பெருமானே! ஒளிவீசுவதும் பிறைச் சந்திரனைப் போன்றதுமாகிய நெற்றியையுடைய வள்ளிதேவியைத் தவிர வேறு யாரையும் துதிக்காத (புகழாத) விரதம் பூண்டவரே! (இன்னும் பல ஜென்மங்களில்) கர்மங்களை அநுபவிக்கும் உடலை விடமுடியாத (தவிர்க்க முடியாத)) அளவிற்கு (சஞ்சித) கர்மங்களை உடையவனாகிய நான் நற்கதியை (முக்தியை) அடையத் தங்கள் தாமரைமலர் போன்ற திருப்பாதங்களை எனக்கு என்று அருள்வீர்."

விளக்கவுரை

அச்சாதகன் இப்பொழுது தன் குருவை அடைந்து விட்டான்; மேலும், சிங்கார பெண்கள் விரிக்கும் வலைக்குள் விழுந்து மங்கிவிடாத வரம் ஒன்றையும் இறைவனிடமிருந்து பெற்றுக் கொண்டான் (செய்யுள்-34); அதனால், எவ்வித இடர்ப்பாடுகளும் இல்லாமல், ஆன்மீக சாதனைகளைச் செய்வதில் அவனால் தன் மனதைப் பூரணமாக ஈடுபடுத்த முடிகிறது. இத்துடன், இறைவனை அடைய வேண்டுமென்ற ஆர்வமும் அவனிடம் தீவிரமாக வளரத் தொடங்கியது. அம்மகத்தான சற்றேகுறைய இறை-அநுபவத்திலிருந்து (செய்யுள்-28 & 29) தன்னை மாயையான இவ்வுலக-வாழ்விற்கு இழுத்துக் கொண்டுவந்த ("தாழ்வானவை செய்தன" -- செய்யுள்-31) கர்மங்களை எப்படியாவது முடிவிற்கு கொண்டுவர அவன் ஆர்வம் கொண்டான். எனவே, "ஓ பெருமானே! வள்ளி தேவியைத் தவிர வேறு எவரையும் துதிக்காதவரே! விதியை அநுபவிப்பதற்காக மீண்டும் மீண்டும் உடல் எடுத்து உழலுவதிலிருந்து (பிறவிச் சுழலிலிருந்து) விடுபட இயலாத அளவிற்கு என்னுடைய (சஞ்சித) கர்மங்கள் உள்ளன. இவற்றிலிருந்து விடுபட்டு, நான் முக்தியை அடையத் தங்கள் தாமரைமலர் போன்ற திருப்பாதங்களை என்று அருள்வீர்!" என்று

அவன் இறைவனிடம் பிரார்த்திக்கிறான். தன்னை நினைத்து ஏங்குகிற ஜீவாத்மாக்களை உடனே ஏற்றுக்கொள்ளும் பெருமானின் தெய்வீகக் கொள்கையை, வள்ளிதேவியின் விஷயத்தில் அவர் கடைப்பிடித்ததை, அவருக்கு இங்கு ஞாபகப்படுத்தி, தானும் அவ்வாறு அவரின் கருணையைப் பெறுவதற்காகவே, அவர் வள்ளி தேவியைப் பாராட்டி வணங்குவதை அச்சாதகன் வர்ணனை செய்தான்போலும். மேலும், இது, தன்னை சம்சாரத்திலிருந்து விடுவித்துக் கொள்ள அவனுக்கு இருக்கும் தீவிர விருப்பம், இறைவனைத் திருமணம் புரிந்து கொள்வதில் வள்ளி தேவி காட்டிய தீவிரம் போன்றது என்பதைக் காண்பிக்கிறது.

செய்யுள்-21 மற்றும் இச்செய்யுளில் முக்தியாகிய இறை-பாதங்களைத் தனக்குத் தந்தருளுமாறு அச்சாதகன் செய்த பிரார்த்தனைகள் செய்யுள்-44இல் நிறைவேற்றப்படுகின்றன. (இதைப் பின்னர் காண்போம்.)

"விதி காணும் உடம்பு" : --- (கர்ம பலன்களை அநுபவிக்கும் உடல்.) இவ்வுடல் பிராரப்த கர்மத்தின் விளைவாகும்; அப்பிராரப்தத்தை அநுபவிப்பதும் இவ்வுடலே; அப்பிராரப்தத்தை (அநுபவித்துத்) தீர்ப்பதும் (கழிப்பதும்) இவ்வுடலே. பிராரப்த கர்மம் என்பது சஞ்சித கர்மத்திலிருந்து இப்பிறவியாய் வெளிப்பட்ட ஒரு சிறிய பகுதி; சஞ்சித கர்மம் என்பது ஒருவன் தான் முற்பிறவிகளில் செய்த (தீர்க்கப்படாத) கர்ம பலன்களின் மொத்தத் தொகுப்பு. இச்சஞ்சித கர்மம், ஒருவனைத் தாழ்ந்தப் பிறவிகளான புல், பூண்டு, பசு-பட்சிகளிலிருந்து உயர்ந்த பிறவியான தேவர்கள் வரையிலான உயிரினங்களில் ஏதோ ஒன்றாக, பற்பல பிறவிகள் எடுத்திட வைக்கும் ஆற்றல் கொண்டது. ஆதலால், தற்போதைய பிராரப்த கர்மங்கள் தீர்ந்தவுடன் இவ்வுடலானது இறக்கும்பொழுது, அவன் முக்தி அடைந்து விடுவதில்லை; மீதமிருக்கும் தனது சஞ்சித கர்மங்களைத் தீர்ப்பதற்காக, அவன் (ஜீவாத்மா) பலப்பல பிறவிகளை எடுத்துத்தான் ஆக வேண்டும். அச்சஞ்சித கர்மத்திலிருந்து எவ்வெப்பகுதிகள் அவன் எடுக்கும் அடுத்த பிறவிக்கும் மற்றும் அதற்கு அடுத்தடுத்து எடுக்கும் பிறவிகளுக்கும் காரணமாகுமோ, அவ்வப்பகுதிகள் அவ்வப்பிறவிகளின் பிராரப்த கர்மமாகிறது. அப்பிறவிகள் மனிதப் பிறவியாகத்தான் இருக்கவேண்டு மென்பதில்லை; எண்பத்து நான்கு இலட்சம் யோனிவகைகளில் (செய்யுள்-39), பிராரப்த கர்மங்களின் இயல்புக்கு (நல்லது, கெட்டது, இரண்டும் கலந்தது) ஏற்ற யோனிவகையில் ஏதோ ஒன்றாக இருக்கலாம். ஆகையால், சஞ்சித கர்மம் என்பது, பிராரப்த கர்மங்களை அநுபவிக்கும் அநேகப் பிறப்புகளுக்குக் காரணமாகிறது. இதுவே இச்செய்யுள் "விதி காணும்

உடம்பை விடா வினையேன்" என்று விளம்புவதின் அர்த்தம் --- "(இன்னும் பல ஜென்மங்களில்) பிராரப்த கர்மங்களை அநுபவிக்கும் உடலை விட்டுவிட (தவிர்க்க) முடியாத அளவிற்கு (சஞ்சித) கர்மங்களை உடையவனானவன் நான்." --- "எனது (சஞ்சித) கர்மங்கள் மலைபோலுள்ளதால், (பிராரப்த) விதி காணும் உடம்பிற்கு ஒரு முடிவு என்பதே இல்லை." அதாவது, பிறப்பு-இறப்பு சுழற்சிக்கு ஒரு முடிவு இல்லை. இதுவே முன்னர் "உழலுதல்" - "பிறப்பு இறப்பு சுழற்சியில் சுழன்று வருதல்" என்று செய்யுள்-16ல் குறிப்பிடப்பட்டது; பின்னர் செய்யுள்-39ல் "மாவேழ் சனனம்" - 'ஏழு பெரிய பிறவிகள்' என்று குறிப்பிடப்படுகிறது.

இந்த முடிவற்ற பிறப்பு-இறப்பு சுழற்சியிலிருந்து 'கதி காண' (விடுபடும்) வழிதான் என்ன? பெருமானின் மலர்க் கழலைப் (பாதங்களைப்) பெறுவதே அதற்கான தீர்வு. எனவே அச்சாதகன் 'மலர்க் கழல் அருள்வாய்' (முக்தி தருவாயாக) என்று இங்கு பெருமானிடம் வேண்டுகிறான். எப்பொழுது பெருமானின் பாதங்கள் ஒருவனுக்கு அருளப்படுகின்றதோ, அப்பொழுது அவனது அனைத்துக் கர்மங்களும் துடைக்கப்படுகின்றன; "கால்பட்டு அழிந்தது இங்கு என்தலைமேல் அயன் கையெழுத்தே" (கந்தரலங்காரம்-40). அல்லது, எப்பொழுது வேல் (ஞானம்) தன்னை வெளிப்படுத்திக் கொள்கின்றதோ (ஆத்ம ஞானம் பெறப்படுகின்றதோ), அப்பொழுது அவனது அனைத்துக் கர்மங்களும் எரிக்கப்படுகின்றன; {ஸ்ரீமத் பகவத் கீதை (4.37) -- "*ஞானாக்னி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதே ததா*".} இரண்டின் அர்த்தமும் ஒன்றேதான் --- அதாவது, முக்தி பெறப்படும்பொழுது, அனைத்து கர்மங்களும் (சஞ்சித கர்மம் உட்பட) உடனே மிச்சமீதி ஒன்றுமில்லாமல் முழுவதுமாக அகன்று விடுகின்றன. அனைத்துக் கர்மங்களிலிருந்தும் முழுமையாக விடுதலையடைவதற்கு, இதையன்றி வேறு எவ்வழியும் இல்லை. இல்லையெனில், அக்கர்மங்களை கழித்திட, கர்ம விதிப்படி, 84 இலட்சம் யோனிகளான உயிரினங்களில் மாறி மாறிப் பிறந்திட வேண்டும்.

கர்மங்கள் சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம் என்று மூன்று வகைப்படும். இதுகாறும் எடுத்த எல்லா ஜன்மங்களிலும் செய்த கர்மங்களின் மொத்த தொகுப்பு (கூட்டுத்தொகை) **சஞ்சித கர்மமாகும்**. இச்சஞ்சிதத்தை ஜீவனானவன் ஒவ்வொரு ஜன்மத்திலும் தன்னுடன் (காரண உடலில்) எடுத்துச் செல்கிறான். சஞ்சித கர்மங்கள் முழுவதுமாகத் தீரும்வரை, ஜீவனுக்கு முக்தி என்பது கிடையாது. இந்த மொத்த சஞ்சிதத் தொகுப்பிலிருந்து, ஒரு சிறிது எடுக்கப்பட்டு, அப்பொழுது ஜீவன் எடுக்கப் போகும் ஜன்மத்தில் அனுபவிப்பதற்கென்று ஒதுக்கப்படும்; அது **பிராரப்த கர்மம்** என்று

அழைக்கப்படுகிறது. அந்த பிராரப்த கர்மங்களை அனுபவித்துத் தீர்க்கும்போது, அந்தப் பிறவியில், ஜீவன் புதிய கர்மங்கள் செய்கிறது, அப்புதிய கர்மங்கள், **ஆகாமிய கர்மம்** என்றழைக்கப்படுகிறது; அவை சஞ்சித கர்மத்துடன் சேர்க்கப்படுகிறது. இவ்வாறாக, சஞ்சிதம் -- பிராரப்தம் -- ஆகாமியம் -- சஞ்சிதம் என்ற சுழற்சி வட்டம் ஏற்படுகிறது. வங்கியில் நாம் ஒவ்வொருவரும் வைத்திருக்கும் சேமிப்பு கணக்கை இந்த மூன்று விதமான கர்மங்களுக்கு உதாரணமாக எடுத்துக் காட்டலாம்:

- சஞ்சிதகர்மா என்பது சேமிப்புக் கணக்கிலிருக்கும் இருப்புத்தொகை **(Total balance)**,
- பிராரப்தகர்மா என்பது அக்கணக்கிலிருந்து அவ்வப்பொழுது திரும்ப பெறப்படும் தொகை **(Withdrawls)**,
- ஆகாமியகர்மா என்பது அக்கணக்கில் அவ்வப்பொழுது சேர்க்கப்படும் தொகை **(Deposits)**.

நம்முடைய இந்த உடல் சஞ்சித கர்மத்தின் ஒரு சிறு பகுதியான பிராரப்த கர்மத்தை அனுபவித்துக் கழித்திடும்போது, நாம் இவ்வுடலில் தற்போது செய்யும் கர்மங்கள் ஆகாமியம் எனப்படுகிறது; இந்த ஆகாமிய கர்மங்கள் சஞ்சித கர்மத்துடன் கூட்டப்படுகிறது (சேர்ந்து விடுகிறது). எனவே, நம்முடைய இவ்வுடல் பிராரப்த கர்மத்தின் காரியமாக இருக்கும் அதே சமயத்தில் ஆகாமிய கர்மத்தின் காரணமும் ஆகிறது. அதாவது, சஞ்சிதத்தின் ஒரு பகுதியைத் தீர்க்கும் இவ்வுடல், ஆகாமியம் மூலம் ஒரு பகுதியை அதில் சேர்த்து விடுகிறது. ஆதலால், சஞ்சிதமென்பது ஒரு முடிவிற்கு வரவே முடியாத தொடர்கதைபோல் தோன்றும்; அதேபோல் பிறப்பு-இறப்பு எனும் இச்சம்சாரச் சக்கரத்திலிருந்து விடுதலை பெற முடியாது என்று தோன்றும். இத்தருணத்தில், இயல்பாகவே நம் மனதில் ஒரு கேள்வி எழும்: இச்சம்சார சக்கரத்திற்கு ஒரு முடிவே இல்லையா? சாதாரணமாக, உண்மையில் ஒரு மனிதனால் இந்தக் கொடிய சக்கரத்திலிருந்து வெளிவர முடியாதுதான். எனவேதான், அச்சாதகன் இறைவனிடம், "விதி காணும் உடம்பை விடா வினையேன்" ---- "(இன்னும் பல ஜென்மங்களில்) பிராரப்த கர்மங்களை அநுபவிக்கும் உடலை விட்டுவிட (தவிர்க்க) முடியாத அளவிற்கு நான் (சஞ்சித) கர்மங்களை உடையவனாக இருக்கிறேன்." என்று புலம்புகிறான்.

இந்த உடல் எடுத்ததன் நோக்கம் பிராரப்தத்தை (பழைய கர்மங்களின் பலன்களை) அனுபவித்து முடித்து, அதன்மூலம் சஞ்சிதத்தைச் சிறிது சிறிதாக தீர்ப்பது ஆகும். அதேசமயம், அந்த ஜீவாத்மா புதிய (ஆகாமியம்) கர்மங்கள் எதையும் சேர்க்காமல்

வாழவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், ஜீவாத்மா தன்னை இவ்வுடலாகவும், கர்மங்களைச் செய்பவனாகவும் கருதி, கர்ம பலன்களை விரும்பி வாழ்வதால், பொதுவாக எவனாலும் ஆகாமிய கர்மங்களைச் சேர்க்காமல் வாழ முடியாது, இவ்வாறு நடைபெறாமல் தடுப்பதற்கு, கர்மயோகத்தை அநுசரிக்குமாறு சாஸ்திரங்கள் பரிந்துரைக்கின்றன. கர்ம-யோகமென்றால் என்ன? செயல்களைச் செய்பவன் 'நான்' என்று கருதாது, இறைவனின் நிமித்தமாகச் செய்வதாகக் கருதி; செயல்களிலிருந்து எவ்விதப் பலன்களையும் எதிர்பார்க்காமல், செய்யும் செயல்களையும், அவை தரும் பலன்களையும் இறைவனுக்கு அர்ப்பணித்தல் ஆகிய அனைத்தும் சேர்ந்தது கர்ம-யோகத்தின் சாரமாகும். இப்படியாகக் கர்மங்களைக் கர்ம-யோகமாகச் செய்வதே ஒரு மனிதனுக்கு மிகவும் கடினமான காரியம்; அதை ஒருவன் கஷ்டப்பட்டு ஒழுங்காகச் செய்து வந்தானென்றால், தற்போது செய்யப்படும் கர்மங்களின் பலனை ஆகாமியமாகாமல் தவிர்த்திடக்கூடும். அப்படியே ஒருவன் ஆகாமிய கர்மங்கள் எழாமல் தடுப்பதில் வெற்றி அடைந்தானெனினும், அதனால் சஞ்சித கர்மங்கள் மேலும் வளர்வதுதான் தடுக்கப்படுமே தவிர, அவன் கணக்கில் ஏற்கனவே குவிந்துள்ள சஞ்சித கர்மங்களை அனுபவித்துத் தீர்ப்பதற்கு இன்னும் பல பிறப்புகள் எடுத்துத்தான் ஆகவேண்டும். ஆனால், வேதங்களும், மகான்களும் அடிக்கடி வலியுறுத்துவது யாதெனில், மனித வாழ்க்கையின் குறிக்கோளான ஆத்மானுபூதியை ஒருவன் இப்பிறப்பிலேயே, உயிருடன் இருக்கும்பொழுதே, அடைய வேண்டும்; பின்பு எடுக்கும் ஒரு ஜன்மத்தில் அல்ல. சுவாமி சிவானந்த மகராஜ் கூறுகிறார்: "வாழ்வின் குறிக்கோள் இறைவனை அடைதல். அதை இப்பிறப்பிலேயே, இல்லை இக்கணத்திலேயே, அடைய வேண்டும்." இப்பொழுது நம் மனதில் எழும் ஒரே கேள்வி 'அதை எப்படி அடைவது?' என்பதுதான்.

அதை அடைவது எப்படி? அதற்காக நம் முன்னர் இருக்கும் ஒரே வழி: "மலர்க் கழல் அருள்வாய்" --- இறைவன் அவனது பாதங்களை நமக்குத் தந்து அருள் புரிய வேண்டுவதுதான். எனவேதான், அச்சாதகன் இறைவனிடம் அதற்காகப் பிரார்த்தனை செய்கிறான். இறைவன், இறை-பாதங்கள், கருணை, இறை- உணர்வு, ஆத்மா, பேரறிவு, வேல், ஆத்ம ஞானம் - இவை அனைத்தும் சுட்டுவது பரம்பொருள் ஒன்றையே. இறைவன் தன் பாதங்களை அளித்தல் என்பது ஒருவனின் உள்ளுணர்வில் ஏற்படும் நிலை மாற்றத்தின் வெளிப்புற சார்புக் குறியீடாகும். அது ஆத்ம ஞானத்தின் உதயமாகும். அந்த ஆத்ம-ஞானக் கனல் அனைத்து கர்மங்களையும் எரித்து சாம்பலாக்குகிறது.

ஜீவாத்மா இரண்டு தனித்தனிப் பொருள்களின் கலவை --- (புருஷ & பிரகிருதி) சைதன்யத்தின் ஒளி (புருஷ), மற்றும், மனம், இந்திரியம், உடல் ஆகியவைகளின் தொகுப்பு (பிரகிருதி). புருஷ என்பது செயல் எதுவுமற்ற தூய உணர்வு (சைதன்யம்), பிரகிருதி என்பது உணர்வு எதுவுமற்ற செயல். ஜீவாத்மா எனும் இவற்றின் கலவையில், ஒவ்வொன்றின் பண்புகளின் பரஸ்பர பரிமாற்றம் ஏற்படுகிறது; அத்தகைய பரிமாற்றத்தினால், செயல் எதுவும் அற்ற உணர்வு எனும் ஜீவாத்மா, தான் செயல் செய்வதாகவும், கர்மபலன்களை அநுபவிப்பதாகவும் கருதுகிறது, அதே சமயத்தில் உணர்வு எதுவும் அற்ற மனம்-இந்திரியம்-உடல்-தொகுப்பு சுயமாக உணர்வும் உயிரும் கொண்டுள்ளதாகத் தோற்றமளிக்கிறது. எனவே, ஜீவாத்மா (ஜீவ-உணர்வு) கீழ்க்காணும் இரண்டில் ஒன்றைச் செய்யக்கூடும் :

- 1. தனது மனம்-உடல் ஆகிய (உணர்வற்ற) பிரகிருதி தொகுப்பாக அது தன்னை கருதிக் கொள்ளலாம். அப்பொழுது அது, தான் பழைய கர்ம பலன்களை அநுபவிப்பதாகவும், புதிய கர்மங்களைச் செய்வதாகவும் கருதிக் கொள்ளும்;

  (அல்லது)

- 2. தூய உணர்வு எனும் ஆத்மாவிலிருந்து (புருஷ - பரமாத்மாவிலிருந்து) தான் வேறுபட்டிருக்கவில்லை என்று கருதிக் கொள்ளலாம். அப்பொழுது, மனம், இந்திரியங்கள், மூன்றுவித கர்மங்கள் ஆகியவைகளின் செயல்பாடுகளுடன் தன்னை எந்த விதத்திலும் தொடர்பு படுத்திக் கொள்ளாமலிருந்து, அவைகளால் தொடப்படாத வெறும் சாட்சியாகவும் இருக்கலாம்.

ஆனால், ஜன்ம ஜன்மங்களாக ஜீவாத்மா தன்னை உடல் முதலானவைகளாகக் கருதி வாழ்ந்துவந்ததால், இந்தத் தவறான அடையாளம் அதற்கு சகஜமாகி, தன் உண்மை அடையாளமான ஆத்மாவையே முற்றிலுமாக மறந்து வாழ்கிறது.

இறைவனின் பாதங்கள் எப்பொழுது அளிக்கப்படுகின்றதோ, ஞானம் எப்பொழுது உதிக்கிறதோ, ஜீவாத்மா எப்பொழுது தன் சுயத்தன்மையான தூய உணர்வு (இறை-உணர்வு) நிலைக்கு விழித்துக் கொள்கிறதோ, இறைவனின் கிருபை எப்பொழுது கிடைக்கிறதோ, அப்பொழுதிலிருந்து புருஷ (ஜீவாத்மா) பிரகிருதியுடன் தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதில்லை. உடனேயே ஜீவாத்மா கர்மங்களின் பிடியிலிருந்து விடுபட்டு விடுகிறது. 'எப்பொழுது, எவ்வாறு இது சம்பவிக்கிறது?' என்பது ஒரு பரம இரகசியம். இது சம்பவிக்க, இறையருள் ஒன்றே வழி. இறைவன் மீது ஒரு தீவிர ஏக்கம், மனமார்ந்த பிரார்த்தனை, இதய பூர்வமான

முழுமையான அர்ப்பணிப்பு கொள்வதுதான் இறையருள் பெறுவதற்கான வழி. எனவே, அச்சாதகன் ஆன்ம விடுதலை பெற்றிட, இறைவனிடம் அவரது தாமரைப் பாதங்களைத் தனக்குத் தந்தருளுமாறு இறைஞ்சி பிரார்த்தனை செய்கிறான்.

இப்பொழுது, அடுத்த கேள்வி எழுகிறது. ஒருவனின் வாழ்வில் செயல்படத் தொடங்கிவிட்ட பிராரப்த கர்மங்கள் என்ன ஆகின்றன? ஒரு *'சாதாரண மனிதனை'ப்* பொறுத்தவரை, அவன் பிராரப்த கர்மங்களை அநுபவித்துக் கழித்திடுவான், அதே சமயம், அவன் அப்பொழுது செய்து வரும் புதிய கர்மங்களால் ஆகாமியம் உருவாகிவிடும்; எனவே அவனது சம்சார பந்தம் (பிறப்பு-இறப்பு சுழல்) முடிவில்லாமல் தொடர்ந்து கொண்டே போகிறது. அது அப்படியிருக்க, ஒரு '*கர்ம யோகியை'ப்* பொறுத்தவரை, அவன் பிராரப்த கர்மங்களை அநுபவித்துத் தீர்த்துவிடுகிறான், ஆகாமியத்தை உருவாக்குவது இல்லை, ஆனால் சஞ்சிதமோ அப்படியே இருக்கிறது. அவற்றை அனுபவித்துக் கழித்து ஆத்ம-ஞானத்தை (சம்சாரத்திலிருந்து விடுதலை) அடைய அவன் இன்னும் சில பிறவிகள் எடுக்கவேண்டும். ஆனால், ஒரு '*ஞானி'யின்* நிலை முற்றிலும் **வேறானது** - தூய உணர்வான ஆத்மாவோடு ஞானி தன்னை அடையாளப்படுத்திக் கொண்டுள்ளதால், அவர் மூன்றுவித கர்மங்களாலும் தொடப்படாமல் வாழ்கிறார். அந்த ஞானி பிராரப்த கர்மங்களை அனுபவிப்பதுபோல் பிறருக்குத் தோன்றலாம்; ஆனால், அவருக்கு அப்படி இல்லை. தூய உணர்வான, சர்வ-வியாபக ஆத்மாவில் நிலைத்திருக்கும் ஞானிக்கு, 'எவ்வுடல் தன்னுடையது, எவ்வுடல் பிறருடையது?' என்று சொல்ல இயலும்? மற்றவர்களால் 'இது ஞானியினுடையது' என்று நினைக்கப்படும் அந்த உடல், ஞானியைப் பொறுத்தவரை அந்த உடலும் மற்ற எந்தவொரு உடலையும் போன்றதே. அவர் இவ்வுலக உணர்வு நிலையிலிருந்து மேம்பட்ட (பாரமார்த்திக) நிலையிலிருப்பதால், அவரைப் பொறுத்தவரையில், உடல் (அ) பொருள்கள் என்பவையே இருக்காது; எங்குமிருப்பது தூய உணர்வு (சைதன்யம்) ஒன்றே; அனைத்தும் அதனால் நிரப்பப்பட்டிருக்கிறது. எப்படி ஒருவன் கனவிலிருந்து விழித்த பின்னர், கனவில் கண்ட வங்கி, வங்கி சேமிப்புத் தொகை, வரவு வைக்கப்பட்ட தொகை, திரும்ப எடுக்கப்பட்ட தொகை, மற்றும் கனவில் அவனால் செய்யப்பட்ட பல விவகாரங்கள், மற்றும் 'கனவு-அவன்' ஆகிய அனைத்துமே கனவு-நிலைக்கு மேம்பட்ட நினைவு-உணர்வில் ஒருமிக்க அடக்கமாகின்றனவோ; அப்படியே அந்த ஞானிக்கு கர்ம-வினைகளும், அவற்றை அனுபவிக்கும் கர்த்தாவும், அதனால் ஆளப்படும் இவ்வுலக நாடகமும் ஆகிய அனைத்தும் கடக்கப்பட்டு, மேம்பட்ட அவர் நிலைத்திருக்கும் இறை-உணர்வில்

அடக்கமாகின்றன. அவ்விரண்டும் உண்மைத்தத்துவத்தின் இருவேறு நிலைகளாதலால், ஒரு நிலையில் செயல்படும் விதி முறைகள் மற்றொன்றில் செயல்படமாட்டா.

கந்தப் பெருமான் சூரபத்மனைக் கொன்று, தேவர்களை அசுரர்களின் கொடூரங்களிலிருந்து விடுவித்து, தேவலோகத்தில் அவர்களது அசல் நிலைப்பாடுகளை மீண்டும் திரும்பப் பெற்றுத் தந்தார். ஆதலால், அவரே தேவர்கள் மற்றும் இந்திரலோகத்தின் ஈஸ்வரனுமாகிறார்.

இறைவனிடம் அவருக்கிருக்கும் ஒருமுகப்பட்ட பக்தி காரணமாக, வள்ளி தேவியின் நெற்றி மிகவும் பிரகாசமாக ஒளிர்கிறது. சின்னக் குழந்தையாக இருந்தபொழுதிலிருந்தே, அவருக்கு முருகப் பெருமானிடத்தில் உண்மையான பக்தி தீவிரமாக இருந்தது, மேலும் பெருமானின் லீலைகள், மகிமைகள், ஆகியவைகளைப் பற்றியே எப்பொழுதும் அவர் சிந்தித்துக் கொண்டிருந்தார். எப்பொழுதும் அவரது மனமானது பெருமானிலேயே ஆழ்ந்திருந்தது; முருகப் பெருமானையே மணந்திடத் தீர்மானம் கொண்டிருந்தார். எனவே, தன் மீது வள்ளி தேவிக்கு இருந்த ஆழ்ந்த ஏக்கத்தால் மகிழ்ந்து, முருகப் பெருமானே தேவி இருந்த தினைப் புனத்திற்குச் சென்றார். பெருமான் அவரைப் புகழ்ந்து பேசி, சோதித்து, இறுதியில் அவரைத் தனது மனைவியாக ஏற்றுக்கொண்டார். அவர் தன்னிடம் கொண்டிருந்த ஆழ்ந்த அர்ப்பணிப்பிற்காக முருகன் அவரை மட்டுமே புகழ்ந்து பாராட்டினார். அப்படிச்செய்வது முருகப் பெருமானுடைய விரதம் (உன்னதக் கொள்கை).

இறைவனுடன் ஐக்கியமடைய ஏங்கித் தவிக்கும் ஜீவாத்மாவைக் குறிக்கிறார் வள்ளி தேவி. வள்ளிதேவியைத் தவிர வேறு ஒருவரையும் பாராட்டுவதில்லை என்ற முருகப் பெருமானுடைய கொள்கை, மற்ற எல்லாவற்றையும் நிராகரித்து, அவரிடம் மட்டுமே தங்கள் பூரண பக்தியைச் செலுத்தி, அவரையே அடைய முயலும் ஜீவாத்மாக்களுக்கு அவர் உதவி புரிய விருப்புகிறார் என்பதைத் தெரிவிக்கிறது. அத்தகைய கந்தப் பெருமானிடம் அச்சாதகன் அவரது தாமரைப் பாதங்களை தனக்கு அளித்திடுமாறு வேண்டுகிறான்.

==========

செய்யுள் - 36

==========

நாதா குமரா நமவென்று அரனார்
ஓதாய் என ஓதியது எப்பொருள் தான்
வேதா முதல் விண்ணவர் சூடுமலர்ப்
பாதா குறமின் பதசேகரனே.

பொழிப்புரை: "ஓ கந்தப் பெருமானே! பிரம்மனும் மற்ற தேவர்களும் அவர்கள் சிரங்களில் சூடிக்கொள்ளும் தாமரை போன்ற பாதங்களை உடையவரே! குறமகளான ஸ்ரீ வள்ளி தேவியின் பாதங்களை உங்கள் சிரத்தில் சூடிக் கொள்பவரே! 'குருநாதா! குமரா! நமஸ்காரம்' என்று வணங்கி, 'எனக்கு உபதேசித்தருள்வாய்' என்று சிவபெருமான் கேட்க, நீ அவருக்கு உபதேசித்தது எப்பொருள்?" (அதை அடியேனுக்கும் உபதேசித்து அருள்வீராக.)

விளக்கவுரை

சிங்கார மடந்தையர் தீநெறி போய் தன்னை இழக்காமலிருக்கும் வரத்தை வேண்டிப் பெற்றுக்கொண்டு (செய்யுள்-34), அனைத்துக் கர்மங்களையும் ("தாழ்வானவை செய்தன" --- செய்யுள்-31) அழித்திட இறை-பாதங்களைத் தந்தருளப் பிரார்த்தனை செய்துகொண்டு (செய்யுள்-35), தனது குருவின் நேரடியான வழிகாட்டுதலுடன் அச்சாதகன் தீவிரமாகச் சாதனையைச் சிலகாலம் செய்து வந்தான். அதன்பயனாக, சாதனையை மேலும் தீவிரப்படுத்தி முக்தி அல்லது ஆத்மானுபூதியை கூடியசீக்கிரம் அடையவேண்டுமென்ற அவா அவனை ஆட்கொண்டது. அப்படி அனைத்து கர்மங்களிலிருந்தும் சம்சாரத் தளைகளிலிருந்தும் விடுதலை பெற்று ஆத்மானுபூதி அடைய, மிக ஆழ்ந்த தியானம் செய்வதற்குரிய உயரிய மறைஞான தீக்ஷை பெற்றிட வேண்டியதன் அவசியத்தை அவன் உணர்கிறான். பிரணவ உபதேசத்தைப் பெற்றிடுவதற்காக எப்படி சிவனார் முருகப் பெருமானை அணுகி பவ்யமாக வேண்டினாரோ, அப்படியே அச்சாதகனும் தன் குருவை அணுகி அவரைப் பணிந்து வணங்கி, பிரணவத்தின் (ஓங்காரத்தின்) மறைபொருள் இரகசியம், மற்றும் பரம்பொருள் பரமாத்வாவைப் பற்றி தனக்கு உபதேசித்திட வேண்டுகிறான். வெறும் 'பிரணவம்' அல்லது

'ஓம்' என்கிற மந்திரம் பிரத்யேகமாக சன்னியாசிகளுக்கான விசேஷ மந்திரமானதால், இதன் உபதேசத்தை அச்சாதகன் வேண்டுவதன் மூலம் அவன் சன்னியாச-தீக்ஷை கொடுக்குமாறு வேண்டுகிறானென்று மறைமுகமாகக் குறிப்பிடப்படுகிறது; ஏனெனில் சந்நியாசம், கர்மங்களை எரித்து, ஆத்மானுபூதி அடைய ஏதுவாயிருக்கும். ஓம், ஆத்மா, பிரம்மம் ஆகிய இம்மூன்றும் ஒன்றேயென்று *மாண்டூக்ய உபநிஷதம்* கூறுகிறது.

பகவான் சிவனார் முருகப் பெருமானைப் பணிந்து ஓம் எனும் பிரணவ உபதேசத்தை ஏன் வேண்டினார்? இதைப்பற்றி *'கந்த புராணம்'* விவரிப்பதைக் காண்போம்: ஒரு சமயம், ஸ்ருஷ்டி-கர்த்தா பிரம்மாஜியுடன் மற்ற தேவர்களும் பகவான் சிவனாரை தரிசிக்க கைலாயம் சென்றனர். சிவனாரை வழிபாடு செய்து, விடைபெற்றுத் திரும்பும்போது, அவர்கள் கந்தப் பெருமான் இருக்கும் வழியே சென்றனர். சிறுவனான முருகப் பெருமான் அப்பொழுது தன் நண்பர்களுடன் அங்கு விளையாடிக் கொண்டிருந்தார். தான் படைப்புத் தொழிலின் ஈஸ்வரன் என்று இறுமாப்புக் கொண்டிருந்த பிரம்மாஜி, முருகனை கண்டும் காணாததுபோல் விரைந்து சென்றார். முருகன் பிரம்மாஜிக்கு ஒரு படிப்பினை தர எண்ணி, அவரை தன்னிடம் வருமாறு கூப்பிட்டார். பிரம்மாஜியும் உடனே அவரிடம் வந்து, தலைவணங்கி, கூப்பிய கரங்களுடன் நின்றார்.

அப்போது இருவருக்கும் இடையில் நடந்த உரையாடல் இது:

முருகப் பெருமான்: 'தாங்கள் என்ன தொழில் செய்கிறீர்கள்?'

பிரம்மாஜி : 'படைப்புத் தொழில்'

முருகப் பெருமான்: 'படைப்புத் தொழிலை எப்படிச் செய்கிறீர்கள்?'

பிரம்மாஜி : 'வேதங்களின் துணை கொண்டு'

முருகப் பெருமான்: 'நீங்கள் வேதங்களை அறிவீர்களா?'

பிரம்மாஜி : 'ஆம், அறிவேன்'

முருகப் பெருமான்: 'அப்படியானால், (வேதம்) ஓதுங்கள்'

பிரம்மாஜி உடனே "ஓம்" என்ற கோஷத்துடன் தொடங்கும் "ரிக்" வேதத்தை ஓத ஆரம்பித்தார்.

முருகப் பெருமான்: 'நிறுத்துங்கள், "ஓம்" என்பதற்கு அர்த்தம் கூற முடியுமா'.

பிரம்மாஜி அதன் அர்த்தத்தைக் கூற முயன்றார், ஆனால் அவரால் அதன் பொருளைத் திருப்திகரமாகக் கூற இயலவில்லை. படைப்பிற்கு ஆதாரமான 'ஓம்' (பிரணவம்) என்ற மந்திரத்தின் அர்த்தத்தைக்கூட சரியாக அறிந்திராத ஒருவர், படைப்புத் தொழிலைச் செய்திடத் தகுதி அற்றவர் என்று கருதிய முருகப் பெருமான் அத்தொழிலை தானே எடுத்துக் கொண்டு, பிரம்மாஜியை சிறையில்

அடைத்தார். பிரம்மாஜியுடன் வந்திருந்த தேவர்கள் அனைவரும் பகவான் சிவனாரிடம் சென்று நடந்ததைச் சொல்லி, பிரம்மாஜியை சிறையிலிருந்து விடுவித்துத் தருமாறு வேண்டினர். சிவனார் முருகனிருந்த இடத்திற்கு வந்து, முருகனிடம் பிரம்மாஜியை விடுவிக்க உத்தரவிட்டார். முற்கூறிய காரணத்தால் பிரம்மாஜியை விடுவித்திட முருகன் விரும்பாவிட்டாலும், தன் தந்தையார் சிவனார் உத்தரவிட்டதனால் பிரம்மாஜியை விடுதலை செய்தார். கந்தப் பெருமானின் அருமை பெருமைகளை நன்கு உணர்ந்துகொண்ட பிரம்மாஜியும் மற்ற தேவர்களும் அவருக்குத் தலைவணங்கி, அவருடைய பாதங்களைத் தங்கள் தலைமீது சூடி, அவர் ஆசி பெற்று பின்னர், அவரின் அனுமதியுடன், தங்கள் தங்கள் லோகங்களுக்குத் திரும்பினர். எனவே, "ஓ கந்தப் பெருமானே! பிரம்மாஜியும் மற்ற தேவர்களும் தங்கள் சிரங்களில் சூடிக்கொள்ளும் பாதங்களை உடையவரே" என்று இச்செய்யுள் கூறுகிறது. (*தென் இந்தியாவில் இருக்கும் திண்டுக்கல் நகரத்திற்கு அருகில் ஏழு மைல் தொலைவில் இருக்கும் சின்னாளப்பட்டி என்ற ஊரில் அமைந்துள்ள ஒரு கோவிலில் குடிகொண்டுள்ள முருகப் பெருமானுக்கு, பிரம்மாஜிக்கு இருப்பதைப்போல, நான்கு முகங்கள் உள்ளன*).

பின்னர், சிவபெருமான் சிறுவன் முருகனிடம், "குழந்தாய், உனக்குப் பிரணவ மந்திரத்தின் பொருள் தெரியுமா? தெரியுமானால் அது என்னவென்று எனக்குச் சொல்வாயாக." என்று அன்போடு கேட்டார். உடனே, கந்தப் பெருமான், "அவ்வுயரிய பிரணவ மந்திரத்தின் உட்பொருளை வெளிப்படையாகச் சொல்லக் கூடாது; தனிமையில், ஒரு சீடனாக ஆகி குருவிற்குரிய மரியாதை தந்து, கேட்டு, அறியவேண்டிய இரகசியம் அது" என்று கூறினார். தானே ஓங்கார சொரூபம், மேலும் கந்தப் பெருமான் தன்னுடைய மற்றொரு உருவமானபோதிலும், தன் சிறுபிள்ளையின் தித்திக்கும் மொழியில் ஓங்காரத்தின் பொருளைக் கேட்டு மகிழ்ந்திட சித்தம் கொண்டு, சிவபெருமான் ஒரு சீடனுக்குரிய நடைஉடை-பாவனைகளுடன் குமரனிடம், "நாதா!, குமரா! நம:" (ஓ குருநாதா, ஓ குமரா, உனக்கு நமஸ்காரங்கள்) என்று கூறி, அவரைப் போற்றி வணங்கி, முருகனை எடுத்துத் தன் மடிமேல் வைத்துக்கொண்டு, "ஓதாய்" என்று கூறி உபதேசத்தைத் தந்தருள கேட்டுக்கொண்டார். அவ்வாறு விரும்பிக்கேட்ட சிவனாரின் காதில், பிரணவ மந்திரத்தின் பொருளை இரகசியமாக குமரன் உபதேசித்தார். அந்த உபதேசத்தைக் கேட்டு சிவனார் மகிழ்வுற்றார். ஏனெனில், தான் முன்னர் முருகனுக்கு எவ்வாறு உபதேசித்தாரோ, அவ்வாறே இருந்தது முருகனின் வியாக்கியானம். எனவே, வியந்து போற்றிய சிவனார் : "ஆம், மிகவும் உண்மை. நீ கூறிய பிரணவத்தின் அர்த்தம் மிகச்

சரியானது. வேதங்கள் தங்கள் முடிவுப் பகுதியில் *"சுப்ரமணிய ஓம்", "சதாசிவ ஓம்"* என்று கூறப்படுவதுபோல், நாம் இருவருமே பிரணவத்திற்குப் பொருளாக இருக்கிறோம். எவன் இவ்வாறு அறிகிறானோ, அவன் எனக்குச் சரிசமமாகிறான், அதாவது அவன் என்னை அடைகின்றான். பரபிரம்ம பரம்பொருளை அடைய முயலும் ஆழமான நூலறிவும், புரிதலும் பெற்ற சாதுக்கள் மற்றும் சுத்த-சத்துவம் மிகுந்த துறவிகள் (சன்னியாசிகள்) செய்ய வேண்டிய முதன்மையான சாதனை பிரணவத்தின் அர்த்தத்தை அறிந்து கொள்வதே ஆகும். தன் பதவி பற்றிய கர்வம் கொண்ட பிரம்மாஜியால் இதன் பொருளை எப்படி அறிய முடியும்? ஆத்ம தியானத்தின் மூலம் பாவங்களிலிருந்து தங்களை சுத்தப்படுத்திக் கொண்ட யோகிகளுக்குக்கூட இது தெரியாது. என் பக்தர்கள் மட்டுமே என் கிருபையினால் இதை அறிவார்கள். அன்புக் குழந்தையே! நீ நானாக இருப்பதால், பிரணவத்தின் இந்த இரகசியமான அர்த்தம் உனக்குத் தெரிந்திருக்கிறது. அனைத்து யோகிகளிலும், அகஸ்திய முனிவர் ஒருவரே பிரணவத்தைப் பற்றி தெரிந்து கொள்ளத் தகுதி உடையவர். ஆகையால், அவருக்கு "ஓம்" பற்றி நீ உபதேசிப்பாயாக; அவர் உனது முக்கிய சீடராக ஆகிவிடுவார். இவ்வாறு பரம்பரை பரம்பரையாக இவ்வுபதேசம் மேன்மேலும் தொடர எனது வாழ்த்துக்கள்". என்று கூறியருளினார்.

சிவனார் கந்தப் பெருமானிடமிருந்து "ஓம்" பற்றிய உபதேசம் பெற்றதற்கான காரணம், அவருக்கு அது தெரியாதென்பதனால் அல்ல; ஆனால், கந்தப் பெருமான் எல்லா விதங்களிலும் சிவபெருமானாகவே இருக்கிறார் என்பதை இவ்வுலகிற்கு வெளிப்படுத்துவதற்காகவே அவ்வாறு செய்தார். மேலும், இந்த சம்பவம் ஒருவன் எவ்வாறு தன் குருவை அணுகி அவரிடம் இருந்து ஆன்மீக ஞானத்தைப் பெற்றிட வேண்டும் என்பதற்கான வழிமுறையை வகுத்துத் தருகிறது. மேலும், சிவனார் கந்தப் பெருமானிடமிருந்து இவ்வாறு பிரணவத்தின் இரகசிய அர்த்தத்தைக் கேட்டுப் பெறாமல் இருந்தால், பிரணவத்தின் பொருளை அறியாததற்காக பிரம்மாஜியை சிறைச்சாலைக்கு அனுப்பிய கந்தன் அதன் பொருளை உண்மையில் அறிந்திருந்தாரா, இல்லையா என்ற சந்தேகம் மக்களின் மனதில் தோன்றக்கூடும் அல்லவா இவ்வாறாக, பிரணவ உபதேச சம்பவமானது, பல இரகசியங்களை தன்னகத்தே மறைத்து வைத்திருக்கிறது!

ஓங்கார வடிவம்பெற்ற சிவபெருமானுக்குப் பிரணவ ரகசியத்தை உபதேசித்த அரியபெரிய மகிமைகள் கொண்ட முருகப் பெருமான், வள்ளி தேவியின் பாதங்களைத் தன் சிரசில் சூடிக்கொள்ளுகிறார் என்பது அவரின் எளிமையையும் கிருபையையும்

சுட்டிக் காட்டுகிறது. மேலும் உண்மையான பக்தர்களை நாடிச்சென்று அவர்களுக்கு அருள் புரிய அவருக்கு இருக்கும் விருப்பத்தையும் இது வெளிப்படுத்துகிறது. வள்ளி தேவி பெருமானை அடைவதற்காக கடுமையான தவம் செய்து வந்தார். தேவி தன் குழந்தைப் பருவத்தில் இருந்தே, அவரைத் திருமணம் செய்து கொள்வதற்காக எப்போதும் அவரையே நினைத்து வாழ்ந்து வந்தார்; வாழ்க்கையில் வேறு எதுவும் அவருக்கு ருசிக்கவில்லை. அப்படியிருந்தும், அவளை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர், அவள் பக்தியை மிகக் கடுமையாக பெருமான் சோதித்தார். ஆனால், அவள் தன்பால் வைத்திருந்த அன்பு உண்மையானதென்று திருப்தியடைந்தபோது, அவளுடைய பாதங்களைத் தன் சிரசில் சூடுவதில் பெருமகிழ்ச்சி அடைந்தார்! இறைவன் உண்மையிலேயே தனது உண்மையான பக்தர்களின் சேவகனாக ஆகிவிடுகிறார். எவ்வித வரையறையுமின்றித் தன்னைப் பூரணமாக பெருமானிடம் அர்ப்பணித்து விடுகிற பக்தனுக்கு அவர் தன்னையே முழுமையாக தந்து அருள் செய்கிறார். இறைவனுடைய இரக்கமும் எளிமையும் அருள்புரியும் தன்மையும் இத்தகைய சிறப்புக்குரியது.

==========

செய்யுள் - 37

==========

கிரிவாய்விடு விக்ரம வேல் இறையோன்
பரிவாரம் எனும் பதம் மேவலையே
புரிவாய் மனனே பொறையாம் அறிவால்
அரிவாய் அடியோடும் அகந்தையையே.

பொழிப்புரை: "ஓ மனமே! கிரௌஞ்ச மலையின் மீது அது பிளக்குமாறு சக்திமிக்க வேலாயுதத்தை எய்திய வேலாயுதப் பெருமானின் பரிவாரம் {அவரை அடைந்தவர்களில் (அ) திருத்தொண்டர்களில் ஒருவன்} எனும் பதவியை அடைவதையே விரும்புவாய்; பொறுமையாகிய ஞானத்தால் அகந்தையை ("நான்" எனும் ஆணவத்தை) வேருடன் வெட்டி வீழ்த்துவாய்."

விளக்கவுரை

ஆழமான மற்றும் மர்மமான உட்கருத்துக்கள் பல இச்செய்யுளில் பொதிந்திருப்பதால், இதைச் சரியாக அறிவதென்பது மிகவும் கடினம், ஆனால் மிகவும் அவசியம். அருட்செல்வர் அருணகிரியார் இங்கு பயன்படுத்திய வார்த்தைகள் உள்ளுணர்வு சார்ந்தவை, தத்துவார்த்த ஆழமும் இரகசிய உட்பொருளும் கொண்டவை. வெறும் அகராதியின் உதவிகொண்டு இச்செய்யுளைச் சரியாக புரிந்துகொள்ள இயலாது. இச்செய்யுளில் சொல்லப்படும் உண்மையான கருத்தை புரிந்துகொள்ள, வார்த்தைகளுக்கு மேற்போக்கான அர்த்தம் கொள்வது எவ்விதத்திலும் உதவாது. இது ஒரு அற்புதமான செய்யுள், இதில் அவர் பலவித அரிய கருத்துக்களை ஒரு திறமையான முறையில் பொதித்துத் தந்துள்ளார்.

ஆத்மானுபூதியைப் பெறுவதில் உண்மையான, தீவிர ஆர்வம் கொண்டு, அச்சாதகன் தனது குருவை அணுகி சன்னியாச தீட்சையை தனக்களித்திட வேண்டினான் (செய்யுள்-36). தகுதி மற்றும் தயார்நிலையில் அவன் இருப்பதை உணர்ந்த குரு, அவன்மேல் கருணைகொண்டு, அவனுக்கு சன்னியாச-தீக்ஷை கொடுக்கிறார். அதன் துவக்க நிகழ்ச்சியாக, விராஜ-ஹோமம் (அக்னி வேள்வி) என்றழைக்கப்படும் சடங்கு செய்யப்படுகிறது. இந்த சடங்கில்,

அவனுடைய தனிமனிதத் தன்மைக்கு காரணிகளான உடல், செயற்-புலன்கள் (ஐந்து கர்மேந்திரியங்கள்), அறிவுப் புலன்கள் (ஐந்து ஞானேந்திரியங்கள்), (ஐந்து) பிராணன்கள், மனம், அகங்காரம் போன்ற அனைத்து உறுப்புக்களும், தனித்தனியான மந்திரங்கள் மூலமாக, அவனால் ஒன்றன்பின் ஒன்றாக தீயில் அர்ப்பணம் செய்யப்படுகின்றன. "இனிமேல், நீ உடல், மனம் ஆகிய இவை எதுவும் இல்லை; உண்மையில் நீ ஆத்மா (அ) பிரம்மம் (அ) தூய்மையான விழிப்புணர்வு (அ) சைதன்யம் மட்டுமே" என்று குரு அவனுக்கு அறிவுறுத்துகிறார். பின்னர், குரு அவனுக்கு 'மகாவாக்கிய' உபதேசம் தந்து, அதன் மூலம் நிர்குண தியானம் செய்யும் வழிமுறையைத் துவக்கி வைக்கிறார். அவர் *"தத் த்வம் அஸி"* ---- " நீ அது (பிரம்மம்)" என்ற *'மகாவாக்கிய'* மந்திரத்தை அவனுக்கு உபதேசிக்க, சீடனான அவன் *"அஹம் பிரம்ம அஸ்மி"* ---- 'நான் பிரம்மம்" என்று பதிலுக்கு உரைப்பான். இப்படியாக ஒன்பது முறை செய்யப்படும். பிரம்ம-நிஷ்ட (பிரம்மனில் நிலைபெற்றிருக்கும்) குருவானவர் *"தத் த்வம் அஸி"* ---- " நீ அது (பிரம்மம்)" என்று சொல்லும்போது அத்துடன் தனது ஆத்ம-சக்தியை சீடனுக்குப் பாயச்செய்கிறார். அந்த சக்தியால், சீடன் *"அஹம் பிரம்ம அஸ்மி"* ---- "நான் பிரம்மம்" என்று சொல்லும்போது, அவன் 'பிரம்மம்' என்பதைத் தன் இதயத்தில் ஒருசிறிது "உணர"முடிகிறது. இந்த மகாவாக்கியத்தை விடாமல் தியானம் செய்து, "நான் பிரம்மம்" என்ற அனுபவத்தில் அவன் நிலைபெற வேண்டும். இதுவே அவனது தினசரி தியானத்திற்கான மந்திரம் (அ) சூத்திரம். இந்த *'அஹம் பிரம்ம அஸ்மி'* ---- "நான் பிரம்மம்" என்ற மந்திரத்தையே அருணகிரியார் "(நான்) இறையோன்" என்கிறார்.

"(நான்) இறையோன் பரிவாரம்": ---- பரிவாரம் என்றால் 'அவரைச் சேர்ந்தவர்கள்' எனலாம். இறையோன் என்றால் "இறைவன்" ஆகும். "(நான்) இறையோன் பரிவாரம்" என்றால் 'நான் இறைவனைச் சேர்ந்தவன்' என்று பொருள், அதாவது, நான் இவ்வுலகை, இந்த பிரபஞ்சத்தை, பிரகிருதியைச் சேர்ந்தவன் அல்ல. இவ்வுடல், புலன்கள், ஆகிய அனைத்தும் 'பொருள்' வகையைச் சார்ந்தவை, அதாவது பிரகிருதியைச் சார்ந்தவை, அவையனைத்தும் விராஜ வேள்வியில் அர்ப்பணிக்கப்பட்டுவிட்டன. ஆனால், "உண்மை நான்" (அ) ஜீவாத்மா (அ) தியானிக்கும்-உணர்வு என்பது ஒரு (உயிர்-உணர்வற்ற) ஜடப்பொருளல்ல; அது சைதன்யம் (அ) உயிருள்ள வஸ்து; இறைவனுடன் ஒருங்கிணைந்து இருக்கிறது, அது எல்லையில்லா பேருணர்வு எனப்படும் பிரம்மத்தின் அம்சம். ஆகையால், "(நான்) இறையோன் பரிவாரம்" என்றால், நான் இறைவனைச் சேர்ந்தவன், நான் இறைவனின் ஒரு பகுதி/ அங்கம், நான் இறைவன். இப்படியாக,

"நான் இறைவன்", 'நான் பிரம்மம்', என்று தியானிக்க வேண்டும். இது எப்படிப்பட்டது என்றால், அலை 'நான் கடலைச் சார்ந்தவன்,' 'நான் கடலின் ஓர் அங்கம்,' 'நான் கடலின் ஒரு பகுதி", 'நான் கடல்." என்று சொல்வது போன்றது. எப்போது அலை தனது பெயர், வடிவம், மற்றும் இயக்கம் ஆகிய 'அலைத்தன்மையை' துறக்கின்றதோ, அப்போதே அது தன் சுயத்தன்மையாகிய கடல்-நீர் ஆகி, கடலோடு ஒருங்கிணந்து விடுகிறது. பின்னர், அது, 'நான் அலை' என்று உணர்வதற்கு பதிலாக 'நான் கடல்' என்று உணர்கிறது. அவ்வாறாக அது உணர்வதே சரியானது ஆகும்.

"இறையோன் பரிவாரம் எனும் பதம் மேவலையே புரிவாய்": --- இதை இன்னொரு கோணத்தில் நாம் பார்க்கலாம். இங்கு 'இறையோன் பரிவாரம்' என்ற பதத்தை (நிலையை) அடைய ஆசைப்பட வலியுறுத்தப்படுகிறது, அதாவது, இறை-பக்தர்களின்/ யோகிகளின்/ ஞானிகளின் சங்கத்தில் ஒருவனாக ஆக வலியுறுத்துகிறது.. ஆனால், உண்மையில், யார் இறை-பக்தன்/ யோகி/ ஞானி? தன்னைத்தானே அவ்வாறு சொல்லிக் கொள்கிறவர்களோ, அல்லது மற்றவர்களால் அவ்வாறு அழைக்கப் படுபவர்களோ அல்ல; இறைவனே எவரெவரை "இவன் என் பரிவாரம்" (அ) "இவன் என்னைச் சார்ந்தவன்" என்று கருதுகிறாரோ *அவர்கள் மட்டுமே* அவர் பரிவாரம் ஆவர். அவர்கள் யார்? அவர்கள்தான் இறை–மனிதர்கள், இறைவனை அடைந்தவர்கள், இறைவனை உணர்ந்தவர்கள், "நான் பிரம்மம்" என்ற இறை-உணர்வில் எந்நேரமும் திளைப்பவர்கள். அவர்கள் இவ்வுடலுடன் வாழும்பொழுது 'ஜீவன் முக்தர்கள்' என்றும், இவ்வுடலைத் துறந்த பின்னர் "விதேக முக்தர்கள்" என்றும் அழைக்கப்படுகிறார்கள். அவர்களே துறவிகள்; அவர்களே ஞானிகள்; அவர்களே அருளாளர்கள்; அவர்களே தொண்டர்கள்; அவர்களே 'இறைவனின் உண்மையான பக்தர்கள்'; அவர்களே 'இறையோன் பரிவாரம்'; அவர்களே 'அஹம் பிரம்ம அஸ்மி' (நான் பிரம்மம்) என்ற உணர்வில் நிரந்தரமாக திளைப்பவர்கள். அவர்களுக்கும், இறைவனுக்கும் யாதொரு பேதமும் (வித்தியாசமும்) இல்லை. அதனால், அவர்கள் தெய்வ-மனிதர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் பக்த-அருளாளர்களாக (திருத் தொண்டர் / அருட்தொண்டர் / நாயன்மார் / ஆழ்வார்) இருக்கலாம், யோகி-அருளாளராக இருக்கலாம், ஞானி-அருளாளராக இருக்கலாம். அவர்களே உண்மையான "இறையோன் பரிவாரம்." அவர்கள் மூலம் இறைவன் உலகத்திற்கு அருளுதவி செய்கிறார்.

அத்தகைய உண்மையான இறை-பக்தர்களுக்கு, இறைவன் மட்டுமே உண்மை; இறைவன் மட்டுமே அனைத்தும், இறைவனைத்

தவிர வேறொன்றுமில்லை. இறைவன்பால் அவர்களுக்கு இருக்கும் பூரண விசுவாசம் நம் புரிதலுக்கு அப்பாற்பட்டது --- அந்த விசுவாசத்தினால், அவர்கள் இறைவனிடம் தங்களைப் பூரணமாக அர்ப்பணித்து விடுகிறார்கள். அதனால், இறைவன் அவர்களுக்காக எதையும் செய்யவேண்டி இருக்கிறது; அவர்களுடைய பூரண விசுவாசம் இறைவனை அவர்களுடைய எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யச் செய்கிறது; அவர்களுக்கு எப்பொழுதெல்லாம் தேவையோ அப்பொழுதெல்லாம் வந்து அவர்களின் இடர்ப்பாடுகளை, சிரமங்களை களையச் செய்கிறது. அதுமட்டுமன்றி, அவர்களைத் துன்புறுத்தும் நன்றியற்ற இவ்வுலக மக்களுக்கு, அத்தொண்டர்களின் மகத்துவத்தை எடுத்துக் காட்டுவதற்காக, அடிக்கடி இறைவனை காட்சி அளிக்கவைக்கிறது.

இத்தகைய இறை-பக்தர்களான அருட்செல்வர்களின் சரித்திரத்தை --- அதிலும் விசேஷமாக தென் இந்தியாவில் வாழ்ந்த அறுபத்தி மூன்று நாயன்மார்கள் மற்றும் பன்னிரு ஆழ்வார்கள் ஆகியவர்களின் சரித்திரத்தை --- படித்தால் (அ) கேட்டால், அவர்களின் மகத்துவம், சக்தி, தெய்வத் தொண்டுகள் ஆகியவைகளை நாம் நன்கு அறிந்து கொள்ளலாம். கௌரங்க (சைதன்ய) மகாபிரபு, துளசி தாசர், ராமதாசர், ஞான தேவர், அப்பர், சுந்தரர், ஞான சம்பந்தர், சங்கரர், ராம கிருஷ்ணர், ரமண மகரிஷி, சுவாமி சிவானந்தர் போன்ற இறை-பக்தர்கள் (அருட்தொண்டர்கள்) தங்களது வெறும் சாநித்தியத்தாலும், அருட் பார்வையாலும் மக்களை முற்றிலும் மாற்றி அமைத்திட முடியும். அவர்களின் தொடர்பு, ஸத்-சங்கம் நம்மை முழுதும் சுத்தப்படுத்தி, நமக்கு ஊக்கமளித்து, நம்மில் அரும்பெரும் மாற்றங்களை செய்யவல்லது. எனவே, அவர்களுடன் இணங்கியிருக்கும் நேரடித் தொடர்பால், ஒருவனுக்கு இறைவன் தரிசனம் கிடைப்பது எளிதாகிறது, திண்ணமாகிறது. எப்படி சித்துமணிக்கல் இரும்பைப் பொன்னாக மாற்றிவிடுகிறதோ, அப்படி இவர்கள் மக்களை இறையடியார்களாக மாற்றுகிறார்கள். அவர்கள் உண்மையில் இறைவனைச் சேர்ந்தவர்கள்; அதனால், அவர்களே "இறையோன் பரிவாரம்". "இத்தகைய அருளாளர்களாகிய 'இறையோன் பரிவாரத்தை'ச் சேர்ந்தவன் என்ற பதத்தை அடைவதற்கு ஆசைப்படுவாயாக" என்பதே இச்செய்யுளின் அறிவுரை. இத்தகைய இறையோன் பரிவாரத்தைச்சேர்ந்த பக்தர்கள், இறை-தொண்டு செய்வதை மட்டுமே தங்கள் ஒரே பணியாகக்கொண்டும், இறைவனை பூஜித்தும், அவர் மகிமைகளைப் பாடியும், அவர் நாமத்தை ஜபம் செய்தும், அவரை தியானித்தும், அவரது லீலைகளைப் பற்றி மட்டுமே தங்களுக்குள் பேசியும், போற்றியும் வாழ்ந்து வருகிறார்கள்; சுருங்கக் கூறின், அவர்கள் இறைவனுக்காகவே வாழ்கிறார்கள்,

இறைவனிலேயே வாழ்கிறார்கள். மேலும் அவர்களுக்கு இறைவனைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை. இறை-அனுபூதி அடைந்த தொண்டர்கள், பக்தர்கள், யோகிகள், ஞானிகள், ஜீவன் முக்தர்கள் ஆகிய இவர்கள் மட்டுமே உண்மையில் "இறைவன் பரிவாரம்" ஆவார்கள். எனவேதான், அறுபத்தி மூன்று நாயன்மார்களின் வாழ்க்கை சரிதத்தை விளம்பும் 'பெரிய புராணம்' எனப்படும் தெய்வீகத் தமிழ் படைப்பு, 'திருத்தொண்டர் புராணம்' எனப் போற்றி அழைக்கப்படுகிறது.

'இறை-பக்தர்கள்' ஒரு தனிச் சிறப்பான கூட்டத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் 'தொண்டர்கள்' என அழைக்கப்படுகிறார்கள். தொண்டு என்றால் சேவை (தெய்வீக சேவை) ஆகும். எவரொருவர் இறைவன் மற்றும் அவருடைய அன்பர்களின் சேவையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு விட்டாரோ, அவர் தொண்டர் எனப்படுகிறார். தொண்டர்கள் உண்மையான சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள். அவர்கள் இறைவனுக்கும் அவர்களது பக்தர்களுக்கும் தங்களை அடியார்களாகக் கருதுவார்கள். அவர்கள் கோவில்களுக்கும், ஆசிரமங்களுக்கும் சேவை செய்வதற்காக தங்களை அர்ப்பணித்துக் கொள்கிறார்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கையின் முழு நேரத்தையும் தெய்வீக சேவையில் செலவிடுகிறார்கள். கோவில்களை சுத்தப்படுத்துதல், (உழவாரப் பணி) அக்கோவிலுக்கு வருபவர்களின் தேவைகளைக் கவனித்தல், கோவிலிலுள்ள பூந்தோட்டம், திருக்குளம், கிணறு முதலியவற்றைப் பராமரித்தல், மற்றும் இறை-வழிபாட்டிற்காக பூமாலைகள் கட்டுதல், சந்தனம் அரைத்துக் கொடுத்தல், இப்படியாக பற்பல இறை-சேவைகளில் ஈடுபடுகிறார்கள். இப்படியாக, எப்பொழுதும் இறைவனைப் பற்றிய சிந்தனையிலேயே வாழும் அவர்கள், எல்லாத் தொண்டுகளையும் தாமாக முன் வந்து செய்கிறார்கள்.. அவர்கள் சம்பளத்திற்காக உழைக்கும் வேலையாட்கள் அல்ல. அவர்கள் சேவை, ஏதோவொரு குறிப்பிட்ட கோவிலுக்கோ அல்லது இடத்திற்கோ மட்டும் கட்டுப்பட்டது அல்ல. அவர்கள் ஒரு கோவிலிலிருந்து மற்றொன்றிற்கும், ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கும் செல்கின்றனர். பொதுவாக, எங்கெல்லாம் அவர்களின் சேவை தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் சென்று தொண்டு செய்கிறார்கள். அவர்கள் மிகவும் எளிய உடைகளை அணிவார்கள். அதனால், கோவில் அதிகாரிகளோ, மக்களோ அவர்களைச் சரியான முறையில் மதிக்கா விட்டாலும், அதைச் சிறிதும் மனதிற்-கொள்ளாமல் தொண்டு செய்வதிலேயே கண்ணும் கருத்துமாய் இருப்பார்கள். தங்களின் அகங்காரம் அகல, அனைத்துவகையான அவமானங்களையும் தாங்கிக் கொள்வார்கள். இப்படியாக இறைவன்பால் தங்கள் முழுஅன்பினையும் பொழிவதன் மூலம்

பொறுமையை வளர்த்துத் தங்கள் அகங்காரத்தை நிர்மூலமாக்கி அழித்து விடுகிறார்கள். இதன்மூலம் கந்தப் பெருமானின் கருணையைப் பெறுகிறார்கள். அவர்களின் இறையன்பு, பக்தர்களுக்கு சேவை செய்திடுவதில் அவர்கள் கொண்டுள்ள உண்மையான ஆர்வம் ஆகியவை அவர்களுடைய அந்தராத்மாவுக்கு (இறைவனுக்கு) மட்டும்தான் தெரியும். அவர்களுக்கு இறைவன் மட்டுமே இருக்கிறார், அதுவும் அவரின் பக்தர்கள் வடித்தில். இவர்கள்தான் 'தொண்டர்கள்', உண்மை இறை-பக்தர்கள், இறைவனைச் சேந்தவர்கள் --- "இறையோன் பரிவாரம்".

அப்படியென்றால், நாம் இறைவனுடைய பக்தர்கள் இல்லையா? நாம் தினந்தோறும் கோவில்களுக்குச் செல்கிறோம், வீட்டில் பிரார்த்தனைகளும் பூஜைகளும் செய்கிறோம், வேதங்களை/ சாஸ்திரங்களைப் படிக்கிறோம், ஸத்-சங்கங்களில் பங்கேற்கிறோம், இப்படியே நாம் பக்தி செய்வதைப் பற்றி கூறிக் கொண்டே போகலாம். ஆம், நாமும் இறைவனின் பக்தர்கள்தான்; ஆனால் உண்மையான பக்தர்களல்ல, இரண்டாம்நிலை பக்தர்கள். இறைவனின் உண்மையான பக்தர்கள் இறைவனிலேயே தங்களை நிலைநிறுத்திக் கொண்டு, இறை-சிந்தனையிலேயே தங்கள் மனம் ஈடுபட்டிருக்குமாறு செய்கிறார்கள். வேறு எந்த சிந்தனையும் அவர்கள் மனதில் எழுவதேயில்லை. ஆனால் நம் விஷயத்தில், ஒரு நாளில் சிறிய நேரத்திற்குத்தான் நாம் இறைவனை நினைக்கிறோம்; ஆனால், மற்றநேரத்தில் (கிட்டத்தட்ட முழுநாள் என்றே கொள்ளலாம்) இறைவனை சிந்திக்காமல் இருப்பதோடல்லாமல், காமம், கோபம், பேராசை, வெறுப்பு, பாசாங்குத்தனம் போன்ற தெய்வீகத்துக்குப் புறம்பான எண்ணங்களில், செயல்களில் ஈடுபட்டு வாழ்கிறோம், சிலநேரங்களில் இவைபற்றி நாமே வெட்கப்படுவோம், நாம் இறைவனைவிட உலகத்தோடு அதிகம் சொந்தம் பாராட்டுபவர்கள். உண்மையில் நாம் உலகத்தைச் சேந்தவர்கள்; இறைவனைச் சேந்தவர்கள் அல்ல. ராமகிருஷ்ண பரமஹம்சர் நமது மனதை ஒரு 'ஈ'-க்கு ஒப்பிடுகிறார் --- ஈ சிறிது நேரம் இனிய பண்டங்களில் உட்கார்ந்து இனிப்பை சுகமாக அநுபவிக்கிறது, அடுத்த கணம் அங்கிருந்து பறந்து சென்று, மலத்தின் மீது உட்கார்ந்து அதையும் சுகமாக அநுபவித்துக்கொண்டே இருக்கிறது. நாம் இந்த வகையான இரண்டாம்நிலை பக்தர்கள். நாம் இத்தகைய இரண்டாம்நிலை பக்தர்கள் குழுவைச் சேர்ந்தவர்களாக இருப்பதில் என்ன பயன்? எனவே, "இறையோன் பரிவாரம் எனும் பதம் மேவலையே புரிவாய்" என்று இச்செய்யுளில் சொல்லப்படுவது ஒருவன் அந்த முதல்நிலை அல்லது உண்மையான பக்தனாக ஆவதற்கு ஆசைப்படவேண்டும் என்பது; நம்மைப்போல் இரண்டாம்நிலை பக்தனாவதற்கு அல்ல.

“எனும் பதம் மேவலையே புரிவாய்”: 'எனும் பதம்' என்றால் 'இறையோன் பரிவாரம்' அல்லது 'அஹம் பிரம்ம அஸ்மி' நிலை என்று பொருள். 'மேவலையே புரிவாய்' என்பது, தியானம் செய்து அந்நிலையை அடைவதற்கு தீவிர ஆர்வம் கொள், அதாவது "அஹம் பிரம்ம அஸ்மி" என்ற உணர்வு நிலையில் தன்னை நிலைநிறுத்த ஆர்வம் கொண்டு முயற்சி செய்ய வேண்டும் என்று அர்த்தம். எப்படி? அந்த மகாவாக்கியத்தை தியானிப்பதன் மூலம். ஏனெனில், "அஹம் பிரம்ம அஸ்மி" என்ற தியானம், "அஹம் பிரம்ம அஸ்மி" என்ற மகாவாக்கியத்தின் உண்மையான அனுபவம் (அ) சாக்ஷாத்காரம் அடைவதற்கு வழிவகுக்கும் --- அத்வைத-பாவனையே பின்னர் அத்வைத-அவஸ்தையாகிறது. தீவிர உணர்வு, அனுபவமாகிறது. தியானம், சமாதிக்கு வழிவகுக்கிறது. 'நாம் எப்படி நினைக்கிறோமோ, அப்படியே ஆகி விடுகிறோம்' - (As you think, so you become). நாம் எவ்விதம் சிந்திக்கிறோமோ, அவ்விதமே ஆகிறது நம் விழிப்புணர்வு --- ஜீவாத்மா அல்லது ஈஸ்வரன், மனிதன் அல்லது இறைவன், தனிப்பட்டவன் அல்லது அண்டம், பந்தப்பட்டவன் அல்லது முக்தன் (விடுவிக்கப்பட்டவன்) என்று எப்படி நினைக்கிறோமோ அப்படியே ஆகிறோம். நமது விழிப்புணர்வு, "நான் உடல்" என்று நினைத்தால், அது உடலோடு மட்டுமே வரையறுக்கப்பட்டுத் தன்னை உடலாகவே காண்கிறது (அனுபவிக்கிறது); ஆனால், அது "நான் தூய உணர்வு அல்லது இறைவன் அல்லது பிரம்மம்" என்று நினைத்தால், அது நிச்சயம் இறைவனாக ஆகிறது, ஏனெனில் அது பிரம்மம். எனவே, “இறையோன் பரிவாரம் எனும் பதம் மேவலையே புரிவாய்” என்று மனது அறிவுறுத்தப்படும் போது, "அஹம் பிரம்ம அஸ்மி", "நான் பிரம்மம்" என்று தியானிப்பதன் மூலம் அந்த பிரம்மனின் நிலையை அடைய விரும்புவாயாக என்ற அறிவுரை கொடுக்கப்படுகிறது. தியானம், உணர்தலாகிறது (அதாவது, ‘நான் பிரம்மம்’ என்ற தியானம், ‘நான் பிரம்மன்’ என்ற அனுபூதியில் முடிகிறது, அதாவது எதை எண்ணினானோ, அதுவாகவே ஆகிறான்; தியானம் சமாதியாகிறது.

இவ்வாறு "அஹம் பிரம்ம அஸ்மி", "நான் பிரம்மம்" என்று தியானம் செய்வதன் மூலம் என்ன ஆகிறது என்பது, “பொறையாம் அறிவால் அரிவாய் அடியோடும் அகந்தையையே.” ---- பொறுமையாகிய ஞானத்தால் அகந்தை (“நான்” எனும் ஆணவம்) வேருடன் அரியப்படும் (களையப்படும்) என்று மேலும் விளக்கப்படுகிறது.

“பொறையாம் அறிவு”: 'நான் பிரம்மம்' என்று தியானிக்க குரு அவனுக்கு அறிவுரை கூறினார். ஆனால் பிரம்மம் என்றால் என்ன? அல்லது, எப்படி பிரம்மனை தியானிப்பது? அதற்கு குரு

வழிகாட்டுகிறார். அது 'பொறையாம் (நிறை) அறிவு', அதாவது, **சித்-ஸ்வரூபம்**, (அ) சைதன்ய-ஸ்வரூபம், அல்லது எல்லையற்ற உணர்வு. உபநிஷதத்தில், பிரம்மம் அல்லது அறுதி உண்மை என்பது *'பிரக்ஞானம் பிரம்ம'* --- அதாவது 'உணர்வே பிரம்மம்' --- என்று விளக்கப்படுகிறது. (இந்த *'பிரக்ஞானம் பிரம்ம'* என்பது நான்கு மகாவாக்கியங்களில் ஒன்றாகும்.) கந்த புராணத்தில், கந்தப் பெருமானுடைய அவதாரத்தை விவரிக்கும்போது: "பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பு, அது ஓர் மேனியாகி" என்று கூறப்படுகிறது. (முழு விவரத்திற்கு காப்புச் செய்யுளைப் பார்க்கவும்). பிரம்மம் என்பது 'சோதிப் பிழம்பு', பூரண-ஜ்யோதி, அகண்டாகார உணர்வு அல்லது அறிவு. அதாவது நிறை-உணர்வு; இது ஒரே சீரான நிறை-உணர்வு, அதாவது, அது பிளவுபடாதது, அது பிரிக்க முடியாதது, அது முடிவற்றது, அது எல்லையற்ற பரம்பொருள் (உணர்வு); அதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை, வேறு ஒன்றும் இருக்க முடியாது. அருணகிரியார் இந்த நிறை-உணர்வை "பொறையாம் அறிவு" என்று குறிப்பிடுகிறார். அறிவு என்பது ஞானம் அல்லது உணர்வு (சித் அல்லது பிரக்ஞை) ஆகும். 'பொறை' என்பது 'அடக்கமான', 'சமாதானமான', 'சாந்தமான' ஆகும், அதாவது எல்லையற்ற மற்றும் பிரிக்க இயலாத நிறைவான ஒன்று. எனவே, 'பொறையாம் அறிவு' என்பது "நிறை உணர்வு", அல்லது சாந்தமான, அடக்கமான உணர்வு, அதாவது "உணர்வு உணர்வாகவே இருப்பது" (சித்-சொரூபம்), அதாவது 'அசைவற்ற', 'கிளர்ச்சியற்ற', 'சலனமற்ற', 'மாறுதலற்ற' (விளையாடல் அற்ற) ஒன்று என்று பொருள்படும். ஆகவே, 'பொறையாம் அறிவு' என்பதன் அர்த்தம் 'சமாதானமான அறிவு' (அ) 'உணர்வாக இருப்பது' (*சித்-சொரூபம்*) ஆகும், அதாவது, அது பிரம்மத்தைக் குறிக்கும். '*சித்*' என்பது புலன்களுக்கு தெரியும் உலகின் பண்புகளான எல்லை, வரம்பு, மாறுதல், அசைவு, அழிவு, ஆகிய அனைத்திற்கும் முற்றிலும் நேரெதிரானது. புலன்களுக்குத் தெரியும் இவ்வுலகம் உணர்வில் உண்டாகும் சலனம், தோற்றம் (அ) 'உணர்வு - விளையாடல்' (*சித்-விலாசம்*). பிரம்மம் என்பது இருப்பு (*சித்-சொரூபம்*), இவ்வுலகு என்பது சலனம், விளையாட்டு (*சித்-விலாசம்*). பிரம்மம் என்பது 'என்றும் இருப்பது' (அ) 'மாறுதலற்றது' (பூரணமானது), அதேசமயம், இவ்வுலகம் என்பது 'மாறிக் கொண்டிருப்பது' (அ) 'அழியக் கூடியது'. ஆக, "நான் பிரம்மம்" என தியானம் செய்வாயாக என்று அவன் அறிவுறுத்தப்பட்டதன் அர்த்தம், 'நான் பொறையாம் அறிவு' என்று தியானிக்க வேண்டுமென்பதே, அதாவது, 'நான் நிறை-உணர்வு; எல்லையற்றதும், இரண்டற்றதுமான சைதன்யம் அல்லது அறிவு' என்று தியானம் செய்திட வேண்டும். 'பொறையாம் அறிவு', 'சோதிப்

பிழம்பு', 'பிரக்ஞானம் பிரம்ம' (உணர்வே பிரம்மம்) ஆகியவைகளின் அர்த்தம் ஒன்றே.

"அஹம் பிரம்ம அஸ்மி", "நான் பிரம்மம்", 'நான் நிறை-உணர்வு', 'நான் சைதன்ய-ஸ்வரூபம்' என்று, தீக்ஷை பெற்ற, நன்றாக மனப் பக்குவமடைந்த சாதகன் தியானம் செய்யும்போது, அவனுடைய மனம் தனது அகங்கார-உணர்வு (அ) ஜீவ-உணர்வு (அ) தனித்துவ-உணர்வு ஆகியவைகளை இழந்து, தன் ஆதாரமான அதிஷ்டான-சைதன்னியத்தில், சித்-சொரூபத்தில், 'பொறையாம் அறிவில்' நிலைபெறுகிறது. அதாவது, அகங்காரம்/மனம் தனது சலனத்தன்மையை (*சித்-விலாசம்*) விட்டு 'பூரணமான அறிவு', 'வெறும் இருப்பு' 'பொறையாம் அறிவு' (*சித்-சொரூபம்*) என்ற தன் சுய-சொரூபத்தில் அமர்கிறது. எவ்வாறு அலை-எழுச்சி தணிந்து போகும்போது, அது அமைதியான கடலில் -- தண்ணீரில் அமர்ந்துவிடுகிறதோ, அவ்வாறே இந்த "அஹம் பிரம்ம அஸ்மி" --- "நான் பிரம்மம்" தியானத்தால் ஜீவனின் அகங்கார-அலை அடங்கி, அதன் தனித்துவத்தை இழந்து நிறை-உணர்வில் (பிரம்மத்தில்) ஒடுங்கி விடுகிறது. அப்பொழுது, "நான் பிரம்மம்", "நான் பிரிக்கப்படாத நிறை-உணர்வு", "நான் சித்-சொரூபம்" என்ற ஞானம் அல்லது அனுபூதி அடையப்படுகிறது. அது அவனுடைய அகங்காரத்திற்கு (தனித்தன்மை-உணர்வுக்கு) மட்டுமல்லாமல், அதன் காரணமாகிய அறியாமைக்கும் மரண-அடி கொடுத்து அழித்துவிடுகிறது. ஏனென்றால், அந்த அகண்டாகார வெளிச்சமான சோதிப் பிழம்பில், ஞான-ஒளியில் அறியாமையாகிய இருளுக்கு இடமில்லை. எனவே, "பொறையாம் அறிவால்" ("அஹம் பிரம்ம அஸ்மி" என்ற தியானம் மூலம்) "அரிவாய் அடியோடும் அகந்தையையே" {அகந்தையை அதன் வேருடன் சேர்த்து (அரிந்து) வெட்டிக் களைந்து விடுவாயாக} என்று அச்சாதகன் அறிவுறுத்தப்படுகிறான். ஒளி, இருளை ஒப்புக் கொள்ளாது; அதேபோல், ஞானம் அஞ்ஞானத்தை (அறியாமையை, மற்றும் அதன் காரியமான அகந்தையையும்) ஒப்புக் கொள்ளாது. ஒளியில் இருள் இருக்க முடியாது. அவ்வாறே, சைதன்யமயமான, ஜ்யோதி-சொரூபமான நிறை-உணர்வில் அறியாமை இருக்க முடியாது. "நான் பிரம்மம்" (அஹம் பிரம்ம அஸ்மி) என்ற தியானத்தின் மூலம் "பொறையாம் அறிவை" (சித்-சொரூபத்தை -- பரம்பொருளை) அடைந்து, அந்த அனுபூதியில் நிலை பெறுவது ஒன்றே அகந்தையையும் அதன் ஆணிவேரான (மூலகாரணமான) அறியாமையையும் சேர்த்து அழிப்பதற்கான ஒரே வழியாகும்.

முன்னர் (செய்யுள்-28), அச்சாதகன் தன் தியானத்தில் அண்ட-உணர்வின் விளிம்பைத் தொட்டபோது (சற்றேகுறைய சமாதி நிலை),

அவனது அகந்தை விழுங்கப்பட்டதே (தூக்கத்தில் நடைபெறுவதுபோல, தற்காலிகமாக செயலிழந்ததே) தவிர, அழியாமல் இருந்தது. அகந்தையின் ஆணிவேரான (மூல காரணமான) அறியாமை அழிக்கப்படாத காரணத்தால், தியானம் கலைந்தவுடன் அவன் இந்த மாய (பொய்மை) உலகிற்குத் திரும்ப வேண்டியதாயிற்று ('அறியாமை பொறுத்திலையே' - செய்யுள்: 29); அறியாமை அழியாதவரை, முக்தி பெறுவதென்பது இயலாத ஒன்று. எனவே, "அரிவாய் அடியோடும் அகந்தையை" என்ற அறிவுரை அவனுக்கு இங்கு தரப்படுகிறது.

அச்சாதகன் சன்னியாசம் எடுத்துக் கொண்டதன் மூலம் தன் குறிக்கோளை அடைந்து விட்டான், இறை-அநுபூதி பெற்று விட்டான், இறைவனை-அடைந்து விட்டான் என்றெல்லாம் ஆகாது; சன்னியாசம் குறிக்கோளை அடைவதற்கு ஒரு கடைசி ஆயத்தம்தான். குருவிடமிருந்து பெற்ற சன்னியாச-தீக்ஷை மற்றும் தியானமுறை உபதேசங்களுடன் உண்மையான தியானத்தில் ஆழ்ந்து பரம்பொருளில் திளைப்பதற்கு வேண்டிய தகுதியை இப்போது முழுமையாகப் பெற்றிருக்கிறான். அவன் இனிமேல் 'அஹம் பிரம்ம அஸ்மி' என்ற 'நிறை-உணர்வில்' ஆழ்ந்து தியானம் செய்து, பிரம்மத்தில் தன்னை நிலை பெறச் செய்து கொள்ள வேண்டும், அதாவது சமாதிநிலை பெற்றிட வேண்டும். இவ்வாறு அவன் செய்ய வேண்டும் என்பது குரு அவனுக்கு தந்த அறிவுறுத்தலிலேயே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. --- 'பொறையாம் அறிவால்' (தன்னைப் பற்றிய உண்மை அறிவை அடைந்து) 'அரிவாய் அடியோடும் அகந்தையையே' (அகந்தையை அதன் வேரான அறியாமையுடன் சேர்த்து வெட்டிவிடுவாயாக) என்பதில் உணர்த்தப்பட்டுள்ளது.

முன்னர், சாதனையின் துவக்க காலத்தில், குரு அச்சாதகனுக்குத் தந்த வாய்மொழி அறிவுறுத்தல், அவனிடம் "நான் உடலல்ல. நான் ஆத்மா" என்ற தத்துவார்த்தப் புரிதலை ஏற்படுத்தியது (மெய்பொருள் பேசியவா - செய்யுள்: 8); அந்த வாய்மொழி அறிவுறுத்தல் இப்பொழுது சன்னியாசம் கொடுத்து, 'அஹம் பிரம்ம அஸ்மி' என்ற மகாவாக்கியத்தின் மேல் தியானம் செய்யச் சொன்னதன்மூலம் இங்கு நடைமுறைப்படுத்தித் தருகிறார் (அ) அதற்கு ஒரு ஸ்தூல வடிவம் தருகிறார்,

==========

செய்யுள் - 38

==========

ஆதாளியை ஒன்றறியேனை அறத்
தீதாளியை ஆண்டது செப்புமதோ
கூதாள கிராத குலிக்கிறைவா
வேதாள கணம் புகழ் வேலவனே.

பொழிப்புரை: "ஓ வேலாயுதப் பெருமானே! கூதாள மலர் மாலையை அணிந்தவரே! வேடுவக் குல வள்ளி தேவியின் மணாளனே! வேதாள கணங்களால் (பேய்க் கூட்டங்களால்) போற்றப்படுவரே! ஓ பெருமானே, நான் ஒரு படாடோபக்காரன், வம்பன், நன்மை ஒன்றுமே அறியாத மூடன், மேலும் முற்றிலும் தீய குணங்கள் நிறைந்தவன். அப்படிப்பட்ட என்னை நீங்கள் ஏற்று ஆட்கொண்ட கருணையை என்னவென்று சொல்வது!"

விளக்கவுரை

அச்சாதகன் தன் குரு தன்னை ஒரு சீடனாக ஏற்றுக் கொண்டு, தன் பால் மிக்க கருணை கொண்டு சன்னியாச தீக்ஷையும் தந்து, தியான முறையையும் உபதேசத்து அருள்புரிந்ததற்காக மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். அவன் தனது நன்றியை வெளிப்படுத்திட சொற்களே கிடைக்காமல் தடுமாறுகிறான். ஏனெனில், இந்த ஆன்மீகப் பாதையில் நடக்கத் தொடங்குவதற்கு முன்னர் அவன் எவ்வாறு இருந்தான் என்பதும்; பின்னர், தொடக்கத்திலிருந்தே ஆன்மீகப் பாதையில் அவன் அவ்வப்போது எதிர்கொண்ட இடர்பாடுகளை எதிர்கொள்ள குரு எப்படியெல்லாம் உதவி செய்து வந்தாரென்பதும்; கடைசியாக அவர் இவ்வுபதேசம் தந்தருளுவதற்கு முன்னர் தனது நிலைமை எப்படி இருந்தது என்பதும் (செய்யுள்-31 - தாழ்வானவை செய்தது) அவனுக்கு நன்றாகத் தெரியும். தன் சஞ்சித கர்ம மூட்டைக்குள் பலவகையான கொடூரமான கர்மங்கள் இருப்பதை அவன் ஒரு வேளை பார்த்ததனால்தான் இங்கு அவன் தன்னை 'அறத் தீதாளி' (முற்றிலும் தீய இயல்பு கொண்டவன்) என்றழைத்துக் கொள்கிறான். இவைகளையெல்லாம் நினைவிலிருத்தியே அவன் உணர்ச்சி பொங்க பின்வருமாறு கூறுகிறான்: "நான் ஒரு வரட்டு ஜம்பக்காரன், நல்லது ஒன்றையும் அறியாதவன், கொடூரமான தீய

இயல்புகளைக் கொண்டவன்; இருந்தபோதிலும், நீங்கள் என்னை ஏற்றுக்கொண்டு மாற்றியமைத்தீர்கள்! உங்களது கருணையைப் பற்றி நான் என்னதான் சொல்ல இயலும்!"

சன்னியாச தீக்ஷை கொடுக்கும்போது நடத்தப்பட்ட சடங்குகளின் அபார சக்தி, கோஷிக்கப்பட்ட வேத மந்திரங்களின் பலன், 'தத் த்வம் அஸி' என்ற மகாவாக்கிய உபதேசத்துடன் குருநாதர் அவனுக்குத் தந்தருளிய ஆற்றல், ஆகிய அனைத்துமாகச் சேர்ந்து அச்சாதகனிடம் ஒரு முழுமையான உள் பரிமாற்றத்தையே கொண்டு வந்துவிட்டது. இச்சடங்குகளின் இறுதியில், குரு அவனுக்கு காவி வஸ்திரங்களைக் கொடுக்கிறார். அதைப் பெற்றுக் கொள்ளும்போது, அவனை அறியாமலேயே ஒரு உணர்ச்சி அவனை ஆட்கொள்ளுகிறது; ஏனெனில் அவன் எப்படியிருந்தானென்றும், உண்மையில் அவன் சந்நியாசத்திற்கு அருகதையில்லாதவனென்றும் அவனுக்குத் தெரியும். சன்னியாசம் பெறுவதற்கான எல்லாத் தகுதிகளையும் உடைய ஒருவனைக்கூட, தான் அதற்கு தகுதியானவனா என்று சிந்திக்கச் செய்யும் அந்த சன்னியாச வைபவம். உதாரணமாக, உலகத்திலேயே உயரமான ஒருவன் ஒரு மிகப்பெரிய மலை முன் நின்றால், அவன் எப்படித் தன்னை ஒரு சித்திரக் குள்ளனாக உணர்வானோ அப்படி தற்சோதனை செய்வான். எனவே, காவி வஸ்திரங்களைப் பெற்ற அச்சாதகன் ஆத்ம ஞானத்திலும் பேரின்பத்திலும் மலைபோல் உச்ச நிலையிலிருக்கும் ஆசானான தன் குருவின் பாதாரவிந்தங்களில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து, முழுமையான விநயத்துடன், தனது மனமார்ந்த நன்றியை வெளிப்படுத்துகிறான்: "குருவே, என் இறைவனே! நான் ஒரு வரட்டுஜம்பக்காரன், நல்லது ஒன்றையும் அறியாதவன், கொடூரமான தீய இயல்பு கொண்டவன், நான் ஒரு முழு முட்டாள். இவ்வாறெல்லாம் இரும்பு போன்று இருந்த என்னை (ஏற்றுக்கொண்டு) விலைமதிப்பற்ற தங்கம் போன்று மாற்றியமைத்துவிட்டீர்கள்! நான் திகைத்து ஊமைபோல் ஆகி விட்டேன்".

சன்னியாச ஆசிரமத்தை மேற்கொள்ளும்போது ஒவ்வொருவரின் உண்மையான உணர்வும் இவ்வாறுதான் இருக்கிறது. மேலும், இத்தகைய ஒரு அருமையான பாக்கியம் கிடைப்பது எத்தனை பேர்களுக்குக் கொடுத்து வைத்திருக்கிறது! இந்த பாக்கியத்தை பல கோடி நபர்களில் ஒருவன் பெறுவதுகூட மிகமிக அரிது. இவ்வாசிரமத்தின் மகிமையை விவரிக்க வார்த்தைகள் கிடையாது. எனவேதான், பொய்யாமொழிப் புலவர் எனப் பெயர் பெற்ற திருவள்ளுவப் பெருமான் பின்வருமாறு கூறுகிறார்: *"துறந்தார் பெருமை துணைகூறின் வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டற்று"*

– 'முற்றும் துறந்த முனிவரது பெருமையை அளவிட்டுக் கூறுதல், இவ்வுலகத்தில் இதுவரை இறந்தவர்களை எல்லாம் எண்ணிக் கணக்கிடுவதைப் போன்றது' (குறள்: 3.2).

ஒரு மகாபுருஷராகிய குருவால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, சன்னியாச-தீக்ஷை கொடுக்கப்பட்டு, அவரிடமிருந்து மகாவாக்கிய உபதேசத்தைப் பெற்று, தனது நிஜ-சொரூபத்தை நினைவூட்டி உபதேசம் பெறுவது (செய்யுள்-37), ஒரு சாதகனுக்கு பெரும் சிறப்பு வாய்ந்த முக்கிய சம்பவம். எனவே, தனது அதிர்ஷ்டத்தை நினைத்து அவன் அதிசயிக்கிறான்; மேலும், மிக்க கிருபையும் கருணையும் கொண்டு தனக்கு இவ்வாறான பொன்னான வாய்ப்பையளித்த தன் குருவிற்கு அவன் மௌனமாகத் தன் மனதில் பலகோடி நன்றிகளையும் செலுத்துகிறான். சாதாரணமாக, தகுதி வாய்ந்தவனென்று கருதப்படும் சீடனுக்கே குரு சன்னியாச ஆசிரமம் கொடுப்பாரென்றாலும், எந்த சாதகனும் தான் நூறு சதவிகிதம் தகுதி உடையவன் என்று மார்தட்டிக் கொள்ள இயலாது; உண்மையாகவே தகுதி உடையவனான ஒருவன் விஷயத்திலும்கூட, குருவானவர் அவன்பால் காட்டிய கிருபையாலும் முன்னர் அவர் அவனை இதற்குத் தயார்படுத்தியதாலும்தான் அந்த தகுதியானது வந்ததென்பது அவனுக்குத் தெரியும். எனவே, குரு தன்பால் காட்டிய கிருபையைக் கண்டு அதிசயித்து, அச்சாதகன் தனக்குக் கிடைத்த பாக்கியத்தை நினைத்து ஆச்சரியமடைகிறான்.

மலைப் பகுதிகளில் கூதாள பூச்செடிகள் காணப்படுகின்றன. அதன் மலர்களுக்கு நல்வாசனையோ அழகோ இல்லை. அப்படிப்பட்ட கூதாள மலர்களால் கட்டப்பட்ட மாலைகளை முருகப் பெருமான் அணிந்து கொள்கிறார். இது அவரது எளிமையையும், தகுதியற்ற பொருள்களைக் கூட உவந்து ஏற்றுக்கொள்ளும் கருணை உள்ளத்தையும் குறிக்கிறது. இயல்பாகவே மிகவும் கொடூரமான குணம் கொண்ட வேடுவர்களால் வள்ளி தேவியார் வளர்க்கப்பட்டவர். பெருமான் தானே தேடிப்போய், அவரை விருப்பத்துடன் ஏற்றுக் கொண்டார். இதுவும் பெருமானின் தாராள குணத்தை வெளிப்படுத்துகிறது. சூரபத்மன் மற்றும் அவனது படையுடன் நடந்த போரில், பெருமானின் வேலாயுதத்தால் எண்ணிலடங்கா அசுரர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். பிணம் தின்னும் வேதாள கணங்கள், அந்த இறந்த அசுரர்களின் உடல்களை உண்டு நல்விருந்து பெற்றதால் மகிழ்ந்தனர்; அந்த மகிழ்ச்சியில் அவர்கள் கூவி, பாடி, ஆடிப் பெருமானைப் போற்றினர். பெருமானும் அவர்களது பாடல்களையும், போற்றுதல்களையும் கேட்டு மகிழ்ந்தார். பெருமான் எவ்வளவு கருணை படைத்தவர், மற்றும் எளிமையானவர்! தேவர்களும்,

ரிஷிகளும், முனிவர்களும், பக்தர்களும் சரியான ஸ்வரத்துடன் கூடிய வேத மந்திரங்களை ஓதுவதைக் கேட்பதில் பெருமகிழ்ச்சி அடையும் அதே பெருமான், பேய்களும் பிசாசுகளும் செய்யும் பெரும் குழப்பக் கூச்சல்களை பொறுமையுடன் கேட்டு ரசிக்கிறார். இவை அனைத்தும் பெருமானுடைய இரக்க குணத்தையும், தகுதியற்ற பொருள்களைக் கூட மனமுவந்து ஏற்றுக்கொள்ளும் உன்னத குணத்தையும் மிக அழகாக சித்தரிக்கின்றன. இந்த உபமானங்களை இச்செய்யுளில் கொடுப்பது எவ்வளவு பொருத்தம்: "ஆதாளியை ஒன்றறியேனை அறத் தீதாளியை ஆண்டது செப்புமதோ!

==========

செய்யுள் - 39

==========

மாவேழ் சனனம்கெட மாயைவிடா
மூவேடணை என்று முடிந்திடுமோ
கோவே குறமின்கொடி தோள்புணரும்
தேவே சிவசங்கர தேசிகனே.

பொழிப்புரை: "பிரபஞ்சத்தின் அரசே! குறவர் குலத்தில் வளர்ந்த மின்னல் கொடி போன்ற வள்ளி தேவியின் தோள்களை அன்புடன் தழுவுகின்ற முருகப் பெருமானே! சிவசங்கரப் பெருமானின் குருவே! ஏழு வகையான பெரிய பிறவிகள் முடிவடைய (தீர்ந்துவிட), மாயையிலிருந்து பிரியாது (விடுபடாது) இருக்கும் மூன்று வகையான ஏடணைகளும் (ஆசைகளும்) எப்பொழுதுதான் முடிவிற்கு வருமோ?" (உடனடியாக முடித்திடப் பிரார்த்திக்கிறேன்.)

விளக்கவுரை

சன்னியாச-தீக்ஷை, மகாவாக்கிய உபதேசம், தியானம் செய்யும் முறை ஆகிய எல்லாவற்றையும் பெற்று பரம்பொருளை அடைவதற்குத் தன்னை முழுமையாகத் தயார் செய்துகொண்ட அச்சாதகன், எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இறைவனை 'அடைய' அவா கொள்கிறான். தனது குரு உபதேசித்த முறையில், அவன் சம்சார சுழற்சிக்குக் காரணமான பந்தத்தை விரைவில் உடைத்து, இறை-அநுபவத்தைப் பெற்றிடும் உறுதி பூண்டு, தன் சாதனையைத் தீவிரமாக்கிடும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கிறான். இத்தகைய அவாவானது அவன் உள்ளத்தில் பொங்கிப் பீறிடுவதால், பரம்பொருள் தியானத்தில் (*ஞான மார்க்கத்தில்)* தீவிரமாக தன்னை ஈடுபடுத்திக் கொள்வதற்கு முன்னர் (அவன் அவ்வாறு அடுத்த செய்யுளிலிருந்து தொடங்குகிறான்), மனமார்ந்த ஒரு பிரார்த்தனையை *(பக்தி மார்க்கம்)* இச்செய்யுளில் பெருமானிடம் சமர்ப்பித்துக் கொள்கிறான். முதலிலிருந்தே பக்தியும் ஞானமும் கைகோர்த்துக் கொண்டு வருவதையும், அவை இரண்டும் மெதுவாக ஒன்றோடொன்று இணைந்துகொண்டு வருவதையும் பார்த்து வருகிறோம். அவன், "பிரபஞ்சத்தின் அரசான முருகப்

பெருமானே! வள்ளி தேவியை அன்புடன் அணைந்தவரே! சிவசங்கரப் பெருமானின் குருவே! ஏழு வகையான பெரிய பிறப்புகள்கொண்ட இந்த சம்சாரச் சக்கரம் முடிவடைய (தீர்ந்துவிட), மாயையிலிருந்து பிரியாது (விடுபடாது) இருக்கும் மூன்று வகையான ஏடணைகளையும் கூடிய சீக்கிரம் முடிவடையச்செய்வாய். அவை முடிவிற்கு வந்தால்தானே, நான் இவ்வெழுவகை பிறப்புகளிலிருந்தும் விடுபட இயலும்." என்று பிரார்த்தனை செய்கிறான்.

இந்த மாயையானது எளிதில் விளங்காதது, விவரிக்கவும் இயலாதது. இதன் ஆதிக்கம் பிண்டத்திலும் (தனித்துவ ஜீவன் நிலை: **Individual)** உள்ளது, அண்டத்திலும் (பிரபஞ்சம்: **Cosmic Universe)** உள்ளது --- ஒரு பக்கம், ஆசையெனப்படும் மூன்றுவித ஏடணைகளுடன் (ஆசைகளுடன்) ஒன்றாயிருந்து (தனித்துவ ஜீவனை) மனிதனை ஆசையால்-தூண்டப்பட்ட கர்மங்களைச் செய்ய வைக்கிறது; இன்னொரு பக்கம், அவரவர்களின் கர்மங்களுக்கு ஏற்ப ஏழு விதமான உயிரினங்களில் அந்த ஜீவர்கள் பிறந்து அந்த கர்மங்களை அநுபவிப்பதற்கு ஏற்ற புலங்களை (இடம், காலம், சூழ்நிலை, பொருள்கள் ஆகியவைகளை) இப்பரந்த பிரபஞ்சத்தில் ஏற்படுத்தித் தருகிறது. இப்பிரபஞ்சத்தின் இப்புலங்களையே (பெரிய ஏழுவித பிறப்புகளையே) அடுத்த செய்யுளில் 'மனை' என்று கூறப்படுகிறது, எவற்றில் அறிவிலிகளான ஜீவராசிகள் மீண்டும் மீண்டும் பிறந்திறந்து சுற்றிக் கொண்டேயிருக்கின்றன.

பொன்னாசை (செல்வம்/ சொத்து/ உடைமை), பெண்ணாசை (மனைவி, குழந்தைகள், குடும்பம்), மண்ணாசை (இவ்வுலக வாழ்வில் பெயர், புகழ்; அவ்வுலக-சொர்க்க வாழ்வில் சுகம்) ஆகிய இம்மூன்றுமே ஏடணைகள் எனப்படும் அடிப்படை வாஞ்சைகளாகும் (ஆசைகளாகும்). இவையனைத்தும் காரண சரீரத்திலிருந்து பிரிக்கவே முடியாதவைகள்; இதுவே அவித்யா, அறியாமை, அஞ்ஞானம், மாயை என்றெல்லாம் பலவிதமாக அழைக்கப் படுகின்றது. தேவர், மனிதன், விலங்கு, பறவை, பூச்சி, நீரினம், மரஞ்செடிகொடி ஆகிய ஏழுவிதமான யோனி வகைகளில் ஜீவர்கள் பிறப்பதற்கு இம்மூன்று ஏடணைகளே காரணம் ---- அவ்வேழு சனனமும் இப்பிரபஞ்சத்தின் புலம்கள், மாயையின் 'மனை' அல்லது 'வீடு'. எனவே, இம்மூன்று ஏடணைகளும் அழிவதற்கான பிரார்த்தனை இங்கு செய்யப்படுகிறது.

இச்செய்யுள் ஒரு விதத்தில் முன்னர் நாம் பார்த்த செய்யுள்-16ன் விரிவாக்கமென்று கொள்ளலாம். 16ம் செய்யுளில் கூறப்பட்ட "பேராசை", இங்கு "மூவித ஏடணைகள்" என்றும், அங்கு கூறப்பட்ட "உழலுதல்" இங்கு "மாவேழ் சனனம்" என்றும் கூறப்படுகிறது.

(மேலும், இச்செய்யுள், "விதிகாணும் உடம்பை விடா வினையேன்....." என்ற 35ஆ-ம் செய்யுளுடன் தொடர்பு உள்ளது.)

அச்சாதகன் குடும்பத்தையும் வீட்டையும் துறந்துவிட்டான், சன்னியாசமும் மேற்கொண்டுவிட்டான், மகாவாக்கிய உபதேசமும் பெற்றிருக்கிறான் (செய்யுள்- 37). இப்பொழுது அவன் செய்யவேண்டியது ஒன்றே ஒன்றுதான் --- அதுதான் மாயையின் கடைசி மேற்போர்வையான அதனுடைய காரண வடிவமாய் இருக்கும், அதாவது அதிலிருந்து பிரிவுபடாது பிணைந்திருக்கும், மூன்று ஏடணைகளை அடியோடு அழிப்பது. அதையும் ஒழித்திட அவன் மிகவும் ஏங்குகிறான். சம்சாரச் சக்கரத்திலிருந்து உடனே விடுபட அவன் இப்போது கொண்டிருக்கும் தீவிர ஏக்கமானது, அவன் விரைவிலேயே ஆன்மீகத்தின் கடைசி கட்ட சாதனையைச் செய்யத் தொடங்கப் போகிறானென்பதற்கான அறிகுறி (உண்மையில் அவன் இவ்வாறு செய்வதை நாம் அடுத்த செய்யுளில் காணலாம்); அதனாலேயே அவன் முருகப் பெருமானிடம் எப்படி அவர் வள்ளி தேவியை ஸ்வீகரித்து ஏற்றுக்கொண்டு தனது சொந்தமாக ஆக்கிக் கொண்டாரோ, அப்படியே தன்னையும் அவரது வசமாக்கிக் கொள்ள அவரைப் பிரார்த்திக்கிறான்.

பிறப்பிறப்பு சக்கரம் முடிவற்றது. ஜீவாத்மா (தனித்துவமடைந்த ஆத்மா) தனது ஆசைகள் மற்றும் கர்மவினைகளுக்கேற்ப பற்பல உயிரினங்களாகப் பிறந்தும் இறந்தும் கொண்டுதான் இருப்பான்; ஜீவன் எல்லா ஆசைகளிலிருந்தும் தன்னை முழுவதுமாக விடுவித்துக் கொள்ளும்வரை அத்தகைய சம்சார சுழற்சியென்பது முடிவில்லாமல் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும். 84 இலட்சம் வகையான யோனிகள்/ உயிரினங்கள் உள்ளனவென்றும், கடைசியில் மோக்ஷத்திற்குக் கடைவாயிலான (மோக்ஷத்-துவாரமான) மனித ஜென்மம் கிடைக்கிறதென்றும் சொல்லப்படுகிறது. இந்த 84 இலட்சம் யோனிகளும் (உயிரினங்களும்), மரஞ்செடிகொடி, நீரினம், ஊர்வன, பறப்பன, விலங்கு, மனிதன், மற்றும் தெய்வம், ஆகிய ஏழு வகைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவ்வேழும் பரந்த பிரிவுவகைகள் என்பதைக் குறிக்கவே 'மாவேழ்' (பெரிய ஏழு) என்று சொல்லப்பட்டிருக்கிறது --- ஒவ்வொரு பரந்த பிரிவுகளிலும் கணக்கற்ற உட்பிரிவுகள் உள்ளன. 84 இலட்சம் யோனிகளும் இவ்வேழு பிரிவுகளில் பின்வருமாறு பங்கீடு செய்யப்பட்டுள்ளன: (1) தேவர்கள் 14 இலட்சம் யோனிகள், (2) மனிதன் 9 இலட்சம், (3) விலங்குகள் 10 இலட்சம், (4) பறவைகள் 10 இலட்சம், (5) ஊர்வன 11 இலட்சம், (6) நீரினங்கள் 10 இலட்சம், மற்றும் (7) மரஞ்செடிகொடிகள் 20 இலட்சம்.

இவ்வேழு மகா சனனங்களும் மாயையின் ஆளுமைக்கு உட்பட்டவை. பிறப்பு இறப்பிலிருந்து ஒரு ஜீவன் விடுபட வேண்டுமானால், அந்த ஜீவனின் மூன்றுவித ஏடணைகளும் அழிக்கப்பட வேண்டும். இந்த மூன்றுவித ஏடணைகள் மாயையின் சாரம்; இவை மாயையிலிருந்து தனிப்பட்டவையல்ல, எனவே இவைகளே மாயையாகும். எனவே, ஏடணைகளிலிருந்து விடுபடுவதென்றால், மாயையிலிருந்து விடுபடுவதேயாகும். ஏடணை என்றால் வாஞ்சை; ஆனால், இங்கு குறிப்பிடப்படுவது ஸ்தூலப் பொருள்கள் மீதான விருப்பமோ ஆசையோ அல்ல. ஜீவாத்மாவை வெளிநோக்கிச்செல்லவைக்கும் அடிப்படை ஏக்கம் (அ) உந்துதலைக் குறிக்கும். ஆசைகள் எண்ணிலடங்காதவை என்றாலும், அவை அடிப்படையில் மூன்றில் அடக்கமாகும். மாவேழ் சனனங்களில் அதாவது வெவ்வேறு கருப்பைகளில் (முட்டை/ விதை/ கருப்பை/ ஈரப்பத வெப்பம் ஆகிய நான்கு விதங்களில்) ஜீவனானவன் பிறந்து உழலுவதற்கு, இந்த மூன்றுவித ஏடணைகளே காரணம். இந்த ஏடணைகளை ஜீவன் விட்டொழித்தாலன்றி, பிறப்புஇறப்பிலிருந்து விடுதலை பெறுவது சாத்தியமில்லை.

இந்த மூன்றுவித ஏடணைகள்:

1. வித்தேஷணை (அ) அர்தேஷணை:

அர்தேஷணை என்பது சொத்து, செல்வம், (பணம்), ஆகியவற்றின் மீதான ஆசை. பெருத்த செல்வம் தங்களிடமிருந்தால் அனைத்தையும் கட்டி ஆளலாம், வாழ்க்கையை முழுவதுமாக அநுபவிக்கலாம் என்று மக்கள் எண்ணுகிறார்கள். அதனால், மக்கள் செல்வந்தர்களாக ஏங்குகிறார்கள்.

2. புத்ரேஷணை:

புத்ரேஷணை என்பது மனைவி மற்றும் குழந்தைகள் (குறிப்பாக மகன்) மீதான ஆசை. இவ்வுலகிலும் சொர்க்கத்திலும் சுகங்களை அனுபவிக்க ஆசை.

3. லோகேஷணை:

லோகேஷணை என்பது இவ்வுலகத்தில் பெயர் மற்றும் புகழுடன் வாழ்வதில் ஆசை. அவரவர்களது இடத்தில் (ஊர்/ மாநிலம்/ நாடு), அவரவர்களின் துறைகளில் (கலை, விளையாட்டு), மதம் மற்றும் ஆன்மீகத் துறைகளில் கூட ஒவ்வொருவரும் மிக முக்கியமான நபராகவும், பரவலாக அறியப்பட்டவராகவும், மதிக்கப்பட்டவராகவும் இருக்க விரும்புகிறார்கள். சுருங்கக் கூறின், ஒருவன் எங்கிருந்தாலும், என்ன செயல் செய்து வந்தாலும், எப்படிப்பட்டவனாக இருந்தாலும், அவன் முக்கியமானவனாகவும், நன்கு அறியப்பட்டவனாகவுமே இருக்க விரும்புகிறான்.

தமிழ் மொழியில் இந்த மூன்று ஏடணைகள் (ஆசைகள்) மண்ணாசை, பெண்ணாசை மற்றும் பொன்னாசை என்று அழைக்கப்படுகின்றன.

ஏடணைகள் ஒருவனுக்கு இவ்வுலகில் மகிழ்ச்சி தந்து, அவனை சொர்க்கத்திற்கும் அழைத்துச் செல்லக்கூடும், ஆனால் அவை அவன் முக்தியடைவதற்கு பெரும் தடைகளாக இருக்கின்றன. அவற்றை இதய முடிச்சு (*ஹிருதய கிரந்தி*) மற்றும் சம்சாரத்தின் மூலம் என அழைக்கலாம். அவற்றை தகர்த்தெறிவதென்பது மிகவும் கடினம். பிரபஞ்சத்தையும் கடந்து எங்குமிருக்கும் எல்லையில்லாப் பேருணர்வை, அவை ஒரு குறிப்பிட்ட தனி உடல் அல்லது குறிப்பிட்ட உலக அநுபவத்தின் எல்லைக்குள் கட்டுப்படுத்துகின்றன. இந்த ஏடணைகள் மட்டும் (ஜீவனிடத்தில்) இல்லையெனில், எவர்தான் மோக்ஷத்தை அடையமாட்டார்கள்? இப்படியாக, ஆசைகளே பரம்பொருளை அடைவதற்கும், அதன் அநுபூதியை பெறுவதற்கும் நேரடியான தடைகளாக இருக்கின்றன; ஆனால், அதற்கு நேர்மாறாக, இறை-கிருபை ஆத்மானுபூதியை அடைவதற்கான நேரடியான வழியாகிறது. எனவே, அச்சாதகன் இந்த மூன்றுவித ஏடணைகளை அழித்திட பெருமானின் கிருபையை வேண்டி மூன்றுவித அடைமொழிகளால் அவரை அழைக்கிறான்: "இப்பிரபஞ்சத்தின் அரசனே", "வள்ளி தேவியை அன்புடன் அணைத்த பெருமானே", "பகவான் சிவனாருக்கே குருவானவரே".

ஒரு நாட்டிலுள்ள குடிமக்களுக்கு ஏதாவது பிரச்சினை இருந்தால், அவற்றைத் தீர்த்துக் கொள்ள இயல்பாகவே அவர்கள் தங்கள் அரசனைத்தான் நாடுவார்கள். அதுபோலவே, அச்சாதகனும் தனது ஏடணைகளை களைந்திடுவதற்கு, இப்பிரபஞ்சத்திற்கே அரசனாகிய இறைவனை நாடுகிறான்.

கந்தப் பெருமான் வள்ளி தேவியார் இருந்த தினைப் புனத்திற்கே சென்று, அன்புடன் அவரை அணைத்து, தனது துணைவியாகவே அவரை ஏற்றுக்கொண்டு, அதன் மூலம் கொடூரமான வேடுவர்களின் பிடியிலிருந்து அவரை நிரந்தரமாகவே விடுவித்தார். அதுபோலவே, ஒரு சாதகன் பெருமானின் கிருபையால் அன்போடு அணைக்கப்பட்டால், அவன் இந்த ஏடணைகளின் பிடியிலிருந்து நிரந்தரமாக விடுதலைபெறுவான். எனவேதான், அச்சாதகன், பெருமானை "வேடுவர்களால் வளர்க்கப்பட்ட மின்னல் போன்ற வள்ளி தேவியை அன்புடன் அணைத்தவரே" என்று அழைத்து அவரின் கிருபையை தனக்கருளுமாறு மிகவும் வேண்டிப் பிரார்த்திக்கிறான்.

மேலும், குருவின் கிருபையானது ஒருவனுக்கு முழுவதுமாக வந்தமையும்போது, அவன் பரம்பொருளுடன் நன்கு ஐக்கியம்

ஆகிவிடுகிறான். ஆகையால், "சிவசங்கரரின் குருவானவரே" என்று முருகப் பெருமானை குறிப்பிடுகிறான்.

சாதனையின் துவக்கக் கட்டத்தில், மாயையானது ஒரு சாதகனை மனைவி, குழந்தைகள், செல்வம், போன்ற தனித்தனியான ஸ்தூலப் பொருள்களின் வடிவத்தில் அவனுக்கு வெளியிலிருந்து தொந்திரவு செய்கிறது. தனது ஆன்மீகப் பயணத்தின் துவக்க நிலையிலிருந்த அச்சாதகனது இவ்வாறான நிலைமை செய்யுள்-5ல் வர்ணிக்கப்பட்டிருந்தது. ஆனால், குருவிடமிருந்து தியான நுட்பங்களைப் பற்றிய உபதேசத்தைப் பெற்று, தன் தியானத்தில் சற்றேகுறைய சமாதிநிலையை அனுபவித்த பின்னர், மாயை என்பது அவனுக்கு வர்ணிக்க முடியாத ஒன்றாகிறது ---"இல்லேயெனும் மாயை" (செய்யுள்- 29). கண்ணிற்குப் புலனாகிற உலகமாக இருந்தபோதிலும், அண்ட-விழிப்புணர்வில் (சற்றேகுறைய சமாதிநிலையில்) இந்த மாயை இல்லாததாகிறது; இந்த மாறுபட்ட பார்வையினால், மாயையானது, எப்படியிருந்தாலும், அழிந்துவிடும் ("படுமாயை") என்ற ஒரு நிர்ணயத்தை அவனுக்குத் தந்தது. ஆயினும், அவன் இவ்வுலகில்தான் எதார்த்தமாக வாழ்ந்தும் அதை அநுபவித்தும் வர வேண்டியிருக்கின்றது (செய்யுள்-31). ஆனால், அந்நிலையில், மாயையானது முன்பிருந்ததுபோல் ஸ்தூலமான தனித்தனிப் பொருள்களாக இல்லாமல், இப்போது மொத்த உலகமாகவே இருக்கின்றது. உலகம் என்று இங்கு கூறப்படுவதில் அவனது உடலும் அடக்கம். மற்ற சமயங்களில் அனுபவிக்கப் பட்டாலும், இவை தியானநிலையில் இல்லாமல் போய்விடுகிறது. ஆனால், இச்செய்யுளில், மாயையானது சிருஷ்டி முழுவதற்கும் நீடித்துப் பரந்துள்ளது --- அதாவது, ஏழு வகையான ச(ஜ)னனமாகத் தொகுக்கப்பட்ட 84 இலட்சம் யோனிகளும் அந்த மொத்த சிருஷ்டி முழுவதுமே மாயையின் விரிவாக்கம்தான் (காதுகளால் கேள்விப்பட்ட ஆனால் கண்ணால் பார்த்திராத பல லோகங்கள் கொண்ட இப்பிரபஞ்ச மாயை) --- எனினும், அதுவே (மாயையே) ஜீவர்களின் இதயத்தில் ஏடணைகளாக (அடிப்படை வாஞ்சைகளாக) அமர்ந்திருக்கிறது. இந்த மாயைதான் எவ்வளவு விசித்திரமாக இருக்கிறது பாருங்களேன்!

அதன் *ஸ்தூல* வடிவத்தில், மாயை, மனைவி, வீடு போன்ற தனித்தனியான பொருள்களாகவும், சாதகனுக்குப் புறம்பானதாகவும் கருதப்படுகின்றது; ---- அதாவது, இப்பொருள்கள் வரம்புக்குட்பட்டவை, மேலும் தூரத்திலுள்ளன. அதன் *சூட்சும* வடிவத்தில், மாயை இரு புறங்களிலும் விரிகின்றது, அதாவது ஒருபுறத்தில் தனித்தனியான பொருள்களிலிருந்து உலகம் முழுவதையுமே ஒரே பொருளாக்கிக் கொள்கிறது, அதேபோல் மற்றொரு புறத்தில் வெளியிலுள்ள

பொருள்களிலிருந்து அவன் உடல்வரையும் (உடல் உட்பட) வந்துவிடுகிறது ---- அதிகமாகப் பரந்து இருக்கிறது, மற்றும் அருகாமையிலும் இருக்கின்றது. அதன் *காரண* வடிவத்தில், தனித்தனிப் பொருள்கள் மற்றும் உலகம் முழுவதும் என்பதிலிருந்து மேலும் விரிந்து முழு பிரபஞ்சத்தையும் (**84 இலட்சம் யோனிகள் கொண்ட ஏழு பெரிய சனனங்களையும்**) சேர்த்துக் கொள்கிறது ஒரு புறத்தில்; அதே சமயம் இன்னொரு பக்கம் அது அவனுக்குள்ளேயே நுழைந்து, அவனது இதயத்தில் ஏடணைகளாக அமர்ந்துகொள்கின்றன ----- மிகமிகப் பரந்தும் அகன்றதுமாக இருக்கிறது, அதே சமயத்தில் மிகமிக அண்மையானதும் ஆகிவிடுகிறது. இதுதான் மாயையின் மர்மம்.

ஆகையால், மனைவி, வீடு போன்ற பொருள்களைத் துறப்பது (*ஸ்தூல நிலை*) ஒரு நல்ல விஷயம்தான்; எனினும், ஆத்மாவை அடைவதற்கு அது மட்டும் போதாது. அதேபோல், தியானத்தில் இவ்வுலகமும் இவ்வுடலும் இல்லையென்ற நிலை ஏற்படுவது (*சூட்சும நிலை*) அதைவிட சிறந்ததுதான்; எனினும், இதுவும் போதாது. முக்தி அடையப்பட வேண்டுமானால், இதயத்தில் குடிகொண்டுள்ள ஏடணைகளை (வாஞ்சைகளை) அழிப்பதன்மூலம் (*காரண நிலை*) மாவேழ் சனனங்கள் முடிவிற்கு வரவேண்டும். எப்படி இரத்தினச் சுருக்கமாகவும் மிக ஆற்றலுடனும் அருணகிரியார் நுட்பமான ஆன்மீக இரசியங்களை நமக்கு எடுத்துக் கூறுகிறார் பார்த்தீர்களா!

அச்சாதகன் சன்னியாசம் எடுத்துக் கொண்டபோதே அனைத்து ஆசைகளையும் துறந்து விட்டானே, பின் இப்பொழுது எதற்காக மூவேடணை அழிக்கப்பட வேண்டுமென்று திரும்பவும் கூறப்படுகின்றது என்ற கேள்வி எழலாம். சன்னியாசம் மேற்கொள்ளும் சமயத்தில் அவன் துறந்தது மூவித ஏடணைகளின் *ஸ்தூல* மற்றும் *சூட்சும* வடிவங்களை மட்டுமே என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இப்பொழுது அழிக்கப்பட வேண்டியது ஏடணைகளின் (வாஞ்சைகளின்) *காரண வடிவம்* அல்லது *காரண நிலை*; இவ்வடிவில், மூவித ஏடணைகளையுமே தனித்தனியாக பிரித்திட இயலாது, அவை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருக்கும்; மேலும் இவ்வேடணைகள் மாயையோடு பின்னிப் பிணைந்து ஒன்றாகி இருப்பதால், அவைகளை மாயையிலிருந்து பிரித்துக் காணவோ அறியவோ இயலாது. சன்னியாசம் மேற்கொள்ளும் அச்சமயத்திலேயே, மாயையுடன் பின்னிப் பிணைந்திருக்கும் ஏடணைகளின் *காரண* வடிவமும் அழிக்கப்பட்டு விட்டதென்று கொண்டால், அப்பொழுதே சாதகன் இறைவனை அடைந்திருப்பானே! அப்படியாக இருந்திருப்பின், ஏன் குருவானவர் அவனை "அஹம்

பிரம்ம அஸ்மி" என்று தியானம் செய்து, "பொறையாம் அறிவால் அரிவாய் அடியோடும் அகந்தையை" (அதன் மூலம் அகந்தையை அதன் வேரான அறியாமையுடன் களைவாயாக) என்று அதன் பின்னர் உபதேசித்தார்? (செய்யுள்-37). "அரிவாய் அடியோடும் அகந்தையை" என்பது ஏடணைகளின் *காரண* வடிவத்தைக் குறிக்கிறது. 'ஏடணைகளின் *காரண* வடிவம்', மாயை, அறியாமை, அவித்யை, அகந்தையின் அடி (மூலம்) --- இவையெல்லாம் ஒன்றே. **சந்தர்ப்பங்களுக்குத் தகுந்தபடி இந்த வார்த்தைகள் உபயோகப் படுத்தப்படுகின்றன**.

இச்செய்யுளில் குறிப்பிடப்பட்ட மாயையிலிருந்து விடுபடாத மூவித ஏடணைகள், அவற்றின் *காரண* வடிவத்தைக் குறிக்கின்றன; ஏனெனில் அவை 'மாவேழ் சனனத்திற்குக்' காரணம். இந்த *காரண* வடிவ மாயையைதான் 'மகாமாயை' என்றும், இதை அழிக்க வல்லவர் இறைவன் மட்டுமே ("மகமாயை களைந்திட வல்ல பிரான்") என்றும் செய்யுள்-5இன் முன்பகுதியில் கூறப்பட்டுள்ளது. மாயையின் இந்த *காரண* வடிவத்தை, அதன் *ஸ்தூல* வடிவமான "அகமாடை மடந்தையர்" (செய்யுள்-5-ன் பின்பகுதி) என குறிப்பிடப்பட்ட வீடு, செல்வம், மனைவி ஆகியவைகளாலான 'ஜகமாயா'-விலிருந்து வேறுபடுத்திப் புரிந்து கொள்ள வேண்டும்; அதேபோல், அதன் *சூட்சும* வடிவமான "இல்லேயெனும் மாயை" (செய்யுள்-29), "படு மாயை" (செய்யுள்-31) என்று குறிப்பிடப்பட்டதிலிருந்தும் வேறுபடுத்திப் புரிந்து கொள்ள வேண்டும். எனவே, அச்சாதகன், இச்செய்யுளில் மூவித ஏடணைகளின் *காரண* வடிவமான மகாமாயையைக் கூடிய சீக்கிரம் அழித்திட, பெருமானின் கிருபைக்குக் கடுமையாக ஏங்குகிறான்.

மூவித ஏடணைகளின் பிடியிலிருந்து முற்றிலுமாக விடுபடுவதற்குத் தீவிரமாக ஏங்கும் அச்சாதகன் துயரத்துடன் அழுவதை இச்செய்யுள் எதிரொலிக்கிறது. இச்செய்யுளை நெருக்கமாகவும் மற்றும் ஆழமாகவும் ஆராய்ந்து பார்த்தால், அதிலிருந்து அவனுடைய மனமார்ந்த இரகசியப் பிரார்த்தனை பின்வருமாறு காணப்படும்: "எனது ஜீவாத்மா மூவித ஏடணைகளால் பீடிக்கப்பட்டிருக்கிறது. தாங்கள் வள்ளிதேவியை அன்புடன் அணைத்துக்கொண்டதுபோல, (ஜீவாத்மாவான) என்னையும் அரவணைத்தால்தான், என்னால் இவ்வேடணைகளின் பிடியிலிருந்து விடுபட்டு பிறப்புஇறப்பு சங்கிலியை அறுத்திட இயலும். ஓ பெருமானே, தாங்கள் அவ்வாறு செய்ய எப்பொழுது தயவு காட்டப் போகிறீர்கள்? உங்களைத்தவிர எனக்கு வேறு கதி இல்லை. எனவே, என்மேல் மனமிரங்கி வெகு சீக்கிரம் தயை செய்யுங்கள்." ஜீவனை மாவேழ் சனனத்தில் ஆழ்த்தி துயரப்படுத்திக் கொண்டிருக்கும் மூவித ஏடணைகளிலாலான இறைவனின் இந்த மாயையை, அதே

இறைவனின் கிருபையால் மட்டுமே கடந்திட இயலும். எனவேதான், பகவான் ஸ்ரீகிருஷ்ணர், "உண்மையில் ஸத்துவம், ரஜஸ், மற்றும் தமஸ் ஆகிய முக்குணங்களாலான என்னுடைய தேவமாயை தாண்ட முடியாதது. யார் என்னை சரணடைகின்றனரோ அவர்கள் மட்டுமே இந்த மாயையை தாண்டுகின்றனர்" என்று ஸ்ரீமத் பகவத் கீதையில் (7.14) பறையறிவித்துக் கூறுகிறார்.

==========

செய்யுள் - 40

==========

வினை ஓடவிடும் கதிர்வேல் மறவேன்
மனையோடு தியங்கி மயங்கிடவோ
சுனையோடு அருவித் துறையோடு பசும்
தினையோடு இதணோடு திரிந்தவனே.

பொழிப்புரை: "ஓ கந்தப் பெருமானே! நீரூற்று, அருவித்துறைகள், பசுமையான தினைப்புனம், காவல் பரண் (இதண்) ஆகிய இடங்களிலெல்லாம் (வள்ளி தேவியைத் தேடித்) திரிந்தவரே! கர்மங்களை ஓடச்செய்யும் (போக்கிடும்) ஒளிரும் வேலாயுதத்தை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன். (எனவே) (இந்தப் பிரபஞ்சமெனும்) மனையில் சிக்கிக் கலங்கி, மயங்கிடுவேனோ? (இல்லை, அப்படி ஆகமாட்டேன்.)"

விளக்கவுரை

"வினை ஓடவிடும் கதிர்வேல் மறவேன்": மாயையிலிருந்து பிரிபடாத மூன்று ஏடணைகளிலிருந்து விடுதலையடைந்திட பெருமானிடம் பிரார்த்தனை (செய்யுள்-39ல்) செய்த பின்னர், சன்னியாசியாகிவிட்ட அச்சாதகன் தன் குரு உபதேசித்தவாறு, 'ஒளிரும் வேல்'-மேல் (அதாவது 'ஆத்மா', (அ) 'தூய உணர்வு') இடைவிடாது தியானம்செய்ய மேற்கொள்கிறான், அதாவது 'அஹம் பிரம்ம அஸ்மி' என்ற மகாவாக்கியத்தின்மீது தியானம் செய்ய ஆரம்பிக்கிறான் (செய்யுள்-37). ஆத்ம ஞானத்தால் மட்டுமே கர்மங்களை அழித்திட இயலும் – "*ஞானாக்னி சர்வ கர்மாணி பஸ்மசாத் குருதே*" என்று ஸ்ரீமத் பகவத் கீதை: 4.37ல் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கூறுகிறார். இதையே அருணகிரியார் மிக அழகாகவும் பொருத்தமாகவும், "வினை ஓடவிடும் கதிர்வேல்" என்று சொல்கிறார், 'ஒளிர்விடும் கதிர்வேல்' என்றால் ஞானவேல். அது கர்மங்களை துரத்தித் துரத்தி அழித்துவிடும். ஏனென்றால், அச்சாதகன் செய்த தீய கர்மங்களே ('தாழ்வானவை செய்தன' --- செய்யுள்-31) அவனை சற்றேகுறைய சமாதி அநுபவித்திலிருந்த (செய்யுள்-28) இந்த எதார்த்த உலக மாயை அநுபவங்களுக்குத் திரும்ப இழுத்து வந்தன (செய்யுள்-29). எனவே, அக்கொடிய கர்மங்களை முடிவிற்குக் கொண்டு வருவதற்கு, அவன் 'வினை ஓடவிடும்' ஞானவேலை 'மறவேன்' என்று இடைவிடாமல் தியானிக்கத் துவங்குகிறான்.

'மறவேன்' என்று கூறுவதில், 'நான் இறைவனை அடையும்வரை இடைவிடாது கதிர்வேலை (ஆத்மாவின் மேல்) தியானம் செய்வேன்' என்ற அவனுடைய தீர்மானம் மறைந்திருக்கிறது, பகவான் புத்தர் செய்தது போல இந்த சாதகன் செயல்படுகிறான்.

'வேல்' என்பது தூய உணர்வு எனப்படும் பரம்பொருளைச் சுட்டுகிறது. 'ஷண்முகப் பெருமானும், அவர் வழிபாடும்' **(Lord Shanmukha and His Worship)** என்ற தனது நூலில் சுவாமி சிவானந்தர் பின்வருமாறு கூறுகிறார்: "சாதகன் தன் தியானத்தில் முன்னேற முன்னேற, அவன் உபயோகித்து வந்த அனைத்து உபகரணங்களையும் படிப்படியாக விட்டுவிட்டு, வேல் மீது மட்டும் மனதை நிலைநிறுத்தவேண்டும். இந்த வேல், சுப்ரமணியப் பெருமானின் உண்மை *சொரூபமாகும்*. இது விழிப்புணர்வைக் குறிக்கும், (அதாவது இது சைதன்யம்.) மற்றவைகளெல்லாம் மறைந்தபின், இது (சைதன்யம்) மட்டுமே பிரகாசித்து நிற்கிறது. எவனொருவன் இந்த வேலை விழிப்புணர்வாக (சைதன்யமாக) தியானிக்கிறானோ, அவன் ஸச்சிதானந்த சொரூபமாகிய பரம்பொருளை நிச்சயம் அடைகிறான்."

'**மனையோடு தியங்கி மயங்கிடவோ**' --- 'நான் இந்தப் பிரபஞ்சமெனும் மனையில் சிக்கிக் கலங்கி, மயங்கி வாழலாமா? கேள்விபோல் அமைக்கப்பட்டுள்ள இவ்வாசகத்தில், அதன் விடையான 'இல்லை' என்பது தொக்கி நிற்கிறது. இம்மாதிரி உபயோகம் வழக்கமான ஒன்றே. தான் ஆன்ம விடுதலையைப் பெற்றிடும் வரை 'அஹம் பிரம்ம அஸ்மி' என்ற மந்திரத்தின் மீதான தியானத்தை விடாமல் தொடர்ந்து செய்வதை மேற்கொண்டுவிட்டபடியால், எப்படியும் மாயையைக் கடந்துவிடுவேன் என்று அச்சாதகன் நிச்சயமாக நம்பிகிறான்.

"மனை" என்றால் வீடு, அதாவது வாழும் இடம். மக்கள் வீடுகளில் வாழ்கிறார்கள். வீட்டில் பல பகுதிகளுண்டு. வீட்டின் (மனையின்) முன் பகுதியில் முகப்பு மண்டபம், அதன்பின் வரவேற்பு அறை, படுக்கை அறை, சமையல் அறை, சாப்பாட்டு அறை, குளியல் மற்றும் கழிப்பறை, மொட்டை மாடி, அடித்தளம்/ நிலவறை, கொல்லைப் பக்கம், கிணறு, மரஞ்செடிகொடிகளுடன் கூடிய தோட்டம் ஆகிய பற்பல பகுதிகள் உண்டு --- இவையெல்லாம் மதில் சுவருக்குள். அதில் வசிப்பவன் அவ்வீட்டினுள் தன் தேவைக்கேற்ப அந்தந்தப் பகுதிக்குச் சென்று வருவான். அவன் அவ்வீட்டின் எப்பகுதியிலிருந்தாலும், அந்த வீட்டில், 'மனையில்' தான் இருக்கிறான். இது அவன் உடலைப் பொருத்தவரை. ஆனால், அவனது ஜீவாத்மாவைப் பொருத்தவரை, வீடு (மனை) என்பது, முன்செய்யுளில்

சொல்லியபடி, மாவேழ் சனனமான **84** இலட்சம் யோனிகளடங்கிய இப்பரந்த மாயப் பிரபஞ்சத்தின் ஈரேழு லோகங்களாகும். ஜீவனானவன் அவனவனின் கர்மத்திற்கேற்ப ஏதோவொரு லோகத்தில் ஏதோவொரு உயிரினமாக பிறக்கக்கூடும். ஜீவன் எவ்வுலகில் பிறந்தாலும், இம்மாயையின் எல்லைக்குள், அதாவது அதன் 'மனை'க்குள்தான் இருக்கிறான். மாயையினால் தோற்றுவிக்கப்பட்ட இப்பிரபஞ்சம் முழுவதுமே ஜீவாத்மாக்களுக்கு மனை. இதனைக் கடந்தால்தான், ஜீவாத்மா இறைவனை அடைய முடியும். வேலை (ஆத்மாவை) தியானிப்பதன் மூலம் இது அடையப்படுகிறது. சன்னியாசியான அச்சாதகன் வேலின்மேல் மேற்கொண்ட தீவிரமான இடைவிடாத தியானம், சம்சாரமெனும் மாய விளையாட்டு தன்னை மயக்கிட முடியாதென்று அவனுக்கு உறுதியான நம்பிக்கை கொடுக்கிறது. அவன் தனது கர்மங்கள் அனைத்தையும் (ஞானத்தால்) எரித்து, ஆத்ம விடுதலை அடைந்து, சம்சார பந்தத்தை அறுத்து நிரந்தரமாக முக்தி பெறுவேனென்று உறுதியாக உணர்கிறான். பின்னர், அவனுக்கு இப்பிரபஞ்ச வாழ்க்கை ஒரு விளையாட்டு அல்லது கனவுபோல ஆகிவிடும், எப்படி தினைப் புனம், மற்றும் இதர இடங்களில், வள்ளிதேவியைத் தேடுவது முருகப் பெருமானுக்கு ஒரு லீலை அல்லது தெய்வீக விளையாட்டாக இருந்ததோ அப்படியே.

இந்தச் செய்யுள் வேலாயுதத்தின் உண்மை சிறப்பையும் மகிமையையும் எடுத்துக்காட்டுவதில் ஒப்பற்றதாக அமைந்துள்ளது. பொதுவாக அனைவராலும் போற்றப்படுவதுபோல், வேலானது அசுரர்களை வதம் புரிந்த முருகப் பெருமானின் தெய்வீக ஆயுதமட்டுமன்றி, தியானத்தினால் அடையப்படும் உயரிய இலக்கான எல்லையில்லாப் பரம்பொருளுமாகும். இந்த செய்யுளுக்கு முந்தைய செய்யுளில், மூன்றுவித ஏடணைகளிலிருந்தும் விடுதலை பெற சாதகன் ஏங்குவதைப் பற்றி அறிந்தோம். அவ்வாறு விடுதலை பெறுவதற்காக வேலை தியானிக்க வேண்டுமென்பது இச்செய்யுளில் வலியுறுத்தப்படுகிறது. வேல் என்பது என்ன? அவ்வேலின் சக்தி எத்தகையது? எப்படி சூரியன் தன் இயல்புக்கேற்ப பிரகாசிப்பதன்மூலம் எவ்வித முயற்சியுமின்றி இருளைப் போக்குகின்றதோ, அப்படியே வேலும் தன் இயல்பினாலேயே கர்மங்களைத் துரத்தி / அழித்து விடுகின்றது. மிகப்பொருத்தமாக ஒளிர்விடும் சுடரான வேல் இச்செய்யுளில் 'கதிர்வேல்' என குறிப்பிடப்படுகின்றது; 'கதிர்வேல்' என்பது 'ஞானவேல்'.

"வினை ஓடவிடும் கதிர்வேல் மறவேன்': --- "நான் கர்மங்களைப் (கர்ம இருளைப்) போக்கிடும் அந்த ஒளிரும் வேலாயுதத்தை ஒருபொழுதும் மறவேன்." வேல், தூய உணர்வின்

சின்னம், அதாவது ஆத்மா அல்லது பிரம்மத்தின் சின்னம். வேலாயுதத்தை மறக்காமல் இடைவிடாது தியானம் செய்வதென்பது, ஆத்ம விழிப்புணர்வில் தன்னை நிலைநிறுத்த முயற்சி செய்வதாகும். அந்த ஆத்ம விழிப்புணர்வு இயற்கையாகவே கர்மங்களை நீக்கிவிடும், (சூரியன் இருளை நீக்குவதுபோல). ஆசைகளே கர்மங்களுக்குக் (நல்லவைகளோ அல்லாதவைகளோ) காரணம். ஆசைகளால் உந்தப்பட்டு மனிதன் கர்மங்களைச் செய்கிறான். ஒருவன் ஏன் கர்மங்களில் ஈடுபடுகிறான்? ஆசைகளே ஒருவனை கர்மங்களை செய்யத் தூண்டுகிறது. அவனிடம் இல்லாத, அவன் அடையாத ஒன்றை அடைந்திடும் பொருட்டு, அவனைக் கர்மங்களில் ஈடுபடுத்துகிறது. ஆனால், ஆசைகள் ஏன் ஏற்படுகின்றன? ஒருவனுக்கு பொருள்களின் உண்மைத் தன்மை (அழியும் தன்மை) பற்றிய அறிவு இல்லாததும், மேலும் தனது உண்மை (ஆனந்த) சொரூபத்தின் ஞானம் இல்லாததும், அவன் மனதில் ஆசைகள் ஏற்படக் காரணமாகின்றன. தன்னை உடல் மற்றும் மனதாகக் கருதி, பொருள்களைச் சேகரிக்க முயற்சித்து, அவற்றை அநுபவித்து மகிழ்ச்சி பெற முயல்வது --- ஆகிய அனைத்தும், தன் உண்மை இயல்பான ஆனந்த-சொரூபமான ஆத்மாவைப் பற்றிய ஞானம் இல்லாமையால்தான். நான் உடல் அல்ல, மனமுமல்ல, நான் உண்மையில் ஆத்மா; அந்த ஆத்மா அழிவற்றது, நித்தியமானது, ஆனந்தமயமானது, அமைதியானது, ஞானம் மற்றும் எல்லையற்ற சக்தி உடையது. இந்த உண்மைகளை மறந்துவிடாமல், அவற்றில் மனதை நிலைத்திருக்கச் செய்தால் அறியாமை நீங்கிவிடும்.

இந்த ஆத்மா என்பதே வேல், அது ஞான வேல், சூரியன் இருளை அகற்றிவிடுவதுபோல, வேல் அறியாமையை அழிக்கும். இப்படியாக, வேலெனப்படும் ஆத்ம விழிப்புணர்வில் அறியாமையானது அழிக்கப்படும் போது, ஆசைகள் அற்றுப்போகின்றன; அவற்றுடன் கர்மங்களும் விலகிவிடுகின்றன. இருளைப்போல அறியாமை என்பது ஒரு உண்மையான பொருளோ, விஷயமோ அல்ல; எப்படி இருள் என்பது வெளிச்சம் இல்லாத நிலையோ, அதேபோல் அறியாமை ஞானமற்ற நிலையாகும். வெளிச்சம் வரும்போது, இருள் தானே மறைகிறது; அதை அகற்றுவதற்கு ஒரு முயற்சியும் செய்யவேண்டியதில்லை. அதுபோலவே, ஞானம் உதயமாகும்போது, ஆத்ம விழிப்புணர்வு நிரந்தரமாக நிலைத்திருக்கும்போது, அறியாமை தானே மறைந்து போகிறது. அறியாமை-ஆசை-கர்மம் (அவித்யா-காம-கர்ம) என்ற சங்கிலி இதய-கிரந்தி அல்லது இதய முடிச்சு என்று அழைக்கப் படுகிறது. இதுவே ஜீவாத்மாவை இந்த சம்சாரம் அல்லது பிரபஞ்சத்தில் பந்தப்படுத்துகிறது. எனவே, இந்த கர்ம-சங்கிலியை

உடைப்பதற்கு வேல் அல்லது ஞானம் அல்லது ஆத்ம-தத்துவத்தை மறவாதிருப்பதுவே ஒரே வழி; அதாவது, வேல், ஆத்மா, அல்லது நமது உண்மை சொரூபத்தின் விழிப்புணர்வில் இடைவிடாது இருப்பதுவே ஒரே வழி. அப்படிச்செய்யும்போது, ஜீவாத்மா அல்லது நம்முடைய விழிப்புணர்வு, மனம் மற்றும் புலன்களுடனான அதன் தொடர்பிலிருந்து அறுபடுகிறது; அதனால் மனமும் புலன்களும் செயல்படாமற்போய்விடுகின்றன, எப்படி ஓடிக்கொண்டிருக்கும் பெரிய இயந்திரம் மின்சாரம் நிறுத்தப்பட்டவுடன் செயலற்றுப்போகிறதோ அவ்விதமே அவைகளும் செயலிழக்கின்றன. 'வினை ஓடவிடும் கதிர்வேல் மறவேன்' என்பது 'அஹம் பிரம்ம அஸ்மி' ("நான் பிரம்மம்") என்ற மந்திரத்தின் மீதான தியானத்தை விடாது செய்வதென்று பொருள். ஜீவாத்மா தன்னுடைய சுய-சொரூபமான பிரம்மத்தை தியானித்து, அதிலேயே நிலைத்திருக்கும்போது, கர்மங்கள் அழிக்கப்பட்டுவிடுகின்றன. எனவேதான், அச்சாதகன், "நான் கர்மங்களை துரத்திடும் அந்த ஒளிர்விடும் கதிர்வேலை ஒரு பொழுதும் மறவேன். ஆகவே, சம்சார பந்தத்திற்கு நான் இனிமேல் ஆட்படமாட்டேன்." என்று கூறுகிறான். வேலாயுதத்தை இடைவிடாது தியானிப்பது (அதாவது, ஆத்ம விழிப்புணர்வில் எப்பொழுதும் வேரூன்றியிருப்பது, திளைத்திருப்பது), ஒருவனை கர்மத் தளைகளிலிருந்து விடுவித்து சம்சாரத்தின் விளைவுகளிலிருந்து விடுதலை செய்கிறது. இங்கு, தியானம் அதன் உச்ச கட்டத்தையும் இறுதி நிலையையும் அடைகிறது; இங்கு பரம்பொருள் அல்லது ஸச்சிதானந்தத்தின்மேல் தியானம் செய்யப்படுகிறது. சுத்த சைதன்யமாக --- 'வேல்'-ஆக --- தியானம் செய்யப்படுகிறது.

இப்படியாக, ஒருவன் ஆத்ம விழிப்புணர்விலேயே நிலைத்திருக்க தியானம் செய்யும்பொழுது, அதாவது வேலைப்பற்றியே எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டிருக்கும்பொழுது, இந்த பிரபஞ்ச வாழ்க்கைக்கு என்ன ஆகிறது? உலகம் அப்படியேதானிருக்கும், ஆனால் முன்பிருந்ததுபோல் (அவனுக்கு) இருக்காது. அப்படிப்பட்டவனுக்கு இந்த உலகம் இருப்பதுபோலத் தோன்றலாம், அவனும் வாழ்க்கையின் ஊடுருவல்களுக்கு உட்பட்டிருப்பதுபோலத் (பிறருக்குத்) தோன்றலாம். ஆனால், அவனுக்கோ, இவையனைத்துமே ஒரு வெறும் கேலி, விளையாட்டுதான். இப்பொழுது எதுவும் அவனைப் பாதிப்பதில்லை. அவன் முன்போலவே தனது தினசரி வாழ்க்கையை நடத்தினாலும், அவன் மனம் அவற்றிலில்லை; எந்த வேலின்மேல் (ஆத்மாவின்மேல்) இடைவிடாது தியானம் செய்கிறானோ அதன் உணர்வில் நிலைத்திருக்க அவன் மனம் முழுமையாக ஈடுபட்டிருப்பதால், மயக்கம் அடைவது மற்றும் கிளர்ச்சியடைவது போன்ற எவ்வித

பாதிப்பிற்கும் ஆளாகாமல் அவன் தினசரிச் செயல்களை செய்து வருவான். இது ஒரு விசித்திரமான விழிப்புணர்வு. இந்த விசித்திரமான அனுபவத்தை, கந்தப் பெருமான் தினைப்புனம் மற்றும் பல இடங்களில் வள்ளியைத் தேடித் திரிந்தார் என்று சொல்வதன்மூலம், எவ்வளவு நேர்த்தியாக இச்செய்யுளில் சொல்லப்பட்டிருக்கிறது என்று பார்க்கலாம்!

வள்ளி தேவியானவள் தினைப்புனத்தின் நடுவில் அமைக்கப்பட்ட காவல் பரணில் இருந்துகொண்டு தானியங்களைக் கொத்தித் தின்பதற்காக வரும் பறவைகளை விரட்டிக் கொண்டிருப்பாள். சில சமயம், பக்கத்திலிருக்கும் மலைச்சுனைக்கு நீர் அருந்துவதற்காகவோ அல்லது அருவிக்கு குளிப்பதற்காகவோ அவள் செல்வது வழக்கம். இவை அனைத்தையும் பகல் பொழுதில் செய்து விட்டு, சூரியன் அஸ்தமிப்பதற்கு முன்னர் பக்கத்து ஊரிலிருந்த தன் வீட்டிற்குத் திரும்பி விடுவாள். கந்தப் பெருமானுக்கு இவை அனைத்தும் நன்றாகத் தெரியும். இருந்தாலும், அவள் வீட்டிற்குச் சென்ற பிறகு, வேண்டுமென்றே இந்த இடங்களுக்கெல்லாம் சென்று அவளைத் தேடி அலைவார். தெரிந்திருந்தும் ஏன் பெருமான் இவ்வாறு செய்தார்? இதில் அவருக்கு ஒரு மகிழ்ச்சி, இது அவரது லீலை, கருணையின் செயல்! மேலும், அவளைச் சந்திக்க முடியவில்லையே என்று அவர் மனம் முறிவுற்று வருந்தமாட்டார்; ஏனெனில், அங்கெல்லாம் செல்வதற்கு முன்பே அவள் அவ்விடங்களில் இருக்கமாட்டாள் என்று அவருக்கு நன்றாகத் தெரியும். இருப்பினும், அவளைத் தேடுவதில் அவருக்கு ஒரு மகிழ்ச்சி. வெளிச்செயலில், முருகன் வள்ளியைத்தேடிச் சென்றது, மற்ற காதலர்கள் தங்கள் காதலிகளைத் தேடி அலைவதுபோலவே இருந்தாலும், அவருடைய உள்ளத்தின் பாவனை முற்றிலும் வேறானது. இந்த பாவனையே அவருடைய செயலை மற்றவர்களுடைய செயலிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. இதைப் போலவே, ஆத்ம-தியானித்தில் எங்கும் வியாபித்திருக்கும் இறைவனில் தன் மனதை நிலைநிறுத்த முயற்சிக்கும் ஒருவன், மற்றவர்கள்போல எல்லாக் காரியங்களையும் செய்வான், சம்சாரத்தில் கட்டுண்டு அதில் துன்பப்படுவதுபோல் காணப்படுவான், ஆனால் இவையனைத்தும் அவனுக்கு அர்த்தமற்றதே. ஆத்மா ஒன்றே உண்மைப் பொருள், உலகம் சாரமற்றதென்று அவனுக்குத் தெரியும். எனவே எதுவும் அவனை பாதிப்பதில்லை, எப்படி முருகன் ஏமாற்றம் அடையவில்லையோ அப்படியே அவனும் ஏமாற்றம் அடைவதில்லை.

இச்செய்யுளில், அச்சாதகன் இடைவிடாது தியானம் செய்வதின் மூலம் தான் பிரம்மத்தில்/ ஆத்மாவில் நிலைபெற்று இருக்க முயற்சி செய்து கொண்டிருக்கின்றானே தவிர, அதில் முழுவதுமாக நிலைபெறவில்லை. இதுவும்கூட, நான் எப்படியும் மாயையைக் கடந்து விடுவேனென்ற நம்பிக்கையை அவனுக்குக் கொடுக்கிறது; எனவே, அவன் மகிழ்ந்து, "வினைகளை ஓடச்செய்யும் வேலை/ஆத்மாவை கணப்பொழுதும் மறக்காமல், அதன் தியானத்தில் இடைவிடாமல் முழுமூச்சுடன் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நான் (இந்தப் பிரபஞ்சமெனும்) மனையில் சிக்கிக் கலங்கி, மயங்கிடுவேனோ? நிச்சயமாக மயங்க மாட்டேன், பிரபஞ்சம் என்னை இனி ஒருபொழுதும் பாதிக்காது." என்று கூறுகிறான்.

==========

செய்யுள் - 41

==========

சாகாது எனையே சரணங்களிலே
காகா நமனார் கலகம் செயுநாள்
வாகா முருகா மயில் வாகனனே
யோகா சிவஞான உபதேசிகனே.

பொழிப்புரை: "ஓ முருகப் பெருமானே! வெற்றிவாகை மாலைகளைச் சூடிய அழகரே! ஓ மயில் வாகனனே! ஓ யோகேஸ்வரனே! ஓ சிவஞானமாகிய பிரம்ம ஞானத்தை தந்தருளும் உயரிய குருவே! யமராஜன் வந்து கலகம் செய்யும் (உயிரை உடலிலிருந்து பிரிக்கும்) நாளில், அவன் கைவசப்பட்டு நான் சாகாமலிருக்க (பிறப்பு இறப்பு சக்கர சுழற்சியில் சிக்காமலிருக்க) தங்களின் திருக்கமலப் பாதங்களிலே என்னை (இங்கேயே) காத்தருள்வீர், (இப்பொழுதே) காத்தருள்வீர்."

விளக்கவுரை

சன்னியாசியான அச்சாதகன் இவ்வுலக வாழ்விற்கு மீண்டும் திரும்பாமல் செய்திடும் முக்தியை அடைவதற்காக ஞான வேலின்மேல் இடைவிடாத தியானத்தில் ஈடுபட்டான் (செய்யுள்-40) (இது ஞான மார்க்க சாதனை). அவனது அந்த ஆர்வமானது, இச்செய்யுளில் செய்யப்படும் ஒரு பிரார்த்தனை மூலம் (பக்தி மார்க்க சாதனை) வலுவூட்டப்பட்டு, உறுதிப் படுத்தப்பட்டு மற்றும் நன்கு தெளிவாக்கப்படுகிறது. அவன் பெருமானை ***உடனே*** அடைந்திட விழைகின்றான்; இவ்வுடல் சாகும்வரை காத்திருக்க விரும்பவில்லை. அவன் முனைப்பாகவும் இடைவிடாதும் தளராமலும் வேலின்மேல் செய்யும் தியானத்தில் நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறான், அதனால் அவன் முக்திக்கு (ஆன்ம விடுதலைக்கு) மிகவும் நெருங்கியிருப்பதை உணர்கிறான்; அதனால், அவன் மறுபிறப்பு இல்லாமற்செய்யும் *ஜீவன்முக்தியை* (அதாவது, *இங்கேயே, இப்பொழுதே* --- இவ்வுடலில் வாழ்ந்து கொண்டிருக்கும்பொழுதே ஆன்ம விடுதலையைப்) பெற்றிட விரும்புகிறான். ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் யமராஜா வந்து, தன் கடமையைச் செய்யத்தான் போகிறார் என்று அவனுக்குத் தெரியும்; ஆனாலும், அவன் சாவதைப்பற்றி பயப்படவேயில்லை என்பதும் அவன்

இயம்பும் "நமனார் கலகம் செயுநாள்" என்ற கூற்றிலிருந்து தெளிவாகின்றது. ஏனெனில், உடல் அழிவதை எவராலும் தவிர்க்க முடியாது, அவர் அவதார புருஷராகவே இருந்தாலும் சரி, என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும்; அது இயற்கையின் விதிக்குப் புறம்பானது.

'இங்கேயே', 'இப்பொழுதே' மோட்சம் (ஜீவன்முக்தி) என்றால் மோட்சமானது ஏதோவொரு குறிப்பிட்ட 'இடத்திலோ', 'சமயத்திலோ' அடையப்படுவதென்று அர்த்தமாகாது. அது இடம், நேரம் ஆகிய வரையறைகளுக்கு உட்படாமல், அவற்றைக் கடந்து செல்வதாகும். அது, இந்த உடல் உயிரோடிருக்கும்பொழுதே இறைவனை அடைந்து, எங்கும் வியாபித்திருக்கும், அனைத்தையும் அறிந்திருக்கும் ஒரு விழிப்புணர்வுடன் வாழ்வதாகும். சுவாமி சிவானந்தா இதை பின்வருமாறு விளக்குகிறார்: "ஒரு (ஜீவன்முக்த) யோகி ஒரே சமயத்தில் எல்லாவற்றையும் அறிகிறான். (அவருக்கு) கடந்தகாலமும், எதிர்காலமும் தற்காலத்துடன் ஒன்றாகிவிடுகின்றன. எல்லாம் 'இப்பொழுதே' இருக்கின்றன. எல்லாம் 'இங்கேயே' இருக்கின்றன. அவர் 'காலத்தையும் இடத்தையும்' **(Time and Space)** கடந்து இருக்கிறார்."

"சரணங்களிலே கா கா" --- "என்னை உனது திருவடிகளில் பாதுகாப்பாயாக, பாதுகாப்பாயாக." 'கா' என்றால் பாதுகாப்பது. 'கா', 'கா' பாதுகாப்பாயாக என்று இருமுறை வேண்டுவது, அவனுடைய தீவிர விருப்பம், *உடனே முக்தி* (இவ்வுடலில் வாழும் இப்பொழுதே முக்தி) பெறவேண்டும் என்பதையும், இவ்வுடல் சாகும்வரை காத்திருக்க அவன் தயாராகயில்லை என்பதையும் தெரியப்படுத்துகிறது. சில ஆசிரியர்கள் நினைப்பதுபோல் "கா,கா" என்பது யமன் வரப்போகிற / வந்துவிட்ட தருணத்தில் விடுக்கப்பட்ட ஒரு அவசர வேண்டுகோள் அல்ல. "நமனார் கலகம் செயும் நாள்" --- 'என்றோ ஒருநாள் யமன் வந்து கலகம் செய்யப் போகும் பொழுது' என்று அவன் சொல்வதிலிருந்து யமன் வருநாள் தூரத்திலிருக்கிறதென்பது தெளிவாயிருக்கிறது. எனவே, இங்கு செய்யப்படும் பிரார்த்தனை, இறப்பதிலிருந்தோ அல்லது யமனிடமிருந்துத் தன்னை காத்துக் கொள்வதற்கோ செய்யப்பட்டதல்ல; உடனே (உயிருடன் வாழும் இப்பொழுதே) முக்தி பெறுவதற்கும், அதன்மூலம் (உயிர்) 'சாகாது' இருப்பதற்கும், அதாவது மறுபிறப்பிகளிலிருந்து விடுதலை பெறுவதற்கும், செய்யப்பட்ட பிரார்த்தனை. யமன் வந்து உயிரை உடலிருந்து பிரிப்பதென்பது உறுதி, அதிலிருந்து எவராலும் தப்புவதற்கு இயலாது; தோன்றிய ஒன்று எதுவாகயிருந்தாலும், அது ஒருநாள் அழிந்து போகத்தான் வேண்டும்; அவதாரங்களும்

மகாபுருஷர்களும்கூட அவர்களுடைய உடலை விடத்தான் வேண்டியிருந்தது. எனவே, "சாகாது" என்பது இவ்வுடல் மரணமாகாமல் இருப்பதற்காக அல்ல; மாறாக, பிறப்பு இறப்பு சுழற்சியிலிருந்து விடுபட்டு முக்தி பெறுவதற்காக.

ஒருவன் இறக்கும் பொழுது, யமனார் உயிரை உடலிருந்து பிரிக்கிறார்; ஆனால், அந்த உயிர் முக்தி பெற்றுவிட்ட ஆத்மாவாகவோ, அதாவது "இறைவனின் திருவடியில் காக்கப்பட்ட" ஆத்மாவாகவோ இருந்தால், யமனால் அதை மேற்கொண்டு ஒன்றும் செய்ய முடியாது. முக்தி அடையாத (அ) இறைவனால் காக்கப்படாத ஆத்மாவைத்தான் யமன் எடுத்துக் கொண்டு சென்று, அவரவர்களின் கர்மத்திற்கேற்ப அடுத்த பிறப்பை அளித்திட முடியும். உயிர்தான் (ஆத்மாதான்) உடலிலிருந்து வெளியேறி, மறுபிறப்பை எடுக்கிறது, உடலல்ல. எனவே, உயிருக்கு மறுபிறப்பு இருக்குமானால், அது 'சாதல்' எனப்படுகிறது; மறுபிறப்பில்லையெனில், 'சாகாது' எனப்படுகிறது. முக்தி பெற்ற ஆத்மா, ஞானிகள், யோகிகள் மற்றும் அருளாளர்களுக்கு மேற்கொண்டு பிறவிகளில்லாததால், அவர்கள் 'சாகாத'வர்கள். எனவே, அவர்கள் தங்கள் உடலை நீக்கும் பொழுது, அவர்கள் 'இறந்துவிட்டனர்' என்று சொல்லாமல், 'அமரர் ஆனார்' என்று கூறப்படுகின்றது; ஞானியர், யோகிகளானால் அவர் 'மகாசமாதி அடைந்தார்' என்று கூறப்படுகின்றது. எனவே, இச்செய்யுளில், "யமனார் என்னுயிரை உடலிருந்து பிரித்தெடுக்கும் அந்தநாளில் (**"நமனார் கலகம் செயுநாள்"**), அவர் என்னுயிரை எடுத்துச்சென்று மறுபிறப்பு விதிக்க அவசியமேற்படாமலிருக்க (**"சாகாது"**), என்னை (**"எனையே"**) உங்கள் திருப்பாதங்களிலே (**"சரணங்களிலே"**) (**"கா"**) இங்கேயே காப்பாயாக, (**"கா"**) இப்பொழுதே காப்பாயாக." என்று பிரார்த்திக்கப்படுகிறது.

இச்செய்யுளில் செய்யப்படும் பிரார்த்தனை பத்தாம் செய்யுளின் பிரார்த்தனையிலிருந்து சிறிது வேறுபட்டது. அங்கு, யமன் 'வந்தால்' அவரிடமிருந்துத் தன்னை காப்பாற்றுமாறு பிரார்த்தனை; ஏனெனில், அப்பொழுது அவன் தன் சாதனையின் ஆரம்பத்திலிருந்ததால் தன் குறிக்கோளான முக்தி வெகு தூரத்திலிருந்தது, அதை அடைவதற்கு முன்னர் அவன் இறக்கத் தயாராயில்லை. ஆனால், இங்கு வேண்டுவது உடனடியாக இறைவனின் பாதங்களில் பாதுகாப்பது (அதாவது, ஜீவன்முக்தி), யமன் எப்பொழுது வரவேண்டுமோ அப்பொழுது வந்துவிட்டுப்போகட்டும், அதைப்பற்றி அவனுக்குக் கவலையில்லை.

அச்சாதகன் செய்யுள் 21 மற்றும் 35ல், இறைவனின் திருவடிகளைத் தந்தருளுமாறு வேண்டியதும் சாவதற்கு முன் இப்பிறவியிலேயே முக்தி பெற்றிடுவதற்காகவேதான். என்றாலும், அச்சமயங்களில் முக்தியானது வெகு தொலைவில் இருந்தது. ஆனால், இப்பொழுதோ, அது அவன் கைக்கு எட்டும் தூரத்தில் வந்து விட்ட நிலை; எனவே, "உடனே முக்தி" வேண்டும் என்று "கா", "கா" என பிரார்த்திக்கின்றான். இறைவன் உடனே (பறந்து) வரவேண்டும் என்பதற்காக அவன் பெருமானை 'மயில் வாகனனே' என்று சொல்லி அழைக்கிறான். அதேபோல், யோகத்தையும், சிவ / பிரம்ம ஞானத்தையும் உடனே தந்தருளுவதற்காக அவரை 'யோக சிவஞான உபதேசிகனே' என்றும் சொல்லி அழைக்கிறான். முருகப் பெருமானும் அவனுடைய பிரார்த்தனைக்குச் செவிசாய்த்து மகிழ்ச்சியுடன் ஓடிவந்து அவனுக்கு "உடனே" முக்தி தந்தருளுவதை அடுத்த மூன்று செய்யுள்களில் காண்போம் --- 'வேலை நிகழ்த்திடல்' (செய்யுள்-42), 'பேசா அநுபூதி பிறத்தல்' (செய்யுள்-43), மற்றும் தனது 'திருவடி அருளுதல்' (செய்யுள்-44). இவை மூன்றும் ஒன்றே, அதாவது 'இங்கேயே இப்பொழுதே முக்தி பெறுதல்', "ஜீவன்முக்தி அடைதல்". அவன் இவ்வாறு மூன்று விதங்களிலும் திருவருளைப் பெறுகிறான். என்னே திருவருளின் மகிமை! என்னே ஆச்சரியம்!!

வேல்-உணர்வில் அல்லது 'அஹம் பிரம்ம அஸ்மி' தியானத்தில் நன்கு நிலைநிறுத்திக் கொள்ளச்செய்யும் திடமான முயற்சி (செய்யுள்-40), சன்னியாசி-சாதகனின் இறப்பு பற்றிய பயத்தை நீக்கிவிட்டது; இப்பொழுது அவன் 'இறப்பைக்' கண்டு ஏளனமாகச் சிரிக்கிறான், ஏனெனில், (கூடிய சீக்கிரம் ஜீவன்முக்தி அடைந்தபின்) அவன் உயிர் விடும்போது, யமன் உயிரை உடலிலிருந்து பிரிக்கும் தன் கடமையை மட்டுமே வெறுமனே செய்கிறார், அதாவது இயற்கையின் நியமத்தின்படி பிராரப்த கர்மங்களின் முடிவில் இவ்வுடலானது தானே மடிந்துபோகும்; அதற்கு முன்னரே அவன் முக்தி அடைந்துவிடுவான்.

'அஹம் பிரம்மாஸ்மி' தியானம் செய்வதின் நோக்கம், இவ்வுடலை விடுவதற்கு (சாவதற்கு) முன்னரே இறைவனை அடைவதுதான். எனவே, வேலின்மேல் தியானம் அல்லது 'அஹம் பிரம்ம அஸ்மி' தியானத்தை இடைவிடாது செய்ய மேற்கொண்ட சீடன் (செய்யுள்-40), அத்தியானத்தை மேலும் தொடர்ந்து செய்வதோடல்லாமல், தான் உடனடியாகவே பெருமானின் திருவடியில் காக்கப்படுவதற்கு தீவிர ஆசை கொள்கிறான். அதாவது, அந்த விழிப்புணர்விலேயே நிலைபெற்றிட விழைகிறான்; இங்கேயே இப்பொழுதே முக்தி பெற்றிட, ஜீவன்முக்தி நிலையை அடைந்திட

விழைகிறான், அதன் மூலம், அவன் சம்சார பந்தமான பிறப்புஇறப்பு சக்கரத்திலிருந்து நிரந்தரமாக விடுதலை அடைந்திட விரும்புகிறான்.

பெருமானின் தாள் மற்றும் வேல்-உணர்வு ஆகிய இரண்டுமே ஒன்றுதான். இறை-தாள் என்பது ஒரு வரையறைக்குட்பட்ட பொருளல்ல; அவை அடையப்பட வேண்டிய 'பரம இலட்சியம்'. வேல் எப்படியோ தாளும் அப்படியே; அவைகளே 'பரமபதம்' (அ) 'சர்வ வல்லமையின் உயரிய உறைவிடம்' (அவ்வாறு நாம் செய்யுள் 44ல் காண்போம்). எனவே, இறை- தாளை அருளுவது (பதங்களில் பாதுகாப்பது) அல்லது வேல்-உணர்வை அருளுவது என்பதன் அர்த்தம் ஜீவன்முக்தியாகிய ஆன்மீக விடுதலையை அடைதல் என்றாகும். "தாள்" என்பது வெளியில், கண்களுக்குத் தெரிவதாயும், ஒருவன் தலைமேல் சூடப்படுவதாயும் கருதப்படுகிறது; அப்படியிருக்க, "வேல்" என்பதோ சைதன்ய-சொரூபமாக ஒருவனின் அந்தரங்க இதயத்தில் உணர்வு-நிலையாக வெளிப்படுத்தப் படுவதாகும். ஆகையால், ஒன்று வெளிப்புறச் செயலாகும்போது, மற்றொன்று உள்ளுணர்வு வெளிப்பாடு ஆகிறது, ஆனால் இரண்டும் குறிப்பது ஒன்றையே. இறை-தாளில் பாதுகாப்பு அளித்திட வேண்டி செய்யப்படும் இச்செய்யுளின் பிரார்த்தனை, உண்மையில் அவன் முந்தைய செய்யுளில் எந்த வேல்-உணர்வில் நிலைபெற்றிட இடைவிடாது பெருமுயற்சி செய்து கொண்டிருகிறானோ அந்த வேல்-உணர்வை வெளிப்படுத்துவதற்கான பிரார்த்தனையேயாகும். அடுத்த செய்யுளில் அவன் அடையும் வேல்-உணர்வு வெளிப்பாடு, அம்முயற்சியின் பூரண நிறைவேற்றமும் இச்செய்யுளில் செய்யப்படும் பிரார்த்தனையின் நிறைவேற்றமும் ஒருமிக்க அடையப்பட்டதாகும்.

உடல்-உணர்வு (அ) சீமைக்கு (நிபந்தனைக்கு) உட்பட்ட உணர்வு மரண பயத்தை ஏற்படுத்துகின்றது. ஆனால், இப்பொழுது அவன் பிரார்த்திப்பதுபோல இறை-தாளில் பாதுகாப்பு அளிக்கப்படும்பொழுது (அல்லது இறை-உணர்வு (அ) வேல்-உணர்வு வந்தமையும்பொழுது), ஆன்மாவானது இறை-தாளிலேயே நிரந்தரமாக ஒடுங்கி விடுவதால், புனர் ஜன்மம் அற்றுப் போய்விடுகின்றது, மரண பயமும் நீங்கிவிடுகின்றது, சம்சாரமும் முற்றிலும் இல்லாமற்போகிறது.

உடல் மரணமடைவது, உயிர் பிரிவது (மரணத்திற்குப் பின்னர் உயிர் பயணிப்பது) ஆகிய இரண்டிற்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். உடல் இறப்பதென்பது உடலின் தருமம்; அது தவிர்க்க இயலாத ஒன்று; உடல் உருவானதற்குக் காரணமானது எதுவோ அது (பிராரப்தம்) வலுவிழக்கும்பொழுது, உடல் சிதைவதென்பது அவ்வுடலின் தர்மம், அது ஒரு இயற்கைச் செயல் என்றே கூறலாம். உயிர் (ஜீவாத்மா)

பிரிவதென்பது அது உடலை விட்டுப் பயணிப்பது, சம்சார சுழற்சிக்காக --- மறுபிறப்பு எடுப்பதற்காக. மறுபிறப்பு எடுப்பது உடலல்ல; ஜீவாத்மாவே. இறந்த பிறகுதான் மறுபிறப்பு எடுப்பது இயலுமாதலால், மேலும் மறுபிறப்பென்பது ஜீவாத்மாவிற்குத்தான், உடலுக்கல்ல என்பதால், மறுபிறப்பு எடுக்க வேண்டிய ஜீவாத்மா 'இறக்கிறது' என்று சொல்லப்படுகிறது. எனவே, ஜீவாத்மா இறக்கிறது என்று கூறப்படும்பொழுது, அது மறுபிறப்பைத் (புனர் ஜன்மத்தைத்) தான் சுட்டுகிறது. உடல் இறப்பது ஒருபொழுதும் தவிர்க்க இயலாது; ஆனால், ஜீவாத்மாவின் இறப்பை (மறுபிறப்பை) தவிர்த்திட இயலும். மறுபிறப்பிலிருந்து விடுதலை பெற்றிடுவதையே "சாகாது" என்றும், தவிர்த்திட இயலாததும் இயற்கை நியதியுமான உடல் இறப்பை "நமனார் கலகம்" என்றும் இச்செய்யுள் குறிப்பிடுகின்றது.

உடல் இறக்கும்பொழுது, அந்த ஜீவாத்மனால் கழிக்கப்பட வேண்டிய நல்ல/தீய கர்மங்கள் (சஞ்சிதம்) மிச்சமிருந்தால், யமராஜன் அதை எடுத்துச்சென்று, அதன் கர்மவினைகளுக்கேற்ப தீர்ப்பெழுதி, உயரிய / தாழ்ந்த மறுபிறப்பை அளிக்கிறான். இந்த மறுபிறப்பு-இறப்பு சுழற்சியைத் தவிர்ப்பதற்கு ஒரு ஜீவன் தீவிர இறை-பக்தி மூலமோ அல்லது ஆழ்ந்த இறை-தியானத்தின் மூலமோ முக்தி (ஆன்மீக விடுதலை) பெறவேண்டும். அதற்காகவே, இறைவன் தனது தாளில் தன்னை சேர்த்து காப்பதற்கு அச்சாதகன் பிரார்த்தனை செய்கிறான். அதேபோல், ஜீவன், தனது உடல் அழிவதற்கு முன்பே வேல்-உணர்வில் அல்லது ஆத்ம-உணர்வில் நிலைபெற்றுவிட்டால், ஆத்ம ஞானத்தால் கர்மவினைகளை எரித்து மறுபிறப்பிலிருந்து விடுதலை பெறுகிறது. இந்த உடலில் வாழும்போதே இத்தகைய விடுதலையை ஒருவன் அடைந்திட இயலும். அதுவே, "ஜீவன் முக்தி" எனப்படுகிறது.

முக்தியை (அ) இறைதாளை இறந்த பின்னர் தான் அடைந்திட இயலும் என்பது அவசியமில்லை; இங்கேயே, இவ்வுலகில் வாழ்ந்திடும் இப்பொழுதேகூட அடைந்து அநுபவிப்பது சாத்தியம்தான். மேலும், முக்தியை அடைவதற்கு, ஒருவன் இறக்கும்பொழுது அவன் உடல் எந்நிலையில் இருக்கிறது என்பது முக்கியமில்லை ---- அது ஆரோக்கியமாகவோ, நோய்வாய்ப்பட்டோ, இளமையாகவோ, முதுமையாகவோ, மற்றவர்களால் பூஜிக்கப்பட்டோ அல்லது புறக்கணிக்கப்பட்டோ இருக்கலாம்; உண்மையில் வேண்டப்படுவது யாதெனில் அந்த ஜீவனின் விழிப்புணர்வு எந்நிலையில் (ஸ்திதியில்) இருந்தென்பதே முக்கியம். ஏனெனில், முக்தி உடலிற்கு அல்ல, அது ஜீவனுக்கு மட்டும்தான் உரியது. ஜீவ உணர்வுதான் பந்தப்படுகிறது (அ) விடுதலையடைகிறது. உடல் இறப்பதற்கு முன்னரும், இறக்கும் தருணத்திலும், ஜீவ-உணர்வு எந்நிலையில்

இருக்கிறதோ, அதைப்பொருத்தே இறப்பிற்கு பின்னர் அதன் நிலை அமையும். எனவே, இறப்பதற்கு சற்றுமுன்னர் ஜீவன் அறிந்திராத / இருந்திராத ஒரு நிலையை, இறந்த பின்னர் அது அடைந்திடுமென்று சொல்லமுடியாது. அது இறப்பதற்கு முன்னர் எப்படி இருந்ததோ, அப்படியே பின்னரும் இருக்கும். இது ஜீவன்முக்தியின் சாத்தியக்கூறை விளக்குகின்றது. ஆகவேதான், எமனார் தன் கலகத்தைச் செய்ய வருமுன்னரே (உயிரை எடுத்திட வருவதற்கு முன்பே), முருகப் பெருமான் அவர் தாளில் தன்னை இருத்திக் காத்தருளுமாறு அச்சாதகன் பிரார்த்தனை செய்கிறான். இதிலிருந்து அவன் இவ்வுடலில் உயிருடன் வாழும்பொழுதே முக்தி பெற ஏங்குகிறான் --- *ஜீவன் முக்தியை* (நிலையான இறை-உணர்வை) தனக்கு வழங்க வேண்டுகிறான். எனவே, "நமனார் கலகம் செயுநாள்" என்பது 'உடல் இறப்பதையும்', "சாகாது" என்பது 'ஜீவாத்மா மறுபடியும் பிறக்காமலிருப்பதையும்', அதாவது ஜீவாத்மனின் சம்சார-சக்கரத்திலிருந்து விடுபட்ட முக்தியையும் குறிக்கின்றது.

இங்கு கவனிக்கவேண்டிய சுவாரஸ்யமான விஷயம் ஒன்று உள்ளது. ஒருவன் தன் உடலை நீக்குவதற்கு முன்னரே தனது அனைத்துக் கர்மங்களையும் முடித்து விட்டால், அவன் இங்கே முக்தி பெறுவான்; அல்லது, அவனிடம் அனுபவிக்கவேண்டிய கர்மங்கள் இன்னும் பாக்கி இருக்குமாயின், அவற்றை அனுபவித்து முடிப்பதற்கு இன்னுமொரு பிறப்பாவது எடுக்க வேண்டிவரும். எனவே, பக்தி (அ) யோகம் (அ) ஞான மார்க்கத்தின் மூலம் தனது கர்மங்கள் அனைத்தையும் முடித்துக் கொள்கிறவர்கள், இவ்வுடலில் வாழும்பொழுதே முக்தி அடைகின்றனர். அவர்கள் ஜீவன்முக்தர்கள். அவர்கள் தங்கள் உடலை நீத்தபின்னர் விதேகமுக்தர்களாக ஆகிறார்கள். மற்றவர் அனைவரும் மீண்டும் பிறப்பு எடுத்துதான் ஆகவேண்டும்.

'நமனார் கலகம் செய்யும் நாளில் எனைக் காப்பாயாக! எனை உனது சரணங்களிலே காப்பாயாக!', என்று அச்சாதகன் பிரார்த்திக்கிறான். அவன் ஏன் "கா", "கா" --- காப்பாற்று, காப்பாற்று என்று இருமுறை வேண்டுகிறான்? இது ஒரு "அவசர அறைகூவல்" அல்ல. யமனிடமிருந்து உடனே காப்பதற்காகக் கூப்பிட்டதாக இருக்கமுடியாது, ஏனெனில் ஆபத்து எதுவும் (யமன்) அவனுக்கு அருகாமையில் வந்துவிடவில்லை; ஆபத்து தூரத்தில்தான் இருக்கிறது, 'கலகம் செயும் நாள்' (யமன் வரும் நாள்) என்று சொல்வதிலிருந்தே இது நன்கு தெரிகிறது. யமன் ஏற்கனவே வந்து, அவனுடைய உயிரை எடுக்க முயற்சி செய்கிறான், அதுவரையும்கூட முருகப் பெருமான் அவனைக் காக்க வரவில்லையென்றால், இது

ஒரு "அவசர அறைகூவல்" எனக் கருத இயலும். ஆனால், அப்படி எதுவும் ஆகவில்லையே! அல்லது, "யமன் எப்பொழுது வருவானோ அப்பொழுது நீ சீக்கிரம் ஓடிவா" என்றும் சொல்லுவதற்கில்லை, அது அர்த்தமற்றது; ஏனெனில் யமன் வருவதற்கு அவகாசம் இருக்குமானால், பெருமான் வருவதற்கும் அதேயளவு அவகாசம் இருக்குமல்லவா! யமன் எருமைக் கடாவின்மேல் மெதுவாகத்தான் வரமுடியும், பெருமானோ பறக்கும் மயிலின்மேல் விரைந்து வரமுடியும். எனவே, பெருமானை இப்பொழுதே அவசரப்படுத்த வேண்டியதில்லை. மேலும், பெருமானோ அனைத்தும் அறிந்தவர், சர்வ வலிமையுடையவர், மற்றும் எங்கும் இருப்பவர் ஆயிற்றே. ஆகவே, "கா", "கா" என்றது யமனிடமிருந்து காப்பதற்காக அல்ல; அது அந்த ஆத்மாவின் உடனடியாக முக்தி பெறவிரும்பும் வாஞ்சையைக் குறிக்கிறது. இதில் நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது: அவன் "கா, கா" என்று காப்பாற்றுமாறு வேண்டுவது *யமனிடமிருந்து* அல்ல, ஆனால் அது *இறைவனது தாள்களில்* (*சரணங்களிலே* "கா, கா"). இறை-தாளில் காக்கப்படுவது என்பது முக்தியைக் குறிக்கும். இருமுறை **"கா,கா"** என்று சொல்வதற்கு காரணம் முக்தி ***உடனே*** வேண்டும் --- இங்கேயே இப்பொழுதே, உடலில் உயிர் இருக்கும்பொழுதே முக்தி (*ஜீவன்முக்தி*) வேண்டும் என்பதே! இறந்தபின்னர் முக்தி அடைவதற்காக அல்ல.

'இப்பொழுதே', 'இங்கேயே' என்பவை அறிந்துகொள்வதற்குக் கடினமான மறைபொருளுடைய வார்த்தைகள். அவை காலத்தையும், இடத்தையும் கடப்பதைக் குறிக்கின்றன. அதாவது காலத்தையும் இடத்தையும் கடந்துநிற்கும் நிலையை குறிக்கின்றன. 'இப்பொழுது' என்றால் என்ன? ஒவ்வொரு கூணமும், அந்த நொடிப்பொழுதில் 'இப்பொழுது'தான். 'கடந்தது' என்பது அப்போது 'இப்போதாக' இருந்தது; 'இப்போது' என்பது இப்பொழுது 'இப்போதாக' இருக்கிறது; 'நிகழப்போவது' என்பது அப்போது 'இப்போதாக' இருக்கும் (அப்போதைய இப்போது). எனவே, 'கடந்தது', 'இப்போது', மற்றும் 'நிகழப்போவது' --- இவை 'இப்பொழுதின்' ஒரு விளையாட்டே, அதாவது ஈறில்காலம். ஆகையால், கடந்தகாலம், நிகழ்காலம், மற்றும் எதிர்காலம் என்பது ஒருவகையில் பார்த்தால் வெறும் 'இப்போது' என்பதன் வார்த்தை ஜாலம்தான், அதாவது இவை 'ஈறில்காலம்' அல்லது 'நித்தியம்' என்பதையே குறிக்கும். நித்தியத்தில், கடந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்ற எந்த வித்தியாசமும் இல்லை; அது எப்பொழுதுமே 'இப்போது' தான். அதேபோல, எல்லையற்ற / முடிவற்ற ஒன்றில், இங்கு என்றும், அங்கு என்றும், எங்கு என்றும் இல்லை; அது எப்போதும் 'இங்கு'தான். எனவேதான்

பிரார்த்தனை இவ்வாறு செய்யப்பட்டுள்ளது: “சரணங்களிலே கா கா” --- தங்கள் திருவடிகளில் என்னைக் “கா” (இங்கேயே காப்பாயாக), “கா” (இப்பொழுதே காப்பாயாக). ஆகையால், இப்பிரார்த்தனை இங்கேயே, இப்பொழுதே, அடையப்படும் ஆன்மீக விடுதலையான ஜீவன்முக்தியைப் பெறுவதற்கான ஏக்கத்தை / தாபத்தையே வெளிப்படுத்துகிறது. “தங்கள் திருப்பாதக் கமலங்களில் என்னை இங்கேயே, இப்பொழுதே சேர்த்துக் காத்து, ‘ஜீவன் முக்தி’ அருள்வாயாக, அதன் மூலம் யமராஜன் வந்து கலகம் செய்யும் (உயிரை உடலிலிருந்து பிரிக்கும்) நாளில், நான் அவன் கைவசப்பட்டுச் ‘சாகா’மலிருப்பேன் (புனர் ஜன்மத்தைத் தவிர்ப்பேன்.)” ---- “நமனார் கலகம் செயுநாள், (அவன் கைவசப்பட்டு) சாகாது எனையே சரணங்களிலே கா கா.” என்று அச்சாதகன் பிரார்த்தனை செய்கிறான்.

==========

செய்யுள் - 42

==========

குறியைக் குறியாது குறித்தறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலும்
செறிவற்று உலகோடு உரை சிந்தையுமற்று
அறிவற்று அறியாமையும் அற்றதுவே.

பொழிப்புரை: (தியானத்தின் குறிக்கோளான) குறியை (பிரம்மத்தை) வேறொன்றையும் சிந்திக்காமல் அதைமட்டுமே சிந்தித்து அறியும் (அனுபவத்தில் உணரப்படும்) முக்திநெறியை ((முக்திநிலையை), (அந்த நிலையேயான) ஒப்பற்ற வேலை, (நிகழ்த்திடலும்) உணரச்செய்தவுடனே, மக்களுடனும் உலகத்துடனுமான அனைத்து உறவுகளும் அற்று, பேச்சும் மனமும் அறவே செயல்பாடு அற்று நின்று, புத்தியும் அற்று, அறியாமையும் அடியோடு அற்றுப் போயின."

விளக்கவுரை

கந்தர் அனுபூதி நூலில் இந்த ஒரு செய்யுளில் மட்டும்தான் இறைவனைப் பற்றிய நேரடியான குறிப்பு இல்லை; ஏனெனில், இது சமாதி நிலை அல்லது பேருணர்வு நிலையை விவரிப்பதனால் இருக்கக்கூடும்.

ஆம்; இறைவன் மற்றும் குருவின் அருளால், சாதனையின் குறிக்கோள் அடையப்பட்டது, வேல் நிகழ்த்தப்பட்டது, ஜீவ உணர்வை பிரம்ம உணர்வு ஆட்கொண்டுவிட்டது, *ஜீவன்முக்தி* அடையப்பட்டது, அறியாமையும் அகன்றது, அதன் அனைத்துப் பரிவாரங்களும் செயல்படாமல் போய்விட்டன! ஆஹா! இடையறாது செய்யப்பட்ட இப்பெரும் (ஆன்மீகப்) போராட்டம் பிரம்ம ஞானமெனும் பழத்தை அளித்தது!

இச்செய்யுள், அதியற்புத அகநிலை உணர்வு அநுபவமாகிய சமாதி நிலையைப்பற்றியது; இதை ஒருவன் தான் புரிந்து கொள்வதென்பதே மிக மிக அதிசயம் (மிகவும் கடினம்), அதனினும் கடினம் அதனைப் பிறருக்கு விளக்கிச் சொல்வது. ஆனால் இதுதான் புனிதத்திலும் புனிதமான அநுபவிக்கவேண்டிய நிலை என்பது

மட்டும் திண்ணம். அநுபவம், *சுய அநுபவமே*; அதை புத்தியால் புரிந்து கொள்ள முடியாது, அதை விவரிக்கவும் முடியாது, ஆனால், ஒவ்வொருவரும் அதை தமக்குத் தாமே *அநுபவிக்கப்பட வேண்டியதே*. இது தெய்வ கிருபையுடன் வாழ்நாள் முழுவதும் செய்யப்பட்ட ஆன்மீக சாதனையின் சிகரம், உச்சநிலை, முழுநிறைவு. அந்த சன்னியாச-சீடன், குரு தனக்குத் (செய்யுள்-37ல்) தந்தருளிய உபதேசங்களை, ஒன்றுகூட மிச்சமில்லாமல் மொத்தமாக தீவிரமாக, இடையறாது செயல்படுத்தி, தனது குறிக்கோளான சமாதிநிலையை, இறையனுபூதியை அடைந்தான்.

செய்யுள்- 37ல் குரு தந்த உபதேசம்:

1. '*அஹம் பிரம்ம அஸ்மி*' ("இறையோன் பரிவாரம்") என்று தியானம் செய்வாயாக; அந்த மேலாம் பதத்தை அடைய, அதில் நிலைபெற முயற்சிப்பாயாக ("எனும் பதம் மேவலையே புரிவாய்");
2. "பொறையாம் அறிவால்" - சித்-சொரூபமான, 'பூரண அறிவு', 'நிறை உணர்வு' அல்லது 'உணர்வு-இருப்பு' என்ற அறிவின் துணை கொண்டு;
3. "அரிவாய் அடியோடும் அகந்தையையே" - அகந்தையை அதன் ஆணி வேருடன் அறுத்தெறிவாயாக (களைந்தெறிவாயாக, பிடுங்கி எறிவாயாக).

அந்த சன்னியாச சீடன் தீவிர ஆர்வத்துடனும் முனைப்புடனும் குரு தனக்குக் கொடுத்த (மேற்படி) உபதேசித்ததை அனுசரித்து, கர்மத்தை அழிக்கும் 'வேலின்'-மீது இடையறாது தியானம் செய்யத் துவங்கினான் (செய்யுள்-40); பின்னர், அதை உறுதிப்படுத்த, உடனேயே ஜீவன்முக்தி நிலையை இங்கேயே இப்பொழுதே அடைந்திடுவதற்கு பெரும் ஏக்கம்கொண்டு இறைவனிடம் பிரார்த்தனையும் செய்தான் (செய்யுள்-41); இறுதியாக, இப்பொழுது இச்செய்யுளில் இறைவனை ---- தன் குறிக்கோளை --- அடைந்து விட்டான். எப்படி?

"குறியை" --- 'குறி' என்பது இலட்சியம் (அ) குறிக்கோள் (அ) அடையப்பட வேண்டிய பொருள், அதாவது **பிரம்மம்**. (பக்தி மார்க்கத்தில், இது முருகன், இறைதாள் (இறைபாதம்) என்று அழைக்கப்படுகிறது. ஞான மார்க்கத்தில், இது வேல்-உணர்வு, ஆத்மா, ஸச்சிதானந்தம், பரபிரம்மம், பரம்பொருள் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது).

"குறித்து" --- 'குறித்து' என்றால் 'குறியை' (பிரம்மத்தை) ஒருமுகப்படுத்திய மனதுடன் சிந்திப்பது. இது **"தாரணம்"** என்று சொல்லப்படும். இப்படி பிரம்மத்தை ஒருமுகப்படுத்திய மனதுடன்

‘தாரணம்’ செய்யும்போது, அதில் தொந்தரவுகள், இடையூறுகள் செய்யும் திசைதிருப்பும் வேறுவித எண்ணங்களும் இருக்கும்.

“குறியாது குறித்து” - ‘குறியாது’ என்றால் வேறு எந்த ஒன்றைப்பற்றியும் எண்ணாதிருத்தல், அதாவது வேறுவித திசைதிருப்புதல்கள் இல்லாது இருத்தல் என்றாகும்; ‘குறியாது குறித்து’ என்றால் ‘எந்தவித திசைதிருப்புதல்களுமின்றி, பிரம்மத்தின்மீது முழுமையாக ஒருமுகப்பட்ட மனதை நிலைநிறுத்துதல்’ என்றாகும். பிரம்மத்தைப் (வேலைப்) பற்றியே இடையறாது எண்ணுதல் என்பது, எப்படி எண்ணையை ஒரு பாத்திரத்திலிருந்து இன்னொன்றிற்கு வார்க்கும்பொழுது அது இடைவெளியின்றித் தொடர்ந்து பாய்வது போன்றதாகும். இது **தியானம்** எனப்படுகிறது. தியானம் என்பது ஒரு செயல்முறை, இதில் மூன்று விஷயங்கள் உள்ளன: தியானிப்பவர், தியானப் பொருள், மற்றும் தியானம் செய்தல் (தியானிக்கப்படும் பொருளைப் பற்றி எண்ணுதல்). திசைதிருப்பல்கள் எதுவுமின்றி தியானமானது நீண்ட காலத்திற்கு செயல்படுத்தப்படும்பொழுது, **சமாதி** நிலையை அடைவது தானே நிகழ்கிறது.

“அறிதல்” - ‘அறிதல்’ என்றால் ‘அறிந்து இருத்தல்’ (அ) ’அனுபவித்தல்’, அதாவது **‘சமாதி’.** சமாதியில், தியானிப்பவர், தியானச் செயல் ஆகிய இரண்டும் தியானப் பொருளான ‘பிரம்மத்தில்’ ஐக்கியமாகி, அது மட்டுமே **‘இருக்கிறது’**.

“குறியைக் குறியாது குறித்து அறிதல்” - என்றால் பிரம்மத்தைத் தவிர வேறு எந்த எண்ணமுமின்றி அதைப்பற்றி மட்டும் தியானம் செய்வதால், மனம் பிரம்மத்தில் லயமடைந்து, பிரம்மமாகவே ஆகிவிடுகிறது (நதியானது கடலில் கலந்து, கடலாகவே ஆகிவிடுவதுபோல), மேலும் பிரம்மமாக இருந்து பிரம்மத்தை அறிகிறது. இந்நிலை **சமாதி** எனப்படுகிறது. இதுவே ‘ஆன்மீக விடுதலை’, இதுவே ‘முக்தி’, இதுவே ‘மோட்சம்’. ‘குறியைக் குறியாது குறித்து அறிதல்’ என்ற இச்சொற்றொடர் **சமாதி**யில் முடிவடையும் உண்மை தியானத்தின் வழிமுறையை விவரிக்கிறது. இவ்வாறு முடிவடையும் “நிலை”யாகிய சமாதி, “நெறி” என அழைக்கப்படுகிறது --- “குறியைக் குறியாது குறித்து அறியும் நெறி”.

“நெறி”: -- இதன் அர்த்தம் முக்தி, அதாவது ஆன்ம விடுதலை (அ) மோட்சம். இது (ஒன்றை அடைவதற்கான) வழியோ/ சாதனமோ அல்ல, இது ஒரு ‘தூய உணர்வு நிலை’ (“State” of Consciousness), **சமாதி.**

"குறியைக் குறியாது குறித்து அறிதல்" மற்றும் "நெறி" --- இவ்விரண்டும் ஒன்றையே குறிக்கிறது --- சமாதி அல்லது மோட்சம்.

ஆக, பரம்பொருளான, பூரணமான பிரம்மத்தை **(குறியை)**, வேறு எந்த ஒன்றையும் சிந்திக்காது **(குறியாது),** முழுதும் குவிக்கப்பட்ட மனதை (*ஏகாக்ர சித்தம்*) பிரம்மத்தில் நிலைநிறுத்தி {(**குறியை மட்டும்**) "**குறித்து**"}, அவன் பிரம்மத்தை அறிந்தான் (அ) பிரம்ம-அநுபூதி அடைந்தான் (**அறிதல்**); அந்த நிலையே "சமாதி", "மோட்சம்", "ஆன்மீக விடுதலை" **("நெறி"). 'நெறி'** என்பது **'முக்தி'** அல்லது 'மோட்சம்'; அது மோட்சத்திற்கு ஒரு வழி அல்ல.

இந்த "நெறி" என்பதே 'பதம்' என்று செய்யுள்-37ல் குறிப்பிடப்பட்டது --- "பதம் மேவலையே புரிவாய்" என்று அதை அடைந்திட விரும்பவேண்டும் என்று சாதகனுக்கு அறிவுரை கொடுக்கப்பட்டது. சமாதி நிலையில், தியானம் செய்திடும் ஜீவ-உணர்வு பிரம்ம-உணர்வில் ஐக்கியமாகி, பிரம்மமாக ஆகி, பிரம்மமாகவே 'இருந்து' விடுகிறது, எப்படி நதியானது கடலை நோக்கி வேகமாக ஓடி, கடலில் சங்கமித்து அதில் ஐக்கியமாகி, கடலாக ஆகி, அதன்பின்னர் கடலாகவே இருந்து விடுகிறதோ அப்படியே. சமாதியில், ஒருவன் பிரம்மமாக இருந்து, பிரம்மத்தை அனுபவிக்கிறான், அதாவது பிரம்மத்தை அறிகிறான் அதாவது 'பிரம்மமாக இருத்தல்' *(ஸத்)* மற்றும் 'பிரம்மத்தை அறிதல்' *(சித்),* ---- 'இருத்தல்', 'அறிதல்' ஆகிய இரண்டும் ஒன்றே; அதாவது 'ஸத்' தான் 'சித்'. மேலும், பிரம்மம் என்பது தூய-உணர்வு (*"பிரக்ஞானம் பிரம்ம"* - மகாவாக்கியம்); 'வேல்' என்பதும் அ꞉தே. பிரம்மம், வேல், மோட்சம், தூய-உணர்வு, சமாதி, ஆன்மீக விடுதலை, இறை-பாதம் ---- ஆகிய அனைத்து சொற்களும் ஒன்றையே தான் உணர்த்துகின்றன. எனவேதான், அருணகிரியார் 'நெறி**யை**' (மோட்சம்), 'தனி வே**லை**' (தூய / பெரிய உணர்வு), என்று சொல்லி, அவை இரண்டையும் ஒன்றாகவே/ சமமாகவே பாவிக்கிறார், ---- அவ்விரண்டு சொற்களும் ஒரே பொருளையே குறிக்கின்றன; வேறு வேறுப பொருள்களை அல்ல. இவ்விரண்டு சொற்களும் குறிப்பது (அவைகளால் அடையப்பட்ட நிலைகள்) வேறு வேறாக இருந்திருப்பின், இரண்டையும் தனிமைப்படுத்திக் (வேறுபடுத்திக்) காட்ட, 'நெறியை**யும்**', 'தனி வேலை**யும்**' என்றுதானே அவர் சொற்களை அமைத்திருப்பார். (இச்செய்யுளில் பின் இரு வரிகளில் "உரை சிந்தை**யும்** அற்று அறிவற்று அறியாமை**யும்** அற்றதுவே" என்பதில், 'உரை', 'சிந்தை', 'அறிவு', 'அறியாமை', இவை ஒன்றிலிருந்து மற்றொன்று வேறானது.) ஆனால், அப்படி 'நெறியை**யும்**', 'தனி வேலை**யும்**' என்று சொல்லாமல், 'நெறியை', 'தனி வேலை', 'நிகழ்த்திடலும்' என்றுதான் அமைத்திருக்கிறார்.

‘நிகழ்த்திடலும்’ என்பதன் அர்த்தம்: ‘அளிக்கப்பட்டதும்’, ‘சம்பவித்ததும்’, ‘நடைபெறச் செய்ததும்’. மோட்சம், சமாதி, வேல், பேருணர்வு, ஆகியவை தூய-உணர்வு “நிலைகள்”; இவை ஒருவரால் “கொடுக்கப்படுவதல்ல”, “தரப்பட்டதல்ல”. இவை இறை-அருள்/குரு-கிருபையால் “தானே நிகழ்வன”. சமாதி (அ) மேலாம்-உணர்வு (பேருணர்வு) நிலையானது தியானத்தின் உச்ச கட்ட முடிவில் தன்னில் தானே வந்தமைவது. தியானம், ஒரு செயல்முறை; ஆனால், சமாதி என்பது ஒரு ‘நிலை’, ‘அனுபவம்’ (அதில் செயல்முறை கிடையாது). தியானத்தின் முடிவில் ‘சமாதி-நிலை’ தானே வந்தமைகிறது. ஆகவேதான், ‘நிகழ்த்திடலும்’ என்று இங்கு குறிப்பிடப்படுகிறது, அதாவது, (இறையருளினால்) சமாதி-நிலை தானே நடைபெறும் (அ) சம்பவிக்கும் (அ) நிகழந்திடும். எனவே, ‘நெறியை, தனி வேலை, நிகழ்த்திடலும்’ --- சமாதி நிலை (அ) வேல்-உணர்வு நிகழ்ந்தபோது, என்ன ஆயிற்று? “மக்கள் மற்றும் வெளியுலகத்துடனான அனைத்து உறவுகளும்/ தொடர்புகளும் அற்றுப்போயின, பேச்சும் மனமும் அற்றுப்போயின, புத்தி (அகங்காரம்) அற்றுப்போயிற்று, அறியாமையும் அழிந்து போயிற்று”. “அரிவாய் அடியோடும் அகந்தையையே” என்று அச்சாதகனுக்கு செய்யுள் 37ல் அறிவுறுத்தப்பட்டது, அதன்படி அவன் அகந்தையின் வேரை (அறியாமையை) வெட்டி எறிந்தபோது, அதன் கிளைகளும், சுள்ளிகளும், தழைகளும் சேர்ந்தே அழியத்தானே செய்யும்! எனவே, அகந்தையின் வேரான அறியாமை அழிக்கப்பட்டபோது, அதனோடு சேர்ந்த புத்தி, மனம், பேச்சாற்றல், மற்றும் அனைத்து உறவுகளுமே அற்றுப்போய்விட்டன என்று இங்கு குறிப்பிடப்படுகின்றது. இப்படியாக, செய்யுள் 37ல் அளிக்கப்பட்ட உபதேசத்திற்கும், அது இங்கு அடையப்பட்டதற்கும் உள்ள முழு பொருத்தத்தை இச்செய்யுளில் காண்கிறோம்.

சற்றேகுறைய சமாதி அநுபவம் பெற்ற பின்னர் அச்சாதகனிடம் அறியாமை அழியாமல் இருந்தது; எனவேதான், அவன் “(தாங்கள்) பொல்லேன் அறியாமை பொறுத்திலையே” என்று பெருமானிடம் புலம்பினான் (செய்யுள்-28 & 29). அதற்காக, ‘*அஹம் பிரம்ம அஸ்மி*’ என்று தியானம் செய்து, ‘அரிவாய் அடியோடும் அகந்தையையே’ என்ற உபதேசம் அவனுக்குத் தரப்பட்டது (செய்யுள்-37). அந்த அறியாமை முழுமையாக அழிக்கப்பட்டதென்ற ஒரு தெள்ளத்தெளிவான அறிவிப்பு இச்செய்யுளில் செய்யப்பட்டுள்ளது.

சமாதி-நிலை எப்படி நிகழ்கிறது என்பது ஓர் அதிசயமே? ஒருவனின் *பூர்வ-புண்ணியங்கள்* (பல ஜன்மங்களில் செய்த நற்செயல்களின் புண்ணியங்கள்), *சாதனை-சக்தி* (ஆன்மீகப் பயிற்சியின்

சக்தி), குருவின் *தீக்ஷையின்* (சக்தி-பாய்ச்சலின்) பலம், மற்றும் *ஈஸ்வர-கிருபை* (இறையருள்) ஆகிய அனைத்தும் ஒரு மர்மமான முறையில் ஒன்று சேர்வதன்மூலம், வேல்-உணர்வு (அ) பேருணர்வு தானே 'வெளிப்படுகிறது' / 'நிகழ்கிறது'. இந்நிலை 'துரீயம்' என கூறப்படும். {மூவித அவஸ்தைகளான நினைவு, கனவு மற்றும் ஆழ்-உறக்க நிலைகளை எல்லாம் கடந்த 'நான்காம்' (துரீயம்) நிலை'}. இந்தத் துரீய நிலையில், உணர்வின் ஐந்து கோசங்களுடனுமான தொடர்பு அற்றுப்போய் விடுகின்றது. இந்நிலை இச்செய்யுளில் மிகச்சிறப்பான முறையில் தெளிவுபடுத்தப் பட்டுள்ளது.

உலகத்திடனுனான உறவு *அன்னமய கோசம்* (தூல உறை - Physical Sheath) எனப்படும் ஸ்தூல உடலால் (ஐந்து கர்மேந்திரியங்களின் மூலம்) ஏற்படுகிறது. 'பேச்சு' பிராணனின் செயல்பாடு - அது *பிராணமய கோசம்* (முக்கிய உறை - Vital Sheath) எனப்படுகிறது. மனம், *மனோமய கோசம்* எனப்படுகிறது (மன உறை- Mental Sheath). புத்தி, *விக்ஞானமய கோசம்* (புத்தி உறை - Intellectual Sheath). அவித்யா அல்லது அறியாமை *ஆனந்தமய கோசம்* (பேரின்ப உறை- Bliss Sheath). ஜீவனானவன் சமாதி-நிலை அடையும் பொழுது ஐந்து கோசங்களும் செயலற்றுப்போகின்றன. இதை வெகுஅழகாக இச்செய்யுளில் "**செறிவற்று உலகோடு, உரை சிந்தையுமற்று, அறிவற்று, அறியாமையும் அற்றது**" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்நிலையே ஆழந்த மோன/மௌன நிலையுமாகும், அடுத்த செய்யுளில் சொல்லப்பட்ட 'பேசா அநுபூதி' நிலை; செய்யுள்-44ல் சொல்லப்படும் 'சூடும்படி அளிக்கப்பட்ட' மோட்சத்திலும் மற்ற இடங்களிலும் கமழும் (ஒளிரும்) முருகனின் கழல்களும் ஆகும் ("முருகன் சரணம் சூடும்படி தந்தது").

இம்மூன்று செய்யுள்களும் (செய்யுள்-42, 43 & 44) இறைவனை அடையப்பட்டதை (இறையனுபூதியை) மூன்று விதங்களில் விவரிக்கின்றன. இச்செய்யுளில், இது ஆழ்ந்த உட்பொருளுடைய, இரகசியமான முறையில் கூறப்பட்டுள்ளது (*ஞானம், அல்லது வேல்*); அடுத்த செய்யுளில் வெளிப்படையாக, *'அநுபூதி'* என்ற சொல்லை உபயோகப்படுத்தி *('அநுபூதி பிறந்தது')* கூறப்பட்டுள்ளது. அதனால் அடுத்த செய்யுள் இந்நூலின் முகடாக, உச்சகட்டமாகக் கருதப்படுகின்றது. அதற்கடுத்த செய்யுளான 44ல், பக்தி பூர்வமாகப் பேசப்படுகிறது (*பக்தி -- 'முருகன் சரணம் சூடும்படி தந்தது'*). ஆனால், எதற்காக அருணகிரியார் இறையனுபூதியை மூன்றுவிதமாக மூன்று செய்யுள்களில் விவரிக்கவேண்டும்? இதற்கான பதிலறிய நாம் 44ம் செய்யுள்வரை காத்திருக்க வேண்டும்.

இச்செய்யுளில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ, அதே கருத்துக்கள் செய்யுள்-48லும் மேலும் மிக விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

வேல்-உணர்வு (*அஹம் பிரம்ம அஸ்மி*) தியானத்தில் நிலைபெறுவதற்காக உறுதியான முயற்சி அச்சாதகனால் கையாளப்பட்டதாலும் (செய்யுள்- 40), ஜீவன் முக்தி நிலையை இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் இப்பொழுதே அடைந்துவிட ஏக்கம் கொண்டு அம்முயற்சி மேன்மேலும் அவனால் தீவிரப்படுத்தப்பட்டதாலும் (செய்யுள்- 41), அவனுக்கு வேல்-உணர்வெனப்படும் முக்தி இப்பொழுது அளிக்கப்பட்டு, அதனால் ஜீவ-உணர்வெனப்படும் அறியாமையும் அழிக்கப்பட்டுவிட்டது. அதனால்தான் *'அறியாமை அற்றது'* என்று பறைசாற்றுவதுபோல் இச்செய்யுளில் அறிவிக்கப்படுகிறது. இங்கு அடையப்பட்ட நிலையே சமாதி நிலை ---- இதுவே உணர்வு-இருப்பு நிலை --- இதுவே முன்னர் கூறப்பட்ட 'அஹம் பிரம்ம அஸ்மி' என்ற தியானத்தை தொடர்ந்து செய்ததால் ஏற்பட்ட அறியாமையை அழித்தொழிக்கும் *'பொறையாம் அறிவு'*. இந்த மிகப்பெரிய அநுபவமானது மேலும் விரிவாகவும், துல்லியமாகவும் நேர்மறையில் அடுத்த செய்யுளில் *"பேசா அநுபூதி பிறந்தது"* என்றழைக்கப்படுகிறது.

முந்தைய செய்யுளில் வேலும், இறை-பாதமும் ஒன்றையே குறிக்கின்றன என்று பார்த்தோம், அவையிரண்டும் ஒன்றோடொன்று சேர்ந்தே போகின்றன. அக்கருத்து இச்செய்யுளிலும் உறுதி செய்யப்படுகிறது. எப்படி எனப் பார்ப்போம். செய்யுள்-21ல் "கருதா மறவா நெறிகாண எனக்கு இருதாள் வனசந்தர என்றிசைவாய்" என்று அச்சாதகன் செய்த பிரார்த்தனை, இச்செய்யுளில் "குறியைக் குறியாது குறித்தறியும் நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலும்,..... அற்றது." என்பதில் பூர்த்தி செய்யப்பட்டது. செய்யுள்-21ன் "கருதா மறவா **நெறி**", இச்செய்யுளின் "குறியைக் குறியாது குறித்தறியும் **நெறி**" மற்றும் "தனி**வேல்**" --- இவை ஒன்றே; அதாவது இறை-பாதங்கள் அருளப்படுவதால் அடையப்படும் **'நெறி'** (முக்தி), **"வேல்"**-உணர்வு வெளிப்படுத்தப்பட்டபோது அடையப்பட்டது. அங்கு 'கருதா மறவா நெறி' (செய்யுள்-21) என்று குறிப்பிடப்பட்டதே இச்செய்யுளில் "குறியைக் குறியாது குறித்து அறியும் நெறி; தனிவேல்" என்று அழைக்கப்படுகிறது: இதன் அர்த்தம் என்னவெனில் இறை-தாள் வழங்கப்படுவதால் அடையப்படும் அதே முக்தி (நெறி) தான், வேல் வெளிப்படுத்தப்பட்ட போதும் அடையப்படுகிறது. இதிலிருந்து நாம் அறிவதென்னவென்றால் இறை-தாளும், வேலும் ஒன்றையே குறிக்கின்றன; அதாவது, 'நெறி', முக்தி, ஆன்மிக விடுதலை. இறை-

தாள் மற்றும் வேல் ---- இவ்விரண்டிற்கும் இடையில் எந்தவொரு வேற்றுமையும் இல்லையென்பதை 40 மற்றும் 41ம் செய்யுள்களிலிருந்தும் அறிந்து கொள்ளலாம். செய்யுள் 40ல் வேல்-உணர்வு தியானத்தில் இடைவிடாமல் நிலைநிற்கச் செய்யும் முயற்சியானது, செய்யுள்-41ல் தீவிரமானபோது, அது இறை-தாள்களை உடனே கொடுத்து அவற்றில் தன்னை காத்தருளும் வாஞ்சை-பிரார்த்தனையாக மாறியது. "வினை ஓடவிடும் கதிர்வேல் மறவேன்" (செய்யுள்-40) என்பது "சாகாது எனையே சரணங்களிலே காகா" (செய்யுள்-41) என்று தீவிரமடைந்தது. இப்பொழுது, இச்செய்யுளில் "வேலை நிகழ்த்திடலும்" (வேல்-உணர்வு வழங்கப்பட்டவுடன்) என்பதில், அதே சமயத்தில் இறை-தாளும் அவனுக்கு இயற்கையாகவே அருளப்பட்டது என்பதும் மறைமுகமாகக் குறிப்பிடப்படுகிறது. இந்த உண்மை, பின்னர் (செய்யுள் 44ல்) "முருகன் சரணம் சூடும்படி தந்தது சொல்லுமதோ!" என்று வெளிப்படையாகவும் ஆணித்தரமாகவும் சாற்றப்படுகிறது. இது, அவன் அப்படித் தன் பிரார்த்தனையின் பலனாக சரணங்கள் சூடப்பட்டதற்கு ஆச்சரியமடைந்து ஆனந்தத்தையும், நன்றியையும் தெரியப்படுத்துவதாகும்.

செய்யுள் 21லும் கூட 'நெறி' என்ற சொல் முக்தியைத்தான் குறிக்கிறது; வழி/பாதை (அ) செயல்முறையை அல்ல; ஏனெனில் இறை-தாள் ஒருவனுக்கு அளிக்கப்படும்போது, அவன் முக்தியைப் பெற்றுவிடுகிறான். 'நெறி', 'இறை-தாள்', 'வேல்' -- இவை முக்தியே; முக்தியையோ அல்லது மற்ற எதையோ அடைவதற்கு இவை மார்க்கமோ, சாதனமோ அல்ல. இறை-தாள்/இறை-பாதம் என்பது *பரம்-பதம்*, 'எங்குமிருக்கும் பரம்பொருள்' (Omnipresence); இவை அடையப்பட வேண்டியவை, மற்ற எதையோ அடைவதற்கு உதவியாய் இருப்பவையல்ல. இதை அச்சாதகன் செய்யுள்- 35 மற்றும் 41ல் விடுக்கும் பிரார்த்தனைகளிலிருந்து தெளிவாக அறியலாம் --- "கதிகாண மலர்க்கழல் என்று அருள்வாய்" (35); "சாகாது எனையே சரணங்களிலே காகா" (41). எனவே, இறைவன் தன் சரணங்களை அளிப்பதுவே 'முக்தி'; இது செய்யுள்-44லும் உறுதி செய்யப்படுகிறது. ஆகையால், 'நெறி' என்பது 'முக்தி; அது ஒரு நிலையே; அது ஒரு வரைமுறையல்ல. அதுவே குறிக்கோள் (End), குறிக்கோளை அடைந்திடும் ஒரு பாதையல்ல (Not a means to an End).

அறிவு பெறுதல் இருவகைப்படும்: செயல்முறை மூலம் பெறும் அறிவு, மற்றும் "அதுவாயிருந்து அறியும் அறிவு; ---- புலனறிவு (புலன்களின் மூலம் பெறப்படும் அறிவு), மற்றும் 'சுய-உணர்வு' (உள்ளுணர்வு) (Intuition); தொடர்புள்ள/நேரடியில்லாத அறிவு, மற்றும்

உடனடி/ நேரடியான அறிவு. புலனறிவு என்பது புலன்கள், மனது மற்றும் புத்தியின் மூலம் பெறப்பெற்ற அறிவு. இத்தகைய அறிவு ஒரு செயல்முறைமூலம் பெறப்படுகிறது. இதில், சாதகனின் அறியும் தத்துவமான ஆத்மா அல்லது விழிப்புணர்வு, புலன்கள், மனம், புத்தி ஆகியவைகளைக் கருவிகளாக்கி, அறிவைப் பெறுகிறது. வரையறையற்ற பேருணர்வு (மொத்த உணர்வு) இந்தக் கருவிகளுடன் தொடர்பு வைக்கும்போது, அவைகளோடு ஈடுபட்டு, அவைகளில் சிக்கி, அவற்றின் வரையறைக்குள்ளாகிறது. அதன்பின், அது தன்னை (சொரூபத்தை) மறந்து, வெளிப் பொருள்களை அறியத் தொடங்குகிறது, அவ்வாறு அது அறிவது ஒரு செயல்முறை மூலம். இப்படியாகத் தன்னை ஒரு வரையறைக்கு உட்படுத்திக் கொண்ட உணர்வு (ஜீவாத்மா), மனதின் மூலம் வெளிச்செல்லத் தொடங்கும்போது, மனம் செயல்பட்டு, எண்ணத்தொடங்குகிறது, அதாவது சிந்திப்பதென்பது நடைபெறுகிறது. அது மேலும் வெளிச் செல்லும்போது, உலகுடன் தொடர்பு கொள்ள உதவும் புலன்கள் மற்றும் மற்ற அவயவங்களை செயல்படுத்தி, பேச்சு மற்றும் செயல்கள் மூலம் உலகுடன் தொடர்புகொள்கிறது. இவ்வாறாக, உணர்வு வெளிப்பட்டு, மனது, புலன்கள் மற்றும் உடல் மூலம் வெளி உலகுடன் தொடர்புகொண்டு, உலகத்தைப்பற்றிய அறிவைப்பெருகிறது. இப்படிப்பட்ட அறிவுதான் நமக்குத் தெரியும், இது புலன்சார்ந்த அறிவு. இவ்வகை அறிவில் மிக மிக உயர்ந்தது புத்தி-அறிவு, அதாவது அறிவார்ந்த அறிவு, புலன்கள் வெளிஉலகைப் பற்றி நமக்கு அளித்த அறிக்கைகளை ஆதாரமாகக் கொண்ட அறிவு. இத்தகைய அறிவு புத்தி-அறிவு, தொடர்பு-அறிவு (Mediate Knowledge).

ஆனால், இதனின்றும் வேறுபட்ட, முற்றிலும் வியப்பளிக்கிற, புதுவகையான ஒரு அறிவு உண்டு. அது சுய-உணர்வு, தன்னுணர்வு மற்றும் உள்ளுணர்வு (Intuition) என்று அழைக்கப்படுகிறது. அது ஆத்மானுபூதியில், சமாதி நிலையில் தானே நிகழ்கிறது (உள்ளுணர்வாக பரிமளிக்கிறது). இது புறத்தொடற்பற்ற அறிவு. இதுவே வேல்-உணர்வு (அ) "'குறியைக் குறியாது குறித்தறியும்' அறிவு" என்று இச்செய்யுளில் குறிப்பிடப்படுகிறது, இந்த சொற்களில் நமது புத்தியினால் எளிதில் கிரகிக்க முடியாத இரகசியமான கருத்துக்கள் பொதிந்து கிடக்கின்றன. சிந்திக்காமல் சிந்தித்தல், தூங்காமல் தூங்குதல், வேல்-உணர்வு, இவை மிக மர்மமானவை; அவை என்ன தெரிவிக்கின்றன என்பதை நம்மால் அவ்வளவு சுலபத்தில் அறிய இயலாது. அவை அனைத்தும் சமாதி நிலையை, முக்தி நிலையைக் குறிக்கின்றன, அருணகிரியார் அதையே **'நெறி'** என்கிறார். இந்த சுய-உணர்வு அல்லது தன்னுணர்வு (Self-Consciousness) வார்த்தைகளால்

விவரிப்பதென்பது ஓர் இயலாத காரியமே! ஏனெனில், அது ஓர் (புலனறிவுக்கெட்டாத அறிவுசார்) *அநுபவம்* (ஒவ்வொருவரும் தன்னில் தானே அநுபவிப்பதன் மூலம் மட்டுமே உணரக் கூடிய ஒன்று). இருந்தபோதிலும், நாள்தோறும் நாம் பெறும் ஒரு அநுபவத்தின் மூலம் இதை அறிவது சுலபமாயிருக்கும்.

ஒரு பொருள் இருக்கிறது என்பதை அறிவதற்கும், நான் இருக்கிறேன் ('நான்' உடல் என்ற பொருளில்) என்று தெரிந்து கொள்வதற்கும் இடையே வித்தியாசம் இருக்கிறதென்பதை நாம் அறிவோம். ஒரு பொருள் உள்ளது என்பதை நாம் எப்படி அறிகிறோம்? காணும் மற்றும் சிந்திக்கும் செயல்முறையை உபயோகித்துத் தான் ஒரு பொருள் உள்ளதை அறிகிறோம். அதாவது அறியப்படும் பொருள் மற்றும் அறியும் நான் (அறிபவன்) இரண்டும் ஒன்றல்ல, இரண்டும் தனித் தனியானவை, வேறுவேறானவை. இன்னொரு விதத்தில் கூறினால், ஒரு பொருளின் இருப்பு அதை அறியும் உணர்விலிருந்து (அறிபவனிலிருந்து) வேறுபட்டதாய் உள்ளது.

ஆனால், நாம் இருக்கிறோம் என்பதை நாம் எப்படி அறிந்து கொள்கிறோம்? நம்மை நாம் அறிவது காண்பதன் மூலமல்ல; சிந்திப்பதன் மூலமுமல்ல; நாம் இருக்கிறோம் என்பதை அறிய, நாம் நம்மைப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. அல்லது நாம் நம்மைப் பற்றி சிந்திக்கவோ பகுத்தறிவைப் பயன்படுத்தவோ வேண்டிய அவசியமில்லை. ஒருவித உள்ளுணர்வு (அ) சுய-உணர்வு கொண்டே நாம் இருப்பதை நாம் தெரிந்து கொள்கிறோம்! அப்படி என்றால் என்ன? உள்-உணர்வு எனப்படும் நமக்குள் உள்ள அறிபவன் (ஜீவாத்மா), தன்னைத் தன் உடலிலிருந்து தனித்துப் பார்க்காமல், தன்னையே உடலாகக் கருதிக்கொண்டு, 'நான் இருக்கிறேன்' ('நான், இந்த உடல்' என்று அர்த்தத்தில்) என்று உணர்கிறது, அதாவது, அனைத்து நடைமுறை நோக்கிலும், 'நான்' என்றால் 'உடல்' என்று பொருள் கொள்ளப்படுகிறது.

புலனறிவு விஷயத்தில், ஜீவாத்மா, தன்னைத் தவறுதலாக உடலாகக் கருதுவதோடுமட்டுமின்றி (அறியும் 'நான்') தன் உடலிலிருந்து வெளியே சென்று, உலகப் பொருள்களை அறிகிறது. ஆனால், நாம் நம்மை (உடலாக) அறிவதற்கு, பொருள்களை நாடி உடலிலிருந்து வெளியே சென்ற ஜீவாத்மா ('நான்') தனக்கே (அதாவது, தன் உடலுக்கே) திரும்பி வருவதைத்தவிர வேறொன்றும் செய்ய வேண்டியதில்லை, அதாவது தனக்கே (தன் உடலுக்கே) திரும்பிவந்து, தானாகவே இருந்து, "நான் இருக்கிறேன்" என்று அறிகிறது. இதற்கு, பார்வையோ, சிந்திப்போ அவசியமில்லை.

அவ்வாறு அறிவதற்கு அது புலன்கள், எண்ணங்கள், ஆகிய உறுப்புகள் எதையும் உபயோகிப்பதில்லை. இவ்வாறாக (ஜீவ) உணர்வானது தன்னிடமே திரும்புதல், தானாகவே இருத்தல், தன்னையே தானாக அறிதல் --- இதுவே 'உள்ளுணர்வு', 'சுய-உணர்வு' - இது 'சிந்திக்காமல் சிந்தித்து' அறிதலாகும்; அதுவாகவே இருந்து அறிவதாகும் இந்நிலையில் இருப்பும், அறிவும் ஒன்றே, இருத்தலும் அறிதலும் ஒன்றே; அதாவது இருப்பே அறிதல்.

இது உள்ளுணர்வு (intuition) அல்லது சுய-உணர்வின் (self-consciousness) ஸ்தூல (பக்குவப்படாத) நிலை, ஏனெனில் இந்நிலையில் இரண்டு அம்சங்கள் உள்ளன -- ஜட உடல் மற்றும் அறிகின்ற உணர்வு ஆகிய இரண்டு அம்சங்கள்; இவையிரண்டும் ஒன்றின்மேல் மற்றொன்று சுமத்தப் பட்டுள்ளன. ஜீவ-உணர்வு தன்னை உடலாகக் கருதுவது சுய-உணர்வின் கீழ்ப்படி (கடைநிலை) நிலையாகும், அதற்கு மேலே இன்னும் சில சுய-உணர்வு நிலைகள் உள்ளன. அதாவது சுய-உணர்வு தன்னை மனதாக ('நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்', 'நான் மனத்தளர்வோடு இருக்கிறேன்'), தன்னைப் புத்தியாக ('நான் அறிந்திருக்கிறேன்' 'நான் குழப்பத்திலிருக்கிறேன்'), தன்னை அகங்காரமாகக் ("நான்") கருதுவது. அண்ட-இருப்பான ஈஸ்வரனிலிருந்து தனி இருப்பு தனக்கு உள்ளது என்ற பாவத்துடன் அந்த ஜீவ-உணர்வு அல்லது சுய-உணர்வு கருதும்போது, 'நான் இருக்கிறேன்' (I Am) என்பதே ஜீவாத்மா எனப்படும் தூய ஜீவ-உணர்வின் அல்லது சுய-உணர்வின் அதிமேலாம் நிலை. இந்நிலையில் பிரபஞ்ச (பரமாத்ம) உணர்வானது அவித்யையில் (அறியாமையில்) தனித்தன்மையாகப் பிரதிபலித்துக்கொண்டு, தன் தூய பரமாத்ம சொரூபத்தை மறந்து, எல்லைக்குட்பட்ட பிரதிபலிப்பாக தன் தனித்தன்மையை 'நான்' என்று வலியுறுத்துகிறது. எனவே, 'நான் உடல்', 'நான் மனம்' போன்ற எண்ணங்கள் ஜீவாத்மாவின் சுய-உணர்வின் வெவ்வேறு நிலைகள். ஆனால், சுய-உணர்வு எனப்படும் உள்ளுணர்வின் தூய நிலையில், பிரதிபலிப்பதன்மூலம் தன்னை தனிமைப்படுத்திக் கொண்ட ஜீவ-உணர்வு, தனது ஆரம்ப (உற்பத்தி) இடத்திற்குத் திரும்புகிறது --- அதாவது ஈஸ்வரத்துவ நிலையான அண்ட-உணர்வுக்கு, தூய நிலைக்குத் திரும்புகிறது. இந்நிலையில், உணர்வு, மனம், புத்தி போன்ற சங்கங்கள் அற்று இருப்பதால், அது தூய உணர்வாக இருந்து, தன்னை அவ்வாறே (தூய உணர்வாக) அறிகிறது. இந்நிலையில், எது எதை அறிகிறது; எது அறிவது, எது அறியப்படுவது, என்றெல்லாம் கூறுவது மிகவும் கடினம்; ஏனென்றால், தூய சுய-உணர்வு (பேருணர்வு அல்லது அண்ட-உணர்வு) நிலையில் அறியும் பொருள், அறியப்படும் பொருள் இரண்டும் அஃதே; அறிபவனும், அறியப்படு பொருளும் அஃதே. மொத்த-உணர்வு

தன்னைத் தானே அறிவதாகும். ஏதோ ஒன்று இருக்கிறது, அது "நான் இருக்கிறேன்", (அஹம் அஸ்மி) என்று தன்னைத் தானாக அறிகிறது. இது உலகளாவி இருக்கும் 'இருப்பின்' சுய-உணர்வு அல்லது ஆத்ம-உணர்வு (Self-Consciousness of Universal Being) --- அது இருப்பு-உணர்வு (Being-Consciousness).

உலகப்பொருள்களை நாடி உடலைவிட்டு வெளியேசென்ற ஜீவ-உணர்வு மீண்டும் தன் நிலைக்கே (உடலுக்கே) திரும்பிவந்து தன்னை உணர்வது, ஒரு வகையில் (சீமித்த அர்த்தத்தில்), சுய-உணர்வு. இந்த (வெறும்) ஜீவ-உணர்வு அல்லது சுய-உணர்வு, ஈஸ்வர அல்லது அண்ட உணர்வுக்கு (பரமாத்மாவுக்கு) திரும்புவது, உண்மையான ஆத்ம-உணர்வு, ஆத்மானுபூதி, இறையனுபூதி எனப்படும் --- இவ்விரண்டு நிலைகளிலும் சுய-அறிவேதவிர புற-அறிவு கிடையாது; தானே அதுவாகி, அதுவாக தன்னை அறிகிறது --- தன்னை, வீடு, மனைவி, உடல், மனம் ஆகியவைகளாகக் கருதிய ஜீவாத்மா அந்த எண்ணங்களை துறந்து, தன்னை பரமாத்மாவின் பிரதிபலிப்பாக உணர்கிறது. (இது ஜீவனின் தூய-உணர்வு); பின்னர், அந்தப் பிரதிபலிப்பான வெறும் ஜீவாத்ம நிலையிலிருந்து, அதன் மூலமான பரமாத்மாவிடம் திரும்பிவந்து, பரமாத்மாகவே இருந்து, உணர்ந்து, அறிகிறது. இதுவே ஆத்மானுபூதி, அல்லது இறையனுபூதி.

இங்கு, "ஒன்று உண்மையில் மற்றொன்று ஆக முடியுமா?" என்று ஒரு கேள்வி எழுப்பப்படலாம். உண்மையில் ஒன்று மற்றொன்றாக ஆகிவிட (இருக்க) இயலாதுதான்; ஆனால், ஒன்று தன்னைத் தவறாக வேறொன்றாக கற்பனைசெய்து கொண்டு அதுவாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறது, அது அந்தத் தவறான கற்பனையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளலாம்தானே! தவறான கற்பனையைத் துறந்து, அது உண்மையில் எதுவாக இருந்ததோ அதுவாகவே திரும்பவும் ஆகி, அதுவாக இருக்கிறது. இதை ஆத்மானுபூதி என்கிறோம். (அதற்காகவே "*அஹம் பிரம்ம அஸ்மி*" தியானம் செய்யப்படுகிறது).

எப்படி ஜீவன் ஈஸ்வரனாகி (இறைவனாகி), ஈஸ்வரனை (இறைவனை) அறிகிறான்? ஒவ்வொரு ஜீவனிலும் (மனிதனிலும்) ஈஸ்வர அம்சம் உள்ளது. எப்போது மனிதன் தன் (உடற்கூறுகளுடனான/ மனிதத்திறன்களுடனான) மனிதத்தன்மையைத் துறக்கிறானோ, அப்போது தனித்து நிற்கும் இறை-அம்சம், தன்னை அதுவாகவே (இறைவனாகவே) உணர்கிறது. எனவே, இறைவன் இறைவனை உணர்தல்/அடைதல், மனிதன் இறைவனை அடைதலல்ல. ஒரு பொருள் மற்றொரு பொருளை எப்படி அடைய

இயலும்? மனிதன் மனிதனாகவே இருந்து எப்படி இறைவனை அடைய இயலும்? அதனால்தான், இது இறைவனை அடை(றி)தல் (இறையனுபூதி), ஆத்மனை அடை(றி)தல் (ஆத்மானுபூதி), *சாக்ஷாத்காரம்* (தன்னைத் தானே அறிதல்) என்று அழைக்கப்படுகிறது; மனித-அநுபூதி என்று அழைக்கப்படுவதில்லை. இது இறை-அநுபவம், மனித-அநுபவம் அல்ல.

வேதாந்த வழிமுறையான *நேதி, நேதி* கோட்பாடு மற்றும் *அஹம் பிரம்ம அஸ்மி பாவனை*யுடன் கூடிய *அபேத பிரம்ம சிந்தனை* : உலகளாவிய (எல்லையற்ற) தன்மையையுடைய தூய-உணர்வு, தன்னை (அறியாமையில்) வரையறைப்படுத்திக் கொண்டு, மனம்-புத்தியோடு சேர்ந்து வெளிப்படும்போது, புலன்கள்-உடல் துணைகொண்டு உலகுடன் தன்னை சம்பந்தப்படுத்திக் கொள்கிறது. அவ்வாறான மதிமயக்க நிலையிலுள்ள ஜீவன் தன்னை உடல், புலன்கள் மற்றும் மனமென்று கருதுகிறது. பின்னர், குரு சன்னியாச தீக்ஷை கொடுத்து, மகாவாக்கிய உபதேசத்தை சீடனுக்குத் தந்து, அவனை *'அஹம் பிரம்ம அஸ்மி'* என்று தியானிக்க அறிவுறுத்துகிறார், அப்போது உணர்வானது தன் உண்மை இயல்பிற்கு விழித்தெழுகிறது. அந்நிலையில், ஆத்ம தியான நடைமுறை ஆரம்பிக்கப்படுகிறது. இதுவரை, ஜீவன் தன்னை உடலாக நினைத்து, 'நான் இவ்வுடல்', 'என் பெயர் இது', 'என் பெயர் அது', 'நான் உயரமானவன்', என்றெல்லாம் கருதி வந்தது; இப்பொழுது, இவ்வுடல் ஜடமானது என்றும், இந்த ஜடமான உடலிருந்து தான் வேறானவன் என்றும் தெளிவாக அறிகிறது. பிறகு, "(நான்) இது (உடல்) அல்ல" (*'நேதி'*) என்று நிச்சயமாக உணர்கிறது. அதேசமயம், குரு உபதேசித்தபடி, "நான் பிரம்மன்" ('அஹம் பிரம்ம அஸ்மி') என்று தன் உண்மை சொரூபத்தில் நிலை பெற உறுதியாய் செயல்படுகிறது. அதேபோல, '(நான்) இது அல்ல', '(நான்) இது அல்ல' என்ற 'நேதி' 'நேதி' முறைக்கோட்பாட்டை உபயோகித்து, புலன்கள், மனம், புத்தி, அகங்காரம், அவித்யை ஆகிய ஒவ்வொன்றிலிருந்தும் தன்னைப் படிப்படியே விலக்கிக் கொள்கிறது. இவ்வாறாக, ஜீவ உணர்வானது தன்னைக் கட்டுப்படுத்தும் இணைப்புக் கருவிகளிலிருந்து தன்னைப் பூரணமாக விடுவித்துக்கொண்டு, கடைசியாகத் தன்னிலேயே இருக்கும்பொழுது, (எல்லா உறவுகளிலிருந்தும் விலகித் தனியாக இருக்கும்பொழுது), *உணர்வு உணர்வாகவே இருக்கிறது*; அது தன்னைத்தானே உணர்கிறது; 'நான் விழிப்புணர்வு' என்று அநுபவிக்கிறது --- "நான் பிரம்மன்" - 'அஹம் பிரம்ம அஸ்மி' என்ற உண்மையை உணர்ந்து அனுபவிக்கிறது.

'அஹம் பிரம்ம அஸ்மி' -- 'நான் பிரம்மம்' -- என்கிற தியானத்தில், 'நான்' ஒன்று, 'பிரம்மன்' மற்றொன்று என்று இரண்டு பொருள்கள் இல்லை; 'நான்' என்ற ஒன்று, 'பிரம்மன்' எனப்படும் மற்றொரு பொருளாகத் தன்னைச் சொல்வதோ, கருதுவதோ இல்லை. 'நான் தான் பிரம்மன்' என்று ஜீவாத்மாவின் அகங்காரம் வலியுறுத்திக் கூறுவதுமில்லை. (அறியாமையால்) உடலுறுப்பு-களுடனான 'உபாதி'களில் வரையறுக்கும்போது, பிரம்மனே ஜீவன் என்ற பெயரைப் பெறுகிறது. அப்படி அறியாமையின் பிடியிலுள்ள வரையறைக்குட்பட்ட ஜீவாத்மா 'நான் பிரம்மம்' என்று கருதுவதுமில்லை; ஆனால், உண்மையில், பிரம்மமே 'நான் பிரம்மன்' என்று உணர்கிறது. எது உளதோ (பிரம்மம்) அது 'நான் நானே' என்று உணர்ந்து, அவ்வாறே அநுபவிக்கிறது. எது உள்ளதோ அது 'நான்' என்று அறிந்து, உணர்கிறது. இது கடவுளின் "நான் இருக்கிறேன்" (*அஹம் அஸ்மி*) என்கிற சுய-விழிப்புணர்வு. (இன்னொரு கோணத்தில் கூறுவதானால், தன்னைத் தவறுதலாக ஜீவன் என்று கருதிய பிரம்மம், அத்தவறை விட்டுவிட்டு, தன் சுய-விழிப்புணர்வில் 'நான் பிரம்மம்' என்று நிலைத்து நிற்கிறது.)

உதாரணமாக, கிருஷ்ணன் என்பவரைப் பார்த்து 'நீங்கள் யார்?' என்று கேட்டால், 'நான் கிருஷ்ணன்' என்று அவர் சொல்வார். ஆனால், அவர் தனக்குத் தானே 'நான் கிருஷ்ணன்' என்று சொல்லிக்கொள்ள மாட்டார்; பதிலாக, 'நான்' (அ) 'நான் இருக்கிறேன்' என்று மட்டும்தான் நினைப்பார். அதேபோல், குரு சீடனுக்கு தீக்ஷை கொடுத்து, "*தத் த்வம் அஸி*" ('நீ அது') என்று உபதேசத்தை தரும்போது, சீடன் *'அஹம் பிரம்ம அஸ்மி'* ('நான் பிரம்மம்') என்று சொல்கிறான்; பின்னரும் அவ்வாறே தன் தியானத்திலும் நான் பிரம்மம்' என்று அறிவுறுத்திக் கொண்டு, --- உடல், மனம், புத்தி, போன்ற ஒவ்வொரு உறுப்புகளையும், *'நேதி நேதி'* கோட்பாட்டை கடைப்பிடித்து, அது தானல்ல, தானல்ல என்று கூறி ஒதுக்கித் தள்ளுகிறான். இறுதியில், தீவிரமாக நெடுங்காலம் அனுசரிக்கப்பட்ட தியானத்தின் விளைவு மற்றும் இறை-கிருபையால் சமாதிநிலை அடையப்படுகிறது, சுய-விழிப்புணர்வு அதில் நிலைபெறுகிறது, ஜீவன் ஆன்ம விடுதலை எனப்படும் முக்திநிலையை அடைகிறது. அவ்வாறு விடுதலை அடைந்த ஜீவன் தன்னிலேயே நிலை பெற்று, 'அஹமஸ்மி' ("நான் இருக்கிறேன்") என்று தன்னை அறிகிறது.

முக்தி (இறையனுபூதி) என்பது ஒருவன் இறந்த பின்னர்தான் அடையவேண்டும் என்கிற கட்டாயம் எதுவும் இல்லை; இவ்வுடலில் வாழ்ந்து கொண்டிருக்கும் இப்பொழுதேகூட அடையக்கூடிய ஒரு அநுபவம் (உணர்வின் நிலை) அது. இத்தகைய நிலையையே "ஜீவன்

முக்தி" என்றழைக்கின்றனர்; இந்நிலையை மகான்கள் அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர், அருணகிரிநாதர், ஸ்வாமி சிவானந்தர் போன்ற மற்றும் பல அருட்செல்வர்கள் அடைந்து ஜீவன்முக்தர்களாக வாழ்ந்து காட்டியுள்ளனர். இங்கேயே முக்தி பெற முடியும், ஏனெனில் இறைவன் சர்வ-வியாபி, எங்குமுள்ளவர்; எங்கோ ஏழாவது சொர்க்கத்தில் (அல்லது ஏதோவொரு குறிப்பிட்ட இடத்தில்) மட்டும் இருப்பவரல்ல; அவ்வாறு இருந்தால் ஒருவன் இறந்த பின்னரே அங்கு சென்று அவரை அடைந்திட இயலும். இறைவன் உலகளாவிய உண்மை, எங்கும் நிறைந்திருப்பவர் (சர்வ-வியாபி), எல்லாம் அறிந்தவர். அவர் எங்குமிருப்பதால் அவரை இங்கும் அடைய இயலும்தானே. இறைவனை 'இங்கு' அடைய முடியாதென்றால், 'அங்கும்' முடியாதுதானே. இறைவன் வேறொரு இடத்தில் இருக்கிறாரென்றால், இங்கும் இருந்து தானே ஆக வேண்டும்; அவ்வாறில்லையென்றால் அவர் இறைவனாகவே --- நித்தியமான மற்றும் எங்கும் நிறைந்த இறைவனாக --- இருக்கமுடியதல்லவா? மற்ற எல்லா பொருட்களையும் போல அவரும் ஒரு பொருளாகி விடுவார். அவ்விறைவன் எவ்வளவுதான் பெரியவராக, மேன்மை உடையவராக, புகழ் கொண்டவராக இருந்தாலும் சரி, அவரும் மற்ற அனைத்துப் பொருட்களையும்போல வரம்புக்கு உட்பட்டவராகி விடுவார். எனவே, முக்தியை இங்கேயே இப்பொழுதே அடையலாம். இது ஜீவன்முக்தி என்று அழைக்கப்படுகிறது. இந்த ஜீவன்முக்தி நிலைதான் இச்செய்யுளில் அருளப்பட்டது --- அதற்கு 'நெறி' மற்றும் 'தனிவேல்' என்ற சொற்கள் கையாளப்பட்டுள்ளன.

'கந்தர் அநுபூதி' என்ற இந்நூலில், 'நெறி' என்ற சொல்லை அருணகிரிநாதர் இரண்டு செய்யுள்களில் மட்டுமே (செய்யுள் 21 மற்றும் 42) பயன்படுத்தியுள்ளார். செய்யுள் 21ல், முக்தியை அடைய இறைவனின் திருப்பாதங்களை அருளுமாறு பிரார்த்தனை செய்யப்படுகிறது, செய்யுள் 42ல், முக்தி அளிக்கப்படுகிறது.

இச்செய்யுளை அருணகிரியார் பூர்த்தி செய்யும்விதம் அவருடைய தேர்ச்சித்திறமிக்க திறமையை நன்கு புலன் படுத்துகிறது : "நெறியைத் தனிவேலை *நிகழ்த்திடலும்*, செறிவற்று உலகோடு உரை சிந்தையுமற்று அறிவற்று *அறியாமையும் அற்றதுவே*." --- "எனக்கு 'நெறி', 'தனிவேல்' (முக்தி) அருளப்பட்ட *அத்தருணத்திலேயே*, மக்களுடனும் உலகத்துடனுமான அனைத்து உறவுகளும் அறுபட்டு, பேச்சும் மனமும் அறவே நின்று, புத்தியும் அற்று, அறியாமையும் அற்றுப் போயின." இவையனைத்தும் ஒருசேர அற்றுப்போவது, மிகவும் குறிப்பாக அறியாமை அழிவது, எப்பொழுது என்றால், ஜீவன் இறைவனை அடைந்த *அத்தருணத்தில்தான்*

(அதாவது ஜீவன் ஆத்மானுபூதி பெற்றவுடன்). முக்தி, நெறி, வேல், ஆத்மானுபூதி, இறையனுபூதி --- இவையெல்லாம் ஒன்றே. எனவே, நெறி அல்லது வேல் நிகழ்த்தப்பட்டவுடன் ((முக்தி அடைந்த *அத்தருணத்திலேயே)* அவித்யை (அறியாமை) அழிந்துவிட்டது. எனவே, இச்செய்யுள், சிலர் நினைப்பதுபோல், தியானத்தைச் செய்யும் முறையைப் பற்றிய அறிவுரை அல்ல; ஏனெனில், அறிவுரை கொடுத்த *அத்தருணத்திலேயே* ஒருவனுடைய அறியாமை அற்றுப் போய்விடாது, அதை செயல்படுத்தவேண்டும். எனவே, இச்செய்யுள், எதோ ஒரு குறிக்கோளை அடைவதற்குச் செய்யவேண்டிய சாதனை பற்றிய அறிவுரையன்று; ஆனால், குறிக்கோளை ((முக்தி) *அடைந்ததை* அறிவிக்கிறது. முந்தைய இருசெய்யுள்களில் கூறப்பட்ட (செய்யுள்-40 *ஞான* மார்க்கம், செய்யுள்-41 *பக்தி* மார்க்கம்) வழிகளை நடைமுறைப்படுத்தியதின் பலனாக இப்பொழுது (இச்செய்யுளில்) குறிக்கோளானது **"அடையப்பட்டது"** அறிவிக்கப்படுகிறது.

==========

செய்யுள் - 43

==========

தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினது அன்பருளால்
ஆசா நிகளம் துகளாயின பின்
பேசா அநுபூதி பிறந்ததுவே.

பொழிப்புரை: "ஓ முருகப் பெருமானே! தூய இரத்தின மணி மாலைகளும் (மணி பொருத்தப்பட்ட ஆபரணங்களும்) தூய ஆடையும் அணியும் வள்ளியின் நேசரே! (அல்லது) வள்ளியை நேசிப்பவரே! உங்களது அன்பு-அருளால் எனது ஆசை சங்கிலி தூள் தூளாகிப் போயிற்று (அழிந்தது), பின் பேசா-அநுபூதி (மகா-மௌனமான அநுபூதி நிலை) பிறந்தது. (அடியேனுக்குக் கிடைக்கப் பெற்றது)."

விளக்கவுரை

சமாதி நிலை (வேல்), இறை-அநுபவம் முந்தைய செய்யுளில் அடையப்பட்டது. அந்த சமாதி நிலையில் அந்த சன்னியாச-சீடன் உணர்ந்த அனுபவத்தை இச்செய்யுளில் நேர்முறை வார்த்தைகளில் விவரிக்கிறான். எனவே, இது 'இறந்த காலத்தில்' கூறப்பட்டுள்ளது.

சாதாரணமாக, வேடுவக்குல மங்கையர்களின் ஆடைகள் அவ்வளவாக தூய்மையாயிருக்காது. ஆனால், தூய ஆடை-ஆபரணங்களை அணியும் வள்ளியின் நேசன் முருகப் பெருமான் என்று இச்செய்யுளில் குறிப்பிடப்படுகிறது. இதில் பொதிந்துள்ள கருத்து: ஆன்மீக சாதனையின் தொடக்க காலத்தில், ரஜோ மற்றும் தமோ குணங்கள் நிறைந்து அசுத்தமாயிருந்த சாதகன், நெடுங்காலம் சாதனைகள் செய்து, சன்னியாச தீட்சையும் பெற்று, '*அஹம் பிரம்ம அஸ்மி*' ("நான் பிரம்மம்") என்று ஆழ்ந்த தியானம் செய்த பின்னர், பூரணத் தூய்மையடைந்து ஸத்துவ குணம் நிரம்பப்பெறுகிறான். அந்நிலையில் அவன் இறைவனின் கிருபையை முழு அளவில் பெறுவதற்கு முடிகிறது. அத்தகைய நிலையை 'அன்பருள்' (அன்பு + அருள்) என்ற ஒரு புதுமையான வார்த்தையால் குறிப்பிடுகிறார் அருணகிரியார்.

'**அன்பருள்**' (**அன்பு + அருள்**): *'அன்பு'* என்றால் இறைவன்பால் காட்டப்படும் நேசம்/பக்தி; அதில், பிரார்த்தனை, ஆர்வம், முயற்சி,

மற்றும் சரணடைதல் போன்றவை அடங்கியுள்ளன. இவ்விதங்களில் அன்பு அல்லது பக்தி வெளிப்படுத்தப்படுகின்றது. (அதாவது, பிரார்த்தனை மற்றும் சரணடைதல் மூலமாக இறைவனை அடைந்திட ஜீவன் முயற்சி செய்கிறது.) *'அருள்'* என்றால் கிருபை; ஜீவன் தன்பால் செலுத்தும் அன்பை ஏற்று, நெகிழ்ந்து அவன் மேல் இறைவன் காட்டும் பதில் உணர்வு. சாதனை அல்லது ஆன்மீகப் பயிற்சி என்பது ஒரு தொடர் போராட்டம். இச்சாதனையின் துவக்கத்திலிருந்தே தடைகளும், தடங்கல்களும் மீண்டும் மீண்டும் அதிக வீரியத்துடன் சாதகனிடம் வந்து கொண்டே இருந்ததையும், அவற்றை வெல்வதற்குப் பிரார்த்தனையை தீவிரமாக்கிக் கொண்டு, மேன்மேலும் சரணாகதியை அவன் அதிகமாக்கிக் கொண்டே போனதையும், அதனால் இறை-கிருபையானது அவன்பால் மேன்மேலும் ஈர்க்கப்பட்டதையும் பார்த்தோம். இவ்வாறு அவன் ஆன்மீகத்தில் முன்னேற்ற-மடையும்போது, இந்த 'தெய்வீக-தேடல்' வட்டம், --- பிரச்சினைகள்/தடைகள் --- அன்பு/ பிரார்த்தனை/ சரணாகதி --- கிருபை/ஆசி என்பவை தொடர்ச்சியாக மாறிமாறி நடந்துகொண்டே இருந்ததையும் பார்த்தோம். இது *'அன்பு-அருளின்'* மர்மம் நிறைந்த ஒரு தெய்வீக விளையாட்டு. இதில் 'அன்பு', 'அருள்' ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று பின்னிய-செயல்-விளைவை உண்டுபண்ணி, தங்கள் பரஸ்பரத் தொடர்பை தீவிரப்படுத்துகின்றன. இவ்வாறு தொடரப்பட்டு, ஜீவ-அன்பும் சரணாகதியும் பூரணநிலையை எய்தும் அதே சமயம், இறை-கிருபையின் பொழிவும் துரிதமடைகிறது; அப்போது, அதன் உச்சகட்டமானது எட்டப்படுகிறது. அந்த உச்ச கட்டத்தில் 'அன்பு' மற்றும் 'அருள்' ஆகிய இரண்டும் ஒருங்கிணைகின்றன. அதனால் அங்கு பிரகாசம் (ஜோதி) வெளிப்படுகிறது, ஆத்மானுபூதி 'நிகழ்'கிறது {எப்படி நேர்மறை மற்றும் எதிர்மறை (கம்பிகள்) ஒன்றுசேரும்போது, (மின்) வெளிச்சம் வருகிறதோ அப்படியே}. அவ்வெளிச்சம் அறியாமையெனும் (அவித்யை) இருளை அகற்றுவதோடல்லாமல், அதன் விளைவான ஆசைகளின் தீய சங்கிலியையும் (அவித்யை -- காமம் -- கர்மம்) அறுத்து தூள்தூளாக்குகிறது. 'அன்பு' 'அருள்' ---- இவ்விரண்டும் சங்கமமாவது *'அன்பருள்'* என்று குறிப்பிடப்படுகிறது, அதனால் அவித்யை -- ஆசை -- கர்மம் ஆகியவைகள் உருவாக்கிய தீய சங்கிலித் தொடர் அறுக்கப்பட்டு அழிக்கப்பட்டன (**"ஆசா நிகளம் துகளாயின"**), அதன் விளைவாக (**"பின்"**) "**பேசா அநுபூதி பிறந்தது**", அதாவது நிர்விகல்பக சமாதி எனப்படும் 'பூரண அமைதி' ((அவனில் நிரந்தர அமைதி) குடிகொண்டது.

இதைத்தவிர, இந்த 'அன்பருள்' என்பதற்கு இன்னொரு மகத்துவமும் உள்ளது. இந்த *அன்பு* எனப்படும் ஜீவ-முயற்சியே *'அருள்'* அல்லது இறை-கிருபையின் வெளிப்பாடுதான். (இறைவனே

ஜீவனின் அகங்காரத்தின் மூலம் செயல்படுவது --- "அவன் அருளால் அவன் தாள் வணங்கி".) ஆனால், சாதனையின் துவக்க கால கட்டங்களில் ஜீவனின் (மனத்) தூய்மை போதிய அளவு இல்லாமையால், அவனால் இதை உணர முடிவதில்லை; அதனால், தானே (சாதனை செய்வதன் மூலம்) பெரு முயற்சி எடுத்து வருவதாகக் கருதுகிறான். பின்னர், சாதனையில் முன்னேற்றம் பெறப்பெற, அகங்காரமானது மெலிவடைகிறது (மனம் தூய்மை பெறுகிறது). அந்நிலையில் தனது முயற்சியெல்லாம் இறைவனது கிருபையால் செய்யப்பட்டதே என்பதை சாதகன் உணர ஆரம்பிக்கிறான். அவன் எப்போது ரஜோ குணம் மற்றும் தமோ குணங்களின் பிடியிலிருந்து முழுவதுமாக விடுபடுகிறானோ (பூரண மனத்தூய்மை பெறுகிறானோ), அப்போது இதுகாறும் இறைவனின் கிருபையே தன்னில் வேலை செய்து வந்திருக்கிறது என்று உணர்கிறான். தனது சுய-முயற்சி என்று தான் இதுவரை நினைத்து வந்ததெல்லாம், அகங்காரத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட இறை-கிருபையே என்று உணர்கிறான். இறுதியில், *அன்பும்* (சுய-முயற்சியும்) *அருளும்* (கிருபையும்) ஒன்றாக இணையும்போது, அங்கு ஜோதி (பிரகாசம்) வெளிப்படுகிறது, *பேசா-அநுபூதி* பிறக்கிறது. எனவே, ஆன்மீக வாழ்க்கை முழுவதுமே இறை-கிருபையின் விளையாட்டைத் தவிர வேறொன்றுமில்லை; *அன்பும் அருளும்* ஆகிய இரண்டும் இறைவனுடையதுதான். எனவேதான், அருணகிரியார் '***நினது*** அன்பருளால்' என்று சொல்கிறார். அருள் மட்டும் அவருடையதல்ல; அன்பும் அவருடையதுதான். நாம் 'கந்தர் அநுபூதி' முழுநூலையும் உன்னிப்பாகப் படிப்போமானால், நூலின் தொடக்கத்திலிருந்தே, அதாவது காப்பு மற்றும் முதல் செய்யுளிலிருந்தே, நூலின் முடிவுவரை, 'அருள்' என்ற சொல் பலமுறை பயன்படுத்தப் பட்டிருப்பதைக் காணலாம் – அதாவது, இந்நூலானது இறை-கிருபையைத் தந்தருளுமாறு வேண்டும் பிரார்த்தனையுடன் தொடங்குகிறது – ஆன்மீக சாதனை இறையருளுடன் தொடங்கப்படுகிறது. பின்னர், 'அருள்' எனும் சொல் நூல் முழுவதும் அங்கங்கே வருகிறது, சாதகனுக்கு உண்டாகும் இடையூறுகளிலிருந்து அவனை விடுதலை செய்ய ; இறுதியாகக் கடைசிச் செய்யுள் 'அருள்' எனும் சொல்லுடன், எல்லோருக்கும் அருள் புரியுமாறு பிரார்த்தித்து முடிவடைகிறது. இதிலிருந்து தெரிவது என்னவென்றால்: *அனுபூதி* அல்லது *சாக்ஷாத்காரம்* என்பது சாதனையின் தொடக்கத்திலிருந்து அனுபூதி அடையும்வரை எல்லாம் இறை-அருள் படிப்படியாக விரிவடைந்து வெளிப்படுதலே ஆகும். எனவே, நாம், "அவன் அருளால் அவன் தாள் வணங்கி, அவன் அருளால் அவனை அடையப் பெற்றேன்" என்று சொல்லலாம். — "இறை

கிருபையால்தான் நாம் இறைவனின் பாத கமலங்களை வழிபடத் துவங்குகிறோம், மேலும் இறை-கருணையால்தான் நாம் இறைவனை ((முக்தி) அடைகிறோம்." இறைவன் வேறு, அவன் அருள் வேறு அல்ல; இறைவனே அருள்தான், அருளே இறைவன் ---- கந்தன் கருணைக்கடல், கிருபாகரன், கருணாமூர்த்தி. எனவே, நாம் இவ்வாறு கூறலாம்: 'கந்தர் அநுபூதி' = 'அருள் அநுபூதி' – கடவுள் அநுபவம், அருள் அநுபவமே.

அருணகிரியார் 'கந்தர் அநுபூதி' எனப்படும் இந்நூலை முருகப் பெருமான் அவருக்குக் கட்டளையிட்டபடி 'திருத்துருத்தி' என்ற ஊரில் அளித்ததற்கான சாத்தியக் கூறுகள் உள. "மலைக் கனத்தென மார்பினி லேயிரு" என்று தொடங்கும் திருப்புகழ்-இல் அருணகிரியார் பின்வருமாறு சொல்கிறார்:

"அடைக் கலப்பொரு ளாமென நாயெனை
அழைத்து, முத்திய தாமநு பூதியெ
னருட்டி ருப்புக ழோதுக வேல்மயி லருள்வோனே."

""அடைக்கலம் (சரணம்) கொடுக்கப்பட்டவன் எவ்விதம் காப்பாற்றப் படுவானோ, அவ்விதம் நாயனைய அடியேனை அன்புடன் அருகில் அழைத்து, (எனது இரு தோள்களிலும் எனைக் காக்கும் கவசமாக) வேற்பொறி மயிற்பொறி இட்டு, "எனது அருளும் எனது தெய்விக புகழும் (திரு+புகழ்) நிறைந்த முத்தியாகிய (அல்லது முத்தியைத் தரவல்ல) கந்தர் அநுபூதியை ஓதுக" எனத் திருவாய் மலர்ந்தருளியவனே!""

(குறிப்பு: முத்தியைத் தரவல்லது கந்தர் அநுபூதி. எனவே அருணகிரிநாதப் பெருமான் கந்தர் அநுபூதியையே முத்தி என்று கூறுகின்றார்.)

{இதைப்பற்றி விரிவான விவரங்களுக்கு 'அறுமுகனருளால் பாவி ஞானியாக மாறிய அருணகிரிநாதரின் அற்புத சரிதம்' என்ற எனது நூலில் 'திருத்தல யாத்திரை' என்ற பகுதியைக் காணவும்}.

"நினது அன்பருளால் ஆசா நிகளம் துகளாயின": — அவித்யை (அறியாமை) -- காமம் (ஆசை) -- கர்மம் (செயல்) ஆகிய இம்மூன்றும் ஆசைச்சங்கிலியின் (ஆசா நிகளம்) வளையங்கள். அவை இதய முடிச்சுகள் ('*ஹிருதய கிரந்தி*') என்றழைக்கப்படுகின்றன. ஆத்மா/ இறைவன் பற்றிய உண்மை அறிவு இல்லாமையும் (அறியாமை), (உலகப்) பொருள்களின் ஏமாற்றும் இயல்புபற்றிய புரிதல் இல்லாமையும் (அறியாமையும்) சேர்ந்து (உலகப்) பொருள்களின்

மேல் ஆசைகளை உண்டுபண்ணுகின்றன. இந்த ஆசைகள், பொருள்களைச் சேகரித்து, அநுபவித்து இன்பம்பெற (To possess and enjoy) ஒருவனை கர்மங்களைச் செய்யத் தூண்டுகின்றன. இவ்வாறு ஆசையினால் தூண்டப்பட்டு செய்யப்பட்ட செயல்கள் மற்றும் அதன் விளைவுகள், பலன்கள் (அ) எதிர்வினையைத் தருகின்றன. இந்த விளைவுகள் 'கர்ம பலன்கள்' எனப்படுகிறது, இவை அறியாமையை மேலும் பலப்படுத்துகின்றன. இவ்வாறான அறியாமை -- ஆசை -- கர்மம் எனப்படும் முடிவற்ற சங்கிலித் தொடர், அன்பு-அருளிலிருந்து உண்டாகும் ஞான ஒளியால் (அ) மெய்யறிவால் அழிக்கப்படுகிறது. இவ்வாறாக, ஆசை-சங்கிலி அன்பருளால் அழிபடும்போது, ஜீவன் எல்லையற்ற பேருணர்வில் கரைந்து, 'பேசா அநுபூதி' பிறக்கிறது, பேரமைதி நிலவுகிறது. மனிதன் இறைவனில் ஐக்கியமடைந்து, இறை-மனிதனாக வெளிப்படுகிறான்; ஜீவன், ஜிவன்-முக்த புருஷனாகிறான். அத்தகைய உயர்ந்த நிலை அடுத்த செய்யுளில் விளக்கமாக சித்தரிக்கப்படுகிறது. இந்நூலின் உச்சகட்டம் 42, 43, மற்றும் 44வது செய்யுள்களில் அடையப்படுவதால், இவை மிகவும் கிளர்ச்சியூட்டுவனவாயும் சிலிர்ப்பூட்டுவனவாயும் உள்ளன.

சாதகனின் முழுதும் தூய்மையான இதயத்தில் இறைவனை அடைய வேண்டும் என்ற தீவிர ஏக்கமும் (முமுக்ஷுத்வம்) எழும்பும்போது, இறை-கிருபை ஈர்க்கப்படுகிறது; இவையிரண்டின் சேர்க்கையால், ஆசை-நிகளம் (அறியாமை) அழிபட்டு, ஆங்கு 'பேசா அநுபூதி' மலர்கிறது, (இறை-அநுபவம் 'நிகழ்'கிறது).

சாதனையின் தொடக்கத்தில் அடையவேண்டுமென்று பிரார்த்தனை செய்யப்பட்ட அந்த மிகப்பெரிய குறிக்கோளான 'எல்லாமற என்னை இழந்த நலம்' (செய்யுள்- 2), அதை அடைந்திடும் பெருமுயற்சியில் இவ்வளவு சோதனைகளும் துன்பங்களும் தொடர்ந்து (அச்சாதகனால்) எதிர்கொள்ளப்பட்டு, கடைசியாக இப்பொழுது அடையப்பட்டுவிட்டது.

'பேசா அநுபூதி' அருளப்பெற்ற மகான்கள் சமாதி நிலையிலேயே எப்பொழுதும் ஆழ்ந்திருந்து, அதிலிருந்து வெளிவராமல் இருப்பதென்பது மிகவும் அரிது. அவர்கள் சமாதிநிலையிலிருந்து வெளிவந்து லோக-சங்கிரஹத்தில் (உலகின் ஒற்றுமைக்காக இரக்கத்துடன் செய்யப்படும் பொதுச் செயல்கள்) தங்களை ஈடுபடுத்திக் கொள்வதென்பது வழக்கமாக நடைபெறும் விஷயம். அவர்களின் உள்ளத்தில் இறை-விழிப்புணர்வானது நிலைபெற்று இருப்பதால், அவர்கள் ஆனந்தத்தையும் அன்பு-களிப்பு முதலியவற்றையும் பரவச்செய்கின்றனர்; உலகில் நடமாடும்

இறைவன் என்று அவர்கள் கருதப்படுகின்றனர், அவர்களின் செயல்கள் இறைவனின் செயல்களாகவே கருதப்படுகின்றன. அத்தகைய மகாத்மாக்களுடன் (அருளாளர்களுடன்) ஸத்-சங்கத்திலிருப்பது, அவர்களுக்கு சேவை செய்திடும் வாய்ப்பை பெறுவது, அவர்கள் உபதேசங்களைக் கேட்பது, அவர்களின் வழிகாட்டுதலைப் பெறுவது ஆகியவை கிடைக்கப்பெறுவது உண்மையில் ஓர் அபூர்வமான தனிச்சலுகை எனலாம். எப்படி சாதனையின் தொடக்கத்தில் இறைவன் குருவாக வந்து அச்சாதகனுக்கு வழிகாட்டி அருளினாரோ; அப்படியே, இறை-அனுபவம் பெற்று ஜீவன்முக்தனான சாதகன், தனது பங்கிற்கு, மற்ற சாதகர்களுக்கு குருவாகி அவர்களுக்கு வழிகாட்டச் செய்கிறார். எனவே, இச்செய்யுளுடன் 'கந்தர் அநுபூதி' நூல் முடிவு அடைந்ததுவிடுகிறது என்று சிலர் கருதுவதுபோல நினைப்பது சரியன்று. ஆன்ம விடுதலையைப் பெற்று சாத்யனாகிவிட்ட ஞானிகள், அங்குமிங்கும் சுதந்திரமாகத் திரிந்து, ஆன்மீகப் பசிகொண்ட ஜீவர்களுக்கு அவரவர்களின் நிலைக்கும் தேவைக்கும் ஏற்ற உணவை வழங்குகின்றனர்; செய்யுள் 45லிருந்து தொடங்கி அதன்பின்வரும் செய்யுள்கள் அனைத்தும் இத்தகைய வகையைச் சார்ந்தவை. எனவே அவை அனைத்தும் தனித்தன்மை கொண்டவை, அதே சமயம் இயல்பில் பலவிதமாக அமைந்துள்ளன. ஆகையால், ஆன்மிக விடுதலை பெற விழையும் சாதகர்களுக்கு வழிகாட்ட அநுபூதி அடைந்த மகான்கள் (குருமார்கள்) உலகத்தில் ஒரு பொழுதும் இல்லாமல் போவதில்லை.

இது ஒரு மிக அழகானதும் அருமையானதுமான செய்யுள்; ஏனெனில் இதில் அருணகிரியார் சாதனையின் முழுமையான செயல்பாட்டுமுறை மற்றும் குறிக்கோளை அடைவது பற்றி ரத்தினச் சுருக்கமாக விளக்குகிறார். ஒவ்வொரு செய்யுளிலும் முருகப் பெருமான் அந்தந்தச் செய்யுளில் சொல்லப்படும் முக்கிய கருத்திற்குப் பொருத்தமான, அர்த்தம்கொண்ட சொற்களால் விளிக்கப்படுகிறார். அதனால் தான் இச்செய்யுளில் தூய ஆபரணங்களையும் ஆடைகளையும் அணியும் வள்ளியின் நேசனே என்று அவர் அழைக்கப்படுகிறார்.

எதனால் பெருமான் வள்ளியின் நேசன்? அல்லது, அவளிடம் இருந்த எந்த விஷயத்தினால் பெருமான் கவரப்பட்டு, அவளை நேசிப்பவரானார்? அவளுடைய செல்வங்களா, அவளுடைய புலமையா, அவளுடைய பிறப்பா, சமூக அந்தஸ்தா – இதில் எது காரணம்? இதில் எதுவுமேயில்லை. அவளுடைய தூய அன்பு மட்டுமே அவரை அவளிடம் கவர்ந்து இழுத்தது. ரிஷி நாரதர் அவளுடைய முந்தைய ஜன்மத்திலிருந்தே அவள் அவர்பால் கொண்டிருந்த முழுஈடுபாட்டை

அவரிடம் சொல்லிய உடனே, அவர் தன் இருப்பிடத்தை விட்டுவிட்டு, அவள் எங்கு தினைப்புனத்தில் பறவைகளை விரட்டிக் கொண்டிருந்தாளோ அந்த வள்ளிமலைக்குச் சென்றார். அவர் அவளுடைய செல்வச் செழிப்பு ஆகியவைகளில் மயக்கம் கொள்ளவில்லை; இவையெல்லாம் பெருமானுக்கு ஒரு பொருட்டில்லை. வள்ளி இறைவன்பால் கொண்ட உயரிய பக்தி, தூய அன்பு மட்டுமே வள்ளிக்குப் பெருமையைச் சேர்த்து, பெருமானையும் அவள்பால் ஈர்த்ததே தவிர, அவளுடைய செல்வமோ (அவள் அணிந்திருந்த ரத்தினம், முத்து ஆகியவை), அல்லது அவள் ஒரு அரசகுமாரி என்ற காரணமோ அல்ல. செல்வம், நிலைமை போன்றவை உலகத்தினரின் பார்வையில் உயர்ந்ததாக இருக்கலாம்; இறைவனின் பார்வையில் அல்ல. ஒருவருடைய மகத்துவத்தை, பெருமையைத் தீர்மானிக்க இறைவன் பயன்படுத்தும் அளவுகோல், உலகத்தார் மற்றும் சமூகம் தீர்ப்பெடுக்க பயன்படுத்தும் அளவுகோலிலிருந்து முற்றிலும் வேறுபட்டது.

உண்மையை சொல்லப்போனால், யார் அடக்கமானவனாக, எளியவனாக, பணிவு உடையவனாக இருந்து, உண்மையிலேயே தன்னைச் 'சிறியவன்' என்று கருதுகிறானோ, அவனே இறைவனின் கணிப்பில் 'உயர்ந்தவன்' ஆகிறான். ஒரு ஜீவனின் உண்மையான, கலப்படமற்ற, ஒருமுகப்படுத்தப்பட்ட, தூய பக்தி மட்டுமே இறைவனின் கவனத்தையும் கிருபையையும் ஈர்க்க முடியும். அவர் அத்தகைய ஜீவர்களுக்கு அன்பானவர் ஆகிறார். இதை, அருணகிரியார் *"தூசா மணியும் துகிலும்* புனையும் வள்ளியின் 'நேசன்'" என்று சொல்வதன்மூலம் வெகு அழகாகவும், அர்த்தச் செறிவுடனும் வெளிப்படுத்துகிறார். இறைவனின் கிருபையை ஈர்த்து, அவரை தன்னுடைய நேசனாக்கிக் கொள்வதற்கு, ஜீவன் அவரிடம் முழுமையான உளமார்ந்த (ஆத்ம) பக்தி கொண்டிருத்தல் மிகமிக அவசியம் என்பதைச் சுட்டிக்காட்டுவதே இவ்வாறு சொல்லப்பட்டதன் முக்கியமான நோக்கம். இறைவன் அன்பு பாராட்டுவதில் பக்தர்கள் அனைவரையும் சமமாகவே பாவிக்கிறார், அவருடைய கிருபையும் அனைவருக்கும் ஒரே அளவிளேயே கிடைக்கிறதென்றாலும், அவர் (மனத்) தூய்மையுடைய ஜீவர்களுக்கு மட்டுமே நேசனாகிறார்.

இறைவன் கிருபாகரனல்லவா, கிருபையின் வடிவமல்லவா? அப்படியெனில், பின் ஏன் வள்ளிக்கு மட்டும், அதாவது மனத் தூய்மை கொண்டவர்களுக்கு மட்டும், தன் கிருபையைப் பொழியவேண்டும்? கிருபை மற்றும் இரக்கத்தில் கடல் போன்றவர் இறைவன் என்பது உண்மைதான். அவரது கிருபை அனைவருக்கும், எப்பொழுதும் கிடைக்கும். ஆனால், இறை-கிருபையை அடைவதற்கும், அதை

அநுபவிப்பதற்கும் தேவையான தகுதி ஒருவரிடம் இருக்க வேண்டுமா இல்லையா என்பதே இங்கு எழும் முக்கியக் கேள்வி. இதற்கான பதிலை ஒரு உதாரணத்தின் மூலம் அறிவோமா? சூரியன் பிரகாசித்துத் தன் வெளிச்சத்தை அனைத்துப் பொருள்களின் மீதும் எவ்வித பாரபட்சமுமில்லாமல் பொழிகிறது. ஆனால், எல்லாப் பொருள்களும் அவ்வொளியை ஒரே மாதிரியாகவா பிரதிபலிக்கிறது? இல்லை. ஒவ்வொரு பொருளும் அதன் பிரதிபலிக்கும் சக்திக்கேற்ப பிரதிபலிக்கிறது. கற்பாறைகள், மரக்கட்டைகள் எவ்வித பிரதிபலிப்பையும் செய்வதில்லை, அதுவே நன்கு மெருகேற்றப்பட்ட பித்தளை, வெள்ளி பாத்திரங்களாயிருந்தால் ஓரளவிற்கு பிரதிபலிக்கின்றன; ஆனால், அதுவே ஒரு தூய (அழுக்கற்ற) முகம் பார்க்கும் கண்ணாடியாக இருந்தால் அது ஒளியை முழுமையாகவும் பிரகாசமாகவும் பிரதிபலிக்கின்றது (அழுக்கான கண்ணாடியானால் இதற்கு நேரெதிரானதாக இருக்கும்தானே). அதுபோலவே, தன் அந்தக்கரணத்தை (மனதை) முழுவதுமாக சுத்தமாக்கிக் கொண்ட ஒரு ஜீவன் இறை-கிருபையை பரிபூரணமாகப் பெற்று மிளிர்கிறது. ஆகையால்தான், இறைவன் அத்தகைய தூய ஜீவர்களின் நேசனாகிறார் என்ற இவ்வுண்மையை அருணகிரியார் *"தூசா மணியும் துகிலும் புனைவாள் நேசா முருகா"* என்று சொல்கிறார்.

இப்போது, இந்த 'அன்பருள்' என்பதை மற்றொரு கோணத்திலும் விளக்கலாம். வள்ளி என்பவள் ஜீவாத்மா. அவள் தூய ஆடைகளை அணிவதென்பது புனிதமடையப்பெற்ற ஜீவன் இறைவனை அடைய உளமார்ந்த அவா கொள்வதைக் குறிக்கும். வள்ளி 'இச்சா-சக்தி' -- சுத்திகரிக்கப்பட்டு மற்றும் உன்னதமாக்கப்பட்ட உணர்ச்சிகள் -- தீவிர தெய்வீக பக்தி, '***அன்பு*** '. அவள் அன்பின் உருவகம். எனவே இந்த '*அன்பு*' என்பது தன் குறிக்கோளை அடைந்திடுவதற்காக அவள் செய்துவந்த மொத்த முயற்சியையும் குறிக்கிறது --- தீவிர சாதனைகள் மூலம் அடையப்பட்ட முழு பரிசுத்தம், இறைவன்பால் பூரண மன ஈடுபாடு, இறைவனை அடையவேண்டும் என்ற உறுதியான தீர்மானம், ஆகிய இவைகளனைத்தையும் பொறுமையாகவும், இடைவிடாதும், மிகுந்த உற்சாகத்துடனும், இறை-கிருபையின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டு, செய்துவந்த முயற்சியைக் குறிக்கிறது. இந்த ஜீவ சுய-முயற்சி ('*அன்பு*'), அதன் தீவிரத்திற்கேற்ப, இறை-கிருபையை (*அருளை*) ஈர்க்கிறது. எவ்வளவுக்கு எவ்வளவு ஜீவன் சுத்தமாயிருக்கிறதோ, இறைவன் பால் அன்பு செலுத்துகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு இறை-கிருபையும் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது, இறைவனும் அந்த ஜீவனின் நேசனாகிறார். இப்படியாக, அன்பினால் ஈர்க்கப்பட்ட இறை-கிருபை,

தன் பங்கிற்கு, அந்த ஜீவன் மேலும் தீவிரமாக முயற்சிகளைச் செய்ய உதவுகிறது, அதன்மூலம் மேலும் கிருபையை அவன்பால் ஈர்க்கிறது. அன்பு, அருளை ஈர்க்கிறது; அருள், அன்பை மேன்மேலும் வளரச்செய்கிறது. இந்த இன்பமயமான செயல்முறையானது சீராகச் சென்று, அதன் உச்ச கட்டத்தை அடையும்போது, அன்பும் அருளும் ஒன்று சேர்ந்து, "அன்பருள்" சம்பவிக்கிறது.

"தூசா மணியும் துகிலும் புனைவாள் நேசா முருகா நினது அன்பருளால் ஆசா நிகளம் துகளாகியின பின் பேசா அநுபூதி பிறந்ததுவே." --- "ஓ முருகப் பெருமானே! தூய அணிகலன்களையும் ஆடைகளையும் அணியும் வள்ளியின் நேசனே! உனது அன்பருளால், ஆசை-சங்கிலி அறுந்தது, பேசா-அநுபூதி பிறந்தது". இந்த 'அன்பருள்' என்பதில் இரகசியமான தாத்பரியம் ஒன்று உள்ளது. ஜீவனின் *அன்பு* (அ) சுய-முயற்சியால் மட்டுமோ அல்லது இறை-கிருபையால் மட்டுமோ ஆசை-சங்கிலி அறுந்து, பேசா-அநுபூதி பிறந்திடாது. ஜீவனின் முயற்சியும் இறைவனின் கிருபையும் ஒன்று சேர்ந்து தோளொடு தோள் நிற்க வேண்டும், இரண்டும் இணைந்து ஒன்றாகவே ஆகி விட வேண்டும், அப்பொழுதுதான் ஆசை-சங்கிலி அழிக்கப்பட்டு, இறை-அநுபவம் பெற இயலும். ஒருவன் தன் சுயமுயற்சி கொண்டு தன் புலன்களை கட்டுப்படுத்தலாம், மனதை தூய்மையாக்கிக் கொள்ளலாம், ஆழ்ந்த சாதனைகளைச் செய்யலாம், இறைவனை உளமாற முழுமையாக நேசிக்கலாம். இருந்தாலும், ஆசைத் தளையிலிருந்து இறுதியாக விடுதலை பெறுவதற்கு, இறை-கிருபை அதில் வந்து சேர்ந்தால்தான் அது சாத்தியமாகும். *சூட்சும* மற்றும் *காரண*-நிலைகளில் புதைந்துள்ள *சம்ஸ்காரம்* மற்றும் *வாசனைகள்* எனப்படும் ஆசைகளின் பதிவுகள், அறியாமை ஆகிய இவைகளை வெறும் மனித முயற்சிகளைக் கொண்டு மட்டும் முற்றிலுமாக அழிப்பதென்பது சுலபத்தில் நடந்திடும் காரியமல்ல. எப்பொழுது இறைவன் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள நினைக்கிறாரோ, அதாவது எப்பொழுது இறை-கிருபையானது சாதகனை வந்தடைகிறதோ, அப்போதுதான் அவைகள் அழிக்கப்படும். ஸ்ரீமத் பகவத் கீதை இதைப்பற்றி பின்வருமாறு கூறுகிறது: "புலன்களைக் கட்டுப்படுத்திய ஜீவனிடமிருந்து விஷயங்கள் தாமே விலகிக் கொள்கின்றன. எனினும், அவற்றிடமுள்ள சுவை (பற்று) அவனிடம் இருக்கத்தான் செய்கிறது; பரம்பொருளைக் கண்டபின்தான் (அடைந்தபின்தான்) அச்சுவையும் நீங்குகிறது" (2.59). அன்பருள் மலர்ந்திட, கிருபை சுய-முயற்சியோடு சேர வேண்டும் என்பது ஒரு அம்சம். இதன் இன்னொரு அம்சம்: சுய-முயற்சி என்பது தேவைதானா? கிருபை மட்டும் இருந்தால் போறாதா என்ன? இல்லை, அது மட்டும் போறாது. எதனால்? இறைவனும், அவர்

கிருபையும் ஒன்றுதான்; இவ்விரண்டையும் பிரித்திட இயலாது – சூரியனையும் அதன் வெளிச்சத்தையும் எப்படி பிரிக்க முடியாதோ அப்படியே. இறைவன் எங்கும் எதிலும் இருக்கிறார் என்பது போலவே அவரது கிருபையும் எங்கும், எப்பொழுதும், அனைத்தின் மீதும் இருக்கிறது. ஆனால், எப்படி சூரிய வெளிச்சத்தை பிரதிபலிக்க சுத்தமான கண்ணாடி தேவையோ, அப்படியே இறை-கிருபையை வெளிப்படுத்துவதற்கு, உணர்வதற்கு தூய உள்ளம் கட்டாயம் தேவை. ஆகவே, முயற்சி (அன்பு) என்பது இறை-கிருபையை (ஜீவன்பால்) ஈர்ப்பதற்கு கட்டாயம் தேவை.

அடுத்ததாக, நம் மனதில் மற்றொரு வினா எழுகிறது. ஜீவன் தன் முயற்சியை ஈடுபாட்டுடன் விடாது செய்த பின்னரும், இறை-கிருபை எப்பொழுதுமே இருந்தும்கூட, ஏன் அவை ஒன்று சேர்ந்து, இறை-அநுபவத்தைத் தருவதில்லை? இதுவும் ஒரு புரியாத புதிரே! அந்த இரண்டும் எப்போது, எவ்வாறு ஒன்று சேர்ந்து இறை-அநுபவத்தை தரும் என்று நமக்குத் தெரியாது. இறைவன் மட்டுமே அறிவார். எனவேதான், *கடோபநிஷத்*, "எவனொருவனை பரமாத்மா (இறைவன்) தேர்ந்தெடுக்கிறாரோ, அவனால் அவர் (இறைவன்) அறியப்படுகிறார். அவனுக்கு, அவர் தனது உண்மை சொரூபத்தை வெளிப்படுத்துகிறார்" என்று கூறுகிறது. அதனால்தான், அர்ப்பணிப்புடனும், நேர்மையாகவும் இறைவனை அடைய நீண்ட நெடுங்காலமாக முயன்ற பின்னரும் இன்னமும் அக்குறிக்கோளை அடையாமலிருப்பவர்களை நாம் காண்கிறோம். ஏனெனில், முயற்சி இருக்கிறது, ஆனால் இறை-கிருபை அதனுடன் ஒன்று சேரவில்லை. அதாவது, இறைவன் இன்னும் அவர்களைத் தேர்ந்தெடுக்கவில்லை. எனவே, அத்தகைய சாதகர்கள் விரக்தி அடைந்துவிடாமல், நம்பிக்கையை இழந்துவிடாமல், சாதனையைத் தொடர்ந்து செய்துவர வேண்டும்; அதேசமயம் பொறுமையுடனும் விடாமுயற்சியுடனும் இறை-கிருபையின் விடியலுக்காகக் காத்திருக்க வேண்டும். இன்னொருபுறம் பார்த்தால், ஆன்மீகத்துக்குச் சற்றும் அருகதை இல்லாதவர்களும், இறையருளுக்கு அடியோடு தகுதி யில்லாதவர்கள் போல் தோன்றும் சிலரும் திடீரென ஆத்மானுபூதி பெறுமளவிற்கு தெய்வீகக் கிருபை பெற்றதையும் காண்கிறோம். இறைவனின் லீலைகளை யாரால்தான் புரிந்து கொள்ள இயலும்!

"வியக்கத்தக்க, புரிந்துகொள்ளமுடியாத '*அன்பருள்*': சாதாரணமாக, கிருபை இறைவனுடையது; அன்பு ஜீவனுடையது. ஆனால், அருணகிரியார் சொல்வதோ வேறு: '**நினது** அன்பு-அருளால்' என்கிறார், அதாவது கிருபை மட்டும் அவருடையது அல்ல, ஜீவன் செலுத்தும் அன்பும் (செய்யும் முயற்சியும்) கூட அவருடையதே. இது

எப்படி சாத்தியமாகும்? ஈஸ்வரன் சர்வ-வியாபி; ஜீவன் ஈஸ்வரனின் ஓர் அம்சம், அதற்கென்று ஒரு தனி இருப்பு இல்லை. ஆகையால், பகுத்தாராய்ந்தால் ஜீவனின் முயற்சி என்பதும் ஈஸ்வரனுடைய செயலே; அதுவும் அவர் இச்சையின்படி (கிருபையின்படி) செயல்படும் வழி. ஜீவன் மூலம் செயல்படும் இறை-அருள், அன்பு அல்லது சுய-முயற்சி எனப்படுகிறது; ஜீவன் மூலம் வேலைசெய்யும் *அருள், அன்பு* எனப்படும். ஜீவனால் பெறப்படும்போது, அது *அருள்* எனப்படுகிறது. உண்மையில், சாதனையின் தொடக்கத்திலிருந்தே அவையிரண்டும் ஒன்றாகவே பயணிக்கின்றன; சாதகனின் ஆன்மீக முன்னேற்றத்தின் ஒவ்வொரு நிலையிலும் அவை வெவ்வேறு அளவில் அநுபவத்தில் வருகின்றன; உச்ச கட்டமான சமாதிநிலை எட்டப்படும்போதுதான், அவையிரண்டும் முழுவதுமாக ஒன்றோடொன்று இணைந்து, இறை-அநுபூதியை பிறக்கச் செய்கின்றன. சாதனையைத் தான் செய்வதாக ஜீவன் நினைத்த போதிலும், சாதனையின் தொடக்கத்திலிருந்தே அவன் முயற்சியென்பது ஈஸ்வரனுடையதே; ஆனால், இது அவ்வாறென்று (ஈஸ்வரனுடையதென்று) சமாதிநிலையில்தான் அவனால் உணரப்படுகிறது. அதனால்தான், "இறைவனே பந்தப்பட்டிருப்பதாகத் தோற்றமளிக்கிறார், சாதனை செய்வதாகவும், கிருபையைப் பொழிவதாகவும், கிருபையைப் பெறுவதாகவும், முக்தி அடைவதாகவும் தோற்றமளிக்கிறார்" என்று ஞானிகள் அடிக்கடி கூறுகிறார்கள்; நடப்பது அனைத்தும் மிகவும் அற்புதமான, மர்மமான ஈசனின் விளையாட்டு, மனிதனின் புத்தியைத் திணற அடிக்கும் ஈஸ்வரனுடைய லீலை. "அற்புதம், அதிசயம். ஒருவன் இதை (இந்த ஆத்மாவை அல்லது இறைவனை) 'ஆச்சரியம்' எனக் காண்கிறான், மற்றொருவன் இதை ஆச்சரியமெனச் சொல்கிறான், மற்றும் ஒருவன் இதை ஆச்சரியமெனக் கேட்கிறான். இருந்தும், கேட்டபின்னரும், இதனை அறிவான் எவனுமிலன்" என்று ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா சொல்கிறார் (ஸ்ரீமத் பகவத் கீதை: 2.29). "**நினது *அன்பருள்***" என்பதும் அத்தகைய மர்மமானது. அன்பருள் என்ற மர்மமான சொல்லை பிரத்யேகமாக உபயோகித்ததற்குக் காரணம், அன்பும் அருளும் ஆகிய இரண்டும் ஒன்றோடொன்று இரண்டறக் கலந்தது என்பதையும், அவ்வாறு கலந்தது ஆசை-நிகளம் துகளாவதற்கும், பேசா அநுபூதி பிறப்பதற்கும்தான் என்பதையும் நமக்கு குறிப்பிட்டு உணர்த்துவதற்கே.

"**ஆசை-நிகளம்**" : ஒரு சங்கிலிக்கு இரண்டு அம்சங்கள் உண்டு. அது ஆத்மாவை பந்தப்படுத்த விலங்காக ஆகிறது; தனக்குள்ளே அது ஒன்றுடன் ஒன்று பிணைந்த வளையங்கள் கொண்டுள்ளது. இறை-அநுபூதி அடைவதற்குத் தடையாக இருப்பது ஆசைகளே. ஆசைகள்

ஆத்மாவை உலகியல் வாழ்க்கையில் பந்தப்படுத்தி, மீண்டும் மீண்டும் பிறப்பு-இறப்பு சுழற்சியில் ஆழ்த்துகிறது. ஆசையே பந்தம், ஆசையிலிருந்து விடுதலை பெறுவதே முக்தி அல்லது மோட்சம் எனலாம். இதை, "உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் அனைத்து ஆசைகளும் துறக்கப்படும்போது, மனிதன் இங்கேயே, இப்பொழுதே அமரனாகிறான்," என்று *கடோபநிஷத்* மிக அழகாக சொல்கிறது. ஆசைகளின் எண்ணிக்கை மற்றும் அவைகளின் தீவிரம் குறையக் குறைய, மனிதன் இறைவனுக்கு அருகில் நெருங்குவதால், மகிழ்ச்சி அதிகரிக்கிறது; ஆசைகளின் எண்ணிக்கை மற்றும் அவைகளின் தீவிரம் அதிகரிக்க அதிகரிக்க, மனிதன் இறைவனிடமிருந்து விலகிச் செல்வதால், துன்பம் பெருகுகிறது. ஒருவன் இறைவனிடமிருந்து எவ்வளவு தொலைவில் இருக்கிறான் என்பதை, தன்னிடம் எவ்வளவு ஆசைகள் உள்ளன என்பதை வைத்து அவன் தெரிந்து கொள்ளலாம் (அல்லது, ஆசைகள் அவனைத் தாக்கும் தீவிரத்தை வைத்து அறிந்து கொள்ளலாம்).

ஆசைகள் ஸ்தூல, சூட்சும மற்றும் காரண ஆகிய மூன்று நிலைகளில் உள்ளன, எனவே அவை மனதின் மேல்மட்ட நிலையில் மட்டும் எழுமென்று நினைப்பதற்கில்லை. அவை சாதாரணமாக நம்முள்ளே ஆழமாகப் புதைந்திருக்கும். இதயத்தின் இடுக்குகளிலெல்லாம் குடியிருக்கும். நமது தனித்தன்மையே ஆசைகளால் உருவாக்கப்பட்டதுதான். நாம் என்பதே வெவ்வேறு அடுக்குகளில் இருக்கும் ஆசைகளின் தொகுப்புத்தான். ஆசைகள்தான் நாமென்று சொல்வதில் ஒரு தவறும் இல்லையெனலாம்; ஆசைகள் எவ்வாறோ, அவ்வாறே நாம் இருக்கிறோமெனலாம். ஆசைகளின் ஆதிக்கம் நமது உடல், மற்றும் மன ஆளுமைகளின் மீது பரந்து விரிந்துள்ளது, உண்மையில் அதன் ஆதிக்கம் ஆழ்நிலை, மற்றும் நினைவிழந்த நிலை என்று பல நிலைகளைக் கடந்து உள்ளே செல்கிறது. அதனால்தான், அவை ஒரு சங்கிலிக்கு உதாரணமாக்கப்படுகின்றன. நம் உடல் மூலம் தம்மை வெளிப்படுத்திக் கொள்ளும் ஆசைகள், சங்கிலித் தொடர்போல், நம்முள்ளேயும் நினைவிழந்தநிலைவரை இணைப்புகளைக் கொண்டிருக்கிறது. இறை-அநுபவம் பெற்றிட வேண்டுமென்றால், ஆசைகளின் இந்த மொத்த சங்கிலித் தொடரையும் அழிக்க வேண்டும். எனவேதான், அருணகிரியார், "ஆசைகள்" என்று மட்டும் குறிப்பிடாமல் பிரத்யேகமாக "ஆசா நிகளம்" (ஆசை-சங்கிலி) என்று குறிப்பிடுகிறார்.

"நினது அன்பருளால், ஆசா நிகளம் துகளாயின பின், பேசா அநுபூதி பிறந்தது" -- ''இந்த ஆசை சங்கிலித் தொடர் **உனது** அன்பு-அருளால் முழுவதுமாகப் பொடிப்பொடியாகிய (துகளாகிய) பின்னர்,

பேசா-அநுபூதி உதித்தது" என்கிறார் அருணகிரியார். 'பேசா அநுபூதி', பேச்சற்ற இறை-அநுபவம், மகா-மௌனம், பிரம்ம அநுபவம், பேரானந்த-உணர்வு நிலை, ஆகிய இச்சொற்கள் அனைத்தும் உயரிய ஆன்மீகக் குறிக்கோளான 'அத்வைத (இரண்டற்ற) விழிப்புணர்வு' பெறுதலைக் குறிக்கிறது. அருணகிரியார் 'இந்த விழிப்புணர்வு எனும் அநுபூதி (அநுபவம்) 'பிறந்தது" என்கிறார். இவ்வநுபூதி கொடுக்கப்படவில்லை, ஏனெனில் கொடுப்பது என்பது நடைபெறுவதற்கு, கொடுக்கும் ஒருவர் வேண்டும் ('துவைதம்'). ஆனால், இறைவனே அந்த விழிப்புணர்வு, அந்தப் பேசா அனுபூதி. பின், யார், எதைக் கொடுப்பது! முந்தைய செய்யுளில் கூறப்பட்டதுபோல, வேலானது தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும்போது, உள்ளுணர்வானது பிறந்திடும்போது, சமாதிநிலை உதிக்கும்போது, 'ஜீவ-உணர்வானது' 'எல்லையில்லாப் பரம்பொருள் உணர்வில்' அமிழ்ந்து உட்கொள்ளப்படுகிறது; பின்னர் பிந்தையது மட்டும் தனித்திருக்கிறது. இதையே 'தன்னந்தனி நின்ற அது' என்று செய்யுள்- 49 குறிப்பிடுகிறது.

இறைவனின் அன்பருளால் ஆசை நிகளம் துகளாக்கப் பட்டவுடன், வார்த்தைகளால் விவரித்திட இயலாத ஒரு மகாஉன்னதான அநுபவம் பிறக்கிறது. முயற்சி அருளைச் சந்திக்கும்போது, *அன்பும் அருளும்* மர்மமாக ஒன்றாகும்போது, அதைவிட மர்மமான ஒன்று நடைபெறுகிறது. ஜீவ-ஈஸ்வர ஐக்கியம் ஏற்பட்டு எல்லையில்லாப் பரபிரம்ம (பரம்பொருள்) அநுபவத்தைத் தருகிறது, அந்த அனுபவத்தில் ஜீவன், ஈஸ்வரன் என்ற கருத்துக்கள் கடக்கப்பட்டுவிடுகின்றன. இவ்விரண்டின் ஐக்கியம் மூன்றாவதான ஒன்றின் பிறப்பிற்கு காரணமாகிறது. ஆனால், இது, ஒரு குழந்தை பிறக்கும்பொழுது அது அதன் பெற்றோர்களைத் தவிர மூன்றாவதாக தனித்திருப்பது போன்றதல்ல; இது, மற்ற இரண்டில் எதுவுமில்லாததால், மூன்றாவதாகச் சொல்லப்படுகிறது. இரண்டும் காணாமற்போய், 'அறியாத' ஒன்று உதிக்கிறது. இந்த 'அறியாத' ஒன்று, அதனுடையத் தோன்றங்களேயான அவ்விரண்டையும் கடந்தும், தன்னுள்ளடக்கியும் இருக்கிறது. இதுதான் "பேசா அநுபூதி" அல்லது "மௌன அநுபூதி". இந்த அனுபூதியில், முயற்சிகளைச் செய்யும் ஜீவன் மற்றும் அருளைப் பொழியும் (ஆசைகளை அழிக்கும்) ஈஸ்வரன் ஆகிய இவ்விரண்டு கருத்துக்களும் கடக்கப்பட்டு விடுகின்றது. அனைத்துக் கருத்துக்களும் மனத்தால், புத்தியால் உருவாக்கப்பட்டவை, எனவே கடக்கப்பட்டு விடுகின்றன. ஆங்கே பேசா-அநுபூதி பிறக்கிறது. முந்தைய செய்யுளில் விளக்கமாக கூறப்பட்டதற்கிணங்க, அந்நிலையில் ஜீவனின் அனைத்து புலன் கருவிகளும் தத்தம் செயல்பாடுகளை இழந்து விடுவதால்,

ஜீவனுடைய அந்த நிலையைக் குறிக்க 'பேசா' என்ற சொல்லும்; ஈஸ்வரனின் கார்யங்களான அழித்தல், அருளுதல் ஆகிய அனைத்தும் நின்று விடுவதால், ஈஸ்வர நிலையைக் குறிக்க 'அநுபூதி' என்ற சொல்லும் பயன்படுத்தப்படுகிறது. அது 'வெறும்' '*அநுபவம்* ' மட்டுமே – 'பேசா அநுபூதி' – அதைப்பற்றி ஒன்றும் சொல்லிட இயலாது. அன்பும் அருளும் இணைவது, *பேசா-அநுபூதி* பிறப்பது. ஈஸ்வரன் மேல் அபரிமிதமான அன்பை வைப்பதால் ஜீவன் தன்னையே இறைவனில் இழக்கிறான், அதனால் *"பேசா"*தவனாகிறான் (பேச்சற்றவனாகிறான்). அதே சமயம், (ஈஸ்வரனின்) அருள் ஜீவன்பால் அபரிமிதமாக வெளிப்படுவதால், *அநுபூதி* பிறக்கிறது. (அன்பு = பேசா, அருள் = அநுபூதி). அன்பருள் = பேசா அநுபூதி. அன்பருள் பேசா-அநுபூதியாகிறது. அன்பும் அருளும் இணைவதால் 'பேசா-அநுபூதி' பிறக்கிறது. என்னே ஓர் ஆச்சரியமான செறிவு, கருத்துக்களை வெளிப்படுத்துவதில் கையாளப்படும் நேர்த்தியான பாங்கு. எவ்வளவு தூரம் மொழி அனுமதிக்கின்றதோ அவ்வளவு தூரம் சென்று, மொழியில் எவ்வளவு கருத்தாழமுள்ளதோ அவ்வளவையும் பிரயோகித்து, இம்மகத்தான அநுபவமானது முடிந்தவரை மகத்தான முறையில் விளக்கப்பட்டுள்ளதைப் பார்க்கிறோம்! இந்த "கந்தர் அநுபூதி" நூல் முழுவதிலும், 'அநுபூதி' என்ற சொல் இச்செய்யுள் ஒன்றில் மட்டுமே உள்ளது.

இதயமும், ஆன்மீக சாதனையும் : ஆன்மீக சாதனையிலும், ஆத்மானுபூதியிலும் இதயம் (ஸ்தூல இதய உறுப்பல்ல; ஆனால் உள்ளிருக்கும் ஆன்மீக இதயம்) ஆற்றும் பங்கு மிகப்பெரிது. தூய்மை, அன்பு, அருள், ஆசைகளை அழித்தல், அநுபூதி பிறத்தல், ஆகியவைகளே இச்செய்யுளில் அடுத்தடுத்து சிறப்பாக விளக்கப்படும் சிறப்புக்கூறுகள். தூய்மை, இதயத்தைப் பற்றியது. ரஜஸ் மற்றும் தமஸ் குணங்களின் ஆதிக்கம் களையப்பட்டு, ஸத்துவ குணத்தை அதிகப்படுத்துவதின் மூலம் இதயம் தூய்மை செய்யப்படுகிறது. அவ்வாறு தூய்மை அடைந்த இதயத்தில் (இறைவன்பால்) அன்பானது வெளிப்பட்டுப் பெருகுகிறது. அந்த தூய அன்பானது அருளைக் கவர்ந்து இழுக்கிறது, அந்த அருள் இதயத்தில் உணரப்படுகிறது. அன்பும் அருளும் இதயத்தில் ஒன்று சேர்ந்து, இதயத்தில் குடிகொண்டுள்ள ஆசைகளை அழிக்கின்றன. பின்னர், அந்த இதயத்தில் *'அநுபூதி'* பிறக்கின்றது. இவ்வாறு, இதயமே சாதனை செய்யப்படும், *சாக்ஷாத்காரம்* அல்லது *ஆத்மானுபூதி* அடையப்படும் அரங்கம். இப்படியாக, முயற்சியும் கிருபையும், பிண்டமும் அண்டமும், மனிதனும் இறைவனும், ஜீவனும் ஈஸ்வரனும் ஒன்றையொன்று சந்தித்து ஐக்கியமாகின்ற இடம் இதயம். அதனால்தான், "உடலின் மத்தியில், பரம்பொருளான பிரம்மம்

உறையுமிடமான தாமரை போன்று பாபமற்ற இதயமுள்ளது; அதற்குமுள்ளே துக்கமற்ற (ஆனந்தமயமான) ஆகாசம் உளது. அதனை தியானம் செய்திடல் வேண்டும்," என்று *நாராயண உபநிஷத்* கூறுகிறது. ஆகையால், இதய பூர்வமாக செய்யப்படாத (இதயத்துடன் சம்பந்தப்படாத) ஆன்மீக சாதனை உயிரற்றதாய், இயந்திரம் இயங்குவது போன்றாகிவிடும், உண்மையைவிட பாசாங்காகி-விடும், தன் ஆத்ம முன்னேற்றத்திற்கு உதவுவதைவிட பிறருக்கு தம்பட்டம் அடித்துக் காட்டுவதுபோலாகிவிடும்; அவ்வாறு செய்யப்படும் சாதனைகள் எவ்விதப் பலனையும் அளிப்பதில்லை. இதயமே ஆன்மீகத்தின் உறைகல். எனவேதான், 'ஒருவன் தன் மனத்தில் (இதயத்தில்) தூய்மையுள்ளவனாக இருக்க வேண்டும்; அதுவே அறம். மனத்தூய்மையற்ற பிற யாவும் (அறம் ஆகா) வீண் ஆரவாரத் தன்மைஉடையவை ஆகும்' ("மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்; ஆகுல நீர பிற" -- குறள்: 4.4), என்று திருவள்ளுவப் பெருமான் கூறுகிறார்.

மற்ற செய்யுள்களோடு உள்ள தொடர்பு:

(1) 39-ம் செய்யுளில் ஆத்மா கதறி வேண்டியது, இச்செய்யுளில் நிறைவேறி இருக்கிறது. 39-ம் செய்யுளில் அச்சாதகன், "முருகப் பெருமானே! தாங்கள் வள்ளிதேவியை அணைத்து ஆதரித்ததுபோல, (உடனே) வந்து என் ஆத்மாவை அரவணைப்பீர்களாக; அவ்வாறு தாங்கள் செய்தால்தான், என்னை விடாப்பிடியாக பற்றியுள்ள மூவித ஏடணைகளும் பூரணமாக விலகும், அதன்மூலம் எனது ஏழு பெரிய பிறப்புகளும் முடிவுறும்," என்று பிரார்த்தனை செய்தான். அங்கு செய்யப்பட்ட ஒவ்வொரு பிரார்த்தனையும் ஒவ்வொன்றாக இங்கு நிறைவேறுகிறது. **"மாயைவிடா முவேடணை என்று முடிந்திடும்"** என்று 39-ம் செய்யுளில் கேட்கப்பட்டது. அது **"ஆசா நிகளம் துகள் ஆயின"** என்பதில் பூர்த்தி செய்யப்பட்டது. மூன்று ஏடணைகளும் ஒருவனின் ஸ்தூல, சூட்சும மற்றும் காரண செயற்பண்பு நிலைகளை ஒருங்கிணைக்கும் ஆசை-சங்கிலியேயன்றி வேறில்லை; இவ்விரண்டும் ஜீவனை இந்த உலக வாழ்வில் பந்தப்படுத்துகின்றன. 'இந்த ஏழு பெரிய பிறப்புகளையும் முடிவிற்குக் கொண்டு வர' (**"மாவேழ் சனனம் கெட"** – செய்யுள்; 39), 'பேச்சற்ற அநுபவம் பிறந்தது' (**"பேசா அநுபூதி பிறந்ததுவே"** - இச்செய்யுள்) – அதாவது பேச்சற்ற அநுபவம் பிறந்ததும் அவ்வேழு பெரிய பிறப்புகளும் முடிவிற்கு வந்து விட்டன. ஒன்றின் பிறப்பு மற்றப் பிறப்புகளை அழிக்கின்றது. எத்தகைய பரம இரகசியம்!

செய்யுள்-39ல் **"குறமின்கொடி தோள்புணரும் தேவே"** என்று முருகனிடம் பிரார்த்தனை செய்யப்பட்டது. அதை, அந்த முருகன்,

"தூசா மணியும் துகிலும் புனைவாள் நேசன் (முருகன்)" இங்கு பூர்த்தி செய்தான்.

'அன்பருள்' என்பது முருகனின் கிருபை, வள்ளியின் அன்போடு இணைதல் என்று ஏற்கனவே பார்த்தோம். இது, ஜீவனின் முயற்சியுடன் இறைவனின் அருளாசி சேருதல். ஜீவனை இறைவன் அரவணைக்க வேண்டுமென்று செய்யப்பட்ட பிரார்த்தனை (செய்யுள்-39), இச்செய்யுளில் நிறைவேறுகிறது. எனவேதான், இவ்விரு செய்யுளிலும் 'வள்ளி'-யைப் பற்றி கூறப்பட்டுள்ளது. ஆக, 39ம் செய்யுளில் வைக்கப்பட்ட பிரார்த்தனை, அதனைத் தொடர்ந்து வேலின்மேல் இடைவிடாது செய்யப்பட்ட தியானமும் (செய்யுள்- 40), ஜீவாத்மாவுக்கு மறுபிறப்பு இல்லாமலிருக்கத் திருப்பாதங்களை உடனே அருளுமாறு வேண்டப்பட்ட பிரார்த்தனையும் (செய்யுள்- 41), வேலை வெளிப்படுத்தி அதன் மூலம் அறியாமையை (ஜீவ பாவத்தை) அழித்து (செய்யுள்- 42), அன்பு-அருள் மூலம் இறுதிக் குறிக்கோளான ((முக்தி) பேசா-அனுபூதியை பிறந்திட வைத்து, ஆசை-நிகளம் தூள் தூளாகின (இந்த அநுபூதிச் செய்யுள்).

(2) மேலும், சாதனையின் ஆரம்பத்தில், அதன் குறிக்கோளாய் அடையவேண்டி, 2ம் செய்யுளில் செய்யப்பட்ட பிரார்த்தனை இச்செய்யுளில் பூரணமாக நிறைவேறுகிறது: **"எல்லாமற என்னை இழந்த நலம் சொல்லாய் முருகா"** -- 'ஓ முருகப் பெருமானே! அனைத்தும் அற்றுப்போய், என்னை (அகந்தையை) இழக்கும் நலத்தை எனக்கு அருள்வாயாக' என்று 2ம் செய்யுளில் பிரார்த்திக்கப் பட்டது. ஆசை-சங்கிலி தூள்தூளாகிவிடும்போது, 'எல்லாமற்ற' நிலை ஏற்படுகிறது. ('**ஆசா நிகளம் துகளாயின**' என்பதில் **'எல்லாம் அற்றது'**.) **'பேசா'மையில்**, **'என்னை இழத்தல்'** நிகழ்கிறது. **'நலம்'**, **'அனுபூதி'**யில் பெறப்படுகிறது. **'சொல்லாய்'** என்று கேட்ட பிரார்த்தனை, **'பிறந்தது'** என்பதில் பூர்த்தி செய்யப்பட்டது. இரண்டாம் செய்யுளில் பிரார்த்தனை முருகப் பெருமானிடம் செய்யப்பட்டது ('சொல்லாய் **முருகா**'); அப்பிரார்த்தனையை இங்கு முருகனே நிறைவேற்றி வைக்கிறான் -- "நேசா, '**முருகா**', நினது அன்பருளால் .... பேசா அநுபூதி பிறந்ததுவே". பிரார்த்தனை எந்த வரிசைக்கிரமத்தில் செய்யப்பட்டதோ, அதே வரிசைக்கிரமத்தில் நிறைவேறுதலும் செய்யப்பட்டுள்ளது: 'எல்லாம் அற'; --'என்னை இழந்த'; --'நலம்'; -- 'சொல்லாய்' ------ 'ஆசா நிகளம் துகள் ஆயின' பின்; -- 'பேசா'; -- 'அநுபூதி'; -- 'பிறந்தது'.

(3) "சும்மா இரு சொல்லற என்றலுமே, அம்மா பொருளொன்றும் அறிந்திலனே" (செய்யுள்-12). இந்த "சும்மா இரு"க்கும் தற்காலிக அனுபவம் அச்சாதகனுக்கு குருவால் 'கொடுக்கப்பட்டது'.

(விவரங்களுக்குச் செய்யுள்-12 பார்க்கவும்.) இது அவனை உற்சாகமூட்டி, சாதனை செய்து அந்த அனுபவத்தை தானே அடைந்து அனுபவிப்பதற்காகக் 'கொடுக்கப்பட்டது.' நீண்டகாலம் சாதனைசெய்து அது இப்பொழுது அடையப்பட்டுவிட்டது. எனவே, இங்கு "பேசா அநுபூதி", **"பிறந்தது",**; கொடுக்கப்படவில்லை. இங்கு, சாதகனின் சாதனையும் *(அன்பும்)*, இறைவனின் *அருளும்* சேர்ந்ததால் "அநுபூதி" "*பிறந்தது*"; அங்கு, "என்றலும்" என்பதில் "கொடுக்கப்பட்டது" குறிக்கப்பட்டுள்ளது. "சும்மா" = "பேசா"; "இரு"த்தல் = அநுபூதி; "என்றலும்" = (குருவால்) "கொடுக்கப்பட்டது"; "பிறந்தது" = தானாகவே நிகழ்ந்தது. அங்கும் 'கொடுத்தது' **முருகன்**, இங்கும் பேசா அனுபூதி 'பிறந்தது' **முருகன்** அருளால். அங்கும் முருகன், இங்கும் முருகன். (இரண்டு செய்யுளிலும் இரண்டாவது வரியில் இரண்டாவது வார்த்தையாக!).

இச்செய்யுள் ஒரு சாதகன் பயணிக்க வேண்டிய (ஆன்மீக) சாதனைப் பாதையைப் பற்றி முழுமையாக தொகுத்தளிக்கிறது. – அதாவது இந்நூலில் தரப்பட்ட அனைத்து உபதேசங்களின் சாரம், மற்றும் குறிக்கோளானது எட்டப்பட்டு விட்டது என்பது உட்பட. ஒரு சாதகனால் செய்யப்பட வேண்டிய சாதனைகள் மற்றும் குறிக்கோளை அடைதல் ஆகிய விஷயங்களைப் பற்றி அருட்செல்வர் அருணகிரியார் நேர்த்தியாகவும் அழகாகவும் கோர்வையாகவும் இவ்வொரு செய்யுளிலேயே தொகுத்து அளித்துள்ளார்:

- இறைவனை அடைவதற்காக ஏங்கித் தவிக்கும் ஜீவாத்மா (முமுக்ஷுத்வம்)
- இதயத்தை சுத்தம் செய்தல் (சித்த சுத்தி)
- இறையருள் கிடைத்திடும்வரை சாதனைகளை இடைவிடாது அன்போடும் அர்ப்பணிப்போடும் செய்தல் (சாதனை -- ஜீவ முயற்சி – *அன்பு*)
- இறைவன் ஜீவன் பால் வைக்கும் கனிவான அன்பு (ஈஸ்வரன் *அருள்*)
- 'அன்பு' 'அருள்' ஐக்கியத்தால் ஆசை-சங்கிலி அழிவது (பந்தம் அறுத்தல்)
- மகா-மௌனத்தில் இறை-அநுபூதி பிறத்தல் (அடைதல்) – பேசா அநுபூதி. (ஜீவன்முக்தி –- மோட்சம்).

ஒரு சுவாரஸ்யமான விஷயம்: இச்செய்யுளில் வள்ளியைக் குறிப்பிடும்போது அருணகிரியார், அவர் பெயரை உபயோகிக்காமல், வெறுமனே 'தூசாமணியும் துகிலும் புனைவாள்' -- (தூய அணிகலன்களையும் தூய ஆடைகளையும் அணிபவள்) என்கிறார். முன்னர், எப்பொழுதெல்லாம் வள்ளியைக் குறிப்பிட நேரிட்டதோ, அப்போதெல்லாம் "வள்ளி", "வேடுவச்சி" என்றெல்லாம் குறிப்பிட்டுக்

கொண்டு வந்த அருணகிரியார், இப்பொழுது மட்டும் ஏன் அவ்வாறு குறிப்பிடவில்லை? ஏனெனில், அப்போதெல்லாம் வள்ளி, இறைவனுடன் ஐக்கியமடைய (முக்திபெற) விழையும் ஒரு ஜீவாத்மாவாக இருந்தாள்; சென்ற செய்யுளிலே அந்த முக்தி அடையப்பட்டுவிட்டது, அதாவது ஜீவாத்மாவின் எல்லாப் போர்வைகளும் (vestures) அற்றுப் போய்விட்டன (**செறிவற்று உலகோடு, உரை சிந்தையுமற்று, அறிவற்று அறியாமையும் அற்றதுவே**), எஞ்சி நிற்பது தூய ஆத்மா மட்டுமே; அதாவது, ஒட்டுமொத்த தூய உணர்வின் (பரம் பொருளின்) ஓர் இணைந்த அம்சமாய் – "தூசாமணியும் துகிலும் புனைவாள்". ஆக, இப்பொழுது எஞ்சி இருப்பது முன்பிருந்த அந்த 'வேடுவ குல மங்கையான வள்ளி' (ஜீவாத்மா)-அல்ல; இப்போதிருப்பது 'வள்ளிதேவி', முருகப் பெருமானின் துணைவி, அவரிடமிருந்து பிரியாதவள்; எல்லையற்ற பரம்பொருள் உணர்வான பிரம்மத்தோடு ஒருமுகமாகிவிட்ட தூய-உணர்வு. எனவேதான், இந்நூலின் எஞ்சிய செய்யுள்களில் வள்ளியைப் பற்றிய குறிப்பே இல்லை.

==========

செய்யுள் - 44

==========

சாடும் தனிவேல் முருகன் சரணம்
சூடும்படி தந்தது சொல்லுமதோ
வீடும் சுரர்மாமுடி வேதமும் வெம்
காடும் புனமும் கமழும் கழலே.

பொழிப்புரை: "பகைவர்களை அழிக்கும் ஒப்புயர்வற்ற வெற்றி வேலைத் தாங்கும் முருகப் பெருமான், தன்னுடைய பாதங்களை என் தலைமேல் சூட்டிக்கொள்ளுமாறு தந்தருளிய கருணையை என்னென்று சொல்லுவது! அப்பாதங்கள் முத்தித் தலத்திலும், தேவர்களின் சிரங்களிலும், வேதங்களிலும், வள்ளி வாழ்ந்த அனல்போல் தகிக்கும் காடுகளிலும், தினைப்புனத்திலும் மணக்கின்றன/ஒளிர்கின்றன."

விளக்கவுரை

பேசா அநுபூதி நிலையிலிருந்து வெளிவந்த ஜீவன்முக்தனின் (விந்தையான) தன்னேரில்லாத அநுபவங்களை இச்செய்யுள் சித்தரிக்கிறது. அச்சமாதி நிலையிலிருந்தபோது அவன் என்ன அநுபவித்தானோ, அது முதல் இரு வரிகளில் "சாடும் தனிவேல் முருகன் சரணம் **சூடும்படி தந்தது** சொல்லுமதோ" என்று **கடந்த காலத்தில்** கூறப்பட்டுள்ளது. அச்சமாதி நிலையிலிருந்து **வெளிவந்தவுடன்** அவனுடைய அநுபவம் கடைசி இரு வரிகளில் இவ்வாறு விளக்கப்படுகின்றது: "மோட்சத்திலும், தேவர்கள் தலையிலும், வேதத்திலும், அனல்போல் தகிக்கும் காடுகளிலும், தினைப்புனத்திலும் (எங்கும்) மணக்கின்ற பாதங்கள்! (**கமழும் கழல்**)". இது **நிகழ்காலத்தில்** உள்ளது. சமாதியிலிருந்து வெளிவந்தபின், ஜீவன்முக்தன் எங்கும் இறைவனுடைய பாதங்களையே (இறைவனையே) காண்கிறான், அனுபவிக்கிறான், உணருகிறான்! இந்த ஜீவன்முக்த அனுபவம் மேலும் மலர்ந்து *சஹஜ சமாதி அவஸ்தை* அனுபவமாக மிளிர்வதைக் கடைசிச் செய்யுளில் காண்போம்.

ஏற்பட்ட ஒரு அநுபவம் இறைவனை அடைந்து விட்ட அநுபவமா இல்லையா என்பதை ஒரு சோதனை முலம் அறியலாம் --- அந்த அநுபவத்திலிருந்து வெளிவந்த பிறகு அவன் அநுபவம் என்ன என்பதைக்

கொண்டு அறியலாம் — இறைவன் எல்லா இடங்களிலும் இருப்பதை அவன் உணருகிறானா இல்லையா என்பதை வைத்து அறிந்து கொள்ளலாம். இந்த சோதனையின்படிப் பார்த்தால், 28-ம் செய்யுளில் அச்சாதகன் அடைந்த அந்த சற்றேகுறைய சமாதி அநுபவம், எத்தனைதான் உயர்ந்த ஒன்றாயினும், இறைவனை உண்மையாக அடைந்த ஒரு பூரண அநுபவம் அல்ல; ஏனெனில், அதிலிருந்து வெளிவந்தவுடன், அதற்கு அடுத்த செய்யுளிலேயே அவன் "இல்லையெனும் மாயையில் இட்டனை நீ, பொல்லேன் அறியாமை பொருத்திலையே" என்று புலம்புகிறான். — 'இல்லையென்று சொல்லப்படும் இந்த மாயையில் என்னைத் தள்ளி விட்டுவிட்டீர்களே? தாங்கள் எனது அறியாமையை மன்னிக்கவில்லை (அழிக்கவில்லை)'.

இறைவனின் பாதங்களைப் பற்றி பல செய்யுள்களில் குறிப்பிடப்படுகின்றன. எனினும், பிரத்யேகமான பிரார்த்தனைகள் மூன்று செய்யுள்களில் செய்யப்பட்டுள்ளன:

- நான் நினைப்பும் மறப்புமற்ற நிலையான முக்தியையடைய தங்களின் இரண்டு பாதத் தாமரைகளை எனக்குத் தந்தருள என்று திருவுள்ளம் கொள்வீர்? (செய்யுள்- 21).
- நான் நற்கதியை (முக்தியை) அடையத் தங்கள் தாமரைமலர் போன்ற திருப்பாதங்களை என்று அருள்வீர்? (செய்யுள்- 35).
- நான் யமராஜன் கைவசப்பட்டுச் சாகாமலிருக்க (புனர் ஜன்ம சக்கரத்தில் உழலாமலிருக்க) தங்களின் திருக்கமலப் பாதங்களிலே என்னை (இங்கேயே) காத்தருள்வீர், (இப்பொழுதே) காத்தருள்வீர். (செய்யுள்- 41).

இப்பிரார்த்தனைகள் அனைத்தும் இச்செய்யுளில் நிறைவேற்றப் பட்டுள்ளன. பேசா அநுபூதியில் ஆழ்ந்திருந்துவிட்டு (முந்தைய செய்யுளில்), இப்பொழுது அதிலிருந்து ஜீவன்முக்தனாக வெளிப்பட்ட சன்னியாச-சீடன், தனக்கு அருளப்பட்ட இறை-பாதங்களை மோட்சத்திலும், தேவர்களின் சிரங்களிலும், வேதங்களிலும், சூடான காடுகளிலும், தினைப்புனத்திலுமாக எல்லா இடங்களிலும் காண்கிறான். இதுதான் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனை எங்கும் காணும் ஜீவன்முக்தனின் அநுபவம். அவன் இறைவனை எங்கும் அநுபவிக்கிறான் ---- நிரந்தரமான பரம்பொருளாக (மோட்சமாக) மட்டுமல்லாமல், இப்பிரபஞ்சமாகவும் (சுர லோகமாகவும்); "அங்கு"மட்டுமல்லாமல் (சுர லோகங்களில்), "இங்கு"ம் (காடு மற்றும் தினைப்புனங்கள்); (இறை) பாதங்கள் "தரப்பட்ட அப்பொழுது" மட்டுமல்லாமல், சமாதி நிலையிலிருந்து வெளிவந்துபின் "இப்பொழுதும்" கூட. 'கமழும் கழல்' என்று கூறுவதன்மூலம், **அப்பொழுது** தரப்பட்ட இறைவனின் பாதங்கள், **இப்பொழுது**, மலரின்

மணம்போல, நுகரப்படும் அனுபவமாக உணரப்படுகிறதென்ற உண்மையைச் சாடையாகக் கூறுகிறார் அருட்செல்வர் அருணகிரியார்.

செய்யுள் 42ன் "**தனி வேல்**", செய்யுள் 43ன் "**முருகன்**", மற்றும் செய்யுள் 44ன் "**சரணம்**" ஆகிய மூன்றும் குறிப்பது '**முக்திநிலை**'-யை. இச்செய்யுளில் இம்மூன்றும் அதே வரிசையில் வருவதிலிருந்தும், சரணங்கள் மோட்சமாகவும் மற்றும் பலவாகவும் ஒளிர்கிறது என்று கூறப்பட்டதிலிருந்தும் இது புஷ்டி செய்யப்படுகிறது. எவருடைய சரணங்கள் அவனுக்கு தந்தருளப்பட்டது? எந்த முருகப் பெருமானது சரணங்கள் தேவர்களின் தலைகளை அலங்கரிக்கின்றனவோ, எவருடைய சிரசு வள்ளிதேவியின் கழல்களால் அலங்கரிக்கப்-பட்டுள்ளனவோ (செய்யுள்-36) அந்த சரணங்கள் அந்த ஜீவன்முக்தனுக்கு அருளப்பட்டன! இது ஒரு பெறற்கரிய பாக்கியம்; ஒரு அசாதாரணமான, தனிச் சிறப்பு வாய்ந்த தெய்வீகப் பரிசு. எனவே, இதைப்பெற்ற அந்த ஜீவன்முக்தன், **"ஓ! நான் எப்படி அவருடைய இந்த கருணை மிகுந்த செயலை விளக்கிக் கூறுவேன்!'** என்று மகிழ்ச்சி பொங்கிக் கூறுகிறான்:

செய்யுள் 37ல், "**வேல்**" சம்பந்தமாகத் தரப்பட்ட அறிவுரையானது முழுவதுமாக நிறைவேறியதை செய்யுள் 42ல் கண்டோம். அப்படியே செய்யுள் 14ல் "கைவாய் *கதிர் வேல் முருகன் – கழல்* – பெற்று உய்வாய்" என்று தரப்பட்ட அறிவுரையானது, அதே வரிசைக் கிரமத்தில், 'சாடும் *தனி வேல் முருகன் – சரணம்* -- சூடும்படி தந்தது' என்று நிறைவேறியிருப்பதை இச்செய்யுளில் காண்கிறோம்.

அடுத்தடுத்த மூன்று செய்யுள்களும் (42, 43 & 44) முக்தி நிலையைப்பற்றியே விவரிக்கின்றன, எனினும் மூன்றும் வெவ்வேறு விதங்களில் விளக்குகின்றன. குறிக்கோளான முக்தி அடையப் பட்டதை எதற்காக மூன்று செய்யுள்களில் மூன்று விதமாக விளக்க வேண்டும்? அருணகிரியார் ஏன் இப்படிச்செய்தாரென்று நமக்குத்தெரியாது! எனினும், நம் புத்திக்கு எட்டிய அளவில் நாம் அறிய முயலலாம். இரு காரணங்களுக்காக இவ்வாறு செய்தாரென்று தோன்றுகிறது:

(1) 'கந்தர் அநுபூதி' நூலின் தொடக்கத்திலிருந்தே, செய்யுள்கள் ஒரு வினோதமான கலவையில் இருப்பதைக் காணுகிறோம்:

- சில செய்யுள்கள் 'வேலிடம்' செய்யப்படும் பிரார்த்தனைகள்.
- சில இறைவனின் பாதங்களைத் தந்தருளுமாறு செய்யப்படும் பிரார்த்தனைகள்.
- சில நேரடியாக இறைவனிடம் செய்யப்படும் பிரார்த்தனைகள்.

வேல் (*ஞானம்*) மற்றும் இறை-பாதங்கள் (*பக்தி)* ஆகிய இரண்டும் ஒன்றையொன்று சேர்ந்தே செல்கின்றன; இவையிரண்டும் ஒன்றேயென்றும், மேலும் இவை இறைவனிலிருந்து வேறானவை அல்ல என்பதையும் சுட்டிக் காட்டுவதற்கே. இம்மூன்று அம்சங்களையும் பூர்த்திசெய்வதற்காக அருட்செல்வர் அருணகிரியார் மூன்று செய்யுள்களை பிரயோகித்தார் என்று தோன்றுகிறது.

(அ) 'அநுபூதி" அல்லது இறையநுபவம் அடைவதுதான் 'கந்தர் அநுபூதி' நூலின் ஆய்வுப்பொருள்; முருகப் பெருமான் (பரம் பொருள்) தான் அடையவேண்டிய குறிக்கோள். இரண்டாவது செய்யுளில், 'எல்லாமற என்னை இழந்த நலம் சொல்லாய்' என்ற பிரார்த்தனை **முருகப்** பெருமானிடம் செய்யப்பட்டது. அவருடைய மற்றெல்லாப் பெயர்களையும்விட **முருகன்** என்ற பெயரே மிக அதிகமான (10) செய்யுள்களில் உபயோகிக்கப்பட்டுள்ளது. எனவே, அருணகிரியார் **முருகனுக்கு** ஒரு செய்யுளை (செய்யுள்-43) அர்ப்பணித்து, முருகனின் கிருபையால் "*பேசா அநுபூதி*' அடையப்பட்டது என்று சொல்கிறார்.

(ஆ) பல செய்யுள்களில், முருகப் பெருமானுக்கு ஒப்பானதும் அவரிடமிருந்து வேறுபடாததுமான '**வேல்**' குறிப்பிடப்பட்டு, அவ்வேலிடம் பிரார்த்தனைகளும் செய்யப்பட்டு, கடைசியாக முக்தி கிடைக்கப்பெறும்வரை **வேலின்** மேல் இடைவிடாது தியானமும் மேற்கொள்ளப்பட்டது ("வினை ஓடவிடும் கதிர்வேல் மறவேன்" – செய்யுள்: 40). எனவே, ஒரு செய்யுள் '**வேலுக்**'காகவே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது (செய்யுள்- 42).

(இ) மேலும், முக்தி (அ) மோட்சமேயாகும் இறை- (பாத) கமலங்களைத் தந்தருளுமாறு பிரார்த்தனை பல செய்யுள்களில் செய்யப்பட்டது, (மிகக்குறிப்பாக செய்யுள்கள் 21 மற்றும் 35). ஆனால், உச்சகட்டமாக செய்யுள் 41ல் *இப்பொழுதே, இங்கேயே* **இறை-பாதங்களில்** பாதுகாப்பு (*ஜீவன்முக்தி*) தந்தருளுமாறு பிரார்த்தனை செய்யப்பட்டது. அதற்கு செவிசாய்த்துத் தந்தருளியதற்கு நன்றி செலுத்த ஒரு செய்யுள் **இறை-பாதங்களுக்கு** அர்ப்பணிக்கப்பட்டுள்ளது (செய்யுள்- 44).

இவ்வாறாக, அருட்செல்வர் அருணகிரியார் அச்சீடன் அடைந்த முக்தியை விளக்கிட **தொடர்ந்து மூன்று** செய்யுள்களை அர்ப்பணித்துள்ளார். இருப்பினும், முதன்முதலில் (இரண்டாவது செய்யுளில்) செய்யப்பட்ட பிரார்த்தனை பரம்பொருளான **முருகனுக்கு** ஆனதால், அவருக்கு முக்கியத்துவம் அளிக்க விரும்பி, இம்மூன்று

செய்யுள்களின் நடுச்செய்யுளான 43-ல் **'முருகன்'** மற்றும் **'அநுபூதி'** என்று சொற்களை நடுநாயகமாகக் குறிப்பிட்டு, **வேல்** மற்றும் **இறை-பாதங்களை** இச்செய்யுளுக்கு முன்னரும், பின்னரும் அமைத்து, அப்படிச்செய்வதன்மூலம் அவ்விரண்டும் முருகப் பெருமானுக்கு ஒப்பானவையென்றும் அவையும் முக்திநிலை அல்லது ஆத்மானுபூதியையே குறிக்கின்றன என்றும் தெரியப்படுத்துகிறார் அருணகிரியார்.

(2) (அ) செய்யுள்-42 தியானச் செயல்முறைமூலம் சமாதிநிலையில் *புகுதலையும், சமாதியில் இருப்பதையும்* விளக்குகின்றது; அச்சமாதியில் ஜீவாத்மன் எனப்படும் தனிமனிதத்துவம் (தன்னுணர்வு) கரைந்துப்போய் விடுகிறது. ஜீவாத்மன் இல்லாது போய்விடுகிறது.

(ஆ) செய்யுள்-43 *சமாதியில் ஆழ்ந்து இருக்கும் நிலையை* (அ) சமாதியை அனுபவிக்கும் நிலையை *(சமாதி அநுபூதி)* பற்றி விளக்குகின்றது. இங்கு, பரம்பொருள், பிரம்மம் (முருகன்) மட்டுமே விளங்குகின்றது.

(இ) செய்யுள்-44 *சமாதி நிலையில் இருத்தல்* மற்றும் சமாதியிலிருந்து *வெளிப்பட்டதும்*, முன்பிருந்த ஜீவனாக இல்லாமல், எங்கும் நிறைந்துள்ள இறைவனை உணர்பவனாய், உலகளாவிய பார்வை கொண்ட *ஜீவன்முக்த புருஷனாக* ஆகி எல்லோரும் இன்புற்று இருக்க விழைபவனாய் உலாவுவதை விளக்குகின்றது.

இப்படியாக, சமாதி நிலையை விவரிக்கும் இம்மூன்று செய்யுள்களும், அந்நிலையின் மூன்று கட்டங்களைச் சித்தரிகின்றன: (1) சமாதி நிலையில் *புகுதலும்* அதில் இருத்தலும், (2) சமாதியில் *மூழ்கியிருத்தல்*, மற்றும் (3) சமாதியில் மூழ்கியிருந்து, அதிலிருந்து *வெளிப்பட்டபின்* ஏற்படும் நிகழ்வுகள். அருள் நிறைந்த பேரின்ப அநுபவம் – உண்மையில் மகத்தானது, விவரிக்க முடியாத ஒன்று!

இந்த "பேசா அநுபூதி" நிலை {(ஆ) --- செய்யுள்-43} ஆத்மசக்தியோடு ஒன்றுகூடிய **செயலற்ற நிலை** (static identity). அதிலிருந்து வெளிப்பட்ட ஜீவன்முக்தன் {(இ) --- செய்யுள்-44} உயர்வு / தாழ்வு, மேல்/ கீழ், விண்ணுலகம் / மண்ணுலகம், எல்லையில்லாதது / எல்லைக்குட்பட்டது என்ற எவ்வித வித்தியாசமுமின்றி அனைத்திலும், எங்கும், எதிலும் இறைவனைக் காண்கிறான்; முருகப் பெருமான் அவருடைய சரணம் சூடும்படி அருள்புரிந்ததை நினைத்து அவன் ஆனந்தத்தில் கூத்தாடுகிறான்

என்றால் மிகையாகாது. இது அவனுடைய ஆத்மசக்தியோடு ஒன்றுகூடி **செயலாற்றும் நிலையாகும்** (dynamic identity).

"சரணம் சூடும்படி தந்தது" --- "இறை-பாதங்கள் தரப்பட்டன" என்று அருணகிரியார் கூறுகிறார். அவை எப்பொழுது தரப்பட்டன? எப்பொழுது அவனுக்கு 'வேல்' வெளிப்படுத்தப்பட்டதோ (செய்யுள்- 42), அப்பொழுதே இறை- பாதங்களும் அவனுக்குத் தரப்பட்டன; ஏனெனில், இவ்விரண்டும் ஒன்று மற்றொன்றிலிருந்து வேறுபடாத ஒரே சமயத்தில் நடைந்தேறும் செயல்கள். ஆனால், இதை அங்கு அவன் கூறமுடியவில்லை, ஏனெனில் அச்சமயம் அவனது அனைத்து அவயவங்களும் தத்தம் செயல்பாட்டை இழந்திருந்தன (செய்யுள்- 42), அந்நிலையில் 'பேசா அநுபூதி'யும் பிறந்து விடுகிறது (செய்யுள்: 43). அவ்வநுபவ நிலையிலிருந்து அவன் வெளிப்பட்ட பின்னரே, பெருமானின் பரமகிருபையைப் பரவசத்துடன் நினைத்துப் பார்த்து, அதற்கு நன்றிகூறும் வகையில் அதைப்பற்றி இப்பொழுது எடுத்துக் கூறுகிறான். எனவே, அவனுக்கு அங்கு/ அப்பொழுதே இறை-பாதங்கள் தரப்பட்டுவிட்டன (செய்யுள்- 42) என்பதை நன்றியுடன் இங்கு பறைசாற்றி அறிவிக்கிறான் .

28ம் செய்யுளில் அச்சாதகன் அடைந்த அநுபவம் சற்றேகுறைய சமாதியேதவிர ஒரு முழுமையான இறை-அநுபூதியல்ல என்பதும், இப்பொழுது 43ம் செய்யுளில் அவன் பெற்றதே உண்மையான இறை-அநுபூதி என்பதும், அந்த அந்த நிலைகளிலிருந்து வெளிவந்த பின்னர் அவன் கூறியதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். சற்றேகுறைய சமாதியிலிருந்து (செய்யுள்- 28) வெளிப்பட்ட சாதகன் தன் மேல் கடுமையான கழிவிரக்கம் கொண்டு, "இல்லேயெனும் இம்மாயையில் என்னை ஏன் மீண்டும் இட்டாய்?" என்று புலம்புகிறான் (செய்யுள்- 29); எனினும், தன் சாதனையின் தொடக்க காலங்களில் மாயை அவனுக்குத் தந்து வந்த தொந்தரவின் கடுமை அளவைப் பார்க்கும்போது (செய்யுள்- 5), இப்போதைய அளவு வெகுவாக குறைந்திருப்பதையும் அவன் உணர்ந்துதான் இருந்தான். ஆனால், பேசா- அநுபூதி நிலையிலிருந்து – உண்மை இறையநுபூதி நிலையிலிருந்து --- இப்பொழுது வெளிப்பட்ட பின்னர் (செய்யுள்- 43), அவன் ஓர் ஆனந்தப் பரவசத்தை அநுபவித்துக் கொண்டு, எங்கும் எதிலும் இறைவனை உணர்கிறான் – நோக்குமிடமெங்கும் இறை-பாதத்தை இப்பொழுது தரிசனம் செய்கிறான். முன்னர், சற்றேகுறைய சமாதி அனுபவத்திற்குப் பின்னரும், அவனுடைய அறியாமை விலகாமல் இருந்தது ("அறியாமை பொறுத்திலை"; செய்யுள்- 29), ஆனால் இப்பொழுது அவன் பெற்ற மகத்தான இறை-அநுபூதிக்கு பின்னர் அவனிடமிருந்து அறியாமை அற்றுப்போய் விடுகிறது

("அறியாமை அற்றது", செய்யுள்- 42; மற்றும் "ஆசா நிகளம் துகள் ஆயின", செய்யுள்- 43 என்று பறை சாற்றி அவன் அறிவிக்கிறான்). மேலும், முன்னர் அநுபவத்தில் (செய்யுள்-28), அகந்தையானது தற்காலிகமாக விழுங்கப்பட்டது, அதன் மூலகாரணமான அறியாமையானது அழிக்கப்படவில்லை; அதனால்தான் செய்யுள்-37ல் "அரிவாய் **அடியோடும்** அகந்தையையே' என்று அவன் அறிவுறுத்தப்படுகிறான்.

"அறியாமை அற்றது" (செய்யுள்- 42), "பேசா அநுபூதி பிறந்தது" (செய்யுள்- 43), மற்றும் "சரணம் சூடும்படி தந்தது" (செய்யுள்- 44) ஆகிய மூன்றும் குறிக்கோளான இறையனுபூதி அடையப்பட்டதற்கான ஆணித்தரமான பிரகடனங்களே. இம்மூன்று செய்யுள்களும் விசேஷ வசீகரமும், அழகும், முக்கியத்துவமும் வாய்ந்தவை. சாதகன் தன் ஜீவத்துவத்தை நீத்து இறைவனுடன் ஒன்றாக இருக்கிறான் (செய்யுள்-42); இறை-அநுபூதியில் திளைக்கிறான் (செய்யுள்-43); அவ்வநுபூதி நிலையிலிருந்து ஜீவன்முக்தனாக (இறை-மனிதனாக) வெளிப்படுகிறான் (செய்யுள்-44). இறை-அநுபூதியிலிருந்து ஜீவன்முக்தனாக வெளிப்பட்டபின் அவன் பெற்ற ஆனந்தத்தை இச்செய்யுள் சித்தரிக்கிறது. இத்தகைய அபூர்வமான கருத்துக்கள் இச்செய்யுள்களில் மிக அழகாக மறைவாக பொதிக்கப்பட்டுள்ளன.

இப்பொழுது அந்த சன்னியாசி-சீடன் ஒரு சித்த புருஷராக, ஜீவன்முக்த புருஷராக, ஞானியாக ஆகிவிட்டான். அவன் இனிமேல் ஒரு சாதாரண சாதகனோ, ஜீவனோ அல்ல; அவன் தன் குறிக்கோளை அடைந்துவிட்டான், எனவே முயற்சிசெய்து சாதனை செய்யவேண்டிய தேவையில்லை. அவனுடைய வாழ்க்கையே சாதனைதான். ஏனெனில் அவனில் பரம்பொருளின் உள்ளுணர்வு உறுதியாகவும் இடைவிடாமலும் இருப்பதால், சாதனை முயற்சியின்றி இயற்கையாகவே நடைபெறும், இது சுபாவமாகிவிடுகிறது. அதனால்தான் இச்செய்யுளிலிருந்து ஜீவாத்மாவைக் குறிக்கும் வள்ளி என்ற சொல் எங்கும் காணப்படுவதில்லை; ஜீவாத்மாவின் சாதனையின் முன்னேற்றத்தைக் காட்டும் ஒரு செய்யுளுக்கும் மற்றொன்றிற்குமுள்ள தொடர்பிற்கும் இதுவரை காட்டிவந்ததுபோல் இனிமேல் வேலையுமில்லை (தேவையுமில்லை).

இச்செய்யுள் மிகவும் எளிய அர்த்தம் கொண்டதுதான்; ஆனால் அதன் தாக்கங்கள் மகத்துவம் வாய்ந்தவை, பல திசைகளிலும் பரவும் தன்மை உடையவை. முருகப் பெருமான், கிருபையுடன், தன் பாதங்களைச் சூடும்படி தந்தருளினார். இதுதான் பெறுதற்கரிய கிருபைகளிலேயே மிகவும் உயர்ந்தது, ஏனெனில் இதைப் பெறுபவன்

முக்தியை அடைகிறான். இறைபாதமும் முக்தியும் ஒன்றே. எப்பாதங்கள் அவனுக்கு அருளப்பட்டன அல்லது அந்த பாதங்கள் எவருடையது என்று பார்ப்போம் : கல்போன்றுக் கடினமான தன் இதயத்தில் அழகான தாமரை போன்ற பாதம் மலர வேண்டும் என்று சாதனையின் தொடக்கத்தில் பிரார்த்திக்கப்பட்ட (செய்யுள்- 6) அப்பாதங்கள் தான் அவை; தன் செல்வங்களைத் தர்மம் செய்யும்போது எப்பாதங்களை தியானிப்பது சம்சார பந்தத்திலிருந்து விடுவித்து முக்தி அளிக்குமோ (செய்யுள்- 7) அப்பாதங்கள்தான் அவை; எப்பாதங்களை பெறுவதன் மூலம் ஒருவன் தனது எல்லா ஆசைகளையும் களைந்து, தன்னை காப்பாற்றிக் கொள்ள முடியுமோ, அதாவது முக்தி அடைந்திட முடியுமோ (செய்யுள்- 14), அப்பாதங்கள்தான் அவை; நினைப்பும் மறப்புமற்ற நிலையான முக்தியையடைய எப்பாதத் தாமரைகளைத் தனக்குத் தந்தருளுமாறு முன்னர் பிரார்த்தித்தானோ (செய்யுள்- 21) அப்பாதங்கள் தான் அவை; எப்பாதங்களைப் பணியும்போது, அவை 'ஸச்சிதானந்தம்' என்று கருதி உணருமளவிற்கு அவன் தவம் அடைந்ததோ (செய்யுள்- 22) அப்பாதங்கள்தான் அவை; எப்பாதங்களை, அறியாமை விளையாட்டின் எழுச்சி காரணமாக, நினைக்கமுடியாமல் போய்விட்ட கெட்டநிலையிலிருந்து காத்தருள வேண்டிப் பிரார்த்தித்தானோ (செய்யுள்-23) அப்பாதங்கள்தான் அவை; எவருடைய பாதங்கள் மட்டுமன்றி உடல் முழுவதும் செம்மையாய் இருக்கின்றதோ (செய்யுள்- 25) அவருடைய பாதங்கள்தான் அவை; விடமுடியாத சஞ்சித கர்ம வினைகளிலிருந்து விடுதலை அடைய (முக்தி பெற) அவன் எப்பாதங்களை அருளிட வேண்டி ஏங்கித் தவித்தானோ (செய்யுள்- 35) அப்பாதங்கள்தான் அவை; எப்பாதங்களை சதுர்முக பிரம்மாவும் (படைப்புக் கடவுள்) மற்ற தேவர்களும் தங்களுடைய சிரங்களில் சூடி அலங்கரித்துக் கொள்கிறார்களோ (செய்யுள்- 36) அப்பாதங்கள்தான் அவை; எப்பாதங்களில் காக்கப்படுவது (சரணடைவது) மறுபிறப்பை அழித்து, ஜீவன்முக்திநிலையை இங்கேயே இப்பொழுதே அடையச்செய்யுமோ அதற்குப் பிரார்த்தனை செய்யப்பட்டதோ (செய்யுள்- 41) அப்பாதங்கள்தான் அவை. இவையனைத்தையும் கொடுத்த பாதங்களே அவன் சூடிக்கொள்ள அருளப்பட்டவை.

இறைவனின் பாதங்கள் அருளப்பட்டவுடன் நடப்பது என்ன? பந்தப்பட்ட ஜீவன் உடனே பந்தத்திலிருந்து விடுதலையடைகிறான், சாதகனாயிருந்தவன் சித்தனாகிறான், அருளாளராகிறான். அத்தகைய ஆசீர்வாதத்தைப் பெற்ற புனிதனான அவனுக்கு, இறைபாதங்கள் தமது உண்மை சொரூபத்தை வெளிப்படுத்துவதால், ஒரு புது பார்வை

நோக்கு தோன்றுகிறது. அப்பாதங்களே புலன்களுக்குத் தெரியாத பரம்பொருளாகவும், காணப்படும் இப்பிரபஞ்சமாகவும், அவைகளிரண்டிற்கும் இணைப்பாகவும் பிரகாசிக்கின்றன. அருணகிரியார் இப்பாதங்களை தானே-ஒளிரும் மோட்சமாகவும், சொர்க்கத்தில் வாழும் தேவர்களின் சிரங்களிலும், அழிவற்ற வேதங்களாகவும், காடுகளிலும் தினைப் புனங்களிலும் ஒளிரும் (மென்மையான) பாதங்களாகவும் வர்ணித்துள்ளார். எளிதில் விளக்க இயலாத 'கமழும் கழல்' என்ற ஒரு சொற்றொடரை அவர் பிரயோகித்துள்ளார். இதற்கு பலவிதங்களில் அர்த்தம் கொள்ளலாம்: 'இனிய மணம் பரப்பும் பாதங்கள்', 'ஒளிரும் பாதங்கள்', 'தன்னைத்தானே வெளிப்படுத்திக் கொள்ளும் பாதங்கள்'. இதன் மூலம் அவர் சொல்ல வருவதென்னவெனில், அப்பாதங்கள் அருளப்பட்ட அப்போது பார்வைக்குத் தெரிந்த ஸ்தூல திருப்பாதங்கள் மட்டுமல்லாமல், அவற்றின் தெய்வீகத் தன்மை அல்லது குணம் சூட்சுமமாக இப்போதும், எப்பொழுதும் உணரப்படுகிறது என்பதுதான். எப்படி மலரின் மணமானது காணப்படாமல் உணரப்பட மட்டுமே இயலுமோ, அப்படியே இறை பாதங்கள் ஸ்தூலமாகக் காணாமல், உள்ளுணர்வாக உணர்ந்து ஒரு ஜீவன்முக்தனால் அனுபவிக்கப் படுகிறது. **'கமழும்'** (ஒளிரும்/ மணம் பரப்பும்) என்ற சொல்லின் சிறப்பம்சம் இதுவே. மேலும், இறை பாதங்கள் வழங்கப்பட்ட செயல் **"தந்தது"** என்று இறந்த காலத்தில் கூறப்பட்டிருக்கிறது; ஆனால் அப்படி அருளப்பட்ட பாதங்களின் சொரூபத்தை வர்ணிக்கும்போது அருட்செல்வர், **'கமழும் கழல்'** என்று நிகழ் காலத்தில் கூறுகிறார். இதன் மூலம் அவர் குறிப்பிடுவதென்னவெனில், **முன்பு** அருளப்பட்ட பாதங்கள் தேவர்களின் சிரங்களில் சூட்டப்பட்டதும், வள்ளியைத் தேடி காடுகளிலும், வயல்வெளிகளிலும் தேடியலைந்தது மட்டுமல்ல, ஆனால் அப்பாதங்கள் முக்தி அடைந்த சித்த புருஷர்களுக்கு **எப்பொழுதும்** சந்நிதானமாக நித்தியமும் இருந்துகொண்டு இருக்கின்றன. இறை பாதங்கள் ஒளிர்வதாகச் சில இடங்களை மட்டும் கூறப்பட்டது ஒரு அடையாள நிமித்தமாகத்தான், உண்மையில் அவை எங்கும் எதிலும் ஒளிர்கின்றன என்பதைக் குறிப்பிடுவதற்காகவேதான். அருணகிரியார் கூறும் இடங்களெல்லாம் விசேஷ அர்த்தம் கொண்டவை. அவை: "வீடும், சுரர்மாமுடி, வேதமும், வெம்காடும், புனமும் கமழும் கழல்."

(1) **"வீடும்"** : மனிதனின் எல்லா நாட்டங்களின் இறுதிக் குறிக்கோள் 'மோட்சம்' அடைவது, அதை அடைந்தவுடன் வாழ்வின் நோக்கம் பூரணமாகிறது. அது பூரண, முழுமையான விடுதலை (முக்தி) அடைந்துவிட்டதன் உணர்வு. அதுவே *பரம பதம்*, உன்னதமான

தெய்வீக உறைவிடம். அதுவே இறைவனின் திருப்பொற்பாதங்கள். இறை-பாதங்களே மோட்சபுரியாக ஒளிர்கிறது, மோட்சமென்பதே எல்லையற்றப் பரம்பொருளான பரபிரம்மம்தான்.

(2) "**சுரர்மாமுடி**" : முருகப் பெருமானின் இறை-பாதங்கள் தேவர்களின் சிரங்களில் ஒளிருகின்றன. அழிவற்றதும் உருவமற்றதுமான பரம்பொருளே தேவர்களின் துன்பங்களைப் போக்குவதற்காக முருகப் பெருமானாக அவதரித்தது என்று பார்த்தோம். அசுரன் சூரபத்மனின் கொடுங்கோன்மையால் துன்பப்பட்டுக்கொண்டிருந்த தேவர்களின் துயரம், அவனை முருகப் பெருமான் அழித்ததால், துடைக்கப்பட்டபோது, அனைத்து தேவர்களும் மரியாதை நிமித்தமாகவும், தங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதற்காகவும் அவரது பாத கமலங்களை தங்கள் சிரங்களில் இருத்திப் போற்றி வணங்கினர். ஆதலால், அவரது பாத கமலங்கள் சொர்க்கத்திலிருக்கும் தேவர்களின் சிரங்களில் ஒளிர்கிறது. இப்படியாக, வரம்பற்ற பரம்பொருளாக எங்கும் பிரகாசிக்கும் {மேலே (1)ல் கூறியபடி} அதே (இறை) பாதங்கள் மேல் (சொர்க்க) லோகங்களிலும் பிரகாசிக்கின்றன.

(3) "**வேதமும்**": பாதங்கள் பரம்பொருளாகவும் மேல் லோகங்களாகவும் பிரகாசிப்பவை மட்டுமல்ல, அவற்றை அடைவதற்கு வழிகாட்டும் வேதங்களும் அவையே. வேதங்கள் ஞானத்தின் களஞ்சியம். அவை *அபௌர்ஷேய* என்று கருதப்படுகின்றன, அதாவது, மனிதர்களால் இயற்றப்பட்டவையோ அல்லது உண்டாக்கப்பட்டவையோ அல்ல, பரம்பொருளிடமிருந்தே வெளிப்பட்டவையாகக் கருதப்படுகின்றன. வேதங்கள் எவராலும் எழுதப்படவில்லை (எழுதாக் கிளவி), அது நித்தியமான ஒன்று; வேத-ஞானமானது, இறையனுபூதி அடைந்த ரிஷிமார்கள், ஞானிகள் தங்கள் தியானத்தில் ஞானக்கண்ணால் கண்டெடுத்த உண்மைகளின் ஆனந்த வெளிப்பாடுகள். இவை, குரு-சிஷ்ய பரம்பரையின் மூலம் வழிவழியாக யுகயுகமாக கேட்டு- ஓதப்பட்டு நமது பரம்பரைவரை கொண்டு சேர்க்கப்பட்டு நமக்குத் தரப்பட்டுள்ளன. எனவே, வேதங்கள் 'சுருதி' (எது கேட்கப்பட்டு- வெளிப்படுத்தப்படுகிறதோ, அது சுருதி) என்றும், வேதங்கள் வெளிப்படுத்தும் தாத்பரியங்களை விளக்குவதற்காக மனிதர்களால் இயற்றப்பட்ட நூல்கள் 'ஸ்ம்ருதி' என்றும் அழைக்கப்படுகின்றன. வேதங்கள் இறைவனைப் போற்றுகின்றன, இறைவனை அடையும்படி மனிதனை அறிவுறுத்துகின்றன. அவைகளில் பற்பல *உபாசனை*களும், தியான முறைகளும் (*வித்யை*) தரப்பட்டுள்ளன; இவ்வுபாசனை/ வித்யைகளைக் கடைப்பிடிப்பவர்களுக்கு, இவை சொர்க்கத்தையும், முக்தியையும்

தரவல்லவை. வேதங்கள் பரம்பொருளின் வெளிப்பாடானவையாலும், சொர்க்கம் மற்றும் மோட்சத்தை அடையும் மார்க்க-தர்ஷிணியானதாலும், அவை இறை-பாதங்களாகவே கருதப் படுகின்றன. இப்படியாக, வேதங்களில் இறைபாதங்கள் பிரகாசிக்கின்றன. பரம்பொருளாகவும், மேல் லோகங்களாகவும் பிரகாசிக்கும் இறை-பாதங்கள், வேதங்களாகவும் பிரகாசித்து அவைகளை பெறுவதற்கான வழியாகவும் அமைகின்றன.

(4) **"வெம் காடும் புனமும்"** : ஜீவர்கள் தங்கள் கர்மங்களுக்கேற்ப விதவிதமான சுகதுக்கங்களை அநுபவித்து, மனம் சுத்தமடைந்து, மேலானப் பிறவிகளையடைந்து கடைசியில் இறைவனை நாடியடைவதற்கு உறுதுணையாக இருக்கும் ஒரு அரங்காக இப்பிரபஞ்சம் இறைவனால் படைக்கப்பட்டது. ஜீவாத்மாக்கள் முக்திபெற தகுதி பெற்றவுடனே, அவர்களது பக்தியினால் ஈர்க்கப்பட்டு அவர்களுக்கு முக்தியை அருளுவதற்காக இறைவன் இப்பூமியில் தோன்றுகிறார். வள்ளியின் பக்தி, கந்தப் பெருமானை அவருடைய இருப்பிடத்திலிருந்து இழுத்து, அவளைத் தேடி சுனையிலும், அருவித்துறையிலும், காடுகளிலும், தினைப் புனங்களிலும் அலைய வைத்தது. இது *ஸ்கந்த லீலை* – கந்தப் பெருமானின் தெய்வீகத் திருவிளையாடல். இப்பிரபஞ்சம் முழுவதும், அதிலும் நமது வாழ்க்கை நடைபெறும் இப்பூவுலகம், இறைவனின் திருவிளையாடல் அரங்கமும், அதேசமயம் ஜீவர்களின் அநுபவ-முன்னேற்றக் களமுமாகிறது. இது ஒரு விளையாடும் இடம், ஜீவர்களும் இறைவனும் சந்திக்குமிடம். இறைவனின் பாதங்கள் காடுகளிலும் கழனிகளிலும் பிரகாசிக்கின்றன என்று அருணகிரியார் கூறியதற்கு காரணம் உண்டு. இங்குதான் முருகப் பெருமான் வள்ளியைத் தேடிச்சென்று, சந்தித்து, ஸ்வீகரித்தார் என்பதை அழகாகவும் உருவக வடிவாகவும் அடையாளப்படுத்திடவே அவ்வாறு கூறியுள்ளார். பரம்பொருள் தன்னையேத் தியாகம் செய்து இப்பிரபஞ்சமாக பிரகாசிக்கிறது. அது அப்பரம்பொருளின் ஒரு *பாதம்*, அதாவது அவரின் பரிமாணத்தில் நான்கில் ஒரு பங்கு; அவரின் முக்கால் பங்கு என்றும் அழியாதது மற்றும் நித்தியமானது மற்றும் தோன்றாதது. அப்பாதம் இப்பிரபஞ்சமாக பிரகாசிக்கிறது.

ஆக, பரம்பொருளாக (வீடு), மேல் லோகங்களில், வேதங்களில், இப்பூமியில், என அனைத்திலும் இறை-பாதங்கள் கமழ்கின்றன, பிரகாசிக்கின்றன. அவருடைய பாதங்களே ஆதாரமும், மார்க்கமும் மற்றும் அடையப்படும் குறிக்கோளுமாக இருக்கின்றன.

இவை அனைத்தின் மூலம் அருணகிரியார், இறை-பாதங்கள் அருளப்பெற்ற ஜீவன்முக்த மகாபுருஷன் உணரும் இறைவனின் எங்கும் வியாபித்திருக்கும் (பிரகாசிக்கும்) தன்மையை வெளிப்படுத்துகிறார். முருகப் பெருமான் தன்னுடைய பாதகமலங்களை ஒருவன் சிரத்தில் சூடும்படி தந்தருளும்போது, அவன் அப்பாதங்களின் உலகளாவிய (அண்டம்) தரிசனத்தைப் பெறுகிறான், அப்பாதங்களை எங்கும், எதிலும் காண்கிறான். பாதங்கள் சிரத்தில் சூட்டப்படுவது ஒருமுறையாகவே இருந்தாலும்கூட, அதன் பலனாக அவற்றை அனைத்திலும் காணும் பாக்கியம் என்றென்றைக்கும் நீடித்திருக்கிறது; ஏனெனில், "பாதங்கள்" தந்தருளுதலும் "வேல்" வெளிப்படுதலும் ஒன்றே --- "வேல்" என்பது பேருணர்வு, 'வேல்-வெளிப்படுதல்' என்பது இதயத்தில் நிலைத்திருக்கும் ஓர் உள்ளுணர்வு நிலை. எனவே, பாதங்கள் தரப்பட்டதை "**தந்தது**" என்று **இறந்த** காலத்திலும், அப்படி தரப்பட்ட பாதங்கள் பிரகாசிக்கும் இடங்களை வர்ணிக்கும்போது "**கமழும்** கழல்" என்று **நிகழ்** காலத்திலும் கூறப்பட்டுள்ளன.

இறை-பாதங்களின் மகிமை பற்றி மேன்மேலும் சொல்லிக் கொண்டே போகலாம், ஆனால் இப்போதைக்கு இது போதும்! முருகப் பெருமானின் வேல் எத்தகையது என்று சற்று பார்ப்போம். அதன் மகிமையும் பாதங்களைப் போன்றதே! பாதங்களும், வேலும் சேர்ந்தே செல்கின்றன என்றும், அவை இரண்டும் ஒன்றே என்றெல்லாம் நாம் ஏற்கனவே பார்த்துள்ளோம். இவ்வுண்மையானது இச்செய்யுளில் மிகவும் அழகாக வெளிப்படுத்தப்படுவதைக் காண்கிறோம்: ''சாடும்'' (அழித்திடும்) மற்றும் "தனி" (ஒப்பிலா) என்ற இரு அடைமொழிகள் தரப்பட்டு வேலின் இரு அம்சங்களான உலக சம்பந்தப்பட்ட (relative aspect) மற்றும் நித்திய உண்மைத் தன்மைகள் (Absolute aspect) போற்றப்படுவதைக் காணலாம்.

வேல் ஒப்பில்லாதது; அது பரம்பொருள் (நித்திய உண்மை); வேலும் இறைவனும் ஒன்றே (இரண்டும் வேறுபட்டவை அல்ல); அதுவே தூய-உணர்வு என்று செய்யுள்-40ல் பார்த்தோம். **"தனி"** (ஒப்பில்லா) என்ற சொல் வேலின் பரம்பொருள் தன்மையைக் குறிக்கிறது; மேலும், அது **"சாடும்"** வேல், அதாவது தீயவைகளை அழித்திடும் தன்மை கொண்டது. வேல் எதை அழிக்கிறது? அது அகங்காரத்தின் மொத்த உருவமாக இருந்த அசுரன் சூரபத்மன் மற்றும் அவனுக்கு துணைநின்ற உற்றார் உறவினர் அனைவரையும் முறியடித்து வெற்றி கொண்டு. தேவர்களுக்கு விடுதலையைப் பெற்றுத் தந்தது. அசுரர்கள் வெளியிலுள்ள எதிரிகள்; அவர்களை அழித்த வேல், *அவித்யை* (அறியாமை), *காமம்* (ஆசை) மற்றும்

கர்மம் (பிரயத்தனம் – ஆசைகளைப் பூர்த்திசெய்ய செய்யப்படும் செயல்கள்) ஆகிய உள் எதிரிகளையும் அழிக்கிறது. வேல், சாதகனின் சாதனை-சக்தியாகி, அவனுடைய புத்தியைக் கூர்மையாக்கி அறியாமையைத் துளைத்து அழிகிறது. இந்த "சாடும்" (அழிக்கும்) என்பது வேலின் இவ்வுலக சம்பந்தப்பட்ட அம்சம் (புலன்களுக்கு புலப்படும் அம்சம்). இவ்வாறு அறியாமை அழிக்கப்பட்டபின், அந்த வேல் தூய-உணர்வாக (சைதன்யமாக) இருந்து பிரகாசிக்கிறது. வேல், அறியாமையை அழிக்கும் சாதனமாக தன்னை வெளிப்படுத்திக் கொண்டு அதை அழித்த பின்னர், அடையப்பட்ட இலக்காகவே அது (தனித்து) நிற்கிறது. ஆக, வேலே (இலக்கை அடைவதற்கான) சாதனமும், இலக்கும்; அசைவதும், அசையாததும் அதுதான்; உலக சம்பந்தப்பட்டதும், பரம்பொருளும் அதுவே; 'சாடும்' (அழிப்பதும்), 'தனி'த்து நிற்பதும்' (ஒப்பற்றதும்) அதுவே.

இந்த அரிய செய்யுளில்தான் 'வேல்' மற்றும் 'பாதம்' ஆகியவைகளின் 'உலக சம்பந்தப்பட்ட' மற்றும் 'எல்லையற்ற பரம்பொருள்' நிலைகள் ஆகிய இரண்டும், ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன், மிகஅழகாக இணைக்கப்பட்டுள்ளன; அதாவது, இது ஆத்மானுபூதியடைந்த ஒரு ஜீவன்முக்தரின் நிலைமையை மிக நேர்த்தியாக சித்தரிக்கிறதென்று காட்ட. 'உலக சம்பந்தப்பட்ட நிலை' மற்றும் 'எல்லையற்ற பரம்பொருள் நிலை' ஆகிய இரண்டு நிலைகளையும் ஒரே சமயத்தில் அநுபவிக்கும் தனிச்சலுகையை அவர் ஒருவரே பெற்றுள்ளார் . இதுபற்றி ஸ்வாமி சிவானந்த மகராஜ் *'குரு தத்துவம்'* என்ற தனது நூலில் பின்வருமாறு கூறுகிறார்: "குரு, மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையிலான ஒரு இணைப்பு போன்றவர். அவர் தன்னை "இகத்திலிருந்து" "பரத்திற்கு" உயர்த்திக் கொண்டவர்; அதனால், அவ்விரண்டு நிலைகளுக்கும் எவ்விதத் தடைகளுமின்றி நுழைவுரிமை உள்ளவர். நித்தியத்தின் (பரத்தின்) நுழைவாயிலில் நின்றுகொண்டு; அங்கிருந்து கீழே குனிந்து போராடிக் கொண்டிருக்கும் ஜீவர்களை ஒரு கையால் தூக்கி, மற்றொன்றால் நித்திய மகிழ்ச்சியும் எல்லையற்ற உண்மை-உணர்வு நிலையுமான பரலோகத்தில் இருத்துகிறார்."

சமாதி நிலையில் (செய்யுள்- 42), 'வேல்' என்பது 'தனி' (ஒப்பற்றது) என்று மட்டும், 'பாதம்' என்பது 'நெறி' ((முக்தி/ மோட்சம்) என்று மட்டும் அனுபவிக்கப்படுகிறது; அதாவது, அவற்றின் எல்லையில்லாப் பரம்பொருள் அம்சத்தில் மட்டும்தான். சமாதியிலிருந்து ஜீவன்முக்தனாக வெளிப்பட்ட பின்னர், (இச்செய்யுளில் சொல்லியபடி) அவைகளிரண்டும் அவைகளின் இரண்டு அம்சங்களிலும் அனுபவிக்கப் படுகின்றன – அதாவது, 'வேல்', 'தனி'

மட்டுமல்லாமல் 'சாடும்' ஆகவும்; 'பாதம்', 'மோட்சம்' (வீடு) மட்டுமல்லாமல், 'காடும் புனமும்' (பூமி) ஆகவும் -- அவற்றின் இரு (பர மற்றும் இக) அம்சங்களிலும் அனுபவிக்கப் படுகின்றன. இவ்வாறாக, வேல் வெளிப்படுத்தப்பட்டதில் (செய்யுள்-42), இறை-பாதங்களும் அருளப்பட்டன என்ற குறிப்பு தொக்கியிருப்பதை இச்செய்யுள் தெளிவுபடுத்துகிறது. ஆனால், செய்யுள்-42ல் சமாதிநிலையின் அநுபவம், இங்கோ ஜீவன்முக்தனின் அனுபவம்.

அங்கு செய்யுள்-42ல் வேல் வெளிப்படுவதும், இங்கு இறை-பாதங்கள் அருளப்படுவதும் ஒன்றே; இரண்டும் குறிப்பது ஒன்றையே, அதாவது முக்தி அடைவதையே. செய்யுள் 42ல், முக்தி நிலையானது 'நெறி' என்றும் 'வேல்' என்றும் குறிக்கப்பட்டது, அதாவது 'நெறியை' மற்றும் 'வேலை' என்று. இப்பொழுது, இச்செய்யுளில், அதே முக்தி ('வீடு') இறைபாதங்களாகக் குறிக்கப்படுகிறது. ஆகவே, வேல்-வெளிப்படுத்தப்படுவது, மற்றும் இறை- பாதங்கள் அருளப்படுவது ஆகிய இரண்டும் ஒரே சமயத்தில் நடந்தேறும் சம்பவங்கள்தான், – முன்னது உள்ளே உணரப்பட்ட உணர்வு என்றும், பின்னது வெளிச் செயல் என்றும் சொல்லலாம்.

செய்யுள் 21ல், "கருதா மறவா நெறி காண" – அதாவது "நினைப்பும் மறப்புமற்ற **நிலையான முக்தியையடைய**", --- இறை-பாதங்களைத் தந்தருளும்படியான பிரார்த்தனை செய்யப்பட்டது. செய்யுள் 42ல், "குறியைக் குறியாது குறித்தறியும் நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலும்", 'அறியாமையும் அற்றது' எனப்படுகிறது; அதாவது, முக்தி அடைந்ததைக் குறிக்கிறது. இதிலிருந்து, இறை-பாதமும் வேலும் ஆகிய இரண்டும் முக்தியையே குறிக்கின்றன என்பது தெளிவாகிறது.

செய்யுள்-40ல் குறிக்கோளை அடையும்வரை இடைவிடாத தியானம் 'வேல்'இன் மேல் மேற்கொள்ளப்பட்டது, ஆனால், செய்யுள்-41ல் வேண்டப்பட்டது இறை-பாதங்களில் தன்னை இருத்திக்காத்து உடனே ஜீவன்முக்தி தந்தருளுவதற்கே; செய்யுள்-41ல் அப்படி செய்யப்பட்ட பிரார்த்தனைக்கிணங்கி 'வேல்' தான் அருளப்பட்டது (செய்யுள்- 42); மேலும், செய்யுள்-42ல் 'வேல்' வெளிப்படுத்தப்பட்டு அருளப்பட்டதென்றாலும், செய்யுள்-44ல் இறை-பாதங்களைத் தந்தருளியதற்காக ஆச்சரியத்துடன் நன்றி தெரிவிக்கப்- படுகிறது. எப்படி மிகவும் நேர்த்தியாக 'வேல்' மற்றும் 'இறை-பாதங்களை' மாற்றி மாற்றி பிரயோகித்து அருணகிரியார் அவ்விரண்டும் குறிப்பது ஒன்றையே என்பதை தெளிவாக்குகிறார் பாருங்களேன்! இதை உறுதிபடுத்தவே, இச்செய்யுளில் வேல் மற்றும் இறை-பாதங்கள் ஆகிய

இரண்டையும் ஒன்று சேர்த்து, 'சாடும் தனி வேல் முருகன் சரணம்' (பாதம்), என்றுகூறி, அவ்விரண்டின் உலகசம்பந்தப்பட்ட அம்சம் மற்றும் எல்லையற்ற (நித்திய) பரம்பொருள் அம்சம் ஆகிய இரண்டையும் போற்றுகிறார்.

"குறியைக் குறியாது குறித்தறியும் நெறி" (செய்யுள்-42) மற்றும் "பேசா- அநுபூதி" (செய்யுள்-43) நிலைகளை இறைவனுடன் அனுபவிக்கும் *செயலற்ற-சமாதிநிலை* என்று கொள்ளலாம்; அதாவது, சமாதியில் இருக்கும்போது அனைத்து அவயவங்களும் செயல் அற்றுப்போன நிலை. அச்சமாதி நிலையான "பேசா- அனுபூதி"யிலேயே ஒருவன் நிலைத்து இருந்துவிடுவதில்லை, அதிலிருந்து வெளிப்படத்தான் செய்கிறான்; எனினும், அவன் இதயத்தில் இறைவனுடன் "தொடர்பு" அறுபடாமல் இருப்பதோடல்லாமல், அவ்விறைவனை எங்கும் எதிலும் காண்கிறான் என்ற ஒரு இரகசியம் இச்செய்யுளில் (44ல்) வெளிப்படுத்தப்படுகிறது. எனவே, இச்செய்யுளில் விளக்கப்பட்ட நிலையை *இயங்கும் சமாதிநிலை* என்று கொள்ளலாம், அதாவது சமாதிநிலையிலிருந்து ஜீவன்முக்தனாக வெளிவந்தவன் நித்தியமாக, சாசுவதமாக இறை-அநுபவத்தில் நிலைத்திருந்து செயலாற்றுகிறான் என்று கொள்ளலாம். இவ்வாறு, அந்த பெறுதற்கரிய மிக உன்னத இறை-அநுபூதி உச்ச நிலையிலிருந்து *இயங்கும் சமாதிநிலை*க்கு வரும் மகாத்மாக்களால் மட்டுமே உலகிற்கு சேவை செய்யவும் சாதகர்களுக்கு வழிகாட்டவும் இயலும். இவ்வரிய மகாபுருஷர்கள், அரும் ஆன்மீகப்பணி ஆற்றிடுமாறு தெய்வக் கட்டளையைப் பெற்று, அந்த தெய்வீகப் பணியை செவ்வனே நிறைவேற்றிடத் தேவையான அசாதாரணமான சக்தியையும் பெறுகின்றனர். இது ராமகிருஷ்ண பரமஹம்சர், ரமண மகரிஷி, ஸ்வாமி சிவானந்த மகராஜ், மகரிஷி அரவிந்தர், போன்ற அநேக மகாத்மாக்களின் வாழ்வில் காணப்படுகிறது.

இவ்வாறாக, இச்செய்யுளின் அர்த்தமானது மிகவும் எளிதானதாக இருப்பினும், அதன் தாக்கங்கள் ஆழமானதாகவும், அனைத்து திசைகளிலும் பரவுவதாகவும் இருப்பதைக் காண்கிறோம்.

==========

செய்யுள் - 45

==========

கரவாகிய கல்வியுளார் கடைசென்று
இரவாவகை மெப்பொருள் ஈகுவையோ
குரவா குமரா குலிசாயுத குஞ்-
சரவா சிவயோக தயாபரனே.

பொழிப்புரை: "குருவே! குமரப் பெருமானே! வஜ்ராயுதத்தை ஏந்திய பெருமானே! தெய்வயானையின் நாயகனே! அடியார்க்குச் சிவ-யோகத்தை வழங்கும் கருணாமூர்த்தியே! தாம் பெற்ற கல்வி அறிவைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளாமல் மறைத்து வைப்பவர்களிடம் சென்று யாசிக்கா வண்ணம் மெய்ப்பொருள் ஞானத்தை எனக்குத் தாங்களே தந்தருள்வீராக!"

விளக்கவுரை

அந்த 'நலம்' எனப்படும் இறைவனை அடைவதே சாதகனுடைய குறிக்கோளாக இருந்தாலும் (செய்யுள்-2), அந்தக் குறிக்கோளை அவன் அடைந்தபின், அவன் நிறைவேற்றுவதற்கான கட்டளைப் பணிகளை இறைவன் வைத்திருக்கிறார். இறைவன் யாரை ஜீவன்முக்தனாக ஆக்கினாரோ, அவனிடமிருந்தும் அவன் மூலமும் தனது வேலைகளைச் செய்துகொள்வது இயற்கை. இவ்வாறு, உயரிய இறை-அநுபூதியைத் தந்த அந்த ஜீவன்முக்தனுக்கு (செய்யுள் 42, 43, & 44), ஆன்மீகப் பணி செய்யுமாறு அருளானை புரிகிறார்.

பேசா அநுபூதியை அடைந்த பாக்கியசாலி அதிலேயே திளைத்திருந்து விடுவதில்லை; மாறாக, அதிலிருந்து வெளிவந்து சுதந்திரமாக உலாவி, மக்களுக்குச் சேவை புரிகிறார். நம் போன்ற சாதாரண மனிதர்கள் அவருடைய உயர்ந்த நிலையைப் புரிந்து கொள்வது கடினம், அது நமது கற்பனைக்கு எட்டாதது. அந்த ஜீவன்முக்த சந்நியாசிக்கு, சாதகர்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்ற தெய்வக் கட்டளையானது நிறைவேற்றப்பட காத்திருக்கிறது. எப்படி அவர் சாதகனாக இருந்தபோது இறைவனே குருவாக வந்து அவருக்கு வழிகாட்டினாரோ, அப்படியே இப்பொழுது மற்ற சாதகர்களின் ஆன்மீக தேவைகளைப் பூர்த்தி செய்ய இறைவன் அவர்

மூலம் செயலாற்றுகிறார். எனவே, அருட்தொண்டர்கள், முனிவர்கள் மற்றும் ஜீவன்முக்தர்கள் இறைவனின் பிரதிநிதிகளாகவும், பூமியில் நடமாடும் தெய்வங்களாகவும் கருதப்படுகிறார்கள். இப்படியாக, ஆன்மீக அறிவுரைகளைப் பெறுவதற்காக அவரிடம் வருபவர்களுக்கு அறிவுரை அளித்து, அவர்கள் சுதந்திரமாக எங்கும் வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை நாடிவரும் சாதகர்களின் தேவைகளுக்கேற்ப அவர்களுக்குத் தரப்படும் அறிவுரைகளும் அதன் செயல்முறைகளும் மாறுபடுகிறது. எனவே, இச்செய்யுள் முதல் செய்யுள்-50 வரை உள்ள செய்யுள்களில் கூறப்படும் அறிவுரைகளில் தொடர்பு இருக்காது, இருக்கவேண்டிய அவசியமுமில்லை. ஆனால் இச்செய்யுள்கள் அனைத்தும் மிகவும் பிரத்யேக (தனியான) ரகத்தைச் சார்ந்தவை என அறிவோமாக. இவை தனித்துவமானவை, மிகவும் உயரிய அறிவுரைகளைத் தருபவை. எப்பொழுதும் இறை-உணர்விலேயே வாழ்ந்து கொண்டிருக்கும் ஜீவன்முக்தர்களின் உயரிய ஆன்மீக மனநிலையையும் எண்ணங்களையும் வெளிப்படுத்துபவை இச்செய்யுள்கள். ஆன்மீக முன்னேற்றத்தை அடைய விழையும் பல தரப்பட்ட சாதகர்கள் அவர்களைச் சூழ்ந்து, தங்களுக்கு வழிகாட்ட வேண்டுவதால், அவ்வறிவுரைகள் பெரிதும் மாறுபடுகின்றன; என்றாலும் தீவிர சாதகர்களுக்கு அவை அரும்பெரும் திடமான அறிவுரைகளாக அமைகின்றன. சுருங்கச்சொல்லின், அவை உண்மையிலேயே ஞானக்களஞ்சியம். மேலும், இச்செய்யுள்கள் ஆன்மீகத்தில் பல்வேறு துறைகளில் அருணகிரியாருக்கிருந்த ஞானத்தைக் காட்டுகின்றன. எனவே, இச்செய்யுள்களில் விதவிதமான தனித்தன்மையைக் காண்கிறோம். இச்செய்யுள்கள் உயர்ந்த ஆன்மீக உண்மைகளை எடுத்து இயம்புகின்றன. அவை ஆழ்ந்த அர்த்தத்தை வெளிப்படுத்தி, தியானத்திற்கான ரகசிய உத்திகளைத் தருகின்றன; அவை சாதகர்களுக்கு சரியான வழிகாட்டுதலைச் செய்கின்றன. எனவே இச்செய்யுள்கள் அசாதாரணமான மகத்துவம் கொண்டவை. இச்செய்யுள்களில் தரப்படும் அறிவுரைகளை அந்த ஜீவன்முக்தர் தந்ததாகவோ, அல்லது அருணகிரியார் மற்றும் அவரைப் போன்ற மகான்கள் தந்ததாகவோ கொள்ளலாம். ஆன்மீக முக்தி என்ற குறிக்கோளை அடைந்திட அழைத்துச் செல்லும் வெவ்வேறு யோக மார்க்கங்களை அருணகிரியார் இச்செய்யுள்களில் விளக்கித் தனது திறமையை வெளிப்படுத்துகிறார்.

“ஓ குருவே! குமரப் பெருமானே! சிவ-யோகத்தை வழங்கும் கருணாமூர்த்தியே! தாம் பெற்ற கல்வி அறிவைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளாமல் மறைத்து வைப்பவர்களிடம் சென்று யாசிக்கா வண்ணம் மெய்ப்பொருள் ஞானத்தை எனக்குத் தாங்களே

தந்தருள்வீர்!" -- இறைவனைத் தெய்வீகக் குருவாகவும், கருணா மூர்த்தியாகவும், அடியார்க்குச் சிவ-யோகத்தை தருபவராகவும் அறிந்து, அனுபவித்து, ஆத்மானுபூதியடைந்த இந்த ஜீவன்முக்தர், சில சாதகர்கள் ஞானசாகரமாயிருக்கும் இறைவனிடமிருந்தே ஞானத்தைப் பெற முயலாமல், தாங்கள் கற்றதைப் பிறருக்குச் சொல்லித் தர விருப்பமில்லாத மெத்தப் படித்த (ஆத்ம-ஞானமில்லாத) பண்டிதர்களிடம் சென்று அறிவுரைகளை வேண்டுவதைப் பார்த்து வருத்தப்படுகிறார். எனவே, இங்கு, சிவ-யோகத்தைத் தந்தருளும் முருகப் பெருமானிடமே ஞானம் தந்திடுமாறு பிரார்த்திக்கச் சொல்லி சாதகர்களுக்கு புத்திமதி வழங்குகிறார். சாதகர்கள் வேண்டும் ஞானத்தை பெற்றிட இறைவனிடமே பிரார்த்தனை செய்தால், அவரே தேவையான புத்தகத்தை அளித்துப் படிக்க வைப்பது (அ) ஸத்-சங்கத்தில் பங்கேற்க வைப்பது (அ) ஆன்மீக சொற்பொழிவுகளை கேட்க வைப்பது என்று ஏதோ ஒன்றின் மூலம் ஞானம் பெற வழி செய்து அருள்புரிவார்; சரியான தருணத்தில் அவரே குருவாகவும் வந்து அறிவுரைகளைத் தருவார், (செய்யுள்-17ல் விவரிக்கப்பட்டதுபோல்).

இந்த ஜீவன்முக்தர், சாதகர்கள் அனைவருக்கும் பின்வருமாறு அறிவுறுத்துகிறார்: "எல்லா கல்வியின் சாரம் பரம்பொருள் ஞானம், அதை இறைவனிடமிருந்தே கேட்டுப் பெறுங்கள், அவ்வாறு செய்வதன் மூலம் கற்றதை மூடி மறைத்து வாழும் பண்டிதர்களிடம் சென்று கல்வி அறிவை இறைஞ்சி வேண்டும் நிலையைத் தவிர்க்கலாம்." இந்த அறிவுரையின் அர்த்தம், அவர் கல்வி கற்கவேண்டாமென்று சொல்லவில்லை. தங்களுக்குத் தெரிந்ததைப் பிறருக்குக் கற்றுக் கொடுக்கப் பிரியம் இல்லாதவர்களிடம் செல்வதைத்தான் அவர் கண்டிக்கிறார். கற்க வேண்டியது அவசியம். கல்வியும் இறைவனின் கொடையே. புத்தகங்கள், ஆசிரியர்கள் மூலம் நாம் பெறும் கல்வியும் மற்றும் நமது அறிவும் (உள்ளிருந்து உதிக்கும் ஞானமும்) ஆகிய இரண்டுமே இறைவனிடமிருந்துதான் வருகின்றன (செய்யுள்-17). எனவே, கல்வி கற்பதில் ஒரு தவறுமில்லை, ஆனால், ஆன்மீகமற்ற, கல்வியின் குறிக்கோளை இழந்த, வெறும் பகட்டாக வாழ்பவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள முயற்சிப்பதை கண்டிக்கிறார்.

ஒரு பெரிய விதி: "பிறருக்கு அளியுங்கள்; அது உங்களுக்கு பத்து மடங்காக, நூறு மடங்காக, எண்ணற்ற மடங்காக திருப்பி அளிக்கப்படும்." குறிப்பாகக் கல்வி விஷயத்தில், அறிவைப் பகிர்வதால் ஒருவன் எதையுமே இழப்பதில்லை. செல்வத்தைக்

கொடுத்தால் அது குறையலாம். ஆனால், கல்வி அறிவைப் பிறருடன் பகிர்ந்துகொண்டால் அது மேலும் மேலும் வளரும். "தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு" என்று வள்ளுவர் பெருந்தகையார் கூறுவது போல. ஒருவர் செல்வம், உணவு, பொருள்கள் ஆகியவற்றை மற்றவர்களுக்குக் கொடுக்கும்போது அது அவரிடம் குறைகிறது, மேலும் இவை, பெறுபவர்களின் தேவையை ஒரு சிலகாலம் மட்டுமே பூர்த்தி செய்யும். ஆனால், அறிவுக் கொடை (ஞான தானம்) அதைப் பெறுபவரிடம் நீடித்துத் தங்குகிறது. ஞான தானத்தில், கொடுப்பவருக்கு எதுவும் குறைவதில்லை, அதே சமயம் பெறுபவனும் அதை இழப்பதில்லை. இருவருமே என்றென்றைக்கும் நன்மை அடைகிறார்கள். ஞான தானத்தின் மகிமை, மற்ற எல்லா தானத்தையும் விட மிகவும் பெரியது. அப்படி இருக்கும்பொழுது, எதற்காக ஒருவன் ஞானத்தை பிறருக்குக் கொடுக்காமல் மறைக்க வேண்டும்? இருப்பினும், மெத்தப் படித்தவர்கள் பொதுவாகத் தங்களுக்குத் தெரிந்ததை மற்றவர்களிடம் பகிர்ந்திட சுலபத்தில் முன் வருவதில்லை. அவர்கள் அவ்வாறு மறைத்தால், இறைவனும் தன்னை அவர்களிடமிருந்து மறைத்துக் கொள்வானென்று அவர்கள் புரிந்துகொள்வதில்லை.

எதனால் மக்கள் தாங்கள் கற்றதை மறைத்து வைக்க முயல்கிறார்கள்? மற்றவர்களிடம் தங்கள் அறிவை பகிர்ந்து கொண்டால், தங்களது 'வியாபாரம்' பாதிக்கப்படும் என்று பயப்படுவதே அதற்குக் காரணம். தாங்கள் கற்றறிந்த அறிவை, செல்வம், பதவி, புகழ், சமூக மதிப்பு, செல்வாக்கு, ஆகியவைகளை அடைவதற்காகப் பயன்படுத்துகிறவர்கள், அவ்வறிவை மற்றவர்களுக்குப் போதிக்க விரும்புவதில்லை; ஏனெனில், அவ்வாறு செய்தால் அவர்கள் இவர்களுக்குப் போட்டியாக வந்து விடுவார்களோ என்று பயம். ஆனால், உண்மையில் கல்வி கற்பதன் குறிக்கோளே வேறு. அதன் குறிக்கோள் திருவள்ளுவர் சொல்வதுபோல், "இறைவனைத் தொழுவதற்கே (அடைவதற்கே)." *("கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்.")* தங்கள் அறிவை அதன் உண்மையான குறிக்கோளான இறைவனை அடையப் பயன்படுத்துபவர்கள், தங்களுக்குத் தெரிந்ததை உண்மையான சாதகர்களுடன் பகிர்ந்து கொள்ளத் தயங்குவதில்லை. அத்தகைய உயர்ந்த ஆத்மாக்களே குருமார்கள், அவர்கள் இயற்கையாகவே இரக்கமும் கருணையும் மிக்கவர்கள், அவர்களிடமிருந்துதான் ஞானத்தைப் பெறவேண்டும். அவர்கள் இறைவனின் பிரதிநிதிகள்.

உயரிய ஆத்ம ஞானத்தைத் தருமாறு இறைவனிடமே பிரார்த்திக்க வேண்டும், அவர் ஒருவரால் மட்டுமே அதனை அருள முடியும். நன்கு படித்தவர்களால் வெறும் தகவல்கள் எனப்படும் நூல் அறிவை மட்டுமே வழங்கிட முடியும்; அவர்களால் ஆத்ம ஞானத்தை தருவதற்கு இயலாது, ஏனெனில் அது அவர்களிடம் இல்லை. கல்வி கற்பதற்காகவோ (அ) ஞானம் பெறுவதற்காகவோ யாரேனும் ஒருவரிடம் சென்றுதான் தீர வேண்டும். அப்படி இருக்கும்பொழுது, எதற்காக மனிதனிடம் செல்ல வேண்டும்; இறைவனிடமே ஏன் நேரடியாகப் பிரார்த்திக்கக் கூடாது? பகட்டுக்கார படித்த மனிதர்களுக்கும், இறைவனுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை எவ்வளவு அழகாக அருட்செல்வர் எடுத்துரைக்கிறார் பாருங்கள்! இம்மேதைகளிடம் இருப்பது ஆத்ம ஞானமல்ல, வெறும் நூல் அறிவு மட்டுமே, இருந்த போதிலும் இவர்கள் அதை மறைத்திட முயலுகிறார்கள். அதேசமயம், இறைவன் சிவ- யோகத்தை அருளுபவர். சிவ-யோகம் அல்லது சிவ-ஞானமென்பது அத்வைத (இரண்டற்ற பேருணர்வு) நிலை, அதை அருளிட இறைவன் ஒருவரால் மட்டுமே இயலும். மேலும், அவரோ கருணையின் மொத்த உருவம். உண்மையாகவே சிவ-ஞானத்தைப் (இறைவனை) பெற்றிட விரும்புவோர், நேர்மையுடனும், சரியான முறையிலும் இறைவனை அணுகினால், அதைத் தந்திட இறைவன் எப்பொழுதும் தயாராக இருக்கின்றார்.

ஞானத்தைப் பெற்றிட இறைவனை எப்படி அணுகுவது என்று ஒருவன் வியக்கலாம்? இறைவனே குருவாக வருகிறாரென்று ஏற்கனவே பார்த்தோம். எனவே இறைவனைக் “குரவா” (குரு) என்று அழைக்கிறார் அருணகிரியார்; ஏனெனில், ஒருவரின் நேர்மை மற்றும் தீவிர ஏக்கம் ஆகியவைகளுக்கேற்ப, அதற்குரிய வேளையில், இறைவனே மனித உருவில் குருவாக வருகின்றார். இறைவனே அனைவரின் உண்மையான குரு. எனவே, இறைவனுக்கும் குருவிற்குமிடையே ஒருவித வித்தியாசமும் பார்க்கக்கூடாது. இறைவனே நம் குருவாக வருகிறார் என்ற உண்மை, அவன் அருள்கொண்டு அறிபவர்களுக்கு மட்டுமே தெரியும் (செய்யுள்-13).

இப்பொழுது, குருவை எப்படி அடையாளம் கண்டு கொள்வது என்பதுதான் சாதகர்களின் அடுத்த பிரச்சனையாகிறது. இதைப்பற்றி சுவாமி சிவானந்த மகராஜ் கூறுவதைக் காண்போமா:

“ஒரு அசல் குருவின் பண்புகள் பின்வருமாறு: இப்பண்புகள் ஒருவரிடம் இருப்பதைக் கண்டால், நீங்கள் அவரை உடனே குருவாக

ஏற்றுக்கொண்டு விடுவீர்களாக. 'அசல் குருவானவர் *பிரம்ம-நிஷ்டனாகவும்* (பிரம்மனில் நிலைபேறு பெற்றவர்), *பிரம்ம-ஸ்ரோத்திரியனாகவும்* (வேதங்களில் கரை கண்டவர்) இருப்பார். அவர் ஆத்மாவைப் பற்றியும், வேதங்களைப் பற்றியும் முழுமையான ஞானம் கொண்டிருப்பார். சாதகர்களின் சந்தேகங்களை அவரால் சரியாகத் தீர்த்து வைக்க முடியும். சமச்சீரான பார்வையும் சமநிலையான மனதும் கொண்டிருப்பார். அவர் விருப்பு-வெறுப்பு (*ராக-துவேஷம்*), களிப்பு (*ஹர்ஷ*), சோகம் (துக்கம்), அகங்காரம், கோபம், காமம், லோபம் (பேராசை- கஞ்சத்தனம்), மோகம் (பற்று), மதம் (ஜம்பம்), பொறாமை, ஆகியவைகள் இல்லாதவராய் இருப்பார். அவர் கருணைக் கடலாக இருப்பார். அவர் சன்னிதானத்தில், ஒருவன் சாந்தி பெறுகிறான், அவன் மனதும் உயர்வு அடைகிறது. வெறுமனே அவர் சன்னிதானத்தில் இருப்பதினாலேயே, சாதகர்களின் அனைத்துச் சந்தேகங்களும் நிவர்த்தியாகின்றன. எவரிடமிருந்தும் எதையும் அவர் எதிர்பார்ப்பதில்லை. அவர் பின்பற்றத்தக்க தூய்மையான ஒழுக்கம் உடையவர். அவர் முழுமையான ஆனந்தத்திலும் பேரின்பத்திலும் திளைப்பவர். அவர் (தன் ஞானத்தைக் கொடுக்க) உண்மையான சாதகர்களைத் தேடிக் கொண்டிருப்பார்.'

"வெறுமனே நூல்களைப் படித்துப் பெற்ற அறிவு மட்டும் ஒருவரை குருவாகச் செய்திடாது. வேதங்களை நன்கு அறிந்தவராகவும், நேரடியான அநுபவங்கள் மூலம் ஆத்ம ஞானம் பெற்றவராகவும் உள்ள ஒருவரையே குருவாக வரிக்க இயலும். ஒரு ஜீவன்முக்தரே (ஆத்மானுபூதியடைந்த முனிவர்) உண்மையான குரு (ஆன்மீக ஆசான்). அவரே ஸத்-குரு ஆவார். அவர் பிரம்மத்துக்குச் சமமானவர் (பரம்பொருள், பரமாத்மா). அவர் பிரம்மத்தை அறிந்தவர் (அடைந்தவர்), அதாவது பிரம்மமாகத் தன்னை உணர்ந்தவர்."

இதிலிருந்து கல்விக்கும் மெய்ஞ்ஞானத்திற்குமுள்ள வித்தியாசம் தெளிவாகிறது.

ஒரு ஆன்மீக ஆசானிடம் (குருவிடம்) படிப்பதற்கும், படித்த பண்டிதரிடம் படிப்பதற்குமிடையே நிறைய வித்தியாசங்கள் உள்ளன. ஆன்மீக ஆசானான குரு, ஒரு பிரம்ம-ஸ்ரோத்திரியராகவும், பிரம்ம-நிஷ்டராகவும் இருப்பதால், அவருக்கு சாஸ்திர-ஞானம் பூரணமாக உண்டு; மேலும், அவர் தானே ஆன்மீகப் பாதையில் சென்றிருப்பதால், அவரது போதனைகளில் அவரது சொந்த அநுபவங்களின் சக்தியும், உயிரோட்டமும், உற்சாகமும் இருக்கும்; ஆனால் வெறுமனே படித்த பண்டிதரின் போதனை உற்சாகமற்று

உலர்ந்ததாயிருக்கும். மேலும், சாதனை செய்யப்படும்போது, நிறைய சந்தேகங்களும், இடைஞ்சல்களும் வந்து கொண்டேயிருக்கும், அவைகளனைத்தும் அப்போதைக்கப்போது களையப்பட வேண்டும். இதைச் செய்திட ஒரு குருவினால் மட்டுமே இயலும், ஏனெனில் அத்தகைய கட்டங்களை அவரே அனுபவித்துத் தாண்டி வந்திருக்கிறார். இறைவனை அடைய சாதனை செய்பவர்களுக்கு ஆன்மீகக் குருவின் அவசியமும் முக்கியத்துவமும் இவ்வாறாக உள்ளது.

குரு இறைவனேயானதால், இச்செய்யுளில் காட்டப்படும் வேறுபாடு அன்பும் இரக்கமும் கொண்ட உண்மையான குருவிற்கும், கல்வியை மறைக்கும் கஞ்சத்தனமுள்ள வறட்டுப் பண்டிதர்களுக்கும் இடையே உள்ளதாகத் தோன்றுகிறது.

'குமரா' என்றால் 'என்றும் இளமையான பெருமானே' என்று அர்த்தம். தீயவைகளை அழிப்பவர் என்றும் மற்றொரு அர்த்தம். குருவானவரும் உண்மையில் குமரனே --- அவர் பெற்றுள்ள மிகவும் நேர்த்தியான ஆத்ம-ஞானமே அவருக்கு அழகு தருவது; மேலும், அவர் சாதகர்களிடம் உள்ள அறியாமை, அகங்காரம் போன்ற தீயவைகள் அனைத்தையும் அழிக்கவல்ல சக்தியையும் பூரணமாகக் கொண்டுள்ளார்.

'குலிசம்' என்பது முருகப் பெருமான் தன் பன்னிரு கைகளில் ஒன்றில் தாங்கியுள்ள ஓர் ஆயுதம். இவ்வாயுதத்தைக் கொண்டே பெருமான், சூரபத்மனின் தம்பியாகிய சிங்கமுகன் எனும் அசுரனை வதம் செய்தார். குலிசம் எனுமாயுதத்தை வைத்திருப்பதால், முருகன் 'குலிசாயுதன்' என்றழைக்கப்படுகிறார். குலிசம் (வஜ்ராயுதம்) இந்திரனுடைய ஆயுதமும்கூட.

"குஞ்சரம்" என்றால் யானை. இந்திரனின் குமாரியான தெய்வயானை, இந்திரனின் தெய்வீக யானையான ஐராவதத்தால் வளர்க்கப்பட்டவள், அதனால் அவள் 'குஞ்சரி' என்றும் அழைக்கப்பட்டு வந்தாள். கந்தப் பெருமான் அந்த தெய்வயானை எனும் குஞ்சரியின் மணாளனானதால், அவர் 'குஞ்சரவா' என்றழைக்கப்படுகிறார். மேலும், "பிணிமுகன்' எனும் யானையைப் பெருமான் தன் வாகனமாகக் கொண்டுள்ளதாலும், அவர் 'குஞ்சரவா' என்றழைக்கப்படுகிறார்.

குலிசம் எனும் வஜ்ராயுதத்தை இந்திரன் வைத்துள்ளதால், இந்திரனும் 'குலிசாயுதா' என்றழைக்கப்படுகிறான். 'குலிசாயுத-குஞ்சரவா' என்றும் மொத்தமாக எடுத்துக் கொள்ளலாம்; அவ்வாறு எடுத்தால் இதன் அர்த்தம் --- 'இந்திரனின் மகளான குஞ்சரியெனும்

தெய்வயானையைத் தன் துணைவியாகக்கொண்ட கந்தப் பெருமானே' என்றாகும்.

இச்செய்யுளில் எதற்காக தெய்வயானையைப் பற்றி குறிப்பிடப்படுகிறது என்று அதிசயிக்கலாம்? இதன் காரணம் இவ்வாறு இருக்கக்கூடும்: முருகப் பெருமான் தெய்வயானையை முதலில் மணம்புரிந்துகொண்டார், வேடுவ-வள்ளி (ஜீவாத்மா) பெருமானை அடைந்து, இப்பொழுது அவரின் துணைவி வள்ளி-தேவியாகும்போது (செய்யுள்-43), அங்கு அவள் தன் சகோதரியான தெய்வயானையைப் பெருமானுடன் காண்கிறாள்!

"கந்தர் அநுபூதி" நூல் முழுவதிலும் இச்செய்யுள் ஒன்றில் மட்டும்தான் தெய்வயானை தேவியைப் பற்றி குறிப்பிடப்படுகிறது. இதற்கான காரணம் இவ்வாறாக இருக்கலாம்: கந்தப் பெருமானுடன் சம்பந்தப்பட்ட பெயர்கள் ---- சிவனார், உமா தேவி, கணேசர், வள்ளி, வேல், மயில் மற்றும் சேவல் ஆகிய பெயர்கள் ---- இந்நூலில் எங்காவது ஓரிடத்தில் (அ) பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன (தெய்வயானையைத் தவிர); எனவே தெய்வயானையின் பெயரை எங்காவது ஒரு இடத்தில் (இச்செய்யுளில்) குறிப்பிட்டால், அனைவரும் இடம்பெற்று விடுவார்கள் என்று அருணகிரியார் நினைத்திருக்கலாம்.

==========

செய்யுள் - 46

==========

எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ
சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனையாள்
கந்தா கதிர்வேலவனே உமையாள்
மைந்தா குமரா மறைநாயகனே.

பொழிப்புரை: "கந்தப் பெருமானே! ஒளி வீசும் வேலை உடைய பெருமானே! உமா தேவியின் மைந்தனே! குமரப் பெருமானே! வேதங்களுக்குத் தலைவனே! எனக்கு அருள்செய்யும் தாயும் தந்தையும் நீயே. எனது மனக் கவலைகள் அனைத்தையும் அகற்றி, என்னை ஆட்கொண்டு அருள்வாயாக."

விளக்கவுரை

தங்கள் மன வேதனைகளையும், சாதனை செய்யும்போது உண்டாகும் குழப்பங்களையும் அகற்றிடுவதற்கு ஜீவன்முக்தரிடம் அறிவுரைக்கு வந்த சாதகர்களுக்கு அவர் வழங்கிய அறிவுரை இச்செய்யுள். எனினும், இச்செய்யுள் நம் வேதனைகளைக் களைந்து, இறையருளைப் பெற்றிட மிகச்சிறந்த சக்தி வாய்ந்த பிரார்த்தனை.

அருட்செல்வர் இறைவனுடன் நமக்குள்ள உண்மையான உறவை உறுதிப்படுத்தும்படி உபதேசிக்கிறார்; அதாவது, இறைவன் நமக்கு உண்மையான சொந்தமானவர், கருணைமயமானவர், நமக்கு அருள்புரியும் தாயும் தந்தையுமாக இருப்பவர். நமது ஆத்மாவும் அவரே, நமது மன வேதனைகள் நீங்குவதற்கும், அடைக்கலம் பெறுவதற்கும், நாம் அவரை நாடுதல் மிகவும் அவசியம். வேதனைகளை நீக்கிக் கொள்வது நாம் இங்கு வசதியாக வாழ்வதற்காக அல்ல; அவரை அடைந்து (அவர் எனை ஆள) என்றுமழியா பேரானந்தத்தை அநுபவிப்பதற்காகவே. பரமாத்மாவான அவரை நமக்கு மிகவும் நெருங்கிய பெற்றோரை அணுகுவது போல் நினைத்து அணுக வேண்டும். அவர் எங்கேயோ, வெகுதூரத்தில், வேறு உலகத்தில் இருப்பதாக நினைக்கக்கூடாது.

இச்செய்யுளில் வைக்கப்படும் பிரார்த்தனை மிகவும் எளியது மற்றும் நேரடியானது; நமக்கு இறைவனுடனிருக்கும் உண்மையான நெருக்கத்தை வெளிப்படுத்துகிறது. இதைப்போன்ற செய்யுள்கள் ஆத்மானுபூதி அடைந்த மகான்கள் இறைவனுடன் ஒன்றாய் இருக்கும் உணர்வின் அனுபவத்தின் வெளிப்பாடுகள். ஜீவன்முக்தன், தான் இறைவனுடன் மிகவும் அன்யோன்யமாகி விட்டதை உணர்வதால், அவருடனுள்ள மிக நெருங்கிய உறவை உரிமையுடன் சொல்கிறான்: "பெருமானே, எனது கருணைமிக்க தாயும், தந்தையும் நீங்கள்தான்." சுவாமி சிவானந்த மகராஜ், "இறைவன் மட்டுமே உனது உண்மையான தாய், தந்தை, சினேகிதன், மற்றும் குரு. இறைவனை இங்கேயே இப்பொழுதே உணர்வாயாக, என்றென்றும் ஆனந்தமாக இருப்பாயாக." என்று சொல்கிறார்.

அருட்செல்வர் நமது மன வேதனைகளுக்கான காரணத்தைக் காட்டி, அவற்றைக் களைவதற்கான வழியையும் காட்டி, இறைவனால் ஆட்கொள்ளப்படுவதற்கான வழிமுறைகளையும் தருகிறார். இறைவனே நமது தாயும் தந்தையும்; அவர் நமக்குத் திருவருள் பாலிக்க எப்பொழுதும் தயாராக உள்ளார். நமது உண்மையான சொந்தம் இறைவனுடன், நமக்குள்ளே இருக்கும் ஆத்மாவோடு மட்டுமே. இறைவனே அனைத்துப் பொருள்கள் மற்றும் ஜீவர்களின் பின்புலத்தில் (ஆதாரமாக) இருக்கும் உலகளாவிய உண்மை பரம்பொருள். அவர் நமக்கு உள்ளேயிருந்து நம்மைத் தன்னிடம் வந்திடுமாறு எப்பொழுதும் சைகை செய்து அழைத்துக் கொண்டேயிருக்கிறார். ஆனால், நாமோ அவரைப் பொருட்படுத்தாமல், உலகிலுள்ள பொருள்கள் நமக்கு மகிழ்ச்சி தரக்கூடுமென்ற பிரமையில் அவை பின்னால் சென்றுகொண்டு இருக்கிறோம். இந்தத் தவறான முயற்சியில், ஆசை, கோபம், லோபம், ஆகிய தீயசக்திகளால் பீடிக்கப்பட்டு நாம் முடிவில்லாத் துன்பத்தில் ஆழ்ந்துவிடுகிறோம். இதிலிருந்து விடுபடுவதற்கான ஒரே வழி, உலகப் பொருள்களின் பின்னால் செல்லும் தவறான அணுகுமுறையைப் புறக்கணித்துவிட்டு, இறைவனிடம் திரும்பிச் செல்வதேயாகும். எங்குமுள்ள பரமாத்மாவே (இறைவனே) நம் எல்லோருடைய தாயும் தந்தையுமாக (உலகத்தாய், உலகப்பிதா) இருக்கிறார்கள் என்று உணர்ந்து, அவரே நம்முள் நம் ஆத்மாவாகவே இருக்கிறார் என்றும், அவரே நம்முடைய உண்மையான தாயும் தந்தையும் என்றும் உணர்ந்து, அவரை அணுகுவதேயாகும். நமக்கும் அனைத்து பொருள்களுக்கும் பின்புலத்திலுள்ள பரம்பொருளைக் கண்டுகொள்ளாமல், உலகப்பொருள்களையே உண்மை என்று

கருதுவதுதான் நாம் செய்யும் அடிப்படை தவறு, அந்தத்தவறே நாம் அடையும் மன வேதனைகளுக்கு காரணமாகிறது.

இச்செய்யுள், மேலும் அதிகமான பொருள்களை உணர்த்துவதாகத் தெரிகிறது. "இறைவா, எனது கருணைமயமான தாயும் நீயே, தந்தையும் நீயே." எப்படி ஒருவரே தாயும் தந்தையுமாக இருக்கமுடியும்? இது விசித்திரமாகத்தான் தெரிகிறது; ஆனால் இது எளிதில் புரிந்துகொள்ள இயலாத ஒரு தெய்வீக இரகசியம், இதில் நமது முக்திக்கு வழிகாட்டும் திறவுகோல் மறைந்துள்ளது. உலகியல் அர்த்தத்தில் (நடைமுறையில்) நோக்கினால், தாயும் தந்தையும் வேறுபட்ட இரு நபர்கள்; தந்தை தாயாக முடியாது, அதேபோல் தான் தாயும். தாயும் தந்தையுமே இரு நபர்களாக இருக்கும்போது, குழந்தை மூன்றாவதாக ஆகிவிடுமல்லவா? ஆனால், ஆன்மீக விஷயத்தில், இவற்றின் அர்த்தங்கள் முற்றிலும் வேறாகிறது. இச்செய்யுளில், ஜீவன்முக்தர்களான மகாபுருஷர்களின் ஒரு புதிய திருஷ்டி சித்தரிக்கப்படுகிறது. அவர்களுக்கு, இறைவன் தாயும் ஆகிறார், தந்தையும் ஆகிறார். எப்படி? இறைவனை எல்லையற்ற பரப்பிரம்மமாக நோக்கும்போது, அவர் தந்தையாகிறார். பிரம்மத்திலிருந்து வேறில்லாததும் புரிந்துகொள்ள முடியாததுமான மாயையாக (மாயா-சக்தியாக) நோக்கும்போது, இறைவனே தாயுமாகிறார். இவ்வாறாக, அவரே தாயுமாகி தந்தையுமாகி விடும் பொழுது, குழந்தைகளும் (அதாவது ஜீவர்களும், உலகமும்) அவரேதான். இவ்வாறான ஆய்வின் இறுதியில், அனைத்து ஜீவர்களும், மற்றும் இப்பிரபஞ்சம் முழுவதுமே பிரம்மத்தைத் தவிர வேறொன்றுமில்லை. எனவே, "இறைவனே நமது தாயும் ஆவார், தந்தையும் ஆவார்" என்று அருணகிரியார் சொல்லும்போது, 'அறுதி உண்மைப் பரம்பொருளான பிரம்மம் இரண்டற்றது (அத்வைதம்)' என்ற சித்தாந்தம் அவரால் இங்கு மிகவும் நேர்த்தியாக வெளிப்படுத்தப்படுகிறது.

ஸ்ரீமத் பகவத் கீதையில், பகவான் ஸ்ரீகிருஷ்ணர் பின்வருமாறு கூறுகிறார்: "பாரதா, பெரிய பிரகிருதி (*மஹத் பிரம்ம*) எனது கர்ப்பாயசம். அதில் நான் கர்ப்பத்தை வைக்கிறேன். அதனின்று உயிர்களெல்லாம் உற்பத்தியாகின்றன *(மம யோனிர் மஹத்ப்ரம்ம தஸ்மின் கர்பம் ததாம்யஹம்! ஸம்பவ: ஸர்வபூதானாம் ததோ பவதி பாரத!!* - பகவத் கீதை: 14.3). குந்திபுத்ரா, கர்ப்பாசயங்கள் எல்லாவற்றிலும் பிறக்கின்ற வடிவங்களுக்குப் பெரிய பிரகிருதி (மஹத் பிரம்ம) தாயாகின்றாள். கர்ப்பதான செய்யும் தந்தை நான் (*ஸர்வ யோனிஷு கௌந்தேய மூர்த்ய: ஸம்பவந்தி யா: ! தாஸாம் பிரம்ம மஹத்யோனிரஹம் பீஜப்ரத: பிதா !!* - பகவத் கீதை: 14.4)."

பெரிய பிரகிருதி எனும் மஹத் பிரம்ம என்று பகவான் குறிப்பிடுவது *மூல பிரகிருதியை* (ஆதி காலத்திலிருந்து இருக்கும் இயற்கை), அதுவே *அவ்யக்தம்* (தோன்றாநிலையில் இருக்கின்றது) என்றும் அழைக்கப்படுகிறது. அதையே சாங்கியர்கள் *பிரகிருதி* என்பர்; aவேதாந்திகள் *மாயை* என்பர்.

ஆனால், வேதாந்திகளின் *மாயை*, சாங்கியர்களின் *பிரகிருதி*-யிலிருந்து வித்தியாசப்பட்டது. சாங்கியர்களின் கொள்கைப்படி, *புருஷ*(ன்) மற்றும் *பிரகிருதி* என்ற இரண்டு நித்திய உண்மைகள் உள்ளன. ஆனால், மாயை அப்படிப்பட்டதல்ல. மாயை மனித அறிவிற்கு எட்டாதது, மர்மமானது. ஜீவாத்மாக்களுக்கும் இப்பிரபஞ்சத்திற்கும் பரமாத்மாவிற்குமிடையே உள்ள தொடர்பை (அப்படி ஒன்று இருந்தால்) புரிந்துகொள்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட கருத்து இந்த மாயை; இது அல்ஜீப்ரா கணிதத்தில் சமன்பாடு (Equation) கணக்குகளை தீர்த்துவைப்பதற்காக, 'X' என்ற காரணியை சேர்த்துக் கொள்வதைப் போன்றது. எப்படி "X" காரணியைப்பற்றி ஏன், என்ன என்றெல்லாம் கேட்கக் கூடாதோ, அப்படியேதான் 'ஏன் மாயை? மாயை என்றால் என்ன?' என்றெல்லாம் கேட்கக் கூடாது; இதன் அவசியம் நமது சிக்கல்களை (புதிரான பிரச்சனைகளை) தீர்ப்பதற்காகத்தான். பின்னர் சமன்பாடு கணக்கின் குறிக்கோளான விடையானது காணப்படும்பொழுது, விடை காண்பதற்காக மட்டுமே புகுத்தப்பட்ட அந்த 'X' -காரணி தானே இல்லாமல் போய் விடுகிறது. அதே போன்றதுதான் இந்த மாயையும். அது நாம் தற்போது இருக்கும் இக்கட்டான (புரிந்துகொள்ள இயலாத) நிலையை விளக்குவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது ---- அறுதிப்பொருளான பரபிரம்மத்திற்கும், இப்பிரபஞ்சத்திற்கும்; காணப்படாததற்கும் காணப் படுவதற்கும்; உண்மைக்கும் தோற்றத்திற்கும்; இருப்பதற்கும் இருப்பதுபோல் தோற்றமளிப்பதற்கும் --- இடையேயுள்ள சம்பந்தத்தை, ஜீவனால் புரிந்து கொள்ள முடிவதில்லை. சுருங்கக் கூறின், பிரம்மம், பிரபஞ்சம், மற்றும் ஜீவன் ஆகிய இம்மூன்றின் இடையேயுள்ள சம்பந்தத்தை ஜீவனால் புரிந்து கொள்ள முடிவதில்லை. அப்பரம்பொருளானது நாமே என்று அநுபவத்தில் நாம் எப்பொழுது உணர்கிறோமோ, அப்பொழுது இந்த மர்மமான உறவு சம்பந்தமான பிரச்சனை தீர்ந்து போய்விடுகிறது, அதாவது அப்பொழுது மாயையும் இல்லாமல் போய்விடுகிறது. இரண்டற்ற பிரம்மம் மட்டுமே நிற்கிறது --- தாயாகவும் தந்தையாகவும் ஆன இறைவன் மட்டுமே இருக்கிறார். எனவே, கடவுளின் இயல்பு மற்றும் அவருடன் நமது உறவு பற்றிய உண்மையான புரிதல் கொள்வது மட்டுமே (மாயையைப் புரிந்து

கொள்வது மட்டுமே) நாம் எதிர்கொள்ளும் துன்பங்களிலிருந்து நிரந்தர விடுதலை பெற்றிடும் ஒரே வழி. இல்லையேல், நாம் இப்பொழுது இருப்பது போலவே துயரத்தில் ஆழ்ந்துதான் இருப்போம்.

ஒரு மாணவனுக்கு கணக்கில் "X" காரணியைப் பிரயோகிக்கும் அடிப்படை நியமமும் வழிமுறையும் தெரியவில்லையெனில், அவன் அந்தக் கணக்கிற்கு விடை காண்பதற்குப் பதிலாக, விஷயத்தை மேலும் சிக்கலாக்கி, மிகப் பெரிய குழப்பத்தில் சிக்கித் தவிப்பான். சில மாணவர்கள் ஒரு சில நிமிடங்களில் முடிக்க வேண்டிய ஒரு கணக்கை, நீண்ட நேரம் எடுத்துக்கொண்டு, பல பக்கங்களையும் நேரத்தையும் வீணடித்துக் கொண்டிருப்பதையும் நாம் பார்த்துத்தான் இருக்கிறோம். எனவே, ஒருவனால் "X" காரணியானது சரியான முறையில் பிரயோகிக்கப்படும்பொழுது, அவன் அக்கணக்கை சீக்கிரத்திலும், எளிதாகவும், சரியாகவும் முடித்திட அக்காரணி பெரிதும் உதவும்; ஆனால், அவன் அக்காரணியைப் பிரயோகிக்கும் முறையை ஒரு ஆசிரியரிடமிருந்து சரியாகக் கற்று, புரிந்து கொண்டு, சாமர்த்தியமாக பிரயோகிக்காவிட்டால், அதுவே அவனுக்கு மயக்கத்தையும் குழப்பத்தையும் தந்துவிடும். அதே போன்ற ஒன்றுதான் மாயையும். தேவைப்படும் நுட்பமான புரிதலையும், மற்றும் ஒரு ஆன்மீக குருவின் வழிகாட்டுதலையும் அருளாகப் பெற்ற சில அதிர்ஷ்டசாலி சாதகர்கள் மட்டுமே மாயையின் இரகசியத்தை உணர்ந்து, அதைக் கடந்து, இறைவனை அடைகிறார்கள். மற்றவர்களோ அதைப்பற்றி பல நூறு கேள்விகள் கேட்டுக்கொண்டு, அதற்கு எதிராக ஆட்சேபனைகளை எழுப்பிக் கொண்டு, குழப்பத்தில் மாட்டிக்கொள்கிறார்கள். மேலும், அவ்வாறு செய்வதன் மூலம் அவர்கள் மேன்மேலும் மாயையில் சிக்கிக்கொள்கிறார்கள் என்பதையே அவர்கள் அறிவதில்லை. இத்தகைய ஒரு வருந்தத்தக்க நிலையிலிருந்து ஒருவனை குரு/இறைவன் கிருபை ஒன்றே காப்பாற்ற இயலும். எனவே, அருணகிரியார்: "எனக்கு கிருபையை அருளும் தாயும் தந்தையும் நீவிர்தானே." என்று மகிழ்வுறுகிறார். பகவான் ஸ்ரீகிருஷ்ணரும் ஸ்ரீமத் பகவத் கீதையில் (7.14ல்) இதுபற்றி அவ்வாறே கூறுவதைக் காண்கிறோம்: "இந்த முக்குணமாகிய எனது தேவமாயை கடத்தற்கு மிகவும் அரியது; என்னையே யார் சரணடைகின்றனரோ, (எனது கிருபையின் துணையால்) அவர்கள் இந்த மாயையைக் கடக்கின்றார்கள். {*தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா! மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே !!* 7.14}."

அருள்தான் விஷயங்களின் உண்மையான உளக்காட்சியை வெளிப்படுத்துகிறது. அவ்வருள் இல்லையெனில், மாயையில் புதைந்துள்ள தெய்வீக இரகசியத்தை --- அதாவது இறைவன் மற்றும்

உலகத்துடன் நமக்குள்ள உண்மை சம்பந்தத்தை --- புரிந்துகொள்ள முடிவதில்லை; அதனால் ஜீவர்களின் மனம் பற்பலவிதமான வலி மற்றும் துன்பங்களால் பீடிக்கப்படுகிறது. அவர்கள் தங்களை இறைவனிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவர்களாகவும், மேலும் இவ்வுலகத்தை இறைவனுக்குப் புறம்பான ஒரு உண்மைப் பொருளாகவும் கருதி, அதனுடன் ஒரு வெளிஉறவு கொள்ளவேண்டிய அவசியத்துடன் வாழ்கின்றனர், இந்தத் தவறான புரிதலே ஒருவன் படும் அனைத்துவிதமான மன வேதனைகளுக்கும் காரணம். அதனால்தான், இத்தவறான கருத்தை அகற்றிடுவதற்கும், தன்னை ஆட்கொள்ளுவதற்கும் இச்செய்யுளில் இறைவனிடம் பிரார்த்தனை செய்யப்படுகிறது. இறைவனைத் தாயாகவும் தந்தையாகவும் விளிப்பதன் மூலம் இறைவன் இரண்டற்றவன் என்பதும், இப்புரிதலின் மூலம் ஜீவர்களும், உலகமும் இறைவனிடமிருந்து வேறுபட்டதல்ல என்பதும் உணர்த்தப்படுகிறது. இது ஜீவனை வெளிநோக்கு-உணர்விலிருந்து விடுவிக்கிறது, இதன் மூலம் ஜீவன் அனைத்து மன வேதனைகளிலிருந்தும் விடுதலை பெறுகிறது; இறைவனில் இறுதியமைதியும் பெறுகிறது, அதாவது, இறைவனால் ஏற்று, ஆட்கொள்ளப் படுகிறது, பிரம்மத்தில் இரண்டற்று கலந்திடுகிறது. இதனாலெல்லாம், வலியுறுத்தப்படுவது யாதெனில் இரண்டற்ற பிரம்மம் மட்டுமே இருக்கிறது; அந்த பிரம்மத்திலிருந்து நாம் முற்றிலும் வேறுபட்டவர்களல்ல, நம்மைப் பாதுகாப்பவர் அவரே. அப்படியில்லாமல், நமக்கும் அவருக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்று நினைக்கும்வரை, ஜீவனின் மனவேதனைகள் ஒருபொழுதும் அகல முடியாது, இவ்வேதனைகளிலிருந்து விடுதலை பெற வேண்டுமெனில், ஜீவன் இரண்டற்ற ஒன்றான பிரம்மத்துடனான உண்மை சம்பந்தமான அபேதத்தை கண்டு கொள்ள வேண்டும், அதாவது பிரம்மமாக ஆக வேண்டும் (பிரம்மத்துடன் இணைந்து ஒன்றாக வேண்டும்).

நாம் எவருடன் திரும்பவும் உறவு ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமோ (அல்லது எவரின் உறவை சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமோ) அந்த இறைவனின் (ஆத்மாவின்) சொரூபம் இச்செய்யுளில் விரிவாக வர்ணிக்கப்பட்டுள்ளது -- **"கந்தா, கதிர்வேலவனே, உமையாள் மைந்தா, குமரா, மறைநாயகனே"** என்று. **(ஸ்)கந்தன்** என்றால் எதிரிகளைப் பொசுக்கி விடுபவர் என்று பொருள்; எத்தகைய எதிரிகள்? நம் மன வேதனைகளுக்குக் காரணமான நமக்குள்ளேயே உள்ள காமம், லோபம், கோபம், போன்ற பல எதிரிகள். மேலும், அவரே **கதிர்வேலவன்** (சுயமாக பிரகாசிக்கும் வேல் தாங்கிய கந்தப் பெருமான்). இது சுயமாகப்

பிரகாசிக்கும் (வெளிப்படுத்திக்கொள்ளும்) ஆத்மாவைக் குறிக்கிறது. ஆத்மா அறியாமையாகிய இருளை அழிக்கும் ஒட்டுமொத்த பிரகாசம் (உணர்வு). அவரே **உமாதேவியின் மைந்தன்** - கடவுள் சிவனாரின் மூன்றாவது கண்ணிலிருந்து வெளிப்பட்ட ஒளிப்பிழம்பு, கடைசியில் (சரவணப் பொய்கையில்) ஸ்கந்தப் பெருமானாகி, உமாதேவியால் அரவணைக்கப்பட்டு பேணப்பட்டவர். அவரே **குமரன்**, உலக மாயையை நீக்குபவர். இறுதியாக, அவரே **மறை நாயகன்**, வேதங்களின் தலைவன், ஞானத்தை வெளிப்படுத்தி அறியாமையை நீக்கி, ஜீவனை பூரணமாக தூய்மையாக்கி ஆட்கொள்பவர் (தனது பரிவாரத்தில் ஏற்றுக்கொள்பவர்).

இச்செய்யுள் மிக எளிதானது. ஆனால், மனமுவந்து ஒருமுறை ஓதினால்கூட நம் கண்ணில் நீர் ததும்பிடச்செய்யும். இதில் அருணகிரியார், இறைவனுடன் மிக நெருங்கிய உறவு கொண்டு, அவரிடம் நேரடியாக முறையீடு செய்வது எப்படி என்பதை நமக்குச் சொல்லித் தருகிறார். எப்படி ஒரு குழந்தையானது தனது பெற்றோர்களிடம் உரிமையுடன் தனக்கு வேண்டியதை கேட்கிறதோ, அப்படியே நாமும் இறைவனிடம் நமது மனவேதனைகளை அழித்து, அவருடன் சேர்த்துக் கொள்ளுமாறு வேண்டுதல் செய்ய வேண்டும். எப்படி? முதலில் இறைவனுடனான நமது உறவை இவ்வாறு அறிவித்து, உறுதி செய்திட வேண்டும்: "நீங்கள்தான் எனக்கு அருள்புரியும் தாயும், தந்தையும்" என்று கூறிட வேண்டும்; (அப்படி இல்லாமல், 'நீ எனக்கு அருள்புரியும் தாயும் தகப்பனும் அல்லவோ' என்று கூறக் கூடாது.) இவ்வாறு வழியை தெளிவாக்கிக்கொண்டு, பின்னர் நம்மை ஏற்றுக் கொள்ள அவரிடம் உரிமையுடன் கேட்கலாம். தங்கள் குழந்தையின் கோரிக்கைகளை பெற்றோர்களால் நிராகரித்திட முடியாது. குழந்தையானது பெற்றோரிடம் தனது கோரிக்கைகளை உரிமையுடன் வலியுறுத்திக்கேட்கும். மேலும் பெற்றோரிடமிருந்து அவைகளை நிறைவேற்றிக்கொள்ளும்.

இச்செய்யுளில் அருணகிரியார் இறைவனைப் பற்றி சொல்வது, பகவான் ஸ்ரீகிருஷ்ணர் தன்னைப் பற்றி ஸ்ரீமத் பகவத் கீதையில் (9.17) சொல்வதோடு பெரும்பாலும் ஒத்துப்போகிறது: "இந்த ஜகத்தின் தந்தை, தாய், கர்மபலனை கொடுப்பவன், பாட்டனார், அறியத் தக்கவன், தூய்மை செய்பவன், ஓங்காரம், ரிக், சாமம், யஜுர் முதலிய வேதம் அனைத்தும் நானே" *("பிதாஹமஸ்ய ஜகதோ மாதா தாதா பிதாமஹ:! வேத்யம் பவித்ர மோங்கார ருக் ஸாம யஜுரேவ ச!!").*

==========

செய்யுள் - 47

==========

ஆறாறையும் நீத்து அதன்மேல் நிலையைப்
பேறா அடியேன் பெறுமாறு உளதோ
சீறா வருசூர் சிதைவித்து இமையோர்
கூறா உலகம் குளிர்வித்தவனே.

பொழிப்புரை: "கந்தப் பெருமானே! உமக்கெதிராக (உம்மைத் தாக்கிட) கோபத்தில் சீறிப் பாய்ந்து வந்த அசுரன் சூரபத்மனைக் கொன்று, தேவர்களுக்கு உரிமையான தேவலோகத்தைக் குளிர்வித்து (தேவர்களின் உள்ளங்களையும் குளிரச்செய்து), அதை அவர்களுக்கு மீட்டுக்கொடுத்தவரே! முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து, அதற்கு மேலான நிலையை (அநுபூதி நிலையை / முக்தியை) பெரும்பேறாக அடையும் பாக்கியம் அடியேனுக்குக் கிடைத்திடுமோ?" (கிடைத்திடுமாறு செய்து அருள்வீராக.)

விளக்கவுரை

ஒரு சில வார்த்தைகளில் பல கருத்துக்களைப் பொதிய வைக்கும் அருணகிரியாரின் திறமையை இச்செய்யுள் வெளிப் படுத்துகிறது, பற்பல விளக்கங்களுக்கு இடம் தருவதால் இச்செய்யுளைப் புரிந்துகொள்வது மிகவும் கடினம். சுருங்கக் கூறின், அவர் சொல்வதாவது:

(1) 36 தத்துவங்களுக்கும் அப்பாலுள்ள அப்பரம்பொருள் உண்மையே **(அல்லது)**, (2) இந்துமதத்தின் ஆறு பிரிவுகளுக்கும் அப்பாலுள்ள பரப்பிரம்மமே **(அல்லது)** (3) ஆறு சக்கரங்களுக்கும் அப்பாலுள்ள பரம்பொருளே (சிவமே), அடையப்படவேண்டிய உன்னத குறிக்கோளாக வரிக்கப்பட்டு, பெரும் விருப்பத்துடன் முயலப்பட்டு அடையப்பட வேண்டும்.

இச்செய்யுளில் ஜீவன்முக்தரானவர் சாதகர்களுக்கு மனம்/ புலன்களால் உணரப்படும் முப்பத்தாறு தத்துவங்களுக்கு அப்பாலுள்ள அத்வைத விழிப்புணர்வு நிலையை (பரம்பொருளை), அடைந்திடுவதில்

விருப்பம் கொள்ளுமாறு ஆலோசனை தருகிறார். 36 தத்துவங்கள் பற்றிய விவரங்கள் இந்து மதத்தின் சைவ சித்தாந்தம் மற்றும் சாக்தப் பிரிவுகளின் நூல்களில், சிறுசிறு வித்தியாசங்களுடன், காணக்கிடைக்கிறது. இருப்பினும், நாம் சைவ சித்தாந்தப் பிரிவு கூறும் விவரங்களின்படி சிறிது பார்க்கலாம். மூன்று தொகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ள அந்த 36 தத்துவங்களாவன:

1) **ஆத்ம தத்துவங்கள் எனும் அசுத்த தத்துவங்கள் - 24.** அவையாவன:

(அ) ஐந்து கர்ம இந்திரியங்கள் (செயற்புலன்கள்) - வாய் (பேச்சு), கால், கை, மலஜல கழித்தல், பிறப்பு ஆகிய ஐந்துவித செயல்களை செய்வதற்கான புலன்கள்.

(ஆ) ஐந்து ஞான இந்திரியங்கள் (அறிவுப் புலன்கள்) - மெய், வாய், கண், மூக்கு (நாசி), செவி ஆகிய ஐந்துவித அறிவுகளைத் தரும் புலன்கள்.

(இ) ஐந்து மஹா-பூதங்கள் (பஞ்ச ஸ்தூல பூதங்கள்) - பூமி (மண்), நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து மூலப் பொருள்கள்.

(ஈ) ஐந்து தன்மாத்திரைகள் (பஞ்ச சூட்சும பூதங்கள்) - நாற்றம் (மணம்- கந்த), சுவை (ருசி- ரஸ), ஒளி (உருவம்- ரூப), ஊறு (தொடு உணர்ச்சி- ஸ்பர்ச), சத்தம் (ஓசை- சப்த) ஆகிய பஞ்ச புலன் விஷயங்கள்.

(உ) நான்கு அந்தக்கரணங்கள் (உள் உறுப்புகள்) - மனம், புத்தி, அகங்காரம், சித்தம்.

2) **வித்யா தத்துவங்கள் எனும் சுத்த-அசுத்த தத்துவங்கள் -7.**

அவையாவன: காலம், நியதி, கலை, வித்யா, அராகம், புருடன், மூலப்பிரகிருதி.

3) **சிவ தத்துவங்கள் எனும் சுத்த தத்துவங்கள் - 5.**

அவையாவன: சுத்த வித்தை (ருத்ரன்), ஈசுரம் (மஹேஷ்வரன்), சாதாக்கியம் (சதாசிவன்), விந்து (சக்தி), நாதம் (சிவன்).

சைவ சித்தாந்தமும், சாக்தமும் தத்துவங்களை 36 (சிறுசிறு வித்தியாசங்களுடன்) எனக் கூறுகின்றன; வேதாந்தமும், சாங்க்யமும் 24 என்று (சிறுசிறு வித்தியாசத்தோடு) கூறுகின்றன. சிலர், சைவ சித்தாந்தத்தின் 36 தத்துவங்களையும் அல்லது வேதந்தத்தின் 24 தத்துவங்களையும், மேலும் பிரித்து 96 என்றும் கூறுகின்றனர். தத்துவங்கள் என்றால் 'கொள்கைகள்', 'பிரிவுகள்', 'சுபாவம்' மற்றும் 'உண்மைகள்' என்றாகும். தத்துவங்கள் என்பது தத்துவ ஞான சாஸ்திரத்தின் அடிப்படை நுண்பொருள் கோட்பாட்டுக் கொள்கைகள்,

இதைக்கொண்டுதான் ஒவ்வொரு தத்துவ ஞான சாஸ்திரமும் வரையறுக்கப்படுகிறது. எனவே, ஒவ்வொரு தத்துவ ஞான சாஸ்திரத்தின் அமைப்புமுறையும் இத்தத்துவங்களை வெவ்வேறு விதங்களில் பட்டியலிடுகின்றன; ஆனால், அவற்றின் நோக்கம் மட்டும் ஒன்றேதான் --- ஜீவர்கள் தங்கள் கர்ம வினைகளை அநுபவித்துக் கழிப்பதற்கும் மற்றும் சாதனைசெய்து ஆன்மீக விடுதலை (முக்தி) அடைவதற்கும் தேவையான நில-புலமாக (பூமி) விளங்கும் இவ்வுலகத்தின் (இப்பிரபஞ்சத்தின்) தோற்றம் (பரிணாமம்) மற்றும் மறைவு (அழிவாக்கம்) பற்றி விளக்கிக் காட்டுவதே அவற்றின் நோக்கம். ஆனால், இறைவன் (பிரம்மம்) புலன்களுக்கு எட்டாதவர், எல்லைகளுக்கு அப்பால் இருப்பவர்; இறுதி உண்மையாக இருப்பவர், இவர் தத்துவங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவர். எனவே, அந்த தத்துவங்கள் எத்தனையாக வேண்டுமானாலும் இருந்துவிட்டுத் தான் போகட்டுமே! புலன்விஷயம் சம்பந்தப்பட்ட இத்தத்துவங்கள் இப்பிரபஞ்சத்தைச் சார்ந்த தற்காலிக உண்மையே, பிரம்மம் மட்டுமே அறுதியான உண்மை (எல்லையில்லாப் பரம்பொருள்). முக்தி என்பது இத்தத்துவங்களுக்கெல்லாம் அப்பாலுள்ள (அவைகளைக் கடந்தபின் அடையப்படும் நிலையாக உள்ள) அறுதி உண்மையுடன் (பரம்பொருளுடன்) கலந்து ஒன்றாயிருக்கும் நிலை.

தத்துவங்கள், 24 (அ) 36, (அ) (96) என்று எத்தனையாக இருந்தாலும் சரி, அவைகள் அனைத்தும் ஆதியிலிருந்து இருக்கும் ஒரு மாயையின் (அவ்யக்தம் அல்லது பிரகிருதி) பரிணாமங்களே. இந்த மாயை, ஸத்துவ, ரஜஸ், மற்றும் தமஸ் என்ற மூன்று குணங்களாகப் பிரிந்து, மேன்மேலும் உப-பிரிவுகளாக பிரிகிறது. அவை எத்தனையாக இருந்தாலும் சரி, அவற்றைக் கடந்தால்தான் முக்தி பெறலாம், ஏனெனில் பரம்பொருள் உண்மை அவற்றிர்க்கு அப்பாலுள்ளது.

பரம்பொருள் உண்மைக்கும், தத்துவங்களுக்கும் (யதார்த்த உலகியல் உண்மை) உள்ள சம்பந்தம் என்ன என்பது ஒரு புதிரான கேள்வி. எல்லையில்லாததும் வரையறையற்றதுமான பரம்பொருள் இரண்டற்றது; அதைத்தவிர வேறு எதுவும் இருக்கமுடியாது. அதனால் மற்ற அனைத்தும் அதன் தோற்றத்தின் நிலைகளாகத்தான் இருக்கமுடியும், கடலில் பேரலைகளும், சிற்றலைகளும் இருப்பதுபோல. தத்துவங்கள் எல்லையற்ற உணர்வு-இருப்பிலிருக்கும் பேரலைகள் மற்றும் சிற்றலைகள் போன்றதுதான், அதாவது உணர்வின் படிநிலைகளே. இப்பரந்த பிரபஞ்சம்கூட பெருங்கடல் போன்ற பரம்பொருளில் எழும் பேரலையாகக் கருதப்படுகிறது. அஷ்டவக்கிர கீதையும் இக்கருத்தை இவ்வாறு கூறுகிறது: “எதில்

அண்டங்கள் கடலில் அலைகள் போல் பதைபதைத்துத் துடிக்கின்றனவோ அதுவே நீ என்று தெரிந்தும், மோசமான நிலையில் இருக்கும் ஒருவனைப் போல் ஏன் நீ இங்குமங்கும் ஓடிக் கொண்டிருக்கிறாய்? (3.3).” “அண்டமெனும் அலை எல்லையற்ற பெருங்கடலான என்னில் தானாகவே எழட்டும், அல்லது மறைந்து போகட்டும்; அதனால் நான் அதிகரிப்பதுமில்லை; குறைவதுமில்லை (7.2).” எனவே, ஜீவன் இவ்வுலகைக் காண்பது எப்படிப்பட்டதென்றால் ஒரு நிலை மற்றொன்றை, ஒரு அலை மற்றொன்றைக் காண்பது போன்றது. அதனால்தான், இந்திரியங்களின் மூலம் உணரப்படும்போது பிரம்மமே உலகமாகத் தோன்றுகிறது என்று கூறப்படுகிறது. எனவே, தத்துவங்கள் என்பது பிரம்மத்தின் புறநிலைக் கட்டங்களே (phases of Consciousness) எனலாம்; பிரம்மத்தின் வெவ்வேறு கட்டங்களில் தோற்றமளிக்கும் நிலைகள் (அல்லது *சித்-விலாசம்*) எனலாம். உணர்வு வெவ்வேறு கட்டங்களில் புறநிலை இயல்பைக் கொண்டதாகத் தோன்றுகிறது. இந்த வெவ்வேறு கட்டத் தோற்றங்கள் (தத்துவங்கள்) கடக்கப்படும்போது, தோற்றங்கள் உண்மையில் (பிரம்மத்தில்) கரைக்கப்படுகின்றன/தீர்க்கப்படுகின்றன. அப்போது, பிரம்மம் பிரம்மமாய் (*சித்-சொரூபமாய்*) (இருப்பு-உணர்வாய்) இருக்கிறது.

இத்தத்துவங்களை கடப்பது எவ்வாறு? தத்துவங்கள் உள்ள இவ்விடத்தை விட்டு விலகி அவைகள் இல்லாத இடத்திற்குச் செல்ல வேண்டுமா? இல்லை; ஏனெனில், ஒருவன் எங்கு சென்றாலும், அங்கும் தத்துவங்களின் உள்ளேயே தான் அவன் இருப்பான். மேலும், “போவது” அல்லது “செல்வது” என்றால், அது காலத்திற்கு உட்பட்டதாகிறது, அதாவது தத்துவங்களுக்கு உட்பட்டதாகிறது. எனவே, தத்துவங்களைக் கடப்பது என்றால் முற்றிலும் வேறான ஒன்றையே அது குறிப்பதாகும். அதன் அர்த்தம் தத்துவங்களை தீர்த்தல் (அ) தத்துவங்களை எதார்த்த உலகியல் நிலையிலிருந்து அதன் உண்மை சொரூப (அசல்) நிலைக்கு மேல்நிலைப்படுத்திட வேண்டும். அப்படி என்றால் என்ன? இதைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் நமது கனவு நிலையை ஆய்வு செய்ய வேண்டும். கனவில், மனதிற்கு, எதோ மர்மமான ஒன்று நேரிடுகிறது. நனவில் நாம் எதைக் காண்கிறோமோ அநேகமாக அவைகளையே கனவிலும் காண்கிறோம் --- கனவிலும் எழுவாய் (காண்பவர்) , காணப்படும் பொருள்கள், அவைகளைப் பிரித்திடும் தூரம், நிலம், நீர், ஆகாயம், இத்யாதிகளைக் காண்கிறோம். விழிப்பு நிலையில் செயல்படும் அந்த ஒரே மனம், கனவுலகில் தன்னையே உணரும் எழுவாயாகவும் (காண்பவனாகவும்) அநுபவிக்கப்படும் (காணப்படும்) பொருள்களாகவும் என இருகூறாக்கிக் கொள்வதுபோல்

தோன்றுகிறது. ஆனால், இதில் மனதிற்கு உண்மையில் ஏதாவது ஆகிறதா? இல்லை. மேலும், கனவுலகிலிருந்து வெளிவருவதற்கு, கனவு காணும் மனம் கனவில் இங்குமங்கும் ஓட வேண்டுமா, அல்லது கனவில் அது வேறு ஏதாவது செய்திட வேண்டுமா? எதுவும் இல்லை. எனெனில், கனவில் அது என்ன செய்தாலும், அது அந்தக் கனவில்தான் இருந்து கொண்டிருக்கிறது. அது செய்ய வேண்டியதெல்லாம், அக்கனவிலிருந்து விழித்துக் கொள்வது மட்டுமே; அதாவது, கனவைக்கடந்து தன்னுடைய சுய (முன்பிருந்த விழிப்பு நிலைக்கு) நிலைக்கு வருவது.

விழிப்பு நிலையில் (நனவில்), கனவு உலகில் காணப்பட்ட அனைத்தும் ஒற்றை விழிப்பு-உணர்வில் ஒருங்கிணைக்கப் படுகின்றன. அதாவது, கனவின் முழு உள்ளடக்கங்களும் எதிலிருந்து அவைகள் எழுந்தனவோ அந்த நனவு மனதில் கரைகிறது. வேகமாக ஓடும் (நதி) நீர், பாறைகள், விரிந்த ஆகாசம், கனவு காண்பவன், ஆகிய கனவில் காணப்பட்ட அனைத்தும், தத்தம் பண்புகளை {அல்லது தத்துவத்துவத்தை (தத்துவத்-தன்மையை)} இழந்து, விழிப்பில் ஒற்றை நனவு மனமாக/உணர்வாக ஆகிறது. கனவுப் பொருள்கள் நனவில் வேறு பொருளாக ஆகிவிடுவதில்லை; எந்த விழிப்புணர்வு (நனவு) தன்னையே காட்சிப்பொருள்களாகத் தோன்றி கனவாக மாறியதோ, அதுவே காட்சிப்படுத்திக் கொள்வதிலிருந்து விடுபட்டு, விழிப்புணர்வாகவே திரும்பவும் ஆகிவிடுகிறது. எனவே, நனவில், கனவு உலகின் அனைத்துப் பொருள்களும் (தத்துவங்களும்) தத்தம் தத்துவத்தை இழப்பதோடல்லாமல், முன்னர் அவைகள் எதுவாகயிருந்ததோ அதுவாகவே திரும்பவும் ஆகிவிடுகிறது. எப்படி கனவானது கடக்கப்பட்டு நனவுநிலையாக மேம்பாடடைகிறதோ, அப்படியே இந்நனவு நிலையும் கடக்கப்பட்டு மேம்பாடடைய வேண்டும்; உலக நனவு எனும் இந்த நீண்ட கனவுநிலையைக் கடந்து, உலகளாவிய நனவு தரும் இறை-விழிப்புணர்வில் விழித்தெழுந்து மேம்பாடடைய வேண்டும். இந்த இறை-விழிப்புணர்வு நிலையில், இப்பொழுது பொருள்களாகத் (தத்துவங்களாகத்) தோன்றுவதெல்லாம், உலகளாவிய உணர்வின் வெவ்வேறு நிலைகளாகக் காணப்பட்டு, அவ்வாறாக அநுபவிக்கப்படுகிறது. எப்படி கனவு நிலையில், கனவு காண்பவன் என்ற முகமூடி அணிந்து அக்கனவிலேயே உழன்று கொண்டு இருக்கும் வரை, (அக்கனவிலிருந்து விழித்தெழிந்தால் ஒழிய), அக்கனவைக் கடந்திட முடியாதோ; அப்படியே, தத்துவங்களைக் கடந்திட, ஜீவ-உணர்வைத் தியாகம் செய்து உலகளாவிய உணர்விற்கு விழித்தெழுவது ஒன்றே இருக்கும் வழி, அதாவது, ஒரே உண்மையான பரம்பொருளைத்

தியானம் செய்வதன்மூலம், வெளிப்போக்கு கொண்டு திரியும் உணர்வை, உள்நோக்கி அதன் ஆதாரத்திற்கு திரும்பச் செய்வதே அதற்கான ஒரே வழியாகும். பரம்பொருள் உண்மை என்பது *பாரமார்த்திக ஸத்யம்* (எல்லையற்ற அறுதி உண்மை); தத்துவங்களாலான (பொருள்களாலான) உலகம் என்பது *வியாவகாரிக ஸத்யம்* (எதார்த்த உலகியல் உண்மை); கனவு உலகம் என்பது *பிராதிபாசிக ஸத்யம்* (உண்மைபோல் தோற்றமளிப்பது).

நிச்சயமாக, எந்தவிதமான விளக்கமும் இந்த விஷயத்தில் போதுமானதாகாது. ஏனெனில், இது ஒரு பரம இரகசியம். நாம் கனவிற்குள் எப்படி, எப்போது நுழைகிறோம் என்று விளக்க இயலுமா? எதனால், எப்படி கனவுகள் வருகின்றன என்பதற்குப் பலவிதமான விளக்கங்கள் இருக்கின்றன; ஆனால் எப்படி கனவினுள் நுழைகிறோம் என்பதற்கு மட்டும் நம்மால் விளக்கிட முடிவதில்லை. திடீரென்று, நாம் கனவில் உலவுகிறோம்; எனினும், நாம் அநுபவிப்பது கனவு என்பது நமக்குத் தெரிவதில்லை. அனைத்தும் உண்மையானதாகத் தெரிகிறது. அதேபோல், எப்பொழுது எப்படி நாம் அக்கனவிலிருந்து வெளிவருகிறோம் என்பதும் நமக்குத் தெரிவதில்லை. திடீரென்று, விழித்துக் கொள்கிறோம், அப்புறம்தான் நாம் கனவு கண்டுகொண்டிருந்தோம் என்பதே நமக்குத் தெரிகிறது. அதே போன்ற மர்மம் நிறைந்ததுதான் மனித வாழ்க்கையும் --- தத்துவங்களினாலான இப்பிரபஞ்சம் இரண்டற்ற எல்லையில்லாப் பரம்பொருளிடமிருந்து எப்படித் தோன்றியது? நாம் தற்போதுள்ள தத்துவங்களினாலான இந்த (அவல) நிலைக்கு எப்படி வந்தோம்? எப்படி நாம் இந்நிலையைக் கடந்து, முக்திநிலை பெறுவோம்? --- இவையெல்லாம் ஒரு மர்மமே! சிந்தித்துப் பார்க்கும்போது, .ஒரு அளவிற்கு மேல் அனைத்தும் மனிதப் புரிதலுக்கு அப்பாற்பட்ட விஷயங்களாகி, மனித புத்தியை பேதலிக்க வைத்து விடுகின்றன. காரண-காரிய தொடர்புகூட, கடைசியில், விளக்கமுடியாத மர்மமாக ஆகிவிடுகிறது. இறைவனது கிருபையினால் பரம்பொருளானது அடையப்படும்போதுதான் அனைத்து மர்மங்களும் தீர்ந்து போகின்றன; ஆனால், அந்த கிருபையைப் பெறுவதுவே மர்மங்களிலெல்லாம் தலையாய மர்மம். எனவேதான், அருணகிரியார் ஆச்சரியப்பட்டு: "முப்பத்தாறு தத்துவங்களைக் கடந்து, அந்த பெரும்பேறான, மேலான, தெய்வீக நிலையான முக்தியை அடையும் பாக்கியம் எனக்குக் கிடைத்திடுமோ?" என்று பிரார்த்தனை செய்யுமாறு அறிவுரை செய்கிறார். இந்தப் பிரார்த்தனைக்குள்ளேயே அது நிச்சயம் நடந்திடும் என்பது அடங்கியிருக்கிறது, ஏனெனில் அனைத்தையும் அதனதன் சுய-நிலைக்கு மீட்டெடுப்பது கந்தப்

பெருமானின் சுபாவம்; எனவேதான், பெருமானின் அந்த சுபாவத்திற்கு இச்செய்யுளின் பிரார்த்தனையானது மிகவும் பொருத்தமான முறையில் --- **"சீறா வருசூர் சிதைவித்து இமையோர் கூறா உலகம் குளிர்வித்தவனே."** --- என்று வைக்கப்படுகிறது.

சொர்க்கலோகம் தேவர்களின் உறைவிடம். தான் செய்த கடும் தவத்தினால் எல்லையில்லா மாபெரும் சக்திகளை சிவனாரிடமிருந்து வரமாகப் பெற்ற அசுரன் சூரபத்மன், ஒருசமயம், சொர்க்கலோகத்தைத் தாக்கி, அதற்கு தீவைத்து, தேவர்களை சிறைப்படுத்தி, அவர்களைப் பலவிதமான அவமதிப்புகளுக்கு ஆளாக்கினான். அவ்வாறு பாதிக்கப்பட்ட தேவர்கள் சிவனாரிடம் சென்று தங்களுக்கு உதவிபுரியுமாறு பிரார்த்திக்க, அவர்களை வழிநடத்திடவும், அசுரன் சூரபத்மனை அழித்திடவும் சிவனார் கந்தப் பெருமானை தந்தருளினார். போர் மூண்டபோது, அவ்வசுரன் தன்னுடைய மாய சக்திகளைப் பிரயோகித்துப் பற்பல வடிவங்களை எடுத்து கந்தப் பெருமானைத் தாக்கினான்; மாயதந்திரங்களின் பிடிக்கெல்லாம் அப்பாலுள்ள எம்பெருமான், மாறிமாறி சூரபத்மன் எடுத்த ஒவ்வொரு வடிவத்தையும் அழித்துக் கொண்டே வந்தார். இறுதியாக, தன்னுடைய தந்திரங்கள் எதற்கும் பயனில்லை என்று கண்ட அவ்வசுரன், தன் சுயரூபத்தில் வந்து சிறிய வயதினரான பெருமானைத் தன் பெரிய உடல்பலத்தால் தாக்கி வீழ்த்திட நினைத்தான். அவ்வாறு அவன் தன் சுய உருக்கொண்டு ஆக்ரோஷத்துடன் பெருமானைத் தாக்கத் துவங்கிட, பெருமான் தன் வேலாயுதத்தை எறிந்து சூரபத்மனைக் கொன்றார். அதன்பின், கந்தப் பெருமான் அனைத்து தேவர்களையும் சிறையிலிருந்து மீட்டு, தேவர்களின் கட்டிடக் கலைஞரான விஸ்வகர்மாவை அழைத்து தேவர்களின் சுவர்க்கலோகத்தை திரும்பவும் நிர்மாணித்திடப் பணித்தார். விஸ்வகர்மாவும் அவர் ஆக்ஞையை ஏற்று, முன்பு இருந்ததைவிடவும் மிக அழகாக சுவர்க்கலோகத்தை உருவாக்கித் தந்தார். கந்தப் பெருமான் இந்திரன் மற்றும் அனைத்துத் தேவர்களுக்கும் அவரவர்களின் பதவியை திரும்பக் கொடுத்தார். இவ்வாறாக, பெருமானானவர் தேவர்களின் வெந்திருந்த நெஞ்சையும், சூரபத்மனால் எரிக்கப்பட்டிருந்த சுவர்க்கலோகத்தையும் ஒருசேர குளிர்வித்ததோடல்லாமல், அவர்களுக்கு உரிய சுவர்க்கத்தைத் திரும்ப அவர்களின் உறைவிடமாக்கினார்.

ஜீவர்களின் மூலமுதலான உண்மை உறைவிடம் இறைவன்தான். ஜீவர்கள் தங்கள் உண்மை ஸச்சிதானந்த சொரூபத்தை எப்படியோ மறந்து, சம்சாரமெனும் காட்டில் அலைந்து

திரிந்து, (36) தத்துவங்களின் நெருப்பால் தகிக்கப்படுகின்றனர். தங்கள் உண்மை சொரூபத்தை மறந்ததும், பரம்பொருள் ஒன்று மட்டுமே இருக்கும்போது அதைப் பலவாகப் (பொருள்களாக/ தத்துவங்களாகப்) பார்ப்பதுமே ஜீவர்களின் இத்துன்பத்திற்குக் காரணாமாகிறது. இந்நிலையைக் கடந்து தங்கள் உண்மை நிலையான எல்லையற்ற பேருணர்வாகவே ஆகிட வேண்டும். இத்தகைய உயரிய நிலையை அடைவதற்காகவே, இச்செய்யுளில் பிரார்த்தனை செய்யப்படுகிறது: "ஓ கந்தப் பெருமானே! என்னுடைய உண்மை உறைவிடமான ஸச்சிதானந்த நிலையிலிருந்து அறியாமையெனும் அசுரனால் விரட்டப்பட்ட நான், தத்துவங்களினால் சிறை பிடிக்கப்பட்டு சுட்டு பொசுக்கப்பட்டு வருகிறேன். சூரபத்மனை அழித்து, தேவர்களின் உள்ளங்களையும், சுவர்க்க லோகத்தையும் குளிர்வித்து, அவர்கள் சுவர்க்கத்திற்கு மீண்டும் திரும்பிச் செல்ல எவ்வாறு நீங்கள் அருள் புரிந்தீர்களோ, அவ்வாறே என்மீது கிருபைகொண்டு, என்னிடமுள்ள அறியாமையெனும் அசுரனை அழித்து, மூலமுதலான எனது உண்மை நிலையை எனக்குத் திருப்பி அளித்து, எனது நெஞ்சையும் குளிர்வித்து ஸச்சிதானந்தத்தில் திளைத்திட அருள்புரிவாயாக."

இச்செய்யுளின் முதல் வரியில் வரும் "ஆறாறு" என்ற வார்த்தைக்கு பலப்பல அர்த்தங்கள் இருப்பதால், இச்செய்யுள் பலவாறாக விளக்கப்படுகிறது. இவ்வார்த்தை 'ஆறு', 'ஆறு' என்ற இரு சொற்களால் ஆனது; ஆறு என்ற சொல்லிற்கு ஆறு என்ற எண், நதி (ஆறு), பாதை, இரு முறைமை, வழிவகை, மதம், எனவாகப் பல அர்த்தங்கள் உள்ளன. எனவே, 'ஆறு' என்ற இரு சொற்களுக்கும் 'எண்கள்' எனப் பொருள் கொண்டால், அதன் அர்த்தம் முப்பத்தாறாகிறது (6 X 6), அதாவது 36 தத்துவங்கள் என்று பொருள் கொள்ளலாம், பெரும்பாலும் தமிழ் நூல்களில் இவ்வாறே பொருள் கொள்ளப்படுகிறது. இத்தகைய பொருள் கொண்டு நாம் ஏற்கனவே பார்த்து விட்டோம். மற்ற பொருள் விளக்கங்கள்:

(I) முதல் "ஆறை" 'எண்' என்றும், இரண்டாம் "ஆறை" 'மதம்' என்றும் பொருள் கொண்டு விளக்கினால், இதன் அர்த்தம் இவ்வாறு அமையும்: "ஆறு மதப் பிரிவுகளைக் (cults) கடந்து, இவற்றிற்கு மேலாயிருக்கும் அந்த உயரிய பரபிரம்ம நிலையை அடையும் பாக்கியத்தை நான் பெறுவேனா?"

இந்துக்களின் ஆறு மதப்பிரிவுகள் 'சண்மதம்' என்றழைக்கப்படுகிறது. அவையாவன: 1. சைவம், 2. வைஷ்ணவம், 3. சாக்தம், 4. காணாபத்யம், 5. கௌமாரம், 6. சௌரம். இம்மதப் பிரிவுகள்

முறையே சிவன், விஷ்ணு, தேவி (அ) சக்தி, கணபதி, முருகன், சூரியன் ஆகிய கடவுள்களை பரமாத்மாவாக கொள்கின்றன.

பரம்பொருள் என்பது ஒன்றுதான். அது *"ஸத்யம், ஞானம், அனந்தம் பிரம்மம்"* என்று சொல்லப்படுகிறது. அது 'ஸத்யம்' (உண்மை), *'ஞானம்'* (அறிவெனும் உணர்வு), *'அனந்தம்'* (எல்லையில்லாதது / என்றும் எங்கும் இருப்பது). அதுவே பிரம்மம். அந்த இறுதியான உண்மைப் பரம்பொருளை (பிரம்மத்தை) நேரிடையாக தியானம்செய்து அடைவது மிகவும் கடினம்; எனவே, அதைச் சுலபமாக அடைவதற்கு, வெவ்வேறு மனிதர்களின் ருசிக்கும் மனநிலைக்கும் பொருந்தும் விதத்தில், அத்வைத ஆச்சாரியரான ஆதிசங்கர பகவத்பாதாள், 'சண்மதத்தை' (இந்துமதத்தின் ஆறு பிரிவுகளை) ஸ்தாபனம் செய்தார். அதன்படி, சிவனார் முதலான ஆறு கடவுள்களும், அதே பரம்பொருளின் கருத்துப்படிவங்கள்; அந்த ஒற்றை பரம்பொருளை அடைவதற்கு "சைவம்" முதலான ஆறு மரபுகள், ஆறு வழிபாட்டு முறைகள். உண்மைப் பரம்பொருளுக்கு மதமோ (அ) வழிபாட்டு மரபோ இல்லை; அது மதங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டது --- மேலே கூறப்பட்ட 'சண்மதங்களுக்கும்' (ஆறு மரபுகளுக்கும்), ஏன் இவ்வுலகிலுள்ள அனைத்து மதங்களுக்குமே அப்பாற்பட்டதெனலாம். மதம் அல்லது சமயம் மனிதனுக்குதான், இறைவனுக்கு அல்ல; உண்மைப் பரம்பொருள் எந்த மதத்தையும் சேர்ந்ததல்ல. அது மதங்களைக் கடந்து இருக்கிறது.

எனவே, அனைத்து மதங்களும் அந்த ஒரே உண்மைப் பரம்பொருளை அடைவதற்கான மாறுபட்ட அணுகுமுறைகளே. மதங்களின் இஷ்ட- தெய்வங்கள், (சிவபெருமான் முதலானவர்கள்) வழிபாட்டுமுறையில் ஒரு முக்கிய பிரயோஜனத்திற்காக உள்ளன. இஷ்ட-தெய்வங்கள் அந்த ஒரு உண்மையின் முகப்பாக (facet) இருப்பதால், அவை கூட்டிணைப்புக் கேந்திரங்களாகச் செயல்பட்டு, அந்த ஒரு உண்மையை நோக்கி சாதகனை வழிநடத்தி, அதில் புகும் நுழைவாயிலாகின்றன. அக்கருத்துப் படிவங்கள் (இஷ்ட-தெய்வங்கள்) அறுதிப்பொருளின் தற்காலிகப் படிவங்கள்; எனவே, இறுதியில் அவைகளும் கடக்கப்பட வேண்டும். இவ்விஷயத்தை மறந்து விடக்கூடாது. சாதகர்கள் இஷ்ட-தெய்வங்களை அவைகள்தான் இறுதியாக அடையப்பட வேண்டிய நிலையென்று கருதி, அதையே கெட்டியாகப் பற்றிக்கொண்டு இருந்துவிடக்கூடாது. ஏனெனில், அவை உருவமும் அருவமும் இல்லாத பிரம்மத்தின் தற்காலிகப் படிவங்கள், அவை கடைசியில் பிரம்மத்தில் ஒடுங்கிவிடும். எப்படி அனைத்து நதிகளும் இறுதியில் ஒரே கடலில் சங்கமித்து தத்தம் பெயர் மற்றும் வடிவத்தை இழந்து விடுகின்றனவோ, அப்படியே

எல்லா வடிவங்களும் அவ்வுண்மைப் பரம்பொருளில் ஒன்றாகக் கலந்து பதங்கமாகி விடும். தோத்தாப்புரி குருநாதர், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருக்கு காளிதேவியையும் கடந்து செல்லப் பணித்ததை இங்கு நினைவில் கொள்வது உசிதமானது. எனவே, எந்த ஒரு மதத்தை ஒருவன் தழுவியிருந்தாலும் சரி, இறுதியில் உண்மைப் பரம்பொருளை அடைய வேண்டும்; அதுவே மதங்களின் குறிக்கோள், பயன். இஷ்ட-தெய்வங்களை அடைவதே இறுதிக் குறிக்கோளல்ல, பிரம்மத்தை (பரம்பொருளை) விரும்பி, அடைவது மட்டுமே இறுதிக் குறிக்கோளாக ஆகவேண்டுமென்றும், அதை அடைவதில் இஷ்ட-தெய்வங்களின் உபாசனை அவசியமான கட்டங்கள் என்றும் உணர்த்துகிறார் அருட்செல்வர் அருணகிரியார். இதைத்தான் "ஆறு மதப் பிரிவுகளைக் (cults) கடந்து, இவற்றிற்கு மேலாயிருக்கும் அந்த உயரிய பரபிரம்ம நிலையை அடையும் பாக்கியத்தை நான் பெறுவேனா?" என்று குறிப்பாக பிரார்த்திக்கக் கூறுகிறார்.

அருணகிரியார் கந்தப் பெருமானின் அதிதீவிர பக்தராக இருந்த போதிலும், அனைத்து சமய மரபுகளையும் ஒருங்கிணைப்பவராக இருந்தார் என்பதை நாம் காணலாம். அவர் இயற்றிய திருப்புகழ் பாடல்கள் பலவற்றில் அவர் சிவனார், விஷ்ணு பகவான், பராசக்தி, இராமர், மற்றும் அனைத்து கடவுள்களின் மகிமைகளையும் பெருமைகளையும் பற்றி எவ்வளவு நேர்த்தியாகவும், எழுச்சியூட்டும் வகையிலும் பாடியுள்ளார் என்பதை நாம் காணலாம். அருணகிரியார், அத்வைதத்தின் மிகப்பெரிய பக்தனாக விளங்கினார் --- அவர் அத்வைத அநுபவத்தைப் பெற்று அதிலேயே திளைத்திருந்த மகாமுனிவர். எல்லாத் திருப்புகழ்களிலும் அவர் கந்தப் பெருமானையே புகழ்ந்து பாடியுள்ளார்; ஆனால் அவர் கந்தப் பெருமானை இஷ்டதெய்வமாகக் கருதாமல், சாக்ஷாத் பரம்பொருளாகவே கருதினார்; இந்நூலின் பதின்மூன்றாம் செய்யுளிலிருந்தும், "பிறவியலை யாற்றினிற் புகுதாதே" என்று தொடங்கும் (1299) திருப்புகழ் பாடலில் *"அறு சமய சாத்திரப் பொருளோன்"* என்று கந்தப் பெருமானைக் கூறுவதிலிருந்தும் இவ்விஷயம் தெளிவாகத் தெரிகிறது. இத்தகைய மனப்பாங்கையும், இந்த அணுகுமுறையையும் நாமும் நம்முடைய இஷ்டதெய்வங்களிடம் கொள்ள வேண்டுமென்று அருணகிரியார் விரும்புகிறார். ஒருவனின் கடவுளைப் பற்றிய கருத்து எவ்விதமாயிருப்பினும், எந்த மதத்தை அவன் தழுவியிருந்தாலும், அவன் அடையவேண்டிய குறிக்கோள் அனைத்தையும் கடந்து நிற்கும் பரம்பொருளே -- இதுவே அருட்செல்வரின் அறிவுரை,

(II) முதல் 'ஆறு' எண்ணாகவும், இரண்டாவது 'ஆறு' 'சக்கரம்' என்றும் பொருள் கொள்ளலாம். குண்டலினீ சக்தி செல்லும் பாதையிலுள்ள ஆறு சக்கரங்களென்று பொருள் கொண்டால், கிடைக்கும் அர்த்தம் இவ்வாறாகிறது: "ஆறு சக்கரங்களைக் கடந்து, அவற்றிற்கு மேலாய் (சகஸ்ராரத்தில்) இருக்கும் அந்த உயரிய சிவனாருடன் ஐக்கிய (அநுபூதி) நிலையை அடையும் பாக்கியத்தை நான் பெறுவேனா?" 'ஆறு' என்ற சொல்லிற்கு 'சக்கரம்' என்று நேரடி அர்த்தம் இல்லைதான்; இருந்தாலும், குண்டலினீ சக்தி நகரும் பாதையின் கட்டங்களாக இருப்பதால், சக்கரமென்பது மறைமுகமாக பெறப்பட்ட அர்த்தமே. இவ்வாறான பிரயோகத்தை தமிழ் இலக்கியங்களில் நாம் காணலாம் --- முனிவர் திருமூலரின் திருமந்திரத்தின் 2419-ஆவது செய்யுளிலும், முனிவர் ராமலிங்க அடிகளாரின் திருவருட்பாவிலும் இவ்வாறாக ஆறு என்ற சொல்லை சக்கரம் என்ற அர்த்தத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

ஆறு சக்கரங்களாவன: மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, மற்றும் ஆக்ஞா சக்கரம். சக்திக் கேந்திரங்களாக விளங்கும் சக்கரங்கள் (சக்தி மையங்கள்), சூட்சும உடலில் உள்ளன; அவைகளை ஊனக் கண்களால் கண்டிட இயலாது, மனதை ஒருமுகப்படுத்திய நிலையில் யோகிகள் காண்கின்றனர்; பௌதிக உடலிலுள்ள முதுகெலும்பு மற்றும் பின்னல் போன்ற அமைப்பு கொண்ட நரம்பு மண்டலப் பகுதிகளில், ஆறு சக்கரங்களுக்கு ஒத்திசைவான (பொருந்துகிற) மையங்கள் உள்ளன --- முதுகெலும்பின் அடியில், பிறப்புறுப்பின் மூலத்தில், தொப்புள் பகுதியில் (நாபி ஸ்தானம்), இதயத்தில், தொண்டைக்குழியில், இருபுருவங்களின் நடுப்பகுதியில் ((முக்கண் ஸ்தானம்) ஆகிய இடங்களில், இவை முறையே அமைந்திருக்கின்றன. ஒவ்வொருவரின் மூலாதார சக்கரத்தில் குண்டலினீ சக்தி உறங்கிக் கொண்டிருக்கிறது, ஆசனம், பிரணாயாமம், பந்தம், முத்திரை, தியானம் போன்ற யோகப் பயிற்சிகளின்மூலம் அந்தக் குண்டலினீ சக்தியை விழிக்கச்செய்து, மூலாதார சக்கரத்திலிருந்து ஒவ்வொரு சக்கரத்தின் வழியே மேலெழும்பச் செய்து, தலைஉச்சியில் அமைந்துள்ள சகஸ்ரார சக்கரத்தில் உறையும் சிவபெருமானோடு இணையுமாறு செய்யப்படுகிறது. அப்பொழுது அந்த யோகி பூரண ஆனந்தத்தை சதா சர்வகாலமும் அநுபவிக்கிறான்.

சுவாமி சிவானந்த மஹராஜ், "குண்டலினீ யோகம் ஒரு முறையான சாஸ்திரம்" என்கிறார். அது ஒரு மகத்தான பெரிய அறிவு நூல், அதை இங்கு முழுமையாகத் தெரிந்து கொள்வதற்கு அவகாசம் போதாது. எனினும், அதன் முக்கிய சாராம்சங்களை மட்டும்

இங்கு காண்போம். அசையாத சக்தி மற்றும் அசையும் சக்தி என்று சக்தி இருவகைப்படும். (Static and dynamic aspects of Energy). அவ்விரண்டையும் ஒருங்கி இணைக்கும் வழிமுறை குண்டலினீ யோகப் பயிற்சி; அதன் மூலம் ஒரு மனிதனுக்கும் அண்டத்திற்குமிடையே ஐக்கியம் அடையப்படுகிறது. பிரபஞ்சத்தின் உற்பத்தியில், உணர்வுப் பிழம்பாகிய பரம்பொருள் தன்னைப் பல படித்தளங்களில் கெட்டிப்படுத்திக் கொண்டே போய், அதுவே இப்பிரபஞ்சம் எனும் ஒரு ஸ்தூலப் பொருளாக உருமாறித் தோன்றுகிறது. மேலும், தனிமனிதர்களின் மலர்ச்சியில், அந்த அண்ட சக்தியானது அவர்களின் உள்ளே அசையாத சக்தியாக மூலாதார சக்கரத்தில் அழுத்தி அமுக்கப்படுகிறது. மனித சரீரத்தின் அமைப்பு வெளிப்பிரபஞ்சத்துடன் ஒவ்வொரு படித்தளத்திலும் உயிருள்ள பிணைப்பு கொண்டிருக்கிறது. மனிதனின் கால்விரல்கள், உள்ளங்கால்கள், கணுக்கால்கள், கீழ்கால் தண்டு, முழங்கால் மூட்டுகள், தொடைகள், மற்றும் இடுப்பு ஆகிய இடுப்புப் பகுதிவரையிலான ஏழு பகுதிகள், முறையே பாதால, மகாதல, ரசாதல, தலாதல, சுதல, விதல, அதல எனப்படும் கீழேழு லோகங்களுடன் தொடர்பு கொண்டுள்ளன. அதேபோல், இடுப்பிற்கு மேல் இருக்கும் மூலாதாரம் முதலான ஆறு சக்கரங்களும், முறையே பூலோகம், புவர் லோகம், சுவர்(க்க) லோகம், மஹர் லோகம், ஜன லோகம், தபோ லோகங்களோடும், மற்றும் சகஸ்ரார சக்கரம் ஸத்ய லோகம் ஆகிய மேலேழு லோகங்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. அனைத்து சாதாரண மனிதர்களின் மூலாதார சக்கரத்தில் குண்டலினீ சக்தியானது நிலைபெற்று இருப்பதால், நாம் அனைவரும் ஸ்தூல பிரபஞ்சமான பூலோகத்தைப் பற்றிய உணர்வை மட்டுமே (நனவுலகம்) கொண்டுள்ளோம்.

ஒரு சக்கரத்தின்மேல் மனதை ஒருமுகப்படுத்தி, அதன்மேல் தியானம் செய்யும்போது, அந்த யோகி அதேசமயத்தில் அச்சக்கரத்துடன் சம்பந்தப்பட்ட லோகத்துடன் தொடர்பு செய்து கொள்கிறான். அந்தப் பயிற்சியின்மூலம் அந்தச் சக்கரத்திலிருந்து குண்டலினீ சக்தி எழுப்பப்படும்போது, அச்சக்கரம், மற்றும் அதன் தொடர்புடைய லோகம் ஆகிய இரண்டும் அவனுடைய முழு ஆதிக்கத்தில் வருகின்றன. ஒவ்வொரு சக்கரமும் அதனுடைய முந்தைய சக்கரத்தைவிட மேலும் சூட்சுமமானது; அதேபோல் லோகங்களும் அமைந்து உள்ளன. எனவே, குண்டலினீ சக்தியானது ஒவ்வொரு சக்கரத்தையும் கடந்து செல்லும்பொழுது, அதன் உணர்வு நிலையும் மேன்மேலும் தூய்மையும் சூட்சுமமுமாகிக் கொண்டே போகிறது. ஆக கடைசியில், குண்டலினீயானது ஆக்ஞா சக்கரத்தைக்

கடந்து சகஸ்ராரத்தை அடையும்போது, அது தனது சுய-நிலையான வெறும் சைதன்ய (தூய உணர்வு) நிலையைத் திரும்பப் பெறுகிறது, அந்நிலையில் யோகி எல்லையற்ற பேரின்பத்தில் திளைக்கிறான்.

மனித உடலின் அனைத்து பகுதிகளிலும் சக்தியானது பரவியுள்ளது; எனினும், அது சில குறிப்பிட்ட மையங்களை இருப்பிடமாகக் கொள்கிறது, பொதுவாக, அது மனித அமைப்பு முழுமைக்கும் சக்தியை அளிக்கும் மூலாதார சக்கரத்தில் இருக்கிறது. நதியில் நீர் சுழல்வதுபோல, பிராணசக்தியானது இச்சக்கரங்களில் சுழண்டு கொண்டிருக்கிறது; அந்தப் பிராணசக்தியின் சுழற்சி ஒவ்வொரு சக்கரத்திலும் ஒருவிதமான சூட்சும வடிவத்தை எடுக்கிறது. அந்த சூட்சும வடிவம் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்ட இதழ்களையுடைய தாமரை மலர்போல் காட்சியளிக்கிறது. எனவே, ஒவ்வொரு சக்கரமும் வெவ்வேறு எண்ணிக்கையுள்ள இதழ்களைக் கொண்ட தாமரை மலருக்கு ஒப்பிடப்படுகிறது, மேலும் ஒவ்வொரு சக்கரத்திற்கும் அதிஷ்டான தெய்வம், நிறம், வடிவம், பீஜ-அட்சரம், ஆகியவைகளும் தனித்தனியாக உள்ளன. குண்டலினீ ஒரு வலிமையான சக்தியானதால், அது விழிப்படையச் செய்யப்பட்டால், அதை சரியான முறையில் கட்டுப்படுத்தப்படவும் சரியான திசையில் செலுத்தப் படவும் வேண்டும்; இல்லையேல் அது நன்மை செய்வதைவிட அதிகமாக தீமை செய்யக் கூடும். எனவே, குண்டலினீ யோகத்தைப் பயிற்சிசெய்பவன் அதிகமான தார்மீகக் கட்டுப்பாடு கொண்டிருக்க வேண்டும், மேலும் இந்த யோகம் ஒரு நிபுணனின் கண்பார்வையில் பழகப்படவேண்டும். இப்படியாக, ஒருவன் ஆசனம், பிராணாயாமம், பந்தங்கள், மந்திர-ஜபம், தியானம் முதலிய வழிமுறைகளைக் கடைப்பிடித்து, மூலாதார சக்கரத்தில் உறங்கும் குண்டலினீ சக்தியைத் தட்டி எழுப்பி, அதை ஒவ்வொரு சக்கரத்தின் வழியே மேல்நோக்கிக் கொண்டே போய், உச்சந்தலையில் இருக்கும் ஆயிரம் இதழ்கள் கொண்ட சகஸ்ரார சக்கரத்தை அடையச்செய்தால், சக்தி சிவனுடனும், ஜீவாத்மா பரமாத்மாவுடனும், மனிதன் இறைவனுடனும் ஐக்கியமாகும் நிலை ஏற்படுகிறது. அப்பொழுது சாதகன் எல்லையற்ற பேரின்பத்தில் திளைக்கிறான். இதுவே குண்டலினீ யோகத்தின் குறிக்கோளாகும். குண்டலினீ சக்தி ஒவ்வொரு சக்கரத்தைக் கடக்கும்போதும், சாதனுக்கு அச்சக்கரத்தைச் சார்ந்த விதவிதமான சித்திகள் கைவரப் பெருகின்றன. அவன் அவற்றில் சிக்கி, மயங்கி, அவற்றை பிரயோகிக்கும் ஆசைகளில் விழக்கூடும். இந்த ஆபத்திலிருந்து தப்புவது மிகக்கடினம்; ஆகவே மிக மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

குண்டலினீ யோகத்தையன்றி மற்ற யோகங்களைப் பயில்பவர்களுக்கும்கூட, அவர்கள் அறியாமலேயே, குண்டலினீ சக்தியானது தட்டி எழுப்பப்பட்டு, ஒவ்வொரு சக்கரமாகக் கடக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அந்த யோகி அவனுடைய பயிற்சியின் வெவ்வேறு கட்டத்திலும் விதவிதான வியக்கத்தக்க இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளைப் பெறுகிறான். அச்சமயம் அவன் அவைகளால் பூரணமாக மயக்கப்பட்டு, அச்சக்கரங்களில் எதிலேனும் தேங்கி நின்று விடுக்கூடும். அப்படி ஆகிவிடாமல் ஜாக்கிரதையாக இருந்து, எல்லாச் சக்கரங்களையும் கடந்து இறைவனை அடையவேண்டும். எனவேதான், அவ்வாறு எதுவும் நிகழ்ந்து விடாமல் இருப்பதற்காக, தத்துவங்கள், மதம், மரபு, சக்கரங்கள் ஆகியவைகளைக் கடந்து அதற்கு மேலான திவ்ய நிலையைப் பெறும் பாக்கியத்தைவேண்டி இச்செய்யுளில் பிரார்த்தனை செய்யப்பட்டுள்ளது. பரம்பொருளை அடைவதே யோகத்தின் குறிக்கோள், அதை ஒருபொழுதும் மறக்கக் கூடாது.

==========

செய்யுள் - 48

==========

அறிவொன்று அறநின்று அறிவார் அறிவில்
பிறிவொன்று அறநின்ற பிரான் அலையோ
செறிவொன்று அறவந்து இருளே சிதைய
வெறிவென்றவரோடு உறும் வேலவனே.

பொழிப்புரை: "அனைத்துப் புலனறிவுகளின் செயல்பாடு-களிலிருந்து விடுபட்டு, அறிபவர்களின் அறிவில் (தூய புத்தியில்/உள்ளுணர்வில்), ஒரு சிறிதுகூடப் பிரியாமல் இருக்கும் பிரான் அன்றோ நீ? (இந்தப் பயிற்சி தொடர்ந்துத் தீவிரமாக்கச் செய்யப்படும்போது) (*விக்ஷேபத்தினால்* விளையும்) உலக (அ) வெளித் தொடர்புகள் அனைத்தும் அறவே அற்றுபோய், (*ஆவரணத்தால்* விளையும்) இருளும் அகற்றப்பட்டு, மதிமயக்கத்தை (அறியாமையை) வெற்றி கொண்டவரோடு (ஞானியர்களின் உள்ளத்தில்) என்றென்றும் நிரந்தரமாக உறையும் வேலாயுதப் பெருமானே!"

விளக்கவுரை

கடோபநிஷத்தின் பல மந்திரங்களில் விளக்கப்பட்ட விஷயமான யோக மார்க்க அநுஷ்டானத்தில் புதைந்துள்ள இரகசியங்கள் மற்றும் ஆத்மானுபூதி பற்றியும் நமக்கு மிகவும் நன்கு விளங்கும் விதத்தில் அருட்செல்வர் அருணகிரியார் இந்த ஒரு செய்யுளிலேயே கற்பித்து விடுகிறார். அதனால் இது மிகவும் அரிதான ஒரு செய்யுள். செய்யுள் 42ல் கூறப்பட்ட விஷயத்தின் விரிவாக்கமாகவும் இச்செய்யுள் அமைந்திருக்கிறது.

இறைவன், எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருள். அவர் எங்குமிருக்கிறார் --- தூரத்திலும் அருகிலும், வெளியிலும் உள்ளேயும், மேலேயும் கீழேயும் எங்கும் அவர் இருக்கிறார். எனவே, அவர் எப்பொழுதும் நமக்கு உள்ளேயும் இருக்கிறார். நமக்குள்ளிருக்கும் சாராம்சமே (நமது உண்மை வடிவமே) அவர்தான். அவரே நம் ஆத்மா, உண்மையான "நான்". இவ்வாறாக இருந்த போதிலும், நாம் அவரை அறிவதில்லை, உணர்வதில்லை, அனுபவிப்பதில்லை என்பது ஒரு முரண்பாடான, நகைப்புக்குரிய விஷயம். ஏன் இந்த நிலை?

இறைவனைப்பற்றியோ, நம்மை (ஆத்மாவை)ப் பற்றியோ நமக்குப் போதிய ஞானம் இல்லாமையே இதற்குக் காரணம். இது நம்முடைய ஞான-இந்திரியங்களின் சேஷ்டையின் விளைவு. எனவேதான், நாம் அவரை வெளியில் இருக்கும் ஒரு பொருளாகத் தேடிக் கொண்டிருக்கிறோம். இதுதான் நாம் செய்யும் அடிப்படையான தவறு. அதனால், நம்முள்ளேயே இருக்கும் இருப்பாக, உண்மையான நானாக, அறிபவனாக, உணர்வாக அவரை நாம் தேடவேண்டும் என்கிறார் அருணகிரியார். அவ்வாறு செய்வது எப்படி? முதலில், நாம் புலன்சார்ந்த உணர்தல் மற்றும் புலன்கள் தரும் அறிவு ஆகியவைகளிலிருந்து விடுதலை பெறவேண்டும். ஆனால், இப்போது நாம் இந்தப் புலன்களுக்கு அடிமையாகி இருக்கிறோம், புலன்களைக்கொண்டு எது அறியப்படுகிறதோ அது மட்டுமே நமக்கு உண்மை, இறைவனும்கூட இந்த புலன்சார் உணர்தலுக்கு உட்பட வேண்டும். இந்த புலன்சார் அறிவு வேட்டை (புலன்கள் மற்றும் மனதின் வெளிச்செல்லும் இயல்பு) முதலில் நிறுத்தப்பட வேண்டும். புலன்களும் மனதும் வெளிச்செல்லும் போக்கைத் துறந்து, எல்லாவிதமான புலன் உணர்தல்களும் நிறுத்தப்பட்டு, மனது உள்நோக்கிச் சென்று, அசைவற்றதாக ஆக வேண்டும். ஒரு புலன்கூட, (ஆறாவது புலனான) மனது உட்பட, செயல்படக்கூடாது. அதனால்தான், அருணகிரியார், *"அறிவு ஒன்று அற நின்று"* என்று சொல்கிறார்: அதாவது, ஒரு புலன் கூட (மனது உட்பட) செயல்படாமலிருக்கும் நிலையில் உறுதியாகத் தன்னை நிலைப்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு சரியாக நிலைபெறுவதுதான் *பிரத்தியாகாரம்* எனப்படும் (புலன்களை முழுவதுமாக திரும்பப் பெறுதல்), இந்நிலையை அடைவதற்கு *யமம், நியமம்* ஆகிய முந்தைய நிலைகளைச் சரியாக அநுசரித்து அவற்றில் முழுநிறைவு பெற்றிருக்க வேண்டும்.

இந்த நிபந்தனையைப் பூர்த்தி செய்த பின்னரே, நாம் "அறிய" வேண்டும். ஆனால், இதை நாம் ஒருபொழுதும் செய்வதில்லை. புலன்களை கட்டுப்படுத்தாமல், *யமம்* மற்றும் *நியமம்* அநுஷ்டானம் செய்யாமல், புலன்கள் மற்றும் மனதின் வெளிச்செல்லும் போக்கை சிறிதுகூட தடைப்படுத்தாமல் அவைகளைப் போனவழியில் போகவிட்டு, இறைவனை அடைவதற்காக அவர்மேல் மனத்தை நிலைநிறுத்தவும் தியானம் செய்யவும் முயல்கிறோம். இந்த முயற்சியில் எப்படி வெற்றி அடைந்திட இயலும்? எனவே, *ஒவ்வொரு* புலன்-உணர்தலிலிருந்தும் விடுபட வேண்டும்; 'அறிவு ஒன்று அற நின்று' என்கிறார் அருணகிரியார். ஆனால், இதை ஒருவன் செய்திட முயலும்போது, மனம் ஒரு (தீய) விளையாட்டை (அ)

குறும்பைச் செய்திடும். மனதின் இயற்கை இயல்பு என்னவெனில் அது ஒன்று சுறுசுறுப்பாக இயங்கும் அல்லது தூங்கப் போய்விடும். நாம் மனதின் வெளிச்செல்லும் போக்கை *(ரஜஸ்)* கட்டுப்படுத்தி தியானிக்க முயன்றால், அது உடனே தூங்கப் போய்விடும் அல்லது ஜடத்துவம் *(தமஸ்)* ஆகிவிடும். இப்படி ஆவதை எப்படியாவது தவிர்த்தல் அவசியம். உணர்வு நிலையில் வைத்திருப்பது அத்தியாவசியம் என்பதை 'அறிவார்' (அறிகின்றவன்) என்ற சொல் உணர்த்துகிறது. இங்கு 'அறிவார்' (அறிகின்றவன்) என்று சொல்கிறபோது, அனைத்துப் புலனறிவுகளும் நிறுத்தப்பட்ட *பின்னர், அறிதல்* என்று அர்த்தம். எனவே, 'அறிவதில்' இது ஒரு புதுமையான முறை -- மனது மற்றும் புலன்கள் ஆகிய வலைகளிலிருந்து விடுபட்ட பின், புத்தியே புத்தியால் நேரடியாக அறிகிறது. புலன்கள் செயல்பாடு அற்றுப்போய், மனதும் அமைதியாய் இருக்கும்போது, புத்தி தெளிவடைகிறது (சலனமற்று இருக்கிறது). அப்பொழுது, அந்த சலனமற்ற புத்தியில் *கூடஸ்த* ஆத்மாவின் பிரதிபலிப்பான *சிதாபாஸம்* எனப்படும் ஜீவ-உணர்வும் எந்தவிதமான தொந்தரவும் இல்லாது முற்றிலும் அசையாத நிலைபெறுகிறது, அதாவது சுய மையமாகிறது (அ) தன்னுணர்வு அடைகிறது. இந்த சுயமையமான *சிதாபாஸம்* இங்கு 'அறிவு' ('அறிவில்') என்று குறிப்பிடப்படுகிறது. அது குறிப்பது புத்தியை அல்ல, அறிவுத்திறத்தையே (not the intellect. but the *Intelligence*). அவ்வாறு நிலைபேறு பெற்ற *சிதாபாஸம்* கூடஸ்தனிலிருந்து வேறுபடாதபடி ஒன்றுடன் ஒன்று இணைந்து இருக்கிறது. எனவே, ஜீவ-உணர்வு (சிதாபாஸம்) முதலில் வெளிநோக்கிச் செல்வதிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் ("அறிவொன்று அற நின்று"); அது உணர்வை இழக்காது காக்கப்பட வேண்டும், தூங்க விடாமல் தடுக்கப்பட வேண்டும், அதாவது உணர்வுடன் இருக்கவேண்டும் ("அறிவார்"); அந்த வெளிநோக்கற்று விழிப்புணர்வும் கொண்டிருக்கும் *சிதாபாஸத்தில்* ("அறிவில்"), உண்மை பரம்பொருளெனும் இறைவன் எந்தவித பிரிவும் இல்லாமல் இணைந்து இருக்கிறான் ("பிறிவொன்று அற நின்ற பிரான்").

"பிறிவொன்று அற நின்ற பிரான்" என்றால் என்ன? ஆத்மா எனப்படும் கூடஸ்த சைதன்யம் என்றும் மாறாத உண்மை. அதுவே எப்பொழுதும் ஒளிர்ந்து கொண்டிருக்கும் 'சாட்சி சைதன்யம்'. புத்தியில் அதன் பிரதிபலிப்பு, ஜீவ-உணர்வு *(சிதாபாஸம்)* எனப்படுகிறது. புலன்-உணர்வுகளிலிலிருந்து விடுபட்டு, மனம் அமைதி பெற்று, புத்தி சலனமற்று இருக்கும்போது, அதில் பிரதிபலிக்கும் சிதாபாஸமும் அசையாது நிலைபெறுகிறது; ஆகையால், எப்பொழுதும் சாட்சி சைதன்யமாக ஒளிர்ந்து

கொண்டிருக்கும் கூடஸ்த ஆத்மாவுடன் (இறைவனுடன் அல்லது பிரானுடன்) இணைந்து இருக்கிறது. பிரதிபலிப்பும் அதன் மூலமும் ஒன்றாக இருத்தல். இதுவே "பிறிவொன்று அற நின்ற பிரான்". ஒரு உதாரணம் கொண்டு இதை மேலும் தெளிவாக நாம் புரிந்து கொள்ளலாம்.

சூரியன் ஒளிர்கிறது. அதன் கிரணங்கள் வீட்டுக்கூரையின் ஒரு துவாரத்தின்மூலம் வந்து, சுத்தமான முகம் பார்க்கும் கண்ணாடியின் மீது விழும்போது, அதிலிருந்து பிரதிபலிக்கும் கிரணங்கள் வெளிப்படுகின்றன. அச்சூரியனை கூடஸ்தனாகவும், அப்பிரதிபலிப்பை சிதாபாஸமாகவும் கற்பனை செய்வோம். கண்ணாடி, புத்தியைப் போல், பிரதிபலிக்கும் சக்தி கொண்ட ஒரு ஊடகம். கண்ணாடியில் எந்த இடத்தில் சூரிய கிரணங்கள் விழுந்து, அங்கிருந்து பிரதிபலிப்பு கிளம்புகிறதோ, அவ்விடத்தில் அவ்விரண்டும் (கிரணங்களும், அதன் பிரதிபலிப்பும்) பிறிவொன்றுமில்லாத நிலையில் இருக்கின்றன. கண்ணாடியின்மேல் அவ்விரண்டும் ஒன்றாயிருக்குமிடத்தில், அது கண்ணாடியின்மேல் விழும் சூரியனுடைய கிரணமா அல்லது கண்ணாடியிலிருந்து வெளிக்கிளம்பும் பிரதிபலிப்பு-கிரணமா என்று நம்மால் பிரித்து அறிந்திட இயலாது. நாம் அதை எதுவென்று --- (அதாவது சூரியனுடைய கிரணம் என்று அல்லது பிரதிபலிப்பு-கிரணம் என்று) சொன்னாலும், அது சரியாகத்தான் இருக்கும். அவ்விடத்தில், இரண்டையும் தனித்தனியாகப் பிரித்து அறிந்திட இயலாது. கூடஸ்தரும், சிதாபாஸனும், அப்படிப்பட்ட ஓர் நிலையில்தான், தியானத்தின் உச்ச கட்டங்களில் இருக்கின்றன --- பிரத்தியாகாரத்தில், புலன்களின்மூலம் வெளிச்செல்லும் சிதாபாஸம் பின்னிழுக்கப்பட்டு, தாரணத்தில் அது மனதில் ஒருமுகப்படுத்தப்பட்டு, சிதாபாஸமானது தனது ஆரம்ப இடத்திற்கு (அதாவது, எங்கிருந்து பிரதிபலிப்பு வெளிச்செல்லக் கிளம்பியதோ அந்த புத்திக்கே) திரும்பும் போது, அது வேறு எதன்மேலும் இல்லாமல் கூடஸ்தரின் (இறைவனின்) மேலேயே பிரகாசிக்கிறது. அந்த மேலாம் தியான நிலையில், அவ்விரண்டும், கண்ணாடியில் நிகழ்வதைப்போல, ஒரேயிடத்தில் இணைபிரியாமல் இருக்கின்றன. அந்நிலையில் 'நான்' எனும் உணர்வு, கூடஸ்தம் (அ) சிதாபாஸம் ஆகிய இரண்டில் எதை வேண்டுமானலும் குறிக்கும், அதாவது அது எதுவாகத் தன்னை உணர்கிறதோ அதுவாக இருக்கும். சூரியனின் கிரணங்கள் கண்ணாடியில் பிரதிபலிப்பதற்கும், கூடஸ்தன் புத்தியில் பிரதிபலிப்பதற்கும் இடையே நாம் கவனிக்க வேண்டிய ஒரு சூட்சுமமான ஆனால் மிகவும் முக்கியமான வித்தியாசம் ஒன்று இருக்கிறது. முந்தைய உதாரணத்தில், அசல் (சூரியன்) மற்றும்

பிரதிபலிக்கும் ஊடகம் (பிரதிபலிக்கும் கண்ணாடி, அதனால் பிரதிபலிப்பு) ஆகிய இரண்டிற்கும் இடையே வெகுதூர இடைவெளி உள்ளது; ஏனெனில், சூரியன் ஒரு வரையறைக்குட்பட்ட வஸ்து. ஆனால் பிந்தையதிலோ, கூடஸ்தனாகிய பரம்பொருள் எங்குமுள்ளதால் (சர்வ-வியாபி), சிதாபாஸன் எப்பொழுதும் கூடஸ்தருடன் ஒன்றாகவே இருக்கிறது, எனவே, சிதாபாஸத்தின் வெளிச்செல்லும் போக்கானது முற்றிலுமாக நிறுத்தி வைக்கப்படும்போது, அது தனது பிரதிபலிக்கும் மூலஸ்தானத்திற்குத் திரும்பி, இயற்கையாகவே அங்கு கூடஸ்தரோடு பிரிக்க முடியாத வகையில் இணைந்திருக்கிறது.

இத்தகைய ஒரு நிலையை நாம் ஆழ்ந்து தூங்கும்பொழுது தினந்தோறும் அநுபவிக்கிறோம். ஆனால், அப்பொழுது நமக்கு உணர்வு இருப்பதில்லை; இதுதான் தூக்கத்திற்கும் தியானத்திற்கும் இடையேயுள்ள வித்தியாசம். வெளிப்போக்கில்லாத உணர்வு, தன்னுணர்வு இல்லாமலிருப்பது தூக்கம்; வெளிப்போக்கில்லாத உணர்வு, தன்னுணர்வுடன் இருப்பது தியானம். **(The non-objectified awareness bereft of self-consciouness is sleep; The non-objectified awareness coupled with self-consciouness is Dhyana or meditation.)** இவ்விரண்டிலும், கூடஸ்தனும் சிதாபாஸனும் பிரிவின்றித்தான் இருக்கின்றன; ஆனால், தற்காலிகமாக. எனவே, இது யோகத்தின் மகத்தான உச்ச நிலையான ஆத்மானுபூதி அன்று, ஏனெனில் ஜீவத்துவத்தின் காரணமான அறியாமை இன்னும் அழிபடாமல் இருக்கிறது. அறியாமை அழிபடும் உயரிய யோகநிலை சமாதி நிலையாகும். எனவே, அருணகிரியார் இச்செய்யுளை முடிக்காமல் மேலும் தொடர்ந்து சொல்கிறார். அதில் அவர் கூறுவது என்னவெனில், மேலே அடையப்பட்ட பிரிதலில்லா (யோக) நிலை தற்காலிகமானது, அதில் நிரந்தரமாக நிலைபெறும்வரை அது தொடரப்பட வேண்டும். அப்பொழுதுதான், ஜீவத்துவத்தின் காரணமான அறியாமை அழிக்கப்படும், (பிரதிபலிப்பான) சிதாபாஸன் இல்லாமற்போய், கூடஸ்தனாகிய இறைவன் மட்டும் ஒளிர்வான், அதாவது சமாதி (தூய உணர்வு) நிலை கைகூடும்.

இப்பொழுது, மீண்டும் முக்கிய விஷயத்திற்கு வருவோம். தியானத்தின் உயரிய/உச்சகட்ட நிலையில், ஜீவாத்மாவெனப்படும் **சிதாபாச**மானது பரமாத்மாவெனப்படும் **கூடஸ்த**னுடன் ஒரு சிறிதும் பிரியாத இணைந்த நிலையில் இருக்கிறது. இந்த நிலை சுலபத்தில் அடையப்படுவது அல்ல, கடுமையான முயற்சி மற்றும் லாவகத்தால் இது அடையப்படும்போதுகூட, ஆரம்ப காலகட்டங்களில் ஒரு சில கூஷணநேரத்திற்கு மேல் இது நிலைத்திருப்பதில்லை.

மின்னல்கீற்றுப்போல், இந்த நிலை வந்தவுடனேயே போய்விடுகிறது. அதனால்தான், *கடோபநிஷத்* பின்வருமாறு கூறுகிறது: "அப்பொழுது (அதாவது, இந்த நிலை அடையும்போது) ஒருவன் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும்; ஏனெனில் யோகம் அடையப்படுகிறது, இழந்தும்போகிறது." எனவே, இந்த சில கூஷணநேரம் நீடிக்கும்நிலை நிரந்தரமான நிலையாக அமையவேண்டும். அதற்காக அந்தப் பயிற்சியை மிக்க முயற்சியுடனும் விழிப்புடனும் திரும்பத்திரும்பச் செய்துகொண்டு இருந்தால், அந்த மின்வெட்டொளி தருணங்கள் சீக்கிரம் சீக்கிரம் வரும், மேலும் அவைகள் நிலைத்திருக்கும் நேரமும் நீடித்துக் கொண்டே போகும். இத்தகைய முயற்சியானது ஒரு சிறிதும் தளர்ந்துவிடாமல் மேன்மேலும் தொடரப்படும்பொழுது, அந்த "சிறிதும் பிரியாத இணைந்த" கூஷணநேரநிலை, நிரந்தரமாகி, சமாதி நிலையாக அமையும். இப்படியாகச் செய்யும்போது என்னவெல்லாம் நிகழும் என்பது இச்செய்யுளின் இரண்டாவது பாகத்தில் (3-4 வது வரிகளில்) வரைபடம்போல் சித்தரிக்கப்படுகிறது, மேலே கூறப்பட்டதெல்லாம் அதில் மறைந்திருப்பது / பொதிந்திருப்பது காணப்படும். *விக்ஷேபம்* முடிவடைகிறது; *ஆவரணம்* அழிகின்றது; மகாமயக்கமான *அவித்யா* {அறியாமை --- 'வெறி'} அற்றுப்போகிறது; இத்தகைய பெரும்பாக்கியம் பெற்ற ஆத்மாவோடு இறைவன் (வேலவன்) இணைந்து என்றென்றும் நிலைத்திருக்கிறான்.

அருணகிரியார், 'வெறி' என்ற சொல்லை "அறியாமை" என்ற பொருளில் உபயோகிக்கிறார். 'வெறி' என்ற சொல்லுக்கு மயக்கம், கலக்கம், பைத்தியம், பேதைமை, அறியாமை என்று பல பொருள்கள் உண்டு. மேலும், 'வெறி' அல்லது 'அறியாமை' என்றால் என்னவென்றும் அவர் தெளிவாக்குகிறார். அறியாமைக்கு இரு வண்ணங்கள் (சக்திகள்) --- *ஆவரணம்* மற்றும் *விக்ஷேபம்* என இரு சக்திகள் --- உண்டு. ஆவரணம் என்றால் மறைக்கும் சக்தி; விக்ஷேபம் என்றால் (மறைத்ததை) மற்றொன்றாகத் தோன்றச் செய்யும் சக்தி; ஆவரணமென்பது திரை போன்ற **இருள்** கொண்டு உண்மையை (பரம்பொருளை, ஆத்மாவை) மறைக்கும் சக்தி. விக்ஷேபமென்பது மனதையும் புத்தியையும் சுண்டிவிடுவதன் மூலம் ஒரு உண்மையைப் பலவாக உணரச்செய்து, வெளி உலகத்துடன் தொடர்பு ஏற்படுத்துகிறது.

ரஜோ குணம் அல்லது ஆசைகளினால் அலைக்கழிக்கப்படும் மனம், ஐம்புலன்களில் ஏதாவது ஒன்றுடன் அல்லது பலவற்றுடன் சேர்ந்து வெளியுலகப் பொருள்களுடன் தொடர்பு கொள்கிறது. இவ்வாறு சலனப்பட்ட மனோநிலை விக்ஷேபம் எனப்படுகிறது. பிரத்தியாகாரத்தில் ஸ்திரம்பெற்ற மனம் செய்யும் தியானத்தில்,

இத்தகைய புலன்சார் செயல்கள் முழுமையாக அற்றுப் போகின்றன. ஒரு புலன்கூட செயல்படுவதில்லை. ஆதலால், வெளியுலகத்துடன் எந்த ஒரு தொடர்பும் இருப்பதில்லை. எனவே, "அனைத்து தொடர்புகளும் அறவே நின்றுவிடுகிறது" என்று அருணகிரியார் சொல்கிறார். (*அறிவு ஒன்று அற நின்றதால், செறிவு ஒன்று அற வந்தது*). அனைத்துத் தொடர்புகளும் அற்றுப்போவதே விக்ஷேபத்திலிருந்து விடுதலை (விக்ஷேப நிவர்த்தி), அதனால் ரஜஸ் முழுவதும் நிர்மூலமாகிறது. இப்படியாக, ரஜஸின் அழிவு ஏற்படுவது, தமஸாலான ஆவரண இருள்-திரை விலகுவதற்கு அவசியமான முன் நிபந்தனை.

விக்ஷேபம் வெற்றி கொள்ளப்பட்டு, புலன்களும் மனதும் முழுவதுமாக கட்டுப்படுத்தப்பட்டு ஒருங்கிணைக்கப்படும்போது, புலன்களின் செயல்களின் மூலம் விரயமாகும் சக்தி சேமிக்கப்படுகிறது; அதனால், மனம் மிகவும் சக்திவாய்ந்ததாகிறது. இவ்வாறு அசாதாரண சக்திவாய்ந்த ஒருமித்த மனதுடன் செய்யப்படும் தியானத்தில், அந்த மனம் செயல் அற்ற இருள் நிலையில் (தமஸில் அதாவது, தூக்கத்தில்) ஆழ்ந்திடாமல், விழிப்புணர்வு நிலையிலேயே இருந்தால், திரைபோன்று (இறைவனை/ஆத்மாவை) மறைக்கும் ஆவரண இருள் காலக்கிரமத்தில் அழிக்கப்படுகிறது. இவ்வாறாக, தியானத்தின் மிகஉச்ச நிலையான தற்காலிக "பிறிவொன்று அறநின்ற" நிலையில் இருப்பதை, திரும்பத்திரும்ப பயிற்சி செய்வதன்மூலம், அந்த நிலை நிரந்தரமாகிறது. அப்பொழுது உலகத்துடனான அனைத்து தொடர்புகளும் (ரஜஸ் அல்லது விக்ஷேபம்) அற்றுப்போகின்றன, மேலும், தமஸ் அல்லது ஆவரண இருள் அழிக்கபடுகிறது. அதன் பின்னர் நடப்பதுதான் என்ன? அறியாமையின் இரு சக்திகளான ஆவரணமும், விக்ஷேபமும் அழிபடும்போது, அறியாமையும் அழிந்து போகின்றது. மலின-ஸத்துவமான (ரஜஸ் மற்றும் தமஸுடன் சேர்ந்த ஸத்துவம்) ஜீவன், விக்ஷேபம் (ரஜஸ்) அற்றுப்போனதாலும் ஆவரணம் (தமஸ்) அழிந்துபோனதாலும், (கூடஸ்த ஆத்மாவை) பிரதிபலிக்கும் புத்தியானது சாத்வீகமாகிறது (முழுதும் ஸத்துவ-மாகிறது), அதில் கூடஸ்த ஆத்மா (அல்லது சாட்சி சைதன்யம்) எவ்விதத் தடையுமின்றி சலனமற்று ஒளிர்கிறது. இச்செய்யுளில், அருணகிரியார் கூடஸ்தனை 'வேலவன்' என்றழைக்கிறார். இதுவே முன்னர் பல செய்யுள்களில் குறிப்பிடப்பட்ட வேல்-உணர்வு, ஞான-வேல் தத்துவமாகும். கந்தப் பெருமானின் பல திவ்யமான பெயர்களில், அருணகிரியார் வேலவன் என்ற பெயரை தேர்ந்தெடுத்து இங்கு குறிப்பிடுவது எதற்கெனில் இவ்வாறு அறியாமை

அழிக்கப்பட்டவர்களோடு இறைவன் எப்பொழுதும் "ஞானம்", "அறிவு" (அ) "உணர்வு" என்பதாக உறைகிறார் என்பதை சுட்டிக்காட்டுவதற்கே. அத்தகைய அருட்பேறு பெற்ற, வாழ்க்கையின் குறிக்கோளான முக்தியை அடைந்த, புண்ணிய ஆத்மாக்களே ஜீவன்முக்தர்கள், ஞானிகள், அருட்செல்வர்கள், முனிவர்கள், சித்த புருஷர்கள், இறை-மனிதர்கள் என்றெல்லாம் போற்றப்படுகிறார்கள்.

கடோபநிஷத்தின் கடைசியில், ஆறாம் வல்லியின் 10, 11, 14 மற்றும் 15 ஆகிய நான்கு மந்திரங்களில் கூறப்பட்டுள்ள கருத்துகளின் சாராம்சத்தை இந்த ஒரே செய்யுளிலேயே அருணகிரியார் திறமையாகவும் துல்லியமாகவும் வெளிப்படுத்துகிறார். இது மிகவும் வியக்கத்தக்கது. இச்செய்யுளின் முதல் பாதி கடோபநிஷத்தின் 10ம் மந்திரத்தின் கருத்தைப் போன்றது எனலாம். அம்மந்திரம்: --- "பஞ்ச (ஐந்து) ஞான இந்திரியங்களும் மனதுடன் இணைந்து நிற்கும்போது, புத்தியும் செயல்படாமல் அடங்கி அமைதியாய் இருக்கும் நிலையை, உயரிய நிலையென்பர்." ஆனால், இது தியானத்தில் எட்டப்பட்ட மிக உயரிய நிலையாகத் தோன்றுகிறதே தவிர, சாதனையின் முடிவான முக்தி அடையப்பட்டதாக இல்லை. ஏனெனில் இதில் எட்டப்படும் யோக நிலையானது (சிறிதும் பிறியாத இணைந்த நிலை -- *"பிறிவொன்று அறநின்ற"* நிலை) தற்காலிகமானது; ஏனெனில், ஒருவன் விழிப்புடன் இல்லாவிட்டால் அது இழக்கவும் படுகிறது. எனவேதான், 11ம் மந்திரம் ஒரு எச்சரிக்கை விடுகிறது: "புலன்களின்மேல் பூரண அடக்கம் இருப்பதையே யோகம் எனச் சொல்கின்றனர்; அக்கட்டத்தில், ஒருவன் மிக்க விழிப்புடன் இருத்தல் அவசியம், ஏனெனில் இந்த (பிறியாத இணைந்த தற்காலிக) யோகநிலை வந்துபோகும் (அடையப்படும் மற்றும் இழக்கப்படும்) தன்மை கொண்டது." இவ்வாறாக, மிகுந்த அக்கறையுடன், இந்த யோக விழிப்புணர்வானது (இணைப்பு) பேணப்பட்டு, திரும்பத்திரும்ப நிகழச் செய்து, அதிலேயே அமைந்திருக்குமாறு செய்யப்பட்டால், காலப்போக்கில் இதய முடிச்சுகள் அறுக்கப்பட்டு, குறிக்கோளானது அடையப்படுகிறது, என்பது மந்திரங்கள் 14 மற்றும் 15 மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. "எப்போது ஒருவனின் இதயத்தில் குடிகொண்டுள்ள அனைத்து ஆசைகளும் அற்றுப் போகின்றனவோ, அப்போதே மரணத்திற்குட்பட்ட அவன் மரணமற்றவன் ஆகிறான், அவன் இங்கேயே பிரம்மத்தை அடைகிறான்." "இவ்வுலகிலேயே, எப்போது அவனுடைய இதய முடிச்சுக்கள் அறுபட்டு விடுகின்றனவோ, அப்போதே மரணத்திற்குட்பட்ட அவன் மரணமற்றவன் ஆகிறான், இதுவரையே அறிவுரை." இதய முடிச்சுகளான அறியாமை *(அவித்யா)*, ஆசை (*காம*), செயல்கள் (*கர்ம*) ஆகியவை அழிபடுவதை

குறிக்கும் இம்மந்திரங்களின் கருத்து அருணகிரியாரால் இச்செய்யுளின் இரண்டாவது பகுதியில் (கடைசி இரு வரிகளில்) சரியாக நுட்பமாக (சிறிதும் பிழை இல்லாமல்) சொல்லப்படுகிறது --- அறியாமை என்பது வெளிப்படையாகவும், ஆசை மற்றும் செயல் ஆகியவை மறைமுகமாகவும் முறையே ஆவரணம் மற்றும் விக்ஷேபம் என்று அவரால் குறிப்பிடப்படுகிறது. 11ம் மந்திரத்தில் கொடுக்கப்படும் எச்சரிக்கை: "இப்பயிற்சி விடாது விழிப்புடன் தொடரப்பட வேண்டும்," என்பது, இச்செய்யுளின் இரண்டாவது பகுதியில் மிகவும் அழகாக மறைபொருளாய் அருணகிரியாரால் நேர்த்தியுடன் புனைந்து கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

==========

செய்யுள் - 49

==========

தன்னந்தனி நின்றது தான் அறிய
இன்னம் ஒருவர்க்கு இசைவிப்பதுவோ
மின்னும் கதிர்வேல் விகிர்தா நினைவார்
கின்னம் களையும் க்ருபைசூழ் சுடரே.

பொழிப்புரை: "பளிச் பளிச்சென்று பிரகாசிக்கும் கதிர்வேலைத் தாங்கியவரே! பல வடிவங்கள் கொண்ட பெருமானே! தேவரீரை நினைப்பவர்களின் துக்கங்களை அழித்திடும் கிருபை சூழ்ந்த பிரகாசச் சுடரே (பேரொளியே)! தன்னந் தனியாக (இரண்டற்று) இருக்கும் அந்தப் பரம்பொருளைத் தனக்குத்தானே (அதுவாகவே இருந்து) அறிய முடியுமே தவிர; அதை (அந்த பேரின்ப அனுபவத்தை) இன்னொருவருக்கு விளக்கிச் சொல்ல முடியுமோ!"

விளக்கவுரை

எல்லையற்ற பரம்பொருள் தத்துவத்தின் சொரூபத்தையும், அதனை அடையும் நேர்வழியையும் வெளிப்படுத்தும் ஒரு அசாதாரணமான செய்யுள் இது. இறை-அநுபூதி அடைவதற்கு, இறைவன் அல்லது பரம்பொருளின்மேல், எதையும் விட்டுவிடாமல் அனைத்தையும்-சேர்த்து செய்யப்படும் தியானமே ராஜ பாட்டை என்றும், அந்த அநுபூதி அனுபவத்தை பிறருக்கு விளக்கிச் சொல்ல இயலாது என்றும், ஒவ்வொருவரும் தாமே சுயமாக அதை அநுபவித்து அறிய வேண்டும் என்றும், அந்த ஜீவன்முக்தர்/ அருணகிரியார் சாதகர்களுக்கு இங்கு அறிவுரை தருகிறார்.

இத்தகைய செய்யுள்கள், அருணகிரியார் அத்வைத அநுபூதி நிலையை அடைந்து, அதிலேயே திளைத்திருந்த முனிவர் என்பதை நன்கு உறுதி செய்கின்றன.

"கந்தர் அநுபூதி" நூலின் இறுதிப் பகுதியில் வரும் ஒவ்வொரு செய்யுளும் கருத்துச் செறிவு மற்றும் ஆன்மீக-ஞான ஆழத்தில் ஒன்றையொன்று விஞ்சுகிறது. மிக உயர்ந்த வேதாந்த உண்மைகளை

மிக எளிமையாகவும், அதே சமயம் அவைகளின் முக்கிய சாரத்தை சிறிதும் இழக்காமலும் துல்லியமான முறையில் எடுத்துச் சொல்லுவதில் அருணகிரியாரின் அசாதாரணமான திறனை இவை வெளிப்படுத்துகின்றன. அத்தகைய அரிய சிறப்பு வாய்ந்த செய்யுள்களில் இதுவும் ஒன்று.

பிரம்மம் இரண்டற்ற ஒன்று (*ஏகம் ஏவ அத்விதீயம் பிரம்ம*) என்று வேதம் பகர்கிறது. அக்கருத்தையே "தன்னந் தனி நின்ற அது" என்று அருணகிரியார் இச்செய்யுளில் தெரிவிக்கிறார். இதே கருத்தையே, *"வெறும் தானாய் நிலை நின்ற அது"* என்று செய்யுள் 28ல் அருணகிரியார் பகர்ந்தார். "தனி" என்றால் "ஒன்று மட்டும்" அல்லது "தனியாக" என்று அர்த்தம்; மேலும், "தன்னன் தனி" என்ற சொற்கள், வெறுமனே திரும்பத்திரும்பச் சொல்லப்பட்ட சொற்களல்ல, ஆனால் உபநிஷத் சுட்டும் கருத்தை நமக்குத் தெரிவிப்பதற்காக அமைக்கப்பட்டவை. நாம் ஒரு காட்டிலோ (அ) ஏகாந்தமாக, மக்களிடமிருந்து ஒதுங்கிய இடத்திலோ, இருக்கும்போது, நாம் 'தனி'யாக இருக்கிறோம். ஆனால், அதன் அர்த்தம் வேறு மனிதர்களே இவ்வுலகில் இல்லை என்று சொல்லமுடியாது, ஏனெனில் நமது கண்பார்வைக்கு அப்பால் மற்ற மனிதர்களும் இருக்கின்றனர். ஆனால், பிரம்மம் அல்லது மெய்ப்பொருளின் 'தனிமை' அம்மாதிரியான தனிமையல்ல. அது தனியாக இருக்கிறது என்றால் அது மட்டுமே இருக்கிறது; அதைத் தவிர, அதற்கு இரண்டாவதாக, வேறெதுவும் இல்லை, அதனால்தான் அது 'தன்னன் தனி' என்று விளக்கப்பட்டிருக்கிறது; 'தனி' என்றல்ல. 'தன்னன் தனி' என்றால் 'ஒன்று மட்டும்" என்று அர்த்தம், வெறுமனே 'ஒன்று' என்று அல்ல. வெறுமனே 'ஒன்று' என்று அர்த்தம் கொண்டால், அந்த ஒன்று மட்டுமல்லாமல் இரண்டு, மூன்று என்றெல்லாம் இருக்கிறதாக அர்த்தம் கொடுக்கும். அது 'ஒன்றே', இரண்டற்ற ஒன்று --- ***ஏகம்*** (ஒன்று) ***ஏவ*** (மட்டுமே / தனியாக உள்ளது) **அத்விதீயம்** (இரண்டற்றது) **பிரம்ம** (அந்த பிரம்மம்) ------ **தன்னன் தனி** (தனியாக, தான் மட்டுமே) **நின்ற** (நின்றது எதுவோ) **அது** (அது --- பிரம்மம்).

இப்பொழுது, ஒரு சந்தேகம் நமது மனதில் எழலாம். பிரம்மம் மட்டுமே இருக்கிறது, அதற்கு இரண்டாவதாக எதுவும் இல்லையென்றால், பின் நாம் உலகம் என்று காண்கிறோமே அது என்ன? இவ்வுலகம் வெறும் தோற்றமே என்று வேதாந்தம் மிக திடமாகக் கூறுகிறது, அதுவும் அந்த எல்லையற்ற உண்மையின் தோற்றம்தான்; அதைத் தவிர, உலகத்திற்கென்று தனியான இரண்டாவதான இருப்பு (அ) உண்மைத் தன்மை என்பது இல்லை.

உலகின் இருப்பென்பது அந்த பிரம்மத்தின் இருப்புத் தன்மைதான். நாம் ஒன்றை காண்கிறோம் என்பதால் அது உண்மையில் இருக்கிறது என்றாகி- விடாது. நம் அன்றாட வாழ்க்கையிலிருந்தே இதற்கு நாம் அனேக உதாரணங்களைக் கூறலாம்.

கடலையும், அலைகளையும் உதாரணமாகப் பார்ப்போம். கடல் என்பது நீரின் பெருந்திரள். அலை என்பது அக்கடலில் அதன் நீரின் கொண்டை போன்றது. அலையில் நீரைத்தவிர வேறு ஏதாவது இருக்கிறதா? இல்லை. அலை நீர்தான், கடல்தான். அலையென்று சொல்லும்போது, நாம் அதன் முழுமையை விட்டு ஒரு பகுதியை மட்டும் கருத்தில் கொண்டுதான் சொல்கிறோம், அதாவது அதன் சாராம்சத்தை (அது நீரென்பதை) விட்டு அதன் தோற்றத்தை மட்டும் பார்த்து, அலை என்கிறோம். அதேமாதிரியான விஷயம்தான் இவ்வுலகமும். உலகமென்பது ஒரு தோற்றம்தான், அதன் சாரம் பிரம்மமே. ஸச்சிதானந்தமெனும் கடலில் அலைகளைப் போன்று எழும் எண்ணற்ற பெயர்-உருவங்களைப் (உலகைப்) பார்த்து (நாம-ரூபங்கள்) நாம் மயங்கி விடுகிறோம். எப்படி அலையென்பது கடலின் ஒரு அம்சத்தின் தோற்றமோ, அப்படியே உலகமும் ஸச்சிதானந்தத்தின் (பிரம்மத்தின்) ஒரு அம்சத்தின் தோற்றமே. உலகில் காணும் அனைத்துப் பொருள்களும் அலைகள் போன்றவைதான்; ஏன், நாமும்கூட அலைகள் போன்றவர்களே. நாம் இவ்வுலகைக் காண்பதென்பது ஒரு அலை மற்றொரு அலையைக் காண்பது போன்றது, அவ்விரு அலைகளும் அதே பெருந்திரளான நீரின் அம்சங்கள்தானே! ஒரு அலை கடலின் பரப்பையும் ஆழத்தையும் அறிய விரும்பினால், அது செய்ய வேண்டியது என்ன? அலை, அலையாக இருக்கும்வரை அதனால் கடலை அறிய முடியாது, ஏனெனில் கடலோ மிகமிகப் பெரியது, அலையோ மிகமிகச் சிறியது. அச்சிறிய அலையினால் கடலளவிற்குத் தன்னை பெருக்கிக் கொள்ள இயலாது. இருப்பினும், இதற்கு ஒரு வழி இருக்கத்தான் செய்கிறது. அலையின் பொருட்கூறு உண்மையில் வெறும் நீர்தான், அதேபோல் கடலும் வெறும் நீர்தான். எனவே, இரண்டின் சாரமும் நீர் ஒன்றுதான். ஆகையால், அலையானது கடலில் அமிழ்ந்தால், அதுவே கடலாகிவிடுகிறது, கடலாக ஆகிக் கடலை அறிகிறது. கடலுக்கு அலைகள் என்பதே இல்லை; அவைகளும் கடல்தான். இதே போன்றதுதான் ஜீவர்களும் உலகமும். ஸச்சிதானந்தக் கடலின் உணர்வு அம்சத்திலிருந்து எழும் உணர்வலைகள் போன்றதுதான் ஜீவர்கள். அந்த ஸச்சிதானந்த சொரூபத்தின் இருப்பு அம்சம்தான் இந்த உலகம். இவற்றின் சாராம்சமும் இருப்பும் பிரம்மம்தான். ஜீவ-உணர்வு, ஜீவ-பாவனை ஸச்சிதானந்தக் கடலில் (பிரம்மத்தில்)

அமிழ்வுறும்போது, அலைகள் நீர்கடலில் அமிழ்வதுபோல், ஸச்சிதானந்தம் மட்டுமே இருக்கிறது, அது தன்னை (தானாக) அறிந்து கொள்கிறது. எல்லையற்ற பரம்பொருளான பிரம்மத்தை அறிவதென்பது, பிரம்மமாகவே ஆகிவிடுவதைத்தான் குறிக்கிறது. 'பிரம்மத்தை அறிந்தவன், பிரம்மமாகவே ஆகிறான்' -- *"பிரம்மவித் பிரம்மைவ பவதி"* என்கிறது வேதம். எனவேதான், இங்கு அருணகிரியார் "தான் (அதுவாக இருந்து) அறிய" என்கிறார். பரம்பொருளை அடையும் வழி ஜீவ-பாவனையை மேலும் வளர்ப்பதில் அல்ல, அதனை முழுவதுமாக அழிப்பதில்தான் (இழப்பதில்தான்) இருக்கிறது. ஜீவனின் சாரமும், உலகின் சாரமும் பிரம்மமே, அதனை அறிவதென்பது அதுவாகவே ஆகி அதனை அறிவதாகும்; தன்னிலிருந்து "வேறொன்றினை" அறிய முயன்று வெளியே செல்வதல்ல. ஜீவன் சீமித்த (finite) ஒன்று. அதன் ஆதாரமும் அனைத்தின் ஆதாரமுமான எல்லையற்ற பிரம்மத்தில் அது ஒடுங்கிவிட வேண்டும் --- நானெனும் பாவனையை, அகங்காரத்தை விட்டு அதனுடன் கலந்திட வேண்டும்.

எனவே, அந்த இரண்டற்ற ஒன்றானதை (பிரம்மத்தை) அதுவாகவே இருந்து ஒருவனால் அறியப்பட வேண்டும். இதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை. இப்பரம்பொருளை ஒவ்வொருவரும் தனக்குத்தானே அநுபவிக்க வேண்டும். அதை சொற்களால் விளக்க இயலாதென்பதால், அந்த அநுபவத்தை பெற்றவர் அதை மற்றவர்களுக்கு விளக்கிச் சொல்லி புரிய வைக்க முடியாது. அநுபவங்களை மற்றவர்களுக்குத் தெரிவிக்க முடியாது. மகிழ்ச்சி, துக்கம், இனிப்பு, அழகு போன்ற சாதாரண புலன்-அநுபவங்களைக் கூட மற்றவர்களுக்கு புரியவைக்க முடியாது. அப்படியாய் இருக்கும்போது, பிரம்மானுபவத்தைப் பற்றி என்ன சொல்வது? பிரம்மானுபவத்தை அநுபவிப்பவனே அப்பரம்பொருளாக ஆகிவிடும்போது, எவர் சொல்வார்? யாருக்குச் சொல்வது? அந்நிலையில், 'அவனும்' இருப்பதில்லை, 'வேறு ஒன்றும்' இருப்பதில்லை; **அது** (பரம்பொருள்) மட்டுமே இருக்கிறது; அதை ஒவ்வொருவரும், அதுவாகவே ஆகி, அதுவாகவே இருந்து, தன்னில் தானாகவே இருந்து அநுபவிக்க வேண்டும்.

முக்தி அடைந்த மகான்கள், அருட்செல்வர்கள், முனிவர்கள் அவர்களுடைய அநுபவத்தை மற்றவர்களுக்குச் சொல்ல இயலாது. அதனால் மற்றவர்களுக்கு எவ்வகையிலும் உதவி இல்லை; பின், அவர்கள் முக்தியால் நமக்கு என்ன பிரயோஜனம்? -- என்ற ஒரு நியாயமான சந்தேகம் எழக்கூடும். அவர்கள் தமது அநுபவங்களை மற்றவர்களுக்குச் சொல்ல இயலாது என்பது உண்மைதான். என்றாலும், அவ்வநுபத்தை அடைவது எப்படி என்று அவர்களால்

மற்றவர்களுக்கு வழிகாட்ட இயலும்; ஏனெனில், அவர்களே அந்தப் பாதையில் சென்று ஜீவன்முக்தி அடைந்திருக்கிறார்கள். கற்கண்டின் இனிப்புச் சுவையை அனுபவித்த ஒருவன், அதைப் பிறருக்குச் சொல்ல முடியாதென்றாலும், அதை எங்கு எப்படிப் பெறுவது, சுவைப்பது என்று சொல்லி, சுவைக்கவைத்து, தான் பெற்ற அனுபவத்தை அவர்களும் அடையுமாறு செய்யக்கூடும். அருட்செல்வரும் இச்செய்யுளின் இரண்டாவது பகுதியில் இதைத்தான் செய்கிறார். அந்த அநுபவத்தைப் பெற தியானம் ஒரு ராஜ-பாட்டை என்று அருணகிரியார் உறுதிப்படுத்துகிறார். எதன்மேல் தியானம்? வேல் அல்லது முருகன் மேல் தியானம் --- இரண்டும் ஒன்றே.

சரி, தியானிக்கும் முறை யாது? வழி, முடிவை நிர்ணயம் செய்கிறது. செய்யுளின் முதல் இரு வரிகளில் தெளிவுபடுத்தியபடி, அத்வைத பிரம்மத்தை அடைவதுவே குறிக்கோளாதலின், அதை அடைவதற்கு அதற்குத்தகுந்த ஒரு திறம்மிக்க தியானமுறையை அருணகிரியார் இங்கு குறிப்பிடுகிறார். ஆனால், அவர் சாடையாகக் காட்டும் உத்தி, செய்யுளில் ஆழமாக புதைந்திருப்பதால் அதை உணர்ந்து வெளிக்கொணர்வது மிகவும் கடினம். மேலும் அது நம் கவனத்திற்கேகூட வராமல் போய்விடக்கூடும். அப்படி என்னதான் அருணகிரியார் சூட்சுமமாக கூறியுள்ளார் என்று பார்ப்போம். அவர் இங்கு பெருமானை **"மின்னும் கதிர்-வேல் விகிர்தா"** என்றழைக்கிறார். இதில்தான் தியானத்திற்கான குறிப்பு மறைந்துள்ளது.

"மின்னும் கதிர்-வேல் விகிர்தா": பரம்பொருளான இறைவனின் உண்மை சொரூபம் இச்சொற்களில் புதைந்துள்ளது. அதைச் சரியாக அறிந்து கொள்வதே தியானத்திற்கான உத்தி. முதலில், நாம் இச்சொற்களின் எளிய பொருளைப் பார்க்கலாம் --- "ஓ பல உருவங்களைக் கொண்டு, மின்னலைப்போல பிரகாசிக்கும் வேல் தாங்கிய பெருமானே!" இந்த வேல் கதிர்-வேல், ஞான வேல். இது சூரியனைப்போன்று, தானே ஒளிர்கிறது. இது சுயமாக- ஒளிர்கிறது. மேலும், இது மின்னலைப் போல ஞானத்தைப் பளிச்சிடுகிறது; இது **மின்னும் கதிர்-வேல்.** முருகப் பெருமானோ பல உருவங்கள் கொண்டவர். அவர் பாலமுருகனாக சதுர்முக-பிரம்மாவை சிறை பிடித்தவர், சிவனாருக்கு பிரணவ உபதேசத்தை தந்தவர் (செய்யுள்-36); அவர் ஆறு முகங்களைக் கொண்டவர் *(ஷண்முகர்);* அசுரன் சூரபத்மனோடு போரிடும்போது பற்பல உருவங்களை எடுத்தவர்; அவர் வள்ளியை சோதித்து ஏற்பதற்காக வேடன், மரம், வயோதிகன் போன்ற பல உருவங்களை எடுத்தவர்; எவ்வுருவில் பக்தர்கள் அவரை பூஜிக்கிறார்களோ (அ) தியானிக்கிறார்களோ அவ்வுருவில் தோன்றுபவர். ஆக, அவர் உருவங்கள் அனேகம். இப்படியாக,

"மின்னும் கதிர்-வேல் விகிர்தா" என்ற இச்சொற்களுக்கு எளிய அர்த்தத்தில் இவ்வாறெல்லாம் விளக்கலாம். ஆனால், இச்சொற்களுக்கு மிக ஆழ்ந்த விசேஷமான அர்த்தமும் உண்டு, அதுவே சரியாக தியானம் செய்வதற்கான உத்தியைத் தருகிறது.

வேல் என்பது எல்லையற்ற தூய உணர்வு என்பதை நாம் முந்தைய பல செய்யுள்களில் பார்த்துள்ளோம். அதுவே ஆத்மா (பிரம்மம்). அதன் இயல்பு யாது? அது சுயமாக-ஒளிர்வது; அது கதிர்-வேல். அது என்றும் மாறாத உண்மைப் பரம்பொருள், அனைத்தின் ஆதாரம். அது வெறும் **கதிர் வேல்** மட்டும் அல்ல; அது பளிச் பளிச் என்று **மின்னும்** தன்மையது. அதாவது, அது எல்லையற்ற உணர்வாக இருப்பதோடு மட்டுமல்லாமல், எண்ணற்ற ஜீவர்களாகவும் மினுமினுக்கிறது. பரம்பொருள் (பிரம்மம்) எண்ணற்ற புத்திகளில் பிரதிபலிப்பது (அ) மினுமினுப்பதுதான் ஜீவர்கள். இது மட்டும் அல்ல. முருகப் பெருமானும் பல வடிவங்கள் தாங்கியவர்; அதனால் அவர் **'விகிர்தன்'**. எதையெல்லாம் நாம் காண்கிறோமோ அவையனைத்துமே அவர் வடிவங்கள்தான் கடலில் அலைகள்போல. இனி வரும் செய்யுள் 51ல், அருணகிரியார், "ஓ பெருமானே! அனைத்து உருவங்களாகவும் உருவங்களற்றவையாயும் நீயே வருகிறாய்." என்று சொல்கிறார். இறைவனே அனைத்து பெயர்-உருவங்களாகத் (நாம-ரூபங்களாகத்) தோன்றுகிறார், பரம்பொருளின் ஸத்தாவே (இருப்பே) அவைகளுக்கு ஸத்தாவைத் தருகிறது, அவைகளுக்கென்று சுயமாக ஸத்தா கிடையாது. "ஊன்றுகொலை வைத்துக்கொண்டு தடுமாறி நடக்கும் ஒரு வயோதிகக் கிழவன்போல் தோன்றி, மனிதனின் ஊனக் கண்ணை ஏமாற்றுபவர் அந்த இறைவனே; ஏனெனில், அனைத்தும் அவரே," -- என்கிறது உபநிஷத்.

இவ்வாறாக, **கதிர்-வேல்** (எல்லையற்ற பரம்பொருள்) ஒரு புறத்தில் எண்ணற்ற ஜீவர்களாகத் தோன்றுகிறது (**மின்னும்** -- twinkles), மற்றொரு புறம் விரிந்து பரந்த இப்பிரபஞ்சமாகவும், அதிலுள்ள பல்வேறு புதுமையான அழகிய பொருள்களாகவும் (நாம-ரூபங்களாகவும்) - **விகிர்தா** - தோன்றுகிறது. என்றென்றும் ஒளிரும், சுயமாகப் பிரகாசிக்கும் பரம்பொருளான **'கதிர்-வேல்'** என்ற சொல்லை மத்தியில் வைத்து, அதன் இரு புறமும் **'மின்னும்'** மற்றும் **'விகிர்தா'** என்ற சொற்களை அமைத்து, அதன்மூலம் இவ்விரண்டும் அவைகளின் ஆதாரமான **"கதிர்-வேலி"**ன் இரு தோற்றங்கள் என்று காட்ட, நேர்த்தியாகவும் அழகாகவும் அமைத்துள்ளார் அருணகிரியார்.

காணப்படும் இப்பிரபஞ்சம் மற்றும் ஜீவர்கள் பிரம்மத்தின் அம்சங்கள்தான் என்று உபநிஷத்துகள் பிரகடனம் செய்யும் உண்மையை, இங்கு அருணகிரியார் "மின்னும் கதிர்-வேல் விகிர்தா" என்று கூறுவதன் மூலம் நன்கு வெளிப்படுத்தி, உறுதியும் செய்கிறார்.

காணும் உலகம், ஜீவாத்மாக்கள், மற்றும் எல்லையற்ற பரம்பொருள் ஆகிய அனைத்துமே அவரைத் (வேலைத்) தவிர வேறு எதுவும் இல்லை என்று அறியலாம். எல்லையற்ற பரம்பொருள் ஒன்றே உண்மையில் இருப்பது, அதுவே நாமும் நாம் காணும் அனைத்தும். அந்த மகத்தான பரம்பொருளைத் தவிர வேறு எதுவுமே இல்லை. அனைத்தும் அதன் அம்சங்களே, எப்படி பேரலைகளும் சிற்றலைகளும் கடலின் அம்சங்களோ அப்படியே. அந்த இரண்டற்ற ஒரே பேருண்மை தத்துவத்தை (**தன்னன் தனி நின்ற அது**), அடைவதற்காக அருட்செல்வரால் வகுத்து வழங்கப்படும் தியான இரகசியம் இதுவே.

இவ்வாறாக யார் தியானம் செய்கிறார்களோ (**நினைவார்**), அவர்களின் துன்பங்களை பெருமான் அழிக்கிறார் (**கின்னம் களையும்**). துக்கங்களிலேயே மிகப் பெரியது சம்சார துக்கம் (முடிவற்ற பிறப்பு-இறப்பு சுழற்சி). இத்துக்கம், அந்த உயரிய பரம்பொருளை ஒருவன் அதுவாகவே ஆகி அறிந்தபின்னரே அழிபடும். ஒருவன் ஒரு தனிப்பட்ட சிறு மனிதனாக இருக்கும்வரை, நிர்பந்தமான பிறப்பு-இறப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள இயலாது. தான் முன்னர் செய்த கர்ம வினைகளினால் பந்தாடப்படுவதையும் அவனால் தவிர்த்திட இயலாது. எல்லையற்ற பரம்பொருளிலிருந்து ஒருவன் பிரிந்து இருக்கும்வரை, அவன் நிம்மதியாக இருக்கமுடியாது; மேற்சொன்னபடி தியானம் செய்து அந்தப் பரம்பொருளுடன் தன் உண்மையான தொடர்பை உணர்ந்து, அதனுடன் ஐக்கியமாகாதவரை அவனால் அமைதியாக வாழ்ந்திட இயலாது. நதியானது கடலை நோக்கி ஓடி, அதனுடன் கலந்து, அதுவாகவே ஆகும்வரை, அதனால் அமைதியாக இருக்க முடியாது. குழந்தை தாயின் மடியை அடையும் வரை, வேறு எந்த ஒன்றினாலும் அது சமாதானமடையாது. தனக்கென்று தனியாக இருப்பு இருக்கிறது என்ற தவறான கருத்தே நாம் அநுபவிக்கும் அனைத்து துக்கங்களுக்கும் ஆதாரமாகிறது. இதனை முடிவிற்குக் கொண்டுவர உதவும் சக்திவாய்ந்த ஆயுதம் அப்பரம்பொருளின்மேல் தியானம் செய்வது ஒன்றே. --- **"மின்னும் கதிர்-வேல் விகிர்தா"** --- அப்பரம்பொருள் எல்லையற்றதும் எல்லைக்குட்பட்டதும்; காணப்படுவதும் புலன்களுக்கு அப்பாற்பட்டதும்; சைதன்யமும் ஜடப்பொருள்களும்; அதுவே பளிச்-பளிச்சென்று மின்னும், சுயமாக ஒளிரும் வேல்; பற்பல

உருவங்கள் கொண்ட முருகப் பெருமான் --- என்று இவ்வாறாக ('மின்னும் கதிர்-வேல் விகிர்தா) தியானிப்பது.

இத்தகைய தியானத்தை ஒருவன் உண்மையான ஆர்வத்துடனும் மனப்பூர்வமாகவும் செய்தால், வெற்றி என்பது நிச்சயம் என்று அருணகிரியார் உறுதிபடக் கூறுகிறார், ஏனெனில், முருகப் பெருமான் கிருபையைப் பொழியும் கருணைப்பிழம்பு என்று அருணகிரியார் மேலும் கூறுகிறார். முருகன் கிருபையினால் சூழப்பட்ட சுடர், கிருபை நிரம்பி வழியும் சுடர். "சுடர்" என்றால் ஒளிச்சுடர், பிரகாசம், ஒளிர்வு, ஜ்யோதி, அதாவது ஆத்ம-ஜ்யோதி என்று அர்த்தம். அது சைதன்யம், தூய உணர்வு, --- அசைவின்றி தொடர்ந்து ஒளிரும் ஜ்யோதி --- *கூடஸ்த* ஆத்மா. சுடர் என்ற சொல்லில் 'நிரந்தரமாக, அசைவற்று' ஒளிர்கிறது என்ற அர்த்தமும் அடங்கும். (தயவுசெய்து பக்கம் ..438ஐ பார்க்கவும், அதில் நாராயண சூக்தத்திலிருந்து இவ்விஷயம் பற்றிய மந்திரம் இடம்பெற்றுள்ளது). எனவே, அது கூடஸ்த சைதன்யம், எப்பொழுதும் மாறிக் கொண்டிருக்கும் ஜீவ-உணர்வல்ல. மேலும், அது **"க்ருபைசூழ் சுடர்".** இந்த ஒளிச்சுடரானது கிருபையால் சூழப்பட்டு இருக்கிறது, அதாவது அது ஒரு கிருபை-பிழம்பு (அ) கருணையே வடிவானது. ஒளியின் பெருந்திரளான சூரியன் ஒளியைப் பொழிகின்றது, நாலாப் பக்கங்களிலும் பரப்புகிறது. எப்படி ஒளிக்கதிர்கள் சூரியனிடமிருந்து வெளிப்படுகின்றனவோ, அப்படியே கிருபையின் மொத்த உருவமான பெருமானிடமிருந்து கருணையானது பொங்கி வழிகின்றது. அவரிடமிருந்து அவ்வாறு பொங்கி வழியும் கருணையின் மிகமிகச் சிறிய பகுதிதான் (திவலையே) நாம் பெறுவது. ஆனால், அக்கருணையின் சிறு திவலையே சம்சார துக்கங்களை அழித்து, நமக்கு ஞானஒளியையும் தந்திடப் போதுமானது. என்னே ஆச்சரியம் இது!

"க்ருபை-சூழ் சுடர்" என்ற இச்சொற்றொடர் தியானத்திற்கு வேண்டிய ஒரு குறிப்பையும் தருகிறது. இது ஆத்மாவின்மேல் தியானம் செய்யும் முறையைக் குறிக்கிறது. பெருந்திரளான ஒளி, ஆனந்த சொரூபம், மற்றும் பொங்கும் கருணைக் கதிர்களை கொண்டிருக்கும் சுடராக ஆத்மாவின்மேல் நாம் தியானிக்க வேண்டும். இத்தகைய தியானமானது அனைத்துவிதமான துக்கங்களுக்கும் முடிவு கட்டும் (துக்கங்களை முழுதும் அழித்து விடும்).

அகண்ட எல்லையற்ற இருப்பு-உணர்வு-ஆனந்த (ஸத்-சித்-ஆனந்த) ஆத்மாவை அடைந்திடுவதற்கான ஒரு மிக உயரிய தியானத்தை "மின்னும் கதிர்-வேல் விகிர்தா", மற்றும் "க்ருபை சூழ் சுடர்" ஆகிய இவ்விரு சொற்றொடர்களும் பரிந்துரைக்கின்றன.

அடுத்து ஒரு சந்தேகம் நம்மில் எழலாம்: இறைவன் கிருபையின் மொத்த உருவம், கருணைப் பெருந்திரள் என்றெல்லாமாக இருக்கும்பொழுது, ஏன் அவரை நினைப்பவர்களின் (தியானிப்பவர்களின்) துக்கங்களை மட்டுமே அவர் நீக்கிட வேண்டும்? அனைவரின் துக்கங்களையும் அவர் நீக்கலாமே? என்கிற சந்தேகத்திற்குப் பதில் காண்போம். நெருப்பு சுட்டுப்பொசுக்கிடும் தன்மை படைத்தது; ஆனால் அது எல்லாப் பொருள்களையும், அவை எங்கிருந்தாலும், பொசுக்குவதில்லை. அதில் இடப்படும் பொருள்-களையும், அதன் தொடர்பில் வரும் பொருள்களையும் மட்டுமே அது பொசுக்கித் தள்ளிவிடும். புனிதப்படுத்தும் தன்மை கொண்ட கங்கையும், அதில் மூழ்கி ஸ்நானம் செய்பவர்களின் பாவங்களை மட்டுமே நீக்குகின்றது. சூரியன் ஒளியை எங்கும் பரப்புகிறது. ஆனால், ஒருவன் ஒரு அறையில் தன்னை மூடிக்கொண்டு, வெளியே வராமல் இருந்தால், சூரியனால் என்ன செய்யமுடியும்? அதேபோல், இறைவன் கருணைமயமானவர்தான் என்பதில் சந்தேக-மில்லை, ஆனால் ஒருவன் தன் திறந்த இதயத்துடன் அவரை அணுகவேண்டும், அப்பொழுதுதான் அக்கிருபையை உணர்ந்திட இயலும். ஒருவன் இறைவனை "விரும்பி வேண்டுதல்" வேண்டும், அப்பொழுது இறைவன் தன்னையே அவனுக்குக் கொடுத்து விடுகிறார். அவர் உயர்ந்த வெகுமதிகளையோ, உயர் கல்வியையோ, கூர்மையான அறிவையோ எதிர்பார்ப்பதில்லை. அவர் வேண்டுவது, நாம் அவரை விரும்ப வேண்டும் என்பதே. இறைவன் எங்கும் இருக்கிறார் என்பதை உணர்ந்து, தன்னலமற்ற சேவை செய்தல், அவரின் மகிமைகளைப் போற்றிப் புகழும் நூல்களைக் கற்றல் ஆகிய இவைகளோடு, நாம-ஜபம், கீர்த்தனை, தியானம் ஆகியவைகளையும் செய்வது, நமக்குள்ளே உறையும் இறைவனுக்கு நம் இதயத்தைத் திறந்து, அங்கு விளங்கும் **"க்ருபைதூழ்"** சுடரிலிருந்து பொங்கி வழியும் கிருபையைப் பெறுவதற்கான பல்வேறுப் பயிற்சிகள்.

இவ்வாறு, இறைவனை இடைவிடாது தியானிப்பது, நம் வாழ்விற்கு அவரை மட்டுமே முழுவதுமாக நம்பியிருப்பது, அவரை உண்மையாகவே விரும்பி வேண்டுவது, ---- ஆகியவை ஒருவனது துக்கங்களை அழித்து, அவரின் கிருபையை அவன்பால் ஈர்க்கும். அந்தக் கிருபை அவனுள்ளேயே கதிர்-வேலாக (தூய-உணர்வாக) வெளிப்படும். இந்த அநுபவத்தை ஒவ்வொருவரும் தனக்குத்தானே அடையவேண்டும், இதை இன்னொருவருக்கு எடுத்துச்சொல்ல இயலாது.

==========

செய்யுள் - 50

==========

மதிகெட்டு அறவாடி மயங்கி அறக்
கதிகெட்டு அவமே கெடவோ கடவேன்
நதிபுத்திர ஞான சுகாதிப அத்
திதிபுத்திரர் வீறடு சேவகனே.

பொழிப்புரை: "கங்காநதியின் புத்திரனே! ஞான-பேரின்பத்தின் தலைவனே! அத்திதிபுத்திரர்களாகிய அசுரர்களின் வலிமையை அழித்த வெற்றி வீரனே! என் அறிவு குலைந்து, (மன) வேதனை அடைந்து, மதி மயங்கி, தர்மத்தின்படி வாழ்ந்தால் கிடைத்திடும் அந்த நற்கதியாகிய அநுபூதியை இழந்து, நான் வீணாகக் கெட்டு அழிந்து போவேனோ?" (இல்லை; அவ்வாறு கெடமாட்டேன். காத்தருள்வாயாக.)

விளக்கவுரை

இந்த தத்துவ நூல் "கந்தர் அநுபூதி" அடுத்த செய்யுளோடு கம்பீரமாக நிறைவடைகிறது, அச்செய்யுள் இறை-உணர்விலேயே சதாசர்வ காலமும் நிலைபெற்றிருக்கும் ஒரு ஜீவன்முக்தரின் உயரிய நிலையை மிக அருமையாக விளக்குகிறது. அதற்கு முன்னதாக, இறைவனை அடைவதைக் குறிக்கோளாகக் கொண்டு, நேர்மையாக முயன்றுவரும் ஒரு சாதகன், ஒருபொழுதும் மனக்குழப்பம் போன்றவைகளில் தன்னை இழக்க மாட்டான் என்ற ஒரு கம்பீரமான உறுதியை அருணகிரியார் அனைவருக்கும் தருகிறார். இதற்கான முகாந்தரத்தை அவர் முந்தைய செய்யுளில் உருவாக்கி, உத்தரவாதமும் இவ்வாறு தந்தார்: **"நினைவார் கின்னம் களையும் க்ருபைசூழ் சுடர்"** --- "உன்னை நினைப்பவர்களின் துக்கங்களை அழித்திடும் கருணை சூழ்ந்த பிரகாசச் சுடரே!" இங்கு, **"நதிபுத்திர ஞான சுகாதிப அத்திதிபுத்திரர் வீறடு சேவகனே"** என்று சொல்கிறார். "முருகப் பெருமான் நதிபுத்திரன்; சிவனாரின் கருணையே முருகனாக கங்கையில் உதித்ததால் (செய்யுள்-33), கிருபை-மழை பொழிவது முருகனின் சுபாவம்; அவர் ஞானம் மற்றும் ஆனந்தத்தின் இறைவன்; அசுரர்களை (தீய குணங்களை) அழிப்பவர்; பராக்கிரசாலி (பாதுகாப்பவன்)." இத்தகைய பெருமானிடம் சரண்புகும் ஒரு பக்தன் அல்லது உண்மையாகப் பரம்பொருளைத் தேடும் சாதகன் எப்படி

கெட்டுப்போவான், எப்படி தன் இலக்கை இழப்பான்? கருணைப்பிழம்பான அவரால் அவன் நிச்சயமாக பாதுகாக்கப்பட்டு, கவனித்துக் கொள்ளப்படுவான். இத்தகைய உத்தரவாதம் இச்செய்யுளில் தொனிக்கிறது. எவ்வாறு? மற்ற சில செய்யுள்களைப்போல் இச்செய்யுள் தன்மையில் (First Person) இருப்பதால், நாம் இதை திரும்பத் திரும்ப பாடிக்கொண்டே வரும்போது, **"யாம் இருக்க பயம் ஏன்"** ('நான் இருக்கும்போது, நீ எதற்கு பயப்படுகிறாய்') என்று கேட்பதுபோல அவரிடமிருந்து நமது இதயம் ஆறுதல் பெறுவதை நாம் உண்மையாகவே உணர்வோம். வாழ்க கந்தப் பெருமான்! வாழ்க அருணகிரிநாதர்!

முக்தியடைந்த மகான்கள் இங்குமங்கும் சுதந்திரமாக சுற்றிக்கொண்டே ஆன்மீக வேட்கை கொண்ட சாதகர்களுக்கு அவரவர்களின் தேவைக்குத் தகுந்த மாதிரி ஆன்மீக உண(ர்)வை பரிமாறும் பணிசெய்வார்களென்று பார்த்தோம் (செய்யுள்-44). இவ்வாறானவை 45லிருந்து 50வரையிலான செய்யுள்கள்; இவற்றில் திட்டவட்டமான, முக்கியமான அறிவுரைகள் தரப்பட்டுள்ளன. ஆனால், இச்செய்யுளில், அருணகிரியார் ஒரு பொதுவான அறிவுரையையும், எந்த யோக மார்க்கத்திலும் செல்லும் சாதகனுக்கு பயன்தரும் உறுதியையும் அவர் தருகிறார். ஏனெனில், ஒரு சாதகன் எந்த யோக மார்க்கத்தில் சென்றாலும், அவன் என்றைக்காவது ஒருநாள், எந்த காரணத்திற்காவது இத்தகைய ஒரு நிலைமையை சந்திப்பது நிச்சயம்,

இந்நூலின் முந்தையச் செய்யுள்கள் எல்லாவற்றிலும், ஆன்மீக வாழ்க்கை மற்றும் சாதனை சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் பற்றி அருட்செல்வர் விவரமாக எடுத்துரைத்திருக்கிறார். தன்னுடைய இப்புனித நூலை நிறைவுசெய்யும் கடைசிச் செய்யுளில் (அடுத்த செய்யுள்) சகஜ சமாதி அவஸ்தையைப் பற்றி (ஜீவன்முக்தனின் இயல்பான தூய உணர்வு நிலைபற்றி) மிகவும் அழகாக, உன்னதமாக விவரிக்கப்போகிறார். அதற்குமுன், அருணகிரியார் இச்செய்யுளில் ஒவ்வொரு சாதகனும் *தன் ஆன்மீக வளர்ச்சியில் ஏதோ ஒரு சமயத்தில்* கட்டாயமாக சந்திக்க வேண்டியிருக்கும் ஒரு விசித்திரமான நிலைமையைச் சொல்லி, அத்தகைய சந்தர்ப்பம் வராமலிருப்பதற்கும், அல்லது அது வரும்போது, அதை வெல்லுவதற்கு ஒரு சக்திவாய்ந்த வழிமுறையை பரிந்துரைக்கிறார். இத்தகைய நிலைமையைப் பற்றி இங்கு (கடைசி செய்யுளுக்கு முந்தையதில்) குறிப்பிடுவதால், சாதனையின் இறுதிக் கட்டத்தில்தான் இதுமாதிரி நிலைமை (சோதனை) வருமென்று கருதக் கூடாது. ஆன்மீக சாதனையின் எந்த நிலையிலும், இல்லை

ஒவ்வொரு நிலையிலும், இந்த இடையூறு வருகிறதென்பது அப்பாதையில் நடப்பவர்களுக்கு நன்கு தெரிந்ததுதான். எனவே, அருணகிரியார் இதைப்பற்றி இந்நூலில் ஏதோ ஒரு குறிப்பிட்ட இடத்தில் இதனை விவரிக்காமல், ஒவ்வொரு சாதகனுக்கும் பொதுவாக உதவிடவும் மற்றும் ஒரு உறுதியைத் தருவதற்காகவும் இங்கு இதை அமைத்திருக்கிறார். "கந்தர் அனுபூதியை" தினந்தோறும் பாராயணம் செய்தும், தியானம் நாம-ஜபம் போன்ற பயிற்சிகளில் ஈடுபடும் சாதகர்களுக்கு இச்செய்யுள் மிகவும் உபயோகமானது.

ஒரு சாதகன் என்னதான் ஆழமாகக் (ஆன்மீகக் கல்வியைக்) கற்றிருந்தாலும், நெடுங்காலமாக ஆன்மீகப் பயிற்சி செய்து வந்திருந்தாலும், மேலும் ஆன்மீகப் பாதையில் வெகுதூரம் முன்னேறியிருந்தாலும், அவன் புரிதலில் குழப்பம் ஏற்பட்டு, அவன் புத்தி தடுமாறி, விவேகசக்தியை இழந்துவிடும் சந்தர்ப்பங்கள் வரத்தான் செய்கின்றன. ஏன் இவ்வாறு நிகழ்கிறதென்று நாம் ஆச்சரியப்படலாம். ஆனால் இவ்வாறு ஏற்படுவது சகஜம்தான்; பல்வேறு காரணங்கள் இந்த நிலைமையைக் கொண்டுவரக் கூடும். அவைகளில் முக்கியமான சிலவற்றை இப்பொழுது நாம் காணலாம்.

பல வருட காலம் ஆன்மீக சாதனைகளை அப்யசித்து வந்தபின்னரும், வெவ்வேறு விதமான சந்தேகங்கள் சாதகர்களைத் தாக்க ஆரம்பிக்கின்றன. "பலவருடகாலமாக நான் சாதனை செய்து வருகிறேன்; ஆனால் நான் கணிசமாக எதையும் சாதித்ததாகத் தெரியவில்லை! நான் உண்மையில் முன்னேறிக்கொண்டு இருக்கிறேனா, அல்லது பொய்யான திருப்திகள் அடைந்து என்னை நானே ஏமாற்றிக்கொண்டிருக்கின்றேனா?" "நான் மேற்கொண்டிருக்கும் சாதனை எனக்குப் பொருத்தமானதுதானா; அல்லது, எனது பயிற்சியில் ஏதாவது குற்றம் குறைகள் உள்ளதோ?" "நான் ஒரு சரியான குருவைத் தேர்ந்தெடுத்து உள்ளேனா? நான் என்னுடைய குறிக்கோளை அடைய அவரால் வழிகாட்ட இயலுமா? அதற்கான தகுதி அவருக்கு இருக்கிறதா?" ஒரு சாதகனின் ஆன்மீக வாழ்வில் இம்மாதிரியான நெருக்கடியான தருணங்கள் வருவது அசாதாரணம் அல்ல, வரத்தான் செய்யும். மேலும், ஒரு சாதகன் பற்பல ஆசிரியர்களின் பல்வேறு சாதனைகளைப் புகட்டும் புத்தகங்களைப் படித்ததினாலோ, (அ) சுயநலமிக்க போதகர்கள் தரும் பல்வேறு போதனைகளை (அறிவுரைகளை - lectures) கேட்டதினாலோ, (அ) அவர்களுக்குள் மறைந்திருக்கும் ஆசைகள் அவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளுவதற்காகத் தூண்டப்படுவதால், தன்னை அறியாமலேயே அவன் பல்வேறு உசிதமில்லாத சாதனைகளை

மேற்கொள்ளுவதினாலோ, அவன் மனதில் குழப்பம் ஏற்பட்டு, என்ன செய்வதென்று அறியாமல் பரிதவிக்கின்றான்.

மேலும், அச்சாதகன் புரிந்து கொள்ள முடியாதத் தடைகளை எதிர்ப்பட நேரும்போது, (அ) கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படும்போது, (அ) சாதகமற்ற சூழ்நிலையில் இருக்கநேரிடும்போது (அ) நோயாலோ, மாயையின் மருட்சியாலோ தாக்கப்படும்போது, அவன் அறிவாற்றல் குழப்பமடைகிறது; தனக்கு என்னதான் நடக்கிறதென்று அவனால் புரிந்து கொள்ள முடிவதில்லை. இத்தகைய சந்தர்ப்பங்களில்தான், தன்னுடைய சாதனைப் பயிற்சிகளின் செயல்திறன் மீதான நம்பிக்கை, அவனது குருவின் தகுதி, ஆன்மீகப் பாதையில் செல்வதற்கான தனது சுய தகுதி, ஆகியவைகள் பற்றிய சந்தேகங்கள் எழுந்து முரட்டுத்தனமாக அவனை ஆட்டுவிக்கின்றன. அத்தருணத்தில், அவன் விவேகத்தை இழப்பதென்பது சாத்தியம்தானே.

ஆக, சாதகன் குழம்பமடைவதற்கான காரணங்கள் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம், ஆனால் அதன் விளைவு மட்டும் ஒன்றுதான் --- அறிவாற்றலில் குழப்பம் (மதிகெடுதல்). இச்செய்யுளைத் தொடங்கும் "மதிகெட்டு" என்று அச்சொல்லில் புத்தியைக் குழம்பச்செய்யும் மேலே கூறப்பட்ட பல்வேறு காரணங்களையும் அருணகிரியார் சுட்டுகிறாரென்று சொல்லலாம்.

இனி, ஒரு சாதகனின் புத்தியின் விவேக சக்தி குழம்பமடைவதால் என்ன நடக்கிறது? அதைத்தொடரும் எல்லா தீயவைகளும் வெளிப்பட்டு அவனைத் தாக்குகின்றன. புத்திதான் ஒருவனின் மிகஉயரிய ஆற்றல்; அது குழப்பமடையும்போது, மனமானது பலவீனப்பட்டு சோர்வடைகிறது. அது சரியாக சிந்திக்கும் சக்தியையும் இழக்கிறது. குழம்பிய புத்தி மற்றும் மயங்கிய மனம், பகுத்தறியும் சக்தியை இழந்து விடுவதால், அவர்கள் தவறானவைகளை சரியானவைகளென்றும், இந்திரிய-சுகத்தை ஆன்மீக ஆனந்தமென்றும் தவறாக நினைத்து, அவர்களின் உண்மை நலத்திற்குப் பாதகமானவைகளை அநுசரித்து, தாங்கள் கடப்பிடிக்கும் தவறான செயல்களை நியாயமற்ற வாதங்களைக் கொண்டு நியாயப்படுத்தி, அவர்களின் இலக்கான மெய்யனுபூதியை மறந்து, வழி இழக்கின்றனர். வாழ்க்கையை வீணாக்குகின்றனர். இதன் விளைவு என்ன? மனக்குழப்பத்தில் அவர்கள் தங்களை இழந்து, முடிவில் அழிந்து போகின்றனர். இவ்வாறு நடைபெறுவதற்கான காரணம், மேற்கூறிய பற்பல காரணங்களால் உண்டாகும் மனக்குழப்பம்தான்,

இத்தகைய இக்கட்டான சமயங்களில், சாதகன் தனக்குள்ளிலிருந்து ஒரு அசாதாரண பலத்தைப்பெறுவதே அவனது உடனடியான தேவை. அந்த ஒன்றே அவன் துவண்டு போய், அழிந்து விடாமல் இருக்க அவனைப் பாதுகாக்கும். அதற்காகவும், அவன் இதன் வசப்பட்டு பலிகடாவாக ஆகிவிடாமல் பாதுகாக்கவுமே அருணகிரியார் இச்செய்யுளை அளித்துள்ளார். இது அச்சாதகனுக்குத் தேவையான மனவலிமையையும் ஊக்கத்தையும் தந்து, இந்தக் கடுமையான சவால்களை சாமர்த்தியமாக சமாளிக்க வைக்கும்.

அந்த உள்சக்தி யாது? அச்சக்தி சாதகனின் சொந்தமான புத்தி சக்தியோ மற்ற சக்தியோ அல்ல; அது முற்றிலும் வேறான இடத்திலிருந்து வருகிறது. அவன் பக்திசெய்யும், தியானம்செய்யும் கந்தப் பெருமானின் ஸ்வபாவமான கருணையைப்பொழியும் தன்மையிலிருந்து வருகிறது. கந்தப் பெருமானிடம் எவன் உண்மையான பக்தி கொண்டிருக்கிறானோ, அவனை புத்தி குழப்பம் ஆகியவை எப்படி பாதிக்கமுடியும்? முடியவே முடியாதென்று அருணகிரியார் உறுதி கூறுகிறார். ஏனெனில், அது பெருமானின் இயற்கை இயல்புக்கு மாறானதாகும். அவர் **நதி புத்திரன்** (கங்கையின் புதல்வர்), சிவனாரின் கிருபையால் உதித்தவர்; அவரே எல்லையற்ற ஞானம்-ஆனந்தம் (**ஞானசுகம்**); அவரே அசுரர்களின் பலத்தை அழித்தவர். அவரே சர்வசக்தி கொண்ட பாதுகாவலர் (**திதிபுத்திரர் வீறடு சேவகன்**).

கந்தப் பெருமான் நதி-புத்திரன்; அவரது அவதாரம் கங்கை நதியில் நிகழ்ந்தது. அவரே ஞான-ஆனந்தத்தின் ஈஸ்வரன் --- ஞானசுக இறைவன். திதி புத்திரர்களான அசுரர்களின் சக்திகளை அழித்தவர் --- திதி என்ற அசுர மங்கைக்கும் கஷ்யப முனிவருக்கும் பிறந்தவர்கள் அசுரன் சூரபத்மன் மற்றும் அவன் சகோதரர்கள். எத்தகைய மகோன்னதமான கருத்து இது! ஞான-சுக ஈஸ்வரனான அவர் **திதி புத்திரர்**களை அழிக்க **நதி புத்திரனாக** உதித்தவர்.

கங்கை நதி இமய மலையின் உயர்ந்த சிகரத்திலிருந்து பிரவாகமெடுத்து கீழே ஓடுகிறது; கங்கை நதி என்றும் வற்றாத பிரவாகம் உடையது. அதேபோலவே, கந்தப் பெருமானின் கிருபையும் அவர் பக்தர்களின்மீது பிரவாகம்போல் இயற்கையாகவும், இடைவிடாமலும் பாய்கிறது, மேலும், எப்படி நதி-புத்திரன் கொடூர திதி-புத்திரர்களை அழித்தாரோ, அப்படியே புத்தி குழப்பத்தை பின்தொடரும் தீயவைகளை பெருமானின் கிருபையானது அழித்தொழித்து விடுகிறது. தேவர்களின் பக்தி-சிரத்தையுடன் கூடிய பிரார்த்தனைகளை நிறைவேற்றிடும் பொருட்டு, ஞான-சுகத்தையே

தன் இயல்பாகக் கொண்ட முருகப் பெருமான் கங்கை-புத்திரராக அவதரித்து, திதி-புத்திரர்களை அழித்து, தேவர்களுக்கு சுதந்திரம் மற்றும் மகிழ்ச்சியைக் கொடுத்தார். அவ்வாறே, ஸச்சித்தானந்த (ஞான-சுகம்) சொரூபமான பெருமான் (ஆத்மா), சாதகனின் உள்ளத்திலேயே திருவருளாக வெளிப்படுத்திக்கொண்டு, அவனுடைய அனைத்துத் துன்பங்களையும் நீக்கி, வலிமை மற்றும் மகிழ்ச்சியை அவனுக்கு அளிக்கிறார். எனவே, ஒருவனுடைய பக்தியின், தியானத்தின் இலக்கு, ஞான-சுக கந்தப் பெருமானாக இருக்கும்பொழுது, மனக்குழப்பம் போன்ற இடர்கள் அவனில் எப்படி எழ இயலும்? அப்படி ஒரு வேளை அவை எழுந்தாலும், அந்த ஞான-சுக சொரூபரான கந்தப் பெருமானின் திருஅருளானது உடனே தோன்றி அவற்றை அழித்துவிடும். சாதகனின் சுய-சொரூபம் ஆனந்த உணர்வாகவே (ஆத்மாவாக) இருக்கும்பொழுது, எப்படி மனக் குழப்பம் (மனச் சோர்வு) அவனிடம் தலை காட்ட இயலும்? வெளிச்சமிருக்குமிடத்தில் இருட்டு தலை காட்ட இயலுமோ? ஒருவன் தன் உண்மை சொரூபமான ஆத்மா, இறைவன் தன் உள்ளத்தில் உறைகிறார் என்கின்ற விழிப்புணர்வுடன் இருக்கும்வரை, அவன் மனம் மற்றும் புத்தியில் வந்துபோகும் குறும்புத்தன சேஷ்டைகளால் துன்புறுத்தப்படமாட்டான்.

இவ்வாறாக. அருணகிரியார் கந்தப் பெருமானை பெரும் சக்தி படைத்த அடைமொழிகளால் விளிப்பதன் மூலம், சாதர்களிடம் மனக் குழப்பம் போன்ற சாத்தியக் கூறுகள் எழுவதை விலக்கிவிடுகிறார். மேலும், அத்தகைய நிலைகள் அவர்களை ஒருபொழுதும் பாதிக்காது என்ற உறுதியையும் சுட்டிக்காட்டுகிறார். இந்த செய்யுள் சுட்டும் இவ்வுட்கருத்துகளின் மீது ஒரு சாதகன் ஆழமான சிந்தனை செய்தால், அதுவே எவ்வித தடைகளையும் எதிர்த்து வென்றிடத் தேவையான மகத்தான மனவலிமையையும் தைரியத்தையும் அவனுக்குத் தந்துவிடும். இக்கட்டான தருணங்களில் "சஞ்சீவினி" போன்றது இச்செய்யுள்.

"விவேகம் இழந்து, மனக்குழப்பத்தில் ஆழ்ந்து, மதி மயங்கி, முக்தியும் பறிக்கப்பட்டு, நான் நசிந்து போகத்தான் வேண்டுமா? இப்படியொரு நிலைமை எனக்கு வாய்த்துத்தான் ஆக வேண்டுமா என்ன? இல்லை, இவ்வாறு ஒரு பொழுதும் நடக்க முடியாது. ஏனெனில், பெருமானே, உன் பால் நான் பெரும் பக்தி கொண்டுள்ளேன், மேலும் உன்னை அடைவதே என் தியானத்தின் குறிக்கோள், நீயோ கிருபை பொழியும் நதி-புத்திரன், ஞானம் மற்றும் பரமானந்தத்தின் அதிபதி, திதி-புத்திரர்களின் சக்தியை அழித்து அவர்களை வெற்றி கொண்டவர்." இவ்வாறாக, எவனது இலக்கு

தெளிவாகவும் நிச்சயமாகவும் உள்ளதோ, அந்த உண்மையான சாதகன் மனக்குழப்பம் போன்றவைகளால் ஒரு பொழுதும் பாதிக்கப்படமாட்டான் என்ற உறுதியை அருணகிரியார் அவனுக்குத் தருகிறார். "கந்தப் பெருமானின் திருஅருள் உன்னுடன் என்றைக்கும் உள்ளது, அது உன்னைக் கைவிடாது, நீ இறையனுபூதியான இலக்கை மறவாது இருக்கும்வரை, இறைவனின் கருணையானது உன்னை எப்பொழுதும் பாதுகாக்கும், நீ ஒரு பொழுதும் அழியமாட்டாய்." ஓ சாதகர்களே! முழு நம்பிக்கையுடன் இருங்கள்.

இச்செய்யுளை இன்னொரு விதத்திலும் புரிந்துகொள்ளலாம். விவேகத்தை இழந்து, மனம் குழம்பிப்போய், மதி மயக்கம் அடைந்து, இவைகளின் தாக்குதல்களால், இறைவனை அடைவதாகிய "அநுபூதி"யை இழந்து விடாமலிருக்க ஒரு சாதகன் தன்னைக் காப்பாற்றுமாறு பெருமானிடம் வைக்கும் முறையீடாகவும் கொள்ளலாம். "நான் இப்படியாக அழிந்து போய்விடுவது என் தலைவிதியா என்ன? ஓ பெருமானே! இது மாதிரி எதுவும் ஆகாதிருக்கட்டும். என்னைக் காப்பாற்றுவாயாக" என்று ஒரு ஆதரவற்ற பக்தன் (சாதகன்) முறையிடுகிறான் என்று கொள்ளலாம்.

அருணகிரியார் இச்செய்யுளை மிகமிக சக்தி வாய்ந்த சொற்கள் கொண்டு அமைத்துள்ளதால், ஒருவன் உண்மையாக இதைப் பாடம்செய்தாலே போதும் (அதாவது பாராயணம் செய்தாலே போதும்), அவன் கண்களிலிருந்து நீர் மல்கி அவன் உள்ளம் உருகிடும்; அதுவே எப்பொழுதும் இறைவனிடமிருந்து பொங்கி வழியும் கிருபையை அவன் உள்ளத்தில் ஈர்க்கும். சாதகர்கள் மனக் குழப்பம் கொண்டு, என்ன செய்வது என்றறியாது திகைத்திருக்கும் தருணங்களில், இச்செய்யுள் அவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும், மேலும், இதை தினசரி பிரார்த்தனையாக மேற்கொண்டு ஒருவன் பாராயணம் செய்து வந்தாலே போதும், இதுவே இக்கட்டான தருணங்களிலிருந்து அவனை நிச்சயமாகப் பாதுகாக்கும்.

இச்செய்யுள், கடைசி செய்யுளுக்கு முந்தையதாக இருப்பதன்மூலம் இது இந்நூலின் 'பலஸ்ருதி' போலத் தோன்றவைக்கிறது, --- இந்நூலை பக்தியுடன் தொடர்ந்து தினசரி பாராயணம் செய்து வரும் ஒருவன் அடைந்திடும் நன்மை, பயன் (அ) பலன் யாது என்பதைக்கூறும் செய்யுள், ---- அதாவது, "கந்தர் அநுபூதி" நூலை தினமும் முறையாக ஓதி (அ) பாராயணம் செய்து, அதன் அறிவுரைகளின்படி நடந்திட உண்மையாக முயற்சிப்பவர்கள், அனைத்தையும் தூய்மைப் படுத்தும், ஞான-சுக இறைவனின் கிருபையைக் கண்டிப்பாகப் பெறுவார்கள்; அக்கிருபையானது

அவர்கள் மனதிலுள்ள குழப்பங்கள், மயக்கங்கள், மற்றும் இலக்கை (அநுபூதியை) அடைவதில் வரும் பல்வேறு தடையூறுகளையும் துடைத்தெறிந்துவிடும் என்ற உறுதியை இச்செய்யுள் பலனாக வழங்குகிறது.

==========

செய்யுள் - 51

==========

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

பொழிப்புரை: "ஓ சர்வவல்லமை பொருந்திய குகப் பெருமானே! ஓ பரம்பொருளே! உருவமுள்ளனவாயும், உருவமற்றனவாயும்; உள்ளனவாயும், இல்லாதனவாயும்; மலராகவும், அதன் நறுமணமாகவும்; ரத்தினமாகவும், அதன் ஒளியாகவும்; உடலாகவும் (பிரபஞ்சமாகவும்), உயிராகவும் (பிரபஞ்சத்தை வியாபித்து, அதற்கு உயிராகவும்); (நற்கதியாகிய) மோட்சமாகவும், (அதை அடைவதற்கான) நீதி நேர்மையின் விதிகளாகவும் (நன்னெறியாகவும்) (அதாவது, மார்க்கமாகவும், முடிவாகவும்); மற்றும் குருவாகவும் வருகின்ற குகப்பெருமானே! தங்கள் கிருபையை (அனைவருக்கும்) அருள் புரிவீராக."

(எல்லாமாயும் குருவாயும் வருகின்ற குகப்பெருமானே, நீ எல்லோருக்கும் அருள் புரிவீராக.)

விளக்கவுரை

இது ஒரு மிகமிக அழகான மற்றும் அருமையான செய்யுள். இத்துடன் அருணகிரியார், **"கந்தர் அநுபூதி"** என்கிற இந்த தெய்வீக நூலை நிறைவு செய்கிறார். இச்செய்யுள் அருட்செல்வரின் மிக உயர்ந்த இறை-அனுபவத்தின் முயற்சியில்லாதெழும் பரவசமாகிற உணர்ச்சி வேகமிக்க பொழிவு ஆகும். இது மிகவும் எளிமையான, இனிமையான அதே சமயம் கம்பீரமான பாணியில் புனையப்பட்டுள்ளதால், இதை ஒருவன் ஓதும்பொழுதே, அவனை ஆன்மீக மனோபாவத்திற்குக் கவர்ந்து சென்று விடுகிறது. இதில் அவர் தானும் மற்ற பூரண ஞானிகளும் உச்சகட்ட இறைபோத அநுபூதி நிலையில் அநுபவிக்கும் அந்த சகஜ சமாதி அவஸ்தை எனப்படும் நிலையை, மிகவும் அழகாகச் சித்தரிக்கிறார்.

பேசா அநுபூதி நிலையை (பேச்சற்ற அநுபவம் - மகா மௌனம் என செய்யுள்-43ல் விளக்கப்பட்ட நிலையை) அடைந்த சாதகன், பின்னர் அவ்வநுபூதி நிலையிலிருந்து ஜீவன்முக்தனாக வெளிப்பட்டு, எங்கும் எதிலும் இறைவனைக் காண்கிறான் --- தனக்குள்ளே வேலாகவும், வெளியே எங்கும் மிளிரும் இறை-பாதங்களாகவும் காண்கிறான் (செய்யுள்-44). இத்தகைய இறை-உணர்வுடன், அந்த ஜீவன்முக்தன் இங்குமங்கும் சென்று *லோகசங்கிரக* (உலக ஒற்றுமை மற்றும் நன்மைக்கான) ஆன்மீகப் பணிகளையும், ஆத்மானுபூதி அடையப் பாடுபடும் சாதகர்களுக்கு அவரவர் தேவைக்கேற்ப அறிவுரைகளையும் கொடுத்து வருகிறார். காலப்போக்கில், அவருடைய இறை-விழிப்புணர்வு ஆழமாகி, மேன்மேலும் நிறைவுற்றதாக ஆகிக்கொண்டே போய், ஒரு கட்டத்தில் அவர் நிரந்தரமான மற்றும் தடைகளற்ற இறைஉணர்வு நிலையில் *(சகஜ அவஸ்தை)* சாசுவதமாக நிலைபெற்றுக் கொள்கிறார்; நிலைபெற்ற அந்த *சகஜ அவஸ்தையில்* அவர் இறைவனை **எல்லாவற்றிலும்** பார்ப்பதோடல்லாமல், இறைவனை **எல்லாமுமாகப்** பார்க்கிறார். அவருக்கு, இறைவன் **அனைத்திலும்** இருக்கிறார் என்றல்ல, இறைவனே **அனைத்துமாக** இருக்கிறார்; எனவே, அவருக்கு இறைவன் எல்லாமுமாக 'வருகிறார்.' அவர் எதைப் பார்த்தாலும், தொட்டாலும், நுகர்ந்தாலும், ருசித்தாலும், கேட்டாலும், அது இறைவனே. அவர் எண்ணுவதெல்லாம், உணர்வதெல்லாம், அறிவதெல்லாம் இறைவனே. இறைவன் மேலேயும், கீழேயும் உள்ளார்; இறைவனே ஸ்தூலப்பொருளும், உணர்வும்; இறைவனே வழியும் (மார்க்கமும்), இலக்கும் (முடிவும்); உள்ளேயும் இறைவனே, வெளியிலும் இறைவனே, அனைத்தும் இறைவனே, எங்கும் இறைவனே. இப்படிப்பட்ட ஒரு ஜீவன்முக்தனுடைய கம்பீர தெய்வீகமயமான அனுபவத்தை, இறையனுபூதியில் ஊறி இருக்கும் அருட்செல்வர் அருணகிரியார் இச்செய்யுள் மூலம் தெரியப்படுத்துகிறார். அதனால்தான் முனிவர் தாயுமானவர், "அருணகிரியார் கந்தப் பெருமானின் அநுபூதி பெற்று, 'கந்தர் அநுபூதி' எனும் நூலை, தான் பெற்ற பேரின்பத்தை மற்றவர்களும் அடையவேண்டும் என்பதற்காகத் தந்தருளினார்." என்று சொல்கிறார். முக்தியடைந்த ஒரு மகானின் மகிமை எப்படிப்பட்டதாக இருக்கிறது பார்த்தீர்களா! இதைப்பற்றி நாம் எழுதலாம், படிக்கலாம், அவ்வளவுதான்; அதை ஆழ்ந்து தியானம் செய்தால், ஒருவேளை அவனருளால் ஒரு கூஷணநேரம் அந்த அனுபவம் கிடைக்குமேயானால், நம் வாழ்க்கை பயனடைந்ததாகும்!

இருமையைக் (*துவைதத்தைக்*) காணும் சாதாரண மனிதபுத்தியின் புரிதலான வடிவமுள்ளது மற்றும் வடிவமற்றது, உள்ளது மற்றும் இல்லாதது போன்ற வழக்கமான இரட்டை கருத்துகள், ஒரு ஜீவன்முக்த மகாபுருஷருக்கு அர்த்தமற்ற வார்த்தைகளாகின்றன. இவை அனைத்தும் கடக்கப்பட்டு, ஒற்றைத் தனித்துவ (அத்வைத) அனுபவமாக மாறி விடுகிறது. ஜீவன்முக்தரின் இத்தகைய தெய்வீக அசாதாரண அநுபவத்தை, மானிட மொழிகளால் விவரித்திட இயலாது. இருப்பினும், பதினாறு சொற்களைக் கொண்ட ஒரு செய்யுள் எவ்வளவு அனுமதிக்குமோ அதற்குள், அருணகிரியார் மிகவும் திறமையான முறையில் (அவ்வநுபவத்தை) விளக்கியுள்ளார்! ஒரு மனிதனின் அனுபவத்தில் வரக்கூடிய சாத்தியமான அனைத்து அநுபவங்களையும் இவ்வொரு செய்யுளிலேயே மிகவும் அழகாகத் திணித்து, படமாக்கி, (அவ்வநுபவங்களை) நம்(மனக்) கண்முன் தோன்றச் செய்துள்ளார்.

"உருவாய் அருவாய்": நாம் கண்ணைத் திறந்தவுடனேயே, வெவ்வேறு உருவங்களையும் வடிவங்களையும் உடைய பொருள்களைப் பார்க்கிறோம். எனவே, பொருள்களைப் பற்றிய நமது முதல் கருத்து "உருவம்" தான். அதே சமயம், நாம் காற்று, ஆகாசம், மணம், சத்தம், சுவை போன்ற "உருவம் அற்ற" பலவற்றையும் அன்றாடம் உணர்ந்துதான் வருகிறோம். எனவே, அருணகிரியார் இச்செய்யுளை "உருவாய், அருவாய்" என்றே துவங்குகிறார், அதாவது 'உருவம் கொண்டது', 'உருவமற்றது'. என்ற இவ்விரு சொற்களிலேயே அவர் இப்பிரபஞ்சத்திலுள்ள அனைத்தையும் உள்ளடக்கி விட்டார்! உருவம், அருவம் --- அவ்வளவேதான், இவ்விரண்டைத் தவிர வேறு மூன்றாவதுவிதமாக எதையுமே (எப்பொருளையும்) நம்மால் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது, அனைத்தும் இவ்விரண்டிலேயே அடங்கி விடுகின்றன.

கந்தப் பெருமானின் அவதாரத்தைப் பற்றி *'கந்த புராணம்'* இவ்வாறு விவரிக்கிறது: "அருவமும் உருவும் ஆகி, அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய், பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பு" ---- "அருவமாயும் உருவமாயும் அநாதியாயும் ஒன்றாயும் பலவாயும் பரப்பிரம்மமாயும் விளங்கும் சோதிப் பிழம்பு." இதிலிருந்து விளங்குவதென்னவெனில் உருவமோ அருவமோ ஆன எதுவும் எல்லாமும் இறைவன்தான், இறைவன் மட்டுமேதான். எனவே, இறைவனுக்கு குறிப்பிட்ட வடிவங்கள் மட்டுமே உண்டு என்றோ, அல்லது ஒரு குறிப்பிட்ட உருவில்தான் வருவார் என்றெல்லாம் இல்லை. உண்மையில், எல்லா உருவங்களும் அவருடையதேதான். ஆனால், ஜீவன்முக்தன் ஒருவரால்தான் இவ்வாறெல்லாம்

அநுபவித்திட இயலும். எனவே, இறை-அனுபூதி உள்ளவர்களுக்கு, இறைவன் ஒரே சமயத்தில், உருவுள்ளனவாயும் உருவம் இல்லாதனவாயும் வருகிறார்; ஏனெனில், இறைவன் அரு-உரு என இரண்டுமாக இருகிறார், என்று சொல்கிறார் அருணகிரியார்.

"உளதாய், இலதாய்": அடுத்ததாக வரும் இரட்டை --- 'உளதாய், இலதாய்,' --- 'இருப்பதாய்' மற்றும் 'இல்லாததாய்". அதாவது, 'எந்த ஒன்று இருக்கின்றதோ' மற்றும் 'எந்த ஒன்று இல்லையோ.' 'இருக்கிறது', 'இல்லை' என்பதைப்பற்றிய மனிதர்களின் கருத்துக்கள் அவரவர்களின் ஆன்மீக உன்னதி நிலைகளுக்கேற்ப வெகுவாக வேறுபடுகின்றன. உலகாயதவாதிகளுக்கு (சாருவாகர்களுக்கு), இந்த ஸ்தூல உலகம் (பிரபஞ்சம்) மட்டுமே உள்ளது, அதாவது ஸ்தூலப்பொருள்கள் அல்லது இயற்கை மட்டுமே உள்ளது, அவர்களுக்கு இறைவன் என்ற ஒருவர் இல்லவே இல்லை. அதற்கு நேர்மாறாக, வேதாந்திகளுக்கு இருப்பது பிரம்மம் மட்டுமே (நித்திய உண்மை), ஏனெனில் அதுதான் நிரந்தரமான பரம்பொருள், உண்மையில் இருப்பது; உலகம் என்பது இல்லை (அநித்தியம்), ஏனெனில் அது நிரந்தரமானதல்ல, மாறும் தன்மை உடையது, கடைசியில் அழியக்கூடியது. ஆனால், அநுபூதிபெற்ற ஞானிக்கு, இறைவன் இருப்பதாகவும் இல்லாததாகவும் வருகிறார், இவ்விரு சொற்களையும் எவ்விதத்தில் புரிந்து கொண்டாலும் ஒப்புக்கொண்டாலும் சரி, என்கிறார் அருணகிரியார். உலகம் மட்டும் இருக்கிறது, இறைவன் இல்லை என்றாலும் சரி; அல்லது இறைவன் மட்டுமே இருக்கிறார், உலகம் இல்லை என்றாலும் சரி, பூரண ஞானிகளுக்கு இறைவன் இரண்டுமாகவே வருகிறார். அந்த ஞானிகள், ஆரம்பத்தில் "நேதி நேதி" (இது இல்லை, இது இல்லை) என்று ஒவ்வொன்றாக உலகம் உட்பட எல்லாவற்றையும் புறம்தள்ளி, இறைவன் ஒருவனையே எல்லாமாக தியானித்து அத்வைத ஞானியாகி, அவரை (பிரம்மத்தை) அடைந்த பின்னர், அதே உலகை இறைவனாகவே *"சர்வம் கல்விதம் பிரம்ம"* ("அனைத்தும் உண்மையில் பிரம்மமே") என்று காண்கின்றனர். இவ்வாறாக, அருணகிரியார் இச்செய்யுளின் முதல் வரியிலேயே, ஜீவன்முக்தர்கள் அநுபவிக்கும் *சகஜ அவஸ்தை* நிலையின் சாரத்தை மிகவும் நேர்த்தியாக உற்சாகமூட்டும் விதத்தில் தந்தருளியுள்ளார்.

செய்யுள் 13க்கும் இச்செய்யுளுக்கும் இடையே ஒரு சுவாரஸ்யமான விஷயம் உள்ளது: செய்யுள் 13ல், அறுதி உண்மையான பரம்பொருள் (இறைவன்) 'உருவன்று, அருவன்று; உளதன்று, இலதன்று' என்று விவரிக்கப்பட்டது. இச்செய்யுளில் அதே இறைவன் 'உருவாய், அருவாய்; உளதாய், இலதாய்' வருகின்றவராகச்

சொல்லப்படுகிறது. செய்யுள்-13, *சாதகனுக்கு,* உற்சாகமூட்ட {மாதிரிக்காக (Sample)}, குருவினால் *"கொடுக்கப்பட்ட"* உண்மைப் பரம்பொருளின் தற்காலிகமான அநுபவத்தை, விவரிப்பது; அதனால், அது "இது அல்ல, அது அல்ல" என்று, அதாவது, பரம்பொருள் விவரிக்க இயலாதது, என்று கூறப்படுகிறது. ஆனால் இங்கு, இறை-அநுபூதி அடைந்த *ஒரு ஞானியின் 'சொந்த அனுபவம்'* விளக்கப்படுகிறது. அதனால், இறைவன் "இதுவாகவும் அதுவாகவும்" இருக்கிறார் எனப்படுகிறது. மேலும், அங்கோ இறைவனைக் குறிக்க 'அது' என்ற சொல் பயன்படுத்தப்பட்டது; அதனால், அவர் "வெகு தொலைவில் உள்ளவர்" என்பது போன்ற எண்ணத்தை, உணர்ச்சியைக் கொடுக்கிறது; ஆனால், இங்கோ 'குகன்' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. குகன் என்றால் "இதயக் குகையில் ஒளிர்பவர்.' இது இறைவன் மிக அருகில் உள்ளார் என்பதைக் குறிப்பதாகிறது; அதாவது அவனுடைய இதயத்திலேயே அவர் இருக்கிறார், அதனால் அவர் 'தனக்குச் சொந்தமானவர்' என்ற உணர்வைக் கொடுக்கிறது. மேலும் அது அவனது *'சொந்த அநுபவம்'* என்பதையும் தெரியப்-படுத்துகிறது. மேலும், சாதனையின் துவக்கக் காலகட்டத்தில் (செய்யுள்-13), சாதகனுக்கு கொடுக்கப்பட்ட அநுபவம் சீமித்தது (limited): "அதுவே (மெய்ப்பொருள் அல்லது பரமாத்மாவே) முருகப்பெருமான், (அதுவே) இணையற்ற வேல் தாங்கிய பெருமான், (அதுவே) நம் குரு." என்பதுவரை சீமித்து இருந்தது. ஏனெனில், அந்நிலையில் அவனால் பரம்பொருளை அந்த அளவிற்குமட்டும்தான் அனுபவிக்க இயலும், *பரம்பொருளே அனைத்தும்* என்று அனுபவிக்க இயலாது.. ஆனால், இங்கு, இறைவனே *அனைத்துமாய்* உள்ளார் --- உருவாகவும், அருவாகவும்; உளதாகவும், இலதாகவும்; மலராகவும், அதன் நறுமணமாகவும்; ரத்தினமாகவும், அதன் ஒளியாகவும்; உடலாகவும் (பிரபஞ்சமாகவும்), (அதற்கு உணர்வூட்டும்) உயிராகவும்; மோட்சமாகவும், அதனை அடைய உதவும் தர்ம மார்க்கமாகவும்; மற்றும் குருவாயும் வருபவர் --- ஆக இறைவன் எல்லாமுமாக உணரப்படுகிறார். இவ்வாறு இவ்விரண்டு செய்யுள்களையும் ஆராய்ந்து பார்த்தால், பரம்பொருளை **"விவரிப்பதற்கும்"**, பரம்பொருளை **"அநுபவிப்பதற்கும்"** இடையேயுள்ள வித்தியாசத்தை நன்கு உணரலாம். ஒருவன் இறைவனை *அநுபூதியாகப்* பெறலாம்; ஆனால், இறைவனை புத்தியைக்கொண்டு விவரித்துச் சொல்லவோ, விளக்கவோ அல்லது புரிந்துகொள்ளவோ இயலாது.

"மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்": இப்பொழுது, நாம் மேலும் தொடர்ந்து பார்ப்போம். ஒன்றுக்கொன்று பரஸ்பரம் எதிரிடையானதும், நேர்மறை-எதிர்மறை கருத்துக்களான உருவம்-

அருவம், உளது-இலது ஆகியவைகளிலிருந்து (முதல்வரியில்), அருணகிரியார் இப்பொழுது இறைவன் பொருள்களாகவும் அவைகளின் குணங்களாகவும் இருக்கிறார் (வருகிறார்) என்று கூறுகிறார் ---- மலர், மற்றும் அதன் நறுமணம்; ரத்தினம், மற்றும் அதன் ஒளிப்பிரகாசம். பொருள் மற்றும் அதன் குணம் பற்றிய கருத்து, முன்னர் குறிப்பிடப்பட்ட ஒன்றுக்கொன்று நேர் எதிரிடையான உருவம்-அருவம், உளது-இலது போன்ற கருத்தல்ல; அதாவது, பொருளும் அதன் குணமும் ஒன்றோடு ஒன்று சேர்ந்து போகக்கூடும், சேர்ந்து போகின்றன. எனினும் அவையிரண்டும் ஒன்றேயல்ல. மலரும், அதன் மணமும் சேர்ந்திருந்தாலும், அவையிரண்டும் வேறுவேறுதானே; அதே போன்றதுதான் ரத்தினமும் அதன் ஒளிப்பிரகாசமும். ஆனால், ஒரு ஜீவன்முக்தருக்கு மலரும் இறைவன்தான்; அது வீசும் நறுமணமும் இறைவன்தான்; ரத்தினமும், அது வெளிப்படுத்தும் ஒளிப் பிரகாசமும் ஆகிய இரண்டுமே இறைவன்தான். எனவே, அருணகிரியார் இச்செய்யுளின் இரண்டாவது வரியில், "மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்." என்று கூறுகிறார். இத்தகைய கருத்துக்கள் மனித அனுபவத்தின் மேம்பட்ட வகையைச் சார்ந்தவை.

"கருவாய் உயிராய்": இறைவன் உடலாகவும் உயிராகவும் வருகிறார்: உடல் என்பது ஒரு ஜடப் பொருள் (உயிரற்ற ஜடம்); உயிர் என்பது சைதன்யம் (உணர்வு கொண்டது). உயிரே உடலுக்கு உணர்வை ஊட்டி, செயல்படும் தன்மையைக் கொடுக்கிறது. உயிர் இல்லாத உடல், அழுகி அழிந்து விடுகிறது. உடலின் மதிப்பு, அழகு போன்றவை உயிரைச் சார்ந்து இருக்கின்றன. ஆனால், உயிரும் ஒரு உடலின்றி (ஸ்தூல, சூட்சும மற்றும் காரண உடல்) இருக்கவும் முடியாது, அதன் கர்மங்களை அனுபவித்து, மோட்சம் அடையவும் முடியாது. எனவே, இறைவன் உடல் மற்றும் உயிர் (**கருவாய் உயிராய்**) ஆகிய இரண்டாகவுமே வருகிறார் என்னும்பொழுது, அவரே பொருள் மற்றும் அவரே உணர்வு என்பதும், அவ்விரண்டும் ஒன்றைவிட்டு ஒன்று தனித்திருக்க இயலாதென்பதும், அவைகள் ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன என்பதும் தெரிகிறது.

"கதியாய் விதியாய்": இறைவன் மோட்சமாகவும், அதனை அடைந்திடும் மார்க்கமாகவும் வருகிறார். அவரே முக்தி நிலை; அவரே வேதங்கள், ஆகமங்கள் போன்றவைகளில் கூறப்பட்டிருக்கும் (தர்மங்கள்) விதிகள். அதாவது ஒருவன் முக்தி பெறுவதற்கு கடைப்பிடிக்கப்பட வேண்டிய செயல்கள். தர்மத்தின் விதிகள் வழிமுறையாகும், மோட்சம் இலக்காகும். தர்மம் (நீதி) மோட்சத்திற்கு

அழைத்துச் செல்லும் சாதனம்; ஒரு செயல் அல்லது நடத்தை விதி தர்மமா இல்லையா, நீதியா இல்லையா என்பதை தீர்மானிக்கும் காரணி மோட்சமாகும். இவைகளிரண்டும் ஒன்றையொன்று தீர்மானிக்கிறதென்றாலும், இரண்டும் ஒன்றல்ல, வேறுவேறானவை. ஆனால், ஒரு ஜீவன்முக்தருக்கு, இரண்டுமே இறைவன்தான்; அவரே இரண்டாகவும் வருகிறார். இவ்வாறாக, இச்செய்யுளின் மூன்றாவது வரியில், 'பரஸ்பர சார்பு மற்றும் பரஸ்பர தீர்மானம்' வகையான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன, இவைகள் முன்பு கூறப்பட்ட வகைகளைவிட இன்னும் மேம்பட்ட ஒன்று, இவ்வகைதான் மனித அநுபவங்களிலேயே மிக உயர்ந்த ஒன்று.

ஆக, நாம் மூன்று கருத்துக்களைப் பார்த்தோம். முதல் வரி: பரஸ்பர விலக்கல் மற்றும் முரண்பாடு; இரண்டாவது வரி: விஷயம் (பொருள்கள்), அதன் குணம் (தரம்); மூன்றாவது வரி: பரஸ்பர சார்பு மற்றும் பரஸ்பர தீர்மானம்; மனித சிந்தனை மற்றும் புரிந்துணர்வின் வளர்ச்சியில் இம்முன்று கருத்துகளும் கிரமமாக எழுகின்றன. அனைத்து விதமான மனித அநுபவங்களும் இம்மூன்று வகைகளில் அடங்கிவிடுகின்றன, மேலும் ஒவ்வொரு வகையும், அவ்வகைகள் ஒவ்வொன்றும் ஒரே மாதிரியானவை அல்ல என்பதைக் காட்டுவதற்காக, இரட்டையாகவே தொகுக்கப்பட்டுள்ளன. எனவே, மனிதர்களாகிய நமக்கு, இறைவன் இரட்டையில் ஏதேனும் ஒன்றாக (இது அல்லது அதுவாக) வரலாம், ஏனெனில் நாம் வரைப்படுத்திக்கொண்ட, தனித்தன்மை கொண்ட ஜீவாத்மா. அது இடம்-காலம்சார் செயல்பாட்டில் சிக்கிக் கொண்டுள்ளது. அது ஒரு தனித்துவமான உடல்-மனதுக்குள் தன்னைத்தானே வரையறை செய்து (மட்டுப்படுத்திக்) கொண்டதனால், அதற்கு 'உள்ளே' மற்றும் 'வெளியே' என்ற கருத்துக்கள் உள்ளன. மேலும், அது புலன்களின் மூலம் வெளிச்செல்வதால், அதன் உணரும் சக்தியும் அதற்கிணங்க குறைந்துபோய், பார்ப்பது, கேட்பது, உணருவது என்ற ஒருசில வகைகளாக மேலும் கட்டுப்படுத்தப்பட்டு விடுகிறது, அப்படி தன்னை மட்டுப்படுத்திக் கொண்ட ஜீவாத்மாவிற்கு உருவம்-அருவம், மலர்-மணம், உடல்-உயிர் ஆகிய கருத்துகள் எழுகின்றன. ஆனால், முக்தி பெற்ற ஒருவரோ தன்னை இடம்-காலம்சார் கட்டுப்பாடுகளிலிருந்து விடுவித்துக் கொண்டு, ஒரே சமயத்தில் அனைத்துமாயிருக்கும் இறைவனோடு ஐக்கியப்படுத்திக் கொண்டுவிட்டார். இப்படியாக அனைத்துடனும் தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்ட மகாத்மாவிற்கு, உள்ளே என்றும், வெளியே என்றும், உருவம்-அருவம் என்றும் சொல்வதற்கு எதுவும் இருப்பதில்லை; இறைவன் அனைத்தாகவும் இருக்கிறார், மேலும் அவரே அனைத்தாகவும் வருகிறார், *ஒன்றன்பின்*

ஒன்றாக அல்ல, ஒரே சமயத்தில். இது இறைவனை, அதாவது தன்னை, அனைத்திலும் அனைத்துமாகவும் ஒரேசமயத்தில் அநுபவிப்பதாகும். அப்படிப்பட்ட ஒரு அநுபவத்தைப் பற்றிய கணநேரப்பார்வை இச்செய்யுளில் நமக்குத் தரப்படுகிறது. கண்ணுக்குத் தெரியும் எந்த உருவமும்/வடிவமும் இறைவன்தான்; கண்ணுக்குப் புலனாகாததும் உருவங்களற்றவைகளும் இறைவன்தான். எது உள்ளதோ, அது இறைவனே; எது இல்லையோ அதுவும் இறைவனே. மலரும் இறைவன், அதன் மணமும் இறைவன். ரத்தினம் மற்றும் அதன் ஒளிப்பிரகாசம் இறைவனே (அனைத்து பொருள்களும், அவைகளின் குணங்களும்); உடல் மற்றும் உயிர் (மொத்த பிரபஞ்சமும், அதன் உயிரான ஈஸ்வரன்); தர்மம் மற்றும் மோட்சம் (வழிமுறையும், இலக்கும்); அனைத்தும் இறைவனே. ஒரே சமயத்தில் அவர் அனைத்துமாக வருகிறார், அனைத்துமாக அநுபவிக்கப் படுகிறார். ஜீவன்முக்தனின் இத்தகைய அநுபவத்தை நம்மால் கற்பனை செய்யவாவது முடியுமா? அதை சிந்தித்தாலே, திணறச் செய்கிறது. இந்த மகோன்னதமான தெய்வீக அநுபவத்தை ஒரு கணநேரம் தியானித்தாலே, அது நம்மை ஒரு பரவசமான சுகத்தில் ஆழ்த்தும்.

இப்பொழுது, அருணகிரியார் செய்யுளின் நான்காவது வரியில் "இறைவன் குருவாக வருகிறார்" என்கிறார். முதல் மூன்று வரிகளில் உபயோகித்த இரட்டை கருத்துக்களை விடுத்து, மிக விசித்திரமாக, இந்த நான்காவது வரியில் ஒரு கருத்தை மட்டுமே வைக்கிறார், ஏனெனில் குரு இறைவனே (செய்யுள்-13) என்பதாலும், மற்ற எல்லாவகைக் கருத்துகளும் குருவிடம் ஐக்கியமாகி விடுகின்றன என்பதாலும் இவ்வாறு சொல்கிறார். இதைப்பற்றி *"குரு கீதை"* பின்வருமாறு சொல்கிறது: "அசையும் மற்றும் அசையா நிலையிலுள்ள பிரம்மாண்டமான இப்பிரபஞ்சம், மற்றும் அதிலுள்ள நகராத மற்றும் நகரும் உயிரினம் அனைத்தையும் வியாபித்து, **"நீ"** (*Twam* -- Thou) என்ற சொல்லின் உண்மையான அர்த்தத்தை நமக்குக் காட்டித்தரும் அந்த குருவிற்கு நமஸ்காரங்கள். அசையும் மற்றும் அசையா பிரபஞ்சத்தை பிரிக்கப்படாத முடிவற்ற வடிவில் வியாபித்து, **"அது"** (*Tat* -- That) என்ற சொல்லின் உண்மையான அர்த்தத்தை நமக்குக் காட்டித்தரும் அந்த குருவிற்கு நமஸ்காரங்கள். மூன்று உலகங்கள் மற்றும் அவைகளிலிருக்கும் அசையும் மற்றும் அசையா நிவாசிகளையும், தன் சைதன்யமயத் தன்மையால் வியாபித்து, **"இருக்கிறாய்"** (*Asi* - Art) என்ற சொல்லின் {(**"அதுவே நீ**" -- "Thou Art That" --- *"Tat Twam Asi")* என்ற மகாவாக்கியத்தில் உள்ள சொல்லின்} உண்மையான அர்த்தத்தை நமக்குக் காட்டித்தரும் அந்த குருவிற்கு

நமஸ்காரங்கள். நாத, பிந்து, கலா ஆகியவற்றிற்கு அப்பாலும், தூய உணர்வாகவும், நித்தியமாகவும், அமைதியுடனும், வெளிக்கு (தேசம் --- இடம்) அப்பாலும், களங்கப்படாமலும் இருக்கும் அந்த குருவிற்கு நமஸ்காரங்கள். குருவே பிரம்ம தேவர் (சிருஷ்டி கர்த்தா); குருவே விஷ்ணு; குருவே சிவனார்; குருவே பரம்பொருள், அவரே பரபிரம்மமும் ஆவார். அந்த குருவிற்கு நமஸ்காரங்கள்."

எனவே, நான்காம் வரியில், "குரு" என்று சொல்லும்போது, அருணகிரியார் முதல் மூன்று வரிகளிலும் எதையெல்லாம் குறிப்பிட்டாரோ, அவையனைத்தும் ஒருசேர அமைந்தவர் இந்த குரு என்கிறார். ஆக, **"குருவாய் வருவாய் அருள்வாய் குகனே"** --- "குருவாக வருகின்ற ஓ குகப் பெருமானே! உனது கிருபையை அருள்வாயாக" --- இந்த வாக்கியமே பரிபூரணமானது என்றும் அது இச்செய்யுள் முழுவதற்குமே சமமானது என்றும் கருதப்படுகிறது. {இங்கு, "வருவாய் குகனே" என்பது "வருகின்ற குகனே" என்ற அர்த்தத்தில் எடுத்துக் கொள்ளப்படுகிறது --- வினையால் அணையும் பெயர்}.

இந்த கடைசி வரிக்கு, இவ்வாறும் அர்த்தம் கொள்ளலாம்: "ஓ குகப் பெருமானே! நீவிர் (எனக்குக்) குருவாக வந்து அருள்வீராக." இக்காரணங்களால், இவ்வரி ஒரு மந்திரமாக கருதப்படுகிறது. மேலும், இது மந்திரம்போல் ஜபிக்கப்பட்டும், மனப்பாடமாக ஒதப்பட்டும், அன்பு-உணர்வுடன் (பக்தி-'பா'வத்துடன்) பாடப்பட்டும் வருகின்றது. அவ்வாறு செய்பவருக்கும், மற்றவர்களுக்கும் அனைத்துவகையான நற்பயன்களையும் தருகின்றது.

"கந்தர் அநுபூதி" நூலின் முதல் செய்யுள் ஒரு மந்திரத்துடன் துவங்கியது --- **"ஆடும்பரி வேல் அணிசேவல்"** - அதாவது, 'வேலும் மயிலும் துணை' --- "வேல் மயில் ஆகிய இரண்டும் என்னைப் பாதுகாக்கும்." இந்நூலின் கடைசிச் செய்யுளும் **"குருவாய் வருவாய் அருள்வாய் குகனே"** என்ற மந்திரத்துடன் முடிகிறது. ஆக, இந்நூல் மந்திரத்தோடு துவங்கி மந்திரத்தோடு முடிகிறது; நடுவில் மற்ற செய்யுள்களிலும் பல மந்திரங்கள் உள்ளன. எனவே, "கந்தர் அநுபூதி" நூல் 'மந்திர சாஸ்திரம்' --- மந்திரங்கள் அடங்கிய ஒரு தத்துவ நூல் அல்லது கிரந்தம், என்று உயர்வாகப் போற்றி புகழப்படுகிறது. இதை முறையாகவும் சிரத்தையுடனும் தினசரி ஓதும் பக்தர்களுக்கு அவர்கள் வேண்டும் நலன்களைத் தரவல்லது.

இச்செய்யுளில், இறைவன் "குகன்" என்று விளிக்கப்படுகிறார். குகன் என்றால் "இதயக் குகையில் உறைபவன்/ஒளிர்பவன்" என்று

அர்த்தம். "கந்தர்" என்ற பெயரை இந்நூலின் (**"கந்தர் அநுபூதி**"யின்) தலைப்பில் உபயோகப்படுத்தத் தேர்ந்தெடுத்த அருணகிரியார், இச்செய்யுளில் உபயோகப்படுத்த 'குகன்' என்ற பெயரை தேர்ந்தெடுத்ததில் ஒரு மகத்தான விசேஷம் இருக்கிறது. அது என்ன? கந்தர் அநுபூதி நூல் முழுவதிலுமே, இறைவன் உறையும் இடங்களில், வெளிப்படையாக "நாகாசல(ம்)" (திருச்செங்கோடு) என்ற ஊர் மட்டுமே கூறப்பட்டுள்ளது (செய்யுள்-11). இதற்குக் காரணம் இதுவாக இருக்கலாம்: இக்கோவிலில் அருணகிரியார் "நான் எங்கிருந்தாலும், உன்னை 'கந்தா' என்று அழைத்தால், உடனே நீ அங்குத் தோன்றி, எனக்கு தரிசனம் தரவேண்டும்." என்று பிரத்யேகமாக பிரார்த்தித்து வேண்டியதற்கிணங்க, அங்குள்ள கந்தப் பெருமான் அவருக்கு அந்த வரம் தந்து அருளினார். இத்தகைய வரம் தந்த பெருமானுக்கு நன்றி செலுத்தும் விதமாகவே, 'கந்தர்' என்ற பெயரை இந்த தத்துவ நூலாகிய "கந்தர் அநுபூதி"யில் மட்டுமன்றி, தனது மற்றுமிரண்டு நூல்களிலும் ("கந்தர் அலங்காரம்", "கந்தர் அந்தாதி") அப்பெயரையே உபயோகித்துள்ளார். ஆனால், இக்கடைசிச் செய்யுளில், அதன் கடைசி வார்த்தையாக, வேண்டுமென்றே அவர் 'குகன்' என்ற பெயரை தேர்ந்தெடுத்து இடம்பெறச் செய்துள்ளார்; ஏனெனில், இச்செய்யுள் '**சகஜ அவஸ்தை**'யை விவரிக்கிறது; 'குகன்' என்ற பெயரே இங்கு பயன்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமான பெயர்.

யஜுர் வேதத்திலுள்ள 'நாராயண சூக்தம்' என்ற மந்திரத்தில் பரம்பொருள் பற்றிய மகத்தான வர்ணனை பின்வருமாறு வருகிறது: "பரமாத்மாவுடன் அபேதமாக இருக்கும் மொத்த பிரபஞ்சத்திற்கும் அப்பரமாத்மா ஆதாரமாய் இருக்கிறார். அவருக்கு ஆயிரம் கண்கள் மற்றும் தலைகள், அதாவது அனைத்து கண்களும், தலைகளும் அவருடையதே. அவர் ஆனந்தத்தின் ஒரே உற்பத்தி ஸ்தானம். மனிதனில், அவனுக்கு ஆதரவாக, அவனுடைய அந்தராத்மாவாகி, அவன் உடலெங்கும் வியாபித்து, மற்றும் இவ்வுலகில் எதெதெல்லாம் பார்க்கப்படுகிறதோ (அ) கேட்கப்படுகிறதோ (அருகிலோ-தூரத்திலோ, ஸ்தூலமாகவோ-சூட்சுமமாகவோ) அவைகளில் எல்லாம் உள்ளேயும் வெளியேயும் வியாபித்து உள்ளார். அவர் எல்லையற்ற ஆத்மா; உண்மையாக தியானிப்பவரும், தியானமும் அவரே; அவரே அடையவேண்டிய இலக்கும். அவர்மேல் தியானம் செய்யப்பட வேண்டும். அவர்மேல் தியானிக்க உகந்த இடம் இதயக் குகையிலிருக்கும் ஆகாசம். இதயமே இப்பிரபஞ்சத்தின் பெரிய இருப்பிடம். இதயத்தின் நடுவில், ஒரு **தீ ஜ்வாலை** உள்ளது; அத்தீயின் நடுவில், ஜொலிக்கும் தங்கத்தைப்போல் நிறமுள்ள,

மின்னலைப் போல் மினுமினுத்துக் கொண்டிருக்கும் ஒரு **தீச்சுடர்** உள்ளது. பரம்பொருளான பரமாத்மா அத்தீச்சுடரின் நடுவில் உறைகிறார். அவரே படைப்புக் கடவுளான பிரம்மா, அவரே சிவன், அவரே விஷ்ணு, அவரே இந்திரன், அவரே பிரபஞ்சத்தின் உபாதான காரணம் (Material-cause) மற்றும் நிமித்த (efficient-cause) காரணம். அவரே உயரிய சுயம்-பிரகாச தூய-உணர்வு."

அருணகிரியார், அப்பரம்பொருளான பரமாத்மாவையே "குகன்" என்கிறார் ---- இதயக் குகையில் உறைபவர்/ஒளிர்பவர், அனைத்துமாக இருப்பவர், அனைத்துமாக வருபவர், குருவாகவும் வருபவர். நாம் மேலே பார்த்த *நாராயண சூக்த* மந்திரங்களின் சாரத்தை கந்தர் அநுபூதியின் இவ்வொரு செய்யுளிலேயே எவ்வளவு அழகாக அருட்செல்வர் தந்துள்ளார் பார்த்தீர்களா! ஆனந்த-உணர்வுக் கடலில் திளைத்திருந்த முக்திபெற்ற மகாத்மாக்கள் அத்தெய்வீக உணர்வில் மெய்மறந்திருந்த நிலையில் பொங்கி வழிந்தவைதான் *நாராயண சூக்தம்* மற்றும் *கந்தர் அநுபூதி* கிரந்தங்கள். எனவே, *'சகஜ அவஸ்தை'யை* விவரிக்கும் இக்கடைசிச் செய்யுளுக்கு, அருணகிரியார் 'குகன்' என்ற பெருமானின் பெயரை பொருத்தமானதாக வேண்டுமென்றேதான் தேர்ந்தெடுத்திருக்கிறார்.

'குகன்' என்பது எங்கும் எல்லாமாகவும் விளங்கும் பரம்பொருள் உணர்வே. அவரே, முக்தியடைந்த மகாபுருஷர்கள் நிலைபெற்று இருக்கும் பரமாத்மா (பரபிரம்மம்). 'குகனே' ஜீவன்முக்தர்கள் மற்றும் பிரபஞ்சத்தின் ஆத்மாவாக இருப்பதால், அவரே அனைத்துமாக வருகிறார். இறைவனே அனைத்துமாக வருகிறார் எனும்போது அவர் கால-தேச வர்த்தமானத்திற்கு உட்பட்ட (movement in Time & Space) பௌதீகப் பொருள்களாக எங்கிருந்தோ வருகிறார் என்பதல்ல; ஆனால், "அநுபவத்தில் வருவதாக"த்தான் அர்த்தம். அதாவது, இருக்கும் அனைத்தும், இறைவனாக அநுபவத்திற்கு வருகிறது, இறைவனாக அனுபவிக்கப்படுகிறது. இறைவன்-வருவதென்பது (இறை-அநுபூதி) இதுதான். எனவே, இது பௌதீக வருகையல்ல, முற்றிலும் மற்றொரு வகையான வருகையாகும். ஏனெனில், இறைவன், ஒரு உருவம்கொண்ட பொருளாக ஜீவன் முக்தனிடம் வருகிறாரென்றால், அவர் வெளியிடத்தில் நகர்ந்து வரவேண்டும், ஆனால் வெளியிடம் வடிவமற்றது (அருவம்), அருவமும் அவர்தானே. எனவே, அருணகிரியார், இறைவன் இதுவாக, அதுவாக, அனைத்துமாக வருகிறார் என்று சொல்லும்போது, ஜீவன்முக்தரானவர் அனைத்தையும் இறைவனாக, தனது ஆத்மாவாக, குகனாக, அநுபவிக்கிறார் என்பதுதான் அதன் உட்பொருள்; ஏனெனில், அவர் பரமாத்மாவுடன் தன்னை அபேதமாக கண்டு கொண்டு, அனைத்தின்

ஆத்மாவாகவே ஆகி விடுகிறார். ஆகையால், அவர், தனது ஆத்மாவை அனைத்திலும், அனைத்தையும் தன் ஆத்மாவிலும் காண்கிறார் (அ) உணர்கிறார்; அவரே காண்பவனாகவும் காணப் படுவனவாகவும் இருக்கிறார்; அவர் இறைவனை அனைத்துமாகவும், அனைத்தையும் இறைவனாகவும் கண்டு அநுபவிக்கிறார். அருணகிரியார், இச்செய்யுளின் மூலம் சொல்ல விழையும் இறை-தரிசனம் (பகவத் தரிசனம் அல்லது ஆத்ம தரிசனம்) பற்றிய சாரம் இதுவே. ஒரு ஜீவன்முக்தர் தன்னுள்ளே பெறும் தெய்வீக அநுபவங்களை சொற்களால் வெளிப்படுத்தும் பல்வேறு வழிகள்தான் இவை, அந்த இறை-அநுபவங்களை மனித மொழியில் வெளிப்படுத்தும்பொழுது, இறைவன் 'உருவமாக', 'அருவமாக' என்றெல்லாம் வர்ணிக்கப்படுகிறார். அனைத்தும் ஒரே சமயத்தில் அநுபவிக்கப்படுகிறது என்பதை இது தெரிவிக்கிறது. இப்படியான *அபேத-தரிசனம்* (வித்தியாசமில்லாத சமக்காட்சி) இறை-அனுபூதியின், ஞானத்தின் அந்தம் --- *"அபேத தரிசனம் ஞானம்."* அத்தகைய ஞானி, இவ்வுலகில் 'நடமாடும் இறைவன்,' உலகமே உற்றுழி யுதவிக்காக இவரை நாடுகிறது, இவரிடம் அனைத்து உயிரினங்களும் ஆறுதல் பெறுகின்றன, பசியால் வாடும் குழந்தைகள் சோற்றுக்குத் தாயிடம் செல்வதுபோல் முக்தியடைய பசித்திருக்கும் (வேட்கை கொண்டிருக்கும்) சாதகர்களும் இவரைச் சூழ்கின்றனர். ஆனால் அபேத தரிசனத்தில் எப்பொழுதும் மூழ்கியிருக்கும் அவருக்கோ இவைகள் எதுவுமே எவ்வித வித்தியாசத்தையும் ஏற்படுத்துவது இல்லை. இதுவே ஜீவன்முக்தர்களின் *'சகஜ சமாதி அவஸ்தை'*, அவர்கள் அனைத்து உயிரினங்களின் நலம் மற்றும் மகிழ்ச்சிக்காகவே வாழ்கின்றனர்:

- **"சர்வபூத ஹிதே ரதா:"**- "(ஜீவன்முக்தர்கள்) எல்லா உயிர்களின் நன்மையில் உள்ளம் மகிழ்பவர்கள்." (பகவத்கீதை: 5.25)

- **"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே"** ---- அருட்செல்வர் தாயுமானவர்.

- **"சர்வே பவந்து சுகின:"** --- 'அனைத்து உயிர்களும் சுகமாக இருக்கட்டும்' --- வேதம்.

அனைத்து உயிர்களின் நலத்தை நோக்கமாகக் கொண்ட ஜீவன் முக்தர்களின் *"சகஜ அவஸ்தை"* இது. ஸ்ரீ சுவாமி சிவானந்த மகராஜ் இத்தகைய சகஜ அவஸ்தையில் *("சர்வபூத ஹிதே ரதா:"* என்று) ஜீவித்தவர்களில் ஒருவர். அவர் தனது சுருக்கமான சுயசரிதையான *"சிவானந்த கீதை"* என்ற நூலில் தனது வாழ்வின் இலக்காகக் கூறுவதைப் பார்ப்போம்:

• **என் கொள்கைகள்:** "(வாழ்க்கையின் இலக்கிலிருந்து) விழுந்தவர்களைத் தூக்கிவிடுவது, வழி தெரியாமல் தவிப்பவர்-களுக்கு வழிகாட்டுவது, என்னிடமுள்ளவற்றை பிறருடன் பகிர்ந்து கொள்வது, அல்லல் படுபவர்களுக்கு ஆறுதல் தருவது, கஷ்டத்திலும் துன்பத்திலும் உள்ளவர்கள் நலம்பெற உற்சாகமூட்டுவது,"

• **என் நோக்கங்கள்:** "இறைவன்மீது பூரணமான நம்பிக்கை கொள்வது, எனது அண்டை வீட்டார்களை எனது உயிர்போல் போற்றி அன்பு செலுத்துதல், இறைவனை இதயபூர்வமாக முழுமனதுடன் நேசித்தல்; பசுக்கள், விலங்குகள், பெண்கள், குழந்தைகள் ஆகியவர்களைப் பாதுகாத்தல்."

• **என் சுலோகம்/ சங்கேத வாக்கியம்:** "அன்பு".

• **<u>என் இலக்கு:</u>** ***<u>"சகஜ சமாதி அவஸ்தை</u>*** (இயற்கையான மற்றும் தொடர்ச்சியான பேருணர்வு நிலை)".

(சுவாமி சிவானந்த மகராஜ் அவர்கள் இவ்வாறாக எளிய முறையில் தான் *உண்மையில் எப்படி இருந்தார், என்ன செய்தார்* என்பதை மறைமுகமாக விளக்குகிறார்.)

இறைவன் ஸச்சிதானந்த சொரூபம், அகண்ட ஸத்-சித்-ஆனந்தக் கடல். கடல், நீரைத் தவிர வேறொன்றுமில்லை; இறைவனும் உணர்வைத் (சைதன்யத்தைத்) தவிர வேறொன்று-மில்லை. *"பிரக்ஞானம் பிரம்ம"* --- தூய உணர்வே பிரம்மம் என்கிறது உபநிஷத்துகள். ஆழத்தில் அமைதியாய் இருந்தாலும் சரி, மேற்பரப்பில் அலைகளால் விளாசப்பட்டுக் கொண்டு இருந்தாலும் சரி, கடல், நீர்தான். அதேபோல், ஜீவன்முக்தர் ஸச்சிதானந்தம்-தான், --- *'பேசா அநுபூதி'* நிலையில் அமிழ்ந்திருந்தாலும் சரி (செய்யுள்-43) அல்லது இப்பரந்து விரிந்த சிருஷ்டியாக *சகஜ அவஸ்தை* நிலையிலிருந்தாலும் சரி. கடலில், நீர் அலைகள் ஒன்றுக்கொன்று மோதிக் கொண்டு, ஒன்றுடனொன்று கலந்து, நீராகவே மிஞ்சுகிறது; ஸச்சிதானந்தக் கடலில், உணர்வானது பொருள்களுருவத்தில் உருண்டு புரண்டு, ஒன்றுடன் ஒன்று மோதி, இறுதியில் உணர்வாகவே மிஞ்சுகிறது. இதுவே ஒரு ஜீவன்முக்த ஞானி அநுபவிக்கும் *சகஜ சமாதி அவஸ்தை* (இயற்கையான மற்றும் தொடர்ச்சியான பேருணர்வு நிலை).

செய்யுள் 43ல், அருணகிரியார், *"பேசா அநுபூதி"* நிலையை விவரித்தார். அதில், தோன்றும் உலகம் முழுவதும் புறக்கணிக்கப்-பட்டு, சாதகன் பேச்சற்ற-அநுபவத்தில் (மகா மௌனத்தில்) அமிழ்ந்து விடுகிறான். ஆனால், அவ்வநுபவத்திலிருந்து வெளிப்பட்ட பின்னர்,

அவன் *'லோக சங்கரஹ'* செயல்கள் செய்வதற்காக "இந்த நம் உலகத்தில்" சஞ்சரிக்கும்பொழுது, அவன் என்ன அநுபவிக்கிறான்? அவனுக்கு, நாம் காணும் உலகம் இல்லாமல் போகிறது. அது இறைவன்மயமாக மாறிவிடுகிறது. ஸச்சிதானந்த ஆத்மாவே, இந்த எல்லா நாம-ரூபங்களாகவும், அனைத்து பொருள்கள் மற்றும் அவைகளின் குணங்களாகவும், ஸ்தூல- சூட்சும- காரண லோகங்களாகவும், --- சுருங்கக் கூறின், எல்லாமாகவும் நடன-மாடுகின்றது. எதையெல்லாம் புலன்கள் உணர்கின்றனவோ, மனது நினைக்கின்றதோ, (அ) புத்தி அறிந்து கொள்கின்றதோ, அவையனைத்தும் ஸச்சிதானந்தமே; ஏனெனில், இறை-உணர்வெனும் மந்திரக் கோலினால் தொடப்பட்டு அவைகள் அனைத்தும் மாற்றப்பட்டு விடுகின்றன. உணர்வு உணர்வைக் கண்ணுறுகிறது; இறைவன் இறைவனைக் கண்ணுறுகிறான்; மனிதன் இல்லை, உலகம் இல்லை; பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருப்பவர் இறைவன், இறைவன் மட்டுமே. என்னே மகத்தான அநுபவம்! இந்த *சகஜ அவஸ்தை* அநுபவத்தை நாம் எவ்வளவுதான் விவரிக்க முயன்றாலும், அது போதவே போதாது. அந்த முயற்சி திருப்தியற்றதாகவே (சப்பென்றுதான்) இருக்கும். ஏனெனில், அது விவரிக்கக்கூடிய ஒன்று அல்ல, அநுபவிக்கப்பட வேண்டிய ஒன்று.

எவ்வளவுதான் ஒருவன் சூரியனின் மகிமை மற்றும் சக்தியைப் பற்றி எழுதினாலும், படித்தாலும், கேட்டாலும், அவன் திறந்த வெளியில் சென்று தன்னை சூரியனுக்கு வெளிப்படுத்திக்கொண்டு, வெயிலில் குளித்தால் ஒழிய, அவனால் சூரியனின் ஒளி, சக்தி மற்றும் கதகதப்பை உணரவோ, அநுபவிக்கவோ இயலாது. அதேபோலவே, ஆன்மீக சூரியன் போன்ற ஜீவன்முக்தர்கள் மற்றும் அருட்செல்வர்களின் மகிமை மற்றும் *சகஜ அவஸ்தை* அநுபவம் பற்றி எவ்வளவுதான் ஒருவன் படித்தாலும், கேட்டாலும், அவர்களைப் பற்றிய ஒரு தெளிவான கருத்தைப் பெற முடியாது. அவ்வாறு பெற்றிட வேண்டுமானால், அவர்களுடன் (அ) அவர்கள் முன்னிலையில் நாம் வாழ வேண்டும், அது மிகக் குறைந்த காலத்திற்காக இருந்தாலும் சரி (அதுவே உண்மையான ஸத்-சங்கமாகும்). நாம் அவர்கள் முன் அமர்ந்து நமது உள்ளத்தைத் திறக்க வேண்டும். அவ்வாறு செய்தால்தான், நம்மால் அவர்களுடைய சக்தி, மகிமை, செல்வாக்கு ஆகியவைகளை அறியவும் அநுபவிக்கவும் முடியும்; --- அவர்கள் என்னவாக இருக்கிறார்கள், எப்படி வாழ்கிறார்கள், என்ன செய்கிறார்கள், அவர்கள் நடவடிக்கைகள் எப்படி இருக்கின்றன, அவர்கள் எப்படி மனித சமூகத்திற்கு பயன்படுகிறார்கள்: --- *சகஜ அவஸ்தை* என்பது என்ன

என்று சிந்திப்பதன்மூலம், அவர்களின் எண்ண-அலைகள், சக்தி மற்றும் கிருபை, நம்மையறியாமலேயே நம்முள் புகுந்து, நம்மை உரிய முறையில் உருவாக்கும். இதற்கே ஸத்-சங்கம் என்று பெயர். ஸத்-சங்கத்தின் மகிமை அபாரமானது.. இத்தகைய வாய்ப்பினை அளித்திடவே, நமது பாரத தேசத்தில் எப்பொழுதும் இடைவிடாது ஞானிகள், மகான்கள் வாழ்ந்துகொண்டே இருக்கின்றனர். எந்த ஒரு காலகட்டத்திலும் அவர்கள் இல்லாமல் போவதில்லை. அவர்கள் முற்காலத்தில் இருந்திருக்கிறார்கள், இப்பொழுதும் இருக்கிறார்கள், எதிர்காலத்திலும் இருப்பார்கள் என்பது உறுதி. ஜீவன்முக்தர்கள், ஞானிகள், அருட்செல்வர்கள், முனிவர்களின் மகிமையே மகிமை!

இத்தருணத்தில் நாம் மற்றொரு சுவாரசியமான விஷயத்தைப் பற்றி பார்ப்போமா. சிலர் இந்நூலின் 43வது பாடல்வரைதான் அருணகிரியார் இயற்றினார் என்கின்றனர், ஏனெனில் அப்பாடலின் முடிவில் "பேசா அநுபூதி பிறந்ததுவே" (பேச்சற்ற அநுபவம் பிறந்துவிட்டது) என்று அவர் கூறுவதால்; அதற்கு பின்னர் வரும் 8 செய்யுள்களும் வேறு யாரோ ஒருவரால் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் சொல்கின்றனர். ஆனால், மற்றும் சிலர் 51 செய்யுள்களுமே அருணகிரியாரால் சுயமாக இயற்றப்பட்டதுதான்; அனைத்து செய்யுள்களுமே அவரின் அபூர்வமான படைப்பு என்கின்றனர். நம்முடைய இந்த ஆய்விலிருந்து, கந்தர் அநுபூதி நூலின் 51 செய்யுள்களுமே அருணகிரியாரால்தான் இயற்றப்பட்டன என்றும், மேலும், கடைசி 8 செய்யுள்கள் உண்மையில் பாலேடு போன்று மிகவும் சிறந்த மற்றும் சாரமான பகுதியாக அமைந்துள்ளது என்றும் நாம் திடமாக முடிவுக்கு வர முடியும். ஏனெனில், இத்தகையதொரு ஆற்றல்மிக்க, பொதிந்த, உயரிய ஆன்மீக மற்றும் ஆழ்ந்த எண்ணங்கள் கொண்ட செய்யுள்களை அருணகிரியாரைத் தவிர வேறு ஒருவராலும் இயற்றி இருக்க முடியாது என்று எந்தவித தயக்கமும் கொள்ளாமல் உறுதியாக நம்மால் கூற இயலும். வேதாந்த சாதனைகளின் சாரம், மற்றும் உயர்நிலை தியானத்தை செவ்வனே செய்திடுவதற்கான பற்பல சூசகமான உத்திகளை தன்னகத்தே கொண்ட முத்தாய்ப்பாக அமைந்துள்ள இக்கடைசிச் செய்யுள்களை அருணகிரியாரால் மட்டுமே இயற்றியிருக்க முடியும் என்றே நாம் கூறலாம். மேலும், செய்யுள்கள் 43 மற்றும் 44க்கான நமது விளக்கத்தில், பேசா அநுபூதி நிலையை அடைந்த ஒருவன் (செய்யுள்-43) அதிலேயே ஆழ்ந்து, அதிலிருந்து வெளியே வராமல் இருப்பதென்பது மிகமிக அரிது என்றும் பார்த்தோம். மறுபுறம், அவ்வாறு பேசா-அநுபூதி நிலைக்குச் சென்றவர்கள் பொதுவாக அதிலிருந்து வெளிப்பட்டு,

ஜீவன்முக்தர்களாக நடமாடிக் கொண்டு, சாதகர்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருப்பதை நாம் இப்போதும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். அவர்கள், தங்களுடைய சமாதி அனுபவத்தையும் அதை மற்றவர்கள் அடைவதற்கான வழிகளையும் தங்களுடைய நூல்களில் விளக்கிக் கூறியிருக்கின்றனர். இல்லையேல், அளவிடற்கரிய ஆன்மீக, ஞான நூல் பொக்கிஷங்கள் எப்படி நமக்கு இப்பொழுது கிடைத்திருக்க முடியும்? அருணகிரியார் மற்றும் அவரைப் போன்ற பல மகான்கள் அநுபூதி பெற்றபின், சமாதியிலேயே இருந்திருந்தால், இத்தகைய தெய்வீக நூல்களை இயற்றித் தராமல் இருந்திருந்தால், நமது நிலை எவ்வளவு பரிதாபகரமாக இருந்திருக்கும்! சிந்திக்கவே பயமாய் இருக்கிறது. அருணகிரியார் கந்தர்-அநுபூதி பெற்றபின்னரே "கந்தர் அநுபூதி" நூலை இயற்றியிருக்கிறார், என்று தாயுமானவ சுவாமிகள் கூறியிருக்கிறார். அவர் அச்சமாதிநிலையிலிருந்து வெளிவராமலே இருந்திருந்தால் நமக்கு இந்நூல் எப்படி கிடைத்திருக்கும்? எனவே, 43ம் செய்யுளில் பேசா அநுபூதி பிறந்தது என்று கூறப்பட்டுள்ளதால் அதோடு இந்நூல் முடிந்து விட்டதென்று சொல்வது சரியானதாக இருக்க முடியாது.

பேருணர்வில் முழுவதுமாக மூழ்கியிருக்கும் சமாதி நிலைதான் இறை-அநுபூதியின் முடிவான உச்சநிலை என்று சொல்லுவதற்கில்லை. *சகஜ சமாதி* எனப்படும் இயல்பாகவும் மற்றும் தொடர்ச்சியாகவும் ஒருவன் பேருணர்வு நிலையிலேயே இருந்து, மக்களின் சேவையில் ஈடுபட்டிருப்பதுவே உண்மையில் இறை-அநுபூதியின் உச்சநிலை என்று சுவாமி சிவானந்த மகராஜ் கூறியதை நாம் பார்த்தோம். அவர் *சகஜ சமாதி* நிலையில் இருந்துகொண்டு சாதகர்களுக்கும் உலகத்திற்கும் சேவை செய்துகொண்டு இருந்தார். சமாதி நிலையில் (பேசா-அநுபூதி நிலையில்) இருக்கும்போது, முக்தரான ஒருவர் இறைவனுடன் *ஒன்றுகூடிய செயலற்ற நிலையில்* (static identity), அபேதத்தில் ஆழ்ந்து இருக்கிறார்; சமாதியிலிருந்து வெளிவந்த பின்னர், அனைத்திலும் அனைத்துமாய் இறைவனைக் கண்டு, இறைவனுடன் *ஒன்றுகூடிய செயலாற்றும்* நிலையில் (dynamic identity) சேவை செய்கிறார். கந்தர் (அ) ஸ்கந்த (இறைவன்தான்) அனைத்துப் பொருள்களும். எனவே, கந்தர் அநுபூதி அல்லது இறை-அநுபவம் என்றால் அனைத்தையும் இறைவனாகவும், இறைவனை அனைத்தாகவும் அநுபவிப்பதாகும். இதுவே *சகஜ சமாதி,* இதுதான் இந்த செய்யுள் சொல்லும் கருத்து.

சுவாமி சிவானந்த மகராஜ் 1950ம் வருடம் இரண்டு மாதங்களுக்கு இந்தியா மற்றும் ஸ்ரீலங்கா முழுவதும், வெகுஜனங்களை தட்டி எழுப்பிடவும், தான் அனுபவிக்கும்

ஆனந்தத்தை அனைவரோடும் பகிர்ந்து கொள்வதற்காகவும் ஒரு யாத்திரை மேற்கொண்டார். அந்த யாத்திரையை நிறைவுசெய்து ரிஷிகேசத்திலிருக்கும் தன்னுடைய ஆஸ்ரமத்துக்குத் திரும்பிய-வுடன், தனது யாத்திரை அநுபவங்களைப் பற்றி அவர், "இந்த யாத்திரையில், இறைவன் தனது *விராட ரூபத்தில்* ---- பக்த கோடிகளாக ---- காட்சி தந்தார். தெய்வீக வாழ்க்கையின் கோட்பாடுகளைத் தெரிந்து கொள்ளும் ஆர்வத்துடன் அவர்கள் வந்தனர். அங்கே ஒவ்வொரு மையத்திலும், இறைவனே என்மூலம் பேசினாரென்றும், அவரே தனது விராட ரூபத்தில் பக்த கோடிகளாக வந்து அந்த பேச்சைக் கேட்டனரென்றும் உணர்ந்தேன். அவர் என்னுடன் சேர்ந்து பாடினார், என்னுடன் சேர்ந்து பிரார்த்தனை செய்தார்; அவர் பேசினார், அவர் கேட்கவும் செய்தார். *'சர்வம் கல்விதம் பிரம்ம'* --- 'அனைத்தும் உண்மையில் இறைவனே.'" என்று கூறினார். இதுவே *சகஜ சமாதி*.

நிச்சயமாக, சமாதி மற்றும் சகஜ சமாதி --- முறையே *செயலற்ற அபேத நிலை* (static identity), மற்றும் *செயலாற்றும் அபேத நிலை* (dynamic identity) --- என்பதெல்லாம் நமது நிலைப்பாட்டிலிருந்து மட்டுமே, ஜீவன்முக்தருக்கு இந்த பாகுபாடு அல்லது வித்தியாசம் அர்த்தமற்றது, ஏனெனில் அவர் சதாசர்வகாலமும் இறைவனுடன் அபேதமாய் இருக்கிறார். ஆனால், நாம் அவர்கள் "தியானத்தில் ஆழ்ந்திருப்பதை", அல்லது "இயங்குவதை, நடமாடுவதை" பார்ப்பதால்தான், நாம்தான் "சமாதி நிலை" என்றும், "சகஜ சமாதி நிலை" என்றும் ----- *செயலற்ற நிலை* மற்றும் *செயலாற்றும் நிலை* ---- ஆகிய இரண்டாக அவர்களின் நிலையை பேதப் படுத்துகிறோம்; நம் வசதிக்காக அப்படிச் செய்கிறோம். அசையாத *(செயலற்ற)* அபேத நிலை, **"பேசா அநுபூதி"** என்றால், அசையும் *(செயலாற்றும்)* அபேத நிலையை நாம் **"நடமாடும் அநுபூதி"** என்று பெயரிடலாம். இந்த நிலையானது இச்செய்யுளில் மிகவும் அழகாக சித்தரிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரியான நிலையில் வாழும் அருட்பேறு பெற்றவர்கள் உண்மையில் உலகில் சஞ்சரிக்கும் இறைவன், "நடமாடும் தெய்வம்". அத்தகைய பெரும்பேறு பெற்றவர்களில் தனிரகமானவர் நம் அருட்செல்வர் அருணகிரியார். அவர் தன்னுடைய சுய அநுபவத்தை களிப்பூட்டும் ஆழ்ந்த ஆன்மீக உட்பொருளுடைய சொற்களால் இக்கடைசிச் செய்யுளில் வெளிப்படுத்தியிருப்பதைப்போல வேறு எவரால் செய்திட இயலும்!

இப்பொழுது, நாம் முழு செய்யுளையும் திரும்பவும் பார்ப்போமா: "ஓ சர்வவல்லமை பொருந்திய குகப் பெருமானே! ஓ பரம்பொருளே! உருவமுள்ளனவாயும், உருவமற்றனவாயும்; உள்ளனவாயும்,

இல்லாதனவாயும்; மலராகவும், அதன் நறுமணமாகவும்; ரத்தினமாகவும், அதன் ஒளியாகவும்; உடலாகவும் (பிரபஞ்சமாகவும்), உயிராகவும் (பிரபஞ்சத்தை வியாபித்து, அதற்கு உயிராகவும்); (நற்கதியாகிய) மோட்சமாகவும், (அதை அடைவதற்கான) நீதி நேர்மையின் விதிகளாகவும் நன்னெறியாகவும் (அதாவது, மார்க்கமாகவும், முடிவாகவும்); மற்றும் குருவாகவும் வருகின்ற குகப்பெருமானே! தங்கள் கிருபையை (அனைவருக்கும்) அருள் புரிவீராக." **(எல்லாமாயும் குருவாயும் வருகின்ற குகப்பெருமானே, தங்கள் கிருபையை எல்லோருக்கும் அருள் புரிவீராக.)**

"அருள்வாய்": "உனது கிருபையை அருள்வாய்" என்கிறார் அருணகிரியார். யாருக்கு அருள வேண்டும் என்று அவர் வேண்டுகிறார்? தனக்கு அருளுமாறு அவர் வேண்டவில்லை; "அனைவருக்கும் அருள்வாய்" என்றுதான் வேண்டுகிறார். ஏனெனில், அவரோ ஏற்கனவே ஜீவன்முக்தனாகி ஆனந்தக்கடலில் திளைக்கிறார். அந்நிலையில் உள்ளவருக்கு வேறு என்ன தேவை இருக்கிறது? அவர் சந்நிதியில் இருப்பதே மற்றவர்களுக்கு மிகப்பெரிய வரப்பிரசாதம். எனவே, அனைத்துமாகவும் குருவாகவும் வருகின்ற குகப் பெருமானிடம், அனைவருக்கும் குருவாக வந்து அருளுமாறு பிரார்த்தனை செய்வதாகக் கொள்வதே சரியாக இருக்கும். இறைவனால் அருளப்பட்டு தான் அநுபவித்துக் கொண்டிருக்கும் அப்பேரின்ப அநுபூதிநிலையை, மற்றவர்களுக்கும் தந்தருளுமாறு அவர் பெருமானைப் பிரார்த்திக்கிறார். இது அனைவருக்கும் அருள் புரியுமாறு செய்யப்படும் பொதுவான பிரார்த்தனை; ஆனால், இது ஒரு விசேஷ பிரார்த்தனையும்கூட. அதாவது, "மோட்சத்தை தரவல்ல இந்த "கந்தர் அநுபூதி" நூலை எவர் ஓதுகிறார்களோ, எவர் முறைப்படி படித்து, பாராயணம் மற்றும் ஸ்வாத்யாயம் செய்து, நன்றாகக் கற்று, புரிந்து கொண்டு, கற்றதை ஒரு சிறிதளவாவது நடைமுறைப் படுத்துகிறார்களோ, அவர்களுக் கெல்லாம் அருள் புரிவாய்," என்று பிரார்த்திக்கிறார்.

அனைத்தும் இறைவனே. அவரே அனைத்துமாய் வருகிறார். எனவே, அவர் அனைவருக்கும் அருளுமாறு வேண்டிக்கொள்ளப் படுகிறார். தான் பெற்ற அநுபூதி, இறை-அநுபவத்தோடு அருணகிரியார் திருப்தியோடு இருக்க முடியவில்லை. அனைவரும் அவ்வநுபூதி நிலையை அடைய வேண்டும் என்று அருட்செல்வர் விழைகிறார். சுவாமி சிவானந்தரும் அவ்வாறே விழைந்தார். சுவாமி சிவானந்தர் ஆழ்ந்த தியானத்தில் இருக்கும்போது, ஆத்மானுபூதி பெற்றார்; ஸ்ரீ கிருஷ்ண பகவான் தரிசனம் கொடுத்தார். அச்சமயத்தில் என்ன நடந்ததென்று அவர் சொல்கிறார்:

"நான், எனக்கு உள்ளிருந்து வரும் ஒரு குரலைக் கேட்டேன்: *'சிவா(னந்தா) (சமாதியிலிருந்து) எழுந்திரு, உனது வாழ்க்கை எனும் கோப்பையை இந்த அமிர்தத்தால் நிரப்பிக் கொள்; இதனை அனைவரோடும் பகிர்ந்து கொள். நான் உனக்குத் தேவையான பலம், ஆற்றல், சக்தி, ஞானம் ஆகியவற்றை தந்தருள்கிறேன்.'* என்று அந்தக்குரல் ஒலித்தது. நான் அவருடைய கட்டளைக்குப் பணிந்தேன். அவர் கோப்பையை நிறையச்செய்தார், நான் அனைவருடனும் அதைப் பகிர்ந்து கொண்டேன்."

சுவாமி சிவானந்த மகராஜ் அவரது அனைத்து நூல்களிலும் மற்றும் சொற்பொழிவுகளிலும் மிகவும் உறுதியுடன் ஒரு விஷயத்தை சிறிதும் சோர்வடையாமல் சொல்லி வந்தார், அதாவது: *"வாழ்க்கையின் இலட்சியம் இறைவனை அடைவது. அதை நீங்கள் இந்தப் பிறப்பிலேயே அடைந்திட வேண்டும்."* என்று சொல்லி வந்தார். அதன்பின், அவர் இவ்வாறு அடியார்களுக்கு ஆசி வழங்கி வாழ்த்துவார்: *"நீங்கள் அனைவரும் இப்பிறப்பிலேயே ஜீவன்முக்தர்களாக ஒளிர்வீர்களாக!"* அனைவரும் இறை-அநுபவம் பெற வேண்டுமென்பதில் அவர் பேரார்வம் கொண்டிருந்தார். அருணகிரியாரும் அதேபோல் பேரார்வம் கொண்டு, அழகிய செஞ்சொற்களால் மாலையாகப் புனையப்பட்ட **கந்தர் அநுபூதி** நூலை இயற்றியளித்தார் ----- ஒவ்வொருவரும் பக்திகொண்டு இதை ஓதி இறைவனுக்கு அணிவித்து, அதன் மூலம், தனக்கு இறைவனால் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்காக அளிக்கப்பட்ட இறை-அநுபூதியை அவர்களும் பெற்றிட வேண்டும் என்பதற்காக இந்த நூலை இயற்றி அருளினார்.

இந்த ஆய்வு நூலில், காப்புச் செய்யுளில் தொடங்கி இதுவரை நாம் பார்த்து வந்தது அனைத்தும், அருட்செல்வர் தாயுமானவர், இந்நூலை இயற்றிய அருணகிரியாருக்குச் செலுத்திய பின்வரும் ரத்தினச்சுருக்கமான அஞ்சலியின் பொருள்தான் என்றால் மிகையாகாது:

"கந்தர் அநுபூதி பெற்று கந்தர் அநுபூதி சொன்ன

எந்தை அருள் நாடி இருக்கும் நாள் என்னாளோ?"

{"கந்தப் பெருமானின் அநுபூதியை நேரடியாகப் பெற்று, (பின்னர்) 'கந்தர் அநுபூதி' நூலை அருளிய (நமக்குப் பரிசாக அளித்த), என் (ஆன்மீகத்) தந்தையின் (அருட்செல்வர் அருணகிரியாரின்) அருளை நாடிப் பெற்றிருக்கும் நாள் எப்பொழுது வருமோ?"}

அருளைப் பொழியும், உயிருக்கு உன்னதநிலையளிக்கும், தெய்வத் திறனுடைய **'கந்தர் அநுபூதி'** நூல் --- அத்வைத அநுபூதி மற்றும் அதை அடைவதற்கான சாதனை பற்றிய ஒரு முழு ஆய்வு நூல் --- இவ்வாறாக முற்றுப் பெறுகிறது.

அருட்செல்வர் அருணகிரிநாதரின் கிருபை நம் அனைவருக்கும் கிடைக்கட்டும்! அனைத்தையும் புனிதமாக்கும், அனைத்துப் பாதுகாப்பையும் அளிக்கும், போகம் (இவ்வுலகச் சுகங்கள்) மற்றும் மோட்சத்தை வழங்கும் தெய்வீகப் பரிசான **கந்தர் அநுபூதி** நூலை நாம் தினந்தோறும் ஓதி, குகப் பெருமானின் கிருபையை அநுபவிப்போமாக!! கந்தப் பெருமான் நம் அனைவருக்கும் இப்பிறவியிலேயே இறை-அநுபவத்தை அருள்வாராக!!!

அவன் அருளால் அவன் தாள் வனங்கி,

அவன் அருளால் அவனை அடையப் பெற்றேன்.

அவன் அருளால் எல்லோரும் அவனை அடைவார்களாக.

ஓம் தத் ஸத் சிவானந்தார்ப்பணமஸ்து!
ஓம் தத் ஸத் சரவணபவார்ப்பணமஸ்து!
ஓம் தத் ஸத் பிரம்மார்ப்பணமஸ்து!

ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம்
ஓம் ஓம் ஓம் ஓம் ஓம்
ஓம் ஓம் ஓம் ஓம்
ஓம் ஓம் ஓம்
ஓம் ஓம்
ஓம்